காப்பியங்களில் திருக்குறள்

ச. தண்டபாணி தேசிகர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

காப்பியங்களில் திருக்குறள்

ஆசிரியர்

ச. தண்டபாணி தேசிகர்

ஆய்வாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

பொதுப் பதிப்பாசிரியர்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

தமிழ்த்துறைத் தலைவர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1972

முதற் பதிப்பு : 1972
அண்ணுமலைப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை
திருக்குறள் ஆராய்ச்சி வெளியீடு – 1

விலை ரூ. 8—00

ஜெமினி அச்சகம், கும்பகோணம். [தொலைபேசி : 835]

Foreword

What is most striking to me about the Kural is its author's shrewdly psychological insight, his capacity to see the universal in the particular. Statements which at first sight appear to be snap judgments reveal on closer examination great depth of thought. Valluvar has said so much about so many things, yet rarely has he said anything which is merely rhetorical or superfluous. He combines the humanism of the common man with the wisdom of the scholar and the profoundity of the saint. He has felt the moral pulse of humanity and understood men and their motives with consummate skill.

As educationalist Valluvar's views on the subject is of great interest to us. The Kural highlights the spritual aims of education.

" Of what effect is learning if it leads you not
to contemplation of the Feet of the All - wise - Lord" (2)

This reminds one of the famous saying of King Solomon " The fear of the Lord is the beginning of Knowledge" (Proverbs 1:7). Valluvar says that education is an imperishable wealth fostering individuel values (400). It is a great force for social levelling up and an instrument for human progress.

" Men of learning though born of low descent
Command more reverence than a high born fool" (409)

The chief object of learning is to acquire wisdom which makes a man a good citizen and enables him to move in tune with the changing times. These aspects of education as enunciated in the Kural are peculiarly relevant to modern times.

The Kural is not a compendium of aphorisms or a collection of epigrams. It contains a world-view, which will never become dated because it concerns basic human nature and not the accidents of civilization.

After the conclusion of the Second World Tamil Conference held in 1968, the Government of Tamil Nadu made a generous endowment of rupees three lakhs to the Annamalai University for the establishment of a Tirukkural Research Centre. Such a Centre was duly started here in1970 and work has been progressing steadily since then. "Tirukkural in Tamil Epics" *is the first fruit of this venture -- a worthy offering. The author Thiru S. Dhandapani Desikar is a ripe scholar, and an incisive thinker who is steeped in Tamil culture and responsive to all its moods. Writing from this background he has used both critical acumen and sympathetic selectivity in the writing of this book. The result is a volume which would be welcomed by all lovers of Tamil Literature. More is to follow and I am fully confident that the pace set now will be kept up without abatemnent.*

Annamalai University,
Annamalainagar,
February 1, 1973.

S. P. Adinarayan,
Vice - Chancellor.

பதிப்புரை

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நிகழ்ந்த கடற்கரைப் பெருவிழாவில் அந்நாள் முதலமைச்சர் டாக்டர் அறிஞர் கா. ந. அண்ணாதுரை அவர்கள் தமிழ் மக்கள் பெருந்தொகையாக அளித்த நன்கொடையிலிருந்து தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்கட்கும் தனித்தனி மூன்று இலட்சம் அறக்கட்டளையாக வழங்கி ஒப்புயர்வற்ற உலகத் தனி மறையான திருக்குறட்கு ஆராய்ச்சிக் கட்டில்கள் அமைக்க ஏற்பாடு செய்தனர். அதன்படி 1970இல் இப்பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி தோன்றலாயிற்று.

திருக்குறள் முன்னரே பன்முனையில் ஆராயப்பெற்ற நூலாயிற்றே என்று சிலர் நினைக்கலாம். ஆம், ஆராய்ச்சிப் பெருக்கம் பொதுளிய நூல்தான். எனினும் குறளாழம் கடலாழம் போல்வதன்று. கற்பவர் தம் நுழைபுலத்தின் ஆழத்தைப் பொறுத்தது. வள்ளுவர் ஒருவர்தம் அகத்தின் ஆழத்தைக் கண்டறிய எத்தனையோ ஆராய்ச்சியாழ்வார்கள் காலந்தோறும் தேவை. 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' என்பதற்குத் திருக்குறள் தானே ஓர் எடுத்துக்காட்டு. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்பதுவே திருக்குறள் கற்றார் எல்லாரும் இதுவரை கண்ட ஒருமுடிபு. இத்தமிழ்மறை தொடக்கம் காணாததோர் முன்வரலாறும் வழி குறையாததோர் பின்வரலாறும் கொண்டது. இதனைப் பலநிலையில் ஆராயப்புகுதல் பல்லாயிரம் ஆண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழின் நாகரிக வரலாற்றையும் அவற்றோடு உலகப் பண்பாட்டு வரலாற்றையும் ஆராயப் புகுவதாகவே முடியும். ஆதலின் திருக்குறட் கேணியை அறிவுக் கருவியால் எத்துணைக் காலம் தோண்டினும் ஆராய்ச்சி ஊற்று வற்றாது என்று துணிவோமாக.

எவ்வெவ்வகையில் இப்பல்கலைக் கழகம் திருக்குறள் ஆராய்ச்சியை வகைப்படுத்திக்கொள்ளும் என்பதற்குச் சில

குறிப்புக்களைச் சொல்லி வைக்கின்றேன். திருக்குறட்கண் ஓரதிகாரத்தன்றிப் பல அதிகாரங்களிலும் பரந்து சென்று கிடக்கும் பொருட்கூறுகள்; சங்க அகவிலக்கியத்தோடும் புறவிலக்கியத்தோடும் திருக்குறளுக்கு உள்ள தொடர்ப்பாடுகள்; பின்னைத் தமிழ் நீதிநூலோர் திருக்குறளை அடிப்படையாக வைத்துக்கொண்டு எழுதிய கருத்து வளர்ச்சிகள்; காப்பியர்கள் அருளாளர்கள் சிற்றிலக்கியர்கள் என்ற பல்வகைக் கவிஞர்களும் திருக்குறளைக் கையாண்டகாலைப் புலப்படுத்திய பொருட் புதுமைகள்; பிறநூல் உரையாசிரியர்கள் குறளை மேற்கோட் படுத்தியபோது உரையிடைக் காட்டிப் போந்த பொருள் விளக்கங்கள்; அணிமைக் காலத்து எழுந்த உரைநடை நூல்களிலும் தனிக் கட்டுரைகளிலும் விளக்கப்பட்டிருக்கும் புதுநயங்கள்; திருக்குறள் மொழிபெயர்ப்புக்களிற் காணலாகும் விளக்க வனப்புக்கள்; திருக்குறட்கு எழுந்த உரைகளின் தனிமைப் போக்குக்கள் என்று இன்னோரன்ன ஆய்வுப் பாத்திகளைக் குறள் நிலத்தில் பிடித்து அறிவுமணிகளைக் காணமுடியும் என்பது என் கருத்து.

இதுகாறும் வழிவந்த இலக்கிய வரலாற்றின்படி திருக்குறட்கு உரையாசிரியர்கள் எழுவகைப்படுவர்.

1. **கவியுரையாசிரியர்கள் :** இளங்கோ, சாத்தனார், தேவர், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார், வில்லிபுத்தூரார், நாவுக்கரசர், பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள். இன்னோர் கவிதை வடிவில் திருக்குறட்கு உரைவிளக்கம் செய்தவர்கள்.

2. **பொருளுரையாசிரியர்கள் :** ஔவையார், குமர குருபரர், சிவப்பிரகாசர், வேதநாயகம்பிள்ளை முதலியோர் கவிதை வடிவாகப் பாடினவர்கள்; எனினும் வள்ளுவர் கொண்ட பொருளையே மேற்கொண்டு விரித்து அறநூல்கள் பாடியவர் களாதலின் தனியுரையாசிரியர்களாகக் கருதப்படுவர்.

3. **மூலவுரையாசிரியர்கள் :** மணக்குடவர், காளிங்கர், பரிமேலழகர், திரு. வி. க., புலவர் குழந்தை, நாமக்கல் இராமலிங்கனார் இவ்வகைப்படுவர்,

4. **பிறநூல் உரையாசிரியர்கள் :** இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், திருக்கோவையுரையாசிரியர், சிவஞானமுனிவர் இவ்வகையினர்.

5. **தனிநூல் உரையாசிரியர்கள் :** திருவள்ளுவர், திருவள்ளுவர் நூல் நயம், வாழ்க்கை விளக்கம், திருக்குறளறம் என்றவாறு உரைநடையில் திருக்குறள்பற்றி எழுதியவர்கள்.

6. **கட்டுரையாசிரியர்கள் :** வள்ளுவர் தெய்வ ஒளி, வள்ளுவர் பொன்னுரைகள், வள்ளுவர் வாய்மொழி என்ற கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்கள் இவ்வகையினர்.

7. **அன்மொழியுரையாசிரியர்கள் :** போப்பு, வ. வெ. சு., கிரால், ஏரியல், வேங்கிடகிருட்டிணன் போன்றவர்கள்.

ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், செருமனி, சீனம், மலேயம், பருமியம், வடமொழி, இந்தி, தெலுங்கு முதலான பிறமொழிகளில் எழுந்த திருக்குறள் மொழிபெயர்ப்புக்களும் நூல்களும் கட்டுரைகளும் எல்லாம் இப்பிரிவினுள் அடங்கும்.

கவிதையுரை, உரைநடையுரை, அன்மொழியுரை என்ற மூன்றும் தொகை எனவும் மேற்சுட்டிய ஏழும் விரி எனவும் கொள்ளப்படும். இவ்வெழுவகையுள் கவியுரையாசிரியர்களே வரலாற்றில் தொன்மையான முதலிடம் பெறுகின்றனர், வழிவழிப் பெருகியும் வருகின்றனர். கவியுரையின் தன்மை என்ன? திருக்குறள் ஈரடி வெண்பா யாப்புடையது. புலவர்கள் நேரிசை இன்னிசை வெண்பாக்களிலும் ஆசிரியம் கலிப்பாக்களிலும் பாவினங்களிலும் குறட்களை எடுத்தாளுகின்றனர். குறள் யாப்பு பிற யாப்பினுட் படுங்காலை, தங்கக்கட்டி தகடானாற்போல, அசையும் சீரும் அடியும் நீளப்பெறுவது இயல்பு. யாப்பு விரியுங்காலை பசியாளன் வயிறுபோல் குறட்பொருளும் இலக்கிய விரிவுக்கு இடம் கொடுக்கின்றது. இக்கவிவிரிவில் இளங்கோ கம்பர் போன்ற பெரும் புலவர்கள் புத்துரையும் புதுவிளக்கமும் தந்து கவி முதலுரையாசிரியர்களாக விளங்குகின்றனர்.

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் வெளியீடு 'காப்பியங்களில் திருக்குறள்' என்பது.

சிலப்பதிகாரம் முதல் யசோதரகாவியம் ஈறுன பத்துக் காப்பியங்கள் இந்நூலில் ஆராயப்பட்டுள.

இந்நூல் புதியதோர் ஆராய்ச்சி நெறியை மேற்கொண்டு காப்பியக் கோலார்ச் சுரங்கங்களில் பொன்காண் கட்டளை கடுப்பப் படிந்து ஒளிறும் தங்கக் குறட் கீற்றுக்களைத் தோண்டியெடுத்து அறிஞர்தம் புலமையங்காடிக்குக் கொண்டுவந்து குவிக்கின்றது. திருக்குறளோடு காப்பியங்கட்கு ஏற்பட்ட உறவு இன்று நேற்று வந்ததன்று. பிறக்கும்போதே காப்பியங்கள் திருக்குறளோடு கலந்து பிறந்தன. இந்த அறிவுறவைக் குறளுரையாசிரியர்களும் காப்பிய உரையாசிரியர்களும் ஆங்காங்கே குறித்துச் செல்ப. பரிமேலழகர் தம் குறளுரையில் காட்டிய காப்பியங்கள் பல. நச்சினுர்க்கினியர் சிந்தாமணியுரையிலும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையிலும் காட்டிய குறள்கள் பலப்பல. இந்த இருவழிக் காட்டுக்களும் இவ்வாராய்ச்சி நூலில் இடம் பெற்றுள. அதனுல் காப்பியங்களில் வள்ளுவத்தைக் காண்பது மரபுக் காண்டலேயன்றி வலிந்து காண்டல் ஆகாது என்பது உறுதிப் படும். உரைகள் வள்ளுவவுறவை ஒரு கோட்டளவில் சுட்டின; அவ்வுறவு பெருவழியாகும் என்பதனை இந்நூல் பறை சாற்றுகின்றது; தொட்ட தொட்ட இடமெல்லாம் காப்பியங்களில் குறள் ஊறும் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

திருக்குறளை வாரிக்கொள்ளுமாறு காப்பியப் புலவர்கட்கு வழிகாட்டிய முதல்வர் இளங்கோ ஆவர். குறள் முழுது எடுத்தாண்டும் வெற்றெனக் கொள்ளாது காப்பியக் கதையோடு பாத்திர வாயிலாகத் தொடுத்தாண்டும் நெறிப்படுத்தினுர் இளங்கோ. இவரைப் பின்பற்றி மேலும் பலநெறிகளைக் கையாண்டனர் பின்னைக் காப்பியர்கள். முழுக் குறளை அடியைத் தொடரைச் சீர்களை எடுத்தாளல், ஒரு செய்யுளில் பல குறள்களை வைத்தல், ஒரு குறளுக்குப் பல செய்யுட்கள் செய்தல், சொல் மாற்றிப் பொருளை எடுத்தாளல், பொருளை உவமைதந்து விளக்கல், அடைதந்து விரித்தல், பொருள் தெளிவு செய்தல், உரைசெய்தல், உரையொடு மாறு கொள்ளல், பாடங் கொள்ளல் என்றின்ன பல முறைகளையும் காப்பிய ஆசிரியர்கள் மேற்கொண்டு திருக்குறளைப் போற்றி வந்துள்ளனர் என்பதனை இவ்வாராய்ச்சி நூல் தெள்ளிதின் எடுத்துக் காட்டுகின்றது.

குறளமுதத்தைப் பன்மாணும் பருகிய காப்பியர் திருத்தக்க தேவர். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார் வள்ளுவர். எப்படி நகுவது? எது போல நகுவது? என்ற வினாவைத் தாமே எழுப்பிக்கொண்டு,

" இடுக்கண் வந்துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானும் இன்றி நகுக "

என்று முறைசுட்டி உவமை காட்டி விரிப்பர் திருத்தக்கதேவர். 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' என்றார் வள்ளுவர். துறத்தல் என்பது புரிகின்றது. தீரத் துறத்தல் என்பது என்ன? துறவியான தேவர் இவ்விடத்தை விளக்க முற்பட்டு, 'படநாகம் தோலுரித்தாற்போல் துறந்து' என்று உவமை பொருத்துவர். 'தீர' என்ற ஒரு குறட் சொல்லுக்குக் காட்டிய விளக்கம் இவ்வுவமை.

திருக்குறளில் பொருட்பாலே பெரும்பால். காப்பியங்கள் அரசர்களைத் தலைமையாகக் கொண்டும் அரசியலையும் போரையும் விரித்தும் நிறைவு பெறுவன. ஆதலின் பொருட்பாற் குறள்கள் காப்பியங்களில் மிகுதியும் இடம் பெற்றுள.

' இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து ' (குறள்)

' முட்கொள் நச்சு மரமுளை யாகவே
உட்க நீக்கின் உகிரினும் நீக்கலாம்
வட்க நீண்டதற் பின்மழுத் தள்ளினும்
கட்கொ டாமன்ன யார்களை கிற்பவே ' (சூளாமணி)

குறள் யாப்பும் குறட் பொருளும் கலிவிருத்தமாகவும் பொருள் விரிவாகவும் மாறிவளர்ந்ததற்கு இச்சூளாமணி ஓர் எடுத்துக் காட்டு. முள்மரம் முள்ளும் நஞ்சும் உடைய மரமாக விரிவடைகின்றது. முளையாக இருக்கும்போது அதனைக் களைய முழுக்கை வேண்டுவதில்லை, நகம்போதும் என்ற கருவியளவு காட்டப் படுகின்றது. முளையானது மரமானல் கை போதாது, மழுவாயுதமும் போதாது, மன்னனும் யாதும் செய்ய முடியாது என்ற கடுமையும் பெறப்படுகின்றது.

குறளாட்சியின்றேல் பொருளாட்சியில்லை, தமிழாட்சியில்லை என்னும் அளவுக்குத் திருவள்ளுவர் தமிழிலக்கியம் என்னும் நாட்டினையும் புலவர்கள் என்னும் குடிமக்களையும் தனிச் செங்கோலாட்சி செய்து வந்திருக்கின்றார். புலவர்களும் அதனைப் பொருள்

சேர் புகழாகப் போற்றி வந்துள்ளனர். இந்த இலக்கியவியலைப் பலவகையானும் எடுத்துக்காட்டுவது இவ்வாராய்ச்சி நூல். அங்ஙனம் காட்டுங்கால ஆசிரியர் பிறவுரைகளோடும் உராய்ந்து தம் முடிவுகளைத் தெளிவிக்கின்றார். கதைப் போக்கில் வைத்துக் குறளாட்சிகளைக் காட்டியும் விளக்கியும் நுண்மைகளைப் புலப் படுத்தியும் செல்வதால், இந்நூல் ஆராய்ச்சி நூலாயினும் கற்பவர்க்குச் சுவையாகும், எளிமையாகும். ஒவ்வொரு காப்பியத் துக்கும் எடுத்தாளப்பட்ட குறள்கள் எத்தனை, காப்பியங்களில் பன்முறை பயின்ற குறள்கள் எத்தனை என்ற புள்ளிப்பட்டியல் இறுதியிற் காணலாம். இது தெளிவிற்கும் மேலாய்வுக்கும் துணை செய்வதாகும்.

காப்பியக் கருத்துக்கள் செறிந்த இந்நூலை எழுதியவர் இப் பல்கலைக் கழகத்துத் திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதிக்கண் பணியாற்றிவரும் மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் ஆவர் தேசிகர் அவர்கள் உரைவளம் என்ற புதிய பதிப்பு முறையைக் கண்டு தமிழ் இலக்கியவுலகிற்குப் பரப்பியவர் என்பதனையும் திருக்குறள் உரைவளம் என்ற ஆராய்ச்சி முன்னோடிப் பதிப்பு வெளியிட்டவர் என்பதனையும் இலக்கிய இலக்கணச் சமயத் துறைகளிற் சிறந்த கல்வியாளர் என்பதனையும் நாடு அறியும்.

திருக்குறட் பொருளகராதி, திருக்குறளும் பிறவுரை யாசிரியர்களும், கம்பரும் திருக்குறளும் என்றின்ன ஆராய்ச்சிப் பனுவல்கள் இப்பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடுகளாக வர இருக்கின்றன என்பதைப் பணிவொடும் மகிழ்வொடும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்ணாமலை நகர்
20—11—1972

வ. சுப. மாணிக்கம்.

முகவுரை

இலக்கியங்கள் என்றும் மாறாத இன்ப மாளிகைகள். அதில் நுழைந்துவிட்டால் நாம் இலக்கிய வானில் பறக்கும் பறவைகள் ஆகிவிடுகிறோம்.

அங்கு இலக்கியங்களைப் படைத்த கவிஞனுடைய கருத்துக் களாகிய அமுதத்தை உண்டு அமரர்கள் ஆகிறோம். அக்கருத்தின் அமுதங்கள் கவிஞனுடைய மனமாகிற பாற்கடலில் விளைந்தவை. அவற்றை உட்கொள்ளுகின்றபோது மூன்று காலங்களையும் ஒருசேர உணர்கின்ற சித்தர்கள் ஆகிவிடுகிறோம்.

அத்தகைய இலக்கியங்கள் வாழ்வியல் தத்துவங்களை வகுப்பனவும், வரலாறு உரைப்பனவும், அன்புத் தேனை அகமலரில் சுரக்கச் செய்வனவும், அன்பும் தத்துவமும் கலந் தாயினவும் ஆக அமைந்துள்ளன. அவற்றுள் முன்னைய இரண்டும் பாட்டும் தொகையுமாகப் பதினெட்டு நூல்களாக விளங்குவன. அடுத்துள்ளவை பக்தி இலக்கியங்கள். அவை நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆக்கித் தந்த பல்லாயிரம் பாடல்கள். இறுதியானது காப்பியம். இப்பகுப்பனைத்திலும் மணியுள் இழைபோல, உயிருள் உணர்வுபோல, கண்ணுள் ஒளிபோலக் கலந்து விளங்குவன நீதிகள். காப்பிய உடலின் தூய துடிப்பே நீதிகள்.

தமிழ் மொழியில் இன்றுள்ள இலக்கியங்களில் காலத்தாலும், கருத்தாலும் மூத்தது திருக்குறள் என்ற நீதிநூல். பாட்டும் தொகையும் பரவிய காலத்திற்குப்பின் அன்புநெறி இலக்கியங்கள் எழுவதற்குமுன் நாலடியார் முதலான பதினொரு நீதிநூல்கள் காலந்தோறும் எழுந்தன. எல்லாம் சேர்ந்து பன்னிரண்டு நீதிநூல்களாகப் பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெற்றன.

திருக்குறள் காலத்தாலும், கருத்தாலும் முதுமையானது மட்டுமின்றி, அக்கருத்துக்களைத் தெரிவிக்கும் சிறப்பாலும், வளர்கின்ற காலத்துக்கேற்பக் கோலம்காட்டும் கொள்கைகளாலும் தனிப் பெருமை படைத்தது, நீதிகளை இலக்கியப் பண்பிலே எடுத்து இயம்புவது. அதனாலேயே தோன்றிய காலமுதல் இன்றுவரை காப்பிய மாளிகையில் கவின் செய்யும் ஓவியமாக விளங்கி வருகிறது. இனியும் விளங்கிவரும்.

காப்பிய மாளிகையில் திருக்குறள் கதையோட்டத்தில் கலந்தநிலை, உருமாறி ஒளிந்த நிலை, சில சொற்களால் தலைகாட்டி நிற்கும் நிலை, முழு வடிவோடு முன்னிற்கும் நிலை, ஒன்றிற் பலவாயும் பலவற்றில் ஒன்றாயும் பெருகியும் அருகியும் நிற்கும் நிலை என்ற ஐவகை நிலையில் ஒளிவிடுகின்றது. அதனால் காப்பியங்களுக்கும் தனக்கும் புதிய புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துக் கொள்ளுகிறது. அவற்றைக் கண்டு காட்டுதலே இவ்வாராய்ச்சியின் அடிப்படை நோக்கம்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டித் தமிழக அரசு சென்னை அண்ணாமலை மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆய்வு நிலையங்களை அமைத்து மூல நிதியும் உதவித் திருக்குறளை ஆராயப் பணித்தது. அத்திட்டத்தின்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதியின் சார்பில் "காப்பியங்களில் திருக்குறள்" என்ற இந்நூல் வெளிவருகின்றது.

என்னை மாணவனாக ஏற்றுப் படிக்கச்செய்து, ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் கல்லூரியிலேயே ஆசிரியனாகவும் அமைத்து ஆளாக்கி என் மனக்கோயில் கொண்டு விளங்கும் செட்டிநாட்டரசர் பெருந்தகை ராஜாசர் மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களை உண்ணு நீரினும் உயிரினும் உவந்து போற்றிக்கொண்டே யிருக்கின்றேன்.

பல ஆண்டுகட்கு முன்பேயே இத்திருக்குறட் பணியில் ஈடுபட்ட முன் அனுபவத்தைக் கொண்டு என்னை இப்பணியில் ஈடுபடுத்திய பெருவள்ளல் இணைவேந்தர் ராஜாசர் முத்தையாச் செட்டியார் அவர்கட்கும் துணைவேந்தர் டாக்டர் ஆதிநாராயணா அவர்கட்கும், தமிழக அரசிற்கும் என் நன்றி என்றென்றும் உரித்தாகும்.

இப் பணி சிறந்த முறையில் அமைய அவ்வப்போது ஆவன கூறி நெறிப்படுத்திய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ' வ. சுப. மாணிக்கனார் அவர்கட்கும் என் நன்றி உரியது.

தமிழ் முழுதுணர்ந்த தக்கோர் இப்புதிய படைப்பினை ஏற்று மேலும் ஊக்கம் அளிப்பார்கள் என்ற உறுதியுடன் செந்தமிழ்த் தாயின் திருவடிகளில் இதனை அன்புக் காணிக்கை யாக்குகின்றேன்.

ச. தண்டபாணி

பொருளடக்கம்

—o—

i.	துணைவேந்தர் முன்னுரை ...	iii
ii.	பதிப்புரை ...	v
iii.	முகவுரை ...	xi
1.	சிலம்பில் வள்ளுவம் ...	5
2.	மணிமேகலையில் வள்ளுவம் ...	39
3.	சிந்தாமணியில் வள்ளுவம் ...	69
4.	வளையாபதியில் வள்ளுவம் ...	203
5.	குண்டலகேசியில் வள்ளுவம் ...	229
6.	சூளாமணியில் வள்ளுவம் ...	237
7.	நீலகேசியில் வள்ளுவம் ...	291
8.	உதயணகுமார காவியத்தில் வள்ளுவம் ...	311
9.	யசோதர காவியத்தில் வள்ளுவம் ...	329
	பிற்சேர்க்கை ...	357

காப்பியங்களில் திருக்குறள்

காப்பியங்களில் திருக்குறள்

முகப்பு

காப்பியங்கள் தேனிலே கலந்த பாலாக இனிப்பன. தேன்-சுவைகள். பால் – வரலாறுகள். வரலாற்ரெடு கலந்த சுவைகள் பாலொடு கலந்த தேன். தேனில் தித்திப்புச்சுவை மட்டுமல்லாமல் மனித உடலுக்கு வேண்டிய மருந்துப் பொருள்களும் கலந்து உள்ளன. அதனுலேயே தேன் மக்களால் பெரிதும் விரும்பப் பெறுகின்றது. அதுபோலக் காப்பியங்களிற் கனிந்துள்ள சுவைகள் மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத எத்தனையோ இலட்சிய வாழ்வுகளைத் தாங்கி நிற்கின்றன. அதனுலே காப்பியங்களைப் படிக்கின்ற மனிதன் கதையோட்டச் சுவையிலே மயங்கிப் படிக்கின்ருன். முற்றும் படிக்கின்ருன்; பலகாலும் படிக்கின்ருன்; ஓர் இலட்சியவாதியாகத் தன்னை ஆக்கிக் கொள்கிருன்.

இங்ஙனம் இலட்சிய நோக்கங்களை நமக்கு நல்குவன அவற்றுள் கலந்துள்ள நீதிகள். நீதிகள் நீதிகளாகவே இருக்குமாஞல் அதனை யாரும் விரும்பிப் படிக்கமாட்டார்கள்; பயனுகிய திருத்தத்தையும் அடையமாட்டார்கள். அது சுவை தழுவிய வரலாற்ருேட்டத்தில் ஒளிந்திருப்பதால் படிக்கிருர்கள்; பயன் எய்துகின்ருர்கள். சமுதாயமே காப்பியத்தால் வளர்கிறது; வாழ்கிறது எனலாம்.

நீதிகளை இலக்கியப் பண்பிலே உணர்த்தும் நூல்களுள் தலையாயது திருக்குறள். காப்பியக் கவிஞர்கள் அதனைத் தந்நூலில் அங்கங்கே வைத்திழைத்துத் தம் நூலுக்குத் தனிப் பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிருர்கள். தம்முடைய புதிய கருத்துக்களைத் திருக்குறளுக்கும் வழங்கியிருக்கிருர்கள். அதனை ஆராய்ந்து தொகுத்து விளக்குவதே எம்பணியாகும்.

ஐம்பெருங் காப்பியங்களும் செந்தமிழ் அன்னையின் அணிகள். செந்தமிழன்னை தெய்வமகள். ஆகவே அன்னையின்

திருவடிக்கண் ஒலித்துத் தமிழ் மரபின் நீதியையும் நேர்மையையும் பண்பையும் காத்து வருகின்ற சிலம்பினை முதலாகக் கொண்டு, மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி குண்டலகேசி என்ற வரிசையில் ஈண்டு ஆராயலாம் என்பது எம் எண்ணம்.

இம்முறை சற்றேறக்குறைய காலத்தானும் இயைபுடையது ஆகலாம். சிலப்பதிகாரம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு முதல் ஆறும் நூற்றுண்டு வரையுள்ள காலத்தது ஆகலாம் என்றும், மணிமேகலை அதனோடிணைந்த காப்பியமாய் அதனை அடுத்துத் தோன்றியது என்றும், சீவக சிந்தாமணி ஏழு அல்லது பத்தாம் நூற்றுண்டினதாகலாம் என்றும், வளையாபதி குண்டலகேசிகள் அவற்றிற்குப் பிற்பட்டவை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றுர்கள்.

இவற்றின் காலத்தைப்பற்றிய கருத்து வேறுபாடு ஆராய்ச்சியாளரிடையே பலவாகக் காணப்பெறினும், அதனல் முறைவைப்பு மாறுவதாக இல்லை. ஆகவே இவ்வாராய்ச்சி இம்முறையைப் பின்பற்றிச் சிலம்பில் வள்ளுவத்தை முதற்கண் சிந்திக்கிறது.

★

சிலம்பில் வள்ளுவம்

சிலம்பில் வள்ளுவம்

1. புகார்க் காண்டத்தில்

வியப்பில் விளைந்த காப்பியம்

வியப்பில் விளைந்த காப்பியம் சிலம்பு: சேரமன்னனுடைய தம்பி இளங்கோ அடிகள் குணவாயிற் கோட்டத்திலே தன் தமையனுடன் வீற்றிருக்கிறார். குன்றக்குறவர்கள் அனைவரும் திரண்டு வந்தனர், அடிகேள்! எமதூர் மலைப்பக்கத்திலே பூத்த வேங்கைமரமொன்று உள்ளது. அதனடியிலே ஒரு மாபத்தினி வந்து நின்றாள், இந்திரன் தமர்பலர் ஈண்டிவந்தனர். காதற் கொழுநனைக் காட்டினர், எம் கண்ணெதிரே அவளையும் அழைத்துக் கொண்டு விட்புலம் போயினர், என்ன வியப்பு! என்ன வியப்பு! என்றனர்.

சேரனும், இளங்கோவும் வியப்புற்று வேடர்களை நோக்கினர், மன்னர் அருகிருந்த சாத்தனார் அரசனைநோக்கி அவன் குறிப் புணர்ந்து 'யான் அறிகுவன் அவை அனைத்தையும்' என்றனர். விளக்கத் தொடங்கினர், அண்மையிலிருந்து அனைத்தையும் கேட்டுச் சிலம்புக் காப்பியத்தை எழுதினார் இளங்கோவடிகள். ஆகவே சிலம்பு வியப்பில் தோன்றி, காமச்சுவையில் வளர்ந்து, இரக்கச் சுவையில் கனிந்து, தெய்வீகப்பயனை எல்லோரும் சுவைக்க எழுந்த காப்பியம்.

அறிவொளி

திருக்குறள் அமைதி அல்லது சாந்தச்சுவையில் தோன்றி, இல்லறமும் துறவறமும், அரசும் அமைச்சும், ஆட்சியும் அறிவியலுமாக உலகெங்கும் படர்ந்து காதற்சுவையில் முடிகின்ற அறிவொளி.

திருக்குறள் காலத்தால் முற்பட்டது. எல்லார் கருத்தையும் கவர்ந்தது, மனக்கோவிலில் என்றும் விளங்கும் இறையானது.

இறை இயங்குவ நிற்பவான எவற்றினும் விளங்குவதைப் போல எல்லா இலங்கியங்களிலும் உள்ளொளி வழங்கும் உணர்வானது. இக்கட்டுரையில் திருக்குறள் இளங்கோவடிகள் எண்ணத்திலே இழையோடிச் சிலம்பிலே ஒலிப்பதைக் கேட்போம்.

இருமனப் பெண்டிர்

சிலம்பிலே முதற்பகுதி பதிகம். அதுபின்வரும் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறிப் படிப்போரைத் தகுதியுறுத்துவது. அதிலே, புகார்நகரவணிகனாகிய கோவலன் மதுரைக்குப்போக நேர்ந்ததன் காரணத்தை,

> "கோவல னென்பானோர் வாணிகன் அவ்வூர்
> நாடக மேத்தும் நாடகக் கணிகையொடு
> ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுறக்......
> .... காற்சிலம்பு பகர்தல் வேண்டி" (*சில. பதி.*)

மாடமதுரை புகுந்தனன் எனப் பதிக ஆசிரியர் கூறுகிறார். கோவலன் ஒரு தனிக்குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தனாகிய மாசாத்துவன் மகனாகப் பிறந்தும், வருநிதி பிறர்க்கு ஆர்த்தும், தந்தையின் வழிவந்தும், நாடகக் கணிகையொடு ஆடிய கொள்கையால் பொருளை இழந்தான் என்கின்றார், இங்ஙனம் கூறவைத்தது,

> "இருமனப் பெண்டிரும் கள்ளுங் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு." (கூஉ0)

என்ற குறட்பகுதியே எனலாம். மாதவியோ நாடகக்கணிகை, கணிகையர், கைவழிநயனம் செல்லக் கருத்தினைக் கழகம் புகும் காளையர் மீது செலுத்தும் இருமனமுடையார். அங்ஙனமே காமவயப்பட்டுத் தம்மைப் பொருந்துவாரிடத்தும் காதலுடையார் போலப் புறத்தேகாட்டி, அகத்தே காதன்மை இலராகி, ஒழுகுதலால் இருபாற்பட்ட மனமுடையராவர் எனவும், ஒரே காலத்துப்புறத்தே காம இன்பத்தினும் அகத்தே அவன்பாற் பெறும் பொருள் விருப்பினும் செலுத்துதலின் இருமனமுடையாராவர் எனவும் கொள்ளக் கிடத்தலின் மாதவி கோவலனைத் தன்பால் என்றும் பிணிக்கக் காம இன்பத்தினைக் காட்டிக் கைப்பொருள் முழுவதையும் கவர்ந்தாள். அதனால் அவன் அரும்பொருள் கேடுற்றது என்றார். ஆகவே இத்திருக்குறளின் வரலாற்று அமைவே பதிக ஆசிரியரின் இவ்வெழுத்து எனற்கு

ஐயமின்று, அதிலும் சிறப்பாக வள்ளுவர் 'திரு' என வாளா கூறியதை ஆசிரியர் அவன்செல்வம் 'பிறர்க்கு ஆர்த்தும் பெற்றியது', 'செல்வத்துப்பயனே ஈதல்' என்னும் அருமைப் பாட்டினையுடையது, திறனறிந்து தீதின்றி வந்ததாகலின் அறத்தையும் இன்பத்தையும் ஒருங்கே ஈயவல்லது என்பார் அரும்பொருள் என்று அடையடுத்துச் சொல்லிய ஆழம் அறிந்து இன்புறுதற்குரியது.

கோவலன் மனைவியுடன் மதுரைமாநகரடைந்தான் மனைவியின் காற்சிலம்பை விற்க நகருள் புக்கான், பொற் கொல்லனிடம் காட்டினன். அவன் அதைப் பெற்று, இச்சிலம்பு கோப்பெருந்தேவிக்கல்லது யாப்புறவு இல்லை எனச்சொல்லி மன்னனிடம் சென்று 'கண்டனன் பிறனோர் கள்வன் கையில்' என்கின்றான், மன்னனோ 'வினைவிளை கால மாதலின் யாவதும், தேராளுகிச் சினையலர் வேம்பன் கள்வனைக் கொன்று காற்சிலம் பினைக் கொணர்க' (சில. பதி) எனக் கட்டளையிடுகின்றான். இங்கே கோவலன் முற்பிறப்பில் செய்த தீவினைப்பயன் முற்றிப் பழுத்துப் பயன்தரக் கூடியதாயிற்று என்பது காட்டப் பெறுகின்றது, இதனையே சேரன் செங்குட்டுவன், நிகழ்ந்ததை விளக்கிக் கூறும் சாத்தனாரை நோக்கி

" வினைவிளை காலம் என்றீர் யாது அவர்
வினை விளைவு .... (சில. பதி)

எனக் கேட்கிறான். அதற்குச் சாத்தனார் மதுரை எரியுண்ணுகின்ற போது மதுராபதித் தெய்வம் வீரபத்தினி முன் வந்து தோன்றி

" கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்,
முதிர்வினை நுங்கட்கு முடிந்தது ஆகலின் " (சில, பதி)

இங்ஙனம் நிகழ்ந்தது என்று கூறுவதாக வரலாற்றைத் தெரிவிக்கின்றார்.

வினைவழி மதி

பின்னர் இத்தனைக் கருத்துக்களையும் உள்ளடக்கி ஆசிரியர் நாடகக் காப்பிய நன்னூற் கோட்டையைக் கட்டக் கால்கோள் நிகழ்த்தி இக் காப்பியத்தின் உயிர்நாடியான கருத்துக்கள் இவையெனக் காட்டும் முகத்தான், " ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும், என்பதனை வற்புறுத்துகிறார். ஆகவே இக்காப்பியத்தை

ஊடுருவிக் கலந்து நிற்கும் கருத்துக்களில் ஒன்று ஊழ்வினை. அது, முற்றிப் பயனுறுத்தக் காலம் பார்த்திருக்கும். வினைகள் யாவும் யாம் முன் பிறவிகளிற் செய்த நற்செயல் தீச்செயல் களின் பயனாக விளைபவை என்பதை முற்குறித்த பகுதிகள் அறிவிக்கின்றன, பாண்டிய மன்னன் அறிவு திரிந்தான். எதனையும் ஆராய்ந்து முடிவு கூறும் மன்னன் தவறினான் என்ற வரலாற்றிற்கு வடிவு கொடுத்து நிற்பது,

> **"பேதைப் படுக்கும் இழவூழ் அறிவு அகற்றும்**
> **ஆகலூழ் உற்றக் கடை"** (உஎஉ)

என்ற திருக்குறளே, மன்னனுக்குக் கோடாத செங்கோலும் கோடி, நாடழிந்து தானும் உயிரை இழக்கப்போகும் இழவூழ்வர இருப்பதால் மன்னன் பேதையானான் என்பதற்குக் காலாகிறது.

அங்ஙனமே, முற்பிறப்பில் பரதனாக இருந்த கோவலன், பொய்க்கோள் கூறிச் சங்கமன் என்னும் வணிகனைக் கொல்வித் தான். அவன் மனைவி நீலி என்பவள் பதினான்கு நாட்கள் பலவிடத்தும் அலைந்து திரிந்து, இறுதியாக ஒரு மலையின்மீது ஏறி உயிர்விடுகின்றவள் 'எமக்குத் தீங்கிழைத்தோர் மறுமையில் இவ்வகைத் துயரேயுறுவார்களாக' என்று சாபம் கொடுத்து வீழ்ந்திறந்தாள். மாபத்தினி அதனால் உனக்கு இத்துயர் விளைந்தது, 'இது வினை விளை காலம்' என்றது மதுரை மாதெய்வம், இங்கும்,

> **"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
> **வீயாது அடியுறைந் தற்று."** (உ0அ)

என்றதன் பெருக்கம் காணப்படுகின்றது. நிழல் உடையவனையே சென்றடைதல்போல வினைப்பயனும் எத்தனைப் பிறவி எடுத் தாலும் இடம் தேயம், காலம் மாறினாலும் செய்தானைச் சென்ற டையத் தப்பாது. ஆகவே, சங்கமனைக் கொன்றவினை, விளைந்து, கோவலனைக் கொல்வித்தது என்பது உணரப்பெறும். கோவலன் கொலைக்குக் காரணம் வினை விளைவு என்ற சிலம்பு நெடுஞ்செழியன் இங்ஙனம் ஆராயாது செய்த முடிவிற்கு அவன் வினை காரணம் என்று கூறவில்லை. ஆகவே அத்தீய செயல் அவனுயிர்க்கு அன்றே முடிவாயிற்று எனலாம். மன்னன் செய்த கொடுமை முளையிலேயே விளைந்தது எனற்கு இது தக்க சான்றாகும்.

மூன்றில் ஒன்று

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது' (பதி. 57) இப்பகுதிக்கு அடியார்க்கு நல்லார் முன்செய்த இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து உருக்கொண்டு நின்று நுகர்விக்கும் என்பதாம். இதில் 'உருத்து' என்பதற்கு உருக்கொண்டு எனப் பொருள்காணல் மிகச் சிறந்த நயமான பகுதியாம். பரதன் சங்கமனைக் கொன்ற கொலைப்பாவம் இங்கே பொற்கொல்லனாக உருக்கொண்டு வந்து அச்சுறுத்திக் கொன்றது என்பதாம். இதன் இயைபு, 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' (380) என்றதன் வினைவாதலைக் காணலாம். 'சினையலர் வேம்பன் தேராளுகி, காவலர்க் கூய் அக்கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க" (சில. பதி) என்றது, எதனையும்,

> "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்து செய்வஃதே முறை" (ருசக)

என்பதைக் கொள்ளவேண்டிய மன்னன் ஒன்றனையும் ஆராயாமல் செய்தானுதலை விளக்குவதால் வள்ளுவர் கூறும் இத்தனை ஆய்வுத் திறனையும் அடக்கி எதிர்மறுத்துத் 'தேராளுகி' என்ற ஒரு தொடரில் அடக்கினமை புலப்படும். மீண்டும் வழக்குரை காதையில்

> "தேராமன்ன செப்புவது உடையேன்" (உ௦)

எனக் கண்ணகி வாய்மொழியிலும் இக்குற்றச்சாட்டு வருதல் காண்க.

அங்ஙனம்

> "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றம்" (*சில. பதி*)

அறம் கூற்றமாதலை,

> "என்பிலதனை வெயில்போலக் காயுமே
> அன்பி லதனை அறம்," (எஎ)

என்பதனாலும் உணர்க என அடியார்க்கு நல்லாரே விளக்கந் தருவர். ஆகவே அறங் கூற்றுமென அடிகள் கூறியது அறங்காயும் என்ற வள்ளுவத்தின் உள்ளுறைவேயாம்.

உரைசால் பத்தினி

கண்ணகி மாபத்தினியாய்த் தமிழர்க்குத் தனித் தெய்வமாயினுள். உயர்ந்தோர் பலரும் ஏத்தி உய்ந்தனர் என்கின்றவர்

" உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் " *(சில. பதி)*
என்கின்றார். உரைசால் பத்தினி என்ற சிறப்படை

" தகை சான்ற சொற்காத்து " *(ருசா)*

என்ற வள்ளுவர் சிந்தனையின் விருந்தாய் விளங்குவதைக் காட்டு கிறது. பின்னரும் ' பலர்புகழ் பத்தினி ' என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. மேலும்,

உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன் " *(சில. பதி)*

எனக் காப்பியவரவின் மரபினைத் தெரிவிக்கின்ற பகுதிக்கு விளக்கம் தந்த அரும்பதவுரையாசிரியர் பத்தினி மகளிர்

" பெய்யெனப் பெய்யும் மழை " (ருரு)

என்பதூஉம் இக்கதையகத்துள்ளது என்பர். ஆகவே உரைசால் பத்தினி என்பதற்கு மழை பெய்யெனப் பெய்தல் போல வாய்ச் சொல்லால் கருதியன முடிக்கும் தன்மை சான்ற பத்தினி எனவும் கூறலாம் என்பதனைக் குறள் உதவுகின்றது.

நிறைமொழி மாந்தர் மறைவழி போலப் பத்தினியின் உரைக்கும் எல்லா ஆற்றலும் உண்டு என்பதனைப் ' பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற ' என்ற அடியும், அதற்கு அரும்பத உரையாசிரியர் தரும் ' ஆக்கலும் அளித்தலும் வல்லளாதலின் ' என்ற விளக்கமும் சிந்திக்கத் தக்கவை. மற்றும் வஞ்சினமாலையுள்,

" பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையும் என்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ " *(சில. 21)*

என்ற வண்ணம் தீப்பற்றி எரிக என்றவுடன் தீப்பற்றி எரிந்தமை யும் உரைசான்றமைக்கு உதாரணமாம். அன்றியும் காவலன் கோல் கோடியதானும், மாபத்தினியின் உரைபலித்தமையானும், அன்றுதொட்டுப் பாண்டியநாடு மழைவளங்கரந்து வறுமை யெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடர வருந்திற்று என்கின்றார். ஆகவே மழை வறங்கூரச் செய்யும் வன்மை மாபத்தினிக்குளதாயின் மழை பெய்விக்கவும் வன்மையுண்டு என்பதை உரைபெறு கட்டுரை விளக்குகிறது.

வான்நிகர்வண்கை

நாடகக் காப்பியத்தின் முதல்களம் மணவறை. மணமக்களை அங்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்துகிறது காப்பியம்.

மணமகள் கண்ணகி, அவள் தந்தை மாநாயகன். அவனை,

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன்" (சில. 1)

என்று அறிவிப்பதன் வாயிலாக அவன் கொடைச் சிறப்பையும் கூறுகிறது சிலம்பு. இது 'கைம்மாறு வேண்டா கடப்பாட்டுமாரி' (குறள் உகக) என்ற குறட் பகுதியை எண்ணிக் கூறியது எனலாம்.

உயிர் ஊதியம்

அடுத்து மணமகனை யறிமுகம் செய்விக்கும் காப்பியம். அவன் கோவலன். அவன் தந்தை மாசாத்துவான். அவன் ......

......"ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கு ஆர்த்துபவன்," (சில. 1)

என்கின்றது. இவற்றில் வருநிதி பிறர்க்கு ஆர்த்துவது என்றது, தம்முன்னோர் செல்வத்தைப் பிறர்க்குதவினால் அறப்பயன் அவருடையதாக, அப்பொருளைக் கவர்ந்து பயன்படுத்திய பாவம் தன்மேலும் ஆம் ஆகலின் மாசாத்துவான் வருநிதியத்தைப் பிறர்க்கு ஊட்டினான் என்கின்றார். இது

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு." (உநக)

என்ற வாழ்க்கையின் குறிக்கோளைக் கூறும் குறளைத் தழுவி எழுந்த சொற்றொடராகும்.

"குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்"

என்பது சுற்றத்தால் சுற்றப்பட வொழுகல் என்பர் அரும்பதவுரை யாசிரியர். இதனால், சுற்றத்தாற் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயனை முற்றும் எய்தியவன் மாசாத்துவான் என்பதறியப் பெறும்.

புகழ் பெரிது

கோவலனை

"மண்தேய்த்த புகழினான்" (சில. 1)

என்கிறார். 'கோவலன் புகழ் வளரப் பூமி சிறுகலான் இங்ஙனம் கூறினர். மண் இடத்திற் சிறிது என்றார் வள்ளுவனாரும்' என்பர் அடியார்க்கு நல்லார். அங்ஙனமாயின் வள்ளுவனார் கூறியது யாண்டு என்று ஆராயத் தோன்றுகின்றதல்லவா? அப்போது,

"சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல் யாப்பு காரிகை நீர்த்து" (எஎஎ)

என்ற குறள் தோன்றும். இதன் பொருள் உலகமுழுதும் சூழ்ந்து நிற்கும் புகழை விரும்பி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர், காலில் வீரக் கழலை யணிதல் அழகுக்கேயாம்; வீரத்தின் அடையாளம் அன்று என்பதாம். புகழ் உலகத்தைச் சூழ்ந்து நிற்கும் எனவே உலகம் சிறிது. அதனை நாற்புறமும் மேலும் கீழும் சூழ்ந்து நிற்பது புகழ். அது உலகத்தைவிடப் பெரியது என்பன போதரும். ஆகவே அடியார்க்குநல்லார் அடிகள் கருதுவதாகத் தான் கருதியது இக்குறளின் நயப்பொருளே யாதலைக்காணக், குறளை இளங்கோவடிகள் எங்ஙனம் எல்லாம் பயனுறுத்தினர் என்பது உணரப்பெறும். மேலும், பரிமேலழகர் வையகத்தைச் சூழும் எனவே அதன் பெருமை பெற்றும் என்பதும் இதனை நன்கு விளக்கும்.

மனைவியைப் புகழ்கின்றான்

அடுத்துள்ளது, கண்ணகியும், கோவலனும் இல்லறம் நடத்தினர்கள் என்பதையுணர்த்தும் "மனையறம் படுத்தகாதை" இது இரு முது குரவர்களும், மணமக்கள் இல்வாழ்க்கையைச் செவ்வையாக நடத்திக் கைதேர்ந்து உயர்ந்து விளங்குதலைக் காணவேண்டித் தனி மாளிகையில் வேண்டியன எல்லாம் அமைத்து மனையறத்தை நன்கு நடாத்துக எனப் பணிப்பதாகலின் மனையறம் படுத்த காதை ஆயிற்று. இதில் கோவலன் கண்ணகியின் நலங்களைப் பலபடப் பாராட்டுகின்றவன்.

"......... .... 'சிறுபசுங் கிளியே!'
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தினவாகியும்
... ... மலர்க்கையி னீங்கா" (சில: மனை.)

என்கிறான்.

இளங்காதலர் நடத்தும் தனிக்குடித்தனம். இன்னும் இவர் கட்கு மகப்பேறு கிட்டிற்றிலது. ஆதலால், காதலியின் மழலை

மொழியிலே யாழ் ஓசை குழலோசைகளின் இனிமையும், அமிழ்தின் இனிமையும், ஒத்த அளவிற் கூட்டிக் குழைக்கப்பட்டன என்கின்றான். இவர்கட்கு மகப்பேறு இருந்தால் இவற்றின் இனிமை அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றியிராது என்ற நயத்தை இளங்கோவின் உள்ளத்தே ஊறச்செய்து இங்ஙனம் கவிதை புனையச் செய்தது,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (சுசு)

என்ற குறளே எனலாம்.

இல்லற இயல்பு

இனிக் கோவலன்தாய் உரிமைச் சுற்றமோடு ஒருதனிப் புணர்க்கவைத்ததன் காரணத்தை விளக்குகின்ற இளங்கோ அடிகள்,

"மறப்பருங் கேண்மையோடு அறப்பரிசாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை காணவைத்தனள்"

என்கின்றார். இதில் மறப்பு அருங்கேண்மை என்பது சுற்றந் தழாஅலும், அறப்பரிசாரம் என்பது துறந்தார்ப் பேணல் முதலான அறத்தைப் பரிகரித்தலும், விருந்து புறந்தரூஉம் என்பது விருந்தோம்பலுமாகிய இல்லறவியல்பை உணர்த்துகின்றன என்பர் அரும்பதவுரையாசிரியர். ஆகவே வள்ளுவர் அமைத்த நீதிகளே அடிகள் மனத்து நின்று, கண்ணகி, கோவலன் இல்லற இயல்பிலே அமைவனவாயின என்பதை ஊகிக்கலாம்.

ஒண்டொடிபால் இன்பங்கள்

மேலும், கோவலன், கண்ணகியை,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே" (*சில.* 2)

எனப் பாராட்டுகிறான். இதற்கு அடியார்க்கு நல்லார், 'கட்கு இனிமையான் மாசறவோடிய பொன்னை ஒப்பாய்' எனவும், ஊற்றின்பத்தான் முத்தையொப்பாய் எனவும், உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒப்பாய் எனவும், சுவையின் இனிமையால் கரும்பை ஒப்பாய் எனவும், கேள்விக்கு இனிய மொழியை உடைமையான் தேனை ஒப்பாய்' எனவும்

கூறினன் என்றும் இவற்றாற் சொல்லியது ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையும் ஆகலின்

"கண்டுகேட் டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள" (கக0க)

என நலம் பாராட்டப் பெற்றன என்றும் கூறுவர். இதனால் கண்டு கேட்டு என்ற குறட் கருத்தே கோவலன் கூறும் பாராட்டாக அடிகள் வாயில் தோன்றியது என்கின்றார். அடியார்க்கு நல்லார் என்பது துணியப் பெறும்.

உழவர் உயர்வு :

இங்ஙனம் இல்லறம் நடத்துகின்ற கோவலன் ஆடல்பாடல் அழகு இவற்றிற் சிறந்த மாதவிபால் மயங்கிக் கண்ணகியைப் பிரிந்து அவளோடு மருவி வாழ்கின்றான். கண்ணகி கொண்டானில் தெய்வம் பிறிதில்லையென்ற குறிக்கோளுடன் அவனிடம் விருப்புடன் இல்லறத்தை நடத்தி வருகின்றாள். அப்போது இந்திரவிழா எடுக்கப் பெறும் பூம்புகார் அமைப்பைக் கூறுகின்றார் அடிகள். அதில் ஒன்று,

"வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதர் முதலானோர் வாழ்க்கை" (சில. 5)

பற்றிய பகுதி. இப்பகுதியில் 'வீழ்குடியுழவர்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் யாவரும் விரும்புகின்ற என்றுமாம்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்." (கO௩௩)

என்பதனாற் கொள்க என்பர். ஆகவே இக்குறட் கருத்தை யகத்தடக்கியே அடிகள் 'வீழ்குடி' என்றார் எனலும் அமையும். அன்றியும், 'மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்பதற்கு, மக்கள் தேவை நெல்லும் நீரும். ஆதலின் அவற்றைப் பகுத்துப் பெருக்கியளிப்பவர்கள் உழவர்களே, அவர்கள் தொழுதுண்கின்ற ஏனையோரான் விரும்பப்படுங் குடியினர் ஆவர். அதனால் ஆசிரியர் உழவர் குடியை 'வீழ்குடி' என்றார் எனலுமாம்.

போலித் துறவிகள்

மேலும் புகார் நகரத்தில் உள்ள சதுக்கப்பூதம், குற்றப் பட்டாரைப் புடைத்துண்பது. அதற்குரிய இடம் பூதசதுக்கம்

எனப்படுமென்பதை அறிவிக்கின்ற அடிகள், பூதத்தால் உண்ணப் படுவார் பட்டியலில் 'தவமறைந்து ஒழுகுந் தன்மையிலாளர்'க்கு (சில: 5) இடம் அளிக்கின்றார். இத்தொடரைக் கேட்ட நமக்கு,

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று." (உஎச)

என்ற குறளே நினைவிலுறும்.

செவ்வியான் தன்மை

கடலாட்டு முடிந்தபின், ஊழ்வினை, யாழின் வழியாக வரிப் பாடலாக வந்து மன வேற்றுமையை விளைக்கக் கோவலனும் மாதவியும் பிரிந்தனர். கோவலன் தன்மனை புக்கான். வேனிற் காலம் வந்தது. கூடிய நாண்முதல் பிரிவையே யறியாத மாதவி வேனில் மாடத்துச்சியிலிருந்து யாழ் கை வாங்கிப்பாடி, மன நெகிழ்ந்து அயர்ந்தாள். அப்போது திங்கள் தோன்றியதைத் தெரிவிக்கின்ற அடிகள் 'திங்கட் செல்வனும் **செவ்வியன்** அல்லன்' (சில: 8) என்கின்றார். இதன்கண் உள்ள 'செவ்வியன்' என்பது,

"ஔவிய நெஞ்சத்தா னாக்கமும் செவ்வியான்,
கேடும் நினைக்கப் படும். (கசுக)

என்பதில் உள்ள செவ்வியானை நினைப்பிக்கும், செவ்வியன் என்பதற்கு அடியார்க்கு நல்லார் நடுவுநிலைமையுடையவன் எனப் பொருள் காண்பர். ஆகவே திங்கட் செல்வன் செங்கதிர்ச் செல்வன் போல அனைத்துயிர்க்கும் ஒப்ப ஒழுகாது, பிரிந்தார்க்கும் கூடினார்க்கும் துன்புறுத்தியும் இன்புறுத்தியும் மாறுபட ஒழுகு கின்றான் ஆதலான் நடுநிலையற்றவன் என்பார், 'செவ்வியன் அல்லன்' என்கின்றார். சொல்லாட்சியளவாலன்றி அச்சொற் பொருளானும் இது குறளுக்கத்தையே தழுவியுள்ளது எனலாம்.

நிற்க அதற்குத் தக

கனாத்திறம் உரைத்த காதையுள், மாலதி என்னும் பார்ப்பனி, பால்விக்கி யிறந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோயில் கோயிலாக ஏறியிறங்கினாள், கடைசியாகப் பாசண்டச் சாத்தன் கோயிலிற் பாடுகிடந்தாள்; அவளுக்குச் சாத்தனே குழந்தையாக வந்தது; வளர்ந்தது; கற்பன கற்றது என்பார், 'மாணியாய், வான்

பொருட் கேள்வி, துறைபோய்' என்கின்றார். இப்பகுதிக்கு அடியார்க்கு நல்லார் மிக்க கல்விகளையும், அவற்றின் பொருட் கேள்விகளையும் கற்றும், தரித்தும் துறைபோய் என உரைகண்டு, துறை போதல் என்பதற்கு அதற்குத்தக நிற்றல் எனக் குறிப்பும் தருகிறார். இப்பகுதி,

> " கற்க கசடறக் கற்பவை கற்றபின்,
> நிற்க அதற்குத் தக" (௩௯௧)

என்ற குறளை உளங்கொண்டோதியதாக எண்ணச் செய்கிறது.

முற்கூறிய சாத்தனாகிய மறைவல்லோனுக்கு மனைவியாய் அவனாணைப்படி அச்சாத்தன் கோயிலிற் பணிசெய்யும் தேவந்தி என்பாள் கண்ணகியை நோக்கிக்

> " காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு தாமின்புறுவர்"
> " போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பார். " (சில.)

ஆதலால் யாமும் ஒருநாள் சோமகுண்டம், சூரியகுண்டங்களில் ஆடுவோம். காமவேள் கோட்டம் தொழுவோம் என்றாள். அதற்குக் கண்ணகி 'பீடு அன்று' என இருந்தாள் என்று வரலாறு செல்கிறது. இதில் 'பீடு அன்று' என்ற மாற்றம்

> " தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதுஎழுவாள்,
> பெய்யெனப் பெய்யும் மழை " (௫௫)

என்ற குறளின் அமைதி முழுதும் கண்ணகி உள்ளத்தே ஒளி செய்ய அதனால் வந்த சுருக்கச் சொற்றொடராய், எம்போன்ற கற்புக்கடம் பூண்டோர்க்குக் காமக்கோட்டம் தொழுதலும் புனித நீராடுதலும் பெருமைதருஞ் செயலாகா என்பதை உணர்த்தி நிற்றலைக் காணலாம்.

வறுமையின் இழிவு

இவ்வண்ணம் தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழியோடு கண்ணகி உரையாடிக் கொண்டிருந்தபோது, ஏவலிளையாள் ஒருத்தி ஓடிவந்து கோவலன் வருகையை உணர்த்தினாள். கோவலனும் உட்புகுந்து கண்ணகியின் உடல்மெலிவைக் கண்டு உளம் வருந்தி,

"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும்எனக்கு" (சில. 9-69-71)

என்கின்றான்.

இதில் கோவலன் வாயால் மாதவி 'சலம்புணர் கொள்கைச் சலதி' எனப்படுகிறாள். இதன்பொருள் 'எல்லாப் பொருளிலும் பொய்யை மெய்யாகக்கொண்டு ஒழுகும் பொய்ச்சி'-என்பதாம். இது,

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்" (கூகக)
"பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்" (கூகஉ)
"பிறநெஞ்சிற் பேணிப் புணர்பவர்" (கூகஎ)
"மாயமகளிர்" (கூகஅ)
"இருமனப் பெண்டிர்" (கூஉ0)

என வள்ளுவர் கூறிய வரைவிலாருடைய பண்புகளனைத்தையும் அடக்கிய செறல்பற்றிய சிந்தையின் எதிரொலியாய் இருப்பதைக் காணலாம்.

வறுமையில், செய்தக்க செய்து, அதனால் விளைந்த வறுமையாயின் சான்றோர் பாராட்டுக்குரியதாய்ப் பெருமையைத் தருவதும், செய்தக்க செய்யாமையான் இவறன்மையான் ஈட்டப் பெற்றுத் தேனீப்போல வைத்திழத்தலால் வருவதும், செய்யத் தகாதவற்றைச் செய்தலான் பொருள் அழிவுற்று வருவதும் என முத்திறமுண்டு. அவற்றுள் செய்யத்தகாதவற்றைச் செய்தலான் வந்த வறுமையே **'அறஞ் சாரா நல்குரவு'** எனப்படும். பொதுவாகவே நல்குரவு 'தொல்வரவும் தோலும் கெடுப்பதோடு', **"இற்பிறந்தார் கண்ணும் இளிவந்த சொற்பிறக்கும் சோர்வு தரும்"** ஆதலால், 'குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த இலம்பாடு' என வறுமை அறஞ்சாரா நெறியின் வந்தது; அதனால், குலப் பெருமையும் பொருட் பெருமையும் அழிந்தன. அதனால் 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாததாக' எல்லாரானும் எள்ளப் படுதலின் நாணத்தகுவதாயிற்று எனப் பல குறட்பிழிவாக் கூறுகின்றான்.

கற்பெழுச்சி

இவ்வண்ணம் தன்பிழை யுணர்ந்து, தலைவி கண்ணகியுடன் கலந்திருக்கும்போது, கைப்பொருளிழந்தமையால் அதுவேண்டி இங்ஙனம் கூறுகின்றான் எனக் கருதிய கண்ணகி காற்சிலம்பு இரண்டுண்டு என விண்ணப்பிக்கின்றாள். கோவலன் அதனை விற்று முதல்கொண்டு பொருள் ஈட்டுவேன், ஆதலால் மதுரைக்கு வருக என அவளையும் அழைத்துக்கொண்டு புறப்படுகிறான். புகார் நகரின் நீணெடுவாயிலைக் கடந்து கடவுளர் கோட்டங்களைத் தொழுது வெளிப்போந்தான் என்கின்ற அடிகள்,

> "...................... வெண்மதி நீங்கக்
> காரிருள் நின்ற கடைநாட் கங்குல்
> ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப
> ....
> ....
> ....
> வாயில் நெடுங்கடை கழிந்து" (சில. 10-2-8)

போகிறான் என்கின்றார். இதில், இவன்மனம் ஊழ்வினை வயப்பட்டு நடக்கிறது என்கிறார். உள்ளம், மனிதனுக்கு உரிமை யானது. செய்வன தவிர்வனவும், இன்பத் துன்பங்களும் எண்ணிப் பார்த்துத் தள்ளுவ தள்ளி கொள்ளுவ கொண்டு இயங்குவது. இதுவே முயற்சிக்கு அடியானது. ஊழையும் வெல்வது. மெய்வருந்தக் கூலிதருவது என்பது வள்ளுவம். அவ்வுள்ளமும் இவன் வகையில் வினைவழியே செல்கிறது என்கிறார்.

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று,
> சூழினும் தான்முந் துறும்" (௩௮௦)

ஆதலால் கோவலன் உள்ளத்திற்கும் ஊழிற்கும் நடந்த போராட்டத்திலே ஊழ் வென்றது. உள்ளம் அதன் வழி யியங்கிற்று என்ற நயம் அறிந்தின்புறற்பாலது.

விழுமியோர் விரதம்

மதுரைக்கு வழிக்கொள்கின்ற கோவலன் இந்திரவிகாரத் தைக் கடந்து,

"புலவூண் துறந்து பொய்யா விரதத்து
அவல நீத்தறிந் தடங்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய"
(சில. 10 : 15–17)

மன்றினைக் காண்கின்றான் இதில் விழுமியோருடைய விரத ஒழுக்கம் பேசப்பெறுகின்றது.

பொய்யாவிரதம் – பொய்யாமையாகிய விரதம். இது

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற,
செய்யாமை செய்யாமை நன்று" (உகூஎ)

என வள்ளுவர் பொய்யாமையைத் தவறாமல் செய்வதே நல்லறம் என்றதனைக் குறிப்பிட்டுக் கூறியதாம். 'அடங்கிய கொள்கை' என்பது

"ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்க"லை (கஉசு)

நினைப்பிப்பதாம்.

'அவலநீத்து' என்பதற்கு 'அழுக்காறவா முதலிய அவலங்களை நீத்து' என அடியார்க்கு நல்லார் காணும் உரை **'அழுக்காறு, அவாவெகுளி, இன்னாச்சொல் நான்கும், இழுக்கா இயன்ற தறம்'** (நடு) *என்றதன் உள்ளோட்டம் என்பதை நினைவூட்டுகிறது.*

அங்ஙனமே மெய்வகை யுணர்ந்த விழுமியோர் என்பது 'மெய்ப்பொருள் காண்பதறிவு' (சஉந) என்பதனை நினை வூட்டுகிறது.

உழவிடை விளைவன

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் வழிநடையில் பலரிருக்கைகளைக் கண்டு செல்கின்றனர் என்பவர்

"பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்" (சில: 10)

கண்டு போனார்கள் என்கின்றார். உழவர்கள் 'இரப்போர் சுற்றத்தைத் தம் உழவில்' விளைக்கின்றார்கள் என்பது **'இரவார்**

இரப்பார்க் கொன்றீவர்' என்பதனையும், புரப்போர் கொற்றத்தை விளைத்தலை **'பலகுடை நிழலும் தங்குடைக் கீழ்க்காணுதலையும்'** குறித்து நிற்கின்றன.

"பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நீழ லவர்" (கஙரு)

என்ற குறட்குப் பரிமேலழகர், நீழலவர் என்றது இரப்போர்க் கெல்லாம் ஈதலை நோக்கி. ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே என்றதனால், தம் அரசனுக்குக் கொற்றம் பெருக்கி, மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பர் என்பதாம் எனக்குறிப்பெழுதி இப் பகுதியையே மேற்கோளாகக் காட்டுதலானும் தெளியலாம்.

விழுச் செல்வர்

மூவரும் வழியிடைச் சாரணரைக் கண்டு வணங்கியபோது, கோவலனைக் கண்டதும் அவன் வந்த காரணத்தைச் சிந்தை விளக்கில் தெரிந்தோராயினும், அவர்கள் விழுமம் கொண்டிலர் என்பார்.

"ஆர்வமும் செற்றமும் அகல நீக்கிய
வீர னாகலின் விழுமங் கொள்ளான்" (சில: 10)

என்கின்றார். சாரணர்கள் வேண்டுதல் வேண்டாமை யில்லாதவர் களாதலின் அவர்கள் மனத்தில் ஆர்வமும், ஆர்வம் நிறை வெய்தாமையானும் அதற்கு ஏற்படும் இடையூறுகளானும் உளதாகும் செற்றமும் இலவாயின எனக் குறட்கருத்தே பொதியப் பெற்றன. மற்றும் சாரணர்கள் **'வேண்டாமையன்ன விழுச் செல்வம்'** உடையார் என்பதும் தெரிவிக்கப் பெறுகின்றது எனலாம்.

ஊழின் பெருவலி

'கழிபெருஞ் சிறப்பிற் கவுந்திகாணாய்' எனக்கவுந்தியை விளித்து அறமுரைக்கின்ற சாரணர்,

"ஒழிகென ஒழியா தூட்டும் வல்வினை
இட்டவித்தின் எதிர்ந்து வந்தெய்தி
ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணா" (சில: 10)

என்று உரைக்கின்றார். இதனோடு,

" பரியினும் ஆகாவாம் பாலல்ல : உய்த்துச்
சொரியினும் போகா தம " (௩௭௬)

என்பதையும் உடன் வைத்து எண்ணுவோம். வள்ளுவம் ஊழ் மாறுபட்டதாயின் எவ்வளவுதான் வருந்திக் காப்பாற்றினாலும் செல்வம் அழியும். விதிவகையால் நமக்குரிய பொருள்களை வேண்டும் என்றே கடலிற் கொண்டுபோய்க் கொட்டினாலும் அப்பொருள் மீட்டும் நம்மையே வந்தடையும். என்று பொது வகையான் ஊழொடு பட்ட கூழே உறுதியானது; பயன் தருவது என்பதைக் காட்டுகிறது.

சிலம்பு அக்கருத்தையே அமைத்துச் சிறிது மெருகிட்டுச் சிந்தனைக்கு விருந்தாக்குகிறது. சாரணர் கண்முன்னே நிற்பது கோவலனுடைய தீயூழ். அது முதிர்ந்து பயனளிக்க இருப்பதைக் கவுந்தியடிகளை முன்வைத்துக் கூறுகின்றார் சாரணர். கவுந்தி! இதோகாண் ! தவமுதாட்டியாகிய நீ யோர்; பண்டைத் தொல் வினை பாறுக' என்று இவர்கள் காலடி வீழ்தலால் யாங்களே ஒழிக்க முயன்றாலும் ஒழியாததாய்த் தீவினை நுகர்விக்க வந்து நிற்கின்றது என்கின்றனர். இது 'சொரியினும் போகாதம' என்ற தொடர்க்கு விளக்கமாக அமைந்தது.

அதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு; ஒரு காலத்திலே விளைநிலத்திலே உணவு வித்தையிடுகிறோம். அது முளைத்து வளர்ந்து விளைந்து நுகர்விக்கும் காலத்து அதனை வேண்டாம் என்று ஒதுக்கிவிடுவோமா ? விரும்பியுண்போம். அதுபோலத்தான் இதுவும் வெறுத்து ஒழிக்க ஒண்ணாதது விரும்பி ஏற்கவேண்டுவது என்கின்றார்கள். இப்படிக் கூறுமுறையால் இளங்கோவடிகள்,

" நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்று
ஆங்கால் அல்லற்படுவ தெவன் " (௩௭௯)

என்ற குறட் கருத்தையும் இணைத்து எண்ணவைக்கின்ற விந்தையை வியக்கிறோம்.

கடவுளைப் பற்றி

அவர்களே அருகதேவனைத் துதிக்கும்போது வரும் 'எண்குணன்' (சில. 10), 'இறைவன்' (சில. 10), 'காமனை வென்றோன்' (சில. 10), 'ஐவரை வென்றோன்' (சில. 10), 'மலர்

மிசை நடந்தோன்' (சில. 10) *முதலான பெயர்கள், 'எண் குணத்தான்'* (கூ), *'இறைவன் பொருள்சேர் புகழ்'* (ரு), *'பொறி வாயிலைந்தவித்தான்'* (சு), *'மலர்மிசை ஏகினான்'* (ங) *என்ற வள்ளுவர் கூறும் கடவுட் பெயராக விளங்குவதை யுணர்கின்றோம் அன்றோ!*

பொறுத்தல் கடன்

சாரணர் அந்தரதலத்து அகன்றனராக, கோவலன், கவுந்தி, கண்ணகி யாவரும் காவிரியாற்றைக் கடந்து அதன் தென் கரையிற் சென்று ஓர் பூம்பொழிலிற்றங்குகின்றனர். அங்கே வம்பப் பரத்தன் ஒருவனும், பரத்தை ஒருத்தியும் கண்ணகி கோவலன் இருவரையுங் கண்டு இவர்கள் யார் என்று கவுந்தியை வினவுகின்றனர், கவுந்தி இவர்கள் என்மக்கள் என்றாராக, அவர்கள் உடன்பிறந்தோர் காதலராக வாழ்வதுண்டோ என்று நகை செய்தார்கள். அத்தீமொழி கேட்ட கண்ணகி, செவி புதைத்து நின்றாள். அதனைக் கண்ட கவுந்தி அவர்களை குறு நரியாகச் சாபமிட்டனர். அவர்கள் நரியாகினர் நம்பியும், நங்கையும் நரியின் ஒலிகேட்டு நடுங்கிக் கவுந்தியடிகளை நோக்கி,

"நெறியினீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை யென்றறியல் வேண்டும்" (*சில.* 10)

என வேண்டுகின்றனர். இவர்களுடைய வேண்டுதல் மொழி,

"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று" (*கடுஎ*)

என்ற குறளை நினைப்பிக்கிறது. தனக்கே தகுதியல்லாத காரியத்தை ஒருவன் செய்தானாயினும், எமக்குத் தீமை செய்த பாவத்தால் எரிவாய் நகரத்து வீழ்வர்கொல் என்று பரிந்து, மறமான செயல்களைத்தாம் அவர்மாட்டு ஆற்றாமையே நல்லது என்ற வள்ளுவமே வரலாற்றுடன் ஒட்டிக் கோவலன் வாய் வழியாகச் சிறிது சிறப்புடன் தோன்றுகிறது. திறனல்ல என வள்ளுவர் தொகுத்துக்கூறியதை இளங்கோவடிகள் இவர்கள் வழிதடுமாறியவர்களான நெறியினீங்கியோர். அவர்கள் ஒழுக்க முடையராயின் இவர்கள் வாயில் வழுக்கியும் தீயசொற்கள் வாரா. இவர்களோ வழிவிலகிய தீயர்கள்: ஆதலான் நாம் அதனைப் பொருட்படுத்தாமல் நடத்தல் வேண்டும் என்ற கருத்து ஒளிர்வதைக் காணலாம்.

அடுத்துச் 'செய்தவத்தீர்' என விளித்தனர். அவ்விளியோ கருத்துடையதாய், **'உற்றநோய் நோன்றலும் உயிர்க்கும் உறுகண் செய்யாமையு** *மன்றே* **தவத்திற்கு உரு'** **(உசுக)** *அங்ஙனமாகத் தாங்கள் சாபமிடுவது தக்கதன்று, கழிவு கூறி மன்னித்தலே தவம் செய்வதாகும் என வேண்டினர்.*

இவர்கள் நாவைக்காக்க அறியாமையான் இழிபிறப்பை யடைந்தனர். மக்கட் பிறப்பினையுற்றும், 'இழுக்கத்தான் இழி பிறப்பை' எய்தினர். இங்கும் வரலாற்றுப் போக்கில்

"யாகாவாராயினும் நாகாக்க" (கஉஎ)
"இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" (கஙௗ)

என்ற குறள் பகுதிகள் அமைந்து கிடக்கின்றன.

2. மதுரைக் காண்டத்தில்

இருமையின்பம்

வைகறைப் போதில் உறையூரை விட்டுப் போகின்றவர்கள் வழியிலே ஓரிளமரக்காவிலே தங்கினர். அங்கே ஒரு மறை முதியோனைக் கண்டு, மதுரை செல் நெறியை வினவ, அவன் திருமாலிருஞ் சோலைமலை வழியைப் பற்றிக் கூறுகிறவன் சிலம்பாற்றங்கரையிலே வரோத்தமை என்ற பெண்ணொருத்தி தோன்றி உங்களைப் பார்த்து,

"இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும்
இம்மையும் மறுமையும் இரண்டுமின்றி யோர்
செம்மையின் நிற்பதும் செப்புமின்" *(சில. 11)*

எனக் கேட்பாள் என்றான். இம்மைக்கு இன்பம் பொருள் என்பர் அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் புகழ் என்பர்; மறுமைக்கு இன்பம் புண்ணியம்: செம்மையின் நிற்பது மோக்கம் எனவுரைத்து மேலும் அடியார்க்கு நல்லார், ஒருவர்க்கு இம்மை, மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமியுள்ளளவும் நிற்பது புகழ் எனலுமாம் என்பர். இவர் கருத்தமைதி

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்" (உஙௗ)

என்ற குறள் தந்த செல்வமாகும். உரையாசிரியரும் இக்குறளை எடுத்துக்காட்டித் தம் உரைக்கு அரண் செய்கின்றார்.

வாய்மையே எல்லாம்

இங்ஙனம் வழிச்சிறப்புக் கூறுவதன் வாயிலாகத் திருமால் பெருமையைப் பேசிய அந்தணன் வாய்மொழியைக் கேட்ட கவுந்தியடிகள், நாங்கள் பிலம்புகவேண்டும் பெற்றியுமில்லை; நீராடவேண்டிய இன்றியமையாமையும் இல்லை, என்று கூறுகின்றவள், இட்டசித்தி எமக்கு எளிது என்று விளக்கும் முகத்தான்,

"வாய்மையின் வழாது மன்னுயிரோம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்" (*சில*: 11)

என்கின்றாள். இதில், 'வாய்மையின் வழாது' என்பதில்

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (௩௰௰)

என்ற குறட்கருத்தையும், 'மன்னுயிர் ஓம்புநர்க்கு' என்பதில்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்" (௨௬௰)

என்ற குறட்கருத்தையும் காணலாம். ஆகவே இக்குறள்களே அடிகளால் கவுந்தி வாயுரையாகச் சுருங்கச் சொல்லப்பட்டன என்பது உரையாசிரியர் கருத்து.

மேலும் மாமுது மறையோன்

"இட்டசித்திபடியின் இட்டசித்தி எய்துவிர் நீரே"

என்றதற்கு மறுமொழியாக 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவது முண்டோ எய்தா அரும்பொருள்' என்கின்றார். இட்டசித்திக் குளத்தில் நீராடிப் பெறும் பயனை யாங்கள் பொய்யாமையாகிய ஒழுக்கத்தாலேயே பெறுவோம் என்கின்றாள். இது

"பொய்யாமையன்ன புகழில்லை எய்யாமை,
எல்லா அறமும் தரும்" (௨௯௬)

என்ற குறளின் முழுக்கருத்தையும் தாங்கியிருப்பதும் உணரப் படும்.

புதிய உரை

மதுரைக்குச் செல்லும்போது கண்ணகிக்கு நீர்வேட்கைமிகத் தண்ணீர் கொணரக் கோவலன் பொய்கைக்குச் செல்கிறான். அங்கே வனதேவதை யொன்று வயந்தமாலை வடிவில் தோன்றி, மாதவி, தன் குலநிலைக்கு வருந்தித் துறவு பூண்டதாகக் கூறுகிறது.

"மேலோராயினும் நூலோராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட்டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்" (சில: 11).

எனத் துறந்தாள் என்றது.

கணிகையர் வாழ்க்கை மிகக் கீழானது என்று அறிஞரும் அருந்தவ முனிவரும், கல்லாமலே அனுபவ வாயிலாக நன்மைகளைப் பகுத்தறிந்தவர்களும் கூறுகிறார்கள். அதனால் அவ்வாழ்வு வேண்டேன் என மாதவி துறந்தாள் என்கிறது தெய்வம். இதில் மதி நலத்தின் மாண்ட அறிவினராகிய நூலோரும், அரும்பொருள் ஆயும் அறிவினராகிய மேலோரும், ஆயும் அறிவினர் அல்லராகிய பால்வகை தெரிந்த பான்மையோரும், அணங்காய், அளறுய்ப் பிணிப்பது கணிகையர் வாழ்க்கை எனக் கைவிடுவர் என்பது குறிக்கப் பெறுதலை நுனித்தறிந்து காணலாம். மற்றும்,

"ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு" (கூகஅ)

என்ற குறளுக்குப் பரிமேலழகர் 'வஞ்சம் இதுவென ஆராய்ந் தறியும் அறிவினர் அல்லாதர்க்கு வருத்துந்' தெய்வத்தின் தாக்குதலாம் முயக்குஎன உரைகண்டார்.

பரிதியார் 'அறிவான் ஆராய்ந்த குணத்தார் அல்லாதார்க்கு' அணங்காம் முயக்கு என்றார். அங்ஙனமாக இயல்பான அறிவோடு இணைத்து ஆராயத்தகும் நூலறிவு இல்லாராகிய கல்வியறிவு இல்லாதார்க்கும் மாயமகளிர் முயக்கு அணங்காம் எனவும் பொருள் கொண்டிருப்பாரோ அடியார்க்கு நல்லார் என்பது "பால்வகை தெரிந்த பான்மையோருக்கு" என்னும் பகுதிக்கு அவர் எழுதும் உரையான் ஊகிக்கக் கிடக்கின்றது. அதற்கு அவர் கல்லாது நன்மை தின்மை யறிவோரும் இது பிணியென்று

முகம்பாராது விட்டுநீக்கும் பொதுமகளிர் வாழ்க்கை என்கின்றார். இதைக்கொண்டு குறளை நோக்கின் கல்வி துணைக்கொண்டு ஆயும் அறிவினர் அல்லாராய்ப் பட்டறிவானே நன்மை தின்மை காணும் இயல்பினர் என்ற கருத்தும் கொள்ளலாம் எனத் தோன்றுகின்றதல்லவா ? இப்பொருளில் அல்லார்க்கும் என்ற இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கதாகக் கோடல் சிறப்புடையது.

இழுக்கத்தின் இழிவு : சாலினி சொற்படி, மூவரும் வேனில் வெப்பத்திற்கு அஞ்சி இரவுப்பயணம் செய்கின்றனர். பாலையைக் கடந்து மதுரைமாநகரின் புறஞ்சேரியில் வந்து தங்கினர் என்கின்ற அடிகள் "வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூன் மார்பர் உறைபதிச் சேர்ந்து" (சில. 13) காதலியை மாதவத்தாட்டியொடு ஒரு நல்ல இடத்தில் இருக்கச் செய்தான் என்கின்றார்.

மறையவர்கள் மறை ஓத வேண்டியவர்கள். ஒழுக்கந்தவறி வரிப்பாடலைப் பாடுகின்றனர். அவர்கள் கடைகழி பார்ப்பனர். அவர்கள் தங்குமிடம் புறஞ்சேரி. அங்கே தங்கினான் கோவலன் என்கிறது இப்பகுதி.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" (கநந)

என்ற குறளில் பார்ப்பனர்களின் தலையாய ஒழுக்கம் ஓதலும் ஓதுவித்தலும். அதனை இடைவிடாது ஆற்றுவார் அந்தணரில் குடிப்பிறந்தார் எனப் போற்றப்பெறுவர்.

"மறப்பினும் ஒத்து கொளலாகும்"

என்றதால் வேதம் ஓதுதலை மறந்து கூத்தியர்க்கு வரிப்பாடலை ஒதுகின்றவர்கள் அவர்களில் இழிந்தார் ஆவர் என்ற கருத் தோட்டமே மறைநூல் வழுக்கத்துப் புரிநூன் மார்பர் என்றதிற் காணப்பெறுகின்றது.

ஊர்காண்காதை மதுரைமாநகரின் வீதிகளைப்பற்றிக் கூறும் போது, வரைவின் மகளிர் வீதியைக் கூறுகின்றவர், அவர்களியல்பைத்

' தாக்கணங்கனையவர் நோக்குவலைப் பட்டாங்கு
அரும்பெற லறிவும் பெரும்பிறி தாக " (சில. 14)

என்கிறார். இதன் கருத்தும் சொல்லாட்சியும்

"நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து" (௧௦௮௨)

என்ற குறளை நினைப்பிக்கின்றது. ஆனால் இளங்கோவடிகள் கூறியது வரைவின் மகளிரை, வள்ளுவர் கூறியது குல நலமுடைய தலைவியை. ஆனாலும் மகளிர் நோக்கு தாக்கணங்கனையதென்ற பொதுமை நோக்கி அடிகள் கூறினார் எனல் அமைவுடைய தாகலாம்.

கேடும் நினைக்கப்படுதல்

" இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்துத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" (சில. 15)

என வினவுகிறான். மாடலன் நான்மறை முற்றிய நலம்புரி கொள்கையன்; மாதவமுனிவன்; அவனாலே நினைக்கப்படுகிறது; கோவலன், சிறந்த பண்பாடும் உதார குணமும் உடையவன், எனக்குத் தெரிந்த வரையில் இம்மையிற் செய்தனயாவும் நல்வினைகளே! அங்ஙனமாகவும் இவன் ஏன் வறுமையுற வேண்டும்? ஏன் மனைவியோடும் வழிப்போந்து வருந்த வேண்டும்? இவையாவும் முன் வினைப்பயனே என எண்ணிப் பார்க்கிறான்; என்கின்றபோது வரலாற்றை வகுத்தமைக்கின்ற முறையிலே " செவ்வியான் கேடு " (௰௬௯) நினைக்கப்படுகின்றது. இதில் சொல்லொப்பு இல்லையானும் கருத்தமைதி யிருக்கிறது. அதனாலேயே, பரிமேலழகர் ஆக்கக் கேடுகள், கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின் அறிவுடையாரால் இதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராயப்படுதலின், நினைக்கப்படும் என்றார். இம்மைச் செய்தன யான்அறி நல்வினை, உம்மைப்பயன்கொல் ஒரு தனி யுழந்துத் திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது என நினைக்கப்பட்டவாறறிக என்றார்.

அடிகள் கருத்தில் குறள் தோய்ந்திருப்பதால் அவரை யறியாமலே நாடகக் காப்பியத்துக் குறட் சொற்கள் இடம்

பெறுகின்றன என்பதைக் கவுந்தி கூற்ருக வரும் "இத்தோட்டார் குழலியொடு, நீட்டித்திராது நீபோக" (சில. 15) என்ற சொற்ருெடர் "தோட்டார் கதுப்பினுள் தோள்" (கக0ரு) என்ற குறட் செல்வமாக இருப்பதைக் கொண்டும் அறியலாம்.

கழிவிரக்கம்

கோவலன் இடைச்சேரியில் உண்டு, இருந்து கண்ணகியைப் பாராட்டுகிறவன், கண்ணகியின் குண நலன்களையும் தன் பிழையையும் கண்டு கழிவிரக்கப்படுகின்றவன்

"இருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்,
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்குஈண்டு,
எழுகென எழுந்தாய்" (*சில.* 16)

எனக்கண்ணகியைப் பாராட்டினன். அதற்கு அவள், தன்மாமனும் மாமியரும் தன்னையன்புடன், நடத்தியதைக் கூறுகிறபோது, தன் தவருக,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (*சில.* 16)

எனக் கூறிக் கொள்கிருள். இப்பகுதியைப் பரிமேலழகர் வாழ்க்கைத்துணைமேல் வைத்து அன்பில் வழி இல்லறம் இனிது நடவாமைக்கு எடுத்துக்காட்டுகின்ருர். இவை,

"துறந்தார்க்கும் துவ்வாதாவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (சஉ)

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்ருங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (சரு)

என்ற குறளின்கண் உள்ள சொற்களைப் பெற்றிருத்தலைக் காணலாம். கண்ணகி தன் குற்றமாக, கணவன் அன்பைப் பெற்று இல்லறத்தைச் செவ்வையாக நடத்தாத என்னை எனக் கூறுவதைப் பரிமேலழகர் வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமைக்கு எனத் தலைவன் தவருகக் காட்ட முயன்றது கருதற்குரியது :

கோவலன் ...... வம்பப்பரத்தரொடு, குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்" (சில. 16) பொழுது கழித்தேன் எனக் கவல்வது "நண்ணேன் பரத்தநின் மார்பு" (௲கக) என்ற குறளில் உள்ள பரத்த என்னும் சொல்லாட்சியைப் பெற்றுள்ளது.

நெஞ்சறிந்த நிகழ்ச்சி

கணவனை யிழந்த கண்ணகி சிலம்பொன்றைக் கையிலேந்திப் புலம்பி வருகின்றவள் 'காதற் கணவனைக் கண்டால் அவன்வாயில், தீதறு நல்லுரை கேட்பேன், அங்ஙனம் 'கேளாதொழிவனேல் நோதக்க செய்தாள் என்று எள்ளல் இதுவொன்று' (சில. 19) என்று அல்லற்பட்டு ஆற்ருதழுகின்ருள். கணவன் வாய்மொழி யாகிய நல்லுரையை உறுதியாகக் கேட்பேன். அங்ஙனம் கேளாதொழிவேனுயின் என்னை இகழுங்கள் என்கின்ருள்.

இதன்நோக்கு, பெண்களாகிய உங்கள் கண்காண இறந்த என் கணவனை நான் மீட்டும் காண்பேன்: கேளேனுயின், இதுவரை நான் கூறிய உரைகள் பயனற்றவை என்று என்னை இகழுங்கள் என்கின்ருள் என்பது. இங்ஙனம் கண்ணகி 'எள்ளல்' எனக் கூறுவதாக அடிகள் கருதுவது,

> "பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல்
> மக்கட் பதடி எனல்" (கசுசு)

என்ற கருத்தையகத்தடக்கியே என்பது அரும்பதவுரை யாசிரியர் எழுத்தால் அறியப்பெறும். அன்றியும் பின்னர் வரந்தரு காதையில் பொருண்மொழி நீங்கன்மின் என்பதும் இக்கருத்தை வலியுறுத்தும், மேலே,

> "அல்லல் உற்று அழுவாளைக் கண்டேங்கி
> மல்லல் மதுரையார் எல்லாருந் தாமயங்கிக்,
> களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி,
> வளையாத செங்கோல் வளைந்தது இதுஎன்கொல்"
> (சில. 19)

என வருந்துகின்றனர். இதில் அல்லலுற்று அழுவாள் என்பது

> "அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே,
> செல்வத்தைத் தேய்க்கும் படை" (௫௫௫)

என்ற குறள் நினைப்பாலே அடிகளார் உள்ளத்தெழுந்த தொடரா தலைத் தெளிவாக உணருகிறோமன்றோ?

ஆற்றலும் ஆட்சியுமிக்க அரசன் ஆற்றும் தீமைகளுக்கு மாற்றுரைக்க மாட்டாத ஏழையொருவன் என்செய்வோம் என்று ஏங்கி, வருந்திச் சிந்திய அழுகைக் கண்ணீரே "உறுபொருளும் உல்குபொருளும்தன் ஒன்னார்த், தெறுபொருளும்" (எருசு) ஆகப் பலவகையான் வந்தீண்டிய மன்னன் பொருளையும் தேய்க்கும் அரமாம் என்று வள்ளுவர் கூறியதுபோல, தன்னுடுநீங்கி வேற்று நாடுபுக்கு அறிவார் யாருமில்லாத – தானேயன்றித் தக்கார் ஒருவர் அரசே செய்தது தவறு என்று எடுத்துக்காட்ட இயலாத நிலையில் உள்ள கண்ணகி அல்லலுற்று ஆற்ருது அழுதாள். மதுரை மக்கள் அனைவரும் திருக்குறளை நன்கு தெரிந்தவர்கள். ஆதலால் இதன் விளைவு என்னவாகுமோ என்று ஏங்கினர். அவர்கள் ஏங்கியதற்கு ஏற்ப அரசனுடைய செல்வத்திற்கன்றி அவனுக்கே அழிவாயிற்று அக்கண்ணீர் என்பன வாதிய நிகழ்ச்சிகளையறிகிறோம். இதனல் அடிகள் மனத்து,

> **"அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே**
> **செல்வத்தைத் தேய்க்கும் படை"**

என்ற குறளோட்டத்தின் தேட்டமே இவ்வடிகளின் பிறப்பு என்பதை எண்ணுகிறபோது எத்தனை நயங்கள் இங்ஙனம் நமக்கு இன்பூட்டுகின்றன.

பிறிதின்நோய் தந்நோய்போற் போற்றுதல்

மேலும் ஊரவர்கள், 'வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல்? என, செங்கோல் கொடுங்கோலானமைக்கும், தென்னவன் கொற்றம் சிதைந்தது இது என்கொல்? என மன்னனுடைய வெற்றிக் கேட்டிற்கும் 'தண்குடை வெம்மை விளைந்தது இதுவென்கொல்' (சில. 19) எனத் தண்ணளி கொடுமையாக மாறியதற்கும் இனைந்தேங்கினர் என்கிருர். இது மக்களுக்குள்ள "பிறிதின் நோய் தந்நோய்போற் போற்றும்" (கூகடு) பெருந்தன்மையைக் காட்டுவது, ஆகவே இங்ஙனம் மக்கள் கண்ணகியைக் கண்டு கையறவெய்திக் கவலையுற்றதும் மன்னன் நிலைக்கு வருந்தியதுமாகிய இவை பிறவுயிர்களின் நோயைத் தம் நோய்போற் போற்றிய பேரறிவுத் திறனல் விளைந்தன என்பதும் சிந்தனைக்கு விருந்தாகிறது.

"அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்ருக் கடை" (௩௧௫)

என்ற குறளை நினைக்கச் செய்கிறது. மேலும்,

"தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ" (*சில.*19)

என்ற வாழ்த்துப் பகுதியுள் கண்ணீரே தென்னவனைக் கொன்றது என்பதும் இக்குறளின் விளைவையே விளக்குவதாம்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

கோவேந்தன் தேவி! யான் ஒன்றுந் தெரியாதவளாக இருப்பினும் ஆதிமந்தி முதலான கற்புடை மங்கையர் எழுவர் பிறந்த நாட்டிற் பிறந்தவள். ஆதலால் கூறுகின்றேன்.

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய" (*சில.* 21)

அதனை நீகாண் என்கின்ருள் கண்ணகி. இப்பகுதி முற்றும்,

"பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்" (௩௧௯)

என்ற குறளையே உயிராகக் கொண்டெழுந்தமையைக் காட்டி நிற்கின்றது. பாண்டிய மன்னன் கடமை **தெரிந்த–இனத்தொடு** *(௪௬௨) தேர்ந்து எண்ணிச் செய்யவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாதது, பிறர்க்கின்னு முற்பகற் செய்ததாம். அதன் பயனை நாளைக்குப் பின்னல் – மறு பிறப்பு என்று எதிர்நோக்க வேண்டாம். வினைமிகுமாயின் அதன் பயனை உடனே அளிக்கக் கூடும். பாண்டிய மன்னற்கும் கேடு பிற்பகலே விளையக்கூடும் என்ருள். கற்புடைய நங்கையின் சொல் பயனளித்தமையைப் பிற்பகலே வரலாற்றில் பார்க்கிருேம்.*

இனித்தான் மதுரை எரியப் போகிறது; மதுராபதி கண்ணகிக்குப் பழவினைப் பயனை உணர்த்தப் போகிருள். ஆயினும் வரலாறு முழுதும் அறிந்த நமக்கு ஒன்று தோன்றுகிறது. சங்கமனைக் காட்டிக் கொடுத்த பரதகுமரனே கோவலன். அவனைக் காட்டிக்கொடுத்துக் கொலைசெய்வித்த தீவினைப்பயனே இவனைக் கொல்வித்ததும். ஆகவே பாண்டியன் கோவலனைக் கொன்றது

கேடா, கள்வனைக் கோறல் கடுங்கோலன்று என அவன் வாதிட்ட வண்ணம் அரச நீதியா? அரச நீதியாயினும், தீவினைப்பயனு யினும் பாண்டியன் கோவலனைக் கொன்றது பிறன்கேடாதற்கு இடமின்று. ஆகவே கண்ணகி அறியாது சொன்னாளாயினும் அறிந்து சொன்னாளாயினும் அரசன் பிறன்கேடு சூழ்ந்தவனுவானு? என்பது ஆயத்தக்க தொன்று. கோவலன் செய்த வினைப்பயனைக் கோவலனுக்கு நுகர்த்தப் பாண்டியன் கருவியாக வேண்டும் என்று அடிகள் யாண்டும் குறிக்கவில்லை. ஆகவே பாண்டியன் சிலம்பைப் கொண்டு மாதவியின் ஊடல்தணிக்கும் தன்னலங் காரணமாக ஆராயாது பணியாட்களைப் பணித்தானுதலின் கேடு செய்தவனுகிறுன். அரச கடமையென நன்கு ஆய்ந்து கள்வ னென்று துணிந்தபின் கொன்றிருப்பானுயின், அது கேடுசெய்த தாகாது. நீதி வழங்கியதாம். ஆகவே ஈண்டுக் கண்ணகி கூறியது மிகப் பொருந்துவதாய் அரசழிவிற்குக் காரணமானமை காண்க.

வருவிருந்தயரும் மகளிர்

அங்கியங்கடவுள் கண்ணகிபாற் பெற்ற வரத்தின் வண்ணம் தீத்திறம் புரிந்தோர் பக்கமே சேர, அறத்திறம் புரிவோர்க்கு இடுக்கண் செய்யாது அகல அதனைக்கண்ட மதுரைமாநகர மனைக் கிழத்தியர் மகிழ்வெய்தினர். சிலம்பால் வென்ற நங்கையைப் பாராட்டினர்; அவள் செய்த செயல் கொடிதன்று எனப் புகழ்ந்தனர் என்கிற அடிகளார் மதுரை மகளிரை,

> **"வருவிருந் தோம்பி மனையற முட்டாப்**
> **பெருமனைக் கிழத்தியர்"** (சில. 22)

என்கிறுர். இது,

> **"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
> **நல்விருந்து வானத் தவர்க்கு"** (௱௬)

என்ற திருக்குறளினது ஆட்சியின் விளைவு என்பதை எவரும் தெளியலாம். ஆனல் இதில் திருவள்ளுவரைவிட அடிகள் சொற் செட்டுடையவர் என்பதைச் சிந்திக்க வியப்பு விளைகிறது. வள்ளுவர் சொல்கிறுர் செல்கின்ற விருந்தினரைப் பேணி, யார் விருந்தாக வருவார்களென்று எதிர்நோக்கியிருப்பவனே உயர்ந்த இல்லறத்தான், அவனை விருந்தாக வானுலகம் ஏற்கும் என்றுர்; இளங்கோ அடிகள் வருவிருந்தோம்பல் கூறினல் போதும், விருந்து

இன்னும் வருமா என எண்ணி எதிர்நோக்கி யிருப்பவன் வந்து செல்கின்ற விருந்தை ஓம்பாதிருப்பானு! ஆதலால் வருவிருந் தோம்பி என்று மட்டும் சொல்லிச் செல்விருந்தினரைப் பேணியதை இசை எச்சமாகப் பெறவைத்துக் குறட் கருத்து முழுவதையும் தோன்றச் செய்தனர்.

அகமுடையானே தெய்வம்

கட்டுரை காதையுள்,

"இடுபொருளாயினும், படுபொருளாயினும் உற்றவர்க்கு உறுதி பெற்றவர்க்காமென" (சில. 23) அரசன் யானைமீது வைத்துப் பறை யறைவித்தான் என்கிறார் ஆசிரியர். இடுபொருள் – பிறர் வரவிட்ட பொருள். படுபொருள் – புதையல். அன்றித்தன் தேட்டத்தால் மிக்க பொருள் எனலுமாம், 'படுபயன் வெஃகி' (கஎஉ) என்றாற் போல என்பர் அரும்பதவுரை யாசிரியர். ஆதலால் **படுபயன்** என்ற எண்ணமே **படுபொருள்** என வந்தது எனலாம்.

இக்காதையிறுதி வெண்பா

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
> தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் – தெய்வமாய்
> மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
> விண்ணக மாதர்க்கு விருந்து" (சில. 23)

என்பது. இதில் முன்னடி

> "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதுஎழுவாள்,
> பெய்யெனப் பெய்யும் மழை" (ருரு)

என்னும் குறளின் எதிரொலி.

பின்னிரண்டடிகளும்,

> "பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு" (ருஅ)

என்பதன் பிழிவாகும். மாதர்கள் கணவனை வழிபடுதலைப் பெறுவாராயின், தேவருலகத்தில் விருந்தாக வரவேற்கப்பெறும் பெருஞ்சிறப்பினைப் பெறுவர் என்பது வள்ளுவர் கருத்து. இதுவே இளங்கோவால், மண்ணக மாதர்க்குத் தெய்வமாய் விளங்கிய

கண்ணகி தேவமாதர்க்கு விருந்தாயினள் எனப்படுகின்றது. இரண்டும் ஒத்த இயைபினவேயாதல் தெளிவு.

நாகாக்க

மேலே, செங்குட்டுவன் தம் வருகையையும், அதன் காரணத்தையும் நூற்றுவர்களுக்குச் சொல்லியனுப்பியபோது, "காவா நாவிற் கனக விசயர்" (சில. 26) இகழ்ந்தனர். அதற்காக வருகின்றேம் என்கின்றான். இது,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (கஉள)

என்ற குறளின் வரலாற்று விரிவாகும். அப்படியே அவர்கள் சொல்லிழுக்குப் படுதலால் முடியிற் கல்சுமந்து வருந்தினராதலைக் காண்கின்றேம்.

3. வஞ்சிக் காண்டத்தில்

கால் கோட்காதையுள், சேரன் செங்குட்டுவன் அமையா வாய்மொழி யரசர்களாகிய கனக விசயர் கூறிய இகழுரைகளை இமயத்தாபதர் வாயிலாகக் கேட்டு வடதிசையிற் போருக்குப் புறப்படுகின்றவன், அவையில்,

"ஆசான், பெருங்கணி யருந்திறல் அமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ" (சில. 26)

ஆய்கின்றான் என்று இளங்கோவடிகள் வரலாற்றை நடத்திச் செல்கிறார். இது,

"தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணிச்செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்" (சசுஉ)

என்ற திருக்குறளின் வரலாற்று எடுத்துக்காட்டே. மற்று அப் பகுதியிலே "அறைபறை யெழுந்ததால் அணிநகர் மருங்கு என்" (சில. 25) "அறைபறை எழுந்தபின்" (சில. 26) என்பன "அறைபறையன்னர்" என்ற திருக்குறளின் சொல்லாட்சியே.

வடவரைவென்று அவர் தலையில் கண்ணகிப் படிமஞ் சமைக்க கற்கொணரேனாயின் இங்ஙன் ஆவேன் எனப்பலசொற்றான் சூளுரைக்கின்ற செங்குட்டுவன்,

"குடிநடுக்குறூஉங் கோலேனாகுக" (சில. 26)

என்கின்றான். இப்பகுதி,

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து" (ருருக)

என்ற குறளின் விளைவாகும்.

காவல் இன்றியமையாமை

கனகவிசயரைப் பாண்டிய சோழ மன்னர்கட்குக் காட்டிவருக என நீலன் முதலிய ஒற்றர்களைச் சேரன் செங்குட்டுவன் அனுப்பியபோது அவர்கள் இகழ்ந்து சொன்னார்கள் என்ற செய்தியை ஒற்றர்கள் உணர்த்தினர். செங்குட்டுவன் சினந்து அவர்கள்மீதும் படை எடுக்க எண்ணுகிறான். அப்போது மாடலன் கோபத்தீயை யாற்றுவித்து, நீ வேள்வி செய்க எனப் பணிக்கிறான். மன்னன் பத்தினிப் பெண்டிர் சிறப்பைக் கூறும்போது கண்ணகி

"அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிற்குக் கற்புச் சிறவாது எனப்
பண்டையோருரைத்த தண்டமிழ் நல்லுரை
அரசறகளித்தான்" (*சில.* 28)

என்கிறாள். இப்பகுதி,

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (ருசக)

என்ற குறளின் அறத்திற்கும் என்பதன் விளக்கமாக அமைகிறது. இதனையே பரிமேலழகரும், மாதவர் நோன்பும், மடவார்கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றும் என்ற மணிமேகலை யடியை எடுத்துக்காட்டிச் செல்கின்றார். இதில் பண்டையோர் என்பது வள்ளுவரையும், தண்டமிழ் நல்லுரை என்பது இக் குறளையுமே குறிக்கின்றன எனவும் எண்ணலாம். மணிமேகலையுள் "பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" என்றதுபோல. கண்ணகியார் செங்குட்டுவற்குக் கடவுள்நல்லணி காட்டிக் கூறியதாக வரும்.

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினான்" (*சில.* 29)

என்பது "நல்விருந்து வானத்தவர்க்கு" (அசூ) என்ற குறட் பகுதியைக் குறித்துணரச் செய்கின்றது. இறுதியாக, மன்னர்கள் பலரும் கூடிப் பத்தினிக் கடவுளைப் போற்றி,

எம் பூசையையும் ஏற்றருள்க என வேண்டினர். செங்குட்டுவன் வேள்விச் சாலைக்குச் சென்றான். இளங்கோவடிகள் பத்தினிக் கோயிலுக்குச் சென்றனர். இளங்கோ முன் பத்தினித் தெய்வம் தேவந்திகைமேல் தோன்றி, அவர் வரலாறுகளையும் அறங்களையும் சொல்லியது; அறங்களில், 'பரிவும் இடுக்கணும் பாங்குறநீங்குமின்' (சில. 30) என்பது இடுக்கணழியாமையையும், 'தெய்வந்தெளிமின்' என்பது கடவுள் வாழ்த்தையும், 'தெளிந்தோர்ப் பேணுமின்' என்பது நீத்தார் பெருமையையும், 'பொய்யுரை அஞ்சுமின்' என்பது வாய்மையையும், 'புறஞ்சொற் போற்றுமின்' என்பது புறங் கூறாமையையும், 'ஊன் ஊண் துறமின்' என்பது புலா லுண்ணாமையையும், 'உயிர்க்கொலை நீங்குமின்' என்பது கொல்லாமையையும், 'தானம் செய்யுமின்' என்பது ஈகையையும், 'தவம்பல தாங்குமின்' என்பது தவத்தையும், 'செய்நன்றி கொல்லன்மின்' என்பது செய்நன்றியறிதலையும், 'தீநட்பு இகழ் மின்' என்பது நட்பு, கூடாநட்புகளையும், 'பொய்க்கரிபோகன்மின்' என்பது நடுவுநிலைமையையும், 'பொருண்மொழி நீங்கன்மின்' என்பது பயனில சொல்லாமையையும், 'அறவோ ரவைக்களம் அகலாதணுகுமின்' என்பது பெரியாரைக் துணைக்கோடலையும், 'பிறவோரவைக்களம் பிழைத்துப்பெயர்மின்' என்பது சிற்றினஞ் சேராமையையும், 'பிறர்மனையஞ்சுமின்' என்பது பிறர்மனை நயவாமையையும், 'அறமனைகாமின்' என்பது இல்லறம், வாழ்க்கைத் துணைநலங்களையும், 'அல்லவை கடிமின்' என்பது தீவினையச்சத்தையும், 'கள்ளுங்களவும் காமமும் பொய்யும், 'வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்' என்பது கள்ளுண்ணாமை, கள்ளாமை, வரைவின் மகளிர் முதலியவற்றையும் "இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா, உளநாள் வரையா ஒல்லுவதொழியாது" என்பது நிலையாமைகளையும் கூறியதாம்.

உலகம், இல்லறத்தாரும் துறவிகளும் கலந்து வாழுமிட மாகலின் மல்லன் மாஞாலத்து வாழ்வீர் எனவிளித்து ஏற்ற அற வுரைகளைக் கூறினள். அதிலும் உலகம் வளம் பல பெருகி வாழுகின்ற காலத்துத்தான் வளச்செருக்கால் வழி தவறக்கூடும் என்பது கருதியே மல்லன் மாஞாலத்து வாழ்வீர்! என்று விளித்தாளாம்.

இங்ஙனம் திருக்குறள் பல இடங்களில் கலந்து, வயிர அணிகட்கு உள்ளிடுவயிரமாக ஒளிமிகுத்து நிற்கின்றது.

★

மணிமேகலையில் வள்ளுவம்

மணிமேகலையில் வள்ளுவம்

இயைபில் எழுந்த காப்பியம்

மணிமேகலை சிலம்பின் தொடர்பாக எழுந்த காப்பியம். விழாவறைகாதைமுதல், பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதையீருக முப்பது காதைகளைக் கொண்டது. சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாக இரண்டும் இணைந்து ஒரு பெருங்குடிச் செல்வன் வாழ்வியலை வகுக்கின்றன. இக்காப்பியத்தின் இணையிலாத்தலைவி மணிமேகலை, தலைவன் உதயகுமரன், காயசண்டிகை முதலியோர் துணையுறுப்பினர். அறவண அடிகள் நூல்முழுதும் விரவிநிற்கும் அறவுரை கூறும் அடிகளார். பிரம தருமர், ஆபுத்திரன், தருமசாவகன் முதலியோர் அறவுரைகூறும் துணையடியார்கள். கந்திற்பாவையும், மணிமேகலா தெய்வமும், பாசண்டச்சாத்தனும், தீவதிலகையும் முதலானபேர் தெய்வங்கள். தெய்வங்கள் மக்கள் வாழ்விலே தொடக்குண்டு, பழம்பழம் பிறப்புகளை மிகுதியாகஉணர்த்துவதைக் காட்டும் காப்பியம் இதுவொன்றே. புத்த பீடிகை முதலான தெய்வபீடங்க்ள் துணை செய்யக் கதை நடப்பது இக்காப்பியத்தில்தான். புத்தமதக் கொள்கைகளைச் சிறப்பாகவும், ஏனையமதக் கொள்கைகளைத் துணையாகவும் கொண்டியங்கும் சமயக் காப்பியம் என்றே இதனைச் சொல்லலாம். இதிலும் குறள்மணிகள் விரவிநின்று ஒளி செய்கின்றன.

முன் சிலம்பிற்கண்டதுபோலவே இதிலும் வரலாற்றை ஒட்டிச் சென்று குறள்மணியைக் குவிப்போம். இடமும் அடை மொழியும் கொண்டு புதிய கருத்தினைக் காண்போம்.

கவராக்கேள்வி

காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் தலைநகரம். பல் சமய வாதிகளும் காழ்ப்பின்றிக் கலந்துவாழும் இடம். அங்கு ஒத்த உணர்வை வளர்க்கவும் அதனைக் காக்கவும் தூங்கெயில் எறிந்த

தொடித் தோட் செம்பியன் காலமுதல் கரிகால்வளவன் காலம் வரை வழக்கமாக நடைபெறும் விழா இந்திரவிழா. அதனை நன்கு நடத்தவேண்டும்; இல்லையானல் நாளங்காடிப்பூதம் துன்புறுத்தும், சதுக்கப்பூதம் ஊரைவிட்டே ஓடிப்போகும். பின்பு நாட்டிலே வசியும், வளனுமறந்து பசியும் பிணியும் மலியும். ஆதலால் அவ்விழாவை நன்ருக நடத்துவோம் என்று பல சமய வாதிகளும் கூடிமுடிவெடுத்தனர். அதற்கு முன்னேடியாக நடைபெறவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். வள்ளுவனை யழைத்து நகரில் முரசறையச் சொன்னுர்கள். அவன் பழைய நிகழ்ச்சிகளையும் எதிர்நோக்குகளையும் சொல்லிப் பறை கொட்டுகிருன். **கவராக் கேள்வியோர் கடவாராகலின்** (மணி. *1*) கொண்டாடவேண்டும் என்கின்ருன். இதில் கவராக் கேள்வி என்பது நம்மனத்தைக் கவரும் சொற்ருெடர். கவர்தல் ஒன்றை ஒன்ருக உணர்தலும், இதுவோ அதுவோ என ஐயப்படுதலும் ஆகிய இரண்டும் ஆம். இதனை வள்ளுவர் பிழைத்துணர்தல் என்பர். இச்சொற்ருெடர் 'கசடறக்கற்க, (நடூக) பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் (சுகஎ) என்ற இரு குறட்பகுதிகளின் எதிரொலியாக இலங்குகின்றது.

மெய்த்திறம் பற்றிய விளக்கம்

சமயக்கணக்கர் இயல்புகூறுகிருர். அவர்கள் மெய்த்திறம், வழக்கு, நன்பொருள், வீடு என்ற நான்கினும் தம்மியல்பாகச் சமய நுண்பொருள் உணர்த்துபவர்கள் என்கிருர். அவற்றுள் மெய்த்திறம் எது? மெய்ம்மையை யுணர்த்துவனவாகிய நூல் வகைகள். இப்பகுதிக்கு உரைவகுப்பது போல அமைந்தது, "அருமறை விதியும் உலகியல் வழக்கும் கருத்துறை பொருளும் விதிப்பது நினைந்து" என்கிற கல்லாடம். ஆகவே மெய்த்திறம் என்பது மெய்ந்நூல் எனவே பொருள்படும். பிற்காலத்தும் "சைவத்திறத்தினைச் செப்பலுற்ரும்" என்பர் சைவசித்தாந்த மரபினராகிய அருணந்தி சிவாசாரியார் அவர்கள். திறம் நூல். வள்ளுவர்,

" யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை "

என்கிருர். மெய்-மெய்ந்நூல்கள். மெய் என்பது எங்ஙனம் மெய்ந்நூல்களைக் காட்டும் என ஐயுறுவார்க்கு மெய்யுணர்த்து வனவற்றை மெய்யென்ருர் என விளக்கமும் தருவார்கள் பண்டையு

உரையாசிரியர்கள். ஆனல் மெய்யென்பதோ சொன்னழியவும், தான் அழியாது நிலைத்து, உண்மையாக இருக்கும் நூலை உணர்த்துதல் சால்புடைத்தே. ஆகவே மெய்யாக்கண்டவற்றுள் (300) என்பதன் விளக்கமே மணிமேகலை கூறும் மெய்த்திறம் என்பது எனத்தெரியலாம்.

நீதிதவறினல் மழையும் இல்லை

அங்கேயே முரசறைவோன் வாய்மொழியாக வரும்

"வானம் மும்மாரி பொழிக; மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக" (மணி. 1)

என்னுந் தொடர்மொழி மன்னவன் கோல் கோடின் கோள்களும் தடுமாறும். அப்போது வானம் வழங்காது. ஆகவே, அரசன் செங்கோலனுகுக. கோள்கள் தத்தம் கதியிற் செல்க. அதனல் வானம் மும்மாரி பொழிக என்கின்ருன். இவ்வாட்சி,

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்" (ருருசு)

என்னுங் குறளைக்கொண்டு விளங்குகிறது. இதனையே பின்னரும், மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திடை வைத்துவிட்டு, மணிமேகலையைக் காணுமல் வருந்துகின்ற உதய குமரன் முன்னே தோன்றிக்

"கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங்கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை" (மணி. 7)

என வலியுறுத்துகிறது. சாத்தனுர் உள்ளத்து இக்குறள் இரண்டிடங்களில் இடம் பெற்றுள்ளது. இக்கருத்துச் சிந்தாமணி யுள்ளும் 255 ஆம் செய்யுளில் வந்தமை பின்னர்க் காட்டப் பெறும்.

அவாவால் ஆகுங்கேடு

சித்திராபதி என்பவள் மாதவியின் நற்ருய். அவள் இந்திர விழாவிற்கு மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் வாராமையால் மனம் நொந்தாள். வசந்தமாலையை யழைத்து நீ மாதவிபால் சென்று ஊரார் தூற்றும் பழியை யுணர்த்தி வருக; என்று ஏவினுள். அவளும் சென்று, மாதவியைக் கண்டு, ஊரவர்

நிலையையும், தாயின் கருத்தையும் தெரிவித்தாள். அதற்கு மாதவி, மணிமேகலை கண்ணகியின் மகள்; தவவொழுக்கத்திற்கு உரியவள்; அங்கே வாராள்; நான் இங்கே வந்து அறவணவடிகளிடம் என் கணவனிறந்தது முதலான செய்திகளைச் சொல்லியழுதேன். அழுத எனக்கு அவர்,

“பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்;
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக.” (மணி. 2)

என நால்வகை வாய்மைகளையருளிச் செய்தனர் என்கிறாள். இதில் ‘பற்றின் வருவது முன்னது’ என்பது அவாவால் ஆவது பிறவி என்பதை விளக்குவதாம். இப்பகுதி,

“அவாஎன்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து” (௩௪௧)

என்னும் திருக்குறளின் பொதியகமே எனலாம். சாத்தனார் அறவணர் அறவுரையாகச் சுருங்கச் சொன்னதற்கு வள்ளுவர் வாய்மொழிதான் விரிவுரையாக அமைந்தது. அவா என்பது புல் முதல் தேவரீறான எல்லாவுயிர்கட்கும் பொது, உயிர்க்குண மாக இயல்பாகவேயமைந்து எடுத்த உடலிற்கு ஏற்ப விரிவது. ஆகவே என்றும் கெடாத விதையாம், பிறப்பையீனும் விதையாம் என்று விளக்கந்தருகிறார் வள்ளுவர். விதைகளிற் சில ஈரம், தீ முதலியவற்றின் சார்பானும், பூச்சி முதலியன அரித்தலானும் தன் முளைத்தற்றன்மையிலிருந்து கெடும். பலநாள் கடந்த பழைய விதையாயிருந்தாலும் கெடும். அவா என்றுங் கெடாத விதை எதனாலும் கெடாத விதை என்ற நயம் ஆழ்ந்து இன்புறுதற்குரியது. அங்ஙனமே,

“பின்னது அற்றோருறுவது அறிக”

என்பது. இது,

“பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்” (௩௪௯

என்ற குறளை அடியொற்றியதாதலை அறியலாம். வள்ளுவர் பிறப்பறவே பேரின்பம் பெறலாம் ஆதலின் வாயிலாகிய பிறவி யறுதலை மட்டும் கூறி, அதன் பயனைப் பெறவைத்தார்,

இன்சொல் கலந்த நன்மொழி

மணிமேகலையைப் பளிக்கறையுட் கண்ட உதயகுமரன், பளிக்கறை வாயிலை யறியக் கையால் தடவிக்கொண்டே வருகின்றான். வழியிற் சுதமதியைக் கண்டான். மணிமேகலை எங்குள்ளாள்? அவளையடையும் உபாயம் யாது? என்று வினவினன். அப்போது சுதமதி தன் வரலாற்றை உதய குமரனுக்கு உணர்த்தும்போது, சங்கதருமன் என்னும் முனிவன் தந்தையோடு தன்னையும் காப்பாற்றிய முறையைக் கூறுகின்றவள்,

> " அன்புட னளைஇய அருண்மொழி யதனால்
> அஞ்செவி நிறைத்து நெஞ்சகம் குளிர்ப்பித்தான் "
> (மணி. 5)

என்கின்றாள்.

> " இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்,
> செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் " (கூக)

என்ற திருக்குறளே சாத்தனார் மனத்திற் குடியேறிச் சுதமதி யுரையாகச் சங்கதருமனென்னும் பௌத்த முனிவனைப்பற்றி அறிவிக்கச் செய்கிறது. அருண்மொழி – இன்சொல் (அன்பு – ஈரம்) படிறிலவாம் செம்பொருள் கண்டார் – சங்கதருமன் என்னும் முனிவர்.

மதிக்கண் மறு

சுதமதி என்ன சொல்லியும் மனமாறாத உதயகுமரன் இனிச் சித்திராபதியை யடைந்து அவள் வாயிலாக மணிமேகலையை யடைவேன் என்று அவ்விடத்தைவிட்டு நீங்க, மணிமேகலை பளிக்கறையிலிருந்து வெளிப்போந்து சுதமதியை நோக்கி, தோழீ என் மனம் அவனை நாடுகிறது; இதுதானோ காமத்தியற்கை என்று சொல்ல, மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குப் பழக்கமான ஒரு வித்தைக்காரியின் வடிவில் வந்து உயர எழும்பி நின்று புத்த பீடிகையைத் துதிக்கத் தொடங்கியது. அப்போது அந்திமாலை நீங்கியது; தண்மதி உதயமானான். அத்தோற்றத்தைச் சுவை தோன்றச் சாத்தனார்,

"அந்திமாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போலத்" (மணி, 6)

தோன்றியது என்கிறார்.

வள்ளுவர்,

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" (கூருஎ)

என்றார். இந்த நீதி, காப்பிய நடையில் கதையைத் தழுவிப் புகுகிறபோது மாலை மறைய இருளை எதிர்நோக்குகிற நேரத்திலே களங்கத்தைச் சுமந்துவருகிற மதியமாகிக் கருத்தை விளக்குகிறது. சான்றோர்கண் உள்ள குற்றம் அவர்கள் வருகிறபோதே அவர்களுடன் தோன்றும். காரணம் அவர்கள் ஒளியோடு ஒழுகியவர்கள். சமுதாயம் அவர்களிடம் குறையை எதிர்நோக்கவில்லை. அவர்களிடம் ஒரு சிறு குறை யிருக்குமானால் அது தெற்றென விளங்கும் என்று நயம்படச் சாத்தனார் விளக்கந் தருகின்றார்.

மண்மாண் புனைபாவை

சாத்தனார் சொல்தூரிகையாலே படிப்பவர் மனத்திரையிலே சக்கரவாளக் கோட்டத்தை எழுதுகிறார். சக்கரவாளக் கோட்டத்தின் முகப்பு, அதில் வாயை மடித்துக்கொண்டு, கடுகடுப்பான பார்வையுடன் கையிலே பாசம் சூலங்களை ஏந்திப் பெரியதொரு மண் பொம்மை நிற்கிறது. மண்ணீடு – மண்ணாலான பூதவடிவம், சிற்பி தன் கருத்துவன்மையைக் கைத்திறன் வழியாகக் காட்டிக் கடுகடுத்த நோக்கும், மடித்த வாயுமாக உருகெழு வடிவத்தை யுருவாக்கி யிருந்தாலும் அது மண் பொம்மைதானே. அப்பூதத்தைக் காண்பார்க்குக் கலையுணர்வு பிறக்குமேயல்லாது கடியுணர்வு (கடி – பேய்) பிறக்குமா. இந்தக் கருத்தோவியத்தை நமக்கு நல்குவது "மண்மாண் புனைபாவை யற்று" (சஎஎ) "மண்ணோ டியைந்த மரத்தனையர்" (ருஎசு) என்ற இரு தொடர்களுமே. கண்ணோட்டமில்லாதானை மனிதனென்று கருத்தில்லான் கருதுவதுபோல, இப்பூதத்தைக் கண்டஞ்சுவார் கோழைகள். மண் பூதம் அஞ்சதக்கதன்று என்ற கருத்தையும் நல்கி ஓருருவே தெளிந்தார்க்கு வியப்பும், மயங்குவார்க்கு

அச்சமுமாய் இருசுவையை யளிக்கும் விந்தையை உணருகிறோம். இத்தகைய ஊதியத்தை மணிமேகலை அடிக்கு அளிக்கிறது திருக்குறள்.

அணங்கு என்றதால் பயன்

சக்கரவாளக் கோட்டத்தில் பேயால் அறையுண்டுஇறந்தான் சார்ங்கலன். அவ்வந்தணனுடைய தாய், அவனுடலைச் சுமந்து சென்று சுடுகாட்டுக் கோட்டத்தையடைந்து, காவல் தெய்வமாகிய சம்பாபதியை அழைத்து, என்னுயிரை உண்டு இவனுயிரைக் கொடுக்கச் சொல்' என்று வேண்டிக்கொண்டாள். அதற்குச் சம்பாபதி,

" அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணு ;
பிணங்குநூன் மார்பன் பேது கந்தாக
ஊழ்வினை வந்து இவன் உயிருண்டு கழிந்தது "   (மணி. 6)

'நீ துன்பம் ஒழி' என்று சொல்கிறது இதில் 'அணங்கு' என்பது " ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப" (கூகஅ). " அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ " (கடுஅக) என்ற குறட்காட்சியை நினைவுறுத்துவன. இதில் அணங்கு என்பது காமநெறியால் உயிர்கொள்ளும் தெய்வமகள், காமம் தன்னறிவை மறைப்பித்து விரும்பப்படு பொருளையே மேலெனக் கருதச் செய்யும் முதிர்ந்த ஆசை. அது அறிவின் மருட்சியே. இதனையுட்கொண்டே சம்பாபதி சொல்கிறது. இவனுடைய அறியாமையைப் பற்றுக்கோடாகக் கொண்டு, இவன் ஊழ்வினை இவன் உயிரை உண்டது என்கின்றது. இதனுல் அணங்கு முதலியன அறிவின் மருட்சியால் விளைவன என்பது சாத்தனர் கருத்து போலும். வரைவின் மகளிரை விழைதலும் உரிமையாகக் கூடியவளையும் அணங்கோ மயிலோ என ஐயுற்றுத் தெளிந்து வியந்து நிற்றலும் மருட்சியே எனக்கருதி வள்ளுவரும் குலமகளையும் விலைமகளையும் குறிக்க அணங்கென்ற சொல்லை யாண்டனரோ எனக் கருதக் கிடத்தலும் காண்க.

தவமும் அவமும்

மணிமேகலா தெய்வம், உறங்காமலே வருந்துகின்ற உதய குமரன் முன் சென்று, அவன் காண நின்று அரசனுடைய கடமையையும், நேர்மையையும் உணர்த்தி,

"தவத்திறம் பூண்டோன் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிக" (மணி. 7)

என உபதேசிக்கின்றது. தவத்திறம் அவத்திறம் என்ற ஆட்சிகள் தவஞ்செய்வார்" "அவஞ்செய்வார்" (உசசு) என்ற குறளாட்சியின் விளைவால் வந்தவையெனலாம். தவம் செய்வார் ஞான ஒளி பெற்றவர்கள். அவஞ்செய்யார் அறியாமையாகிய இருளில் அழுந்தியவர்கள். ஒளியின் முன் இருள் நில்லாதது போலத் தவம் செய்வார்முன் அவம் நிலையாது. ஆகவே ஒளி பெற்றவர் உயர்வர். இருள் பெற்றவர், அவர்களையணுக மாட்டாமை மட்டுமன்று, வாழ்வினும் தாழ்வர் என்ற சிறந்த கருத்துக்கள் சிலவற்றை மணிமேகலையடிகளுக்குத் தருகின்றன இத்திருக்குறளாட்சிகள்,

பரத்தமை

மணிமேகலா தெய்வத்தால் துயிலெழுப்பப்பெற்ற சுதமதி எழுந்து சக்கரவாளக்கோட்டம் போகின்றவள், நடுவழியில் நகரிலும் புறத்திலுமாகக் கண்டகாட்சிகளைச் சொல்லி வருகின்ற சாத்தனார்,

"பண்பில் காதலன் பரத்தமை நோனது
உண்கண் சிவந்தது" (மணி. 7) என்பதால்

ஒரு பெண் கணவனுடைய பரத்தமைக்கு ஆற்றுளாய்க் கண் சிவந்து ஊடினாள் என்கின்றார். இது, **"நண்ணேன் பரத்த நின் மார்பு"** (கஉகக) என்ற குறள் தந்ததன்றோ!

கேள்விப் பயன்

சுதமதியைப் பிரிந்த மணிமேகலை மணி பல்லவத்தில், அறிந்தோர் எவரையுங் காணமற் கவன்ற காலத்து, புத்தபீடிகை தோன்றி அவளுடைய பழம் பிறப்பை யுணர்த்தியது. அப்போது மணிமேகலை இராகுலன் பிறப்பையும் தெரிவிக்க வேண்டும் என வேண்டினாள். அப்போது பீடிகையின் சிறப்பு.

"அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப் பிணிதீர்க்கும் திருந்தொளியாசனம்" (மணி. 9)

என்று அறிவிக்கப் பெறுகின்றது. இதில், 'அறச்செவி திறந்து' என்பது,

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி" (சகஅ)

என அறக்கேள்விகளால் செவிதொளைக்கப்பட வேண்டும். அப்போதுதான் திறக்கும் எனக் கருதக் கிடப்பதைக் காண்க. இங்ஙனம் திருக்குறள் மணிமேகலையடிகட்கு உண்மைப் பொருள் காண உதவுகிறது.

புத்தபீடிகைக் காட்சியால் மணிமேகலை பழம் பிறப்பை யுணர்ந்தாள் என்று எண்ணி, மணிமேகலா தெய்வம் ஆகாயத் தினின்றும் இறங்கி வந்தது. அவள் கேட்கும்படிப் புத்த பீடிகையைப் புத்தராகவே எண்ணிப் போற்றுகிறது.

"உயிர்க ளெல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்து" (மணி. 10)

அறிவிழந்த உலகத்து ஒரு ஞாயிறுகத் தோன்றினை எனத் துதிக்கின்றது. இதில், பொருள் என்பது அறம். அறங்கேட்டுக் கேட்டுப் பழகாமையால் செவித்துளை தூர்ந்தது என்கின்றது. இதில்,

"பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர்" (உசகூ)

என்ற குறளின் பொருள் என்ற சொல்லாட்சி ஒளிசெய்கிறது.

சிறப்பும்—பூசையும்

மணிமேகலையை நோக்கித் தெய்வம் "இலக்குமி! உன் தமக்கையராயிருந்த வீரையுந்தாரையும், அங்கநாட்டு மன்னனாகிய துச்சனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தனர். அரசன் அவர்களுடன் மலைவளங்காணக் கங்கைக்கரையடைந்தான். அறவண அடிகள் அங்கே வந்தனர். இருவரும் சென்று வணங்கி முனிவரைப் பற்றியறிய அவாவினர். முனிவர், நாதன் பாதபங்கய மலையைக் காண வந்தேன். ஆதிகாலத்தே புத்தபிரான் இதன் உச்சிமீது நின்றே அறவுரை வழங்கினர். நீங்களும் அதைக்காணலாமே! வழிபடலாமே!" என்றது. அவர்களும் அவ்வாறே,

"அவனுரைத்த அவ்வுரை பிழையாது
சென்று கைதொழுது சிறப்புச் செய்தனர்." (மணி. 10)

என்கின்றூர். இதிற் சிறப்பு என்பது விழாவைக் குறிப்பதாகும். "சிறப்பொடுபூசனை செல்லாது" (கஅ) என்ற குறட்சிந்தனையே சாத்தனாரை இங்ஙனம் கூறவைக்கிறது.

அறக்கடலும்-பிறவிக்கடலும்

மணிபல்லவத்தில் மணிமேகலையால் நீ யார் என்று வினவப் பெற்ற தீவதிலகை,

" அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாதலின்
தொழுது வலங்கொண்டு வந்தேன். " (மணி. 11)

என்று கூறுகிருள். இதில் அறவியங்கிழவோன், "பிறவி யென்னுங் கடல்," அடியிணையாகிய அறவிநாவாய் என்பன " அறவாழி அந்தணன் ", (அ) " பிறவு ஆழி " என்புனவற்றையும், 'பிறவிப் பெருங்கடல்' இறைவனடி சேராதார் (கந) என்பதனையும் நினைவூட்டிச் சில புதுக்கருத்துக்களையும் பொருந்தச் செய்கின்றன.

'பிறவாழி' என்பதற்குப் பரிமேலழகர், மணக்குடவர் இருவரும் பொருளும் இன்பமுமாகிய கடல் என்று உரை கண்டனர். பரிதியார் கடவுளை அறக்கடல் என்றதால், அறத்திற்குப் பிறவானது மறமாதலின் பாவக்கடல் என உரை கண்டனர். காளிங்கரும், பழைய உரைகாரரும் பிறவியாகிற பௌவம் என்றனர். கவிராஜ பண்டிதரும் அங்ஙனமே. அக் குறளின் நிழலாகவே சொற்பொருள் விரிக்கின்ற சாத்தனர் காலத்தே இக்குறளிற் பிறவாழி என்பது பிறவிக்கடல் என்ற பொருளிலேயே வழங்கிய சிந்தாமணி போன்ற பிற இலக்கியங் களிலும் காணப்பெற்று இக்கருத்தையரண் செய்யுமாயினும் ஈண்டு அக்குறள் முழுதுமே யாளப்படுதலின் இப்பகுதி மிகச் சிறந்ததாம்.

அன்றியும் 'அறவாழி' என்பதற்கு உரையாசிரியர்கள் 'அறக் கடல்' தருமச் சக்கரம் என்றெல்லாம் உரைகண்டனர். தருமச் சக்கரம் என உரைகாணல் சமண மரபாதலின் அதனை ஏலாமல் இவர் 'அறக்கடல்' என்றமை தன்மதம் நிறுவியதும் ஆம்.

வள்ளுவர் 'அறவாழி', 'பிறவிப் பெருங்கடல்' என்ற இரு குறளாலும் ஏகதேச உருவக அணியாற் கொள்ளவைத்த அடியாகிய புணையைச் சாத்தனர் 'அடியிணையாகிய அறவிநாவாய்' என விளங்க வைப்பதும் காண்க. அன்றியும் அறவி என்பது அறம் என்னும் பண்பினையுணர்த்தும் பெயராயும், பிறவி என்பது

பிறப்பென்னும் தொழிற்பெயராயும் அமைந்தமையும் அறிந்தின் புறுதற் குரியன. இவற்றுள் பிறவு என்பது பிறப்பு என்னும் பொருளது ஆதலை 'வேழப் பிறவும்' (பெருங்கதை 52: 86) எனப் பண்டை இலக்கியங்களிலும் வழங்குதலைக் காணலாம்.

பசிப்பிணி என்னும் பாவி

வள்ளுவர் துன்பந்தரும் வகையில் இன்மையாகிய நல்குர வுக்கு ஒப்புச் சொல்லும் பொருளொன்றைத் தமது விரிந்து பரந்த நூலறிவான் சிந்தித்துச் சிந்தித்து இறுதியாக இன்மையே இன்னாதது எனத் தானேயுவமை தனக்கென்றாற் போலக் கூறினர். அத்தகைய இன்மைகளுள் தலையாயது உண வின்மையே. மணிமேகலையிலே மணிபல்லவத்திலே மணிமேகலை, முன் எதிர்ப்பட்ட தீவதிலகை மணிமேகலையுடன் கோமுகிப் பொய்கையை வலம் வந்து நின்றாள். பொய்கையிலிருந்து பாத்திரம் வெளிவந்து மணிமேகலையின் கையை வந்தடைந்தது. அதனைக் கண்டு மகிழ்ந்த மணிமேகலை புத்தரைத் துதித்தாள். துதித்துநின்ற மணிமேகலைக்குத் தீவதிலகை

" குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண் அணிகளையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்ந்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது ". (மணி. 11)

என்று எடுத்துக் காட்டுகளுடன் கூறுகிறாள். இதில் பசி 'குடிப் பிறப்பழிக்கும்' என்பதில்

" தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை " (கoசங)

என்ற வள்ளுவம் பொதிந்து கிடக்கிறது. உயர்ந்த குடியின்கண் பிறந்தாரை, இவர் மரபிலுள்ளோர் புறவுக்குத்தசையீந்து காத்தவர் புலவனுக்குத் தலையீந்து வள்ளண்மையை நிலைநிறுத்தியவர், மயிலுக்குப் போர்வையீந்தவர் என்றாற்போல வழிவழியாகப் பேசப்பெற்று வருகின்ற பெருமையே தொல்வரவு என்பது. தோல் அதனைப் பேசப்பெறுகின்ற சொல். அதாவது இழுமென் மொழியான் விழுமியது நுவறல் என்பர் பரிமேலழகர்.

இரண்டையுங் கெடுக்கும் என்ற வள்ளுவர் விளக்கத்தைக் 'குடிப் பிறப்பு அழிக்கும்' என்ற ஒன்ருற் குறிப்பிடுகின்ருர் சாத்தனுர். தொல்வரவும் அதனையுணர்த்துவதுமாகிய இரண்டிற்கும் உள்ள இயைபுபற்றி ஒன்ருகவே குறித்தார் சாத்தனுர் என்பதாம்.

விழுப்பங்கொல்லும்: வறுமையுற்ருர் எத்துணைப் பெருமையை வழிவழியாக உடையவராயினும் உலகத்தாரால் இழிவாக எண்ணப்படுவர். கள்ளாமனத்தினர் ஆயவழியும் அவரைச் சூழ்நிலை காரணமாகக் கள்வரென்று துணியச் செய்யும். கோவலனைக் கள்வன் என அரசன் துணிந்ததுபோல என்பதாம். இங்ஙனம் பலவகையாகப் பெருமையைக் கெடுக்கும் என்பது இதன் கருத்தாம். இது

"இன்மை இளிவந்த சொற்பிறக்கும்; சோர்வு தரும்" (கஙசச)

என்றதன் உட்கிடையால் உரைத்ததாகும்.

அடுத்தது 'பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்' என்பது. வறுமைக் காலத்திலே கல்விப்புணையைப் பிடித்தாவது கரை யேறலாம் என்றிருப்பான் ஒருவன். அவன் கல்வியைக் காசாக்கப் பலவகையில் முயற்சிப்பான். அவனுடைய வறுமை குறுக்கிட்டுத் தடை செய்யும். 'செல்லாது அவன் வாயிற் சொல்' என்ற வண்ணம் அவன் வாய்ச் சொல் மதிப்பின்றிப் பயனற்றுப்போம். இக்கருத்தூற்றத்தைச் சாத்தனுர்க்குத் தந்தது

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்,
சொற்பொருள் சோர்வு படும்" (கஙசரு)

என்ற வள்ளுவமே. வறியவன் ஆய்ந்து கூறிய அரிய கருத்து யாண்டும் செல்வாக்கின்றியிருக்குமாயின் ஆய்வுரையாற் பயனில்லையே! அறிவுடையாரும் ஏலாராயின் அவர்களறிவிற்கே பழிதேடியதாகுமே! என்று எண்ணினுர் காளிங்கர். அவர் அருமையான ஒரு விளக்கந்தந்தார், எல்லாரும் விரும்புவார்கள்; ஆனுல் கைப்பொருளுடையார் மட்டும் இம்மெய்ப்பொருளைக் கருத மாட்டார்கள் என்ருர்.

"நாண் அணிகளையும்" என்பது **"அணியன்ருே நாணுடைமை சான்ருேர்க்கு"** (கமகச) என்ற குறட் கருத்தைத் தெளிவிப்பது. வறுமை வந்தால் எத்தகைய

சான்றோரும் வயிற்றுத் தீத்தணியப் பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் தேக்கி இரந்துபின்னிற்பர். ஆதலால் அவர்களிடம் உள்ள நாணம் என்ற அணியையகற்றும் இந்த வறுமை என்றுணும்.

நாணை வள்ளுவர் முன்னொரு குறளிலே சால்புக்கோட்டைக்கு நிறுத்திய தூணைக் கூறினர். இங்கு அணியாகக் கூறுகின்றார். அணி பரிமேலழகர் கூறுவது அழகு செய்வது மட்டும் அன்று. "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்பதிற் போலே அழகு செய்ய வேண்டிய இடத்து அணியப்பெற்று, அவ்வழகின் பயனைத் துய்க்குமிடத்து இடையீடாக இருக்கிறதே என்று அகற்றவும் படுவது. அதுபோல நாண் அணிபோலப் பழிபடுவ கண்டவிடத்துப் பூணப்பெற்று வீரமும் கொடையும் கல்வியுமாகிய புகழ்படுவ பொருந்துமிடத்து அகற்றவும் படுவதாம் ஆகலின் நாணை அணி என்றார் என்ற நயமும் ஊன்றி உணர வைக்கிறது.

"மாணெழில் சிதைக்கும்" சிறந்த அழகைக் கெடுக்கும் என்பதாம். பெரும்பாலும் வள்ளுவத்தைத் தன் மனத்துட் கொண்டு நீதிகளையமைத்துக் காவியத்தை நடத்திச் செல்லும் சாத்தனார், ஈண்டுமட்டும் வேறு கூறினார் என்றல் ஏலாத தொன்றாம். ஆகவே இவர்க்கு வறுமை யழகைக் கெடுக்கும் என்ற கருத்தை உதவிய குறட்பகுதி எதுவாகலாம் என்று எண்ணத்தான் வேண்டும். "தோல் கெடுக்கும்" என்பதற்கு வடிவழகினைக் கெடுக்கும் என உரைகண்டார் மணக்குடவர். தோல் ஆகுபெயராக உடம்பினைக் காட்டும். அதனைக் கெடுத்தலாவது இளைக்கச் செய்வது. அது அழகைக் கெடுத்தலாம். இங்ஙனம் உரைகூற மணக்குடவரைத் தூண்டியது சாத்தனார் சொல்லே எனலாம். ஆகவே 'தோல் கெடுக்கும்' என்பதை உட் கொண்டே சாத்தனார் 'மாணெழில் சிதைக்கும்' என்றாராதல் வேண்டும்.

பரிமேலழகர் ஒருவரே, உடம்பு கெடுதல், தவம் விரதம் முதலானவற்றானும் விளைதலின் உடலைக் கெடுக்கும் என்பதனை மறுத்து, அஃது அதற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்கும் என்பதற்கோர் பொருட்சிறப்பு இல்லாமையறிக எனக் காரணமுங் காட்டுவர். அதனோடமையாது தோலாவது இழுமென் மொழியால் விழுமியது நுவறல் என்றார் தொல்காப்பியனாரும் என்பது. அம்மையழகு தொன்மைதோல் விருந்து இயைபு புலன் இழைபு

என்பன, தொடர்நிலைச் செய்யுட்கு அமைந்த எண்வகை வனப் பாமே யன்றித் தனி மனிதனைப் பற்றிய உலகவர்காணும் மொழியாகா, அங்ஙனமாகவும், சொல் ஒற்றுமை ஒன்றே கருதித் தொல்லோர் கருத்திற்புதுமை காணும் நோக்குடன் மறுத்தனர். மறுத்து, 'விழுப்பங் கொல்லும்' என்ற சாத்தனுர் வாக்கொடு ஒப்பித்தனர். ஏனைய உரையாசிரியர்கள் அனைவரும் தோல் என்பதை ஆகுபெயராகக் கொண்டு உடம்பு எனப்பொருள்கண்டு அழகைக் கெடுக்கும் என உரைகண்டனர். அவர்கள் கண்ட உரை, எழில் சிதைக்கும் என்று சாத்தனுர் கருத்தை அடியொற்றி எழுந்ததேயாம் என்ற தெளிவை நமக்கு நல்குவது இப்பகுதி.

தீவதிலகை "பசிப்பிணி யென்னும் பாவி" என்கின்றுள். பாவம் – பண்பு பாவி – பண்பையுடைய பொருள். பசிப்பிணி யென்னும் பாவி யென்ருல் பண்பு இல்லையேனும் பசிப்பிணி சார்ந்ததாக அனைவரிடத்தும் உள்ள எல்லா நன்மைகளையும் அழித்தற் கொடுமை பற்றிப் பசியையே பாவி என்ற ஆட்சி 'இன்மையென ஒருபாவி' (௧௦௪௨) என்ற குறள் வழக்கேயாம்.

அறன்கடை நில்லாமை

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" (மணி 11)

ஆகவே நீ கயக்கறு நல்லறம் கண்டனை என்று பாராட்டிய தீவதிலகையை நோக்கி மணிமேகலை, சென்ற பிறப்பில் என் கணவனேடு உடன்கட்டை ஏறி நான் வேகின்ற காலத்துச் சாது சக்கரன் என்பவருக்கு உணவூட்டியதாகக் கனக்கண்டேன். அதன்பயனே இப்பாத்திரம் என்கைக்கு வந்தது என்கின்றவள், இவ்வுலகத்திலே இரப்போர் இரத்தற்கு ஏதுக் கூறும் வழி

"புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்" (மணி. 11)

என்கின்றுள். இது "அறன்கடை நின்ருருள் எல்லாம்" (௧௪௨) என்றதன் சொல்லாட்சியே.

அந்தணர் ஒழுக்கம்

மணிமேகலைக்கு அறவண அடிகள் ஆபுத்திரன் வரலாற்றைக் கூறுகிருர். அபஞ்சிகன் என்னும் அந்தணன் ஒருவன், அவன்

மனைவி சாலி, அவள் ஒழுக்கந்தவறிய குற்ற நீங்கக் குமரியாடி வருகின்றவள் வழியிலே மகவையீன்று ஒருபுதரில் இட்டுவந்தாள். குழந்தை யழுதது, அழுகுரலைக் கேட்ட பசு ஒன்று பால் கொடுத்துக் காத்தது. இதனையறிந்த அந்தணர் எடுத்து வளர்த்த போது அவன்

"ஓத்துடை யந்தணர்க்கு ஓப்பவை எல்லாம்,
நாத்தொலை வின்றி நன்கனம் அறிந்தான்" (மணி. 13)

என்கின்றார். இங்கு ஒத்து அந்தணர்க்கு ஓதுதற்குரியது அதனை விடாமல், ஓதுதல் அவர்கள் கடமை என்பதை யுணர்த்தும்,

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்" (கஉச)

என்ற வள்ளுவக் கருத்து ஒளிர்கிறது.

பசிப்பிணி மருத்துவன்

வேள்வியிற் கொல்லுதற்காகக் கொண்டு வரப்பெற்ற பசுவை ஆபுத்திரன் இரவிடைக் கவர்ந்து சென்றான். அது கண்ட அந்தணர்கள் அவனையும் ஆவையும் பிடித்து வருத்தினர், அப்போது ஆ அந்தணர் உவாத்தியைக் கோட்டாற் குத்திக் குடரைச் சரித்துக் காட்டுப் பக்கம் ஓடியது. ஆபுத்திரன் அந்தணர்களுக்கு அருளுரை பல புகன்றான். அவர்கள் எங்கள் நாராயணன் அருளிய வேதக்கருத்து அறியாமல் இகழ்ந்தாய். நீ ஆவின் மகனுதற் கேற்ற வண்ணம் உரைத்தனை என்றிகழ்ந்தனர், அவ்வுரை

"ஆமக னுதற் கொத்தனை அறியா நீமக னல்லாய்"
(மணி. 13)

என்றது, வேத முதலிய நூல்களைக் கல்லாத நீ மகனல்லை. பசுவின் பிள்ளையானமைக்கொப்ப விதியும் மரபும் அறியாது உரைத்தாய் என்றிகழ்ந்தனர். அந்தணர்கள் திருக்குறள் படித்தவர்கள் அல்லர். அவர்கள் கூற்றாகக் கூறும் சாத்தனார் திருக்குறளில் ஊறித் திளைத்தவர். ஆதலால், அந்தணர் உரையாகப் பேசும் போதும், "விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்" (சகo) என்ற திருக்குறள் ஒளிவீசப் பேசுகின்றார். உருவத்தால் கற்றாரும் கல்லாரும் ஒரு தன்மையர். அறிவானும அறியாமையானும் முறையே மக்களையும் விலங்கையும் ஒத்தவர் என்பதே திருக்குறள் தருங்கருத்து.

ஆபுத்திரனோ ஏதுவும் இயல்பும் காட்டிப் பசுக்கொலையைத் தவிர்க்கின்றான். அவனை விலங்காகவே சொல்லச் சாத்தனார் ஒப்பவில்லை, ஆகவே விலங்கு வளர்த்த பிள்ளை ஆதலால் வளர்ப்புத் தாயின் குணம் படிந்து விட்டது என்று அந்தணர் இகழ்ந்ததாகக் கூறுகின்றார்.

ஆபுத்திரன் மதுரை மாநகரையடைந்து வீடுகள்தோறும் சென்று ஐயமேற்றுக் குருடர் செவிடர் முதலியோர்க்கு உண ஆட்டினன். அவர்கள் உண்டொழிந்த மிச்சிலைத் தானுண்டான் என்பதை யுணர்த்தும் பகுதியாக, நூலில் **"உண்டொழி மிச்சில் உண்டு ஒருதலை மடுத்துக் கண்படை கொள்ளும்"** *என்ற அடி வருகிறது. இதில் 'உண்டொழி மிச்சில் உண்டு'* (*மணி.* 13) *என்பது விருந்தோம்பி மிச்சில் மிசைதலை,* (அகூ) *உணர்த்துகிறது. ஆனால், வள்ளுவர் இல்லறத்தானுக்கு உரிய தாக உரைத்ததைச் சாத்தனார் மாணிக்கு உரியதாக உரைத்தார் எனலாம். இது, நால்வகை நிலையுள் இல்நிலையும் துறவு நிலையு மென இரண்டேயுரைத்த வள்ளுவர் கருத்தை உட்கொண்டு கூறினார் எனலும் ஆம்.*

ஊத்துவக்கும் இன்பம்

சிந்தாதேவி தர, ஆபுத்திரன் அட்சய பாத்திரம் பெற்றான்; அனைவருக்கும் ஊட்டி மகிழ்ந்தான். இவனுடைய புண்ணிய மிகுதியைக் கண்ட இந்திரன் அந்தண வடிவுகொண்டு வந்து, உனக்கு வேண்டிய வரங்கள் யாவை? பெற்றுக்கொள் என்றான். ஆபுத்திரன் சிரித்து, எனக்கு இந்தக்கலம் ஒன்றே போதும் என்கின்றவன் கருத்துடைவிளியாக,

"அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்கு
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே" (*மணி.* 41)

என விளிக்கின்றான். இது

"இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று" (அ௰௫அ)

என்ற குறட்கருத்தைக் குழைத்து மாற்றிக் கூறியதாகும். இம் மண்ணுலகத்தில் ஒருணர்ச்சி வேகம் இருப்பதற்குக் காரணம் இரப்பவர் இருப்பதால்; அவர்கள் இல்லையாயின் மரப்பாவை சென்று வந்தது போல உலகம் ஒருணர்ச்சியும் அற்று இருக்கும் என்பதாம் என்கிறார். கம்பன் மண்ணுலகத்தையும் விண்ணுலகம் ஆக்க 'வண்மை யில்லையோர் வறுமையின்மையால்' (கம்பராமாயணம் பால. நாட்டு. 53) என்றும், 'கொள்வாரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ' (கம்ப பால நகரப் படலம். 73) என்றும் கற்பனை நயந்தோன்றக் கூறினும், மண்ணுலகம் ஈவாரும் ஏற்பாரும் உடைத்தாய் ஈத்துவக்கும் இன்பத்தைப் பெற்றுள்ளது. அவ்வின்பத்தை அளிப்பது, கையிலுள்ள இத் தெய்வக்கலம் என்கின்ற வகையில்

" வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்
திருந்து முகம் காட்டும் என் தெய்வக் கடிஞை " (மணி. 14)

எனக் கலத்தைப் பாராட்டுகிறான். பசி களைந்து திருந்து முகம் காட்டும் கடிஞை என்றது 'ஈத்துவக்கும் இன்பம்' (உஉஅ) என்ற தொடரை யுள்ளீடாகக் கொண்டெழுந்த உரையாகும்.

நயனுடையான் நல்கூர்தல்

இந்திரன் ஏவலால் எங்கும் வசியும் வளனும் பெருக, ஆபுத்திரனிடம் வந்து உண்போரின்மையான் அவன் அம்பலத்தை விட்டு உண்பார் 'உளரோ! உண்பார் உளரோ!' என ஊர் ஊராகத் திரிந்தான். இவனை எல்லாரும் எள்ளினர். அதனால் அவன் தனியே வருகிறான் என்பதையுணர்த்தும் சாத்தனார்

" திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
ஒரு தனி வருஉம் பெருமகன் போலத்,
தானே தமியனாகி வந்தான் " (மணி. 14)

என்கிறார். இதிலே பெருங்குடி வணிகன் ஒருவன் திரை கடலோடித் திரட்டினன். வரும்வழியில் தேடிய செல்வம் அனைத்தையும் கடல் கொண்டது. அவன் வறியனாகி வந்தது போல ஆபுத்திரன் கையில் அட்சய பாத்திரம் இருக்கும் வரையில் வறுமையேது? அங்ஙனமிருந்தும் செய்யவேண்டிய அறத்தைச் செய்ய வாய்ப்பின்மையே அவனுக்கு வறுமையாயிற்று. அதனால் அவன் செல்வமனைத்தையுமிழந்த தனியனான் என்கிறார். இது

"நயனுடையான் நல்கூர்ந்தா ஞதல் செயுநீர
செய்யா தமைகிலா வாறு" (கூகஉ)

என்ற குறளால் புத்தொளி பெறுகின்றதல்லவா !

ஆபுத்திரன் தன்கையில் இன்று எவருக்கும் பயன்படாத பாத்திரம் இருப்பதைப் பார்க்கிருன். அவன் வாயுரை

"அருந்துவோர்ப் பெருது, குமரி மூத்த என்பாத்திரம்"

என வருகிறது. இது,

"அற்ருர்க்கொன் ருற்ருதான் செல்வம் மிகநலம்
பெற்ருள் தமியள்மூத் தற்று!" (கூ00எ)

என்ற குறட்கருத்தைத் தாங்கியிருந்தவாறறிக. 'குமரி மூத்த' என்பதற்குக் குமரியைப் போல 'மூத்த' என்றும் குமரியின் பருவம், அழகு முதலியன பயன்படாதொழிந்தது போல என் கலமும் பாழாயிற்று என்றும் விளக்கந்தரத் துணை செய்வது இக் குறளேயாம் !

வான் தருங் கற்பு

மணிமேகலை பிச்சைக் கலத்தைக் கையில் ஏந்திக்கொண்டு வீதியை அடைந்தாள். உதய குமரனை உள்ளத்தே ஒளித்து வைத்திருக்கும் இவள் 'பிக்குணிக் கோலம் பூண்டு' வீதியியில் வருகிருளே என்று வியந்து ஊரவர் இவளைச் சூழ்ந்தனர்! மணி மேகலை முதன்முதல் கற்புடை மாதர் இடும் ஐயத்தையே ஏற்க வேண்டும் என்ருள். உடனிருந்த காய சண்டிகை. இதோ உள்ளது கற்பரசியின் வீடு என்கின்றவள்,

"வான்தரு கற்பின் மனையுறை மகளிரின்
தான்தனி யோங்கிய தகைமைய ளன்ருே
ஆதிரை நல்லாள் ; அவள்மனை இம்மனை
நீ புகல் வேண்டும்" (மணி. 15)

என்ருள். வான்தரும் கற்பு, மழை வேண்டிய காலத்துப் பெய்விக்குங் கற்பு. இது

"தெய்வந் தொழாஅள் கொழுநற் ருெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (ருரு)

என்ற குறளின் சுருக்கமே. இக்குறள் இக்காலத்து வேறு வேறுரைகளைப் பெற்று விளங்குகிறது. அவ்வுரைக் கருத்தை

யொட்டித் 'தரும்' என்பதை உவம உருபாகக் கொண்டு, 'வானை ஒத்த கற்பினள்' எனப் பொருள் சொல்லின் உவமத்தின் பொதுத் தன்மை உணர்தற் கியலாததாய் மருட்சியை உண்டாக்கும். ஆகவே சங்க காலத்தும், சங்கம் மருவிய காலத்தும் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்ற பொருளே கொள்ளப்பெற்ற மையைக் கலித்தொகை 16:20ம், 39:16ம் வளையாபதிச் செய்யுள் முதலியனவும் நன்கு விளக்கும்!

மேலும் இந்நூலிலேயே இருபத்திரண்டாங் காதையுள், ககந்தன் மகன் ஒருவனால் காதலிக்கப்பெற்ற கற்பரசியாகிய மருதி 'யான் பிறர் மனம் புகுந்தேன் ஆதலின் கற்பிழந்தேன். இனி யான் முத்தீப் பேணுந் தொழிலுக்குத் துணையாகும் தகுதியை யிழந்தேன். ஏ சதுக்கப் பூதமே! என்னைவிழுங்கிவிடு' என்று வேண்டிக்கொண்டபோது, அப்பூதம் கூறுவதாக வரும்,

"................. மடக்கொடி
நீகேள் என்றே நேரிழைக்கு உரைக்கும்
தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்! (மணி. 22)

என்னும் பகுதியும் நன்கு விளக்கும். அக்காலத்துக், கற்புடை நங்கை, பொய்யுரைகள் கேட்டலும், விடுகதை கூறுதலும் அதனை விடுத்தலும், ஆரவாரமான விழாக்களை விரும்பிக் கோவிலுக்குச் செல்லுதலுமே பெருங் குற்றமாகக் கருதப் பெற்றன.

மருதி பிறனொருவன் தன்னை விரும்பியதே தன் கற்புக்கு இழுக்கு என்று கருதுகிருள், இக்காலச் சூழ்நிலையில் மக்கள் மனப் போக்கு நாடகம் பார்த்தலும் விழாக்களிற் சென்றிடி படுதலும் படம் பார்த்தலுமாகியவற்றில் ஈடுபடும்போது, பிறர் தம்மனத்துப் புகாத கற்போடிருந்தாற் போதும் என்ற அளவில் பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்குக் கணவனைத் தொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழையைப் போல்வாள் என உவமமாகக் கருதப் படுகின்றது!

இயன்ற அளவு

உடைகலப்பட்டு நாகர்மலையைச் சார்ந்த சாதுவன் அங்கிருந்த நாகர் தலைவனுக்கு அறம் உரைக்கின்றவன்,

'உன்றனக்கு ஒல்லும் நெறி யறமுரைக்கின்றேன்' – (மணி. 16) என்று தொடங்குகிறன். ஒல்லும் நெறி யறமுரைக்கேன் என்ற ஆட்சி நமக்கு 'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்' (௩௩) என்ற குறளை நினைவூட்டுகிறது. நாகர்கள் மனித உடலையுண்டு, கள்ளுங்காமமுமே தங்கள் வாழ்க்கையெனக் கண்டவர்கள்; அன்பும் அருளும் அறியாதவர்கள். அவர்களுக்கு ஏற்ற வகையில், அவர்கள் கடைப்பிடித் தொழுகும் வகையில் உரைத்தலே தக்கதென உளங்கொண்ட சாதுவன், இங்ஙனம் கூறினன்; ஆதலால் சாதுவன் தனக்கு ஒல்லும் வகையானும், நாகர்கட்கு ஒல்லும் வகையானும் அறம் உரைத்தான்; கொடிய நாகர்களிடம் மொழியொற்றுமையான் 'செல்லும் வாயறிந்து' செயலாற்றினன் என 'ஒல்லும் வகையான்' என்பதற்கு இரு பொருளும் படச் சாதுவன் உரை துணை செய்தவாறு காண்க!

உறக்கமும் விழிப்பும்

நாகர் தலைவன் ஏவலரை நோக்கி, 'நம்பிக்கு நங்கை ஒருத்தியைக் கொடுத்து, வெங்கள்ளும் ஊனும் வேண்டுவ கொடும்' எனக் கட்டளையிட்ட போது சாதுவன் காதுகளைப் பொத்திக் கொண்டு இவைகளை நல்லோர் விரும்ப மாட்டார்கள்;

> 'பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
> உறங்கலும் விழித்தலும் போன்றது ஆதலின் (மணி, 16)
> நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைவர்;
> அல்லறம் செய்தார் அருநர கடைவர்;'

என அறிவுறுத்துகின்றன். இப்பகுதி

> "உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு (௩௩௨)

என்ற வள்ளுவம் தந்த செல்வமாகும்!

ஏற்பவன் தகுதியே இடும்பொருள் உயர்வு

மணிமேகலையின் பிச்சைக்கலத்தில் ஆதிரையென்னும் அருங்கற்பின் செல்வி **'பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக'** எனப் பிச்சையிட்டனள். அவளிட்ட பாத்தூண் ஏற்ற – பிச்சைப் பாத்திரத்து ஏற்ற சோறு வாங்குகிறவன் கைவருந்த வளர்ந்தது ஏன்கிறர் சாத்தனர். பாத்தூண் என்ற சொற்கிடக்கை

" பாத்தூண் மரீஇயவனை " (உஉ௭)

என்னும் வள்ளுவர் முத்திரையாம். அப்பாத்திரத்திலிட்ட சோறு,

" அறத்தி னீட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போலத் " (மணி. 17)

தொலைவில்லாத் தகைமைத்தாயது என்கின்றார். வள்ளுவர்,

" இனைத்துணைத்து என்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் " (அ௭)

என்று விருந்தோம்பலின் உயர்வும், விரிவும், பயனும் விருந்தோம்பற்குப் பயன்படும் பொருள்களைப் பற்றியன அன்று. விருந்தினரின் தகுதியளவே அளவு என்கிறார், சாத்தனார். அற வழியீட்டிய பொருள். அது அற நெறி சிறிதும் பிழையாத ஒருவனிடம் வழிப்படுக்கப் பெற்றது. அவன் அதனை அறவழிகளில் செலவிட்டான்.

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி " (உஉ௬)

என்றது போல அச்செல்வம் வளருமேயன்றி என்றும் அழியாது. வழிவழி பெருகும். அதுபோல மணிமேகலையாகிய திறத்து வழிப்பட்ட அறத்தினீட்டிய ஒண்பொருளாகிய ஆதிரையிட்ட சோறு தொலைவின்றிப் பெருகியது எனக்குறளின் கருத்தொளி அறிவு விளக்கந்தருதலைக் காண்க.

கன்னியர் காவல் வகை

மணிமேகலை அம்பலத்து வந்திருக்கிறாள். நல்லறம்பேணி நவையறு ஒழுக்கத்து நிற்கின்றாள் என்ற செய்தியைக் கேள்வியுற்ற சித்திராபதி உதயகுமரனிடம் சென்று முறையிடும்போது இவள்,

" கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்லள் " (மணி.18)

என்கின்றாள். இது குல மகளிரை அவ்வப் பருவத்துக் காக்க வேண்டிய முறைகளைக் கூறி, சிறைகாக்கும் காப்பு, நிறைகாக்கும்

காப்புகளையுங் (௫௭), கொண்டோனல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர் என்பது "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுது எழுவாள்" (௫௫) என்ற குறட்பகுதியையும் நினைவூட்டி விளக்கஞ் செய்கின்றது.

கேள்வியாற்றுளையுண்ட செவி

பின்பு, காமத்தாலுந்தப்பட்ட உதயகுமரன் எனது,

"நெஞ்சங் கவர்ந்தவஞ்சகக் கள்வி,
நோற்றூண் வாழ்கையின் நொசிதவந் தாங்கி,
ஏற்றூண் விரும்பிய காரணம்

என்னவென்று நானே தேரிற் சென்று அவளைக் கேட்பேன் எனச் சென்று கேட்கிறான். அபபோது அவள்

தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல் நன்றியன்றென

மொழிகின்றாள்.

" .. .. "கேள்வியாளரின் தோட்ட செவியை
நீ யாகுவை யாமெனில்" (மணி. 18)

கூறுவேன் என்று யாகையின் இழிதகையை எடுத்தியம்புகின்றாள். இதில்,

"கேள்வியால் தோட்கப்படாத செவி"

என்ற வள்ளுவம் நுழைந்திருக்கிறது. கேள்வியால் என வள்ளுவர் பொதுவகையிற் கூறியதைச் சாத்தனார் அறமுரைப் பார்பால்கேட்ட செவியினையுடையாய் ஆயின்' என்று யாருடைய சொல் கேட்கத்தக்கது என்பதனையும் விளக்குகிறார். இதனை வள்ளுவர் கூறும 'கேள்வியால்' என்பதற்குக் கேள்வியாளரின் கேள்வியால் எனப் பொருள்கோடல் மிகச் சிறந்ததாகும். இதனாலேயே மணக்குடவரும், காளிங்கரும் 'நல்லோர் கூறும் கேள்வி' எனவும், 'சான்றோருழைச்சென்று தாம் கேட்கும் கேள்வி' எனவும் உரைகண்டனர் போலும்.

எண்ணித்துணிக

உதயகுமரன் சம்பாபதி கோயிலுட்சென்று ஒளிந்த மணிமேகலையைக் காணமாட்டாமையால், சம்பாபதி முன்வந்து நீ அவளை எனக்குக் காட்டு. இல்லையாயின் எத்தனை நாளானாலும்

நான் பெயரேன்; பாடுகிடப்பேன்; உயிர்நீப்பேன்; என்று சபதம் செய்தான். அப்போது அங்குள்ள தெய்வம் ஒன்று,

"ஏடு அவிழ் தாரோய்! எங்கோ மகள்முன்
நாடாது துணிந்து நாநல் கூர்ந்தனை" (மணி. 19)

என்றது. இது,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு" (சகுஎ)

என்ற குறளின் பயனாக எழுந்ததே எனற்கு ஐயமில்லை.

மன்னவன் ஒளி

மணிமேகலை காயசண்டிகையின் வடிவத்துடன் சிறைக் கோட்டமபுக்கு அங்குள்ளார்க்கு இன்மொழியுடன் அமுத மளித்தனள். இதனைக்கண்ட காவலர்கள், சீர்த்தி என்னும் இராசமாதேவியோடும் அரசவையில் இருந்த மாவண்கிள்ளியைக் கண்டு

"வலி கெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி யூழிதோ றூழி" (மணி. 19)

என வாழ்த்துகின்றனர். இதில் ஒளி, "உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்குதெண்டிரைவையகங் காக்குமால்" (சீவக. 248) என்ற வண்ணம் அரசனிடம அமைந்துள்ள கடவுட் டன்மையைக் காட்டுவதாய் "நின்ற, ஒளியோடு ஒழுகப்படும்" (கூகூ அ) என்னும் பகுதியை நினைவுறுத்தும்.

பொன்றுத்துணை

உதயகுமரன் மணிமேகலையின் பொருட்டு மடிந்தான் என்ற செய்தியை மன்னனுக்குத் தெரிவிக்க முற்பட்ட முனிவர்களுள் ஒருவன், மன்னன் மனம் சினந்தணித்தற்பொருட்டுப் பலவகையான பழைய வரலாறுகளைத் தெரிவிக்கின்றான். தருமதத்தன் வரலாற்றையும் கூறுகின்றான்.

தருமதத்தன் என்னும் வணிகன் ஒருவன், தன் மாமன் மகள் விசாகையையே மணப்பேன் என்று இருந்தான். அவளும் அங்ஙனமே எண்ணினள். இவர்களுடைய உண்மைக் காதலை உணராத ஊரார் பழிதூற்றினர். அப்பழியைக் கந்திற்பாவை

போக்கியது. அது கேட்டு ஊரார் புகழ்ந்தனர். விசாகை மறு பிறப்பிலே என் மைத்துனனையே மணப்பேன் என்று நற்றாயிடம் அறிவித்துவிட்டுக் கன்னிமாடம் புக்குத் தவமுறப் போயினாள். தருமதத்தன் மதுரைக்குப் போய்விட்டான். அறுபது வயது வரை அங்கேயிருந்தான். பின்பு ஓரந்தணன் அறிவித்தவண்ணம் ஊருக்குத் திரும்பினான். விசாகையும் அவன் வரவறிந்து வந்து வணங்கினாள். வணங்கி அவனைப் பார்த்து "மறுமையில் நின்னை மணப்பது திண்ணம்.

> **இளமையும் நில்லா யாக்கை நில்லா**
> **வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா**
> **புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்**
> **மிக்க வறமே விழுத்துணை யாவது** (மணி. 22)

ஆகையால் நீ பொருளனைத்தையும் அறம் செய்க என்று பணித்தான்" என்று கூறினர். இதில் "**மிக்க அறமே விழுத் துணையாவது**" என்ற அறவுரை, எம்மொடு இன்று உள்ள இளமை முதலியன நிலையற்றன. நிலையுடையது அறப்பயன் ஒன்றே என்கின்றான். இது

> **"அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது**
> **பொன்றுங்கால் பொன்றாத் துணை"** (உசு)

என்ற வள்ளுவத்தை ஒட்டி வடிக்கப்பெற்றதாகும். உயிர் உடலை விட்டுப் பிரிந்த நாளிலும் உயிருக்குக் கெடாத துணையாக இருப்பது அறமொன்றுமே. ஆதலால், அதனைச் செய்க என்று பணித்தாளாம். பொன்றாத்துணையைச் சாத்தனார் விழுத்துணை என்றார்.

செங்கோற் சிறப்பு

இங்ஙனம் முனிவருள் ஒருவன் கூறியதும் மனந்தெளிந்த மன்னன் 'இளவரசனுக்கு யான் தரவேண்டிய தண்டனையை இவ் விஞ்சையன் தந்தனன். ஆதலால் இச்செய்தி ஏனைய மன்னர் களின் செவியிற் படுவதன் முன்னர் இவனை ஈமத்தேற்றிச் சுடுக. அக்கணிகையின் மகளைக் காவலிடுக' என்றனன். இங்கு

> **"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்**
> **காவலன் காவல் இன்றெனின் இன்றால்** (மணி. 22)

என் அரசன் அறிவிக்கின்றான். இது

" அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்,
நின்றது மன்னவன் கோல்" (ருசஉ)

என்ற குறட்கருத்தோடு ஒத்திருத்தலின் பரிமேலழகரே தம்முரையில் இதனை எடுத்துக் காட்டியுள்ளார். அறம்–இது நன்று, இது தீது என அறிந்தாற்றப்படுவது. அங்ஙனம்அறிவிக்கும் நூல் அந்தணர் நூல். ஆதலால் வள்ளுவர், நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன்கோல் என்றார். சாத்தனார், நூல் வழியொழுகும் அந்தணர் மாதவர்கள். அங்ஙனம் அவர்கள் ஒழுகும் ஒழுக்கம் தவம். அவரோடு ஒருங்குவைத்துக் காப்பாற்றத்தக்கார் பெண்டிர். ஆதலால் மடவார் கற்பைக் காப்பதும் வேந்தன் கடமை என்றார். ஆகவே இரு கருத்துக்களும் ஒருங்கிணைதலைக் காணலாம்.

குடிபுறங்காத்தல்

அரசன் கட்டளையின் வண்ணம், வாசந்தவை என்னும் முதியவள் புதல்வனையிழந்து வருந்தும் இராசமாதேவிக்குப் பல கட்டுரை கூறுகிறாள். அரச மரபிற்கு, வாளால் இறத்தலே பெருமை என விதக்கின்றவள் அரசர்களின் கடமையாக,

" கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்றத் தெவ்வர் தேஎந்தம தாக்கியும் " (மணி. 23)

என்பன முதலியவற்றைக் கூறுகின்றாள். இதில் "குடிபுறங்காத்து" என்பது,

" குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (ருசகூ)

என்ற வள்ளுவர் வாய்மொழியேயாகும். குடிபுறங்காத்தலாவது குடிகளைப் பிறர் நலியாதவாறு பாதுகாத்தல். கொற்றங் கொண்டாலல்லது முடியாதாதலின் சாத்தனார் கொற்றங் கொள்ளுதலோடு இணைத்து எண்ணிய சிறப்பு உணர்ந்தின்புறற்குரியது.

நன்றே செய்க; இன்றே செய்க

புண்ணியவரசன் தருமசாவகனைப் பார்த்து 'பாத்திரங் கொண்டு பலருக்கு உணவளிக்கும் இவள் யார்' என வினவுகிறான். அப்போது அண்மையிலிருந்த பிரதானி நான் கிள்ளிவளவனைப் பார்க்கக் காவிரிபூம்பட்டினம் போயிருந்தபோது அறவண அடிகள் சொல்ல இவள் பெருமையைக் கேட்டிருக்கிறேன். முன்பு

தங்கட்கும் தெரிவித்திருக்கிறேன். அவளே இவள், அடிகள் ஆணையின் வண்ணம் மாலைப் பொழுதிற்குள் மணிபல்லவம் சென்றாள். பீடிகையைத் தொழுதாள். புத்தபீடிகையால் பழம் பிறப்பை உணர்ந்த மணிமேகலை பிரமதருமனிடம் அறங்கேட்ட போது அவன், அறங்களில் ஒன்றாக,

"மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்
போற்றுமின் அறம்" (மணி. 25)

என்றான். இது "அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க" (௩௬) என்பதன் பிழிவாம்.

என்புடையாக்கை

புண்ணியராசனும் மணிபல்லவம் செல்ல வேண்டும் என்ற வேட்கையனாய்க் கலமூர்ந்து செல்ல, மணிமேகலையும் புண்ணிய வரசனும் வந்தமையறிந்த தீவதிலகை எதிர்கொண்டழைத்துச் சென்று புத்தபீடிகையை வணங்கச் செய்தாள். பின்பு அவனை நோக்கி, நீ ஆபுத்திரனாக உயிர்நீத்த காலத்து உன்னை நாடி வந்து உயிர்நீத்த ஒன்பது செட்டிகளின் உடல் என்பு இவை காண் எனக் காண்பிக்கின்றவள்,

"புன்னை யருநிழற் கீழாய்
அன்புடை யாருயிர் அரசற் கருளிய
என்புடை யாக்கை யிருந்து காணாய்" (மணி. 25)

என்கின்றாள். இப்பகுதியுள்,

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" (எ௩)

என்ற குறளின் சொல்லாட்சி பொதிந்து நிற்றல் காண்க.

மழை நிகர் வண்கை

மணிமேகலை வஞ்சி நகரையடைந்து பௌத்த முனிவர் தங்கியிருக்கும் தவச்சாலையைச் சேருகிறாள். அங்கே மாசாத்துவானைக் கண்டாள். அவன் மணிமேகலை காஞ்சிமாநகரம் செல்லவேண்டிய இன்றியமையாமையை யுணர்த்தினன். அப்போது

"ஆருயிர் மருந்தே அந்நாட்ட கல்வான்
காரெனத் தோன்றிக் காத்தல் நின்கடன்" (மணி: 28)

என அருளுகின்றான். இதில் "கைம்மாறு வேண்டாக் கடப் பாட்டினையுடைய மாரியின்" (உகக) இயல்பு உணர்த்தப் பெற்றுள்ளது. வள்ளுவர் மாற்றுதவியை வேண்டாத மாரி எனக் கூறியதை மனத்துள் அடக்கி, அப்பொருள் தோன்றக் காரெனத் தோன்றிக் காத்தல் என்ற சாத்தனார் சொற்செட்டும் பொருளாழமும் மிக உணர்ந்தின்புறுதற்குரியன.

வினையின் விளைவு

தானத்திலும் சீலத்திலும் தலைநின்ற மணிமேகலை புத்த தரும சங்கமாகிய மும்மணிகளையும் மூன்று முறை வணங்கி அறவண அடிகள்பால் அடைக்கலம் புகுந்தாள். அறமுரைக்கின்ற அவர்,

"வினைப்பயன் விளையுங்காலை யுயிர்கட்கு
மனப்பே ரின்பமும் கவலையுங் காட்டும்" (மணி. 30)

என்கின்றார். இது 'வினைவின்கண் வீயாவிழுமந்தரும்' (உஅச) என்பதன் விரிவுரையாகும். களவு முதலிய பாவச் செயலான் விளையும் வினை விளைந்து முற்றத்தொடங்கின் உயிர்கட்கெல்லாம் கவலையையும் துன்பத்தையும் காட்டும் என்கின்றார். சாத்தனார். வள்ளுவரோ, களவாகிய தீயநெறியிற் செல்லும் ஆசைமுற்றி, நுகர்ச்சிக்கு ஆங்கால் அழியாத் துன்பத்தை ஆக்கும் என்கின்றார். இருவர் கருத்தும் ஒரே வழியிற் செல்லுதலைக் காண்கிறோம்.

முடிந்த முடிபாகச் சாத்தனார் பாவை போல்வாளாகிய மணிமேகலை தவஞ்செய்தாள் என்புழி, "யாம் மேலுரைத்த பொருள் கட்கெல்லாம், காமம் வெகுளி மயக்கம் காரணம்" (மணி. 30. என்கின்றார். இதுவும் "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன். நாமங்கெடக்கெடும் நோய்" (உசுO) என்ற குறளின் சொல்லாட்சியேயாம்.

இங்ஙனம் வள்ளுவத்தின் சொல்லும் பொருளும் மணிமேகலையுள் விரவி, விளக்கத்தையும், புதுமையையும் தந்து நிற்றலைக் காணலாம்.

★

சிந்தாமணியில்
வள்ளுவம்

சிந்தாமணியில் வள்ளுவம்

வாழ்க்கைநூலும் வரலாற்று நூலும்

திருக்குறள் செந்தமிழன்னையின் கண்போல்வது. அன்னையின் கண்களிலே அன்பு ததும்பும்; திருக்குறளில் அறிவு ததும்புகிறது. அன்னையின் கண்கள் மகன் வாழ வழிகாட்டும்; உணர்வூட்டும்; உடலை வளர்க்கும்; திருக்குறளும் அங்ஙனமே.

செந்தமிழன்னையை அரியாசனத்து இருத்தி, அவளை உலகறியச் செய்து, பன்னூராண்டுகளாகப் போற்றி வருவதும் திருக்குறளே.

திருக்குறள் அமுதம், திருவள்ளுவர் உள்ளமாகிய பாற்கடலில் இருந்து எழுந்தது. மக்களை வாழ்வாங்கு வாழவைத்து, வானுறையுந் தேவராகச் செந்தமிழ் மண்ணிலே திகழவைப்பது.

முதலில், மனிதன் உணர்ச்சிகளை யடக்கியாளக் கற்பிக்கிறது. அடுத்து நாட்டையும் வீட்டையும் ஆளக் கற்பிக்கிறது. அடுத்து உணர்ச்சிகளை யடக்கி யாள்பவனே இன்பத்தைத் துய்க்கும் முழுத் தகுதியையும் பெறுவான் என்பதனோடு முப்பாலாக முடிவுறுகிறது. ஆகவே திருக்குறள் மனிதனுடைய வாழ்க்கைநூல்.

வாழ்க்கை நூல் பொதுநிலையினின்று மாறி, ஒருவனுடைய வாழ்க்கையில் அமையுமானால் அது வரலாறாகிறது. வரலாற்று நூலுக்கும் வாழ்க்கை நூலுக்கும் உள்ள இயைபு பொதுவும் சிறப்பு மாகும் அத்துணையே. பொருளுக்கும் பொருட்டன்மைக்கும் உள்ள தொடர்பே வாழ்க்கை நூலுக்கும் வரலாற்று நூலுக்கும் உள்ள தொடர்பு எனலாம். வாழ்க்கையாகிற தத்துவத்தை அதாவது தன்மையைக் கொண்டிலங்குவதே வரலாறாகிய பொருள்.

ஆகவே திருக்குறளாகிய வாழ்க்கைநூல், சீவக சிந்தாமணி யாகிய வரலாற்று நூலிலே எங்கெங்கு அமைந்து, தானும் விளங்கி, வரலாற்றையும் விளக்கஞ் செய்கிறது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும்.

சீவக சிந்தாமணி

சீவகன் என்னும் அரசர் பெருமகனுடைய பிறப்பு முதல் அவன் பேரின்பம் பெற்றது வரையுள்ள வரலாற்றைப் பேசுங் காப்பியம். காமச் சுவையைத் தாய்ச் சரக்காகக்கொண்டு, வீரச் சுவையை உறுப்பாகக் கொண்டு, ஏனைய நகை யழுகை முதலான சுவைகளைத் துணையுறுப்பாகக் கொண்டு, சிவகதி சென்று சேர்தலாகிய அமைதிச் சுவையோடு நிறைவெய்துகிறது. வாழ்வியல் உலகியல் இவைகளில் எவையெவை எவ்வெப்போது நம் புலன்களைக் கவர்ந்து அறிவு விருந்தாக அமைகின்றனவோ அவைகளனைத்தையும் அள்ளி அள்ளி வழங்குவதால் 'சிந்தாமணி' என்ற பெயராற் சிறப்புப் பெற்றது.

இதன் வரலாற்றுச் சுருக்கம்

ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்திலே குருகுலத்தை விளக்கும் அரசன் சச்சந்தன். அவன் மனைவி விசயை. அரசன் விசயையின் மேலுள்ள விருப்பால் காவற்றொழிலாகிய கடமையிற் றவறிக் கட்டியங்காரனாற் கொல்லப்பட்டான். மயிற்பொறி வாயிலாகத் தப்பிய விசயை இடுகாட்டில் இறங்கி ஓராண்மகவை ஈன்றாள். அவனே சீவகன் என்னும் இக்காப்பியத் தலைவன்.

இவனுடைய வளர்ப்புத் தந்தை கந்துக்கடன் என்னும் வணிகர் பெருமகன். அரசகுமாரன் என்றறிந்தே அவனைப் பிறர் அறியாமல், கல்வி, கேள்வி, வில்வித்தை, வாள்வித்தைகளிற் பழக்கி வளர்த்து வருகிறான்.

ஒருநாள் கட்டியங்காரன் என்னுங் காவலனுடைய பசு நிரைகள் வேடர்களாற் கவரப்பட்டன. அதனைச் சீவகன் மீட்டுக் கொடுத்தான். அதற்காக மனமுவந்த நந்தகோன் என்னும் நிரைகாவலன் தன் மகளை மணந்துகொள்ள வேண்டுகிறான். சீவகன், தன் தோழனாகிய பதுமுகனுக்கு அவளை மணஞ் செய்து வைக்கின்றான்.

வித்தியாதர அரசன் கலுழவேகன் மகளாகிய காந்தருவதத்தையை வீணைப்போரில் இசையால் வென்று மணந்துகொள்கிறான்.

சிலநாட் சென்றபின், குணமாலையைச் சுண்ணங் காரணமாக முன்பே சீவகன் அறிவானாகலின், அவளைப் பட்டத்தியானையாகிய

அசனிவேகத்தினிடமிருந்து காத்து, அவள் தந்தை குபேரமித்திரன் கொடுக்கத் திருமணம் புரிகிறான்.

பின்பு, பல்லவ நாட்டுச் சந்திராபம் என்னும் நகரத்தரசனாகிய தளபதியின் மகள் பதுமை என்பவள் விடந்தீண்டி இறக்க, அவளை யுயிர்ப்பித்து மணக்கிறான்.

அடுத்துப் பல நாடுகளையும் கண்டு வரும் சீவகன், தக்க நாட்டுக் கேமமாபுரத்தை யடைகிறான். அங்குச் சுபத்திரன் என்னும் வணிகன் மகளாகிய கேமசரியை மணக்கிறான்.

பிறகு, மத்திமதேயத்துள்ள ஏமமாபுரத்தடைந்து, அரசன் மகளாகிய கனகமாலையை மணக்கிறான்.

சீவகன், சில நாட்கழித்து, தண்டகாரண்யம் சென்று தன் தாய் விசயையைக் கண்டு அளவளாவி, அவள் ஏவலின்படித் தன்னகரை அடைகிறான். மாற்றுருக்கொண்டு வீதியிற் செல்கிறான், விமலையைக் கண்டு காதலிக்கிறான். அவள் தந்தையாகிய சாகரதத்தன் வேண்ட அவளை மணக்கிறான்.

சில நாட் சென்ற பின் தோழர்களில் ஒருவனாகிய புத்திசேனன் வாயிலாகச் சுரமஞ்சரியின் இயல்புகளையும், அவள் நோன்பையுங் கேட்டுக், கிழவடிவு கொண்டு அவள் வாழ்ந்தகன்னி மாடத்துட் புக்கு அனைவரையும் இசையால் மயக்கி அவளை மணக்கிறான்.

தன் தாய்மாமன் கோவிந்தன் உதவியால், கட்டியங்காரனை வென்று மண்மகளையும், பூமகளையும் மணக்கிறான். பின்பு தன் மாமன் மகள் இலக்கணையையும் மணந்து ஏமமாபுரத்து அரசு செலுத்திவருகிறான்.

சில நாட்கள் சென்றன, ஒரு நாள் பூஞ்சோலையைக் காணச் சென்ற காவலன், சோலையிலே தன் மனைவியின் ஊடலைத் தணிப்பதற்காக, ஆண் குரங்கொன்று பலாப்பழத்தைப் பறித்து வந்து, சுளைகளை எடுத்துக் கொடுக்க, சோலைகாவலன் ஓடிவந்து அக்குரங்குகளை வெருட்டி ஓட்டிவிட்டு அப்பழத்தைக் கவர்ந்து சென்றான். இந்நிகழ்ச்சி மன்னன் மனத்தில் மாறுதலை விளைவித்தது. அதனால் இரத்தினப்பிரபை என்னும் சாரணரைக் கண்டு தருமோபதேசம் பெற்றுத் தன்மகனை சச்சந்தனுக்கு

அரசை யளித்துத் துறவு பூண்கிறான். சமவசரணம் அடைந்து, சுதன்மரால் விதிப்படித் துறவினை ஏற்று, விபுலகிரியில் தவம் பூண்டு, கருமக்ஷயம் பண்ணிப் பரிநிர்வாணம் அடைகிறான் என்பது. இந்த வரலாற்றோட்டத்திலே திருக்குறள் மணிகள் ஆங்காங்கு ஒளி செய்வதைக் காண்போம்.

கடவுள் வாழ்த்தில்

கடவுளின் எல்லை யற்ற குணங்களில், வள்ளுவர் கூறிய 'வேண்டுதல் வேண்டாமையிலாமை' (திருக்குறள் 4) என்ற குணம் திருத்தக்கதேவர் சிந்தையைக் கவர்ந்திருக்கிறது.

வேண்டுதல் வேண்டாமை இரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்ட குணங்கள். இருளும் ஒளியும் போல்வன. ஆதலால் இரண்டும் ஒரு பொருளிடத்து ஒருங்கு நிகழா, ஒன்று மடங்கிய காலத்தே ஒன்று முனைந்து தோன்றும். கால மாற்றத்தாலும் கருத்து மாற்றத்தாலும் வேண்டியது ஒன்று வேண்டாத தாகலாம்; வேண்டாதது வேண்டியதாகலாம். "வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்; தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்" (சீவக. 888)

இங்ஙனம் தேயவேற்றுமையாற் கூட, வேண்டுதல் வேண்டாமை விளையக்கூடும். இங்கு விரும்பப் பெறுவது தண்ணீர்; இமயத்துச்சியில் விரும்பப் பெறுவது வெந்நீர். இவைபோல.

பொதுவாக விருப்பு – வெறுப்புகட்குக் காரணம் பற்றும் பற்றின்மையுமே. பற்றிய தெல்லாம் விருப்பு; விட்டதெல்லாம் வெறுப்பு. விருப்பெல்லாம் நட்பு, வெறுப்பெல்லாம் பகை. ஆகவே தேவர் வேண்டுதல் வேண்டாமைகளைப்'பகை நண்பு' என்பர். இறைவனை "பகை நண்பொ டில்லான்" (சீவக. 3)

இவ்வளவில் விட்டார் அல்லர்; பகையும் நண்பும் இல்லாதவன் எனின் நொதுமலாளன்; உயிர்களின் ஆக்கத்திலும் அழிவிலும் கருத்தில்லாதவன் என்று ஆகிவிடுமோ என்றும் எண்ணி யிருக்கிறார். அதனால் 'பண்மாண் குணங்கட்கிடனாய்' (சீவக. 3) என இறைவன் எல்லையற்ற குணங்கட்கு உறைவிடமானவன்; அவனிடம் கருணையுண்டு; ஆனால் பற்றும் அஃதின்மையுங்

காரணமாக வரும் நண்பும் பகையும் இல்லை என்றார். இங்ஙனம் வள்ளுவர் கருத்தைத் தேர்ந்து தெளிய வைக்கின்றார் தேவர்.

அம்மட்டோ ! பகையும் – நண்பும் தன்னலம் பற்றி விளைவன. கடவுளோ தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; தன்னலம் சிறிதும் இல்லாதவர்; ஆதலால், பகையும் நண்பும் அவரிடம் என்றும் இல்லாத குணங்கள் எனவும் சிந்திக்கச் செய்கின்றார்.

பதிகம்

நூலுட் கூறப்பெறும் வரலாறுகளைத் தொகுத்துணர்த்திப் படிப்பவனுக்கும் நூலுக்கும் தொடர்பு உண்டாக்குவது பதிகம். நூலுள் அறிய இருக்கும் உருவின் கருவைப் பதிகத்துட் பார்க்கலாம்.

பட்டத்தரசியாகிய விசயை இடுகாட்டுள் ஈற்றுநோயால் வருந்துகிறாள். துணை யாரும் இல்லை. மகப் பெற்றாள், அங்கு ஒரு தெய்வம் கூனி வடிவில் வந்து உதவியது என்பவர்,

"நாளுற்று நம்பி பிறந்தான் திசைபத்தும் நந்தத்
தோளுற்று ஓர்தெய்வந் துணையாத் துயர்தீர்த்த வாறும்"
(சீவக. 10)

என்கின்றார். தோள்உற்று – தோளை ஒத்து இதில் உற்று – என்பது எடுத்தோதா உவம உருபு. தொல் – உவமையியலில் காண்க.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (எஅஅ)

என்ற குறட்கருத்து இழை ஓடுகிறது. துணை என்பது நட்பையும், தோள் என்பது கையையும், துயர்தீர்த்தவாறு என்பது இடுக்கண்களைவதாம் என்பதையும் சுட்டி இணைப்பை எளிதில் உணரச் செய்கின்றன.

சீவகன் காந்தருவத்தையை யாழ் வாசித்தலால் வெல்கிறான்; மணக்கிறான்; இருவரும் ஒத்த இன்பத்தை ஒருங்கு நுகர்ந்தனர். என்னும்போது, "நஞ்சுற்ற காமம் நனிசாகரில் நுய்த்த வாறும்" (சீவக. 11) என்கிறார். இப்பகுதிக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர், இருதலையும் ஒத்த காமத்தை நாகர் போலத் துய்த்த வாறும் என உரைகண்டார். இவ்வுரையை நாம் படிக்கும்போது,

"ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலையானும் இனிது" (ககூசு)

என்ற குறள் ஒருவகைப் புத்துணர்வோடு இன்பூட்டும்.

இக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் பரிமேலழகர். ஆண் பெண் இருபாலரிடத்தும் ஒத்து நிகழவேண்டிய வேட்கை ஒருதலைக் கண்ணேயாயின் இன்னாதாம்' என்றுரைத்தனர். மணக்குடவரும், பருதியாரும் ஒருதலையன்பினாலுண்டாகிய காமம், ஒருதலைக்காமம் ஆகிய கைக்கிளை என உரைகண்டனர். பரி மேலழகர் கருத்தின் வண்ணம் காமம்—வேட்கை என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளுள்ளது. காளிங்கரும் அங்ஙனமே கருதினர்.

'நாகரில்' என்ற உவமையை நிலைக்களனாக வைத்து, நச்சினார்க்கினியர் 'தத்தையுஞ் சீவகனும், இருதலையும் ஒத்த காமத்தை நாகரைப் போல நுகர்ந்தனர்' எனக்காமம் என்ற சொல்லுக்கு இன்பம் எனப்பொருள்கொண்டு இருபாலிடத்தும் காலவேறுபாடும், உணர்ச்சி வேறுபாடும் இல்லாத இன்பத்தைத் துய்ப்பவர்கள் நாகர்கள். அவர்களைப்போல இவர்களிருவரும் துய்த்தனர் என்கின்றார்.

'தனிப்படர் மிகுதி' என்பது காதலனைப் பிரிந்த காதலியின் துன்பப்பெருக்கம். அதாவது பிரிவு; பிரிவு என்பது தேயம் இடையிட்டும் காலம் இடையிட்டும் பிரியும் பிரிவே யன்றிப் புணர்போதில் காலவேற்றுமையும் உணர்ச்சி வேற்றுமையும் நிகழ இருக்கும் காமமும் மாதர்க்குப் பிரிவாகும் எனக்கருதவைக்கும் சிறப்பினை மீட்டும் காவடித்தண்டின் இருபக்கமும் சுமை, ஏற்றத் தாழ்வாயிருந்தால் தூக்குபவனுக்கு நோய் விளைக்குமாறுபோல ஒருபாலுக்குத் துன்பமாம் என்று உவமை வாயிலாக உணர்த்து கிறார்.

வெள்ளம் பெருகுகிறது

கதைத்தலைவனாகிய சீவகனுடைய நாட்டழகைக் காண் கிறோம். அவன் நாடு இசையால் திசைபோய ஏமாங்கத நாடு. நாட்டைச் சூழ மலைகளும் காடுகளும் விளங்குகின்றன. அங்கு மழை பொழிந்து வெள்ளம் பெருக்கு எடுத்து ஓடுகிறது. பல் வகைச் செல்வங்களையும் ஊர்கடோறும் உய்த்துச் செல்கிறது.

ஊரார் ஒருவரும் 'எமக்குச் செல்வம் வேண்டும்' என்று கேட்கவில்லை. கேளாதபோதே உதவிச்செல்கிறது. அதனை

"வள்ளற் கைத்தல மாத்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர்தொறும் உய்த்துராய்
வெள்ள நாடும டுத்துவி ரைந்ததே" (சீவக36).

என்கின்ருர் தேவர். இதில், வெள்ளம் வள்ளற்கைத்தல மாந்தராகக் காட்சியளிக்கிறது. வள்ளன்மையாவது வறியராய் வந்தார்க்கு வரையாதீயுங்குணம். அத்தகைய குணம் படைத்த மாந்தரைப் போல வெள்ளம் மாநிதிக் குப்பையை ஊர்தோறும் உள்ளம் இல்லவர்க்கும் உய்த்துச் செல்கின்றது என்னும்போது

"வறியாற் கொன்றீவதே ஈகை" (உஉக)
"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்" (உஉந)

என்ற திருக்குறட்கருத்துக்கள் உள்ளொளி செய்கின்றன.

உள்ளம்–ஊக்கம் "உள்ளம் உடைமை உடைமை" (ருகூஉ) என்பது வள்ளுவம். "உடையர் எனப்படுவது ஊக்கம்" (ருகூக) என்ற குறளும் இக்கருத்தை யரண்செய்யும். உள்ளம் இலாதவர் ஊக்கமில்லாவறியர். செல்வக் கொழிப்பால் தேவையற்று ஊக்க மில்லாத செல்வருமாம். இங்ஙனம் இருதிறத்தார் வாழ்கின்ற ஊர்கடோறும் நிதிக்குப்பையை உய்த்துச் செல்கின்றது வெள்ளம். ஆகவே தேவர் திருக்குறளிற் பலவிடங்களில் வரும் சொல்லாட்சிகளையும், பொருளாழத்தையும் இணைத்துச் சிந்தாமணிக் காப்பியத்தைச் செய்தனர் என்பதைத் தெளியலாம்.

வெள்ளம் பல வாய்க்கால்களாகப் பிரிந்து நிறைந்து போகின்றது. அதன் வேகத்தைத் தணிக்க மள்ளர்கள் அங்கங்கே படல் இடுகிருர்கள். அதனுல் வெள்ளம் வேகந்தணிந்து கரைக்கு அடங்கிச் செல்கிறது. இக்காட்சியை,

"குலத்தலை மகளிர்தங் கற்பின் கோட்டகம்
நிலைப்படா நிறைந்தன பிறவும் என்பவே" (சீவக, 41)

எனக் கவிதைத் திரையிற் காட்டுகிருர் தேவர். இதில்,

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு." (கூஎச)

என்ற குறளின் நிழலோட்டம் முழுதும் அமைந்துள்ளது. வள்ளுவர், பெருமையைப் பற்றிப் பேசும் இடம் இது. பெருமைக்கு ஆசைபடுகிற மனிதன் தன்னைத்தானே கொண்டு ஒழுக வேண்டும் என்கிருர். மனிதன் காம தாகங்களுக்கு அடிமைப்பட்டுப் பொறி புலன்களுக்குத் தன்னை விற்கிருன். அப்போது அவன் விற்கப்படு பொருளாகிப் பொறி புலன்களின் உடைமையாகி விடுகிருன். அங்ஙனமன்றி விற்பவனும் தானே, வாங்குபவனும் தானே ஆதல் வேண்டும். அதுதான் தன்னைத் தான் கொள்ளுதல். அதாவது பொறிகளைப் புலன்வழிப் போகவிடாமல், தன்வழி நடக்கச் செய்தலாம். அங்ஙனம் மனத்தை ஒடுக்கி மக்களுக்கு உபகாரமாக ஒப்புரவாற்றி வாழ்ந்தால் பெருமை தானுக வரும். அதற்கு எடுத்துக் காட்டு 'ஒருமைமகளிரே போல' என்னும் இக்குறள்.

ஒருமை மகளிர், எல்லை கடவாத பெண்கள். மன நிறையை யுடைய கற்புடைய குலமகளிர். அவர்கள், நாட்டுக்கும் வீட்டிற்கும் கணவனுக்கும் அடங்கி வரம்பு மீருமல் நடப்பவர்கள். அவர்களைப் போல வெள்ளம் கரைக்கு அடங்கிச் செல்கிறது என்ற வள்ளுவர் கருத்தும் தேவர் கருத்தும் ஒன்றிச் செல்லுதலைக் காணலாம்.

கற்றவர் பணிவு

வெள்ளம் வாய்க்கால் வழியோடிப் புலங்களிற் பாய்ந்தது; பயிரை வளர்த்தது. பயிர்கள் அடுக்கடுக்காகக் கதிர்கொண்டன. கதிர்களில் அடர்த்தியான நெல்மணிகள். அதனல், கதிர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. பின்னர்ச் சிறிது சிறிதாகக் கதிர்கள் பால்கொண்டன; மணிகள் பருத்தன; இப்போது அதே கதிர்கள் தலைவணங்கி நிற்கின்றன. இந்த இருவகைக் காட்சியையும் தரும் வயற்படத்தைப் பாருங்கள். தேவர்,

**"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே,"**

(சீவக. 53)

என்கிருர். இதனை ஊன்றி நோக்கும்போது, 'மேலலார் செல்வமே போற்றலை நிறுவி' என்ற பகுதியில்

**"மையல் ஒருவன் களித்தற்ருல் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்"** (அ௲அ)

என்ற குறளின் கருத்தோட்டம் காணப்பெறும். பேதை, அறிவு இருந்தும் செயற்படுத்த அறியாதவன். அவன கையில் பொருளும் சிக்குமாயின் அதனைக் கொண்டு எத்தனையோ தீமைகளைச் செய்து இடருறுவான். இவனுக்கு ஓர் உவமை, இயல்பாகப் பித்தன் ஒருவன், கள்ளையும் குடித்துக் களித்திருக்கிறான்; அவன் எத்துணைத் தருக்கும் செருக்கும் உடையவனாக இருப்பானோ அத்துணைத் தருக்குடையான் பெருஞ் செல்வமுற்ற பேதை என்கிறார் வள்ளுவர். இதனையே மனத்துட்கொண்டு தேவர் மேலலார் செல்வமேபோல் 'தலைநிறுவி' என்கின்றார்.

அடுத்துள்ளது, மணிமுற்றிப் பால் பிடித்த கதிர்களின் நிலையைக் காட்டும் 'தேர்ந்தநூற் கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' என்னும் பகுதி. சிலர் நூலறிவின்றியே மூதறிவுடையராகலாம். ஆனாலும் பட்டறிவாகிய அதுமட்டும் பயன் படாது, அவ்வறிவின் தரத்தையும் பயனையும் முன் கூட்டியே அளந்துகாண நூலறிவும் வேண்டும். நூலறிவும் நன்றாகப் பலகாற் பயின்று தேர்ந்ததாதல் வேண்டும் என்கிறார். இக்கருத்து,

"பெருமை பெருமித மின்மை" (௯௭௯)

"பணியுமாம் என்றும் பெருமை" (௯௭௮)

என்ற குறட்பாக்கள் தந்த உள்ளீடாகும். பெருமிதம், கல்வி தறுகண், இசைமை, கொடை என்ற நான்கு நிலைக்களன்களைக் கொண்டு விளைவது. அதில் முதலிடம் கல்விக்கே. கல்விப் பெருமிதமின்மையே பெருமையாம் என எண்ணச் செய்யும் தேவர் 'கல்விசேர் மாந்தர்' 'நூற்கல்விசேர் மாந்தர்' தேர்ந்த நூற் கல்விசேர் மாந்தர்' என இரு அடைகளாற் சிறப்பித்தார். நூற்கல்வி தொன்னெறி மரபின் வந்த தூய கல்வி, வரையறையுடைய கல்வி, அதனால் வணக்கம் தானே பிறக்கும் என்பனவும் உணரச் செய்து திருக்குறளுக்கு விளக்கம் தருகிறார்.

கேடிலா வயல்

வயல் வள மிகுந்த ஏமாங்கத நாட்டின் ஊர்களையுணர்த்தும் தேவர்பிரான்,

"......... மரு தணிந்து கேடிலா

வளவயல் வைகலும் இன்ன தென்பதேன்" (சீவக. 64)

என்கிறார். இதில் 'கேடிலா வயல்' என்ற தொடர் அருங்கேட்டால்

ஆற்ற விளைவது நாடு' (எ௩௨) என்ற திருக்குறள் தொடரை நினைவூட்டுகிறதன்றோ? அருங்கேடு – கேடின்மை. 'அருங்கேடன் என்பதறிக' (௨௧௦) என்புழிப் போல. அதனையே கேடிலாவயல் என்றார் தேவர்; அருங்கேட்டால் என்றார் வள்ளுவர். இருவர்க்கும் இதில் எத்துணை இணைப்பெண்ணம் இருக்கிறது. கேடுகள்,

"விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு
நட்டம் பெரும்பெயல் காற்றெட்டு" (பு. வெ. 250)

என்பன. இந்த எட்டுக்கேடும் இல்லை எனவே வயல்மிக விளையும். அதன் சிறப்பை இன்னதென்பது ஏன்? என வியக்கின்றார் தேவர்.

கண்ணுக்குள்ளே காதலவர்

ஏமாங்கத நாட்டை அணிசெய்யுந் தலைநகரம் இராசமாபுரம். அதில் மாடகூடங்கள் பல விளங்குகின்றன. அவற்றின் நிலா முற்றங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காட்டுகிறார் தேவர்.

நிலாமுற்றம் ஒன்றிலே இளங்காதலர் இருவர். இருவரிடத்தும் வேட்கைமிக நிறைந்து தோன்றுகிறது. மிக்க வேட்கையால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். அதனால் இருவர் கண்ணிலும் இருவரும் மாறி விளங்குகின்றனர். கணவன் கண்ணிற் பாவையாகத் தன்னுருவைக் காணுகின்ற காதலி, வேட்கை மிகுதியால் மயங்கி அவ்வுருவை வேற்றுப் பெண் உருவம் எனக்கருதுகிறாள். ஊடல் பிறக்கிறது. எழுந்து ஓடுகிறாள். கணவன் மேகலையைப்பற்றி யிழுக்கிறான். மேகலை யறுந்தது. அதிலுள்ள மணிகள் முற்றமெங்கும் சிதறின. அதனால் முற்றம் பொற்கொல்லர் உலைக்களத்தை ஒத்தன என்ற நிகழ்ச்சியைத் தேவர்,

"கண்ணுளார் நுங்காதலர் ஒழிககாமம் ஈங்கென
உண்ணிலாய வேட்கையால் ஊடினாரை யாடவர்
வண்ண மேகலைகளைப் பற்ற அற்றுதிர்ந்தன
எண்ணில்பொன் சுடுநெருப்பு உக்கமுற்றம் ஒத்தவே"
(சீவக. 72)

எனக் கவிதைக் கண்ணாடியிற் காட்டுகிறார். தலைவனைப் பார்த்துத் தலைவி நுங்காதலி உங்கண்ணுள் உள்ளாள்; நான் உம் காதலி யல்லள்; ஆதலால் காமம் ஒழிக என்றாடினளென்ற இக்கருத்து.

"கண்ணுள்ளார் காதலவராக" (கககஉஎ)

என்ற குறள்தந்த கருத்தாகும்.

ஆனாலும், வள்ளுவர் கூறும் சூழ்நிலை வேறு. இன்பம் ஒத்த இணைபிரியாத வாழ்வு. அதில் தலைவி தலைவனையே நோக்கிக் கொண்டிருக்கிறாள். அவன் உரு அவள் கண்ணில் பாவையாக விளங்குகிறது. அதனை அனுபவிப்பதிலேயே அவளுக்குத் தனித்ததோரின்பம். ஆனால் கண்ணுக்கு மையெழுத வேண்டிய நேரம் வந்துவிட்டது. மை எழுத எண்ணுகிறாள். மை எழுதினால் கண் கலங்கும். நீர்ததும்பும், அவர் உரு மறையும். அதனால் மை எழுதேன் என்கிறாள்.

தேவர் கூறும் சூழ்நிலை வேறு. தேவர் சிந்திக்கிறார்; தலைவியின் கண்ணில் தலைவன் பாவையாகக் காணப்பெறுவதைத் தலைவியறிய முடியாதே. கண் பிறபொருளைக் காணுமேயன்றித் தன்னையும், தன்னுள் உறுப்பையுங் காணாதே! ஆதலால் அவள் தலைவன் கண்ணைப் பார்த்தாள். அதில் ஒரு பெண்ணுரு விளங்கிற்று. அதனைத் தன்னுருத்தானெனத் துணிய அவளுடைய காதலிடந் தரவில்லை. மீதூர்ந்து நின்றது. அதனால் மாற்றாளுடைய பாவையாகக் கருதினாள். ஊடல் பிறந்தது என்றார்.

சொற்றொடர் தேவரிருவர் வாயிலும் ஒன்றுபோலிருந்தாலும், திருத்தக்க தேவர் கூற்று ஊடலுக்குக் காரணமாவது. தேவர் கூற்று காதற் சிறப்புரைப்பது. திருத்தக்கதேவர் கூறிய காதலி மயங்கி உணர்ந்து ஊடிக்கூடலின்பத்தைக் கொள்ளைக்கொள்ள எண்ணுகிறவள் தேவர் கூறும் காதலி அவர்பால் ஆராக் காதலுடையேன் என்றும் அவர் என்னெதிரில் உள்ளார், பிரியார் என்றும் இருவர் நிலையையும் உணர்த்துகிறவள் இங்ஙனம் 'காதலர் கண்ணுள்ளாராக' என்ற சொற்றொடர் இடஅமைப்பால் இரு கோணங்களிற் பிரிந்துசென்று இலக்கிய எழிலை மிகுவிப்பதை யுணருகிறோம்.

மற்றும், நகரைச் சிறப்பிக்கின்ற திருத்தக்கதேவர்,

"நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும்
அஃதிடம்" (சீவக. 77)

என நகரத்தின் சிறப்பைத் தெரிவிக்கின்றார். தவஞ்செய்வார்க்கு இடம் என்கின்றபோது,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" (எ௱௩)

என்ற குறள் நிழலாடுவதைப் பார்க்கிறோம். தக்கார் என்பதற்குப் பரிமேலழகர் அறவோர் எனப்பொருள்கண்டு, அறவோராவார் துறந்தோர் அந்தணர் என விளக்கமுந் தருவர். ஆகவே தக்கார் அரசனாற் பாதுகாக்கப்பட வேண்டிய தவமுனிவர்களாகிய துறவோர் யாகலாம். திருத்தக்கதேவர் தவஞ்செய்வார் என்பதும் அவர்களையே எனற்குத் தடைஒன்றுமின்று.

தவத்தில் வீடுபேறுகருதி இம்மைப்பயனை அறவே விரும்பாத தவம் உண்டு. அது நற்றவம். இம்மையில் பொன்னைப்பொருளை வேண்டுகின்ற தவமும் உண்டு. இருவகைத் தவங்களைச் செய்வார்க்கும் அவ்வூர் இடமாகிறது என்றார்.

மேலும், தாழ்விலாச் செல்வரைப், 'பொருள் செய்வார்' 'நற்பொருள் செய்வார்' என்ற தொடர்களால் குறிப்பிடுகின்றார். ஆகவே தக்கார், தாழ்விலாச் செல்வர் என்ற வள்ளுவர் வாய் மொழிக்குத் தேவர் வாய்மொழி விளக்கமாதலைக் காணலாம்.

நகரச் சிறப்பை முடித்துக்காட்டுகிற தேவர்,

"புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய
மட்டிலா வளநகர் வண்ணம் இன்னதே" (சீவக. 93)

என்கின்றார். வளநகர் இராசமாபுரம். அது பழுத்த மரம்போல அழகியது; புட்கள் எப்போதும் இடைவிடாமற் பயில்வது. எல்லையற்ற வளம் பெற்றது என்று நகர இயல்பையறிவிக்கின்றார். இதில் 'புட்பயில் பழுமரப் பொலிவிற்றாகிய' என்பதில்

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று" (உகசு)

என்றதன் கருத்தமைதியைக் காணலாம். பயன்மரம் மனிதனுக்கும் பயன்படக்கூடிய மரம், அது ஊர்நடுவே பழுத்தால் எளிமையாக எல்லோருக்கும் பயன்படும். அதுபோல அனைவருக்கும் பயன் தரும் நகரம் என்றார்.

ஆனால், வள்ளுவர், மனிதனுக்குப் பயன்படாத – பறவைகட்கு மட்டும் பயன் தரும் பழுமரங்களும் உளவாதலின் அவற்றை விலக்கி மனிதனுக்கும் பயன்படும் மரத்தையே நயனுடையான் செல்வத்திற்கு உவமித்தார். இந்தத் தனிச் சிறப்பைத் தேவர் வாக்கு நமக்குத் தரவில்லை.

அகழ்

இராசமாபுரத்தைச் சுற்றியுள்ள அகழ். அது பகைவர் அணுகுதற்கும் அரியது. முதலை, சுறு முதலிய கொடிய விலங்கு இனங்களையுடையது. தாமரை மலர்கள் பூத்துப் புதுப் பொலிவுடன் விளங்குவது என அகழின் பல்வகை நலங்களைக் கூறுகின்ற தேவர் இயற்கை எழில் ஒன்றை எழுதிக் காட்டுகிறார்.

அகழியிலே சேவலும் பெடையுமான அன்னங்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஆணன்னத்திற்குப் பெண்ணன்னத்தின் மேற் சிறுசினமாகிய ஊடல். அதனால் அது பறந்து சென்று பக்கத்திலுள்ள தாமரை மலரில் உட்கார்ந்து அடங்கி ஒடுங்கிக் கண்ணை மூடிக்கொண்டிருந்தது. இத்தோற்றம் சுற்றத்தாரை விட்டுப் பிரிந்து துறவுபூண்டு தவஞ் செய்யும் முனிவரை ஒத்திருந்தது என்ற அழகான நிகழ்ச்சியை,

> **" சிறையனப் பெடையினோ டூடிச் சேவல்போய்**
> **அறுபத வண்டின மார்ப்பத் தாமரை**
> **உறைவது குழுவினி னீங்கி யோகொடு**
> **கறையற முயல்வதோர் கடவுள் ஒத்ததே.** (*சீவக* 96)

எனத் தெரிவிக்கின்றார் தேவர்.

நோன்பு அல்லது தவத்திற்குப் பற்றப்படுவதொரு பொருளும் இருத்தல் கூடாது. ஏதாவது ஒரு பொருள் இருந்தாலும் போதும், அது மீளவும் மயக்கத்திற்கு ஏதுவாய்ப் பிறப்பைக் கொடுக்கும் என்கின்ற

> **" இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை; உடைமை**
> **மயலாகும் மற்றும் பெயர்த்து "** (*நஎசச*)

இந்தக் குறட்கருத்துப் பின்னணியாக இருந்து தேவர் கவிதையைச் சிறப்பிக்கிறது. அன்னம் பேடையை ஊடலால் வெறுத்து ஒதுங்கியது. இது 'நோன்பிற்கு ஒன்றும் இன்மை இயல்பாகும்' என்று பிரிகிறது. தீயிடைத் தவம் புரிவதுபோலச் செந்தாமரைப் பூவில் போய்த் தவஞ் செய்கிறது என்பதால் கருத்திணைதல் காண்க.

அகழியும் - கணிகையும்

அகழி, அகப்பட்டவனைத் தன்னகப்படுத்தித் தாழ்த்திக் கொல்வதால் கணிகையை ஒத்துளது என்பார், கணிகையர் இயல்பை

"பட்டவர்த் தப்பலிற் பரவையேந் தல்குல்
அட்டொளி யரத்தவாய்க் கணிகை" (சீவக. 98)

என்கின்றார் தேவர். வள்ளுவர்,

"வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு" (௯௧௯)

என்கின்றார். இதில் கணிகையர் தோள்கள், உயர்வில்லாத இழி மக்கள் முழுகும் சேறு; அதில் இழிந்தோரை என்றுங் கரைசேர விடாது. அழுந்திச் சாகச் செய்யும் என்னுங் கருத்தைத் தருவதாம். ஆகவே 'பட்டவர்த் தப்பலின்' என்பது ஆழும் அளறு என்பதன் எதிருரையாக இருத்தலைத் தெளியலாம்.

அளறு – சேறும் சகதியும் நிறைந்த நீர்நிலை. அதில் அழுந்தினோர் ஒருக்காலும் மீள இயலாது. இத்தகைய அகழியைப் பரத்தையர் தோளுக்கு ஒப்பிட்ட நயம் ஓர்ந்துணர்தற்கு உரியது.

கணிகையரைக் கவர்ந்த காளை

சீவகன் கலைநலம் அனைத்துந் தேர்ந்து, கட்டிளங்காளையாய்க் கன்னியர் காமுறும் காமனாய் விளங்குகின்றான். காளையர் மனத்தைக் கொள்ளைகொள்ளும் கணிகையர்களும் அவனைக் கண்டு மயங்கி அரற்றுகின்றனர், என்பார்

"விலைபகர்ந்து அல்குல் விற்கும் வேலினும் வெய்ய கண்ணார்
முலைமுகந்து இளையர் மார்பம் முரிவிலர் எழுதி வாழும்
கலையிகந் தினிய சொல்லார் கங்குலும் பகலும் எல்லாம்
சிலையிகந் துயர்ந்த திண்தோள் சீவகற்கு அரற்றி ஆற்றார்.
(சீவக. 172)

என்கின்றார். காளையரைக் கண்டபோது அவர்கள் கண்காணக் காதலாற் கவல்வார்போலக் காட்டி நிற்கும் கணிகையர்கூடச் சீவகனைக்கண்டு சிந்தையையிழந்து அரற்றுன்றனர். கணிகையரோ காசுக்காக விற்கத்தகாத உறுப்பையும் விற்பவர்கள்; தைத்தாலன்றி உயிரைக் கொல்லாத வேலைக்காட்டிலும் கொடியதாய்க் கண்டாலே கொல்லும் கண்களையுடையவர்கள், என்ற தகுதிகளான் அவர்கள் பொருளளவு விற்கும் போகமுடையார் கொடியர் என்பதைக் குறிக்கின்றார்.

இது, வள்ளுவர் கூறிய 'பொருள்விழையும் ஆய்தொடியார்' (கூகக), பொருட்பெண்டிர்' (கூகரு), 'பொருள் பொருளார்' (கூகச) என்ற தொடர்கள் தந்த கருத்தாகும்.

நோக்குவகை

சீவகன் தாயாகிய விசயையின் கண்ணழகையும், அவற்றியல்பையும் அறிவிக்கமுற்பட்ட தேவர்பிரான் திருவுளத்தில்

"......................ஒருநோக்கு
நோய்நோக்கொன்று அந்நோய்க்கு மருந்து" (கoகூக)

என்ற திருக்குறட்பகுதி ஒளியிட்டது. அதைக் கருவாகவைத்துக் கொண்டு கருத்துருவை வளர்க்கின்றார்.

"... .. ..மாண்பில்நஞ்சு மமிர்தமுமே
போல்குணத்த பொருகயற்கண்" (சீவக. 166)

என. இதில் மாண்பு இல்நஞ்சு—மாண்புஇல் அமிர்தம் என இருபாலும் அடைமொழியைப் புணர்த்திப் பொருள்கொள்ளும் வகையில் அமைத்த சிறப்பு ஆழ்ந்து இன்புறுதற்குரியது.

நஞ்சிற்கு மாண்பின்மை இயற்கை. அது யாரையுங் கொல்வது. நஞ்சுடைய பாம்பை நஞ்சு கொல்லாது. ஆனல், விசயையின் நோய்விளைக்கும கண்ணாகிய நஞ்சு, உடையவளையே கொல்கிறது. அது மாண்பின்மையின் உச்சக்கட்டந்தான். அதுவும் தொலையட்டும். அமுதத்திற்கு என்றும் உயிர்களை வளரவும் வாழவும் வைக்கும் மாண்பேயுள்ளது. அத்தகைய அமுதத்தை ஒத்த இவளுடைய மருந்து நோக்கு, அரசனை எக்கணமும் தன்னை விட்டுப்பிரியாத பிணிநோக்காய்-கடமைகளைத் தவறச்செய்யும் காதனோக்காய் ஒப்படைக்கக்கூடாத அரசியலையும் தம்மரபின் வழிவாராதார்பால் ஒப்படைக்கச்செய்யும் இழிநோக்காய் – மன்னனுயிர்க்கே உலைவைக்கும் தகாநோக்காய் அமைதலின் 'மாண்புஇல் அமுதமபோல்' குணத்த எனக்கருத்தை வளர்த்துதவிய தேவர் இக்குறட்குச் சிறந்த உரையாசிரியர் ஆகிறார் எனலாமா?

பழத்தை விழுங்கும் பறவை

சச்சந்தன் விசயை இருவருடைய இல்லறவாழ்வு இன்ப நுகர்ச்சி ஒன்றிலேயே கழிகிறது. அப்போது அவனுக்கு

அவளும், அவளுக்கு அவனும் எப்படியிருந்தனர் என்பதனைக் காட்டுகிற தேவர், அரசனுக்கு அரசி

" காமத் தூழுறு கனியை ஒத்தாள் " (சீவக. 192)

அரசன் அவளுக்கு

" அளித்தயில்கின்ற வேந்தன் அஞ்சிறைப் பறவை ஒத்தான் "
(சீவக. 192)

இல்லறத்தில் இன்பஞ் சிறப்பது ஒத்தகாமத்து இருவரும் உவந்து கூடிய போதேயாதலின், தேவர் அவளைக் கனியாகவும், அவனை விழுங்கும் பறவையாகவும் காண்கின்றார். இந்த எண்ண வளர்ச்சி தேவர்க்கு எங்ஙனம் உண்டாயிற்று என்பதை ஊன்றி நோக்க வள்ளுவரிடம் போவோம். அவர் தலைசிறந்த பெண் ணிலையிலிருந்து பேசுவார்; 'எவளொருத்தி தான் விரும்பிய கணவனால் விரும்பப்படுகிறார்களோ அவளே காமநுகர்ச்சி என்னும் கொட்டையில்லாப்பழத்தை பெற்றவள் ஆவாள்' என்று. அதனையறிவிக்கும் திருக்குறள்,

" தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி " (ககஙக)

என்பது. இக்குறளில் வந்துள்ள 'காமத்துக் காழில் கனி' என்ற தொடரே புதிய விளக்கம் பெற்றுப் புதுமணம் பெற்ற விசயை சச்சந்தன் நிகழ்ச்சியாக வெளிப்படுகின்றது,

" ....கண்ணாள்,
............காமத் தூழுறு கனியை ஒத்தாள்
.........வேந்தன் அஞ்சிறைப் பறவை ஒத்தான் "
(சீவக. 192)

என்று. வள்ளுவர் தலைவியின் செயலாகக்கூறிய காமநுகர்ச்சியின் பயனைத் தேவர், தலைவியே கனி: கொட்டையில்லாத கனி; தலைவன் அதனை விழுங்கும் பறவை எனக் குறளோட்டத்தைப் புத்துருக்கொள்ளச் செய்கிறார்.

தேவர் சிந்திக்கின்றார்; காமக்கனி; அது தலைவன் தலைவி இருவருக்கும் உரியது. விரும்புவார்க்கும் உரியது; விரும்பப் பெறுவார்க்கும் உரியது; காமமோ உயிர்ப் பொருளின் குணம். அது முற்றிக்கனியானால் சுவைமிகுந்து விளங்கும் என்பதைவிடக் கனிநுகர்பொருள். நுகர்பொருள் நுகர்வானை இன்றியமையாதது;

ஆகவே விசயை நுகர் பொருள். நுகர்பவன் சச்சந்தன் என்பார் இங்ஙனம் கூறினர்.

இங்ஙனமே, சச்சந்தன் மகன் சீவகன் சுரமஞ்சரியை மணந்து இன்பம் துய்க்கின்றான். அங்கும் தேவர்

"யாழ்கொன்ற கிளவியாள்தன் அமிழ்துறழ் புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து"
(*சீவக.* 2089)

என்கின்றார். இதில் 'புலவி நீக்கி' என்றது தான் விரும்புஞ் சுரமஞ்சரி தன்னை விரும்புவதற்குத் தடையாயிருப்பது ஊடல்; அதனை நீக்கியவுடன் அவள் தன்னை விரும்பினாள். சீவகன் கொட்டையில்லாப் பழத்தை நுகர்ந்தான் என்ற உள்ளுணர்வு உறுத்தப்பெற்றுள்ளது.

ஆகவே, இக்குறள் இரண்டிடங்களில் ஒரேவகையான நோக்கத்தில் தேவரால் எடுத்தாளப்பெற்றமை காணலாம்.

இக்குறளுக்கு உரைவகுத்த ஆசிரியர்கள் அனைவரும், தனிப் படர் மிகுதி என்ற அதிகாரம் நோக்கி, தலைவன் அறஞ் செயற் காகவும் பொருளீட்டற்காகவும் கடமையுணர்ச்சிமிக்குப் பிரிகின் றான். கடமை விஞ்சும்போது காமம் விஞ்சாது. ஆதலால் அவன் தலைவியை மறந்திருப்பான். தலைவிக்கோ பிரிவு பசப்பு நோயை அள்ளி வீசியது. அதனால் வருந்துகிறாள். அவளைப் பார்த்து உயிர்த்தோழி, 'உன் கணவர் உன்னிலும் பிரிவாற்றார்; கடிதின் வருவர் உனக்கென்ன அம்மா! பேரின்பம் நுகரப் போகிறாய்' என்று தேறுதல் கூறுகிறாள். இங்ஙனம் கூறிய தோழியை நோக்கித் தலைவி கூறுகிறாள்'

"தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி" (௧௧௯௧)

என. இதனால் தலைவி தோழி கூற்றுக்கு மறுமொழியாக, நாம் விரும்புபவர் நம்மை விரும்பினால் கனி பெற்றது போலத் தான்எனக் கனிபெற்ற தன்மை எனக்கு மட்டுமன்று; என் தலைவருக்குந்தான் எனக் கூறுகிறாள். புணர்வின்பம் இருவர் மாட்டும் ஒப்பநிகழ்வ தொன்றாதலின் இங்ஙனம் கூறினாள்.

பரிமேலழகர் காமநுகர்ச்சி என்னும் பரலில்லாத கனி என்றும், காமம் என்பது அதனாலாய நுகர்ச்சியைக் காட்டுதலால் ஆகு பெயர் என்றும் கூறினர். அத்துச்சாரியை வேற்றுமைப் புணர்ச்சிக்கண் மகரஈற்றை ஒட்டிவரும் சாரியையாகவே, அது, பிற வழி வாராமை துணிந்து அவ்வழிக்கண் வந்தது என எழுத வேண்டிய இன்றியமையாமையும் ஏற்பட்டது. காளிங்கர் காமமாகிய கனியெனப் பண்புத் தொகையாக்கிப் பொருள்கண்டார். இவர், கருத்திலும் அத்து அல்வழிக்கண் வந்த சாரியையாகவே கருதப்பெறுகிறது. மணக்குடவர் காமநுகர்ச்சியின் கண்பரலில்லாத பழத்தைப் பெற்றாராவர் என ஏழாம் வேற்றுமை விரித்துப் பொருள் கண்டார். இம்மூவர் உரையிலும், மணக்குடவர் உரைக்கு அரண் செய்வது தேவர் திருவாக்கு. காமநுகர்ச்சியின் கண், விரும்பியவரால் விரும்பப்பெறுகின்ற இருவரும், ஒருவருக்கு ஒருவர் காழில்கனி போலாவார் என்பதனை வரலாற்றோடு இயைத்துச் சச்சந்தனுக்கு விசயை கனிபோல்வாள்; சீவகனுக்கு சுரமஞ்சரி கனிபோல்வாள் என அமைதியை விளங்கச் செய்தனர்.

ஆகவே இக்குறட்கு, தாம் விரும்புபவர் தம்மை விரும்பப் பெற்றவரே காமநுகர்ச்சியில் பரலில்லாத பழத்தைப் பெற்றாராவர் என்றபொருளே இலக்கண அமைதிக்கும் பொருட்சிறப்பிற்கும் ஏற்றதென்பதைத் தேவர் வாக்கானும், மணக்குடவர் உரையா னும் தெளிகிறோம்.

பளிக்கறையும் – பவழப்பாவையும்

பளிக்குஅறை-பளிங்குக்கல். இதற்குத் தனக்கென நிறமும் உருவும் கிடையாது. ஆயினும் அடுத்த உருவத்தின் உருவமே தனதுருவாய், அதன் நிறமே தன் னி ற மா ய் விளங்கும். அத்தகைய பளிங்குக்கல்லே ஒரு பழவப்பாவை சார்ந்து நின்றால் எங்ஙனம் இருக்கும். பழப்பாவையாகும்; இங்ஙனம் சச்சந்தன் மனமாகிய பளிங்குக் கல்லினுள் புக்குப் பவழப்பாவையாகிய விசயையே விளங்க நின்றாள் என்பார்,

> "பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயற்
> .... கண்ணாள்" (சீவக. 192)

என்றார். இதற்கு உரைகண்ட நச்சினார்கினியர் அடுத்தது காட்டும் பளிங்கைப் பவழம் தன்தன்மையாக்கினாற்போல, அடுத்த மகளிர் தன்மையனும் அரசனை இவளும் தன்தன்மையே யாக்கிச்

கொண்டாள் என்றுரைக்கின்றார். இதனால் விசயையின் பேரழகும் நற்பண்பும் சிறக்குமேனும், பாட்டுடைத் தலைவனாகிய சச்சந்தன் பலமகளிரை நாடிநாடி அவரவர்கள் வண்ணமாம் தன்மையன்; அவனைத் தன்வயமாக்கிக் கொண்டாள் எனக் காப்பியத் துணைத்தலைவனுடைய இழிதகைமையும் உடன் எண்ணப்படும். ஆதலால் இதனை,

> **"அடுத்தது காட்டும் பளிங்கு"** (எ0சு)

என்னும் திருக்குறள் உவமையோடு ஒத்துநோக்குவோம்' சச்சந்தன் மனம் திருமணம் ஆகும்வரை பளிங்குபோலிருந்தது. பின்பு சார்ந்தவள் வண்ணமாயிற்று என அவனுடைய தூய்மையும் மணமானபின்பு விசயையன்றி வேறெவரையும் நாடாத உயர்வும் உடையதாயிருந்தது என்ற கருத்தையும் பெறலாமே என்று தோன்றுகின்றது.

கடலன்ன காமம்

வள்ளுவர்,

> **"கடலன்ன காமம் உழந்தும் மடலேறுப்**
> **பெண்ணின் பெருந்தக்கது இல்"** (ககநஎ)

என்று தமிழ்நாட்டுப் பெண்களின் தனிப்பெருமையைக் கூறுகின்றார். இது சேட்படுத்தப்பெற்ற நிலையில் தலைவன் கூறுவதாக வருவது. களவின்கண் இருவரும் புணர்ந்தும், இன்னுங்கற்புநெறிக்கண் படாமையின் இடையிடையே நிகழும் ஒருவழித்தணத்தல், சேட்படை முதலான சூழ்நிலையில் உண்டான பிரிவாற் பெரிதும் பேதுற்றுக் கூறியது. இங்கே காமம் கடலன்னது என்றது கடக்க இயலாத வண்ணம் ஆழமும் பரப்பும் உடையதாயிருந்தது என அருமையுணர்த்த வந்தது. இதே உவமையை ஆள எண்ணுகிறார் தேவர். கற்புக்கடம் பூண்ட ச்சந்தன் விசையை இருவரிடமும் அமைத்து,

> **"கடிமணக் கிழமையோர் கடலின் மிக்கதே"** (*சீவக.* 196)

என்று.

மணக்கிழமை – உரிமைக் காதல், கற்புக்காலத் துறவு. அது கடலன்னதாக இல்லை, அதனினும் மிக்கது என்கிறார். இந்த இருதேவர் கருத்தாலும் களவுக்காதல் கடலன்னதாயும், கற்புக்

காதல் அதனின் மிக்கதாயும் இருந்தமை வாயிலாக வேறுபாடு தெரிவிக்கப் பெறுகின்றது.

களவுக் காலத்துப் புணர்ச்சிக்கட் குறைந்த காதலை அவ்வப்போது தலைவியின் சொல்லும் செயலும் நிறைவிக்க, அதனாற் கடல் அன்னதாயிற்று. கற்புக் காலத்திலோ துறந்தோர்க்களித்தலும் தொல்லோர்ப் பேணலும் விருந்தெதிர் கோடலும் முதலான இல்லொழுக்கால், இவளின்றி இல்லறம் இனிது நடவாது என்ற நிலை ஏற்பட, அதனால் தலைவன்மாட்டுக் காதல் கடலின் மிக்கதாயிற்று. அதனாலேயே தேவர் ' கடலன்ன காமம் ' என்ற வள்ளுவர் வாக்கையும், அஃதெழுந்த சூழலையும் நன்காராய்ந்து, ' கடலின் மிக்கதே ' என்றார். மேலும், பவழவாய் அமுத மாந்தியும் முலைத்தடத்து வைகியும், இடியினும் கொடியினும் மயங்கியுங் கடிமணக்கிழமை கடலின் மிக்கதே என்கிறார்.

இங்ஙனம் கைமிக்க காதலால் மன்னன் கடமையை மறந்து கெடுகிறான்என்பதை விளக்குகின்ற தேவர்,

“மண்ணகம் காவலின் வழுக்கி மன்னவன்
பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்
விண்ணக மிருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற வுரோணியோ டொளித்த தொத்ததே.”
(சீவக. 198)

என்கிறார். இதனால் மன்னன் மாணுவுவகையால் மண்ணகங் காவலைக் கைவிட்டுக் கட்டியங்காரனால் மடிய இருக்கிற நிலையின் தொடக்கம் அறிவிக்கப் பெறுகின்றது.

“ இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.” (சாடு உ)

என்றதில் மாணுவுவகையால் விளைந்த அழிவு என்பதும் உய்த்துணரவைக்கின்றார் ஆசிரியர்.

உவகை மனநிறைவால் எய்தும் இன்பம். அது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்ற நான்கானும் எய்தும் என்கின்றது தொல்காப்பியம். அவற்றுள் புணர்வெனப்படுவது ' அம்மா ! அரிவை முயக்கால் ' விளையும் உவகை. பொதுவாக உவகைகள் அனைத்துமே புலனுகர்ச்சி பற்றியன. செல்வம் பணமாகவும்,

பண்டமாகவும் பெட்டியில் நிறைந்திருக்கும்போது உவகையுணர்வுண்டாகாது. அவை நுகரப்பெறும் பொருளாகமாறிக் கொடுத்தும் – மடுத்தும் – அடுத்தும் நுகரப்படும்போதுதான் உவகையாகிறது. ஏனையவும் இங்ஙனமே.

செல்வம் புலன் என்பன ஓரொருகால் ஓரொரு பொறிகட்கே விருந்தாவன. புணர்வு ஐம்புலன்களாகிய, ஐம்பொறிகட்கும் உவகையூட்டுவது. இத்தகைய உவகையும் அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சாதல் போல எல்லை கடந்தால், கடமைகளை மறக்கடித்தால் மாணுவுவகையாகிறது. மன்னன் அழிவிற்குக் காரணமாகிறது. இத்தகைய எண்ணக்குவியல்களை மனத்தில் நிறைத்தே திருத்தக்கதேவர்,

"மண்ணகம் காவலின் வழுக்கி மன்னவன்
பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்"
(சீவக. 198)

என்கிறார். ஆகவே இப்பாடல் தேவருள்ளத்தே ஒளித்து நின்று மாற்றுருத் தாங்கித் தோற்றும் கருத்து

"...... .... .மாணு
உவகையும் ஏதம் இறைக்கு" (சஙஉ)

என்ற வள்ளுவமாகும்.

நாவலர் சொல் நலம்!

பெறற்கருந்திருப்பெற்றபின் சிந்தனை பிறிதாகும் இயல்புடைய கட்டியங்காரனது மனநிலையறியந்த நிமித்திகன் என்னும் அமைச்சன், மன்னன் சச்சந்தனுடைய மன நிலையை யறிந்து, மன்னனை யணுகி, 'மன்ன! நீ ஒருவன் மேல் அரசை வைப்பின், நிலம் திரு நீங்கும் என்று ஓர்க' என்றனன். மன்னன் அதுகேட்டு 'அமைச்ச! மனக்கின மொழிய வேண்டா; வாழியர்; ஒழிக' என்கின்றான். அதைக் கேட்ட நிமித்திகன்,

"காவல குறிப்பன் றேனும் கருமமீது அருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு நன்கலாற் றீங்கு வாரா"
(சீவக. 206)

என்று அறிவுறுத்துகின்றான். இதில்

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு." (சுஙச)

என்ற வள்ளுவம் வரலாற்றேடு ஒட்டிக் குழைந்து அளிந்து கிடக்கிறது. மன்னனிடம் மந்திரி பழகவேண்டிய மரபும் ஒளிந்து கிடக்கிறது. வள்ளுவத்தில் வந்த 'ஒருதலையாச் சொல்லுதல்' என்பது, குறிப்பன்றேனும் என் கடமை உரிய காலத்து ஏற்ற வற்றைத் தெரிவிக்கவேண்டியது. தெரிவிக்கின்றேன். அருளிக் கேட்க; எங்களைப் போன்ற நாவலர் சொல்லைக் கேட்டு நடந்தால் அரசர்க்கு நலமே விளையும். தீமைவரவே வராது என்ற குறிப்பே.

மேலும், நிமித்திகன் அரசர் சீறுவரேனும் அடியவர் உறுதி களை உரைசெயாது ஒழியார். மன்னவர் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரம் எம்மனோர்க்கு வேண்டப்படுவது ஆதலால்,

> "மூரித்தேந் தாரி ளுய்நீ முனியினு முறுதி நோக்கிப்
> பாரித்தேந் தரும நுண்ணூல் வழக்கது வாதல் கண்டு"
> (சீவக. 214)

என்கின்றான். இங்ஙனம் நிமித்திகன் வாயிலாகத் தேவரைச் சொல்லவைத்தது

> "அறிகொன்று அறியான் எனினும் உறுதி
> உழையிருந்தான் கூறல் கடன்." (௬௩௮)

என்ற வள்ளுவமே. உறுதி சொல்லும் அமைச்சனையும் மதியாது, அவன் சொல்வதிலுள்ள நன்மை தீமைக் கூறுபாடுகளை அறியும் ஆற்றலிலனாயினும், அரசன் பக்கத்திலிருக்கும் அமைச்சர்கள் சிறிதும் அஞ்சாது உறுதியை உற்ற காலத்தில் உரைக்கவேண்டும் என்பதே வள்ளுவத்தின் திரண்ட கருத்து. இதுவே தேவர் வாக்கில் திகழ்கிறது. மற்றும் 'நூண்ணூல் வழக்கு அது' என்பதுங்கூட 'அறம்பாடிற்றே ஆயிழை கணவ' என்பதுபோலத் திருக்குறளின் வழக்கு எனச் சுட்டியதாகுமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

விதிவழி மதி

யார் என்ன சொல்லியும் மன்னன் சச்சந்தன் கேட்கவில்லை. அரசைக் கட்டியங்காரன்மீது சுமத்தினன். இதனை வரலாற்றை நடத்திச் செல்கின்ற தேவர் தம்கூற்றாகவே,

" இனமாம் என்றுரைப் பினுமே தமெனுன்
முனமா கியபான் மைமுளைத் தெழலால்
புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறியோ டியமன் னவனே " (சீவக. 215)

என்கின்றார். இதில் எத்தனை வள்ளுவங்களின் இழைகள் கலந்துள்ளன என்பதைக் காண்போம்.

முதலில் 'இனமாம் என்றுரைப்பினும்' என்பது, நான் உனக்கு மாற்றானல்லன்; உன்னுடைய நலந் தீங்குகளிலே பங்கு கொண்டு, நீ வாழின் வாழ்ந்தும், தாழின் தாழ்ந்தும் வழிவழியாகப் பணிபுரியும் அகப் பரிவாரங்களுள் ஒருவன் ஆவேன் என்று சொன்னாலும் கேளானாகி அரசை ஒப்படைத்தான் என்கிறார்.

அரசன், அரசியற் காரியங்கள் எதனைச் செய்யினும் அதனை அமைச்சர்களையும் உடன்வைத்து ஆராய்ந்து செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யாமல் தான்தோன்றித்தனமாகச் செய்துவிட்டு, அதனால் தவறுவரின், அப்போதுமட்டும் அமைச்சர்களை வெகுண்டால் அரசத்திரு அவனைவிட்டு நீங்கும் என்ற கருத்தமைந்த

" இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு " (௫அ௬)

என்ற குறட்பகுதியும்,

அமைச்சர்களிற் சிலர் இனம்போல இருப்பர். இனத்திற்கு இருக்கவேண்டிய உண்மையன்பும், கடமையுணர்ச்சியும் வாய்மையும் அவர்களிடம் இரா. அவர்களிடம் பொறுப்பு ஒன்று ஒப்படைக்கப் படுமாயின் அவர்கள் மகளிர் மனம்போல மாறுபட்டுத் தீங்கிழைப்பர் என்ற கருத்தமைந்த

" இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும் " (அஉஉ)

என்ற குறட்கருத்தும் விரவியுள்ளன. அமைச்சனாகிய நிமித்திகன் தான் உண்மையான இனம், மரபுவழிவந்த இனம் என்றுரைப் பினும் அரசன் நம்பினானல்லன். ஏதம் வரும் என எண்ணினானும் அல்லன்; இனம்போல நடிக்கும் இனமல்லாத கட்டியங்காரனை நம்பினான். அவன் அரசுபெற்ற பின்பு மகளிர் மனம்போல மாறுபட்டான் என்ற செய்திகளாக உருக்கொண்டன.

அடுத்து, 'முனமா கியபான்மைமுளைத் தெழலால்' (சீவ. 215) என்பது. மன்னன் முற்றக்கற்றவன்; மரபறிந்தவன்; அங்ஙனம் இருந்தும் இங்ஙனம் மதிமயங்கியது பழவினைப் பயனால் என்கின்றார். இதில் ஊடுருவி நிற்பது

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" (௩௮௦)

என்ற குறள்.

அடுத்து, 'மனமா நெறியோ டியமன் னவன்' (சீவக. 215) என்பது. விதிவழி மனம்; மனம்போன வழியே மன்னன் போகிறான். பெண்வழிச் செல்கின்ற மன்னன் அரசையும் இழந்தான் என்ற வரலாற்று நடையிலே

"அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்" (௯௦௯)

என்ற குறட்கருத்து ஒளிசெய்கிறது. காதல் வயப்பட்ட மன்னனுக்கு உழையர் கூறும் அறமும், அரச கடமையாகிய அறிவினைகளும் தோன்றவில்லையன்றோ!

அறிவமைச்சன்

சில மாதங்கள் சென்றன. அரசி கருவுற்றாள். கரு வளர வளர நற்சூல் கொண்ட சலஞ்சலம் போல நங்கை நலம் தொலைந்தது; அரசன் அவளைப் பிரிந்துறைய வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. திருமகன் தமியனானான். அப்போது அவனுடைய அறிவு எனும் அமைச்சன், அவன் அகத்திருந்தே குறைகளை எடுத்துக்காட்டி, உய்தற்குரிய உபாயத்தையும் உரைக்கின்றான்.

"காதிவேல் மன்னர் தங்கள் கண்ணெனை வைக்கப்பட்ட
நீதிமேற் சேறல் தேற்றாய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காமம் என்னும் மதுவினிற் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் றோயோர் அரும்பொறி புனைவி யென்றான்"
(சீவக. 233)

அரசே! உனக்குக் கண்களாக விளங்குவன ஒற்றும் உரைசான்ற நூலும் ஆகிய இரண்டுமே. அவற்றுள் உரைசான்ற நூலாகிய நீதிநூலின்வழிச் செல்லுதலைத் தெளியா தொழுகினாய், வழியல்லா வழியில் சென்று காமமாகிய மதுக்கடலில் வீழ்ந்தாய்; முழுகினாய்;

பல ஆண்டுகள் கவலைப்பட்டு ஆவது ஒன்றும் இல்லை: ஒரு அருமையான பொறியொன்றைப் படைப்பாயாக என்று அறிவு என்னும் அமைச்சன் உள்ளிருந்து உணர்த்துகிறான்.

இதில் 'கண்ணென வைக்கப்பட்ட, நீதிமேற் சேறல் தேற்றாய்' என்பது,

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (ருஅக)

என்ற குறட்பாவின் ஒளியாக விளங்குவதைக் காணலாம்.

இக்குறட்பாவுக்குப் பரிமேலழகர் 'ஒற்றினை' ஊனக் கண்ணாகவும், 'உரைசான்ற நூலை' ஞானக்கண்ணாகவும்கொண்டு ஒழுகுக என உரைத்தாராயினும் ஊனக்கண் துணைக்கொண்டே ஞானக்கண் உருவும் ஒளியும் பெறவேண்டியிருத்தலானும், ஒன்றற் கொன்று இன்றியமையாததாக இருத்தலானும், இருகண்ணும் கூடியே ஒன்றனை நோக்கி ஆராய்ந்து அறிதல் வேண்டும், கண்ணிரண்டும் ஒன்றையே காணல் போல என்ற சிறப்பும் தெரிய நிற்றல் காண்க.

மற்றும், 'உரைசான்ற நூல்' என்பதற்குப் புதியதோர் விளக்கம் கிடைக்கிறது. மன்னர்க்குரிய கலை நூல்கள் அத்தனையும் உரைசான்றனவே யாயினும் இங்கே வள்ளுவர் குறிப்பா னுணர்த்தியது, நீதி நூல்களையே எனலாம். ஏனெனின், 'கற்பவை கற்றபின்' (கூகூக) என்பதிற் கற்பவாவன அறம், பொருளின்பம் வீடெனும் உறுதிப்பொருள் உணர்த்துவன என்பதும், யானைஏற்றம், குதிரை ஏற்றம் படைக்கலப் பயிற்சி முதலியன எனப் பிறிதோரிடத்தும் குறித்தமையான் ஈண்டு உரை சான்ற நூல் என்பது நீதி நூல்களையே எனக் கொள்ளக்கிடத்தல் காண்க.

இங்ஙனம் அறிவு எனும் அமைச்சன் அறிவுறுத்த மன்னன் மயிற் பொறியைச் செய்து அது இயங்கு முறையையும், அதனை இயக்கு முறைகளையும் தன் மனைவிக்கு மட்டும் சொல்லியும் வைத்திருந்தான். இது வரலாற்று நடப்பு.

நிமித்திகன் முதலிய நல்லமைச்சர்களை மதியாதவனாகி அரசைக் கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான். அரசு கைக்கு வந்ததும் கட்டியங்காரன் செய்த முதற்காரியம்

" .... நீதிநூல்
ஓதி ஞர்தமை வேறுகொண் டோதிய" *(சீவக. 240)*

தீமையேயாம். ஆளுபவன் நீதிநூல் ஓதினர் தம்மை என்றும் தமராகக் கொண்டொழுகும் கடப்பாட்டாளன். அங்ஙனமாகவும் அவன் வேருக்கொண்டு – மாறுபட்டாராகக் கருதி ஒழுகினன் என்கின்ருர். இக்கருத்து,

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" (சருo)

என்று வள்ளுவர் வழங்கிய வாய்மொழியைக் கொண்டு தோன்றியதாம்.

ஒளி

கட்டியங்காரன் அமைச்சர்களின் நிலையறிந்துகொள்ள எல்லாரையும் ஒருங்குகூட்டி, அமைச்சர்களே! சச்சந்த மன்னற்குப் பகையாகிய தெய்வம் ஒன்று என்னிடம் குடிகொண்டுள்ளது. அது 'அரசனைக் கொன்றுவிடு' 'கொன்று விடு' என்று அடிக்கடிக் கூறிவருகிறது. அதற்கு யான் என்ன செய்யவேண்டும் எனக்கேட்கிருன்.

அமைச்சர்கள் அனைவரும் அஞ்சி வாய்பேசாதிருந்தனர். தருமதத்தன் என்பவன் மட்டும் எழுந்து நின்று,

"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்கும்" *(சீவக. 248)*

என்கிருன். இதில் உள்ள ஒளியென்ற ஆட்சி வள்ளுவர் தந்த வான்பொருளிலேயே வந்துள்ளது.

திருக்குறளில் ஒளியென்னும் சொல்லாட்சி பதினேரிடங்களில் ஆளப்பெற்றுள்ளன. "ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை" (௯௭௧) "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை" (௬௫௩) என்பவற்றுள் ஒளி என்னும் சொல் 'தான் உளனுய காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமையாகிய மதிப்பு என்ற பொருளிலும் ஏனைய இடங்களில் புகழ் என்ற பொருளிலும், 'வேந்தர்க்கு ஒளி' (௩௯௦) என்றபோது விளக்கம் என்ற பொருளிலும் ஆளப் பெற்றுள்ளது. அவற்றுள் முதறகண் காட்டிய 'தான் உளனுய காலத்து மிக்குத் தோன்றுவதாய மதிப்பு' அரசன் உறங்கினுலும்

அவன் நாட்டைப் பாதுகாக்குங் கடவுளர் தன்மை என்ற கருத்திலேயே தேவராலும் ஆளப்பெற்றுள்ளது. அரசனுடைய அதிகாரத்தோடு கூடிய கடவுட்டன்மையைக் குறிப்பதாய் இப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

வியத்தகு மாற்றம்

வள்ளுவர் வெகுளியைத் தீக்கு ஒப்பிட்டார். தீ பற்றிய பொருள்கள் அனைத்தையும் சாம்பராக்குவது. வெகுளியும் அப்படியே என்றார்.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்" (௩௦௭)

என்பது வள்ளுவர் வாக்கு. இந்தத் தீ தேவர் திருமனத்து ஒளி வீசிக்கொண்டிருந்திருக்கிறது. கட்டியங்காரன் மன்னனை மாய்க்கத் திட்டமிட்ட செய்தியை மந்திரிகள் அனைவரும் கேட்டு வாளா இருக்கத் தருமதத்தன் என்பானொரு மந்திரி மட்டும் பல அறவுரைகளை அறிவிக்கின்றான் என்றுணர்த்தும்போது தேவர் திருவாயிலே,

"தீண்டி னார்தமைத் தீச்சுடு மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடு மெரித்திடும்" (*சீவக.* 250)

ஆதலால் மாண்டதன்று நின் வாயுரைத் தெய்வமே என்று தருமதத்தன் கூற்றாக வெளிப்படுகிறது. இதில் தேவர் மன்னரைத் தீயாகக்கொண்டு குறட் கருத்தை முழுதும் ஆளுகிறார்.

நன்றி மறவேல்

மன்ன! இத்துணை உன்னை அரசாக்கிவைத்தவன் நமது அரசனாகிய சச்சந்தன்; அவன் அரசுரிமையை உன்மீது சுமத்தவில்லையாயின், நீ இத்துணைச் சதி எண்ணத்தைச் சாற்ற இயலுமா?

"தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வௌவிற் பிறழ்ந்திடும் பூமகள்" (*சீவக.* 245)

எண்ணிப்பார் என்கின்றான். வரங்கொடுத்தவன் தலையிலேயே கைவைத்தாற் போல அரசளித்த அரசையே நீ அழித்தால் எதனை யாளலாம் என்று எண்ணித் திட்டமிட்டனையோ அதுவே உன்னை விட்டகலுமே என்கின்றான். இது,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (கக0)

என்ற வள்ளுவத்தின் எதிரொலியாகும்.

கோல் கோடினல்.........

வரம்பு கடவாது நாட்டை நல்வழிச் செலுத்தும் மன்னனே அநீதிகளை யிழைத்தால்

"கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடி" (*சீவக*, 255)

நாடு வருந்தும் என்றும் தருமதத்தன் கூறுகிறான் என்கிற தேவர் உள்ளத்து,

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்" (ருருக)

என்ற திருக்குறள் திகழ்ந்து வெளிப்படுவதைக் காண்கிறோம். அப்பகுதியிலேயே வரும்

"பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந்து அறங்கண் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம்" (*சீவக.* 255)

என்பது

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்" (ருசo)

என்ற திருக்குறளை நினைக்கச் செய்கிறது.

காணாதாற் காட்டுதல்

சீவகன் எல்லாத் துறைகளிலும் சிறந்த கல்வியாளனாகவும், வளர்ந்து விட்டான். அவனை அந்நிலையிலாக்கிய ஆசிரியர் அச்சணந்தியார் அவனுக்கு விடைதந்து வீட்டுக்கு அனுப்புகிறார். அப்போதும் சில அறவுரைகளைப் பகருகின்றார். அவற்றுள் ஒரு காட்சி :

செருக்கித் தருக்கித் திரிபவன் ஒருவன்; அவன் தனக்குத் தெரியாததும் புரியாததும் இவ்வுலகத்து ஒன்றுமே இல்லை என்ற முனைப்புடையவன்; தன் பெருமையைத் தானே அறிந்தவன் அவனைத் திருத்த எண்ணுகிறார் ஒரு தத்துவஞானி. தலைவன்

ஒருவன் உளன்; நாம் அனைவரும் அவனுடைய மீளா அடிமைகள் என்றெல்லாம் கூறினர். அவனுடைய அறியாமை யிருட்டை யகற்றப் பல்லாற்றானும் முயற்சித்தார். குணம் விரதம் இவற்றின் இயல்புகளை விளக்கினர். அவனோ நரகிலே வீழ்ந்து வருந்தும் வினைச்சேடம் உடையவன். அதனாற் பயன் ஒன்றும் விளைய வில்லை. இக்கருத்தமைந்த பாடல்;

"தழங்குரல் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்னே இருளறச் செப்பி னாலும்
முழங்கழல் நரகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி யுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த
லாமோ!" (சீவக. 378)

இப்பாடலின் முடிந்த கருத்து செருக்கியவனுக்குச் சிறந்த தத்துவங்களைச் சொல்ல இயலாது என்பதே. இக்கருத்து

"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு." (அசக)

என்ற குறளின் திரட்சியாகக் காட்சியளிக்கவில்லையா?

ஒரு முழுமகன்; அறியாமை என்கின்றதொருகுறை தன்னிடம் உண்டு என்பதையும் அறியாதவன். குறையுண்டு என்றுணர்ந்தவனே நிறைவை நாடிப் பெரியோர் உரைகளைக் கேட்டுத் திருந்த வேண்டும் என எண்ணுவான். அங்ஙனம் அறியாதனுக்குப் பேரறிஞன் ஒருவன் உண்மைப் பொருள்களை யுணர்த்தப் புகுவானாகின், உணர்த்த முற்பட்ட அவனே காணாதானவன். அம்முழுமகனோ தன் கருத்தே சிறந்தது என அதனையே பெரிதும் மதித்து, அதனையே குரங்குப்பிடியாகப் பிடித்து நிற்பன், என்ற வள்ளுவர் உரை ஓட்டத்தைத் தழுவிய தேவர், மேலும் வினைவசத்தா லாட்டிப் படைக்கப்பெற்று நரகிலும் வீழ்ந்து வருந்துவர் என அவர்கள் எய்தும் இறுதியாய பயனையும் எடுத்தியம்பினர்.

அறிவன் அடிகளே துணை

ஆசிரியர் ஆணையின் வண்ணம் சீவகன் அறிவனைச் சரணாக அடைகிறான். இச்செய்தியைத்தேவர்,

"சூழ்கதிர் மதியமன்ன சுடர்மணிப் பூணிஞனும்
வீழ்தரு கதியினீங்கி விளங்குபொன்னுலகத் துய்க்கும்
ஊழ்வினை துரத்தலானு முணர்வுசென் றெறித்தலானும்
ஆழ்கடற் புணையினன்ன வறிவரன் சரணடைந்தான்"
(சீவக. 380)

என்கிருர்.

இதில், 'ஆழ்கடற் புணையி னன்ன அறிவரன் சரண்' என்பது

"அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லாற்
பிறவாழி நீந்த லரிது" (அ)

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரார் தார்" (ய)

என்ற குறள்மணிகள் தந்த அறிவுக்கொடையாகும்.

'ஊழ்வினை துரத்த லானும்' என்பது சாது சரணுவதற்குக் காரணமான நல்லூழ் செலுத்துதலான் எனப் பொருள்படுதலின்,

"தவமும் தவமுடையார்க்கு ஆகும்" (உசுஉ)

என்ற குறண்மணியோடு ஒத்த அறிவொளியாகிறது.

சீவக குமரற்கு ஆசிரியன் அச்சணந்தி அளித்த அமுத மொழிகளில் ஒன்று,

"அறிவிஞற் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்ருர்"
(சீவக. 375)

என்பதும். இதன் போந்தகருத்து பேரறிஞர்கள் சன்மார்க்கத்தைச் சார்ந்து அனந்த சுகத்தில் ஆழ்ந்து இன்புற்றனர் என்பதாம். இது வள்ளுவர் கூறும்,

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" (௩௫உ)

என்ற குறள்தந்த குறிப்பேயாகும். ஆனல் தேவர் திருக்குறளைக் கொண்டு கூறுகிற அழகு நுனித்தறிந்து தனித்திருந்தின்புறக் கூடியதாகும்.

காட்சி—அறிவு. அறிவில் மாசுள்ள வரை அதன் பெருமை வெளிப்படாது. மணியில் மாசு ஒட்டியுள்ளவரை அதன் ஒளியும்

மதிப்பும் வெளிப்படாதவாறுபோல. மாசு நீங்கின் அறிவு பேரறிவாகும். அதனையுடையார் 'அறிவினுற் பெரிய நீரார்' ஆவர். ஆகவே இத்தொடர் மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்குச் சுருக்கமும் விளக்கமுமான கருத்துரையாம். இதனையே யமைத்தார் தேவர்.

வினைகள் அறியாமையால் ஈட்டப்படுவன. அறியாமை நீங்க வினைகளும் நீங்கும்; காரணம் நீங்கக் காரியம் நீங்குதல் போல. ஆகவே வள்ளுவர் காரணமாகிய 'இருள்நீங்கி' என்றதனைக் காரண காரியத்திற்கு உள்ள ஒற்றுமைபற்றித் தேவர் 'அருவினை கழிய நின்ற' என்றூர்.

வள்ளுவர் மருள் நீங்குதற்கும், இருள் நீங்குதற்கும் உரிய உபாயத்தை ஓதாமே உய்த்துணரவைத்தார். அதனைத் தேவர் விளக்கமாக 'அருவினை கழிய நின்ற நெறியினைக் குறுகி' என வினைகள் மேன் மேலும் மிகாமலும், இருக்கின்ற வினைகள் வந்து உறுத்தாதே கழியுமாறும், வந்த வினைகள் உண்டு கழியுமாறும் செய்ய வல்ல நெறிகளாகிய, சாதுசரணம், தன்மசரணம், சித்த சரணம், அருக சரணம், என்ற நானெறிகளைப் பற்றி நின்று என உபாயம் உரைத்து, வள்ளுவத்திற்கு ஒரு விளக்கம் உதவினூர்.

நால்வகை நெறியிலும் நின்று அறியாமை நீங்கப்பெறின் இன்பம் பெறலாம், என வள்ளுவர் கூறியதை 'இன்பநிறை கடலகத்து நிற்கும்' என இன்பத்தைக் கடலாக்கி அதிலாழ்ந்து கரைகாணுது என்றும் நிலைத்து நிற்கலாம் எனக் கூறிப் பேரின்பத்தின் வரம்பற்ற நிலையினையும் காட்டினர்.

அங்ஙனமே

"பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழல்
அரவின்கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றூர் வேதனைக் கடலுள் நின்றூர்."
(சீவக. 375)

என்ற அறவுரை, சார்புணர்ந்து சார்புகெட ஒழுகாதார் துன்பக் கடலுள் அழுந்துவர் என விளக்கந்தருவதாகச்

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்." (௩௫௯)

என்ற குறட்கருத்தையுட் கொண்டு மிளிர்வதைக் காண்போம். களிப்பைத்தரும் புலனுகிய சுவையை விரும்புவார் துன்பக்கடலுள் வீழ்ந்து வருந்துவர் என்பதாம்.

அளியமோ! பெரியமோ!!

வள்ளுவர் நாடோறும் மாண்டு போகின்ற மக்கட் சமுதாயத்தை நோக்கிக் கவல்கிறுர். மாள இருக்கும் மக்களை நோக்கிக் கூறுகிறுர். மக்களே! நீங்களுமா மாளப்போகிறீர்கள். மாளாமலிருக்க எமனை ஏய்க்க நான் ஒருவழி சொல்லுகிறேன் கேளுங்கள் என்றுர். எல்லாருக்கும் இறவாமல் வாழ ஆசைதான். ஆதலால் அனைவரும் அவரையே நோக்கினர், அவர் கூறுகிறுர் தவ வலிமையைத்தேடிக் கொள்ளுங்கள். தவத்தின் தலைவ ராகுங்கள், உறுதியாகக் கூற்றுவனை வெல்லலாம் என்கிறுர்.

> "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு." (உசுக)

என்பது அவர் வாய்மொழி.

இதனை நம் காப்பியக் கவிஞராகிய தேவர் படித்தார். வள்ளுவர் எமனைத் தாண்டிப்போய்விடலாம். அவன் எல்லைக் கல்லாக இருந்து காலை இடற இயலாது என்று கூறிய கற்பனை தேவருடைய சிந்தனையில் வேருெரு கற்பனைக்கு வித்தாகிறது. அது; எமனெரு வேடன்; அவன் வில்லும் அம்பும் கத்தியும் வேலுமான கொலைக் கருவிகள் பல சூழ்ந்த ஒரு வலையை விரித்து வைத்திருக்கிறுன். அதனை அறிந்து நாமும் அவ்வலையையறுக்க வேண்டும். அதற்கு ஒரேவழி தவஞ்செய்தல். தவஞ்செய்தால் போகமேயில்லாத உலகத்தையடையலாம். அதனை நாம் இன்னும் அறிந்திலேம். நாம் அளியமோ பெரியமோ! சொல்லுங்கள் பார்க்கலாம் என்கிறுர்.

> "கூற்றுவன் கொடிய ஞகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
> மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
> நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
> ஆற்றுறப் போதல் தேற்றும் அளியமோஒ பெரிய மோகாண்"
> (சீவக. 376)

என. 'கூற்று, நோற்று, ஆற்றுற' எனக் குறட் சொற்களே முன்னேர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே

போற் போற்றப் பெற்றுள்ளன. அத்துடன் சில பொருணயங்களும் புலனுகின்றன.

குதித்தல் என்பதற்குக் கடத்தல், வெல்லுதல் தப்புதல் என உரை கண்டனர் உரையாசிரியர்கள்.

" தாவல் அகறலுடன்,
வழுவல் இருத்தல் குயிற்றல் குதித்தல் மேல்வரவுதலும்
தழுவிய பாய்தல் உகள்தல் கடத்தலும் தாண்டற்கண்ணே "
(*கயாதர.* 350)

" உறக்கலும் பாய்தலும் உகளலும் அன்றிக்
குதித்தலும் தவறலும் குப்புறலு மாமே " (*பிங்கலந்தை*)

காலின் செயலைக் கடத்தல், சுழலல், தாண்டல், எழுதல், நடத்தல் முதலிய பலவகையாகப் பிரித்துத் தாண்டலின் மறு பெயராகக் குதித்தலைக் குறிக்கின்றது. மேலும் கடத்தல் வேறு தாண்டல் வேறு எனக் கருதித் தாண்டலின் மறு பெயராகவே குதித்தலைக் கூறுகிறது.

குதித்தல் அல்லது தாண்டுதல் என்ருல் நமது போக்கிற்கு இடையீடாக உள்ளனவற்றைத் தீண்டாமலேதாவிச்செல்லுதலாம். அதிலும் சிறிது ஊன்றி நோக்கின் சமமான தரையில் இடையீடாக வுள்ளவற்றை மிதியாமல் தாண்டிச் செல்லுதலாம். குதித்தல் என்பது உயர்ந்த பகுதியிலிருந்து தாழ்ந்தபகுதிக்குக் குதித்தலாம். இத்தகைய சொல்லாட்சிமரபுகள் தேவர் சிந்தையைத் தீண்டின; கற்பனையும் கலந்தது. அதனுல் கூற்றுவன் நடுவன்; சமன். ஆதலால் அவன் நல்லவன்தான். அவனுங் கொடியவனுனன்; உயிர்களை உடலினின்று பிரிக்கும் கருவிகளாகப் பித்தம், ஐ, வளியாகிய மூன்றையுந் துணைக்கொண்டான்; ஆயுட் காலமும் கன்ம மலமுமாகிய வலையை விரித்தான் ; நாம் அதில் வீழும் நேரத்தை எதிர்நோக்கிப் பதிவிருக்கிருன். இதனையறிந்து நாமும் தவம் செய்யவேண்டும். அவன் விரித்த வலையைத் தாண்ட வேண்டும். நுகர்ச்சியேயில்லாத வீட்டுலகத்தை நோக்கி வழிக்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் யாம் தெளிந்து செயலாற்றுகிருேமா ? இல்லையே ! யாம் பெரியம் அன்றே என எள்ளற் சுவைபடப் பேசுகிருர்.

இத்தனைக் கற்பனைவிரிவும் அணியமைதியும் 'குதித்தலும்' என்ற சொல்லுக்கு தேவர் கண்ட மரபுவழிச் சிந்தனையே துணையாகின்றது. தேவர் செய்யுளை நோக்குவோம்.

"கூற்றுவன் கொடிய ஞகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியில் உலக நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்ரும் அளியமோ பெரிய மோகாண்."
(சீவக. 376)

என்பது அச்செய்யுள். இதில் கூற்றங் குதிக்கும் உபாயம் விரித்துரைக்கப்பட்டிருத்தல் காண்க.

அடுத்துள்ள அறவுரை

"பேரஞர் இடும்பை எல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர்து அரிதிற் பெற்ரும்; அதன்பயன் கோடல் தேற்ரும்;
ஓருமைம் பொறியும் ஓம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த எல்லாம்."
(சீவக. 377)

என்பது. பெறுதற்கரிய மக்கள் யாக்கையைப் பெற்றிருக்கிரும். ஆயினும் அதனுலாய பயனைக் கொள்ள அறியோம். பொறிவழிச் சென்று புலன்வழி நின்று, பொழுது கழிக்கின்ரும். நாள் கழிந்து உயிர் உடலை விட்டு நீங்கியபின் அதனை நெருப்பில் இடும்போது நினைத்த அறங்களைச் செய்ய இயலுமோ! என்ற கருத்தமைந்தது. இதில்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு." (௩௩௬)

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்." (௩௩௫)

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு." (௩௪௩)

என்ற குறட்கருத்துக்கள் தம்முட் கலந்து ஒளி செய்கின்றன. உடல், வினைத்துன்பங்களின் வேரையறுத்துப் பிறவியை யறுக்கும் பெரிய அமுதம் போல்வது. அது கிடைத்தும் அதனுலாய பயனை அடைய அறியகில்லேம் என்ற ஓட்டம் 'நெருநல் உளனொருவன்

இன்றில்லை' என்னும் குறட் பகுதியை நினைவுறுத்தி யாக்கை நிலையாமையை வற்புறுத்துகிறது.

நிலையாத யாக்கை நிலையானபோதே நிலையான இன்பத்தைத் தேடிக்கொள்க என்பது 'நல்வினை மேற்சென்று செய்யப்படும்' (௩௩௫) என்பதனையும் 'ஒருமைம் பொறியும் ஓம்பி' என்பது 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை' என்பதனையும் விளக்குவதாக அமைதலைக் காண்போம்.

தேவர்தரும் ஓருரை :

> **" வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
> **வாழ்நாள் வழியடைக்குங் கல்"** (௩௮)

என்பது வள்ளுவம். இது ஒரு மனிதன் வீணை நாள் விளையா வண்ணம் புண்ணியங்களைச் செய்க. அங்ஙனம் செய்தால் அச் செயல் அவனுடைய வாழ்நாளை வராதவண்ணம் பாதுகாக்கும் கல்லாம் என்ற கருத்தமைந்தது. நன்று எனப் பொதுவகையாற் கூறப்பெறுவன யாவை? வாழ்நாள் எதுபற்றி வரையறுக்கப் பட்டது? வாழ்நாள் வரும் வழியை யடைத்தால் மற்றொரு வழி திறக்கப்படுமே அஃதெது? என்ற விளக்கங்களை உரையாசிரியர் எவரும் உரைத்திலர். திருத்தக்கதேவர் இக்குறளுக்கு ஓருரை விளக்கந் தருகின்றார்.

> **" காட்சிநன் னிலையின் ஞானக்கதிர் மணிக்கதவு சேர்த்திப்**
> **பூட்சிசால் ஒழுக்கம் என்னும் வயிரத்தாழ் கொளுவி பொல்லா**
> **மாட்சியில் கதிகள் எல்லா மடைத்தபின் வரம்பி லின்பத்(து)**
> **ஆட்சியில் உலக மேறத் திறந்தனன் அலர்ந்த தாரான்"**
> (*சீவக.* 381)

நற்சாட்சி என்பது வாசல்நிலை; நன்ஞானம் என்பது அந்நிலையிற் பொருத்தப்பெற்ற கதவு; நல்லொழுக்கம் என்பது தாழ்ப்பாள்; நிலையிலே கதவைச் சாத்தித் தாழிட்டு மனிதகதி தேவகதி நரககதி விலங்குகதி என்ற நால்வகைக்கதிகளும் வாராவண்ணம் அடைத்து, யாராலும் ஆளப்பெறாத எல்லையற்ற இன்பமயமான வீட்டுலகத்தைத் திறந்தனன் சீவகன். நாமும் அங்ஙனம் இருப்பின் இன்ப உலகத்தை எய்தலாம் என்கின்றார். இக்கருத் தமைந்த கண்ணோடு, 'வீழ்நாள் படாஅமை – முயலாது கழியும் நாட்கள் உளவாகமல், நன்று ஆற்றின் – நாடோறும் நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் என்கின்ற இரத்தினத் திரயங்களைச்

செய்துவரின் அது, வாழ்நாள்–வினைவயப்பட்டு வரும் நாற்கதியுட் பிறந்து வாழ்கின்ற வாழ்வு இடையறுது வரும் வழியை, அடைக்கும் கல் – அடைக்கும் கல்லாம் என்ற பொருள் தந்து இணைதல் காண்க.

பிறப்புக்கு வித்து

பிறப்பு பெருங்கடல்; துன்பந்தருவது; எவரானுங் கடக்க இயலாதது என்றெல்லாம் அஞ்சப்படுவது. ஆனல், உயிர் உடலொடு கூடுதலாகிய பிறப்பு நிகழ்ந்ததாற்றுன் உயிர்களுடைய வினைமாசுகள் கழுவப்பெறும் ஆதலால் பிறவி வேண்டப்படுவதும் ஆகின்றது. இங்ஙனம் வேண்டப் பெறுவதும் வெறுக்கப் பெறுவதுமாகிய இருதன்மைகள் ஒரு தொழிலினிடத்து ஒருகாலத்து உண்டாதல் கூடுமா என்பது ஆயத்தக்கதொன்றுதான். ஆனல் பிறவி எடுத்ததின் குறிக்கோள் எய்தக்கூடிய வகையில் வாழ்வியற் பயணம் அமையுமானல் கொடிய – தீய பிறவியும் வேண்டப் படுவதாகிறது. செய்யத்தக்க செய்யாத பிறவியானல் வெறுக்கப் பெறுகிறது. ஆகவே இத்தகைய பிறவிக்கு அடி வினை. அதற்கு அடி அவா. வள்ளுவர்,

> "அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
> தவாஅப் பிறப்பீனும் வித்து" (௩௬௧)

என்பர். இக்குறள், தேவர் வாக்கில்,

> "ஆர்வ வேரரிந் தச்ச ணந்திபோய்
> வீரன் தாணிழல் விளங்க நோற்றபின்" (சீவக. 409)

எனவும்

> "வேட்கையை மிகுத்து வித்திப் பிறவிநோய் விளைத்து வீயாத்
> தேள்கையிற் கொண்ட தொக்கும்" (சீவக. 3106)

எனவும் வரும் பகுதிகளைப் படிக்கும்போது நம்மனத்தில் உடனெழும்.

இவற்றுள் வரும், அவா, ஆர்வம், வேட்கை என்பன மூன்றும் பற்றுள்ளம் என்னும் ஒரே பொருளைத் தருவனவாயினும் சிறிது வேற்றுமையும் உடையன என்பதை உணரலாம். வேட்கை என்பதற்குச் 'செய்யுள் மருங்கின் வேட்கை' என்னும் சூத்திர உரையில் நச்சினர்க்கினியர் 'வேட்கையாவது பொருள்கள்மேல்

தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது அப்பொருளைப் பெற வேண்டும் என்று மென்மேல் நிகழும் ஆசை என உரை காண்பர். இதனால் வேட்கையும் அவாவும் வித்தும் அதன் முளையும் போலக் காரண காரிய இயைபுடையன. அதனாலே வள்ளுவர் அவாவை வித்தென்னவும் தேவர் வேட்கையை வித்தென்றார். வித்தா யிருந்தாலும், வித்து பக்குவம் பெற்று முளைத்தற்கேதுவாக இருந்தாலும் இரு நிலையிலும் அவை பிறவிக்கு ஏதுவாம் என்பது இரு தேவராலும் உணர்த்தப் பெறுகின்றது.

ஆர்வம் என்பது, பாலையில் நடந்தவனுக்கு நீரை உண்ணும விருக்க இயலாது என்ற இன்றியமையாத் தன்மைபோல, அவா முதிர்ந்து விரும்பிய பொருளை அடையாமல் வாழ முடியாது என்று எழும் இன்றியமையாத நிலை. அது வேட்கைவித்து அவாவாக முளைக்கும் பருவம் எய்தி, இரண்டு இலை விடுவதற்குமுன் மண்ணுள் விடும் வேர் போல்வது. அதனாலே தேவர் ஆர்வவேர் என்றார். அறுத்து என்றோ வெட்டி யென்றோ கூறாது அரிந்து என்றதால் ஆர்வத்தின் முதிராத் தன்மையும் தோன்றக் கூறினர். ஆகவே வள்ளுவர் வேட்கை அவா ஆர்வம் என்ற முந்நிலையில் நடுநின்ற அவா வேட்கையின் காரியமாயும், ஆர்வத்தின் காரணமாயும் இருத்தலின் அதனை நீப்பின் ஏனைய இருநிலைகளையும் நீக்கியதாம் எனக் கருதிக் கூறினர். இந்நயத்தை உட்கொண்டுரைக்கின்ற தேவர் வேட்கை வித்து. ஆர்வவேர் என்றார். இவற்றை நீப்பின் பிறவிநோய் நீங்கும் என்றும் கூறினர்.

இங்ஙனம் அவா நீத்து ஆர்வ வேரரிந்து அச்சணந்தி யாசிரியன் தவஞ்செய்து சிவகதி சேரச் சென்றுவிட்டார். கல்வியும் கலையும் முற்றிய சீவகன் கந்துக்கடன் வீட்டிலே வளர்ந்து வருகின்றான்.

ஒருநாள், கட்டியங்காரனுடைய பசுக்கள் மலைச்சாரலில் மேய்ந்துகொண்டிருக்கும்போது வேடர்கள் பசுக்களைக் கவர்ந்தனர். பசுக் காப்பாளாகிய நந்தகோன் அரசனிடம் முறையிட்டான். அரசன் வாளா இருக்க, நந்தகோன், பசுக்களை மீட்டுத்தரும் மீளிக்குத் தன் மகள் கோவிந்தையையும், அவளுடன் ஏழு மகளிரையும் அளிப்பேன் என்று நகரிற் பறைசாற்றினன். அது கேட்டும் அனைவரும் வாளா இருந்தனர்,

இச்செய்தியை ஒரு மகன் வாயிலாகக் கேட்டறிந்த சீவகன் சூளுரைத்துப் பசுவை மீட்கத் தேரிலேறிப் புறப்பட்டான். வேடர்கள் அனைவரும் சீவகனோடு எதிர்த்துப் பொர எய்தினர், இதனைக் கண்ட நிமித்திகன் வேடர்களை நோக்கி, அவன்றன்னோடு ஏற்கும் பொழுதன்று; போதும்; எனப்புகன்றனன். அது கேட்ட வேடர்கள்;

> **"மோட்டு முதுநீர் முதலைக்கு வலிய துண்டேல்**
> **காட்டுள் நமக்கு வலியாரையுங் காண்டும்"** (*சீவக.* 446)

என்றனர். நெடுநாட் பசியால் வருந்திய முதலை. இரை கிடைத்தது; அதுவும் ஆழமான நீர் நிலையில் வாழ்கிறது. அதனிடமிருந்து இரையை வலிந்து பிடுங்க முடியுமானால், இந்தக் காட்டிலே நமக்கு வலியவரையும் நாம் காண்போம் என்கின்றார்கள். இப்பகுதி,

> **"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
> **நீங்கின் அதனைப் பிற"** (*சசுரு*)

என்ற திருக்குறளை நினைப்பூட்டுகிறது. வள்ளுவர் காலத்தாலும், இடப் பரப்பாலும், ஆழத்தாலும் நெடியபுனல் என்றதனை விளக்கத் தேவர், மோட்டும் நீர் முதலை முதுநீர் முதலை என இரு அடைமொழிகளைக் கொடுத்தும் இடப் பரப்பாலும் நெடுமையை உணர்த்த இயலாமற் போயிற்று.

பெண்வழிச் செல்பவர் எய்தும் பயன்

கோவிந்தன், நிரை மீட்டு வெற்றிதந்த சீவகனை நோக்கிக் கூறுகிறான்

> "கேட்டிது மறக்க நம்பி கேள் முதற் கேடுசூழ்ந்த
> நாட்டிறை விசயை யென்னும் நாறுபூங் கொம்பனாளை
> வேட்டிறைப் பாரமெல்லாம் கட்டியங் காரன்றன்னைப்
> பூட்டிமற் றவன்ற னாலேபொறிமுத லடர்க்கப் பட்டான்"
> (*சிவ.* 475)

என்று. இச் செய்யுளில் இறைவனாகிய சச்சந்தன் விசயையை விரும்பி அரசபாரம் அனைத்தையும் கட்டியங்காரன்மீது சுமத்தி அவனாலேயே கொல்லப்பட்டான் நீ இதனைக் கேட்டு மறந்துவிடுக என்று கூறுகிறான்.

வள்ளுவர்,

**"மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது"** (கூ0க)

என்பர். இதன் கருத்து மனைவியை விரும்பி ஏனைய கடமைகளை மறந்தொழுகும் மன்னன் பெரும்பயன் எய்தான்; அது மட்டுமன்று; கடமைகளைத் தவறாது செய்தலையே விரும்புவார் விரும்பாத பொருளும் அதுவே என்பதாம் இக்குறளில் உள்ள 'மனை விழைவார்' என்பதே 'விசையை என்னும் நாறுபூங் கொம்பனாளை வேட்டு' எனவும், 'மாண்பயன் எய்தார்' என்பதே பொறி முதல் அடர்க்கப்பட்டான் எனவும், விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

என்ன தவஞ்செய்தாரோ !

சீவகன் நிரைமீட்டுவந்த செய்தி கேட்ட ஊரவர்கள்,

"செம்மலைப் பயந்த நற்றாய் செய்தவம் உடையள் என்பார்"
(*சீவக.* 465)

**"அண்ணலைத் தவத்திற்றந்தார் யார்கோலோ அளியர்
என்பார்."** (*சீவக.* 467).

என்பன "இவன்றந்தை என் நோற்றான்கொல் எனும் சொல்" என்ற குறளால் விளைந்தனவாகும்.

ஆள்வினை வேண்டும்

சீதத்தன் வாழ்ந்து கெட்ட வணிகன். அவன் மீளவும் திரவியந் தேடத் திரைகடல் ஓட முயல்கின்றான். தான் செல்வம் இழந்தமைக்காக நோதல் கூடாது. அம்மி மிதக்குமா? சுரைக்குடுக்கை நீருள் ஆழுமா? நாம் நல்வினை செய்திருந்தால் பொருள்சேரும் என்று தன்னையும் தன் வினையையும் நொந்து அழிதல் கூடாது. குற்றேவல் செய்வாரும் இம்மி இம்மியாகப் பொருளீட்டிக் கோடீசுவரி யானையின்மேல் ஏறிச் செல்வர் என்கின்றவன்

**"இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரும் ஊர்வர்களி றோடைநுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்கென்று
உம்மைவினை நொந்துபுலந்து ஊடலுணர்வன்றே."**
(*சீவக.* 495)

என்கின்றான். இச்செய்யுள் விதியை நோதல் கூடாது; முயற்சியை ஒதுக்குதலாகாது என்கின்றது. இக்கருத்து

"பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி." (சூகஅ)

என்ற குறண்மணி தந்த ஒலியாதலை உணர்கிறோம். 'நாம் செல்வராதற்குரிய சிறந்த புண்ணியங்களைச் செய்திலேம்; நம்முடைய வினை அப்படியிருக்கிறது' என்று விதியை நொந்து கொள்ளுதல் மதியாகாது என்ற விளக்கத்தால் 'பொறியின்மை யார்க்கும் பழியன்று' என்ற வள்ளுவத்தையும், ஏழைகளும் இம்மியாகப் பொருள் சேர்த்துத் தனபதியாகி யானைமீது ஊர்வர் என்பதால் ஆள்வினை யின்மைபழி என்ற வள்ளுவத்தையும் விரித்துரைக்கின்றார் தேவர். மற்றும்

"ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்" (ருகூரு)

என்றதன் நிழலும் தேவர் மனத்துப் படிந்துள்ளது.

மேலும். சீதத்தன் கூறுகிறான்.

"உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே"
(சீவக. 496)

என. இதில் கீழே விழுந்தவன் விழுந்தே கிடக்கமாட்டான்; எழுவான்., பொருளாற் கெட்டவன் கெட்டவன் அல்லன். அவன் ஊக்கங்கொண்டு முயன்றானுகின் ஒரே நாளில் வெள்ளம் போன்ற நிதியையும் குவிப்பான் என்கின்றான். இது,

"உள்ளம் உடைமை உடைமை" (சூ௦எ)

என்ற குறட்பகுதியை நினைப்பிக்கிறதன்றோ. இப்பகுதிக்கு உரையாசிரியர்கள் 'ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது' எனவும் 'உடைமையாவது ஊக்கமுடைமை' எனவும் உரைகண்டனர். மணக்குடவர் பொருளுடையார்க்கு எல்லாம் உண்டாம் என்பாரை நோக்கிக் கூறப்பட்டது என்பர். இதனல் பொருளால் எல்லாம் ஆமாயினும் அதனையீட்டற்கு ஊக்கம் வேண்டும் என்பது வலியுறுத்தப்பெற்றது. இக்கருத்தை யமைத்தே தேவர் 'உள்ளமுடையாள் முயல ஒருநாளே வெள்ளநிதி விழும்' என்கின்றார்.

அன்றியும் தேவர் வாக்கு திருக்குறளுக்கு ஓரரணும் செய்கிறது. எங்ஙனம் எனில் பொருளுடைமை நில்லாது நீங்கி விடும். நாம் எவ்வளவு முயன்றாலும் பொருள் நிலைத்திருக்கப் போகிறதா? இல்லையே என்று விதியையும், செல்வ நிலையாமையையுங்கண்டு மடிந்திருப்பார்க்கு ஓரறிவுரையாக 'முயன்றால் மலைபோலக் குவிக்கலாம்' என்று அறவுரையாகக் கொள்ளவேண்டும் என்ற அமைதியையும் தருகிறது, சிந்தாமணிச் செய்யுட்போக்கு. 'முயற்சி செய்ய ஒருநாளே வெள்ளநிதி வீழும்' என்கின்றார். முயல்பவன் செல்வத்தை வெள்ளம்போலச் சேர்ப்பான் என்றது செல்வம் வந்து வீழும் எனத் திரளுதலைச் செல்வத்தின் வினையாகக் கூறியது, இவன் முயற்சி சிறியதாயினும் பயன் பெரிதாக விளையும் என்பதாலாம். 'ஊக்கம் உடையானுழை ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்' என்பதுபோல அணி குறித்த தொடருமாகலாம்.

'சொல்லின் மடிகிற்பின், எள்ளுநர்கட்கு ஏக்கழுத்தம்போல இனிதன்றே' என்பதில் உள்ள 'வருகுவ தாமே வரும்' 'வருவன இடைத்தங்கா' 'ஆம்பொருள்கள் ஆகுமவை யார்க்கும் அழிப் புண்ணாவாம் என்ற சொற்களாற் சோம்பி யிருந்தால் பழித்துக் கூறும் பகைவர்களுக்குக் களிஎடுத்தது போலாம் என்ற கருத்து.

"இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்." (௬0௭)

இதில், மடிபுரிந்து, எள்ளுநர்கட்கு என்ற சொல்லாட்சியும் விளங்குதலைக் காண்க.

பணமே பகை வெல்லும்

பணத்தைத் தேடுக. பணந்தான் பகைவரைக் கொல்லும் படைக்கலம். என்பது

"செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லையிருந் தேயுயிரு முண்ணும்
ஐயமில்லை" (*சீவக.* 497)

என்ற சீதத்தன் கூற்றால் வற்புறுத்தப் பெறுகின்றது. இது

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்" (௭௫௯)

என்பதன் படியன்றோ! இதில் சொல்லாட்சியும் அப்படியே அமைந்துள்ளமையைக் காணலாம்.

மேலும், தேவர்க்குப் பணம் பகைவனிடமிருந்து விட்டால் இவனை யழிக்கும் படையாகிவிடாதா என்ற ஐயந்தோன்றி யிருக்கிறது. அதனால் வள்ளுவம்போல 'செறுவாரைச் செருக் கறுக்கும் எஃகு பிறிதில்லை' என்றதோடமையாது, 'இருந்தே உயிருண்ணும்,' என்கின்றார். நீ மடியாமல் மேலும் மேலும் பொருளையீட்டு; அவனிடம் உள்ள செல்வம் அவனிடமிருந்தே அவனுயிரை உண்ணும் பணம் சேர்ந்தாரைக் கொல்லி யல்லவா? உன் கை யோங்கிப் பகைவன்கை சிறிது தாழுமாயின் அவன் கைப்பணமும் பேடிகை வாள்போல அவனை அழிக்க உனக்கே பயன்படும் என்றும் விளக்கந் தருகின்றார். இப்பாடலின் பிற்பகுதி ' இன்பம் அறனோடு அவைய்யும் ஆகும்' என்பது. இது

" அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்." (எடுச)

என்ற குறளின் ஒருபுடை விளக்கமாகும்.

குடிகாப்பவன் குலமகன்

மேலுங் கூறுகிறான் சீதத்தன்,

" தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்து போந்தான் "
(சீவக. 498)

ஆலமரம் அடியற்றுப்போனால் விழுதுகள் அதனைக் காப்பது போல, உயர்ந்தகுலம் நைந்துபோனால் அதிற் பிறந்த வீரர்கள் அதனைத் தாழாதே தாங்குவதே கடன். இவன் பிறந்தும் இக்குடி கெட்டதே என்ற தீச்சொல்லைத் தாங்காது விலகிப்போதல் அறியாதார் கடன் என்று கூறுகிறான். இப்பாடல்,

" இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி" (க0௲0)

என்ற குறட்பாவின் விரிவாகும். இதில் வள்ளுவர் கூறுகிறார், விழுங்காலத்து முட்டுக்கொடுத்துத் தாங்கவல்ல நல்ல வீரனைப்

பெருத குடியாகிய மரம், துன்பமாகிய கோடரிபாயக் கீழே சாய்ந்துவிடும் என்று மணக்குடவர் 'கால்' என்பதற்கு அடிமரம் எனப் பொருள் கண்டனர். எல்லாவகையானும் குடி என்பது தொன்று தொட்ட ஒருமரம், அதன் அடிப்பாகத்திலே துன்பம் என்ற கோடரி பாய்கிறது. இந்த நேரத்தில் முட்டுக் கொடுத்து மரம் விழாத வண்ணம் காத்து நவியத்தையும் பாயாத வண்ணம் தடுக்கின்ற வீரன் ஒருவன் தேவை. அவனில்லையாயின் மரம் வீழ்ந்து மடியும் என்ற கருத்தே இரு தேவரிடத்தும் விளங்குகின்றது. சிந்தாமணிச் செய்யுளை மனதிலே எண்ணி, அதன் விளக்கமாக எழுந்த நாலடியார்

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு
குதலைமை தந்தைக்கண் தோன்றின் தான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்." நாலடியார்

எனத் தொல்மரத்திற்கு ஆலமரம் எனப் பொருள்கண்டு, நவியம் பாய்தல் வேண்டும் என்று ஒருவன் இயற்றுங்கேடு. அதனைத் தடுப்பதில் மிக்க துன்பம் உண்டாகும் என்று எண்ணிச் சிதலை தினப்பட்ட என்று விளக்கம் தந்து, அந்த மரத்தை அதன் விழுதுகள் தாங்குவது போலத் துன்பத்தான் நலிந்த குடியை அக்குடியிற் பிறந்த மகன் தாங்கவேண்டும் என்றது மிக்க இயைபுடைய கருத்தாகும். இங்ஙனம் வள்ளுவர் கருத்துச் சிந்தாமணியிலும், பின் நாலடியாரிலும் படிப்படியான விளக்கம் பெற்றிருத்தலைக் காணலாம்.

வள்ளுவரால் பொதுமையின் நீதியாகக் கூறப்பட்ட கருத்து, வரலாற்றொடுபட்டு வளர்ந்து வளர்ந்து கடனைக் கருதப்பெறுதல் இயல்பே. இதனை இவ்வளவில் நிறுத்தி மேலே செல்லுவோம்.

சீதத்தன் பயணம் புறப்படுகிறான்; அப்போது,

"வானமுற நீண்டபுகழ் மாரிமழை வள்ளல்
தானமென வேண்டுநர்கள் வேண்டுவன நல்கி"(ப்)

(சீவக. 500)

புறப்படுகின்றான் என்கின்றார். இதிலும் 'வானமுற நீண்டபுகழ்' என்பது விண்ணுலகம் வரை பரவிய புகழ் என்னும் பொருளதாகாது. வள்ளுவர் மனிதப் பண்பிற்கேற்ப, ஒருவன் இந்நில

வுலகத்தின் எல்லையிலே பெரிய புகழைத் தேடிவிட்டால், விண்ணுலகம் தேவர்களைப் பாராட்டாது என்று கூறுகிறார். வானம் ஈவாரும் ஏற்பாரும் இல்லாதது. அங்கே புகழ்பட வாழ்தற்கு இடமேயில்லை. புகழ் விளக்கும் இடம் பூவுலகமே. ஆதலால் இங்குப் புகழைத் தேடினவன் இம்மையிற் புகழையும் மறுமையில் விண்ணுலகையும் எய்துவன் என்பது பொருத்தமான' கருத்து. இதனையமைத்தே தேவர் 'வானமுற நீண்டபுகழ் என்றார். உற – பொருந்த அல்லது அடைய என்பதாம்.

அடுத்து 'மாரிமழை வள்ளல்' என்பது

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு." (உகக)

என்றதன் பிழிவாக இருந்தாலும், மாரிக்காலத்து மழையே வரம்பின்றி எங்கும பெய்யும ஆதலின் அதனை உவமை கொடுத்துத் திருக்குறளுக்குப் புதிய விளக்கங் காணுகின்றார்.

'தானமென வேண்டுநர்கள் வேண்டுவன நல்கி' என்பதில் தானமாவது படநாகந் தோலுரித்தாற்போல் துறந்து கண்டவர் மெய்பனிப்ப நோற்றிட்டு உடலுகை ஐமபொறியும் வென்றார்க்கு உவந்தீதலாம் என்கின்றார். ஆகவே தானம முற்றும் துறந்தார்க்கு ஈதலேயாம் என்பது தேவர் கருத்தாதல தெளிவு.

துன்பத்தில் மகிழுக

சீதத்தன் செல்வத்தை மலைபோலத் திரட்டினான். ஊருக்குத் திரும்புவதற்காக நல்ல நாளும் ஓரையும் பார்த்துக் கப்பல் ஏறினான். தன்னூருக்கு அண்மையில் ஒரு யோசனை தொலைவிலே வந்து சேர்ந்தான். கலம் கடலிலே நிற்கிறது. புயல் வீசியது, கலம் தாழ்ந்தது. கலத்திலிருந்த அனைவரும் கவன்றனர். சீதத்தன் தன்னொடு வந்த வணிகர்களை நோக்கிக் கூறுகின்றான்,

"இடுக்கண்வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனு மின்றி நகுகதா நக்க போழ்தவ்
விடுக்கணை யரியும் எஃகா மிருந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்க ளன்றே."
(சீவக. 509)

என்று. இப்பாடலில் எங்குமாய்க் கலந்து நின்று காட்சி யளிப்பது

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்." (சுஉக)

என்ற திருக்குறள். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற மூன்று சீர்கள்

" இடுக்கண்வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனும் இன்றி நகுக "

எனப்பத்துச் சீராக விரிகின்றன. அம்மட்டோ! எரிகின்ற 'விளக்குப்போல' என்ற உவமையும், 'நடுக்கமொன் றுனும் இன்றி' என்ற விளக்கமும் பெற்று ஒளிர்கின்றது.

'இடுக்கண் வருங்கால் நகுக' என வள்ளுவர் கூறுகிற ஆணை மொழியைத் தேவர் வரலாற்றேடியைத்து, அலையும் காற்றுமாகத் துன்பம் வந்தபோதும் என எதிர்பாராமல் தெய்விகமாகத் துன்பம் வந்த காலத்தும் நகுக என்றார்.

'நகுக' என்று மட்டும் வள்ளுவர் கூறினர். துன்பக் காலத்து நகைக்க முடியுமா? நடுங்குகின்றபோது நகைபிறக்குமா என்றெல்லாம் எண்ணிப் பார்க்கிறார் தேவர். மேலும் எரிகின்ற விளக்குச் சிறுகாற்றிலும் நடுங்கும், பெருங்காற்றடிக்கின்றபோதும் விளக்கு நடுங்காது அணையாது ஓங்கி எரிவதுபோலத் துன்பம் மிக்குத் தாக்குகின்ற காலத்தும் மனிதன் சிறிதும் நடுங்காது நகவேண்டும் என்பது வலியுறுத்தப் பெறுகின்றது.

நகுதற் காரணத்தை விளக்குகின்ற வள்ளுவர் அதனை அடுத்து 'ஊர்வது அஃது ஒப்பது இல்' என்கின்றார். தேவர் அத்துன்பத்தை அரியும் 'வாளாம்' என்கின்றார். ஊர்வது – வெல்வது. வெல்லப்பட்டதொன்று காலவயத்தானும் சார்பினலும் வலிபெற்று மீளவும் துன்புறுத்தலாம். அதுவும் நிகழ்தலாகாது என்ற தேவர் அரியும் எஃகம் என்றார். முதல் தடியப்பட்டதொன்று மீளத் தழையாது என்ற நயங்கருதி இங்ஙனம் சிந்தாமணிக்கு வள்ளுவமும், வள்ளுவத்திற்குச் சிந்தாமணியும் ஒளிதந்தது நிற்றலைக்காண்க. இக்கருத்திற்கரணை 'இருந்து அழுது யாவருய்ந்தார்' என்கின்றார். நகைத்துத் துன்பத்தை வெல்லாமல் துன்பத்திற்றேய்ந்திருந்து அழுதழுது என்னபயன் எனத் தேறுதலும் கூறினர்.

அதனாலும் உடைகலப்பட்ட வணிகர் மனம் தெளியவில்லை. அதனால் 'வருப வந்துறுங்களன்றே' எனச் சீதத்தன் கூறுவதாகக் கூறுகின்றார். இங்ஙனம் தேவர் வாக்கில் குறள் ஏதுக்களாலும் எடுத்துக்காட்டாலும் விளக்கம் பெறுதலைக் காண்கிறோம்.

விதிக்கு இரங்கலாமா ?

சீதத்தன் இவ்வளவு கூறியும் வணிகர்கள் மனந் தெளியவில்லை.

" வினையது விளைவின்வந்த வீவருந் துன்ப முன்னீர்க்
கனைகட லழுவ நீந்திக் கண்கனிந் திரங்கல் வேண்டா
நனைமலர்ப் பிண்டி நாத னலங்கிளர் பாத மூலம்
நினையுமின் நீவி ரெல்லாம் நீங்குமின் அச்ச மென்றார் "
(சீவக. 511)

இச்செய்யுள்

" .... வினைப்பகை
வீயாது பின்சென்று அடும் " (உ௦எ)

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது " (எ)

என்ற குறட் கருத்துக்களைக்கொண்டு எழுந்ததாம். வினைப்பயன் வந்து உறுத்துங்காலை இரங்கிப் பயன் என்ன ? அதன் வலிவைப் போக்கப் பிண்டியினீழற் பெருமான் பாதத்தை நினைதல் வேண்டும் என்கின்றான். வள்ளுவரோ தான்நினைவார்க்கு மனக் கவலை மாறும் என்கிறார். துன்பம் வந்து இடையறாது தொடர்கின்றபோது உண்டாவது மனக்கவலை. துன்பந் தொடருதல் செய்த வினையின் பயன். அதனை யாருந் தடுத்த லியலாது. ஆனால் அத்துன்பத்தால் விளையும் கவலையை மாற்றிக் கொள்ளலாம் என்கிறார். இது நுகர்வினை நுகர்ந்தன்றிக் கழியாதது. தடுக்க ஒண்ணாதது. ஆனால், அதனால் விளையும் கவலையை மட்டும் மாற்றலாம் என்ற உண்மை நூற்கருத்து வரம்பு செய்யப்பெறுகின்றது.

முதலுக்கு மோசம் கூடாது

'சீவகன் காந்தருவதத்தையை யாழால் வென்றான்' என்ற செய்தி கட்டியங்காரனுக்கு எட்டியது. கட்டியங்காரன் பொறாமை கொண்டு, இதுவரை அவளிடம் யாழில் தோற்ற மன்னர்களை ஒருங்குகூட்டி, 'வென்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர்'

ஆதலால் சீவகனைப் போரில் வெல்வார் இவளைப் பெறுவாராக எனப் பணித்துச் சீவகன்வேல் ஏவிவிட்டான். மன்னர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு படையெடுத்தனர். சீவகன், பதுமுகனைப் பார்த்து 'நீ தத்தையைப் பாதுகாத்துக்கொள்' எனப் பணித்து ஏனைய தம்பிமார்களையும் எல்லாத் திசைகளிலும் காக்கப் பணித்து, குதிரை மீதிவர்ந்து சீவகன் போருக்குப் புறப்பட்டான். மன்னர்கள் இவனை வணிகன் எனவே கருதி வணிகர்க்குரிய மரபினால்,

> " வாணிகம் ஒன்றுந் தேற்றாய் முதலொடுங் கேடு வந்தால்
> ஊணிகந் தீட்டப் பட்ட ஊதிய ஒழுக்கின் நெஞ்சத்து
> ஏணிகந் திலேசு நோக்கி யிருமுதல் கெடாமை கொள்வார்
> சேணிகந் துய்யப் போநின் செறிதொடி யொழிய........."
>
> (சீவக. 770)

எனக் கூறினார்கள். வணிகர்கள் வாயை வயிற்றை யொடுக்கிச் சேர்த்த முதலுக்கும் ஊதியத்திற்கும் கேடுவந்தால் ஊதியத்தை விட்டு முதலைமட்டும் காப்பது அவர்கள் இயற்கை. அப்படியிருக்க இலாபமாகிய தத்தையை விரும்பி முதலாகிய உன் உடலை இழக்காதே! பிழைத்துப்போ என்கின்றனர். இதில்

> " ஆக்கம் கருதி முதலிழக்குஞ் செய்வினை
> ஊக்கார் அறிவுடை யார்." (சகரு)

என்ற குறட்கருத்து அமைந்துள்ளது. முதலென வள்ளுவர் வாளா கூறியதைத் தேவர் பட்டினி கிடந்து – பசிகிடந்து, வயிற்றுக் குன்றாமல் சேர்க்கப்பெற்ற முதல். அதனை இழத்தல் கூடாது என முதல் சேர்ந்த அருமையைத் தெரிவித்து இழக்கக் கூடாமையை வற்புறுத்துகிறார். தான் தேடாப் பொன்னுக்கு உரையுமில்லை மாற்றுமில்லை என்பது போலத் தன்னுழைப் பானாகாத செல்வமாயின் அதனழிவில் அத்துணைத் துன்பந் தோன்றாது என்பதனை யகத்துட் கொண்டு ஊணிகந்தீட்டப்பட்ட ஊதியம்' என்றார்.

குன்றேறி யானைப்போர் காணுதல்

மன்னர்களுக்கும் சீவகனுக்கும் போர் நடக்கிறது. போரோ வெடிபடுபோர், யாரும் அணுக்கத்து நின்று காண இயலாதது. அதனால் விஞ்சையர்கள் மேகத்தின் மீது நின்று காணுகின்றனர், என்பதை உணர்த்தும் தேவர்,

"குடையுடை வேந்தெனுங் குழாங்கொ ளுகமும்
கொடியெனும் பிடியுடைக் குமர வேழமும்
வெடிபடு போர்த்தொழில் காண விஞ்சையர்
இடியுடை யினமழை நெற்றி யேறினர்." (சீவக. 776)

என்கின்றார். இதில்

"குன்றேறி யானைப்போர் கண்டற்று" (எடுஅ)

என்னும் குறட்பகுதி ஒளிசெய்கிறது. இது வரலாற்றோடு இணைகிறபோது, யானையும் யானையும் மோர்திச் சண்டை செய்யுமாயின் அதனை அணுக்கத்தில் நின்று காண இயலாது. எங்காவது உயர்ந்த பக்க மலைகளில் ஏறித்தான் காணவேண்டும், இங்கோ பிடியோடு கூடிய குமரக்களிறு யானைக் கூட்டத்தோடு சண்டையிடுகிறது. அதுவும் தன்மான உணர்ச்சியுடன் சண்டை நடக்கிறது. அதனால் விஞ்சையர்கள் மேகத்தின் மீது நின்று தரையில் நடக்கின்ற சண்டையைக் கண்டனர் எனக் கதைப் போக்கை ஒட்டிப் புதிய விருவிருப்பை யளிக்கின்றார் தேவர்.

புலியின்முன் மான் கூட்டம்

மக்களும் போரைக் கண்டனர். போரிலே மன்னர்கள் தோற்றோடினர், மன்னர் பலர், சீவகன் ஒருவன்; ஒருவனுக்குப் பலர் தோற்பதும் ஓரதிசயந்தான்; என்று வியந்து நிற்பவர்களில் ஒருவர்,

"உறுபடை மன்னர் தம்மை யுடற்றியொன் றுனுமின்றிச்
சிறுபடை யவர்கள் வென்று செகுப்பவோ வென்ன வேண்டா
செறியெயிற் றுளிவேழப் பேரினஞ் செகுத்த தன்றே
உறுபுலி யொன்று தானே கலையின முடற்றிற் றன்றே."
(சீவக. 814)

ஒரு யாளி யானைக் கூட்டத்தைக் கொல்லும்; ஒரு புலி மான் கூட்டத்தை வெல்லும். ஆதலால் சிறுபடையார் பெரும் படையார்களைக் கொல்ல இயலுமோ என்று ஐயப்பட வேண்டாம் என்ற இக்கருத்து,

"சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்." (சகூஅ)

என்ற குறள் தந்த செல்வமாகும். இக்கருத்து மற்றும்

"ஆளி கண்ட ஆனை யினம்போல்
.....................வயவர் நீங்க" (பெருங்கதை)

"அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றுஅங்கு"
(பெரும்பாணாற்றுப்படை)

"மறப்புலி யுடலின் மான்கணம் உளவோ" (புறநானூறு)

எனச் சங்கச் செய்யுளில் பலவிடத்து விரிந்து பரந்து கிடக்கின்றதைக் காணலாம.

பெண்ணின் மிக்கவள் பெண்ணே

தமிழகத்திலுள்ள பெண்கள் நிறை என்னும் பெருங்குணம் உடையவர்களாதலால் என்றும் வரம்புகடவார்கள். கருத்தில் கற்பொடு பொருந்தி இருக்கின்ற காதல்வெள்ளம் கரைகடந்து வழிவதாயினும தாங்கள் கணவனைத் தேடிச் செல்லுதலேயோ, மடல் ஏறுதலையோ விரும்ப மாட்டார்கள் என்ற இயல்பை எண்ணி, வள்ளுவர்

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்" (கக௩எ)

என்றார். இதனையே தேவர் சுண்ணச் சோதனையில் வென்ற குணமாலை சீவகன் மீது காதல்கொண்டு கன்னிமாடத்திருந்து புலம்புகின்றாள். அவள் தன்னாற்றாமையைக் கூறுவதாக,

"எண்ணில் காமம் எரிப்பினு மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணலது இல்லையே"
(சீவக. 998)

என்கின்றார்.

காதலன் கைத்துணையன்றிப் பிறவற்றாற் கடக்க முடியாத காமத்தான் வருந்தியும், தலைமகனைப்போலப் பலரறிய ஊர்நடுவே பனைமடலாலான குதிரையில் ஏறிவராத பெண்ணைப்போலப் பெருந்தகுதி பெற்றதொன்றும் இல்லை என்ற மரபுணர்த்துகின்ற அளவில் அமைகிறது வள்ளுவம்.

இச்சிந்தாமணிச் செய்யுளுக்குரைகாணுகின்ற நச்சினார்க்கினியர் 'எல்லையற்ற காமத்தீச் சுடினும் மடலூர்தற்கண் மேற் செல்லக் கருதாத பெண்ணினத்தைக் காட்டிலும் கொடுமை

மிக்கதொரு பிறவி பெண்ணல்லது இல்லை' என்றார். இதன் கருத்து, பெண்கள் மடலூர்தல் ஆகாது; காமம் உழந்தே கவன்று மடிதல் வேண்டும் என்ற மரபினையுடைய பெண்ணினம் போலக் கொடுமை மிக்கது வேறு இனம் இல்லை. அக்கொடுமைக்கு அதுவே ஒப்பு என்பதாம்.

வள்ளுவத்தில் வரும் 'பெண்ணிற் பெருந்தக்கது இல்' என்பது தலைவன் கூற்று. தலைவன், பெண்ணைப் பிறந்தமையால் மடலேறாத அடக்கம் அவளுக்குளதாயிற்று எனக்கு அஃதில்லை யெனப் பெண் பிறப்பைச் சிறப்பித்துப் பேசியதாம்.

இச் சிந்தாமணிச் செய்யுள் காமத்தீச்சுடக் கவலுகின்ற குணமாலையின் கூற்று. வரலாற்றோடு பொருத்திக் குறளை நடத்திச் செல்கின்ற தேவர், வள்ளுவம் போலப் பெண்ணின் பெருமையை உணர்த்திச் சென்றாரெனில் கதை சிறவாது. குணமாலை காமங் கைமிக்குத் தோழியர்க்கு உணர்த்தினள்: சீவகனைத் தருவிக்குமாறு வேண்டினள் என்பதிலே சிறப்புள்ளது. ஆதலாலே நச்சினார்க்கினியர் குறட் கருத்தையே தாங்கியுள்ள இப்பகுதிக்கு இங்ஙனம் உரை கூறினர். இக்குறளுக்கு அவர் செய்த உரையும் கிடைத்திருப்பின் இக்கருத்தும் ஆண்டு விளக்க முற்றிருக்கும்.

இங்ஙனமே இக்குறளுக்கு உரை வகுத்த ஆசிரியருள் காளிங்கர் காதலன் மடலேறாத வண்ணம் தலைவனுடைய காதலை நிறைவேற்றுவிப்பதே பெண்ணின் பெருந்தகுதி என உரை காண்பர். ஏனையோர் அனைவரும் தலைவன் பெண் தகுதியை வியப்பான் போல தான் மடலேற இருப்பதைக் குறிப்பித்தவாறும் என்பர். அனைவர் கருத்தும் இக்குறள் தலைவன் கூற்று என்பதுதான். நச்சினார்க்கினியரோ தலைவி கூற்றாகக்கொண்டு பெண்ணும் மடலூர்தற் குறிப்பை உணர்த்தியதாகக் கொள்வர். இவையே இவர் தம்முட் காணக்கிடைக்கும் கருத்து மாற்றம்.

'காமம் எரிப்பினும்' என்ற எண்ண ஓட்டம்

"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்" (ககO௪)

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ" (ககடுகூ)

என்ற குறண்மணிகள் குறிக்கின்ற தீ என்ற உருவகத்தால் உருவானதொன்று,

> **"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
> **கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"** (கஉஅக)

என்ற குறட்பகுதியையே குணமாலை

> **"களிகொள் காமத்திற் கையற வெய்தித்தன்**
> **கிளியைத் தூதுவிட் டாள்கிளந் தென்பவே"** (சீவக. 1001)

என்று சொல்லவைத்தது எனலாம்.

எல்லாமாய் இன்பமளிப்பன

சீவகன் குணமாலையின் பொருட்டு வளமிக்க வயல்பல சூழ்ந்த பலவூர்களை முலைவிலையாகக் கொடுத்தாவது இவளை மணப்பேன் என்கின்றவன்,

> **"வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோட்**
> **பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேனே"** (சீவக. 1042)

என்றுரைக்கின்றான். இப்பாடலின் 'வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய தோள்' என்ற பகுதி

> **"வேட்ட பொழுதின் அவையவை போலுமே**
> **தோட்டார் கதுப்பினாள் தோள்"** (கக0ரு)

என்ற திருக்குறளைத் தாங்கி நின்று ஒருவகைப் புது விளக்கமும் தருகிறது.

வள்ளுவர் வாய்மொழி 'தலைவியின் தோளைப் புணர்ந்த தலைமகன் இன்ப மீதூர்ச்சியால் உணர்ச்சி வயப்பட்டு, விரும்பிய காலத்து விரும்பிய பொருள் கிட்டியது போல இன்பம் பயப்பன அவள் தோள்கள் என்கின்றான்' என்ற கருத்துடையதாகக் காணப்படுகிறது.

தேவர் வாக்கில், சீவகன் குணமாலையின் தோள்களைப் புணர்ந்தவன் அல்லன். அங்ஙனமிருந்தும் தொல்லறிவின் பழக்கத்தால் இதுவும் இப்படி இருக்கும் என்ற எதிர் நோக்கால் கூறுகின்றான். இவை இவர் தம்முள் காணப்பெறும் மாற்றம்.

பரிமேலழகர் 'இயற்கைப் புணர்ச்சி முதலான நிகழ்ச்சிகள் எங்கும் புணர்ந்து பிரிந்த தலைமகன், எப்போது புணரினும்,

வழி வழிப் புணரினும் இவள் தோள்கள் புதுமை நலம் கொழிக்க இருக்கின்றன' என வியப்பவன் மிக இனிய பொருள்களைப் பெருமலிருந்தே, அவற்றின்மேல் ஆர்வமிக்க காலத்து அப் பொருள்கள் தாமே வலிய வந்து நம்மையடைந்தால் எங்ஙனம் இன்பம் மிகுப்பன வாகுமோ அங்ஙனம் இருந்தன தோள்கள் என்றார்.

மணக்குடவர், விரும்பப் பெற்ற பொருள் விரும்பிய காலத்தே கிடைத்தது போலும் அவள் தோள்கள் என்றார்.

பரிப்பெருமாள், இதனையொழியப் பிறிதொன்று தோன்று கின்றதில்லை என்பதன்றி, விரும்பப்பட்ட பொருள் விரும்பிய காலத்தே முயலாமற் பெற்றதனேடொக்கும் இவள் தோள்கள் என்றார்.

பருதியாரோ 'வேட்ட' என்பதற்கு வேள்வி செய்த எனப் பொருள் கொண்டு, ஆயிரம் யாகஞ் செய்த இன்பத்திற்கு அப்பாற்பட்ட – அடங்காத இன்பம் அவளால் ஆவது என்றனர்.

காளிங்கர் உலகத்திலே எவர்க்கும் எதனையும் எண்ணிய உடனே எண்ணி இன்புற முடியாது. அங்ஙனங் கிடைத்தால் விளையும் இன்பம் போலும் இவள் தோள் தரும் இன்பம் என்பர்.

குறளமைதியோ இவையனைத்தையுங் கடந்து ஒருபொருளைத் தருகின்றது. மனோரஞ்சிதம் என்னும் மலர் நாம் எப்பூவின் மணத்தை எண்ணி நுகர்கின்றேமோ அம்மலரின் மணத்தைத் தந்து எல்லா மலருமாகப் பயனுல் விளங்குவது. அதுபோல இவள்தோள் விரும்பிய காலத்து விரும்பிய போகப் பொருள்களாக இன்பந்தருவதாகும். தலைவன் எப்பொருளை எண்ணிப் புணர்கின்றனே அவ்வப்பொருள்களாயிருந்து இன்பந்தருவன என்பதாம் மற்றும் ஐம்புல இன்பத்தை ஒரு சேரக் கொடுப்பனவாயும், தனித்தனி எண்ணிப்புணருங்கால் ஒவ்வொரு பொறிக்கும் உரிய ஒவ்வோரின்பத்தைத் தருவதாயும் உள்ளது என்ற கருத்தும் விளங்குகின்றது. இக்கருத்து, 'வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோள்' என்ற பகுதியிலும் விளங்குவதைக் கொண்டு துணியலாம்.

பாலும் – தேனும்

பாலுந் தேனும் இனிமை என்ற வகையில் ஒன்ருயினும், பால் சிறிது நீர்த்தன்மை மிக்கு இனிமை குறைந்திருத்தலும், தேன் சுவை மிகுந்திருத்தலும் -ஆகிய வேறுபாடும் உடையன. உண்பவர்க்கு உவகையூட்டும் வகையிலும், உரன்பெருக்கும் வகையிலும் வேறுபாடுடையன. அதனுலேயே ஒன்றன் குறையை ஒன்று நிறைவாக்கும் என்ற எண்ணத்தாலேயே இரண்டும் கலந்து உண்ணப்பெறுவது வழக்கம். இந்த இரண்டின் ஒற்றுமை வேற்றுமைகளைத் தேவர் நம் சிந்தனைக்குக் கொண்டுவரும் முறையைக் கூர்ந்து நோக்குவோம்.

சீவகன் கொடுத்தனுப்பிய ஓலையிலே உள்ள வரிகளைக் கண் களிக்க உற்று நோக்குகிருள், குணமாலை. அவள் மனநிலையைக் கற்பனையிற்கண்ட தேவர்

"பான் மடுத்துத் தீந்தேன் பருகுவாள் போனேக்கி"
(சீவக. 1044)

என்கின்ருர். உருவெளித் தோற்றத்திலே அவனையே கண்டு கண்டின்புறுகின்ருள். அது அவளுக்குப் பால் குடித்தது போலாயிற்று. அவள் அவன் அனுப்பிய ஓலையிலுள்ள

"பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேன்"
(சீவக. 1042)

என்பன போன்ற அவன் சூளுரைகளைப் படிக்கின்ருள். அது அவளுக்குத் தேன்பருகுவது போல இருந்தது என்கின்ருர். 'பால்மடுத்து' என்னும் போது மடுத்தல் பசிதீர வயிறு நிறைய உண்டலை யுணர்த்தும். அவனை இடைவிடாது காண்பதே அவளுக்கு உணவாயிருந்தது. அதற்குமேலும் அவன் அனுப்பிய ஓலையில் உள்ள உரை தேன் குடிப்பது போலாயிற்று. களிப்பு மிகுந்தது. பால் குடித்தால் களிப்பு வாராது. தேன் அருந்தினல் களிப்பு மிகும். இத்தகைய இயல்புகளைக் கண்டு கண்களிப்ப நோக்கினள் என்கின்ருர். இந்த உவமையை உருவாக்கித்தந்தது

"பாலொடு தேன்கலந் தற்றே" (ககஉக)

என்னும் வள்ளுவமேயாகும்.

இருநோக்கு

குணமாலையைச் சீவகன் மணந்தான். கலந்தான்; மகிழ்ந்தான்; மகிழ்ச்சியாற் பலவகையாகப் பாராட்டுகின்றவன் பழைய நிகழ்ச்சிகள் சிலவற்றைச் சிந்திக்கின்றான். அன்று ஆற்றங்கரையில் யானை வெருட்டுகின்றபோது அஞ்சிக் கண் புதைத்து நின்ற நீ முன்னே அச்சத்தாற் குழைந்தாய்; பின்னர் எனக்காகவும் குழைந்தாய் அல்லவா? என்பான்

"................. கண்புதைத் தஞ்சிக்
கொம்பே குழைவாயெனக் கேகுழைந் திட்டாய்
வம்பே யிதுவையகத் தார்வழக் கன்றே" (*சீவக.* 1068)

என்கின்றான். இதில் குணமாலையை வெருட்டிய யானையை அடக்க இவன் அதனை எதிர்த்து ஓடுகிறான். அப்போது கண்ணப் போட்டியில் மிக அறிமுகமான குணமாலை சீவகனை ஏதிலான்போலப் பொதுநோக்கு நோக்கியும் யானையைக் கண்டு அஞ்சிக் குழைந்தாள். அதுகண்டு சீவகன் மிக மெலிந்தான். அவள் அவன் இறந்து படுவானோ என்று அஞ்சிக் குழைவான சிறப்பு நோக்குச் செய்தாள். அதனைக் கண்டு வியந்து பாராட்டுகின்ற சீவகன் 'எனக்கே குழைந் திட்டாய்' என்கின்றான். இவன் சிந்தையில்

"ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்" (*கo௯௯*)
"இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (*கo௯க*)

என்ற குறள்களின் கருத்தை அமைத்துக் கூறச் செய்கின்றார் தேவர்.

மேலும்,

"பூவார் புனலாட்டினுட் பூநறுஞ் சுண்ணம்
பாவாய் பணைத்தோட்சுர மஞ்சரி தோற்றாள்
காவா தவள்கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவா! அமிர்தோவெனக் கின்றிது சொல்லாய்"
(*சீவக* 1069)

என்கின்றான். இதில் உள்ள 'காவாது' 'கண்ணற' என்ற இருசொற்களும் தேவர் சிந்தையில் எங்கிருந்து குதிக்கின்றன என்று சொல்லவா வேண்டும்? வள்ளுவர் வாய் மொழியாகிய

"யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (கஉஎ)

என்ற குறளிலிருந்து 'காவாது' என்ற சொல் அங்குள்ள பொருணயத்தோடு அப்படியே வந்திருக்கிறது.

"கண்ணின்று கண்ணறச் சொல்லினும்" (கஅச)

என்ற குறளிலிருந்து 'கண்ணற' என்ற சொல் வந்துள்ளது.

சுரமஞ்சரி பெண்ணுக இருந்தும், காக்கவேண்டியவற்றைக் காக்கும் கடமைப்பாடு இருந்தும் தவறினாள்: அம்மட்டோ! மக்களுக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய கண்ணோட்டமாவது இருந்திருக்கவேண்டும. அதுவுமின்று, உன்னைக் கடிந்தனள் அதனாலேயே சுண்ணத்தில் வென்றவளாகிய நீ நீராடப் போந்தனை. யானை தீண்டியது; யான் உன்னை அடைந்தேன். அதனால் அவள் சொல்லிய கடுஞ் சொல்லும் நம்மிடையே இன்பந்தருவ தாயிற்று. எனப் பல குறட்பாக்களின் கருத்தைக் குழைத்துத் தெளிந்து நயம்படச் சீவகன் கூறுவதாகச் செய்யுளை நடத்திச் செல்கின்றார் தேவர்.

ஆசிரியன் ஆணையின் வண்ணம்

சீவகனால் அடக்கப்பெற்ற பட்டத்து யானை உணவுகொள்ளா திருந்தது. அதன் காரணத்தை யறிந்த கட்டியங்காரன் சீவகனைக் கொணரும் வண்ணம் மதனன் முதலியோரை அனுப்பினன். சீவகனும் தன் ஆசிரியன் ஆணைக்கு அடங்கி மன்னன் ஆணைக்குக் கட்டுப்பட்டிருந்தான். அதனைக்கண்ட அவனுடைய வளர்ப்புத் தாய் சுநந்தை முதலானோர் வருந்தினர். சீவகன் அவர்களை நோக்கி,

"கட்டுயில் அனந்தர் போலக் கதிகளுட் டோன்று மாறும்
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயரு மாறும்
உட்பட உணர்ந்த யானே உள்குழைத் துருகல் செல்லேன்
எட்பக வனைத்து மார்வ மேதமே இரங்கல் வேண்டா."
(சீவக. 1097)

எனத் தேற்றுகிறான். இதில் 'பிறத்தல் ஒரு தூக்கம்போல' என்றது,

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு." (௩௩௯)

என்ற குறள் தந்த வளமாகும். 'விட்டுயிர்போகு மாறும்' என்பது

'உறங்குவது போலுஞ் சாக்காடு'

"குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு." (௩௩௮)

என்பவைகளை நினைவூட்டுகிறது.

என்னை எதிர்க்க எமனாலும் இயலாது

மதனன் அரசன் கட்டியங்காரனுடைய ஆணையின் வண்ணம் சீவகனைச் சிறைப்படுத்தினற்போலத் தெருவழியே அழைத்துச் செல்கிறான். ஊரவர்கள் அதனைக்கண்டு பெரிதும் வருந்தினார்கள். அதனைக் கண்ட சீவகன் அவர்களை நோக்கி

"......................அருநவை நமனு' மாற்றான்
என்னைநேர் நின்று வாழ்த விருநிலத் தாவ துண்டே."
(சீவக. 1114)

என்று ஆறுதல் கூறுகின்றான். தன்னாற்றலை உணராமல் வருந்துகின்ற பொதுமக்களிடத்தே தன்னாற்றலாகச் சீவகன் கூறும் இவ்வுரையில், வள்ளுவர் படையினதாற்றல் கூறுவதாக வரும்

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" (௭௬௫)

என்ற குறளின் பொருளமைதி பொலிதலைக் காணலாம்.

மேலும், 'என்னைநேர் நின்று வாழ்த விருநிலத்தாவதுண்டே' என்ற தொடர்

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்" (௭௭௧)

என்ற குறளின் நிழலோட்டம் என்பதையுணர்த்துகிறது. இக் குறட்குப் பரிமேலழகர் மட்டும் 'ஒரு வீரன் தன்மறத்தை யரசன் மேல் வைத்துக் கூறியதாகக் கொண்டு ஐ முன் நில்லன்மின் எனப்பிரித்து, என்றலைவன் முன்னேபோரேற்று நிற்றலை ஒழிமின், என உரைகண்டாராக, ஏனைய காளிங்கர் பகுதியார் இருவரும் தலைவன் கூற்றாகவே கொண்டு 'எனக்கு முன் நில்லாதீர்' என உரைத்தனர். இவ்வுரையே சீவகன் கூற்றாகிய தேவர் செய்யுட்குப் பெரிதும் அரணாகிறது.

அடுத்தது காட்டும் பளிங்கு

சிறைப்பட இருந்த நிலையில் சுதஞ்சணன் அவனை மீட்டுச் சென்றான். தன் நகரில் வைத்திருந்தான். சிறைப்பட இருந்த நிலையிலும், சுதஞ்சணன் நகரில் இருந்த நிலையினும் சீவகன் எப்படியிருந்தான் என்பதைத் தெரிவிக்கின்றதேவர்,

" கூட்டரக் கெறிந்த பஞ்சிற் கூடிய பளிங்கிற் றேன்றும்
தீட்டரும் படிவ மன்னன் றிறங்கிளந் துரைத்தும் "

(சீவக. 1166)

என்கின்றார். இயல்பான வெண்பஞ்சு. அது செவ்வரக்கு ஊட்டப் பெற்றுச் சிவந்துள்ளது. அப்பஞ்சு வெண்பளிங்கைச் சார்ந்தது. பளிங்கில் அப்பஞ்சின் நிறமும் வடிவும் தெரிகின்றன. பளிங்கும் பஞ்சும் வெள்ளை. ஆனல் பஞ்சு அரக்கூட்டப் பெற்றிருத்தலின் நிறமாறிக் காட்டுகிறது. அதுபோலச் சீவகன் குடிப்பிறப்பிலும் தூயன்; வளர்ந்த இடத்தாலும் தூயன். சிறைப்பட இருக்கும் இப்போதைய நிலையில் சினஞ்சேர்ந்து விளங்கினன். சுதஞ்சணன் நகரைச் சார்ந்தான். ஊட்டிய அரக்குக் கரையப் பஞ்சு வெண்மை யானற்போலச் சீவகன் புலம்பலும் மகிழ்வும் இன்றிப் பொலிதலும் நலிதலுமின்றித் தன்னியல்பில் விளங்கினன் என்பார்,

" அடுத்தது காட்டும் பளிங்குபோல் " (எ0சு)

என்ற குறட் கருத்தை யமைத்து விளக்கினர்.

ஊழ்வினை என்று விடுதல்

மக்கட்கு நன்மை தீமைகள் அவரவர் செய்த ஊழால் உறுவன.

" தீதும் நன்றும் பிறர்தர வாரா " (புறநானூறு 192)

என்பது தொல்லோர் கண்ட முடிவு. ஆகவே மனிதன் வாழ்வில் இன்பங்காணின் இறுமாத்தலும், துன்பங்காணின் சோர்தலுங் கூடாது.

" நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆங்கால்
அல்லற் படுவது எவன் " (கூஎசு)

என்ற வள்ளுவம் தேவர் சிந்தையில் தோய்ந்து சீவகன் சிறைப் பட்டகாலத்தும், சுதஞ்சணனல் வீடுபெற்ற காலத்தும் துன்பமும் மகிழ்வும் இன்றி இயல்பினிருந்தான் என்பதை

"விலங்கிவில் லுமிழும் பூணுன் விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி ஞன்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலு மகிழ்வு நெஞ்சிற் பொலிதலு மின்றிப் பொன்ஞர்ந்
துலங்கலந் துயர்ந்த தோளா ஹூழ்விளை யென்று விட்டான்"
(சீவக. 1167)

என்கின்ருர். கம்பரும்

"மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்குமு கத்தினை யுன்னுவாள்"
(கம்பராமாயணம் காட்சிப்படலம் 20)

என்று இக்கருத்தைத் தம் கவிதையில் நிழலாடச் செய்திருக்கிருர். ஆனல் வள்ளுவர் நன்மை தீமைகள் ஊழ்வழிவந்தன என்று எண்ணுவதை விட்டு நன்மை விளையும்போது மகிழ்பவன், தீமை விளையும்போது வருந்துவது ஏன் என்று தனிமனித இயல்பில் வைத்து ஓதியதைத் தேவர் 'ஊழ்வினை யென்று விட்டான்' என்று மனிதன் வருந்தலாகாது; சீவகன் உயரறிவினனுதலின் வருந்திலன், ஊழ்வினைப்பயன் என்று உளங்கொளாது உதறி விட்டான் என்கிருர். இதில் 'விட்டான்' என்பதிலுள்ள அழுத்தமும் அனுபவமும் திருக்குறளுக்கு உரைகொள்ள வேண்டிய முறையை உணர்த்துவன.

ஓராண்டில்

சுதஞ்சணன், சீவகனுக்கு மூன்று மந்திரங்களைக் கற்றுக் கொடுத்து வழியனுப்பினுன். புறப்படுகின்ற சீவகன் என் மனைக் கிழத்திகளாகிய குணமாலையையும் காந்தருவதத்தையையும் எப்படியும் ஒரு மாத அளவிலே சென்று கூடுவேன் என்று எண்ணுகிருன். இதனை யறிந்த சுதஞ்சணன் நகைத்து 'ஆம் பன்னிரண்டு மாதங்கள் கழித்துக் கூடுவாய்' என வாழ்த்து கின்றவன், இனி நடைபெறவேண்டிய வாழ்வியல் முறைகளையும் சுருங்கச் சொல்கிருன். 'பகைவனைக் கொல்; நாட்டைக் கைப்பற்று, முடிசூடிக்கொள்; விழாக்கள் பல கொண்டாடு' என்று சொல்லி வருகின்றவன்

"......இறைவற் பேணிச் சார்பறுத் துய்தி யென்று
கூறினன் கதிர்கள் பொங்குங் குளிர்மணி முடியி ஞனே."
(சீவக. 1221)

என்கின்றான். இதில் ' சார்பு அறுத்து ' என்பது அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப்பற்றால் விளையும் பிறவியை நீக்கி என்னும் பொருளதாய்,

'' சார்புணர்ந்து '' என்னுங்குறளில் (௩௫௯) 'சார்பு கெட ஒழுகின்' என்னும் பகுதியை நினைவூட்டும். இந்த அறவுரை சார்புகெட ஒழுகினால் உயிர்களைச் சாரும் நோயாகிய பிறவியகலும் என்ற பயனையும் விளக்கிக் குறட்கருத்து முழுதும் ஒளிசெய்து நிற்பதைக் காணலாம்.

வரலாற்றை ஒட்டி வள்ளுவத்தை யாளும் நயம்

சீவகன் சுதஞ்சணன் சொன்ன நெறியே வந்து, பூவுலகத்தை யடைந்தான். பல்லவதேயத்தைச் சார்ந்தான். அப்போது அந் நாட்டை யாள்பவன் தனபதி என்பான் மகன் உலகபாலன். சில நாள் அவனுடன் தங்கினான். அவனுக்கு நெருங்கிய நண்பனானான். அரண்மனை விருந்தினனாகத் தங்கியிருக்கின்ற நாட்களில் ஒரு நாள், உலகபாலன் தங்கையாகிய பதுமை என்பாள் பொழிலுக்குச் சென்றாள். அங்கே அவளை விடந் தீண்டியது. அதனால் இறந்தாள். அது தெரிந்த சீவகன் மந்திரவலியால் அவளை உயிர்ப் பித்தான். பதுமை அதுமுதல் அவன்மீது ஆராக்காதல் கொண்டாள். 'என்னவோ பெண்களின் கற்பு பொன்னாலழியும்; பதிவிரதையைக் கெடுக்கப் பதினைந்து பொன்' என்கிறார்கள். அவ்வுரை பொய்; முழுப்பொய்; இன்னிசையை யுடைய இவனுக்கல்லது என்நெஞ்சில் இடமில்லை என்கிறவள்,

> **" கன்னிமை கனிந்து முற்றிக் காமுறக் கமழுங் காமத்**
> **தின்னறுங் கனியைத் துய்ப்பான் ஏந்தலே பிறர்க ளில்லை**
> **பொன்னினா லுடையுங் கற்பென் றுரைத்தவர் பொய்யைச் சொன்னார்**
> **இன்னிசை யிவற்க லாலென் னெஞ்சிட மில்லை யென்றாள் "**
> (சீவக. 1260)

என்கின்றாள் என்று தேவர் கூறுகின்றார். காமத்தை ஒரு கனியாகக் காணவேண்டும் என்ற எண்ணத்தை உதவியவர் வள்ளுவரே என்பதை,

> **"தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
> **காமத்துக் காழில் கனி "** (௧௧௯௧)

என்ற குறளால் அறியலாம். ஆனால் தேவர், கனியானால் அதனைக் கிளி கோதிச் சுவைக்கும்; வண்டு தொளைக்கும்; கல்லெறிபட்டுக் காயமுற்றிருக்கும். பதுமையாகிற கனியோ இத்தகைய குறைபாடுகள் ஒரு சிறிதும் இல்லாதது. வெம்பிப் பழுத்ததன்று. முற்றிப் பழுத்தது; கண்டார் உளங்கொள்ளும் கவினும் தோற்றமும் பெற்றது என்பார், 'கன்னிமை கனிந்து.............. கமழுங்கனி' என்கின்றார்.

ஆனால் வள்ளுவர் கூறிய 'காழ் இல் கனி' என்ற அடை மொழியை விட்டுவிட்டார். கன்னி முற்றிக் கனிந்த பதுமைக்கனி எவரானும் நுகரப்படாததாகலின் கொட்டையுள்ளதா இல்லாததா என்று எவரானும் அறியப்பெறாமையின் விடுத்தார்போலும். அங்ஙனம் விடுத்தாலும் 'கன்னிமை முற்றி' என்ற குறிப்பால் தாம் விடுத்ததன் காரணத்தையும் விளங்கவைக்கின்றார். ஆனால் பின்னர்,

> "யாழ்கொன்ற கிளவி யாட னமிழ்துறழ் புலவி நீக்கிக்
> காழின்றிக் கனிநத காமக் கொழுங்கனி நுகர்ந்து காதல்
> தாழ்கின்ற தாம மார்பன் தையலோ டாடி விள்ளான்
> ஊழ்சென்ற மதியம் வெய்யோன் ஒட்டியொன் றுய
> தொததான்" (சீவக 2089)

எனச் சுரமஞ்சரியின் புலவியைப் போக்கிப் புணர்ந்தான் என்கின்றபோது 'காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து' என்று வள்ளுவர் கூறும் 'காமத்துக் காழில் கனி' என்பதை அப்படியே எடுத்தாளுகின்றார். ஈண்டுச சீவகன் சுரமஞ்சரியை மணநது பல நாட் கழித்து, அவள் புலவியைப் போக்கிக் கூடுகின்றான். அவள் சுவைத்த கனியாதலின் கொட்டையில்லாக் கனியெனத் தன்னனுபவங் கொணடு காட்டுகிறான். இங்ஙனம் வரலாற்றை ஒட்டி ஏற்ற வகையில் வள்ளுவத்தையாண்டு, அதற்கோர் சிறப்பினை வழஙகுவார் தேவர்.

கேமசரியாரிலம்பகத்தே, சீவகன் தக்கநாட்டுக் கேமமா புரத்திலே சுபதத்திரன் என்னும் வணிகன் மகளாகிய கேமசரியை மணந்து இரண்டு திங்கள் அவளுடன் கலந்திருந்து பிரிந்தபோது. பிரிவாற்றாது அவள்,

> "கனிகொள் காமங்க லநதுயி ரொன்றலின்
> இனியர் மங்கைய ரென்பது கூறுவாய்
> பனிகொண் மாமதி போறபசப் பூரயான்
> தனிய ளாவது தக்கது வோசொலாய்'" (சீவக. 1510)

என்று புலம்புகின்றாள். இதில் சீவகன் சொல்வதாக வரும் "கனிகொள் காமம்" என்பதிலும் முன்னுகர்ச்சியுண்மையின் காழில் என்ற அடைபுணர்க்கப் பெறலாம் ஆயினும் தலைவன் தன்னைப் பாராட்டிய பாராட்டுரையைக் கொண்டு கூறுகின்றவள் புலம்பினும் தற்புகழ்ச்சி கூடாது என அடையை விலக்கிக் கூறும் நயம் ஓர்ந்துணரத் தக்கது.

பதுமைபாற் காதலுற்ற சீவகநம்பி, அவளுறுப்புக்கள் தன்னை அலைக்கும் வகையை விளக்கும்போது, அவளுடைய

'அருகு நோக்கம் என் ஆவியலைக்குமே' (சீவக. 1306)

என்கின்றான். இதில் 'அருகு நோக்கம்' என்பதற்குக் குறிக்கொண்டு நோக்காத நோக்கம் என உரைகண்டார் நச்சினார்க்கினியர். அருகுதல்–சுருங்குதல். அருகு நோக்கம் – கண்களைச் சுருக்கி, பார்க்காதது போலப் பார்க்கின்ற ஓரப்பார்வை. இத்தகைய பார்வை என் ஆவி அலைக்கும் என்றான். இக்கருத்து,

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்." (௧௦௯௫)

என்ற குறளின் ஒளியாம். மற்றும், பதுமைமீது கொண்ட காதலால் வெம்புகின்ற சீவகன்,

"போது லாஞ்சிலை யோபொரு வேற்கணோ
மாது லாமொழி யோமட நோக்கமோ
யாது நானறி யேனணங் கன்னவள்
காத லாற்கடை கின்றது காமமே" (சீவக. 1308)

என்று புலம்புகின்றான். இதில் வள்ளுவர்

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு" (௧௦௮௧)

எனக் கூறிய ஐயம் உருமாறி ஒளிந்திருக்கிறது. வள்ளுவர் வாக்கில் அணங்கோ மயிலோ மாதரோ என ஐயப்படும் அளவில் விளங்கும்கருத்து, தேவர் வாக்கில் அணங்கன்னவள் என்ற உவமை வாசகத்தால் மாதர் எனத் துணியப்பெற்று, மாதராதலால் என்னை வருத்துவதாயினள் என அவளுறுப்புக்களை ஒவ்வொன்றாக உருவக நிலையில் உவக்கின்றான் என்ற கருத்தாக அமைந்திருக்கிறது.

கடல்போலுங் காமம்

காமக்கடல் (*1164*) காமக்கடும்புனல் (*1167*) கடலன்ன காமம் (*1137*) என வள்ளுவர் காமத்தைக் கடலாகவும், விரைவாக இழுத்துச்செல்லும் வெள்ளமாகவும் காண்கிறார். தேவரும் 'காமக் கடலாழ்ந்தான்' (*2503*) என்கின்றார். ஆயினும், தேவர் பதுமை வாயிலாக ஆடவர் காமநிலையை அறிவிக்கும்போது, கடலுக்கும் சுருக்கம் பெருக்கம் உண்டு.

> நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
> தான்நல்கா தாகி விடின்" (கஎ)

ஆதலால் நீர்மை குன்றாத கடலை உவமிக்க உன்னுகின்றவர் பல ஆறுகள் பாய்வதால் வற்றாத கடலைக் காமத்திற்கு ஒப்பாக உரைக்கின்றார்.

> "தெள்ளறல் யாறு பாய்ந்த திரைதவழ் கடலின் வெஃகி
> அள்ளுற வளிந்த காம மகமுறப் பிணித்த தேனும்
> உள்ளுற வெந்த செம்பொன் உற்றநீர்ப் புள்ளி யற்றால்
> கள்ளுற மலர்ந்த கோதாய் காதலர் காத லென்றாள்"
> (சீவக. 1387)

எனப் பலயாறுகள் இடைவிடாது பாய்தலால் ஒரு காலைக் கொருகால் மிகுதலேயன்றிக் குறைவுபடாததும், அலைமோதுவது மாகிய கடலை உவமித்தார். வற்றாத காமத்திற்கு வற்றாத கடலையே ஒப்புக் கூறுவது ஏற்புடையதாதலின்.

பதுமைக்கு நிலையாமையை உணர்த்திப் பிரிவுத் துன்பத்திற்குத் தேறுதல் சொல்லுகின்ற சீவகன் கூறுவதாகத் தேவர்

> "மயற்கையிம் மக்கள் யோனிப் பிறத்தலும் பிறந்து வந்தீங்கு
> இயற்கையே பிரிவு சாத லிமைப்பிடைப் படாத தொன்றால்"
> (சீவக. 1393)

எனப்பிறப்பு இறப்புக்களின் இயல்பைப் பேசுகின்றார். இது

> "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு." (௩௩௯)

என்னும் குறட்கருத்தைக் கொண்டு விளங்குவது.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு

பதுமையைப் பிரிந்து காட்டுவழியாகச் செல்கின்ற சீவகனைத் தேவர்

"வானின் வழங்கும் வண்கை...........................
....................விசயை சிறுவன்......" (*சீவக.* 1412)

என்கின்றார். மேகம்போலக் கைம்மாறு வேண்டாது வழங்கும் வள்ளன்மை வாய்ந்த கையையுடைய சீவகன் எனக்

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி" (உகக)

என்ற வள்ளுவக் கருத்தை அமைத்துக் கூறியுள்ளமை உற்றுணர் தற்குரியது.

வழியில் ஒரு மலையைக் கண்டான்; அதன் மீதேறிச் செல்கின்றான் என்பதை நீதியும் நயமும் தோன்றத் தேவர்

"செல்வர் மனத்திறேங்கித் திருவின் மாந்தர் நெஞ்சின்
எல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதி னெழுகிக்
கொல்லும் மரவின் மயங்கிச் சிறியார் கொண்ட தொடர்பிற்
செல்லச் செல்ல வஃகு நெறிசேர் சிலம்பு சேர்ந்தான்."
சீவக. 1416)

என்கின்றார். இச்செய்யுளில் சிறியார் நட்பைப்போல வழி போகப் போகச் சுருங்கியது என்ற கருத்து

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு." (எஅஉ)

என்ற குறட்கருத்தமைந்தது எனலாம். வள்ளுவர் போகப் போகத் தேய்ந்து போகின்ற மதியைச் சிறியார் நட்பிற்கு உவமித்தார். தேவர் மலைப்பாதை போகப் போகத் தேய்தலை உவமித்தார், உவமம் வேறாயினும் கருத்து இரண்டும் இணைந்தனவே.

அரிய கொள்கையர்

சீவகன் மலையருவியிலே நீராடி ஆதிநாதனைப் பரவிப் பணிந்து முனிவர்கள் வாழ்கின்ற சித்திரகூடம் என்னும் பள்ளியைக் கண்டான். அங்கே வாழும் முனிவர்கள் தத்தம் மனைவிமாரோடும் தவம் செய்யும் வானப்பிரத்தர்கள். அவர்கள் நிலையை விளக்குகின்ற தேவர்,

"அரிய கொள்கையர் ஆரழ லேந்தினுள்
மருவி வீடுவி ளைக்குறு மாட்சியர்" (சீவக, 1423)

என்கின்றார். இச்செய்யுளிலுள்ள 'கொள்கையர்' என்பதற்கு விரதங்களை யுடையவர்கள் என்பது பொருள். 'அரிய கொள்கையர்' என்பது "ஏந்திய கொள்கையர்" (அ௬௬) என்பதன் எதிரொலி யாகும். இச்சொற்றொடர்க்குப் பரிமேலழகர் 'காத்தற்கு அரிய விரதங்களை யுடையவர்கள்' என உரைவகுப்பர். ஆகவே ஏந்திய கொள்கையர் என்னும் தொடரே அரிய கொள்கையர் என ஆளப்பட்டுள்ளமை தெளிவு.

கல்லைக் கொண்டு கடலை நீந்தலாமா?

முனிவர்கள் சீவகனுடைய முகத்தெளிவிலும் உரையிலும் ஈடுபட்டு, இவன் வீங்குகல்வியன்; மெய்ப்பொருட் கேள்வியன்; எனத் தேர்ந்தனர். அவனை அளக்குவம் எனத் தொடங்கினர். சீவகன் 'முனிவர்களே! கல்லைக் கழுத்திலே கட்டிக்கொண்டு கடலிற் குதித்தவன் கரையேறக் கூடுமாயின், மனைவி முதலிய தொடர்போடு கூடிய நீங்களும் விரதங்களால் கரையேறலாம்' என்றான். இதனை விளக்குவது,

"சையம் பூண்டுச முத்திர நீத்துவான்
உய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையும்
எய்தி னார்களு முய்பவென் றோதினான்" (சீவக. 1426)

என்ற தேவர் பாடலில், தொடர்ப்பாடு என்ற ஆட்சி,

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை" (௩௪௫)

என்ற குறளை நினைவூட்டி, மனைவி மக்களோடு, வீடுவாசலோடு வாழும் நீங்கள் ஒருபோதும் உய்திபெற முடியாது என்ற கருத்தை வற்புறுத்தியவாறு தெளிவு. 'தொடர்ப்பாடு' என்பதற்கு நச்சினார்க்கினியர் காமநுகர்ச்சி எனப் பொருள் கொள்வர். பரிமேலழகர் முதலானோர் தொடர்பு அல்லது இயைபு என்பார்கள்.

பிறவிக்கு வித்து

மேலும் அம்முனிவர்கட்கு அறிவூட்டுவதற்காகச் சீவகன்,

"வீடு வேண்டிவி முச்சடை நீட்டன்மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
ஓடு கோடலு டுத்தலென் றின்னவை
பீடி லாப்பிற விக்குவித் தென்பவே" (சீவக. 1427)

என்கின்றான். இது, மெய்யுணர்ந்து வீடுபெறுதற்கு மழித்தலும் வேண்டாம்; சடைவளர்த்தலாகிய நீட்டலும் வேண்டாம். உலகம் பழிக்கும் கூடா ஒழுக்கங்களை ஒழித்தாற்போதும் என்ற கருத்தைக் காட்டும்,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" (உ௮०)

என்ற குறளின் விளக்கமாக இருப்பதைக் காணலாம். முனிவர்கள் வினவிய வினவிற்கு விடையாகச் சீவகன் கூறும்,

"நீட்டிய சடைய மாகி நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து
வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னில்
காட்டிடைக் கரடி போகிக் கயமூழ்கிக் காட்டி னின்று
வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமி
னென்றான்" (சீவக. 1431)

என்னும் செய்யுள், இதனையே நகைச்சுவை பட விளக்குகின்றது.

மும்மணிகள்

மேலும், அம்முனிவர்களுக்கு நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கம் ஆகிய இவற்றின் இலக்கணங்களை விளக்கப் புகுந்த சீவகன்,

"மெய்வகை தெரிதன் ஞானம்; விளங்கிய பொருள்க டம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சி; ஐயம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தே'பா தொழுகுத லொழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே யிருவினை கழியு மென்றான்"
(சீவக. 1431)

என இரத்தினத் திரயங்களை எடுத்தியம்புகின்றான். இதில் 'மெய்வகை தெரிதன் ஞானம் என்பது,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (௪உ௩)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (௩௫௫)

என்ற இரண்டு குறளின் கருத்தையும் வாங்கி வைத்துச் சுருங்கச் சொன்னதாம். யாங்ஙனம் எனின், பொருளியல்பை உணரும் வகை யிரண்டு. ஒன்று பொருளியல்பை அப்பொருளின் இருப்பைக் கொண்டு அறிவபனுகிய தானே உணர்தல். மற்றது அப்பொருளைப் பற்றிச் சொல்லுவார் வாய்ச் சொல் கொண்டறிதல்; பொருளிருப்பைக் கொண்டு தானே யறிவது: அதன் புறத் தோற்றத்தான் அறிதலும், அதன் காரணங்களாக அறிதலும் என இரண்டாம்; அஃதாவது பரிமேலழகர் கூறுவது போல 'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன்' எனின் ஆசிரியன் என்பது தொழில் காரணமாக மக்கள் கற்பித்த கற்பனை 'பேரூர் கிழான்' என்பது இடக்கிழமை பற்றி வந்த கற்பனை. சாத்தன் என்பது தந்தை மகற்கிட்ட இடுகுறியாகிய கற்பனை. இக் கற்பனைகளைக் கழித்து. இவன் மாயையின் காரியமான நிலமுதற்றத்துவங்களின் கூட்டால் உண்டான உடல் எனவும், உடலையுடைஉயிர் எனவும் காண்டலே மெய்ப்பொருள் காட்சியாம்; இங்ஙனம் அறிவதில் ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் என அறிதல் பொருளிருப்பைப் புறத்தோற்றத்தான் அறிந்ததாம். இதனையே வள்ளுவர்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு," (௩௫௫)

எனப் பொருள்மேல் வைத்துக் கூறினர்.

மற்றொன்று சொல்லுவார் வாய்ச்சொல் கொண்டறிதல் யானை கண்ட குருடர் தாம்தாம் கண்டவற்றையே யானை யெனச் சாதித்தாற்போல, "தான் கண்டனைத்திவ்வுலகு" என்றவாறு உயிரறிவு மாத்திரையாய் உணர்ந்தவற்றைத் தாம் உணர்ந்துள்ள அளவு உரைத்து, அதுவே அப்பொருளின் முற்றியல்பு என நிறுவ முற்படுதல். இங்ஙனம் வாய்ச்சொல் கண்டறிவது அவரவர் அறிந்த அளவினதாகலின், பலர் பல கூற நேரிடும். பலருரை மாறுமாயின் அவற்றினும் வேருகவோ அவற்றுள் ஒன்ருகவோ உண்மையிருக்கலாம். பலர் கூறுவதை அப்படியே துணியாமல் தம்மறிவானும், மேலோர் நூலானும், தொல்லோர் ஆசாரத்தானும் ஆய்ந்து, அதுவன்று இதுதான் என் மெய்ப் பொருளைக் காண்டலே அறிவு.

இவ்விரு வகையான் அறியுமுறை வேறுபாட்டையும் உள்ளடக்கியே தேவர் 'மெய்வகை தெரிதல் ஞானம்' (சீவக. 1436) என்றார். மெய் தெரிதல் எனலே அமையும்; வகை தெரிதல் என்றது இத்தகைய நுட்பத்தைச் செறிக்கவே என்க.

இவ்வண்ணம் முனிவர்கட்கு அறமுரைத்து அவர்களைத் துறவியாக்கிப் பின் தக்க நாட்டிலுள்ள கேமமாபுரத்தை அடைந்தான். அங்கே உள்ள வேத வணிகனாகிய சுபத்திரன் என்பவன் சீவகனைக் கண்டான். உடல் நலன்களால் இவன் திருமாலேயாம் என எண்ணினான். தன் தேரில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். அங்கே சுபத்திரன் மகள் வீணையை மீட்டிப்பின்வரும் தேவபாணியை இசைத்துக் கொண்டிருந்தாள் அதில்

"தேவர் பெருமானைத் தேனார் மலர்சிதறி
நாவின் நவிற்றாதார் வீட்டுலகம் நண்ணாரே."
(*சீவக.* 1467)

"மாசின்றிப் பாடாதார் வானுலகம் நண்ணாரே"
(*சீவக.* 1468)

"நாத்தழும்ப ஏத்தாதார் வீட்டுலகம் நண்ணாரே"
(*சீவக.* 1469)

என்ற பகுதிகள் நாவாலும் வாயாலும் இறைவனை ஏத்தவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. வள்ளுவர்,

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை," (௯)

என்று தலைமேல் வைத்துக் கூறினார். தேவர் நாவின் மீது வைத்துக் கூறினார். ஏத்தும் உறுப்பான் இருவரும் வேறுபடினும் ஏத்த வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கும் வகையில் இருவர் கருத்தும் இணைந்தே யுள்ளன.

நோக்கு ஒத்தல்

கேமசரி இங்ஙனம் இறைவனைப் பராவிய பாடல்களை அவள் தாய் நிப்புதி என்பவள் கேட்டாள். தன் கருத்தும் மகள் கருத்தும் ஒத்திருப்பதை உணர்ந்து மகிழ்ந்தாள்.

" ....இவளோடு
ஒப்பானொடு வித்தகனை இன்னே பெறுக இவள்"
(சீவக, 1470)

என ஆசி கூறினள். அப்போது அவள் வீட்டில் அடிவைத்தான் சீவகன். கேமசரி சீவகனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் தம்முள் ஒத்தன என்கின்ற தேவர்,

" இலங்குபூங் கொடியன ஏழை நோக்கமும்
உலங்கொடோள் உறுவலி நோக்கும் ஒத்தவே"
(சீவக. 1471)

என்கின்றார். இதில் கேமசரி மென்மைக்கெல்லாம் மென்மை யானவள்; கன்னிமை கழியாமையால் வயதுவந்த பெண்ணாக இருந்தும் அறிய வேண்டியவற்றை யறியாத ஏழையாய் இருந்தாள். சீவகன் வலி மிகுதியும் உடையவன். வலியான் நோக்கும் மெலியாள் நோக்கும் காதல்வகையில் தம்முள் ஒத்தன என்பதில்,

" கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில" (கக00)

என்ற வள்ளுவர் வாய்மொழி இலங்கக் காணலாம்.

இதில் 'கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் பயனில' என யானோக்குங்காலை நில நோக்கலும், நோக்காக்கால் தானோக்கலும் மெல்ல நகுதலும் ஆகிய காதல் உட்கிடை தோன்றிய வழியுளதாம், நாணோக்கன்றி, அண்ணலும் நோக்கினன், அவளும் நோக்கினள். இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர் என்றாற் போன்ற இணைந்த நோக்கு காலத்தான் முற்பிற்பாடின்றி, ஒத்து நோக்கின் சொற்களாற் பயனில; மனக்கருத்தை மாற்றிக்கொள்ள நோக்கே யமையும்; என்பதை வாங்கிச் சொல்லவந்த தேவர். உடல் வலியானும் தோற்றத் தானும் இருவரும் மாறுபட்டவராயினும் உணர்வாலும், அதனை உணர்த்தும் நோக்கானும் இருவரும் ஒத்தனர் என்றார்.

ஐயம்

இருவர் நோக்கும் இணைந்தபோது கேமசரி நிறையழிந்தாள். நாண் அழிந்தாள். இதனைக் கண்ட சீவகனும் கேமசரியாரை

அணங்கோ, மகளோ என ஐயுற்று மனக்குறைபாடெய்தினன் என்பதனை

"தாக்கணங்கோ மகளோ எனத் தாழ்ந்தான்"
(சீவக. 1478)

என்கின்றார் ஆசிரியர், இது,

"நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து" (௰௮௨)

என்ற குறட்பாவின் கருத்தையும் தாங்கணங்கு என்ற சொல்லாட்சியையும் பெற்றுள்ளது.

வள்ளுவர், தலைமகனது தலைநாட்காட்சியில் விளைந்த ஐயத்தைக் காட்டும்போது "அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ" என ஐயுற்றான் என்கின்றார். நோக்கெதிர் நோக்குச் செய்தபோது "தாக்கணங்கு" என அடை மொழிதந்து சிறப்பித்தார். மனக் கருத்தை யறிவிக்கும் நோக்கெதிர் நோக்கும் தலைவியைத் 'தாக்கணங்கோ' என்ற நிலைமை அணங்கோ என்றதிலிருந்து முதிர்ந்த நிலைமையாயிற்று. இங்ஙனம் மனவளர்ச்சியையும் அதனால் விளையும் மாற்ற வளர்ச்சியையும் காட்டிய வள்ளுவர் கருத்திற் கேற்பத், தேவரும் எடுத்த எடுப்பிலேயே அதாவது சீவகன் கேமசரியைக் கண்ட காட்சியிலேயே 'தாக்கணங்கோ' என்பாராயின் அவர் கருத்து கேமசரி தலைக்காட்சியிலேயே நோக்கெதிர் நோக்கின் முதிர்ச்சி பெற்றுண்மையில் அங்ஙனம் அறிந்து பயன்படுத்தினர் என்பது உணர்ந்து இன்புறக் கூடியதொன்றும்.

கண்களை வியத்தல்

இங்ஙனம் கேமசரி கொண்ட காதலாற் கவலுகின்ற சீவகன் அவள் கண்ணழகில் ஈடுபட்டுக் கவல்கின்றான்,

"காதன்மை கண்ணுளே யடக்கிக் கண்ணெனும்
தூதினாற் றுணிபொருள் உணர்த்தித் தான்தமர்க்கு
ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கணேக்கு
ஓதநீ ரமுதமும் உலகும் விற்குமே." (சீவக, 1485)

என இச்செய்யுளில் 'காதன்மை கண்ணுளே யடக்கி' என்பதனை முதற்கண் நோக்குவோம். கேமசரியின் மனத்திலே காதன்மை யாகிற ஆசை கடல் போலப் பரந்து ஆழ்ந்து கிடந்தது. அதனை

அவள் பிறரறியாவண்ணம் நான் மட்டும் உணரும் வகையில் கண்ணுக்குள்ளேயே அடக்கினுள் என்றுன். இது வள்ளுவர் கூறும் தலைவி யொருத்தி காதன்மை, காரணமாகத் தலைவனை எஞ்ஞான்றும் பார்க்க எண்ணுகிருள். நாணந் தடுக்கிறது, அதனுல் அவள் கள்ளத்தனமாகக் கண்ணிற் காதன்மையை மறைத்து அவன் தன்னை நோக்காத காலம் பார்த்து அவனைக் கண்டு உள்ளங் குளிர்கின்றுள், என்றதையுணர்த்தும்

"கண்களவு கொள்ளும் சிறுநோக்கம்" (ம௲உ)

என்பதன் விளக்கமாக அமைதலைக்காணலாம்.

இச் செய்யுளின் அடுத்த பகுதி "கண் எனுந் தூதினுல் துணிபொருள் உணர்த்தி" என்பது. யான் உன்னை மனமாரக் காதலிக்கிறேன் என்று தேர்ந்து தெளிந்த முடிவைக் கண் என்கின்ற தூதினுல் சீவகனுக்கு உணர்த்தினுள் என்ற கருத்து அமைந்தது. இது, "நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனும் இல" (கம௦) என்றதன் வேறு வாய்பாடாக அமைந்ததே.

அடுத்த பகுதியாகிய "தமர்க்கு ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கண்நோக்கு" என்பது. "ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல், காதலார் கண்ணே உள" (க௦௯௯) "உருஅர்போன்று உற்றுர் குறிப்பு" (க௦௯௭) என்ற குறட் கருத்துக்களைத் தாங்கி விளங்குவதாம். இங்ஙனம் இப்பாடல் முழுதுமே குறிப்பறிதலிற் கூறுகின்ற பல குறட்பாக்களின் கருத்தினைப் பின்னணியாகக் கொண்டு விளங்குவதெனலாம்.

கண்மணி

கேசமரி காதல் நோய் கைமிக்குக் கனவு காண்கின்றவள். சீவகனையே கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தாள். விழித்துக் கொண்டாள், சீவகன் மறைந்தான். அப்போது அவள் மணி யிழந்த மாநாகம் போல் வருந்தினுள் என்பதை உணர்த்துகின்ற தேவர்.

"................. பூங்கொம்பனுடள்
கருமணிப் பாவை யன்னுன் கரந்துழிக் காண்டல் செல்லாள்"
(*சீவக.* 1508)

என்கின்றுர். இதில் 'கருமணிப் பாவை யன்னுள்' என்ற உவமை, தலைவன் கூறுவதாக வள்ளுவர் கூறிய "கருமணியிற்

பாவாய்'' (கக௨௩) என்பதே ஈண்டுத் தலைவியாகிய கேமசரி கூறுவதாகத் தேவர் வாக்கிற் பிறந்தது. கண்ணிற் கருமணி பற்றிய வடிவைத் தன்னகத்தடக்கிக் காட்டுமியல்பினது. கேமசரியின் கண்கள் கனவில் சீவகனையே கண்டன. அதனால் அவளுடைய கருமணியிற் பாவையாகச் சீவகன் விளங்கினான்.

அன்றியும் கனவின் மட்டுமன்றி நனவிலும் உருவெளியாக அவனுரு பார்க்குமிடமெங்கும், நீக்கமற நிறைந்துள்ளது. அதனையே அவள் கண்டாள். அவன் கருமணியிற் பாவையாக விளங்கினான். அவளும் "கண்ணுள்ளிற் போகார் (கக௨௬) "கண்ணுள்ளார் எங்காதலர்" (க௧௨௭) என்றெண்ணி வந்தாள். கனவிற் றோற்றமும் உருவெளியும் மறைந்தன. அவள் காண்டல் செய்யாள் எனத்தேவர் எண்ணத்தில் பல குறட்கருத்துக்கள் இழைந்தோட எழுந்த தொடர் இப்பகுதி

அனிச்சம் பஞ்சாயிற்று

வள்ளுவர், மாதரின் மென்மையைத் தலைவன் கூற்றாக

> **"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
> **அடிக்கு நெருஞ்சிப் பழம்."** (கக0க)

என்கின்றார். அனிச்சம் முகர்ந்தாலே வாடும் மெல்லிய பூ அன்னத்தின் தூவி அன்னத்தின் அடி வயிற்றிலுள்ள மெல்லிய இறகு. இவை இரண்டுமே தலைவியின் அடிகளுக்கு நெருஞ்சிப் பழம் போல ஊறுசெய்வன என்கின்றார்; இக்கருத்தை அகங் கொண்டே, தேவர்

> **"பஞ்சிமேன் மிதிக்கும் போதும் பனிக்கும்சீ றடியினாள்."**

என்கிறார். பனித்தல் – நடுங்குதல் (சீவக. 1531)

எது தானம்?

சீவகன் கேமசரியாரோடிருந்து இரண்டு மாதங்களைக் கழித்தான். அவளொடுங் கூறாது பிரிந்து போகின்றவன் நடுவழியில் எதிர்ப்பட்ட ஒருவனுக்கு அறம் உரைக்கின்றான்;

> **"படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்ணவர்மெய்**
> **பனிப்ப நோற்றிட்டு**
> **உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு உவந்தீதல்**
> **தான மாகும்"** (சீவக. 1546)

என. இதில் தானத்தை ஏற்பவன் உண்மைத் துறவியாக இருத்தல் வேண்டும். தவம் புரிபவனுதல் வேண்டும். பொறிகளை வென்றவனுதல் வேண்டும். இத்தகைய ஒருவற்கு மனமுவந்தீதலே தானமாம். என்கின்ருன், இதில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு குறளின் கருத்தைத் தாங்கி நிற்பனவாதல் தெளிவு.

"படநாகம் தோலுரித்தாற் போல் துறந்து" என்பது, நாகம் தோலுரிக்கும்போது சிறுபகுதிகூட தன்னுடலில் ஒட்டியிராத வண்ணம் முற்றும் கழல உரிக்கும். அதுபோலத் தானம் பெறுபவன் துவரத் துறந்தவனுதல் வேண்டும் என்பதாம். இது, "தலைப்பட்டார் தீரத் துறந்தார்" (௩௪௮) என்ற குறளின் கருத்தைத் தாங்கி நிற்பதென்லாம்.

'தீரத்துறந்தார்' என்பதற்குப் பரிமேலழகர் முற்றத் துரந்தார் என உரைகண்டு, பொருள்களையும் இருவகை யுடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல் என உரை விளக்கமும் உதவினுர். இங்ஙனமே ஏனைய உரையாசிரியர்களும் 'பற்றறத் துறந்தார்' மூவகை ஆசைகளையும் துறந்தார் என பொருள் கண்டனர். இங்ஙனம் கூறிய தீரத்துறத்தலையே தேவர் உவமை முகத்தான் விளக்குகிருர். அதனேடு "வேண்டிய வெல்லாம் ஒருங்கு விடல் வேண்டும்" (௩௪௩) என்ற குறளும் இதனுள் ஒளி செய்கிறது எனலாம்.

"கண்டவர் மெய்பனிப்ப நோற்றிட்டு"

"உற்ற நோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண்
செய்யாமையுமே தவத்திற்கு உரு" (௨௬௧)

என்கின்ருர் வள்ளுவர். இதில் ஒருவன் தவம் இயற்றும்போது உடலுக்குப் பலவகையான துன்பங்கள் நேரலாம். அதனைப் பொறுத்தலே தவமாம் என்ற அளவில் அமைந்தார். தேவரோ அக்கருத்தை அப்படியேயமைத்து ஒருவன் நோற்க அதனைக் கண்ட பலர் அப்பப்பா! எத்துணை பெரிய தவம்! எவ்வளவு பெரிய துன்பங்களையும் பொறுக்கின்ருர் இவர். என உடல் நடுங்கும் அளவினதாகிய தவம் என தவத்தினளவும் கூறுகிருர்.

ஆகவே வள்ளுவர் 'உற்றநோய் நோன்றல்' என வாளா கூற இவர் 'கண்டவர் மெய்பனிப்ப நோற்கும் நோன்பு' என நோன்பினளவும் கூறிக் குறளுக்கு விளக்கந் தருகின்ருர்.

மேலும் பாருங்கள் : அதே பாடலில் 'உடனுக ஐம்பொறியும் வென்ருர்க்கு' என்ற பகுதியை, இது,

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு" (௩௪௩)

என்ற குறளை நம் நினைவிற்கு கொண்டு வருகின்றது.

இக்குறளுக்குப் பரிமேலழகர் செவி முதலிய ஐம்பொறிகளும் ஓசை முதலிய ஐம்புலன்களை நுகர்தலைக் கெடுத்தல் வேண்டும். பொறிகள் புலன்களிற்சென்று நுகர்தற்குச் சாதனமாகத்தான் அமைத்துக் கொண்டேபோகப் பொருள்களை எல்லாம் ஒருங்கே விடுதல் வேண்டும் என உரைப்பர். இவர் கருத்து பொறிகள் புலன்களை நுகரா வண்ணம் தடுத்தல் வேண்டும். புலனுகர்ச்சிக்கு உரியவான மாலை, மாதர் சந்தனம் முதலியவற்றைவிட்டு விலகல் வேண்டும் என்பதாம். மணக்குடவரும் சற்றேறக்குறைய இக் கருத்தையே உரைப்பர்.

பரிதியாரோ ஐம்புலன்களையும் ஐம்பொறி வழியிலே செல்லாமல் கெடுக்கவேணும். புலனுணர்வுகளை விடவேணும் என்பர். இவர் கருத்து (புலன் – அறிவு) அவை சுவையுணர்வு, இசையுணர்வு, ஒளியுணர்வு, ஊறுணர்வு, நாற்றஉணர்வு என்பன. அவ்வுணர்வுகள் நாக்கு முதலிய பொறிகளைச் சாதனமாகக் கொண்டு சுவைப்பொருள், காட்சிப்பொருள், ஓசைப்பொருள் முதலியவற்றைப்பற்றி அவ்வுணர்வுகளை உயிர்க்கு ஊட்டுகின்றன. அங்ஙனம் செல்லாவண்ணம் உயிர்களைக் கெடுக்க வேணும் என்கின்ருர். காளிங்கரும் அங்ஙனமே கூறுவர்.

ஐம்பொறிகளின் இயல்பு தத்தம் புலன்களைத் தனித்தனியே பற்றி யறிதலாம். அவற்றைக் கெடுத்தல் அங்ஙனம் பற்ருத வண்ணம் தகைத்தலாம் என்பது உரையாசிரியர்கள் உரையாற் போந்த முடிபு. தீக்குச் சுட்டு ஒன்றுவித்தல் இயல்பு. தீயைச்சுடா வண்ணம் செய்தல் யாங்ஙனம். நீற்றறைக்குச் சுடுதல் இயல்பு அது தன்னியல்பு மாறிற்றன்று. அதிலடைக்கப் பெற்ற திருநாவுக்கரசர் செம்மனம் ஈசன் எந்தை இணையடி நிழலாகக் கருதியது. ஆதலால் அவர் அனுபவத்தில் அது மூசுவண்டறைப் பொய்கையும் போன்றது. அது போல எப்பொருளினுடை இயல்பையும் கருவிகளின் காரியப்பாட்டினையும் மாற்றிமைத்தல் இயலாததாம். ஆதலாலே வள்ளுவர் பெருமான், ஐந்தன்

புலனுகர்ச்சியை அடல் வேண்டும் என்றார். அடலாவது பண்பு படுத்துதல் அல்லது, பதப்படுத்துதல் பதப்படுத்தினால் அது வழிவழி மரபாக நுகரும் புலனுகர்ச்சியைவிட்டு இறையாகிய செம்பொருளை நுகரத் தொடங்கும், ஆகவே புலன் வழிச் செல்லும் பொறிகளை இறைவழிச் செலுத்த வேண்டும் என்பதே இதன் கருத்தாதல் தெளிவு.

பொறிகளை ஒவ்வொன்றாக வென்றும் பயனில்லை. ஐந்தையும் ஒருசேர வெல்லுதல் வேண்டும் என்கின்றார். எடுத்துக்காட்டாக கண்ணை வென்று நன்னோக்காக மாற்றிவிட்டதாக வைத்துக் கொள்வோம். காது வெல்லப்படாமையால் அது தீச்சொற்களைக் கேட்டுவிட்ட பழக்கங்களை மீளவும் தொட்டுக்கொள்ளச் சிந்தையைத் தூண்டும். இங்ஙனமே ஏனைப் பொறிகளும் ஆகவே வெல்லும்போது அனைத்தையும் ஒருசேர வெல்லுதல் வேண்டும் என்பார். 'உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு' என்கின்றார். அது விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு' என்பதனை மனக்கொண்டு படைக்கப் பெற்றதாம்.

பொருளில்லார்க்கு இன்பம் இல்லை

மற்றும் அருகதேவன் சீபாதத்தை வணங்காதார்க்கு இன்பமே இல்லை என்பதை விளக்குகின்ற சீவகன்,

"மட்டார் பூம் பிண்டி வளங்கெழு முக்குடைக்கீழ் பாலே கண்டீர்
முட்டாத இன்பப் புதாத்திறக்கும் தாளுடைய மூர்த்தி பாதம்
எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு இவ்வுலகில் இன்பமே போல்
ஒட்டாவே கண்டீர் வினையவனைத்தேறாதார்க்கு உணர்ந்தீரன்றே"

(சீவக. 1549)

இச் செய்யுளில் கையில் பத்தெட்டுக் காசுகூட இல்லாத வறியார்க்கு இவ்வுலக இன்பம் கிட்டாதவாறு போல அருகனைத் தேறாதார்க்கு நல்லுரமும் ஒட்டாது என்கின்றான். இது,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்னுங் குறளை நினைவூட்டுகின்றது. வள்ளுவர் பொருளெனப் பொதுப்பட கூறினாரேயன்றி அதன் குறைந்த அளவுங் கூற்றிலர். தேவர் 'பத்தெட்டுக் கூட' இல்லாதார்க்கு எனச் சிறுபொருள் இன்மையால் வரும் இழிவைப் புலப்படுத்தினர்

அறவுரை கேளாத இழிமனத்தார்

சீவகன், பெரியோர் கூறும் நல்லறவுரைகளை இழக்கின்ற இழிமக்கள் நிலையைப் பற்றிக் கூறுகின்றான்,

"பழுதெண்ணும் வன்மனத்தார் ஓட்டைமரச் செவியர்
கேளார் பால்போன்று
ஒழுகி யமுதூறு நல்லறத்தை ஓர்கிலர்" (*சீவக.* 1552)

என்பது அப்பகுதி இச்செய்யுளில் வரும் 'பழுதெண்ணும் வன் மனத்தார்' என்பது,

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடியுறும்." (௬௩௯)

என்ற குறட்டொடரை நினைவிற் கொண்டு உரைத்ததாம். பழுது எண்ணுதலாவது, ஆட்சியிலும், சூழ்ச்சியிலும் அரசனுக்கும், குடிகட்கும் தீதுண்டாக எண்ணுதல், அதற்கு விளக்கம் தருகின்றார். தேவர் மனத்துள் தீமையை எண்ணிப் புறத்தே நன்மை செய்வாரைப் போல நடித்தல். அது மனத்தொடுபட்ட செயலுடையார்க்கு அமைவதொரு பண்பன்று வன்மனமாக இருந்தால்தான் இயலும் என்பார் பழுதெண்ணும் வன்மனத்தார் என்றார்.

'ஓட்டைமரச் செவியர்' என்பது.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி." (௪௧௮)

என்ற குறட்பாவின் கருத்தைத் தொகுத்துரைத்ததாம். வள்ளுவர் செவியெனப் பொதுவகையாற் கூறினாரேனும் செவியில், மூவகையுண்டு, ஒன்று தோற்செவி, மற்றது மரச்செவி, மற்றது எஃகுச்செவி, அவற்றுள் எஃகுச்செவி மிக மிக நுண்ணிய ஒலிகளையும் அவற்றின் நுட்பங்களையும் கேட்கும் இயல்பினது. இதனைச் சிந்தாமணி யாசிரியர், துறவுள்ளங்கொண்ட சீவகனைத் தம்பால் விரும்பிவரச் செய்யவேண்டும் என்று உள்ளங் கொண்ட அவன் மனைவிமார்கள் யாழை வாசித்தனர் என்பார்,

"..............எஃகு நுண் செவிகள் வீழச்
செம்மையிற் கனிந்த காமத்தூது" (*சீவக.* 2718)

19–20

விட்டனர் என்கின்றார். அடுத்தது மரச்செவி, இது கேட்குமியல் பிற்றன்றாய்ச் செவிபோல மரத்தான் இயன்றதாம். மரத்தானியன்ற செவி உருவிற் செவி போன்றிருக்கும், ஆனால் துளையிராது. மனிதனுடைய செவியும் கேள்வியால் தொளைக்கப் படாததாயின் மரச்செவியேயாம என்பார் 'தோட்கப்படாத செவி' என்றார். இதனை உட்கொண்டு தேவா 'ஓட்டை மரச் செவியர்' என்கின்றார்.

கண்ணும் – நகையும்

மகளிர், தம்மனத்தைத் காதலர்க்குக் குறிப்பாலுணர்த்தக் கண்களையும் முறுவலையுமே துணைக் கொண்டனர். அவற்றுள் தொடக்கநிலையில் கண்ணும், முற்றி வளர்ந்த நிலையில் முறுவலும் பயன்படுவன, வள்ளுவர் குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தில் நகுதலைப்பற்றி "மெல்லநகும்," (ருகூச) பசையினள் பையநகும்"; (ருகூஅ) "ஒருகண், சிறக்கணித்தாள் போல நகும்" (ருகூரு) எனக் கூறுவர். இவற்றுள் ஒன்றில் ஒன்று சிறந்தனவாக இருத்தலை உணரலாம். மெல்ல நகுதல் முகமலர்ச்சியானும் ஒலியானும் ஒளியானும் பிறர் அறியாதவாறு தன் காதலன் மட்டும் குறிப்பான் விரைந்து அறியுமாறு நகுதல், பையநகுதல், பைய நடந்தான், பையப் பேசினன் என்பன போல் நகையான் மனக் கருத்தை விரைந்து வெளிப்படுத்தாது சிறிது சிறிதாகப் புலப்பட நகுதல். இதன் பயன் முழுநகையும் நுகர வேண்டித் தலைவனைத் தன்னையே நோக்கியிருக்கச் செய்தலாம. சிறக்கணித்தாள் போல நகுதலாவது கண்ணைச் சிறிது சுருக்கிப் புன்னகை புரிதலாம். இதனல் கண்ணும் நகையும ஒருங்கியைந்து உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்துதல் பயனும். இத்துணை நகுதல் வேறுபாடுகளையும் ஆங்காங்கு உணர்த்தியவர் வள்ளுவர். இவ்வளவையும் ஒருங்கியைத்துக் கூறக் கருதும் தேவர்.

> "முறுவன்முன் சிறிய தோற்ற முகைநெறித் தனையவுண்கண்
> குறுநெறி பயின்ற கூந்தல்" (சீவக. 1572)

என வனசரி தன் ஒருவனை வயப்படுத்தும நோக்கோடு நிற்கும் அணங்கமா வீணை என்னும் பெண் ஒருத்தியை அறிமுகப் படுத்தும் வகையிற் கூறுகின்றார். இதில், 'சிறிய தோற்ற' என்பதால் மெல்ல நகுதலையும் பைய நகுதலையும், 'முகை நெறித் தனைய உண்கண்' அதாவது அரும்பைவாய் நெறித்தாற் போன்ற கண்

என்பதால் சிறக்கணித்தாள் போல நகுதலேயும் விளக்கி; நகை வகை மூன்றும் தோன்றக் கூறுகிருர்.

கற்புடையார் இயல்பு

அனங்க மாவீணை என்பவள் பவதத்தன் என்னும் வணிகனுடைய மனைவி, அவள் ஒரு வேடனைப் பார்த்து நிலைகுலைந்து அவனைக் காதலித்தாள், அவள் நிலைமையையும் கடமைகளையும் உணர்த்தக் கருதிய சீவகன், கணவன் சாகத் தானும் சாதலும், வருந்த வருந்துதலும், அவன் பிரிய 'இவற்ருற் பயன் என்னை' என்று பூவும் ஒப்பனையுந் துறத்தலும், அவன் துயரைப் போக்கலும் கற்புடைய மனைவியரின் கடமைகள் என்று உணர்த்துகின்றவன்,

"காமனை என்றுஞ் சொல்லார் கணவர்கை தொழுது
வாழ்வார்" (சீவக. 1598)

என்கின்ருன். கற்புடைய நங்கையர் மன்மதனைக்கூட என்றுஞ் சொல்லமாட்டார்கள். கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது வாழ்வார்கள் என்கின்ருன். காமன் எல்லாரையும் விரும்பச் செய்வானேயன்றித் தான் தன் மனைவியாகிய இரதியை யன்றி வேறியாரையும் விரும்பாத மேன்மையான குணம் படைத்தவன் அவனைக் கூடத் தங்கணவர் தம்மைப் பிரியாதிருப் பதற்காகப் புகழ்ந்து கூறமாட்டார்கள். கணவனையே தொழுது வாழ்வார்கள். இது,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் ரெழுதுஎழுவாள்" (௫௫)

என்ற குறட்பகுதியைச் சுமந்து நிற்பது. இதன் முடிந்த கருத்து கணவனைத் தொழுது கணவன் விருப்பத்தைப் பெறுவார்களே யன்றி, காமனை வணங்கிக் கணவனை விரும்பச்செய்யார்கள் என்ற அவர்களின் உயர்ந்த உள்ள உறுதி உணர்த்தப் பெறுகின்றது.

ஒற்று ஒற்றிக் கொளல்

சீவகன் கனகமாலையை மணந்துகொண்டு ஏமமாபுரத்தில் தடமித்தன் என்னும் அரசனுடைய மாளிகையில் வாழ்ந்து வருகிருன். நாள் பல கழிந்தன. நந்தட்டன் முதலான சீவகன் தோழர்கள் சீவகனைக் காணுது வருந்தினர். காந்தருவதத்தையைக் கேட்டு சீவகனுடைய இருப்பிடத்தை யறிந்தனர். பசுநிரைகளைக் கவர்வார்போல ஏமமாபுரத்தின் மீது படையெடுத்துச்சென்றனர்.

ஒற்றர்களை யனுப்பி அகநகரை யாராயச் செய்தனர் என்பதை யுணர்த்துகின்ற தேவர்,

"ஒன்றிமுன் விடுத்தவர் மூவர்ஒற் றுட்கள்வந்து
இன்று இதாற் பட்டதுஎன்று இயம்புகின் றார்களே"
(சீவக. 1829)

என வரலாற்றை நடத்திச் செல்கின்றார். இச்செய்யுளில், முன்னே அனுப்பிய மூன்று ஒற்றர்களும் வந்து தனித்தனியே தாம் தாம் கண்ட முடிவுகளைச் சொல்கின்றனர் என்பது உணர்த்தப் பெறுகிறது. இதனால், போர் மேற்கொள்ள இருக்கும்போது ஒருவரையொருவர் அறியாவண்ணம் மூன்று ஒற்றரை அனுப்ப வேண்டும். சென்றறிந்து வந்த மூவர் கருத்தும் ஒன்றாயின் இதுவே செய்தியெனத் துணிதல் வேண்டும் என்பது தொன்மை யதாம் மரபு. அதனை யுணர்த்தும் திருக்குறள்,

"ஒற்றுஒற்று உணராமை யாள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்" (௫௮௯)

என்பது இதனையே தேவர் வாய்ச் சொல்லும் வரலாற்றில் அமைத்துக் காட்டியது.

பின்னரும் விமலையாரிலம்பகத்தில், விசயை அரசநீதிகளைத் தன்மகன் சீவகனுக்கு உணர்த்துகின்றபோது,

"ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
... ...
... ...
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே"
(சீவக. 1921)

என்கின்றாள்.

இது முதலில் அனுப்பிய ஒற்றன், சோர் வானுதல், கையூட்டுக் கொண்டாதல், கருத்து மாற்றத்தானுதல் உண்மையை மாறாக அறியவுங் கூடும் சொல்லவுங் கூடுமாதலான், இவன் கூறுவது இயல்பானதா என்று மற்றுமோர் ஒற்றினுல் ஒற்றிக்கொள்ளுதல் வேண்டும் என்கின்றார் தேவர். இது,

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினுல் ஒற்றிக் கொளல்" (௫௮௮)

என்ற குறட்பாவை உளங்கொண்டு உரைக்கப்பட்டதேயாம்.

தொழுதகையுளும் படை

விமலையார் இலம்பகத் தொடக்கத்திலேயே வரும் செய்யுள்,

"தொழுததங் கையி னுள்ளும் துறுமுடி யகத்தும் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும்
ஒழிகயார் கண்ணும் தேற்றம்; தெளிகுற்றர் விளிகுற்றரே."
(சீவக. 1891)

என்பது.

சீவகன் கனகமாலையைப் புல்லி நரதேவன் மக்களாகிய மைத்துனர்களையுந் தழுவி விடைபெற்றான். குதிரை மீதேறிப் புறப்பட்டான், நந்தட்டன் முதலியோரும் உடன் வருகின்றனர். அவருள் நந்தட்டன் பதுமுகனை நோக்கிக் கூறுகின்றான், தம்பீ படைக்கலம் பகைவரிடம் இங்கே தான் இருக்கும்; இங்கேயிராது என்பதில்லை; கும்பிடுகின்ற கைக்குள்ளிருக்கும்; கூட்டிமுடிக்கப் பெற்ற குஞ்சியுள் இருக்கும்; அழுகின்ற கண்ணீரில் இருக்கும்; அணிவகைகளின் இடையே இருக்கும்; ஆதலால் நன்கு ஆராய்ந்து பகைவரைப் பிரிந்தொழுக வேண்டும்; எவரையும் முழுதும் துணிதல் ஆகாது. அங்ஙனம் துணிந்தால் அரசர்கட்கு அழிவே யன்றி ஆக்கமில்லை என்கின்றான் இதனோடு

"தொழுதகையுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து." (அஉஅ)

என்ற குறட்கருத்து இணைகின்றதன்றோ! இக்குறளை எண்ணுகின்ற தேவர் சிந்தையிலே கூட்டி முடிக்கப் பெற்ற குஞ்சியும் அணிவகைகளும் ஆயுதம் மறைத்து வைக்கும் இடங்களாகத் தோன்றச் செய்தது. அவருடைய உலகியற் பட்டறிவு அதனால் மேலும் இரண்டிடங்களைக் கூட்டி எண்ணுகிறார்.

மன்னன் வலியனாயின், பகைவன் தன்மென்மை தோன்ற நடித்துக் கைகூப்பித் தொழுவான். அதனைப் பொருதகர் தாக்கற்குப் பெயருந்தகைத்தாக எண்ணுதல் வேண்டுமேயன்றி உண்மையென எண்ணி ஏமாறுதல் கூடாது. தொழுகின்ற கையுள் படை மறைந்திருக்கும். என முதற்கண் உணர்த்திப் பின்னர், மன்னன் மெலியனாயின், அவன் பகைவன் அவனுடைய அழிவிற்கு இரங்குவான் போல அரற்றியும் அழுதும் அவலத்தைக்

காட்டுவான். அதனையும் நம்பி விடலாகாது. "ஒன்னர், அழுதகண்ணீரும் அனைத்து" என்றனர் வள்ளுவர்.

கையுள் படையை ஒடுக்கலாம்; ஆடையுள் அணியுள் முடியுள் படையை ஒடுக்கலாம். கண்ணீருள் படையை மறைத்து வைக்க இயலாது. ஆதலால் அக்கண்ணீரே படையின் தன்மையை உடையதாகி, எதிரியின் கிளர்ச்சிக்கு இரக்கம் அல்லது சோர்வு என்ற தளர்ச்சியை நல்கி அவனை யழிக்காமல் அழித்துவிடும் என்பதை எண்ணியே வள்ளுவர் கண்ணீரும் அனைத்து என்றார்.

'அனைத்து' என்பது அத்தன்மைத்து என்னும் பொருளைத் தரும் சுட்டுச்சார்ந்த பண்படியாகப் பிறந்த குறிப்பு முற்று, அது கையுள் படை யொடுங்குவதுபோலக் கண்ணீருள் படை யொடுங்குதலாகிய இயல்பினையுடையது என்னும் பொருள் தாராது. கண்ணீருள் படை ஒடுக்கலாகாமையின், ஆகவே கண்ணீரே படையாந் தன்மையை உடைத்து என்பதே வள்ளுவர் கருத்தும், உரையாசிரியர் பரிமேலழகர் கருத்துமாதல் தெளிவு. "கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்ற வள்ளுவமும் இக்கருத்திற்குப் பேரரண் செய்வதாம். இக்குறட் கருத்தை வாங்கிச் செய்யுள் யாக்கின்ற தேவர் அழுத கண்ணீரினுள்ளும் படை ஒடுங்கும்' என்கின்றார். ஆகவே இச் செய்யுட்கு, கையுள்ளும், முடியகத்தும், அணியகத்தும் படைக்கலம் ஒடுங்கும். கண்ணீரில் படைக்கலம ஒடுங்கும் எனக் கோடலே இயைபுடையதாம. தேவர் பிழையாராதலின், 'படை' என்பதற்கு ஈண்டோரிடத்து மட்டும், பொருளின் பெயர் அதன் பண்பிற்கானதாகக் கொண்டு படைத்தன்மையாகிய தேய்தல் அல்லது அழித்தலாகிய தொழிற் பண்பை யுணர்த்திற்றாக கோடல் ஏற்புடைத்தாம்.

மேலும் நந்தட்டன் கூறுகின்றான்,

"பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா"
(சீவக. 1894)

என்று. இது

"எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு" (அஅக)

என்ற குறட் கருத்தால் விளைந்த புது விளைவு. எங்ஙனம் எனின், வள்ளுவர் வெளியில் நட்புடையார் போலவும், பணிந்தார் போலவுங் காட்டிக்கொண்டு உள்ளே பகைமை கொண்டவரின் பகை அரையெள் அளவினதாகச் சிறிதாயிருப்பினும் கேடு பயப்பதாம் என்றார். தேவர் பஞ்சைப்போல நொய்தாக இருப்பினும் கேடு பயக்கும் என்றார். முன்னது அளவாற் சிறுமையையும், பின்னது வலியாற் சிறுமையையும் உணர்த்தின. இத்துணையே யன்றி இருவர் கருத்தும் ஓரடிப்படையின் எழுச்சியேயாகும்.

ஆமை

மற்றும், அவனே,

" .... அடங்கலால் ஆமை போன்றும்
.... மதலையைக் காமின் " (சீவக. 1895)

என்கின்றான். துன்பம் வந்த காலத்துத் தலையையும் கால்களையும் ஓட்டுக்குள் அடக்கிக் காத்துக்கொள்ளும் ஆமையைப் போல, ஐம்பொறிகளையும் அடக்கி நடத்தலால் ஆமை போன்று அடங்கி யிருந்து சீவகனைக் காக்க என்கின்றார்.

இது,

" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து " (கஉசு)

என்ற குறட் கருத்தால் விளைந்தது.

'ஆமைபோல்' என வள்ளுவர் கூறிய உவமை, பாவ கன்மங்கள் வந்து பற்றுவவாயின. அவை வந்து பற்றுவண்ணம் பொறிகளைப் புறம் போகாத வண்ணம் அடக்குக. பாவ ஏது வில்லையாயின் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களின் பரப்பி யாரத் துய்க்க என்ற கருத்தையும் உதவுதல் போல, ஈண்டும் தேவர் 'அடங்கலால் ஆமைபோன்றும்' எனப் பொதுவகையாற் கூறி, மீட்டும் பாவ வழியல்லவாயின் இன்பந்துய்க்க எனவும் உரைத்தார் எனக்கொள்க. வள்ளுவர் அடக்கமுடைமையை இல்லறவியலிற் கூறியதால் பொறிகளை யடக்குக தேவையான போது வெளியிட்டு நுகருக என்றாரேயன்றி யாண்டும் என்றும் மீண்டு செயற்படாத வண்ணம் அவித்துவிடு என்றாரல்லர்.

அங்ஙனம் அவிப்பின் பொறிகள் என்றுமே பயன்படாவாய்த் தந்தன்மை யிழந்து விடும். ஆகவே பொறியறைக்கும், பொறி யடக்கம் புரிபவனுக்கும் வேறுபாடின்றும். ஆதலால் பொறிகளை அடக்குக : அவ்வளவே அமையும் என்றுர்.

சீவகன் தன் தாய் விசயமாதேவியின் தவச்சாலைக்கு வரப் போகிறுன் என்பதனை அறிந்த சாலையிலுள்ளார் சாலையை அணி செய்தனர். அதனைக்கண்ட சீவகன் தோழர்கள், இங்குள்ள மரங்கள், பெண்களின் கண்களால் நோக்கப்பெற்றும், கையால் தீண்டப்பெற்றும், காலமல்லாத காலத்தும் மலராதனகூட மலர்ந் துள்ளன, காயாதன காய்த்துள்ளன, கனியாதன கனிந்துள்ளன, அம்மட்டோ மாதர்கள் மலர் பறிக்கக் கையை யுயர்த்துகிருர்கள். மரங்களும் கிளைகளை வளைந்துக் கொடுக்கின்றன. ஆகவே மரங்கட்கு உயிரில்லை உணர்வில்லை என்கிருர்களே! அவர்கள் பித்தர். அல்லராயின் பேயர்கள் என்று தம்முட் பேசிக்கொண்டு செல்கின்றனர் என்பார்.

> நித்தில முலையி ஞர்தம் நெடுங்கணுல் நோக்கப் பெற்றும்
> கைத்தலந் தீண்டப் பெற்றும் கனிந்தன மலர்ந்த காண்க
> வைத்தலர் கொய்யத் தாழ்ந்த மரமுயி ரில்லை யென்பார்
> பித்தல ராயின் பேய்கள் என்றலாற் பேச லாமோ ?"
> (சீவக. 1907)

என்கின்றுர். இப்பாட்டின் இறுதியடியில்,

> "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும்" (அ௫௦)

என்ற குறட் கருத்தே ஒளி செய்கிறது.

ஏறன்ஞன்

விசயை தவச்சாலையில் சீவகனைக் காண்கின்றுள், அன்பு மீதூர்ந்து பாராட்டுகிருள். அவள் மனத்திலே, தானே உண்மையான தாய் என்றறிந்த பிறகு சீவகநம்பிக்கு கந்துக்கடன் சுநந்தை இவர்கள்பால் அன்பு குறையக்கூடுமே என்ற எண்ணம் இழையோடுகிறது. அதனுல், உன் தாய் சுநந்தையே, தந்தை யாவான் கந்துக்கடனே, என் மகன் நந்தட்டனே நீயில்லை என்று கூறி, நந்தட்டனை அருகில் அழைத்துத் தலையைக் கோதி அவனுக்குக் கருணையமுதை யூட்டுகிருள் என்னும் போது தேவர்,

"போற்ரு, ரினத்திடை ஏறனுனுக்கு" (சீவக. 1916) என நந்தட்டனைக் குறிக்கின்ருர். இதனைக் கேட்கும்போது நமக்கெல்லாம் "ஏறுபோற் பீடுநடை" (ருக) உடையான் அரசருள் ஏறு, என்ற குறட்பகுதிகள் நினைவுக்கு வரும்.

ஒரு பாடலில் பல குறள்

பல ஆண்டுகள் கழித்துத் தன் மகனைக் கண்ட மகிழ்ச்சியால் தாய் விசயை ஆறுநாள் தவச்சாலையில் வைத்து விருந்தூட்டி மகிழ்கிருள். ஒரு நாள் சீவகனையும், நந்தட்டனையும் மரவ முதலிய மரங்கள் செறிந்த இளமரக்காவில் யாரும் அணுக இயலாத தனியிடத்திற்கு அழைத்துச் செல்கிருள். இருவரையும் இருகையாலும் தழுவிக்கொண்டு அரசநீதி, பகைவெல்லுமுறை, பொருளீட்டு முறை இவைகளை எடுத்தியம்புகின்றவள்,

> "நீதியால்அறுத்து அந்நிதி யீட்டுதல்
> ஆதியாய வரும்பகை நாட்டுதல்
> மோதி முள்ளொடு முள்பகை கண்டிடல்
> பேது செய்துபி ளந்திடல் பெட்டதே."
>
> (சீவக. 1920)

என்கின்ருள்.

இதில் ஒவ்வோரடியும் ஒவ்வொரு குறட்கருத்துச் செறிய நிற்பதைக் காணலாம். அவற்றுள் முதலடி, 'நீதியால்அறுத்து அந்நிதி யீட்டுதல்' என்பது. இது அரசன் பொருளீட்டற்குரிய வழிகளை வகுப்பது. அரசன் செங்கோன்மை தவருமல், அரச நீதியாலே, குடிமக்களின் வருவாயில் ஆறிலொன்று என வரையறுத்து, அச்செல்வத்தைத் தனக்காக ஈட்டவேண்டும் என்பதையுணர்த்துகிறது

> "அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள்." (எருச)

என்ற குறளோவியம் தேவர் மனத்திற்படிந்து விசயை வாய்ச்சொல்லாக வெளிப்படுவதைக் காண்கின்ரேம். இதில் 'தீதின்றி வந்த பொருள்' என்பதற்குப் பொருள் செய்யுந் திறத்தினையறிந்து ஈட்டிய பொருள் எனப் பரிமேலழகர் உரை காண்பார். தேவர் திறனறிதலுக்கு விளக்கமாக, நீதியால் அறுத்துப் பொருள்காணல் வேண்டும் என இருவகை யடைகளான் காண்பர். நீதி என்பது அரச நீதி, அது வரையறுப்பது உறுபொருளும்

உல்குபொருளும், தன் ஒன்னார்த் தெறுபொருளும், வேந்தன் பொருள் எனவும், அவையேயன்றிக் குடிகளிடமிருந்து நோவின்றிக் கொள்ளுமுறையிற் கொண்ட ஆறிலொரு கடமையுமாம் எனவும் கொள்ள வைக்கின்றார். ஆகவே 'தீதின்றி வந்த பொருள்' என்னும் குறட்பகுதி, 'நீதியால் அறுத்து' என்ற தேவர் மொழியால் பரிமேலழகர் காணும் உரையினும் மிக்கதோர் விளக்கத்தைப் பெறுதலைக் காணலாம்.

இரண்டாம் அடி 'ஆதி யாயவ ரும்பகை நாட்டுதல்' என்பது. அரசன், பழம்பகையை விரைந்து வெளிப்படுத்தல் ஆகாது. காலமும் கடனும், துணையும் வாய்க்குமளவும் அடி மனத்தில் எவ்வாற்றானும் பிறரறிந்து கொள்ளாவண்ணம் பேணி வைத்திருக்க வேண்டும் என்கின்றாள் விசயை எனக் கூறுகிறார் தேவர். இது பல குறட்பாக்களின் நிழற்படமாகக் காட்சி யளிக்கிறது எனலாம்.

முதலாவதாக,

> **"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**
> **துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்."** (சஅஎ)

என்ற குறளின் 'உள்வேர்ப்பர் புறம்வேரார்' என்பனவற்றை நாட்டுதல் என ஒரு சொல்லாற் குறித்தார். மற்றும்,

> **"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
> **குத்தொக்க சீர்த்த விடத்து."** (சகூ0)

என்ற குறட்கண் உள்ள முதல் அடிக்கருத்தை, 'பகையைச் செயலாற்றுந் துணையும் அடிமனத்து நாட்டுக' என்றார்.

மூன்றாம் அடி 'மோதி முள்ளொடு முள்பகை கண்டிடல்' என்பது. இது முள்ளாலே முள்ளை எடுக்க வேண்டும் என்ற பழமொழியைத் தாங்கி நிற்பது. அஃதாவது, நாலுவித உபாயங்களையும் நன்குணர்ந்த அரசன், தனக்குப் பகையாவார் இருவரிருப்பின், அவர்களிருவரும் ஒன்று சேர்ந்து தம் மீது படையெடா வண்ணம் தடுப்பது மட்டும் அன்றி, அவர்களிருவரும் தம்முள் அடித்துக்கொண்டு அழியும்படிச் செய்தல் என்பதை விளக்குவதாம். இது,

> **"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
> **யானையால் யானையாத் தற்று"** (கூஎஅ)

என்ற குறளின் நிழலாகும். பகையைக்கொண்டே பகையை வெல்ல வேண்டும். அப்போது, எல்லாவகையினும் அழிவு பகைவர்க்கும், தனித்த ஆக்கம் தனக்கும் ஆம். ஆதலால் முள்ளைக் கொண்டே முள்ளைக் களைக என்றுளாம். பழமொழி நானூறும் "முள்ளினுல் முட்களையு மாறு" (பழமொழி 54-1) எனல் காண்க.

நான்காம் அடி, "பேது செய்து பிளந்திடல் பெட்டதே" என்பது.

பகையாவார்க்கு மற்றொருவர் நட்பாய், அவருடைய நலந் தீங்குகளிற் பங்குபற்றித் தம்மீது அவர்க்காகப் படை எடுத்து வருவார் போலிருந்தால், அவரைக் கொடுத்தோ அடுத்தோ மன வேற்றுமையை உண்டுபண்ணிப் பிரித்து வைத்தலும் வேண்டும் என்கின்றுள் விசயை.

இது,

"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு." (கூ௩௩)

என்ற குறளில் உள்ள 'பிரித்தலும்' என்பதன் விளக்கமாக அமைந்தது.

"ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்துபெ ருக்கலும் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே" (சீவ. 1921)

என்பதும் விசயையின் உபதேச மொழிகளில் ஒன்று. இதில் ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தல் முன்னே யுணர்த்தப் பெற்றது. இரண்டாம் அடி

'கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்' என்பது. கற்ற மாந்தர் அரச நூலையும் அரசியல் நூல்களையும் முறையே கற்ற அமைச்சர் முதலாயினர். அவர்களைக் கண்ணுகக்கொண்டு அரசன் அரசியலை நடத்தவேண்டும் என்பதாம். இது,

"சூழ்வார்கண் ணுக ஒழுகலான், மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" (சசரு)

என்ற குறளான் பெறப்பட்ட கருத்தினைச் சுருக்கிச் சொல்கிறது எனலாம்.

மூன்றும் அடி "சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலும்" என்பது.

உறுதிச் சுற்றமும் தம்பி முதலிய குருதித் தொடர்பான் விளையும் சுற்றம். தாயத்தாரும், உறவுச் சுற்றத்தாரின் உறவினரும் கிளை எனப்படும்.

உறுதிச்சுற்றம் ஆட்சிக்கு இன்றியமையாத உறுதி பயக்கும் சுற்றமாகிய அமைச்சர், புரோகிதர், ஒற்றர், தூதர், சேனபதியர் என்பார். இந்த இருவகைச் சுற்றமும் ஆள்பவர்க்கு மிகமிக இன்றியமையாதன. ஆதலால் அவர்களை ஆராய்ந்து பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்கின்றார்.

ஆராயும் முறையாவது, முதற்கண் அறத்தானும், பொருளானும், இன்பத்தானும் ஆராய்தல். சுற்றமாக ஏற்றுக்கொண்ட பிறகும் அவர்கள் மனமாற்றத்தாலும், சோர்வாலும், கையூட்டுப் பெற்றமையாலும் மனந்திரிந்து பகைகொள்ளக் கூடுமாதலால் அவர்கள் அறியாதவண்ணம் அடிக்கடி ஆராய்தல் ஆகிய அனைத்தையும் உட்கொண்டு 'சுற்றம் சூழ்ந்து' என்றார்.

அங்ஙனம் ஆராயும்போது அவரிடைச் சில குறை கண்டவிடத்து அவர்களை நீக்கினல், அவர்கள் பகையொடு சேர்ந்து நம் மறையைப் பகைவனிடம் புலப்படுத்தவும் கூடும் ஆதலால், அவர்களைத் திருத்தி, அவரைக் கண்காணிக்கச் சிலரை நிறுவி மேலும் மேலும் சுற்றத்தைப் பெருக்க வேண்டுமேயன்றிக் குறைத்தல் கூடாது என்பதும் வலியுறுத்தப் பெறுகிறது. இக்கருத்து,

> **"சுற்றத்தாற் சுற்றப் பட்டவொழுகல் செல்வந்தான்**
> **பெற்றத்தாற் பெற்ற பயன்"** (ருஉச)

என்ற குறளின் கருத்தாம்.

'கொற்றங் கொள்குறிக் கொற்றவற்கூது என்பவே' என்பது வெற்றியை விரும்புகின்ற அரசன் கையாளவேண்டிய உபாயமாம் என்ற கருத்தமைந்தது. இது

> **"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
> **அன்னநீ ரார்க்கே யுள"** (ருஉஅ)

என்னுங் குறளில் ஆக்கமும் அன்ன நீரார்க்கே யுள' என்பதன் கருத்தோட்டமாகும்.

"வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னாய்பொருள் செய்யுமே"
(சீவக. 1922)

என்று வேத்தியல் அறிந்த விசயமாதேவியார் பொருளின் இன்றியமையாமையைப் புகலுகின்றார். தன் மக்களுக்கு இதனால் முதற்கண் பொருள் வென்றியாக்கலும் செய்யும் என்றார்.

வென்றி – பகைவரைப் பொருது அடையும் வெற்றி, உடல் வலியும், உள்ள உறுதியுமிக்குடையாராயினும் அரசர் பொருளிலராயின் வென்றி எய்த இயலாது என்பதை விசயை வாயிலாக விளக்குகின்ற தேவர் சிந்தை

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்" (எடுசு)

என்ற கற்பனைத் திறமும் அணிமாண்பும் நிறைந்த குறட்கவிதையில் தோய்ந்திருக்க வேண்டும். செறுநர் – பகைவர். அவர்களுடைய எழுச்சியையும் செருக்கையும் ஒழிப்பது பொருள் ஒன்றே; ஆதலால் அதனை ஈட்டுக என்றும் வள்ளுவர் பெருந்தகை பொருளை வாளாக உருவகித்தார். இந்தக் கற்பனைக் கவிதையில் எய்தும் பயனை மட்டும் உளங்கொண்டு தேவர் 'வென்றியாக்கலும் பொருள் செய்யும்' என்றார்.

அடுத்தது 'மேதக வாக்கலும் பொருள் செய்யும்' என்பது. இதில் மேதகவு – மேன்மை, மேன்மை இயல்பாக உள்ள நிலையிற் குறையாமையானும், குன்றிய நிலையிருந்து உயர்தலானும் உண்டாவது. இங்ஙனம் இருவகையான் நிகழ்வதாகிய மேன்மையையும் பொருள் அளிக்கும் என்பது தேவர் கருத்து.

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்." (எடுக)

என்ற குறட் கருவூலத்திலிருந்து பெற்றதாம். எங்ஙனம் எனின், சமுதாயத்தில் ஒரு பொருளாக வைத்து மதிக்கத்தக்க நிலை ஒருவாற்றானும் இல்லாத மக்களையும் எல்லாற்றானும் மதிக்கத் தக்கவராகச் செய்வது அஃதல்ல தில்லையாதலால் என்க.

இக்குறளில் உள்ள 'பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்' என்பதே 'மேதகவாக்கலும்' எனத் தேவர் வாக்கில் திகழ்கிறது.

அதன்பின்புள்ளது '.கல்வியோடழகாக்கலும் பொருள் செய்யும்' என்பது இப்பகுதி கையிற்காசிருந்தால் அழகில்லாதவனும் பேரழகனாகிய மன்மதன் என மதிக்கப்பெறுவான். கல்வியே யிலாதானும் பெரும் புலவனாகப் போற்றப் பெறுவான் என்பதனை விளக்குகிறது.

வள்ளுவம், நல்குரவு என்னும் அதிகாரத்தில் ஒருவனுக்குப் பொருளில்லையானால் அவன் உயர்ந்த கருத்தைப் பன்னெடுங்காலம் ஆராய்ந்து, மற்றோர் சொல் வெல்லுஞ் சொல்லின்மை யறிந்து சொன்னாலும் அச்சொல் பொருளற்ற சொல்லாகவே மதிக்கப் பெறும் என்ற கருத்தமைய

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்." (௧௦௪௬)

என்றது. இதனை வாங்கிச் சுருக்கிக் 'கல்வியோடழகாக்கலும்' என்கின்றது சிந்தாமணி, அடுத்துள்ளது 'குன்றினார்களைக் குன்றென ஆக்கலும் செய்யும்' என்பது, குன்றினார்கள் — நிலையிற்றாழ்ந்தார் அவர்களை நிலையிலுயர்ந்தாராகச் செய்வது பொருள் அதனால் அதனை ஈட்டுக என்கின்றார்; இக்கருத்து,

'செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு' என்றதனைத் தழுவி எழுந்த தாகலாம்.

இங்ஙனம் பல பாடல்களில் அடிகடோறும் குறட் கருத்து ஒளிர்வதைக் காணலாம்.

இடனறிதலும் காலம் அறிதலும் மிக மிக இன்றியமையாதன. ஆதலால், அவற்றுள் ஒன்றிரண்டு குறட் கருத்துக்களை எடுத்தாள விரும்பாமல் முழுதையும் ஆள வேண்டும் என்ற ஆசை தேவருக்கு உண்டாகியிருக்கிறது. ஆனால் பத்துக் குறட்கருத்தையும் ஒருசேர எடுத்தாள முடியாமையை எண்ணி அதிகாரப் பெயரையாவது சுட்டிச் செல்வேமே என்று எண்ணுகிறார். அதனால்,

"இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும் மதிவலார்க்கு அரியதுண்டோ"
(சீவக. 1927)

என்கின்றார் ஆயினும், சிறப்பாக இச்செய்யுளில்,

"ஞாலங் கருதினும் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்." (சஅச)

என்ற குறள் சிறந்து ஒளி செய்கிறது எனலாம். இதுவும் விசயை தன்மக்களுக்குச் கூறிய அறிவுரைகளுள் ஒன்று, முற்கூறிய முடிபிற்கு எடுத்துக்காட்டாக,

"கடத்திடைக் காக்கை ஒன்றே யாயிரங் கோடி கூகை
இடத்திடை யழுங்கச் சென்றுங் கின்னுயிர் செகுத்ததன்றே"
(*சீவக.* 1927)

என்கின்றாள் விசயை இது ;

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தற்கு வேண்டும் பொழுது." (சஅக)

என்ற குறட் கருத்தையே தாங்கியுள்ளது எனலாம். காக்கை கூகையைக் கொன்ற வரலாறு பழமையானது. பஞ்சதந்திர கதையிலும் வருவது. அதில் இலகுபதனன் என்னுங் காக்கை ஒன்று பகற்காலத்தே கோட்டான்கள் கூடிவாழ்ந்த மரப்பொந்தின் வாயிலிலே குச்சிகளை யடுக்கித் தீக்கொளுவிக் கோட்டான் கூட்டத்தையே அழித்துவிட்டது என்று வரலாறு கூறப் பெற்றுள்ளது. வள்ளுவம் காக்கை கூகையை வெல்லும் என்ற போது ஒரு காக்கையா, பல காக்கைகளா, ஒரு கூகையையா கூகைக் கூட்டங்களையா என்று விளக்கமாக அறிய இயலாமல் பொதுவகையாகக் கூறியது போற்றேன்றுகிறது. கூகைக்குப் பகலில் கண் தெரியாமையால், காகம் அதைக் கொன்றுவிடும் எனக்காக முதலிய பறவைகளின் இயல்பை வைத்துக் கால மறிதலின் இன்றியமையாமையை எடுத்து விளக்கியது போலுள்ளது. இக்கருத்தை வாங்கிக் கூறிய தேவரா,

'கடத்திடைக் காகம் ஒன்று ஆயிரகோடிக் கூகையைக் கொன்றது. கூகை வாழுகின்ற இடத்திற் சென்று கொன்றது. ஒருசேர அழியும்படிக் கொன்றது' என்கின்றூர். ஆதலால் இவர் காலத்து பஞ்சதந்திரக் கதை இவருளத்திற்கறிந்த ஒன்றுதல் தெளிவு. ஆகவே வள்ளுவர் இயற்கையின் அமைதியைக்கொண்டு காட்டிய எடுத்துக்காட்டு, கதையாகித் தேவர் நூலில் இடம் பெற்றது எனலாம். ஆதலால் பஞ்சதந்திரக்கதை தமிழ்நாட்டில் வழங்கற்கு முன்பே வள்ளுவர் பறவையினியல்பை யறிந்துரைத்தார் எனல் துணிவு.

அல்லாமலும் தமிழ்நாட்டில் வழங்கிய பார்ப்பனி கீரியைக் கொன்றது; காகம் கூகையை வென்றது முதலான சில பழங் கதைகள் கூடியே பஞ்சதந்திரக் கதையாக உருவங் கொண்டதை வரலாற்று நூலார் அறிவர். அஃதெங்ஙனமாயினும், வள்ளுவர் கதையையுட்கொண்டு 'பகல் வெல்லுங் காக்கை கூகையை' என்றாரல்லர். பறவையின் இயற்கை கண்டே கூறினர் என்பது மட்டும் உறுதி.

கள்வன் காமதேவனே!

விமலைசீவகனைக் கண்டதும் வெளுத்து நிறம் வேறானள்; என்னுடைய அழியாத நாணையும், உறுதியான நிறையையும், அழகிய நிறத்தையும் கவர்ந்த இக்கள்வன் மண்ணுலகில் இறங்கிய காமதேவனே ஆவன். காதனோய் உள்நின்று உருக்குகின்றது எனக் கவல்பவள்,

"...........அகத்தேசுட் டுருக்கும் வெந்தீ
ஒன்றே உலகத் துறுநோய்மருந் தில்லது என்றாள்"

இதில் காமம் தீயாகக் காட்டப்பெறுகின்றது. தீ கனன்று மேனோக்கி எரியும்; தானும் காணப்படும். பிறபொருளைக் காணு தற்கும் உபகாரப்படும். இத்தீ அங்ஙனம் அன்றாகிறதே என எண்ணி; இத்தீ உள்ளிருந்தே சுட்டு மனத்தை யுருக்குவது. ஆதலால் இது வெறுந் தீயன்று; வெந்தீ. கண்ணிற்குப் புலப் படாதது என்கின்றாள். இங்ஙனம் காமத்தைத் தீயாகக் கருதும் கருத்து

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னுந்தீ "
(கக0ச)

' தொடின்சுடி னல்லது காமநோய் போல
விடின்சுட லாற்று மோதீ " (ககடுக)

என்ற குறள் தந்த செல்வமே யாம்.

காமத்தீ நெஞ்சில் தோன்றும் என்பது உள்ளினும் உள்ளஞ் சுடும்' (கஉ0எ). என்பதாற் போந்தது. காமம் நோய் என்பது "பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை; தன் நோய்க்குத் தானே மருந்து" (கக0உ) என்ற குறளாற் போந்தது. இத்தனைக் குறள் அமுதமும் தேவர் சிந்தையிலே திகழ விமலை கூறுவதாக அகத்தே சுட்டுருக்கும் 'வெந்தீ ஒன்றே உலகத் துறுநோய் மருந்தில்லது' என்றார்.

விமலை காரணமாகச் சீவகன் காதலையுற்றுக் கவல்கின்ற போது

"காமக் கடுநோய்க் கனல் சூழ்ந்துஉடம் பென்னு மற்றிவ்
ஏமத்தி னேடும் உடனேசுட ஏக லாற்ருகி"
(*சீவக.* 1966)

விமலையின் தந்தையாகிய சாகர தத்தனுடைய கடையிலே புலம்புற்றிருந்தான் என்கின்ருர். இப்பகுதியிலும் காமம் பிற மருந் தாற்றணியாத நோயாகவும், கனலாகவும் கூறப் பெற்றுக் குறட் கருத்தோடிணைகின்றது.

அங்கேயே "*ஏவுண்ட நெஞ்சிற் கிடுபுண் மருந்து*" (*சீவக.* 1965) *என்றபகுதி* "*ஒன்று அந்நோய்க்கு மருந்து*" (௧௦௯௧) *என்பதனையுட்கொண்டு கூறியதாம். அங்ஙனமே விமலையின் காதலையால் கவலுகின்ற சீவகன்*

"காவிநோய் செய்த கருங்கயற்கட் பூங்கொடியென்
ஆவிநோய் செய்த அணங்கென் றறியாதேன்"
(*சீவக,* 1967)

எனப் புலம்புகின்ருன். இதில் கலந்துறைவள '*அணங்குகொல்*' (௧௦அ௧) *என்ற பகுதியும்* "*ஒரு நோக்கு நோய்நோக்கு*" (௧௦௯௧) *என்ற பகுதியும் ஆம்.*

விமலையின் கண்களைப் பாராட்டுகின்றவன் சில உறுப்புக்களை யடுக்கி இவை என்னுயிர்க்கே கூற்றமாயின என்கின்ருன்.

"கருங்குழலும் செவ்வாயும் கண் மலரும் காதும்
அரும்பொழுகு பூண்முலையும் ஆருயிர்க்கே கூற்றம்"
(*சீவக,* 1969)

என்பது அவன் வாய்மொழி. இது "*கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல், நோக்கம்இம் மூன்றும் உடைத்து*"(௧௦அ௫) *என்ற குறளில் உள்ள* '*நோக்கு கூற்றமோ? என்றதன் இன வரலாற்று விளக்கமாகும்.*

உயர்ந்த புகழ்

சீவகன் தன் மனைவியராகிய குணமாலை காந்தருவத்தை இருவர்க்கும் தேறுதல் கூறித் தன் நாடாகிய ஏமாங்கத நாட்டிற்குப் புறப்படுகின்றவன், வணிக வேடந் தாங்கிக் குதிரை

யூர்தேறிச் செல்கின்றான். வழியில் பாலைவனம் ஒன்று எதிர்ப்பட்டது. அதனைக் கடந்து போகின்றான் என்பதை உணர்த்த வந்த தேவர்;

"நிலையிலா வுலகில் நின்றவண் புகழை வேட்டவன்
நிதியமே போன்றும்
... ...
"கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும் கடவுளர்
வெகுளியே போன்றும்
... ."

(சீவக. 2107)

பாலைவனத்தை கடந்து சென்றனர் என்கின்றார். இதில், உலகம் நிலையற்றது; தோன்றி நின்றழியும் தன்மையது. அத்தகைய உலகத்தில் நிலையான-பின்னும் பல ஆண்டுகள் நிலை பேறுடைய புகழை விரும்பியவன் செல்வம் செலவழிதல்போலச் சுரத்தை விரைவிற் கடந்தனர் என்பது,

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்".

என்ற குறள் கருத்து முழுவதையும் ஏற்று ஒளிர்வதாம். 'ஒன்றா உலகம்' என்பது நிலையிலா உலகாயிற்று 'உயர்ந்த புகழ்' 'வண்புகழ்' ஆயிற்று. புகழ்பலவேறு காரணங்களால் வருமாயினும் ஈகையான வருவதே உயர்ந்த புகழ். அது வண்மையால் வரும் வண்புகழ் என முற்றும் அமைந்து ஒளிர்தலைக் காணலாம்.

அங்ஙனமே 'கடவுளர் வெகுளியே போன்றும்' என்பது

"குணம்என்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" (உகூ)

என்ற குறளையுட்கொண்டெழுந்ததாம். கடவுளர் – முனிவர். நீத்தார்.

அறிவு மனத்தை யாளுதல்

சீவகனுக்குத் தாய்மாமன் கோவிந்தன். அவன் கட்டியங் காரனைத் தன்னூர்க்கு அழைக்க விரும்பி, ஒரு சூழ்ச்சி செய்தான். 'என் மகள் இலக்கணை, அவளைத் திரிபன்றி எய்வார்க்கு மண

முடித்துக் கொடுப்பேன்' என்று நாடெங்கும் முறசறைவித்தான். அதனைக் கேட்ட எல்லா நாட்டரசர்களும் வந்தனர். கட்டியங் காரனும் வந்தான். ஒவ்வொரு தேய மன்னராக வந்து பொறியை எய்தனர். எய்து வீழ்த்தமாட்டாமையால் கைசோர்ந்தனர். மகத மன்னன் எய்தான். கிட்டத்தட்ட அவன் அம்பு பொறிக் கண் உள்ள பன்றியை அணுகியது. அதுகண்ட மக்கள் இது படும்; இதுபடும்; எனக் கை கொடி ஆரவாரித்தனர். ஆனால், அம்போ அப்பன்றியை உராய்ந்து மீண்டது. இதனை உவமை முகத்தான் விளக்கப் புகுந்த தேவர்,

"பில்கித்தே னொழுகும் கோதைப் பிறர்மனை யாள்கட் சென்ற
உள்ளத்தை யுணர்வின் மிக்கான் ஒழித்திடப் பெயர்ந்த
தேபோல்" (*சீவக.* 2186)

அம்பு புறங் கொடுத்தது என்கிறார்.

பிறன் மனையாளை விரும்பி அவள்பாற் சென்ற உள்ளத்தை அறிஞன் ஒருவன்,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" (*௪௨௨*)

என்பதனை எண்ணி மீட்டான். அவன் மனம் அவள் பாற் சென்று தோயாமல் மீண்டது. அதுபோல மகத மன்னன் அம்பு பன்றி யருகிற் சென்றும், அதனை வீழ்த்தாது மீண்டது எனக் குறட் கருத்தை உள்ளீடாகக் கொண்டு ஒளி செய்கிறார்.

போர்க்களத்தில் ஒரு காட்சி

சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் போர் நடக்கிறது. இரு திறத்துப் படையிலும் பல வீரர்கள் மடிந்தனர். அக்களத்தில் வீரர்கள் யானையைத் தலையணையாகவும்; குதிரையைக் காலணை யாகவும் கொண்டு கையிலே வாளேந்தியபடி, உடுத்திய ஆடையின்மேல் அரை ஞாண் அறுந்து கிடக்கச் செஞ்சோற்றுக் கடனைக் கழித்து மாண்டு கிடக்கின்றனர்.

இறந்த நிலையிலும் அவர்களிடம் வீரமும் கோபமும் குறை யாமையால் நரிகளும், கிழநரிகளும் அணுகாமல் அகன்று நின்று அலறுகின்றன என ஓர் அவலக்காட்சியைப் படைக்கின்றார் தேவர்,

"குஞ்சரந் தலையடுத்துக் கூந்தன்மாக் காலணையாச்
செஞ்சோற்றுக் கடனீங்கிச் சினவாள் பிடித்துடுத்த
பஞ்சிமேற் கிடந்துடைஞாண் பதைத்திலங்கக் கிடந்தாரை
அஞ்சிப்போந் தினநரியோ டோரிநின் றலறுமே"
(சீவக. 2240)

என்பது அப்பாடல். இதில் உள்ள சிறந்த நிகழ்ச்சி வீரர்கள் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்து உயிர் நீத்துக் கிடக்கின்றார்கள் என்பதே. இதனை,

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து" (எ௮௦)

என்ற குறளின் நிழல் எனலாமேயன்றிப் பொருளை முழுவதும் தாங்கி வந்தது எனல் இயலாது.

இக்குறளில் வள்ளுவர் வீரனுடைய மன இயல்பு, அவனை வைத்து வளர்த்த புரவலனுடைய மனநிறைவு கனிவு அனைத்தையுங் காட்டுகிறார். 'புரந்தார் கண் நீர்மல்க' என்பதால், இங்ஙனம் செய்நன்றி குன்றாத – உப்பிட்டவரை உள்ளளவும் நினைந்து தன்னுயிரையும், வழங்கக்கூடிய உண்மையான வீரன் ஒருவனை இழந்தோமே என்ற அழுகை நீர் கண்களிற்றதும்பவும், நாட்டுக்கும், நம்மை இன்றுகாறும் வளர்த்த அரசனுக்கும் செய்ய வேண்டியதைச் செய்து செஞ்சோற்றுக் கடனைக் கழித்து விட்டோம் என்ற நிறைவால் அகமலர்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் வீழ்ந்துகிடக்கும வீரனைக்கண்டு, இவன் வீரமும் பற்றும் மெய்ம்மையும் எத்தகையன என்ற வியப்பால் கண்களில் உவகைக் கண்ணீர் ததும்பவும் கிடக்கின்றநிலை இரந்தாவது கொள்ளுந்தன்மையது என்கிறார். இங்ஙனம் குறட்கணுள்ள நயங்கள் பலவற்றை விடுத்துத் தேவர்; இதுவரை தம்முரிமை யாவார் கண்ணிலன்றிப் பிறர் எவர் கணணிலும் பட்டிராத அரைஞாண் ஆடைமீது கிடக்கச் செஞ்சோற்றுக் கடன் கழித்து வீழ்ந்திருக்கின்றான் என்ற அளவில் விளக்கினர்.

போரிலே சீவகன் தம்பியாகிய நபுலன் குதிரை மீதேறி மகத மன்னனோடு பொரவருகின்றான். வந்தவன் தன் குதிரையை மகத மன்னனுடைய யானையின் மத்தகத்திலே பாயும்படித் தூண்டினான். வாளை ஓங்கினான் மகத மனனன் அஞ்சிக் கண்களை யிமைத்தான் அவ்வளவு தான்!

நபுலன் ஓங்கிய வாளைத்தாழ்த்தி, 'மன்ன! அஞ்சாதே யான் இனி உன்னோடு பொரேன்' என்று தன் குதிரையை மற்றொரு களிற்றின் மேற் செலுத்தினன் இக்காட்சியைத் தெரிவிக்கும் செய்யுள்,

"ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறித லோம்பி
நாந்தக உழவன் நாணி நக்குநீ யஞ்சல்கண்டாய்
காய்ந்திலேன் என்று வல்லே கலினமாக் குன்றிற்பொங்கிப்
பாய்ந்ததோர் புலியின் மற்றோர் பகட்டின்மேற் பாய்வித் தானே"
(*சீவக.* 2258)

என்பது. இதில் 'நாந்தக உழவன் நாணி' என்பது

"விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" (எஎரு)

என்ற குறள் மணியை நினைப்பிப்பதாகும். இங்ஙனம் கண்ணிமைத்தலோடு ஒத்தபடை நழுவ விடுதலையும் அடுத்த செய்யுளில் விளக்குவார் தேவர்; அங்கு

இழுக்கா வீரம்

நபுலன் போர்க்களம் சென்று மீண்டான்; அது கண்ட விபுலன், மண்காவலைக் கண்டு மகிழாமல் விண்காவலை வேண்டி வீர சொர்க்கம் விரும்பும் உண்மை வீரர்கள் யாரேனும் இருந்தால் வரலாம்; என்னொடு பொரலாம், எனக் கூறினன். எவரும் முன் வராமையால் அவன்,

"வீறின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்;
ஏறுண்டவா நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்;
மாறன்மையின் மறம்வாடும்என் றிளையாரையும் எறியான்;
ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயி லுழவன்."
(*சீவக.* 2261)

எனத் தேவரால் அறிவிக்கப் பெறுகின்றான்.
இச்செய்யுள்,

"அறனிழுக்காது, அல்லவை நீக்கி, மறனிழுக்கா.
மான முடைய தரசு." (நஅச)

என்ற குறளில், மறனி ழுக்கா மானத்திற்கு விளக்கமாகப் பரிமேலழகராலேயே காட்டப் பெற்றுள்ளது. ஆகவே மக்களுக்குக் கொலை களவு முதலாய குற்றங்களானும் மானம் கேடுறும்;

வீரனுக்கோ வீரத்திற்கு இழுக்கு நேருவதால் விளையும். ஈண்டு வீரத்திற்கு இழுக்கு நேருவதால் விளையும் மானமே பேசப்படுகின்றது என்ற பரிமேலழகர் உரைக் குறிப்பிற்குச் சிறந்த விளக்கமாக அமைகிறது.

சிறந்த மானம், புல், இலை, தழைகளைத் தின்று வீறில்லாத வேழத்தைக் கொல்லாமையும், புண்பட்டோரையும், இளையாரையும் முதியாரையும் கொல்லாமையும் ஆகிய இவற்றான் விளைவது. ஆதலால் விபுலன் இவர்களைக் கொல்லான். நிகரான – புண்படாத – பெருவீரனோடு பொருது வெல்வான் எனக் குறள் விளக்கமே எடுத்தாளப்படுதலைக் காணலாம்.

ஊழ் வலிக்கு ஒரு விளக்கம்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று,
சூழினும் தான்முந் துறும்" (நூ.அ0)

என்பது ஊழே வலியது என்பதை விளக்க வந்த குறள். இதற்கு உரையாசிரியர்கள் 'ஊழை விலக்குவதற்கு அதைக் காட்டிலும் வலியுடையதொரு சூழ்ச்சியை எண்ணினாலும், வேறொரு வழியாக அச்சூழ்ச்சிக்கு முற்பட்டு ஊழே வந்து நிற்கும்' என உரை கண்டனர்.

தேவரோ, வினையின் ஆக்கங் கூறுவாராகக் கட்டியங்காரன் கூற்றாக,

"நல்வினையுடைய நீரார் நஞ்சுணின் அமுத மாகும்
இல்லையேல் அமுதும் நஞ்சாம்; இன்னதால் வினையின் ஆக்கம்"
(சீவக. 2314)

என்கின்றார். ஊழ் தன்னைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தும் முயற்சிக்கு முன்னதாக இருப்பதுமட்டும் அன்று; நுகரும் பொருளிற் கலந்திருந்தே அப்பொருளாகியே நன்மை தீமைகளைச் செய்துவிடும் என்கின்றார். இதனால் மற்றொன்று சூழினும் என்பதற்குத் தன்னூழைத் துடைக்க மற்றொருபாயத்தைக் கையாளுவதற்கு முன்னே, இவன் நுகரும் பொருளாகவே உருக்கொண்டு நன்மை தீமைகளை விளைவிக்கும் என்னும் கருத்தும் கொள்ளக் கிடத்தல் காண்க.

இக்கருத்தையே யுளங்கொண்டு, சீவகன், நல்லூழுக்குக் காரணம் நற்றவம் என்பதை வற்புறுத்துகின்றவன், இலக்கணையார் இலம்பகத்துள்.

"நஞ்சுகுடித் தாலும்நவை யின்று தவநின்ருல்
அஞ்சியொளித் தாலும்அர ணில்லைதவம் உலந்தால்
குஞ்சரத்தின் கோட்டிடையும் உய்வர்தவமிக்கார்
அஞ்சலில ரென்றும்அற னேகளைகண் என்பர்."
(*சீவக.* 2557)

என்கின்ருன். ஈண்டும் ஊழ்வினைவயத்தான் நஞ்சும் அமுதமும் தம் தன்மையாகிய கொலையையும்; உயிர் வளர்த்தலையும் விட்டு, அமுதம் கொல்கின்றது. நஞ்சு கொல்வதில்லை என்பதே வற்புறுத்தப்பெற்று முதற்கருத்தையே அரண் செய்கின்றன.

ஓடுவன ஓடும்

போர்க்களத்தே கட்டியங்காரனுடைய புதல்வர்கள் சீவகனுற் கொல்லப்பட்டுத் தேர் மீது கிடக்கின்றனர். அதனைக் கண்ட மன்னன் சீவகனைக்கண்டு சினக்கின்ருன் சில சொல் சொல்கின்ருன்; அவற்றுள் சில,

"அகப்படு பொறியி ஞரை ஆக்குவார் யாவ ரம்மா!
மிகப்படு பொறியி ஞரை வெறியராச் செய்ய லாமோ!
[*சீவக.* 2815]

"புரிமுத்த மாலைப் பொற்கோல் விளக்கினுட் பெய்த நெய்யும்
திரியுஞ்சென் றற்ற போதே திருச்சுடர் தேம்பி னல்லால்
எரிமொய்த்துப் பெருக லுண்டோ இருவினை சென்று தேய்ந்தால்
பரிவுற்றுக் கெடாமற் செல்வம் பற்றியா ரதனை வைப்பார்."
(*சீவக.* 2816)

என்பவை ஏதோ தான் மட்டும வாழப்போவது போலவும்; தன் மக்களை அழைத்து, நீ செல்வங்கெட்டு அழியப் போகின்ருய் என எச்சரிப்பது போலவும கருதிக கொண்டு, விளக்கு எண்ணெயுந் திரியும் அற்று, அணைய இருக்கும் போது அதனைக்காக்க இயலுமோ! அதுபோலச் செல்வனை இது வரை விளங்கிய ஒருவனுக்கு அதற்கு காரணமான இருவினை தேய்ந்ததானல், அவன் எவ்வளவுதான் செல்வத்தை இறுகப் பிடித்தாலும் செல்வம்

நிலைக்கவாபோகிறது என்று அறவுரை கூறுகின்றான். இதிற் சொல்லாலும், பொருள் நோக்கத்தானும்

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம." (௩௭௬)

என்ற குறள் சீவகக் காப்பியத்துள் இடம் பெற்று ஒளிர்வதைக் காணலாம்.

விதி வெல்லும்

கட்டியங்காரன் நூறு மக்களையும் இழந்து சோர்ந்து போர்க்களத்தில் யானைமீது வருகிறான். சீவகன் அவனைக் கண்டு, சோர்ந்தவன் மீது படையேவுதல் வீரத்திற்கு இழுக்கு என்று எண்ணி, அரசே! தாங்கள் போருக்கு அஞ்சியோ இங்ஙனம் சோர்ந்து புலம்புகின்றீர்கள்; என்று கூறிக்கொண்டே உரக்க வீரநகை செய்கிறான் அதனை எள்ளல் நகையாக எண்ணிய கட்டியங்காரன்,

"வெல்வதுவிதியி னாகும்; வேல்வரின் இமைப்பே னாயின்
சொல்லிநீ நகவும் பெற்றாய்; தோன்றல்!மற் றென்னை என்றான்"
(சீவக. 2317)

தோன்றால்! வெற்றி தோல்விகள் விதியின் விளையாட்டுக்கள், அது உன்னாற்றலால் மட்டும் ஆவன அல்ல. நீ என்மேல் வேலை எறிய, யான் அதுகண்டு அஞ்சிக் கண்ணிமைப்பேனாயின் "அஞ்சினாய்' எனலாம் நகையாடலாம். நமக்குள் அந்நிலை இன்னும் வரவில்லையே ஏன் நகைக்கின்றனை எனச் சீவகற்கு அறிவுறுக்கின்றான்; இதில்

"விழித்தகண் வேல்கொண் டெறிய ஆழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" (எஎ௫)

என்ற குறளோட்டந்தான் கட்டியங்காரன் வாயுரையாகத் தேவரைச் சொல்லவைத்தது,

பெண் அஞ்சும் பேதை

சீவகனை நோக்கி இங்ஙனம் கூறிய கட்டியங்காரன் இந்தப் போரிலே உன்னை நான் வெல்லேனாயின் இன்னின்ன நிலைகளை எய்தியவனாவேன்' எனச் சூளுரைக்கின்றான். அவற்றுள் ஒன்று,

"இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சின்
புல்லாள னுக, மறந் தோற்பின்" (சீவக. 2319)

என்பதும். நான் வீரத்தில் தோற்பேனுயின் கொண்ட பெண்டாட்டிக்கு அஞ்சி, இல்லறத்தான் இயற்ற வேண்டிய கடமைகளுட்டலேயாயவிருந்தோம்பலைச் செய்யத்தவறியவனுவேன் என்ற கருத்தமைந்தது. இது,

"இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்" (௯0௫)

என்ற குறளின் விரிவாகும். 'நல்லார்' என்ற வள்ளுவர் வாய்ச் சொல்லுக்குத் தேவர் விருந்தினர் என உரைக்கண்டிருக்கின்ருர். வள்ளுவர் இல்லாளுக்கு அஞ்சுபவன், எப்போதுமே நல்லவர்கட்கு நன்மை செய்வதிலும் அஞ்சுவான் எனப் பொதுவகையிற் கூறியதைத் தேவர் விருந்தோம்பற்கு உரிமையாக்கியதற்கு ஒரியைபு இருக்கவேண்டும். அதனை ஊன்றி நோக்குவோம்.

உலகநடை அன்பிற் பிணைந்த இருவரில் பெண்மை ஆண்மைக்குத் தலைமை நல்கி, ஆண்மை பெண்மைக்கு உரிமையும் கடமையும் உதவ அவற்றை இருவருமாகச் சேர்ந்து நாங்கள் கட்டுப்பாட்டிற்காக அன்று, கடமை யுணர்ச்சியோடும் மன மகிழ்ச்சியோடும் இல்லறத்தை இன்பநிலையமாக்குகின்ருேம் என்ற உண்மையை உலகறியச் செய்யும் உபாயம் விருந்தோம்பலொன்றே.

"இரும்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டே" (அக)

யாதலின் வள்ளுவர் கூறிய நல்லார்க்கு என்பதற்கு விருந்தினர் என்றே கொண்டனர் தேவர் எனத் தோன்றுகின்றது

இல்லாளை அன்பாலும் பண்பாலும் அடக்கி அவள் தன்வழி யொழுக ஆளத் தெரியாதவன் இல்லாளனுகான். புல்லாளனுவான் என்கின்ருன். வருகின்ற விருந்து நீளத்திரிந்துழன்ருய் நீங்கா நிழல்போல நாளைக்கிருத்தியோ நல்குரவே என்ருற்போல உறுதியான, எதிர்நோக்கோடு வருவது; விருப்பின்றி நோக்கு கின்ற அல்லது மனமாறுபட்டு நோக்குகின்ற நோக்காலேயே குழைவது. அத்தகைய விருந்தின்முகம், மனைவிக்கு அஞ்சுகின்ற

இவன் முகத்தில் தோன்றும் அச்சங் கண்டு கூம்பும் ஆதலால், விருந்தின் முகங்கொன்றென்றுன்; இங்ஙனம் வந்த விருந்தின் முகத்தை வருத்துவது பெண்ணாஞ்சும் பேதையின் முகமேயாயினும் முகத்தை இந்நிலையில் மாற்றியமைத்தது அவன் நெஞ்சமே யாதலின் நெஞ்சிற் புல்லாளன் என்கின்றுன். இங்ஙனம் ஆய்வு வகையினும், பொருளாழ வகையினும் தேவருள்ளக்கிணற்றில் குறணீரே ஊறச் சிந்தாமணியாக தேங்கியிருப்பதற்கு எடுத்துக் காட்டாக இவ்வொன்றை யாய்ந்தனம்; பல பாடல்களில் இத்தகைய ஆழமும் அழகும் உள்ளன.

மெல்ல நட

வெற்றி கண்டு தன்னுட்டையும் மீட்டு பல்லாற்றுனும் நலம் பெற ஆளுகின்றுன் சீவகன். அப்போது சீவகனுடைய மாமன் கோவிந்தன் தன் மகள் இலக்கணையை மணந்து கொள்ளப் பணித்தான். மண ஏற்பாடுகள் நடந்தன. இலக்கணை மண மண்டபத்திற்கு வருகிறுள். அவள் மென்மையை அறிந்த பாங்கிகள்.

"அம்மெல் லனிச்சம் மலரும் அன்னத் தூவியும்
வெம்மை யாமென் றஞ்சி மெல்ல மிதியாத
பொம்மென் னிலவப் பூம்போ தனநின் னடிபோற்றி
இம்மென் கலையா ரிடுவென் றேத்த ஒதுங்கினுள்"

(*சீவக.* 2454)

என்கின்றுர்கள். இலக்கணையின் அடிகள் ' மோந்தாலே போதும்" அக்கணமே வாடிப் போகும் அளவு மென்மை வாய்ந்த அனிச்ச மலரும், அன்னப் பறவையின் அடிவயிற்றிலே உள்ள மெல்லிய தூவியும் மிகக் கொடியன; நெருஞ்சி போலக் குத்துவன; என்று 'அஞ்சி அவற்றை மிதி யாதனவாம்; அவ்வளவு மென்மை வாய்ந்த அடிகளை மெதுவாக வை; பார்த்து வை; என்று மகளிர் வேண்டிக் கொள்கின்றனர்.

இதில்,

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்" (*கக௨௦*)

என்ற வள்ளுவம் ஒளி செய்கிறது.

வள்ளுவர் மாதரடிக்கு அனிச்சமும் அன்னத்தூவியும் நெருஞ்சிப் பழமாகத் துன்புறுத்துவன என்றார். தேவரோ, வரலாற்றோடு இணைத்து, இலக்கணையின் பாதங்கள் வள்ளுவர் வாய்ச்சொல்லை யறிந்து இதுவரை அவைகளை மிதித்தும் அறியாதன; மெல்ல மிதித்தும் அறியாதன; ஆதலால் மெதுவாக நட எனப் பாங்கியர் வேண்டியதாக முடிக்கின்றார். 'வெம்மைய ஆம்' என்றது வள்ளுவர் வாய்மொழியை அப்படியே தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப் பொய்யில் புலவன் பொருளுரை தேராய்' எனச் சாத்தனார் கூறியதைப்போலக்கொண்டு கூறியது போலவும் தோன்றுகிறது.

கூற்றினைக் கண்டோம்

இலக்கணையைக் கண்ட பிறர் எமனை இன்று பார்த்தோம்; எமன் வாய் மிகச் செம்மையாக உள்ளது; நெற்றியோ மிகப் பளபளப்பானவை; இடுப்போ ஒருபிடியளவுதான்; சொல்லோ எவ்வளவு சுவை; கேட்கக்கேட்கத் தெவிட்டாத தித்திப்பு; என்று அடையாளங் கூறி வியந்தனர் என்கின்ற தேவர்,

"கண்ணினால் இன்று கண்டாம் கூற்றினைக் காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத்து ஒருபிடி நுசுப்பில் தீஞ்சொல்
....
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற்
றம்மா" (2458)

என்று கண்டோர் நிலையிலிருந்து பேசுகின்றார்.

வள்ளுவர், தலைவியொருத்தியை விதிகூட்டக் கண்ட தலைமகன் நிலையில் இருந்து,

"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு" (*க0அந*)

என்று பேசுகின்றார்.

கூற்று உடலிடை துச்சிலிருந்த உயிரைக் கூறுபடுத்துந் தெய்வம், கண்கட்குப் புலப்படாதது. குளிருண்மையால் பனி யுண்மையை அறிதல்போல அதன் செயலால் அதனுண்மையை அறியலாம். இப்போதும், இவளுடைய பெண்மையும், ஒன்றோ டொன்று பொருகின்ற இரு கண்களும் கொலைத் தொழிலைப்

புரிவதால் இத்தொழிலைக் கொண்டு இவளே கூற்று என்பதனை அறிந்தேன் என்கின்றான் தலைவன் என வள்ளுவர் பெண் தகுதியும், கண்களுமே வருத்துவனவாகக் கூறினார்.

தேவர் பெண்தகைகளையும், கண் முதலான உறுப்புக்களையும் விரித்துப் பட்டியல் தந்து இவைகளையுடையதொரு பொருளே காலன். காலனைக் கண்ணுற் கண்டேன் என்கின்றார்.

பெண்தகை பேதை நீர்மை ஒன்றே. உறுப்புக்களோ. காமர் செவ்வாய், ஒண்ணுதல், உருவக்கோலம், ஒருபிடி நுசுப்பு, தீஞ்சொல், வண்ணித்தல் ஆவதில்லா வருமுலை என ஆறு என விதந்தோதினர். ஆகவே, தேவர் பாட்டு இத்திருக்குறளுக்குச் சிறந்ததோர் விளக்கவுரையாகும் எனலாம். பேரமர்க் கண்ணைத் தேவர் விடுத்தனரோ என்று எண்ணுதீர்கள். அவர் மதர்வை நோக்கின் எனக் குறித்தனர்.

தவம் இன்றியமையாதது

கோவிந்தன் வைத்த திரிபன்றிப் பொறியை எய்து வீழ்த்தினன் சீவகன். அந்தப் போட்டியில் கலந்துகொள்ள வந்த மன்னர்கள் அனைவரும் இலக்கணையை யடைய இயலாமற் கவன்று " சீவகன் அவளையடையவென்று மிக்க தவஞ்செய்திருக்கிறான் நாமென்ன செய்யலாம்? என்றனர் என்கின்ற தேவர்,

" அரத்தகம் அருளிச் செய்த சீறடி யளிய தம்மாற்
குரற்சிலம் பொலிப்பச் சென்னிக் குஞ்சிமேன் மிதிப்ப நோற்றான்
திருக்குலாய்க் கிடந்த மார்பின் சீவகன் நாங்க ளெல்லாம்
தரித்திலம் தவத்தை யென்று தார்மன்னர் ஏமுற் றாரே "
(சீவக. 2459)

என்கிறார். மன்னர்களுடைய பொருமற் பேச்சிலும்

" வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும் " (உசரு)

என்ற குறட் கருத்து கலந்து அழகு செய்தல் காண்க.

என்னோற்றான் கொல் ?

ஆட்சியிருக்கையில் அமர்ந்திருக்கின்ற சீவகன், இளமை தொடங்கி இன்று வரை பலவகையாக உதவியவர்கள் அனைவருக்கும் தகுதிக்கேற்ப வரிசைகள் வழங்கினான். கந்துக்

கடனுகிய தன் வளர்ப்புத் தந்தைக்கு, அவர் விரும்பாதிருக்கவும், தானே வலிந்து சிறந்த அரசுரிமைகள் சிலவற்றை அளித்தான். நாட்டை வழங்கினுன். வளர்த்த தாயாகிய சுநந்தைக்குத் தேவி என்ற பட்டத்தையும் அளித்தான் என்ற நிகழ்ச்சியை உணர்த்தும்போது,

" எத்துணைத் தவஞ்செய் தான்கொல் என்றெழுந் துலக மேத்த
வித்திய புகழி ஞற்கு விருந்தர சியற்றி ஞன் " (சீவக. 2567)

என்கின்ருர் தேவர். இப்பகுதி, இத்தகைய இணையிலா வீரமும், அழகும், கல்வியும் ஆட்சித் திறமும் அமைந்த இம்மகனைப் பிள்ளையாகப் பெறக் கந்துக்கடன் எத்துணைத் தவஞ்செய்தானே! என்று சிலிர்த்து எழுந்து உலகம் புகழ்ந்தது என்கின்றது. இது, " இவன் றந்தை, என்னோற்ருன் கொல் " (எ௦) என்ற குறள் தந்த குறிப்பாகும்.

தவம் வாழ்க

இடுகாட்டில் எடுப்பாரில்லாக் குழந்தையாக நள்ளிரவிற் கிடந்தவனை எடுத்துவந்து, எத்தனையோ இடுக்கண்களைத் தாங்கி வளர்த்தத் தாய், தந்தையாகிய கந்துக்கடனுக்கும், சுநந்தைக்கும் பட்டம் பதவி, நாடு பொருள் அனைத்தும் கந்துக்கடன் செய்த உதவிக்கு எம்மாத்திரம். கந்துக்கடனே முன்னேர் உதவியும் செய்யாதிருக்க – இல்லறத்தான் கடமை யாருமிலாதாரைக் காத்தல் என எண்ணிச் செய்தவன். பின்வரும் பயனைக் கைம்மாருகக் கருதாமற் செய்தவன் அவனுதவிக்கு இவை யீடாமோ என்றெல்லாம் எண்ணுகிருர் தேவர். அதன் பயனைச் சீவகன் நிலமளிப்பதைக் கண்ட ஊரவர்கள் உரையாக,

" இந்நகரப் புறங்காட்டில் இவன்பிறந்த வாறும்
தந்நிகரில் வாணிகனில் தான்வளர்ந்த வாறும்
கைந்நிகர்இல் வேந்தர்தொழப் போந்ததுவும் கண்டால்
என்னைதவஞ் செய்யா திகழ்ந்திருப்ப தென்பார்."
(சீவக. 2555)

எனக் கூறுகின்ருர். எங்கேயோ பிறந்தவன் யாராலோ வளர்க்கப்பெற்று இத்தகைய உயர்ந்த நிலையை உற்றிருக்கிருனே அதற்குக் காரணம் என்ன? தவம் அன்ருே! தெரிந்திருந்தும் நாம் ஏன் அத்தவத்லதச் செய்யாமல் அவமே காலம் போக்க

வேண்டும் என எண்ணுகின்றனர் ஊர் மக்கள். இத்தகைய கற்பனைக்கும் காட்சிக்கும் வித்தாயிருந்தது.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்." (உசுரு)

என்ற வள்ளுவமேயாம். இக்கருத்து வரலாற்றோடு இணைகின்ற போது இங்ஙனம் பரந்து படர்ந்து விடுகிறது.

வருகுவதாமே வரும்

யாருக்கு ஆகூழ் உதவியாக இல்லையோ அவருக்குத் திரைகடலோடினாலும் உடல் தேய உழைத்தாலும் பொருள் சேர்க்க இயலாது. அது உதவுமானால் முழத்தூரங்கூட நடக்க வேண்டாம். செல்வம் இருக்கும் இடந் தேடிவரும் ஆகையால் ஆகூழ்விளைய அருந்தவம் இயற்றவேண்டும் என்கின்றதேவர்.

"பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி யுறினும்
திருமுயங்கல் இல்லையெனின் இல்லைபொரு ளீட்டம்
ஒருமுழமும் சேறலில ரேனும்பொரு ளூர்க்கே
வரும்வழிவி னைஉழந்து வாழ்கதவம் மாதோ."
(சீவக. 2556)

என்கின்றார். இது 'ஆக்கம் அதர்வினைய்ச் செல்லும்' (ருகூச) என்ற குறள் தந்த விரிவாகும். இக்குறளின் பிற்பகுதி அசைவிலா ஊக்கம் உடையானுழை என்பது. அசைவிலா ஊக்கம் – தளராத முயற்சி அதை விளக்குகின்றார். தேவர் – ஓ என்று பெருமுழக்கம் செய்யும் அலைகளையுடைய கடலைக் கையால் நீந்தி வருந்தினாலும், வருந்தியதற்காகப் பணம் சேர்ந்துவிடாது. ஆகூழ் வேண்டும் என்கின்றார். இங்ஙனமே அவர் வடிக்கின்ற காப்பியம் எங்கும் வெளிப்படை யாகவும் மறைத்தும் திருக்குறளை வைத்திழைத்துப் பாடம் படிக்கச் சொல்லுகிறார்.

இங்ஙனம் கூறும் தேவர் சிந்தையில், செயற்கரிய – கைம்மாறு வேண்டாத நன்றி செய்த கந்துக்கடனுக்குச் சீவகன் வழங்கிய பட்டமும் பதவியும் நிலமும் நீச்சும் இணையாகா என்ற குறை வெண்ணம் உண்டாயிருக்க வேண்டும். அதனால், சீவகனை எத்துணைத் தவஞ்செய்தான் கொல் என்று உலகம் ஏத்த வித்திய புகழினன் எனச் சிறப்பித்து, அதன் வாயிலாகத் தந்தை இவனைப் பெறுதற்கு எவ்வளவு தவஞ்செய்தானோ என்று உலகம் புகழ்ந்தது

என, மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இதனிற் சிறந்தது இல்லை என்பதைச் சொல்லி மனம் தேறுகின்றார்.

தாய்ச்சொல்

நாட்டுக்கு மன்னனாயினும் தாய்க்குப் பிள்ளைதானே! சீவகன் ஏமாங்கதநாட்டு மன்னனாகப் பார்புகழப் பன்னியர் எண்மரோடு இருந்து இல்லறம் நடத்துகின்றான்; வாழ்வாங்கு வாழ்கின்றான்; வரம்பு கடவாது வாழ்கின்றான். ஆயினும் சச்சந்தன் மகன்தானே! அவருக்கு நான் ஒருத்தி மனைவியாக இருந்தேன். இவனுக்கோ எண்மர்; தந்தையறிவு மகனறிவு என்றாகிவிடக்கூடாதே என்று எண்ணுகிறாள் தாய். அதனால் விரைந்து வந்து மகனைக் காணுகிறாள். சச்சந்தன் தன்னை மணந்து கொண்டது முதல் இடுகாட்டுள் மகனைப் பெற்றவரை உள்ள வரலாறுகளைக் கூறுகிறாள். கூறியவள் மன்னன் உயிரிழந்தது ஊழின் பயனால் என்று முடிக்கின்றவள், அவரைப்போல நீயும் காமத்திற்கு அடிமையாகாதே; காமத்தை வென்ற வீரனாகவும் விளங்கு. நான் துறவுபூணச் செல்கின்றேன் என்றாள். இது கேட்டவுடன் சீவகன் தாயின் பிரிவாற்றாது தளர்ந்து மயங்கி வீழ்கிறான். தாய் தண்ணீர் தந்து எழுப்பி உட்காரவைத்துத் தேறுதல் கூறினாள், மன்னன் சீவகன் ' அடிகளே அடியேற்கு அருளுவதென்ன? என்று வினவுகின்றான். அதற்கு விசயை

"பிறந்துநாம் பெற்ற வாணாள் இத்துணை என்ப தொன்றும்
அறிந்திலம் வாழ்தும் என்னும் அவாவினுள் அழுந்து கின்றாம்
கறந்துகூற் றுண்ணும் ஞான்று கண்புதைத் திரங்கின் அல்லால்
இறந்தநாள் யாவர் மீட்பார் இற்றெனப் பெயர்க்க லாமோ."
(*சீவக.* 2616)

என்றும்

"அமைத்தநா ளென்னும் நாகம் விழுங்கப்பட்டது"
(*சீவக.* 2617)

என்றும் கூறுகின்றாள். இதில், நாம் ஏதோ பிறந்துவிட்டோம் வாழப் போகிறநாள் இவ்வளவு என்று நமக்குத் தெரியுமா? வாழ்கிறோம்; இனியும் வாழ்வோம் என்ற ஆசையில் அமிழ்ந்திக் கிடக்கின்றோம். கூற்றுவன் உயிரைப் பிரித்துக் கொண்டு போங்காலத்துக் கண்ணைமூடிக்கொண்டழுவோமே யன்றிக் கழிந்த காலத்தை மீட்க நம்மால் இயலுமா? நமக்கென்று

வரையறுக்கப்பெற்ற ஆயுட்காலமாகிய நாகம் சிறிது சிறிதாக விழுங்கப்பட்டு வருகிறோம். என்று உரைக்கின்றாள். இக் கருத்துக்கள்

"நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்." (௩௩௪)

என்ற குறளின் வடித்தெடுத்த கருத்துக்களே. இவை விசயை வாய்ச் சொல்லாக யாக்கை நிலையாமையை யறிவிக்கத் தேவர் வாயிலாக வருகின்றன.

நன்றே செய்க ; இன்றே செய்க

வாழ்நாளின் எல்லை யறியமாட்டாமையானும், எப்போது இவ்வுயிர் இவ்வுடலை விட்டு நீங்கும் என்றறிய மாட்டாமையானும் அறத்தை உடனே செய்யவேண்டும். அறப்பயன் ஒன்றுதான் மரணத்தின் பின் மனிதர் செல்லும் ஊருக்கு ஏற்ற ஆற்றுணை வாகும் என்பதை அறிவிப்பது

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை." (௩௬)

என்ற வள்ளுவம். இதுவே விசயை வாய்ச் சொல்லாகக்

"கருந்தலைகள் வெண்டலைக ளாய்க்கழியு முன்னே
அருந்தவமும் தானமும் ஆற்றுமினே கண்டீர்."
(சீவக. 2619)

"குடித்துண்ணுங் கூற்றங் குடில்பிரியா முன்னே
கொடுத்துண்மின் கண்டீர் குணம்புரிமின் கண்டீர்."
(சீவக. 2620)

" . . . .பண்டி யச்சிரு முன்னே
கொழுஞ்சீலங் கூலியாக் கொண்டூர்மின் கண்டீர்."
(சீவக. 2621)

என்பவை தேவர் வழியாக வருகின்றன. இவற்றுள் கருந்தலைகள் வெண்டலைகளாவதற்குமுன்னே' அறஞ் செய்யுங்கள் என்பது 'அன்றறிவாம் என்னாது' (௩௬) என்பதன் விளக்கம்! 'கூற்றங் குடில் பிரியாமுன்' என்பது (சீவக. 2620) 'பொன்றுங்கால்' (௩௬) என்பதன் விளக்கம். இங்ஙனம விசயையின் ஒவ்வொரு சொல்லினும் குறள் மணமே கமழ்கிறது.

வாழ்வியல் நாடகத்தில் ஒரு காட்சி

சீவகன் இலக்கணையினழகில் ஈடுபட்டு வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். இமையாமல் உற்றுப் பார்ப்பதால் அவன் கண்களினின்று நீர் பெருகியது. அதனைக் கண்ட இலக்கணை,

"பேதைமை பிறரை உள்ளிமுயல்பவர்ச் சேர்தல் என்றாள்
வேதனை பெருகி வேற்கண் தீயுமிழ்ந் திட்ட அன்றே"
(*சீவக.* 2506)

என்று வரலாற்றை வகுக்கின்றார் தேவர்.

வள்ளுவரும் யாரோ ஒரு தலைவன் தலைவியரை மேடைக்குக் கொண்டு வருகிறார். அவருள், தலைவன் அவளையே எண்ணி இருந்து நோக்குகிறான். தலைவிக்கோ வந்தது சினம்; யாரென்று எண்ணிக் கொண்டு என்னைப் பார்க்கின்றீர் என்கின்றாள். இச் செய்தியைப் புலவி நுணுக்கத்தில்

"நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று" (கந௨௦)

என்ற குறள் தெரிவிக்கிறது. வள்ளுவம் தலைவனைக் கேட்ட அளவில் நிறுத்தியது. சிந்தாமணியோ இவ்வள்ளுவத்திற்கு ஓர் விளக்கந்தருகிறது.

தலைவன் தலைவியின் ஒவ்வொருறுப்பாக அவற்றோடொத்த பொருள்களை எண்ணி அவற்றிற்கும் இவளுறுப்புகட்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எண்ணி அழகனைத்தும் ஒரு சேர அமையப் பெற்றதொரு பொருள் இவள் போல்வதெங்குமில்லை என்று அவளையே இருந்து நோக்குகிறான். ஒரு பொருளைக் கண் கொட்டாது நோக்கின், கண் உறுத்தலுண்டாகிக் கண்ணீர் கசியும். அதனை அவள் 'யாரை மனத்திலே எண்ணிக் கொண்டு என் உறுப்புக்களை நோக்குகின்றீர்; ஒவ்வாமையாற் கண்ணீருகுக்கின்றீர்; என்று புலந்தாள் என்கின்றது. இதன் கருத்தோட்டம், தலைவன் தன்னையே நோக்கும்போது மனம் ஓரிடத்தும் கண்ணோரிடத்துமாகக் காண்கின்றான். கண் செல்கின்ற வழியே மனம் செல்லக் காண்கின்றானா எனத் தலைவியால் அறிய இயலாது. ஆகவே அவள் அவனுடைய கண்ணீரைக்கொண்டு புலந்தாள். இங்ஙனம் சிந்தை ஒன்றும்

செயல் ஒன்றுமாக வேறுபிட்டாரைச் சேர்தல் பேதைமை எனவும் தன்னை நொந்து கொள்கின்றாள் என விதந்தது.

'பேதைமை என்பது அறிவின்மை' என்பர் பேராசிரியர். ஒன்றும் அறியா திருத்தல் என்பர் பரிமேலழகர். இலக்கணையோ அரசர் வீட்டுப்பெண். அறிய வேண்டுவ அனைத்தும் அறிந்தவள். பிறபெண்களை எண்ணாத காதலனையே மணக்க வேண்டும் என அறிந்தவள். அங்ஙனம் அறிந்திருந்தும் இங்ஙனம் பிறரையுள்ளி யழுபவரைச் சேர்தல் பேதைமை என நொந்து கொள்கின்றாள். ஆகவே பேதைமையில் முழுதும் அறியாமை என ஒன்றும், அறிவினால் ஆராய்ந்தபின் அறியாமையென 'அறியப்படுவ தொன்றும் என இரண்டுண்டாதல் தெளிவு.

"பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்" என்ற ஔவையார் வாக்கை ஊன்றி நோக்கின் பெண்களால் விரும்பி மேற்கொள்ளப்பெறும் அணிவகைகளுள் ஒன்றாகப் பேதைமை கருதப் பெறுகின்றது.

அணிகள் இயல்பாகவுள்ள அழகை மிகுவிப்பதற்கும், அழகு செய்வதற்குமாகப் புனையப்படுவன. அவைகளை யணிந்து கணவன் மனத்தைக் கவர்ந்தபின், நுகர்ச்சிக்காலத்து இடையூறு என நீக்குதலும் உண்டு. அதுபோல எல்லாவற்றையும் நுணுக்க மாகவும் பெருக்கமாகவும் அறிந்திருந்தும், தலைவனுடைய தலைமையைச் சிறப்பிக்குமிடத்துத் தான் அறியாள் போலப் பேதைமை யணியைப் பூண்டும், அவனைத் திருத்தி யறவழியிற் செலுத்த வேண்டியபோது தனிமையில் பேதைமையை யணியாகப் பூண்டு அவனைத் தன்வயப்படுத்தியும் நடக்கவேண்டும் என்ற நோக்கோடு கூறப்பெற்ற தெனல் தெளிவு.

ஆகவே தன் காதலனிடம் கூடலின்பத்தைப் பெரிதும் விழைகின்ற இலக்கணை, இவன் பிறரையுள்ளி யழுதான் என ஊடி, அவனைக் கூடுதல் பேதைமை யென்கின்றாள் இது கூடலின்பம் மிகுதற்காகக் கொண்ட அணியேயாம். இத்தகைய் சிறப்புக்களை விரித்து, வள்ளுவர் 'காயும்' எனக் கூறியதற்குப் புது விளக்கம் காணுகின்றார் தேவர். இது நிற்க,

இனி இலக்கணையைப் பார்ப்போம். இலக்கணையோ சொந்த மாமன் மகள். மணத்தற்குரிய முறைப்பெண். அங்ஙன

மிருந்தும் சீவகன் பிற பெண்களை எண்ணித் தன்னை நோக்குதலை அவள் பொறாது ஊடினாள். அதனைப் பொறாத சீவகன் நிலையை

> " இற்றதுஎன் னுவிஎன்று எரிமணி யிமைக்கும் பஞ்சிச்
> சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்பச் சேந்து
> பொற்றதா மரையிற் போந்து கருமுத்தம் பொழிப வேபோல்
> உற்றுமை கலந்து கண்கள் வெம்பனி உகுத்த வன்றே"
>
> (சீவக. 2508)

என்கின்றார் தேவர்.

சீவகன் உள்ளவாறே இவள் ஊடலைத் தணிக்க எண்ணி, இலக்கணையின் கால்களில் வீழ்ந்து பணிந்தான். அவள் நினைக்கிறாள்; இப்படித்தானே இவன் ஊடியமகளிர் எல்லாருடைய கால்களிலும் பணிவான் என்று, உடனே அவள் கண்களில் நீர் பெருகிற்று என்பது இப்பாடற்கருத்து. இது

> " தன்னை யுணர்த்தினும் காயும் பிறர்க்கும் நீர்
> இந்நீரர் ஆகுதிர் என்று." (கஉகசு)

என்ற வள்ளுவம் தந்த வாழ்வியல் நுணுக்கமன்றோ!

பெருக்கமும் – சுருக்கமும்

சீவகன் இலக்கணையைத் திருமணங் கொள்ளப் பவனி வருகின்றான். அப்போது பேதை பெதும்பை முதலிய பருவ வேறுபாடுடைய மகளிர் பலரும் தெருவிற் கூடி நின்று காண்கின்றார்கள். அவர்களுள் பருவம் அடைந்த மடந்தையர் சிலர் காணுகின்ற நிலையைத் தேவர்,

> "பெரும்பொருள் நீதிச் செங்கோல் பெருமகன் ஆக்கம்போலப்
> பரந்திட மின்றி மேலாற் படாமுலை குவிந்த; கீழால்
> அரும்பொருள் நீதி கேளா அரசனிற் சுருங்கி நந்தும்
> மருங்குநொந் தொழிய வீதி மடந்தையர் இடங்கொண் டாரே".
>
> (சீவக. 2584)

என்கின்றார். இதில் சிறிதும் நீதி பிறழாத செங்கோல் மன்னன் செல்வம் இடமின்றிப் பெருகும். நீதியைச் சொல்லியுங் கேளாத கொடுங்கோலரசன் செல்வம் தேயும் என்ற நீதி எடுத்தாளப் பெற்றுள்ளது.

இது, செங்கோன்மை என்ற அதிகாரத்தில் உள்ள,

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு" (ருசரு)

என்றதன் சுருக்கம் எனலாம். இயல்புளிக்கோலோச்சுதலாவது நூலோர் தம்மறிவானும் நூனெறியானும் அளந்து ஆய்ந்து சொல்கின்ற அறவழியே அரசு செலுத்துதல். அங்ஙனம் ஆளும் அரசனுடைய நாட்டில் மழையும் விளைவும் பெருகும். பெருகவே செல்வம் பலவகையாலும் எல்லையின்றிப் பெருகும் எனப் பொருள்தந்து நீதிச் செங்கோல் பெருமகன் ஆக்கம்போல என்பதனோடு இணைந்த கருத்தாகிறது.

நீதிகேளா அரசன் செல்வம் தேயும் என்ற இப் பாடலின் மூன்றும் அடியின் கருத்து,

"கூழுங்குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு" (ருருச)

என்ற குறளின் பயனும்.

செல்வர்க்கே செய்வர் சிறப்பு

தெருவில் கூட்டமிகுதியால் சீவகன் அழகை முழுதும் காணமாட்டாமையாலும், பலர் முன்னே காண நாணியும் சில மகளிர் மேன்மாடத்தை அடைந்தார்கள். அவர்களோ நகில்களுக்கும் அல்குலுக்குமே அணிகலங்கள் பலவற்றை யணிந்திருந்தனர். இடைக்கோ ஒன்றையும் அணிந்தார்கள் அல்லர். இந்நிகழ்ச்சி தேவருள்ளத்தில் சிறந்ததொரு கற்பனையாக மலர்கிறது.

"செல்வர்க்கே சிறப்புச் செய்யுந் திருந்துநீர் மாந்தர் போல
அல்குற்கும் முலைக்கும் ஈந்தார் அணிகலம் ஆய வெல்லாம்
நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றம் என்றுநுண் நுசுப்பு நைய
ஒல்கிப்போய் மாடஞ் சேர்ந்தார் ஒருதடங் குடங்கைக்கண்ணார்".
(சீவக. 2535)

என்பது அக் கற்பனை.

இதில் வள்ளுவர் முன்னிரண்டடிகளிலும்,

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு" (எருஉ)

என்னும் திருக்குறள் கருத்து, வரலாற்று ஓட்டத்திலே வைத்து இழைக்கப்பெற்று ஒளி செய்கின்றது. பின்னிரண்டடிகளிலும்

"அறன்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன்போல நோக்கப் படும்" (க0சஎ)

என்ற குறட் கருத்து இடம்பெற்றுள்ளது. தாயே இல்லானை ஏதிலான்போல நோக்குவாளாயின் அவனுக்கு வேறு யார் சுற்றமாவர்? என்பதனைக் கருதிய தேவர் நல்கூர்ந்தார்க்கு இல்லை சுற்றம் எனக் கூறினர்.

பிறன்மனை நயத்தல்

ஒருநாள், சீவகன் தன் மனைவிமார் எண்மரோடும் சோலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கச் சென்றான். அங்கேயுள்ள அருகன் கோயிலை யடைந்தான். வணங்கினன்; வலம் வந்தான்; அப்போது அங்குள்ள ஒரு பளிக்குப் பாறையின்மேல் சாரணர் இருவர் இருந்தனர். அவர்களைக் கண்டான். வணங்கி வாழ்த்தினன். 'அடிகளே! அடியேன் பல பிறவிகளிலும் பிறந்திறந்து ஈட்டிய பாவங்கள் அனைத்தும் அகல அறமுரைத்தருள வேண்டும்' என வேண்டிக் கொண்டான். அவர்கள் நாற்கதித் துன்பங்களையும் முறையே நவின்றனர். அவற்றுள், நரகதித் துன்பங்களுள் ஒன்றாக,

"காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி
ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்த பாவத்து
ஊதுலை உருக வெந்த ஒள்ளழற் செப்புப்பாவை
ஆ! தகாது என்னப் புல்லி யலறுமால் யானை வேந்தே."
(சீவக. 2769)

என்பது. இப்பாடலில் வரும் 'எளிதென இறந்த பாவத்து' என்ற தொடரைக் கேட்டவுடனேயே நம்முள்ளத்து,

"எளிதென இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (கசரு)

என்றகுறள் தானே எழும். இக்குறளில் வள்ளுவர், 'இவளை யடைவது மிக எளிது என்று, பிறன்மனையாளுடைய காலம், இடம், பொருள்நிலை இவற்றை எண்ணி, அவற்றையே துணையாக் கொண்டு எல்லைகடந்து அவளை எய்துபவன் என்றும் அழியாப் பழியை இம்மையிலே எய்துவன் அது இவன் உள்ளவரை நின்று இவன் இறந்தபிறகும் அழியாமல் நிலைபெறும் என்று மட்டும் கூறுகிறார்.

தேவர் இவன் பிறன்மனை நயக்கின்ற காலத்து, அவன் வீட்டில் அவன் இல்லாள் இருக்கின்ற மன நிலையைக் காட்டுகின்ருர் முதலில்; அடுத்து இவனுடைய காமத்தின் பரபரப்பை யுணர்த்துகிருர்; அடுத்து மாதர்கள் தமக்குத் தீமை நிகழ்வதாயின் தன்னை நம்பினவர்களையும் காட்டிக் கொடுத்துத் தாம் நல்லவ ராவார்கள் என்ற இயல்பைக் காட்டுகிருர்; மறுமையிலே அடைகின்ற நரகத்துன்பத்தைக் காட்டி அமைகின்ருர். வள்ளுவர் இம்மைப் பயனுகப் பழி எய்துதல் கூறினமையின் அதனை விடுத்து மறுமைப்பயன் ஒன்றைமட்டும் உணர்த்திக் குறளையும் தன் பாடலோடு இணைத்து எண்ணி நிரம்புக என்கிருர்.

மேலும், சீவகற்கு சீலங்களை யுணர்த்துகின்ற மூதத சாரணர்,

"பெரியவாட் டடங்கண் செவ்வாய்ப் பிறர்மனை பிழைக்கு மாந்தர்
மரீஇயவாய்ப் புறஞ்சொற் கூர்முள் மத்திகைப் புடையும் அன்றி
ஒருவர்வா யுமிழப் பட்ட தம்பலம் ஒருவர் வாய்க்கொண்டு
அரியவை செய்ப வையத் தாண்பிறந் தார்க ளன்றே."

(சீவக, 2821)

என்ற செய்யுளிலும் பிறர்மனை விழைதலின் பொல்லாங்கைப் புகலுகின்ருர். தேவர், பிறன் மனை நயத்தலான் வரும்பழிக்குத் தரும் விளக்கம் கேட்பார்க்கே பேரச்சம் விளைவிப்பது. பிறன் மனை நயப்பானை முன் போகவிட்டு, அவன்பின்னே அவன் செவியிற் படும்படி, ஊரவர்கள் பழித்துரைப் பார்களாம், அச் சொல் ஒவ்வொன்றும் கூரிய முள்ளும் குதிரைச் சம்மட்டியடியும் ஒரு சேர விழுந்தது போல இருக்குமாம். இங்ஙனம் மெய் வழியாக மனநோயை விளைக்கும் காமம் என்கின்ருர்.

அடுத்து இழிவு கூறுகின்ருர்; மனிதன் மனத்தொடு பொருந்திச் செய்ய முடியாத செயல் ஒருவன் வாயெச்சிலை ஒருவன் வாயேற்பது. அவள் மற்றவன் எச்சில் அவ்ளைக் கூடிக் களித்தல் அவன் எச்சிலை இவன் ஏற்றது போலாம் ஆகவே இழிவும் பழியும் விளையும் என அறிவித்ததாம்.

மேலும் பழித்தன ஒழித்தலே சீலம் என்கிருர். அது "உலகம் பழித்த தொழித்து விடின்" (உ௮௦) என்றதன் ஆட்சியாம்,

'வ்வயத்து ஆண்பிறந்தார்களன்றே எனப் பிறன்மனை நயப்பவன் ஆண்மகனுமல்லன்' என்று தேவர் கூறுங்கருத்து: 324 "பிறர் மனை நோக்காத பேராண்மை" (கசஅ) என்பதன் எதிரொலியாகும்.

பாரம் இழுக்கும் எருது

இங்ஙனம் நரகதித் துன்பங்கள் பலவற்றைக் கூறி விலங்கு கதித் துன்பங்களையும் விதக்கின்றனர் சாரணர், அவற்றுள் ஒன்று

"நிரம்பாத நீர்யாற் றிடுமணலுள் ஆழ்ந்து
பெரும்பார ஆடவர்போற் பெய்பண்டந் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து வாங்கி
உரங்கெட் டுறுப்பழுகிப் புல்லுண்ணு பொன்றும்"
(சீவக. 2784)

என்பது. இப்பாட்டின் மூன்றுமடிக்குக் கருத்தொளியாய்த் தேவர் உள்ளத்தில் திகழ்வது

"மடுத்தவாயெல்லாம் பகடன்னுன்" [சுஉச]

என வள்ளுவர் காட்டிய உவமையும்;

"பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமிர, கல்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ"
(புற. 90)

என்ற புறப்பாட்டின் மறுதலை விளக்கமுமே எனலாம்.

பெரியோரை இகழ்தல்

மக்கட்கதியின் இன்னலையியம்பும் சாரணர், மக்களாய்ப் பிறந்தும் பெரிய முனிவர்களை இகழ்பவர்கள் விலங்காவர்' என்னுங் கருத்தமைய

"மல்லல் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரே யன்றிப் பகுத்துணுப் பாவிகளும்
....
வில்பொருதோண் மன்னு விலங்காய்ப் பிறப்பவே"
[சீவக. 2789]

என்கின்றார்.

இதில், 'மல்லன் மலையனைய மாதவரை வைதுரைப் போர் விலங்காவர்' என்பது

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து" [அகூஅ]

என்ற குறளின் முத்திரையைப் பெற்றே விளங்குவதெனலாம். இக்குறட்கு உரைகண்ட ஆசிரியர்கள் அனைவரும், குன்று, வெயிலும் மழையுமாகிய மாறுபட்ட நிலைகளைப் பொறுத்தலும் சலியாமையும் உடைத்தாதல் போல முனிவர்கள் நன்மையும் தீமையுமாகிய மாறுபட்ட நிகழ்ச்சிகளால் மனங்கலங்காமையோடு, மண்கம்பமாயினும் விண்ணதிரினும் தங்கொள்கையிற் சிறிதும் சலியாமையையும் உடையவர்கள் என நயமும் கண்டனர். தேவரோ அத்தனை குணங்களோடு மலைக்கு வளமுடைமை யியற்கையாதலை மறக்க இயலாதவராக 'மல்லன் மலையனைய மாதவர்' என்கின்றார். இதனால் முனிவர்கள், அறிவுப்பஞ்சம் ஆலோசனைப்பஞ்சம், துணைப் பஞ்சம் ஏற்பட்டகாலத்து அவற்றின் வளம் பெருக்கி நாட்டுக்குத் துணை செய்வார்கள் என்ற நயமும் தோன்றக் கூறினார்.

வள்ளுவர் பெரியாரைப் பிழைப்பார் 'நிலத்து மாய்வர்' என்றார். தேவர் மறுபிறப்பெடுத்தாலும் மக்களாய்ப் பிறவார் விலங்காவார் என்கின்றார்.

கொல்பவர் கொல்லப்படுவர்

இதுவும் சாரணர் கூறும் அறவுரையே பிறவுயிர்களைக் கொன்று உண்பவர்கள் தங்கள் வாழ்நாளைத் தாங்களே குறைத்துக் கொண்டவர்கள் ஆவார்கள் என்ற கருத்தமைய,

"வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினை செய்யாடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோல்
கோளிமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்தும் இன்னணமே
நாளுலப்பித் திட்டார் நமரலா தாரெல்லாம்."

(சீவக. 2787)

என்றனர். பலவகையான யாகங்களைச் செய்பவர்களும், போரிடு பவர்களும், வலைவிரித்து உயிர்களைக் கொன்றுண்பவர்களும். ஆனால், உண்மையில் தங்கள் வாழ்நாளைத் தாங்களே குறைத்துக் கொள்கின்றார்கள் என்கின்றார் சாரணர். இது

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று" (கூ௨௬)

என்ற திருக்குறளின் கருத்தோட்டமே எனலாம்.

"கடலன்ன துன்பம்"

இதுவும் பளிக்குத் தலத்தில் உள்ள சாரணர் கூற்றுக்களில் ஒன்றுதான்.

"சோலை மயிலன்னார் தோள்சேர் விலராயின்
வேலைக் கடலேபோல் துன்பம் விளையுமே."
(சீவக. 2796)

உலகியலிலே உழலும் மக்களுக்கு, மாதர்தோள் சேராமையால் விளையுந்துன்பம் கடலே போன்றது என்பது விளக்கப் பெறுகின்றது. இது 'காமக் கடும்புனல்' 'கடலன்ன காம முழந்தும்' (ககஙஎ) என்ற குறளை ஒட்டி வளர்ந்த கருத்தே.

வள்ளுவர் பொதுமையும் தேவர் தனிமையும்

சாரணர் தானச் சிறப்பையும் அதன் வகைகளையும் இலக்கணத்தையும் விரித்துக் கூறுகின்றார். அதில் தலையாய தானத்தைப் பற்றி

"நன்னிலத் திட்ட வித்தின் நயம்வர விளைந்து செல்வம்
பின்னிலம் பெருக ஈனும் பெறலருங் கொடை"
(சீவக, 2828)

என விதக்கின்றார். நல்ல நிலத்தில் இடப்பெற்ற விதை 'தொடுப்பின் ஆயிரமாக விளைவதுபோல நற்றவத்தோர்க்குக் கொடுத்த கொடை இம்மையிற் செல்வப் பெருக்கத்தையும், மறுமையில் வீட்டுலகத்தையும் நல்கும் என்பது இதன் கருத்து.

இது,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (௨௨௬)

என்பதன் விளைவாகும். ஈகையிலே இன்றியமையாத தேவைக்கு ஈதலும், வழிவழியாகப் பயன்பட ஈதலும் என இருவகையுண்டு. அவற்றுள் இன்றியமையாத் தேவை பசியுந்தாகமும். அவை

நற்றவமுண்டையார்க்கும், தவமுண்டையார்க்கும், அவமுண்டையார்க்கும் ஒன்று போலத்தான் ஒறுக்கும். அதிலே வேறுபாடு வேண்டாம் என்ற பொதுமையுணர்ச்சியோடு 'அற்றார் அழிபசி தீர்த்தல் வேண்டும் என்றார். தேவர் பின்னதைக் கூறினார் ஆதலின் தரம் பார்த்துத் தவம் பார்த்து ஈக என்கிறார்.

முத்தியிலம்பகத்தில் தானம் ஏற்கவரும் தவத்தோரியல்பு கூறுகின்றார் சாரணர். ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி; சிவபுற்கலம் முதலான ஐந்தினையும் ஆராயும் மன விளக்கை மங்காமற் போற்றுபவரே தவஞ்செய்வார்' என்கின்றவர்.

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி"

(சீவக. 2824)

என்கின்றார். இது,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (கஉசா)

என்பதனை நினைவூட்டுமாயினும் இரண்டிற்கும் வேறுபாடு பெரிதும் உள்ளதெனலாம்.

தேவர் பொறிகளை வாட்ட வேண்டுகின்றார். வள்ளுவர் அடக்கவேண்டும் என்கின்றார். வாட்டுதல் என்பது மீட்டும் செயற்படாது கெடுத்தல். அடக்குதல் பொறிகளை மனத்தின் வழிபோக விடாது தன் விருப்பப்படி அடக்கியாளுதல். பொறிகள் நுகர்ச்சிக் கருவிகள் வாட்டினால் கேளாச்செவி, காணாக்கண், முகராமூக்காகி விடும். என்றும் பயன்படா. இறையின்பத்தை நுகருங்கால் பொறிகள் இறையுணர்வே மிக்கனவாய் அதாவது பதிகரணங் களாய்ப் பதியை நுகர்தல் வேண்டும். கெட்டன எப்படி நுகர இயலும். அதனாலே வள்ளுவர் 'அடக்கி' என்றார். அடக்கி ஒருமையுள் செலுத்த வேண்டும் என்கிறார். ஒருமை சிந்தனைக் குரியதான ஒன்றான இரண்டற்ற பொருள். அதனுள் அடக்க வேண்டும் என்றார். தேவர் இவர் கருத்துக்கு மாறாக "வாட்டி" ஆமையின் அடங்கி என்றார். வள்ளுவர் கூறுவது பொறிகளைத் தன்வழி இயங்கவிடாது தலைவன் வழிச் செலுத்துதலாகவும், தேவர் கூறுவது பொறிகளைக் கெடுத்து மனம் செயலற்றதாக்க லாகவும் பொருள்படுதலைக் காணலாம். ஆகவே கருத்து ஒன்று போல்வதாயினும் நெறி வேறாதலைக் காண்போம்.

வீடுபேறு

வீடுபேறு சிவகதி என்ற பெயரான் சமண நூல்களில் வழங்கப்பெறும். இந்நூலிலும்

> " நின்ற பற்றுர்வம் நீங்கி நிருமலன் பாதஞ் சேரின்,
> அன்புவிற்றுண்டு போகிச் சிவகதி அடையலாமே"

என வருதல் காண்க வீடுபேற்றிற்கு வாயில் ஞானம். ஞானமாவது 'உள்பொருளிதுவென உணர்தல் ஞானமாம். என்பதால் அறியப்படும். உள்பொருள் என்றும் அழியாத பொருள். உண்மைப் பொருள் இதனை வள்ளுவர் மெய்ப்பொருள் என்பர். ஆகவே இச் சிந்தாமணிச் செய்யுள்

> " எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு" (௩௫௫)

> " எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு" [௪௨௭]

என்ற குறட்பாக்களின் கருத்தை யுளங்கொண்டு உரைக்கப்பட்ட தெனல் தெளிவு.

பழவினைப் பயன்

சீவகன் முற்பிறப்பில் அசோதரன் என்னும் பெயருடைய அரசகுமாரன். அவன் தந்தை பவணமாதேவன். சீவகன் முற்பிறவியின் அன்னப்பார்ப்பை அதன் தாயினின்று பிரித்தான். அப் பாவத்தால் இப் பிறவியில் குழவிப் பருவத்திலேயே தாயைப் பிரிந்து வருந்தினுன் என்ற முற்பிறவி வரலாற்றைக் கூறும் சாரணர்.

> " மெய்யுரை விளங்குமணி மேலுலக கோபுரங்கள்
> ஐயமிலெ நின்ற புகழ்வையகத்து மன்னும்" [சீவக 2869]

என்கின்றனர்: மெய்யே பேசினுல் இவ்வுலகத்து நிலைநின்ற புகழ் மன்னும், மறுமையில் மேலுலகத்தே மணிக்கோபுரங்களை யுடைய கோயில் மன்னும் என்பது இதன் கருத்து. இது

> " பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
> எல்லா அறமுந் தரும்" [௨௯௬]

என்ற குறளின் வரலாற்ருேடு படுத்த விளக்கமாகிறது. அறந்தரும் எனவே அறப்பயனுல் மேலுலகத்தை வழங்கும் என்பது தாமே போதருமாதலின், மேலுலகு ஐயமில்லை என்றனர்.

மேலும் முற்பிறவியில் அசோதரனை நோக்கிப் பவணமா தேவன் கூறுவதாகச் சாரணர் சீவகனை நோக்கிக் கூறுகிருர்.

" முளரிமுக நாகமுளை எயிறுழுது கீற
அளவிறுயர் செய்வர்இவண் மன்னர்அத ஞலும்
விளைவரிய மாதுயரம் வீழ்கதியுள் உய்க்கும்
களவுகட ளுகக் கடிந்திடுதல் சூதே " [சீவக 2870]

என. இதன் கருத்து. களவு செயின், இவ்வுலகிலேயே மன்னர் யானைக் கொம்பாற் குத்திக் கொல்வர். மறுமையிலே அரிய நரகங்களில் துன்பம் நுகரநேரும். ஆதலால் விரைவிற் களவைக்கடிக என்பதாம் இது,

"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு" (உ௯0)

என்ற குறட்பாவின் நிழல் விளங்க, யாக்கபட்டது. வள்ளுவர் கருத்து உயிர் நிற்க இடமாவது உடம்பு; திருடினுல் உயிர்நிலையும் கெடும். திருடாதவர்களைத் தேவருலகம் மறுமையில் புறக் கணிக்காமல் வரவேற்கும் என்பதாம். தேவர், திருடியவனை அரசன் யானைகளாற் குத்தச் செய்து கொல்வான் என்று அரசன் தண்டனை கொடுக்கும் வகையைக் கூறி விளக்கினுர். அரசன் கொன்ருெறுக்கும் வகை பலவாயினும் யானைக் கொம்பினைக் கொண்டு குத்தச் செய்வது உயிர் தானே பிரியாமல் நெடுநேரம் ஊசலாடித் துடிதுடித்துப் பிரிவதால் இனிக் களவாடுபவர்கள் கொடுமையைச் செய்யின் இங்ஙனம் வருந்த நேருமே என்று உணர்ந்து திருந்தலாம் என்பதை எண்ணியே வள்ளுவர் 'கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை' என வாளா கூறியதை இங்ஙனம் விளக்கினுர் தேவர். இச் சிந்தாமணிப் பாடற்கு உரைகண்ட நச்சினுர்க்கினியரும், வள்ளுவர் கருத்தை மனக் கொண்டு, 'துயர்செய்வர் என்பதற்கு கொல்வர் என்றே பொருள் கண்டு வள்ளுவரையும் தேவரையும் இணைத்து வைக்கின்ருர்.

அறவழியீட்டிய பொருள்

மேலும் சாரணர் சீவகனை நோக்கி, சீவக அறவழி யீட்டிய பொருளே புகழுக்கு வித்தாவது; மேலுலகத்திற்கு ஏணியாவது; என்கின்றவர்

"தெருளின்பொருள் வானுலகம் ஏறுதற்குச் செம்பொன்
இருளில்படிக் கால்புகழ்வித்து இல்லையெனில் எல்லா
அருளுநக – வையநக – ஐம்பொறியும் நைய
பொருளுநக ஈட்டும்பொருள் யாதும்பொரு ளன்றே"
(*சீவக.* 2872)

என அறவழி ஈட்டிய பொருளின் பெருமையையும், பயனையும் விளக்குகின்றார்.

இதற்கு வித்தளித்தது,

"அறம் ஈனும்; இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (*எருச*)

என்ற குறளே. தேவர், இக்குறட் கருத்தை உளங்கொண்டு கேட்பார் சிந்தையில் நன்கு பதிய எதிர்மறை முகத்தான் இயம்பும் அழகு எண்ணி எண்ணி இன்புறுத்தற் குரியது.

ஒருவன் உலோபியாய்ப் பொருளை ஈட்டுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனைப் பார்த்து அருள் சிரிக்கிறதாம். பாவி! பலர் வாடி வதங்க இரக்கமின்றிக் கொடாது பொருளைப் பாழ்படுத்துகிறாயே என்று அருள் எள்ளுகிறதாம். ஏன்? உலகமே எள்ளி நகையாடுகிறதாம்.

இவன் ஒரு மனிதனா! தம்முடம்பு வளரத் தானாவது வயிறார உண்டானா? உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும் பொருளைச் சேர்க்கிறானே என்று அவனுடைய கண், காது, மூக்கு, நாக்கு, உடம்பே எள்ளுகின்றனவாம்.

சேர்த்த பணமும் சிரிக்கிறதாம்; 'செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் என்னே தப்புந பலவே' இவன் இப்படி இவறிச் சேர்ப்பதால் நாம் இவனிடம் என்றும் இருக்கப் போகிறோமா என்று பணமும் எள்ளுகின்றதாம்.

ஆகவே இங்ஙனம் எல்லோரும் எள்ளப் பணம் சேர்ப்பது அழகன்று. அறவழி ஈட்டிய பொருளே பொருள். புகழுக்கு வித்து. புண்ணிய உலகிற்கு ஏறும் ஏணி என விளக்கந் தருகின்றார்.

ஊன்றுகின்ற காலத்துச் சிறிதாய் பருத்து முளைத்து விரிந்து பரந்து பயனளிக்கின்ற விதைபோல அறவழி ஈட்டிய பொருளும் பிறர்க்கு இடுகின்ற காலத்துத் தனக்கே அறியப் பெறுவதாய், பின்னர், சிலரறியப் பரவி, பிற்காலத்து எச்சமாய்ப் பலரறியப் பலகாலம் பயன் தருதலின் புகழுக்குவித்தாம் என்ற தேவர் சிந்தனை கற்போர்க்குப் பெரிதும் இன்பூட்டுவது.

வினைப்பயன் வீணாகாது

சீவகனுக்கு அறமுரைக்கின்ற சாரணர்களின் ஒருவர் இரத்தின பிரபை என்பவர். அவர் சீவகனிடம் வினைப்பயன் வீயாது பின்சென்றடும் என்பதை,

> **"அல்லித்தா ளற்றபோதும் அருதநூ லதனைப் போலத்**
> **தொல்லைத்தம் உடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்துநீங்காப்**
> **புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்று**
> **எல்லையில் துன்ப வெந்தீச் சுட்டெரித திடுங்கள் அன்றே."**
>
> (*சீவக.* 2876)

என்று உணர்த்துகிறார்.

வள்ளுவர்,

> **"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
> **வீயா(து) அடியுறைந் தற்று."** (உ௦அ)

என்றார். இருதேவர் கருத்தும் வினைவீயாது சென்றடும் என்பதில் ஒப்பு. ஆயினும், உவமை கூறுமுகத்தான் விளக்கம் வேறுபடுகின்றது எனலாம்.

நம் நிழல் காலை, மாலை வேளைகளில் நம்மிலிருந்து எவ்வளவு தூரம் நீண்டாலும் உச்சிப்போதில் நம் அடியின் அளவாக ஒடுங்கும். அதுபோல நம்வினை பயனூட்ட வருங்காலத்து நம்மை விட்டகலாது நம்மையே சாரும் என்கின்றது வள்ளுவம்.

அல்லித்தண்டு அறுபட்டாலும் அதனுள் நூல் அறுபடுவதில்லை. அதுபோல வினைகள் செய்த உடம்பு அழிந்தாலும்

வினை உயிரைப்பற்றி நிற்கும். உயிர் எடுக்கின்ற வேற்றுடம் பிற்கும் செல்லும்; துன்புறுத்தும என்கின்றது சிந்தாமணி. இவற்றுள் அல்லிநூல் அருமை ஒன்றற்கே உவமை யாமன்றிப் புக்குழிப் புகுதற்கும் துன்புறுத்தற்கும் உவமையாகாது

நிழலோ நீள்வது போலத் தோன்றிப் பின் அடிக்கண் அடங்கிவிடுகிறது வினையும் அதுபோல வளர்கின்ற காலத்து நீண்டுத் தோன்றிப் பயனூட்டுகின்ற காலத்துச் செய்தவனையே சாருகிறது எனப் பெரிதும பொருந்திய உவமையாகிறது.

இங்ஙனம் ஒருபுடையொப்பாயும், முற்றுமாயும் இருவர் உவமைகளும் சிறிது வேறுபாடுடையவாயினும், தீவினை செய்தவனையே சென்றடையும் என்ற முடிபில் ஒருங்கொத்தது எனலாம்.

பின்னரும, தேவிமார் எண்மரும் துறந்து அருகதேவன் அடித் தாமரைகளை வாழ்த்தினர் என்னும்போது வரும்,

> " செய்தவனேவினை சேரும தற்கெனும்
> ஐயமின்று " (சீவக. 3095)

என்பதும் முற்கூறிய குறட்கருத்தை நன்கு விளக்குவதாம். எனும் – சிறிதும்.

சீவகன் துறவு

இங்ஙனம் சாரணர் கூறிய அறவுரைகளையும் பழம்பிறப்பின் வரலாற்றையுங் கேட்ட சீவகன் துறக்க எண்ணங்கொண்டான். தம்பி நந்தட்டனை அழைத்து அரசுரிமையை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தினன். அவன் மறுத்துத் தானும் துறக்க இருப்பதைத் தெரிவித்தான். உடனே சீவகன் தன் மகன் சச்சந்தனை யழைத்து அவனுக்கு முடிசூட்டக்கருதி அரச நீதிகளை அறிவிக்கின்றவன்,

> " பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாம்
> கோல்வளையாமற் காத்துன் குடைநிழற்றுஞ்ச நோக்கி
> நூல்விளைந்தனைய நுண்சொற் புலவரோடறத்தை யோம்பின்
> மேல்விளையாத இன்பம் வேந்த மற்றில்லை கண்டாய் "
> (சீவக. 2906)

என்கின்றான் இப்பாடல் முழுவதுமே குறட்கருத்து எனலாம், இதில் வளாகமெல்லாம் கோல் வளையாமற் காத்து உன்குடை நிழல் துஞ்ச நோக்கி' என்பது

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி" (௩௯0)

என்பதன் பிழிவாம்.

"நூல்விளைந்தனைய நுண்சொற் புலவரோடு" என்பது

"மதிநுட்பம் நூலோடுடையார்" (௬௩௫)

என்பதனை நினைவூட்டுவது.

அரசியல் தந்திரம்

தன்மகன் சச்சந்தனுக்கு அரசியல் தந்திரங்கள் சிலவற்றையும் தெரிவிக்கின்றான். அவற்றுள் சில: 'அரசனானவன் காலம் வருந்துணையும் தன் சினத்தை வெளிக்காட்டலாகாது. தனக்கு விருப்பமானது இப்பொருள் அல்லது விருப்பமானவர் இன்னார் என்பதைப் பிறரறிய நடத்தலாகாது என்றெல்லாம் சொல்கிறவன். அதில்

"வேந்தர்தாம் விழைபவெல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
ஈந்தக உழவரேறே நன்பொரு ளாவது" (சீவக. 2910)

என்கின்றான். இதில்

"காதலகாதல் அறியாமை யுய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்" (௪௪0)

என்ற வள்ளுவமே ஒளியூட்டி நிற்பதைக் காண்கிறோம்.

இரண்டாவது,

"குடிபழி யாமை ஓம்பின் கொற்றவேள் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுத லஞ்சி
நொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்த நீந்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு; கொழித்துணர் குமர என்றான்"
(சீவக. 2911)

இதில், மன்னனானவான் குடிமக்கள் எந்த வகையினும் தம்மைப் பழியா வண்ணம் நடந்து கொள்ளுதல் வேண்டும். குடிகளைப் பாதுகாக்க வேண்டும். அங்ஙனம் ஓரரசன் நடப்பானாயின் குடிகளனைவரும் அவனுக்கு அடங்கி நடப்பர் என்கின்றான்.

இது,

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு." (டூசச)

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்." (டூசகூ)

என்பவற்றை யுட்கொண்டு எழுந்த அறவுரை.

'அரும்புகழ் கெடுதல் அஞ்சி, நொடியல் ஒரெழுத்தும் பொய்யை' வன்பது 'பொய்யாமை யன்ன புகழில்லை' (உகூஎ) என்ற வள்ளுவத்தின் மாற்றாகக் கூறிய அறவுரை.

ஆள்வோன் கண்கள் அமைச்சர்!

சச்சந்தன் தன் தந்தை கூறிய அறவழியே ஆட்சியை நடத்தி வருகின்றான் என்ற வரலாற்றை யுணர்த்துகின்ற தேவர்,

"நூற்கிடங் கொடுத்த கேள்வி நுண்செவி மண்கொள் ஞாட்பின்
வேற்கிடங் கொடுத்த மார்பின் வில்வலான் தோழர் மக்கள்
நாற்கடல் வளாகங் காக்கும் நம்பிதன் கண்க ளாகப்
பாற்கடற் கேள்வி யாரைப் பழிப்பற நாட்டி னானே."
(சீவக. 2916)

என்கின்றார். நூலறிவும், கேள்வியறிவும் சான்று, பாற்கடல் போலப் பரந்த கேள்வியையும் உடைய தோழர்களைத் தன் மகனுக்குத் துணையாக அமைத்தான் சீவகன் என்ற வரலாறு உணர்த்தப்பெறுகின்றது. இதில் "நமபிதன் கண்களாக" என்பதில்

"சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்." (சசடு)

என்ற கருத்து இயைந்துள்ளது.

"நூற்கு இடங்கொடுத்த கேள்வி நுண்செவி"

என்பதில்,

"நூலாருள் நூல்வல்ல னாகுதல்" (சூஅடு)

என்பதும்,

"அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான்" (சு அ சு)

என்பதும், உள்ளமைந்து ஒளிர்கின்றன. அதினும் சிறப்பாக "நூற்கு இடங்கொடுத்த கேள்வி நுண்செவி" என்பது "கேள்வியாற் றோட்கப் படாத செவி" என்ற குறளை நினைவூட்டுகிறது. இங்ஙனம் தன் மகற்கு அறம்பல வுரைத்த சீவகன், பின்பு தன் தேவியர்க்கும் கொடையையும் அதன் பயனையும் உணர்த்துகிறான், அப்போது,

"..................விழுத்தகை யவர்கள் அல்லாற்
பட்டது பகுத்துண் பாரிப் பார்மிசை யில்லை கண்டீர்."
(சீவக, 2925)

என்கின்றான்.

ஏதோ கிடைத்ததைப் பலருக்கும் பகுத்துக்கொடுத்து உண்டல் என்பது எல்லாருக்கும் எளிதில் அமையுங் குணம் அன்று. கொடையும் பிறவிக்குணம் என்பதுபோல உயர்ந்த குடியிற் பிறந்தவர்க்கே உளதாவதாம் என்கின்றான். இது "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" (௩உஉ) என்ற குறளைக் கொண்டெழுந்த கருத்து எனலாம்.

வள்ளுவர், வறியர் பசிப்பிணியைப் போக்குக. அங்ஙனம் போக்குபவர் தாம் பெற்றபொருள் எவ்வகையானும் அழியாது பாதுகாப்பாக வைக்கும் இடத்தைப் பெற்றாராவர் என்கின்றார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி." (உஉசு)

என்பது அக்குறள். இக்கருத்து,

"அற்றவர் வருத்தம் நீக்கி யாருயிர் கொண்டு நிற்கும்
துற்றவிழ் ஈதல் செம்பொற் றுறக்கத்திற்(கு) ஏணி யாகும்"
(சீவக. 2927)

"மாசித் திங்கள் மாசின சின்னத் துணிமுள்ளின்
ஊசித் துன்ன மூசிய ஆடை உடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்"
(சீவக. 2929)

என்று சீவகன் தன் தேவியர்க்குக் கொடையின் சிறப்பையும், பயனையும் வற்புறுத்துமிடத்தில் அமைகிறது. ஆனால் வள்ளுவம் ஈகையான் மறுமையினும் செல்வம் வளரும் எனப்பயன் கூறியது. சிந்தாமணி ஈயாதார் மறுமையில் எங்ஙனம் வருந்துவர் வறுமையான் வாடுவர் என்பதை விளக்கியது. இரண்டும் ஈவதின் இன்றியமையாமையை உடன்பாட்டு முகத்தானும் எதிர் மறைமுகத்தானும் வற்புறுத்துவதில் இணைந்தே இலங்குகின்றன.

அறத்தை மறவற்க

சீவகன் மீண்டும் தன் மனைவியர்க்கு அறமுரைக்கின்றவன், "வருந்தினும் அறத்திறம மறத்தல் ஓமபுமின்" என்கின்றான். வாழ்க்கையில் எத்துணையோ துன்பங்கள் நேரலாம் அக்காலத்தும் அறத்தினை மறத்தலாகாது என்பதே அவன் அறவுரை. இது எங்கிருந்து வந்தது? வள்ளுவர்,

"அறத்தினூஉங்கு ஆக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு." (௩௨)

என்றனர். இதுவே சீவகன் வாயுரையாக வந்தது எனற்கு ஐயமும் உண்டோ?

ஈயாதான் புகழ்

சீவகன் துறந்து சென்றான். இராசமாபுரத்திலே போகத்திற்காக மாளிகைகளில் இடபெறும் அகிற புகையும், துகிற்புகையும் அகன்றன. அறப் பொருட்டாக இடப்பெறும் வேள்விப் புகையும் மறைந்தது. நகரம், பொலிவிழந்தது என்பதை ஒருவமை வாயிலாக உளங்கொள உரைக்கும் தேவர்,

"ஆய்ந்த பொருள்ஒருவர்க் கீயா அதிலோப
மாந்தர் புகழேபோல் தோன்று மறைந்தனவே."
(சீவக. 2977)

என்கின்றார். வள்ளுவர், "இரப்பார்க் கொன்றீவார்மேல் நிற்கும் புகழ்" என்றும்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு." (உ௩௧)

என்றும் கூறினர். இதனால் ஈவார்க்குப் புகழுண்டாம். ஈயாதார்க்கு புகழே உண்டாதல் இல்லை என்பதனை வற்புறுத்தினர்.

தேவர், சீவகன் நாட்டை விட்டகன்றான். மக்கள் ஒருவகைப் புகையையும் இட்டார்கள் அல்லர். அதனால் புகையே **தோன்றாமல் மறைந்தன** என வள்ளுவர் கூற்றோடு பொருந்தப் புகன்றனர்.

யாளி பதிவிருக்க வேண்டுமா ?

தன் பிரிவிற்காகப் பெரிதும் வருந்துகின்ற சுற்றத்தாரை நோக்கிச் சீவகன் யானைகளை வேட்டையாடும் யாளி சுண்டெலிகளைப் பிடிக்க இறப்பின் கீழ்ப் பதிவிருந்து பார்ப்பதுண்டா? அதுபோல,

> **"பல்வினை வெள்ள நீந்திப் பகாவின்பம் பருகி னல்லால்**
> **நல்வினை விளையுள் என்னும் நஞ்சினுட் குளித்த லுண்டே"**
> (சீவக. 2985)

என்கின்றான். யாம் அடையவேண்டியது பேரின்பம். அது நாம் ஈட்டிய பலவினைகளைக் கடந்து எய்தவேண்டியதொன்று. பேரின்பமாகிய அமுதத்தைப் பருகுவதன்றி, செல்வம் என்னும் நஞ்சை அருந்தலாமா? ஆதலான் நான் உங்களையும் ஊரையும் உரிமைச் சுற்றங்களையுந் துறந்து, பேரின்ப வீடெய்துவேன் என்கின்றான். இதில்

> **"சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
> **மற்றின்பம் வேண்டு பவர்."** (கஎ௩)

என்ற குறள் வரலாற்றோடியைந்து உவமை வாயிலாக விளக்கம் பெறுகின்றது. சிற்றின்பம் செல்வத்தானும் சுற்றத்தானும் பெறும் இன்பம்; மற்றின்பம் – அதன் எதிர்மறையாகிய பேரின்பம் இதனையே பகாவின்பம் என்கின்றார் தேவர். நுகர்வானும் நுகரப்படுபொருளும் நுகர்ச்சிக்கண் பகுத்துணர இயலாதவாறு ஒன்றுபட்ட இன்பம். அறனல்ல செய்தல் என வள்ளுவர் கூறியதைச் செல்வ வாயிலாக நுகர்தல் என விளக்குகிறார் தேவர்.

இன்னும் நோற்க

இவ்வுலகத்தில் எத்தகைய அரிய பேறுகளையும் எய்தலாம். ஆதலால் நீங்கள் இன்னும் மேலும்மேலும் தவஞ் செய்யுங்கள் எனச் சுற்றத்தார்க்குச் சொல்கின்ற சீவகன்,

"விழுப்பொருள் பறவை ஞாலம்
நோற்பவர்க்கு உரிய வாகும் நோன்மின்னம் நீரும்"
(சீவக. 2986)

என்கின்றான்.

வள்ளுவர், வேண்டிய பொருள்களை வேண்டியபடி அடையலாம்; ஆதலால் மேலும் தவஞ்செய்யுங்கள் என்ற கருத்தமைய

"வேண்டிய வேண்டியாங்கு(கு) எய்தலாற் செய்தவ
மீண்டும் முயலப் படும்." (உசரு)

என்கின்றார். இருவர் கருத்தும் இணைதலைக் காண்க. இதில், 'செய்தவம் ஈண்டு முயலப்படும்' எனப் பிரித்து, செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும் என உரை தந்தனர் பரிமேலழகர், மணக்குடவர் இருவரும். பரிதியார்மட்டும் மீண்டும் எனக்கொண்டு மேன்மேலும் என உரை வகுத்தனர். தேவர் இக் குறளுக்கு "நீரும் இன்னம் நோன்ம்" எனக் கூறுவதால் மீண்டும் முயலப்படும் எனக் கொண்டனர் என்பதே பொருந்துவதாம்.

விரும்ப விலகும்; வெறுக்க வரும்

சீவகன் தன் மனைவிமார்களுக்குச் சொல்கிறான்; — உலகத்திலே பொருளெனப்படுவன பொன்னும் பொருளும், நிலமும் புலமுந்தாமே. அவைகளை நாம் விரும்புவோமானால் அவை விலகிச் செல்லும். வெறுப்போமானால் வலிய வந்து சேரும். தவத்திற்கு முன்னே இந்த உலகமே ஒரு கடுகளவுதாமே; ஆதலால், செல்வத்தின் நிலை இவ்வளவுதான் என்று அறியின் செல்வம் தானே வந்து சேரும், அதனை நாம் விரும்புவோமாயின் அது நம்மைவிட்டு விலகிச் செல்லும் என்கிறான்.

"நற்றவம் பரவை ஞாலம் நாமுட னிறுப்பின் வையம்
அற்றமில் தவத்திற் கென்றும் ஐயவி யனைத்தும் ஆற்று(து)
இற்றென உணர்ந்து நிற்பின் திருமக ளென்றும் நீங்கள்
பற்றொடே நிற்பின் என்றும் திருமகள் பற்றல் செல்லாள்."
(சீவக. 2983)

என்பது அப்பாடல். இது

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்," (நசுந)

என்ற வள்ளுவத்தைக்கொண்டு வளர்ந்ததாகும். வள்ளுவம் — வேண்டாமை எனப் பொதுவகையிற் கூறியதைத் தேவர் பரவை ஞாலம் வேண்டாமை என விதந்தார்.

முற்றத் துறவு பூண எண்ணிய சீவகன் தன் எதிர்வந்த இரவலர்க்கு வரையாது வழங்குகின்றான். அவனுடைய ஈகைச் சிறப்பைப்பற்றிக் கூறுகிற தேவர்,

“இலம்பெரி தெனஇரந் தவர்கட் கேந்திய
கலஞ்சொரி காவலன் கடகக் கையினை” (சீவக. 2995)

சங்கநிதி போன்றதென்கின்றார். இதன் முதலடி

“இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்” (உஉங)

என்னும் குறட்பாவின் சொல்லாட்சியைப் பெற்றுள்ளது, ‘தேவர் பாடல் இரவலன் புரவலனிடம் வந்து ‘யாம் பெரிதும் இலம்’ என, அவர்கட்குப் புரவலன் வழங்கினான் என்பதை யறிவிக்கின்றது. இலம்பெரிதென என்பது எங்கள் இல்லம் பெரிதென்று’ எனவும் ஒரு பொருள் தோன்றிக் குடும்பம் பெரிதெனப் பொருள்தர நிற்றல் காண்க.

சீவகன் அருக தேவனைத் துதிக்கின்றான். அருகதேவன் திருவடியைச் சார்ந்தார்க்கு என்றும் வருத்தமேயில்லை என்கின்றான்.

“தாமரையின் விரைசேர்போதில் வாயொளியே பெறநடந்து
மலரடியை வலங்கொண்டார் வருந்தார் போலும்”
(சீவக. 3017)

என்கின்றார். இது

“வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில.” (ச)

என்பதை யமைத்துக் குழைத்துக் கூறியதாம்.

இறைவனை எண்ணாதார் படுந்துயர்

“வைய மூன்றும் உடனேத்த வளருந் திங்கள் வாளெயிற்று
ஐய அரிமான் மணியணைமேல் அமர்ந்தோய் நின்னை யமராதார்
வெய்ய வெந்நோய் வினையுதைப்ப வீழ்ந்து துன்பக் கடலழுந்தி
நெய்யும் நுண்ணூல் நாழிகையின் நிரம்பா நின்று சுழல்வரே.”
(சீவக. 3019)

எனச் சீவகன் கூறுகின்றான். இதுவும் அவன் கூறும் அறவுரைகளில் ஒன்று.

இறைவ! நின்னை விரும்பாதார், தாம் செய்த வினைகள் நோயாக வந்து வருத்தத் துன்பக்கடலுள் அழுந்திக் கரையேற வழியறியாமல், பாவாடுகுழல் போலத் தவிப்பர் என்கின்றான் சீவகன்; இக்கருத்து,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (ம)

"அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது" (சு)

என்ற இக்குறள்களின் நிழலாம். பின்னும்

"அறவாழி, அலகையிலாக் குணக்கடல்" (சீவக. 3023)

என்பதும் இக்குறளைத் தழுவிய ஆட்சியேயாம்.

"அழுது வினைகள் அல்லாப்ப அறைந்தோய்
நின்சொல் அறைந்தோர்கள்
பழுதில் நறுநெய்க் கடற்சுடர்போல் பல்லாண்
டெல்லாம் பரியாரே" (சீவக. 3020)

என்ற சீவகன் சொல்லும்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (ரு)

என்ற குறளின் ஒளியாம்.

தேவியர் வேண்டுகோள்

சீவகன் அறவுரைகளைக் கேட்ட அவன் மனைவியரும் துறவு பூணுகின்றனர். அறிவன் குணங்களை ஏத்தித் தொழுகின்றனர். சீவகனை நோக்கி, எமது அறியாமையைப் போக்கியருளுக என வேண்டினர். சீவகன்

"நின்றபற்று ஆர்வம் நீக்கி நிருமலன் பாதஞ் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி யடைய லாம்"
(சீவக, 3105)

என்கின்றான்.

பற்று – நுகரும் பொருள்களின்மேல் மனஞ்சென்று பற்றுவதால் விளையும் தொடர்பு அன்பு. ஆர்வம் – பாலை வழியே நடந்திளைத்தானுக்கு நீரையின்றித் தாகந்தணியாது என்கின்ற இன்றியமையாத் தன்மைபோல விரும்பிய பொருளைப் பெற்று நுகர்ந்தால் அன்றி வாழ்வு நிலையாது என்ற தன்மை. இவையிரண்டுமே பிறவிக்கு வித்தாவன. பேரின்பத்திற்குத் தடையாவன. இவற்றினின்று நீங்கி நின்மலன் பாதஞ்சேரின், அன்பைக் கொடுத்து அருளைப் பெற்றுச் சிவகதியைச் சேரலாம் எனக் எனக் கூறுகிறான். இது,

" ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் " (௩௭௦)

என்ற குறள்தந்த செல்வமாகும். வள்ளுவர் கூறும் 'ஆரா வியற்கை யவா' என்பது தேவரால் 'பற்று ஆர்வம் நீக்கி என்பதால் உணர்த்தப் பெற்றது. நீப்பின் என வள்ளுவர் கூறியதற்கு, நீக்கி நின்மலன் பாதஞ் சேர்மின்' என அவா நீத்த பின் அடையத்தகும் அடைக்கலத் தானம் நின்மலன் பாதமே எனச் சுட்டி விளக்கந் தரப்பட்டது.

பேரா இயற்கை என்பது மற்றீண்டு வாராநெறி அது சிவகதி சேரலாமே என்பதால் விளக்கப் பெறுகிறது. இங்ஙனம் இச்செய்யுள் முழுதுமே இக்குறளின் விரிவுரையாக அமைகிறது.

வாமன் அடியை வணங்குக

சீவகன் தேவியரை நோக்கி, நீவிர் அவாவறுத்து வீடுபெறக் கருதின் வாமதேவன் பொன்னடியை வணங்குங்கள் என்கின்றவன்,

" வேட்கையை மிகுத்து வித்துப் பிறவிநோய் விளைத்து வீயாத்
தேள்கையிற் கொண்ட தொக்கும் " (*சீவக.* 3106)

என அவாவாற் பிறப்புண்டாதலையும், பிறந்து வினைகளால் நைவது தேளைக் கையிற் கொண்டதை ஒத்திருத்தலையும் கூறுகிறான்.

இதுவும்,

" அவா என்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்று,
தவாஅப் பிறப்பீனும் வித்து " (௩௬௧)

என்ற குறள் உருமாறிக் கருக் கொண்டதே.

தன்னுயிரைப்போல மன்னுயிரையும் ஓம்புக

மனிதன் தனக்குத் துன்பம் தருவதொன்று பிறவுயிர்கட்கும் அப்படித்தானே இருக்கும் என்பதை எண்ணி நடத்தல்வேண்டும். தனக்குத் துன்பமாவதொன்றைத் தான் பிறவுயிர்கட்குச் செய்த லாகாது என விதக்கின்ற வள்ளுவர்

"இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்." (௩௧௬)

என்றும்,

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்." (௩௧௮)

என்றும் இரு குறட்பாக்களைக் கூறினார்.

இவற்றையமைத்துத் தேவர், சீவகன் உரையாகத்

"தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் இறைவனாகும்" (*சீவக.* 3107)

என்கின்றார். இதில், குறளின் கருத்தமைதி முழுதும் ஒத்திருத்தலைக் காணலாம்.

நிலைமாற்றம்

சீவகனுக்கு மனைவியராயிருந்த எண்மரும் அரிய நோன்புகளை நோற்றனர். அதன் பயனாகப் பெண்பிறப்பு மாறி தேவர்களாய் விண்ணுலகடைந்தனர். அங்கே தேவமாதர் போகத்தைத் துய்த்தனர். ஒருநாள் தேவமாதர்கள் இவர்களைப் புலவி நோக்காற் கண்டனர் என்ற நிகழ்ச்சியை அறிவிக்கும் ஆசிரியர்

"கலவி யாகிய காமத் தின்பயன்
புலவி யாதலால் பொன்னங் கொம்பனார்
உலவு கண்மலர் ஊடற் செவ்விநோக்
கிலைகொள் பூணினார் இதயம் போழ்ந்ததே."
(*சீவக.* 3126)

என்கிறார். இது கலவியினும் புலவியினிது என்ற கருத்தை வற்புறுத்துகிறது. இது

"உணலினும் உண்ட தறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது." (கங உசு)

என்றதன் சுருக்க விளக்கமாம்.

இங்ஙனம் திருத்தக்கதேவர் திருக்குறளை மனத்தில் அமைத்துச் சிந்தாமணிக் காப்பியத்தைத் நிகழச் செய்திருக்கிறுர். இதுகாறும், சொல்லும் பொருளும் ஒத்தப்பகுதிகளும் சிறந்த சொல்லாட்சிகளுமே ஈண்டு ஆராயப்பெறறன.

சிந்தாமணி உரையாசிரியர் நச்சினுர்க்கினியர் உரை விளக்கத்திற்காகவும், இலக்கண மேற்கோளாகவும் பல இடங்களில் திருக்குறளை எடுத்தாண்டுள்ளனர். அவை அவருரைக்கு அரணுவனவேயன்றி நூலுக்கு உதவுவன அல்ல ஆதலால், நூற்கருத்தோடு இணைந்து புதிய விளக்கம் பெறுவனவும், ஒப்பு மாத்திரையாய் உள்ளனவுமே ஈண்டு எழுதப்பெற்றன.

★

வளையாபதியுள்
வள்ளுவம்

வளையாபதியுள் வள்ளுவம்

பெருங்காப்பிய வரிசையில் ஒன்று வளையாபதி. இது உரு முற்றும் அறியக்கூடாத காப்பியம். புறத்திரட்டு, சிலப்பதிகாரவுரை, தொல்காப்பியவுரை, வீரசோழியவுரை முதலியன சில பாடல்களை மேற்கோளாகவும் தொகுப்பாகவும் எடுத்தாண்டமையால் பெயரறியக்கூடிய நிலையில் உயிர்தாங்கி நிற்பது. இதன் ஆசிரியர்பெயர், நூனுதலிய பொருள் முதலியன ஒன்றும் அறியக் கூடவில்லை. ஆயினும், சிலப்பதிகார உரையில் வரும் 'துக்கந் துடைக்கும்' என்னும் செய்யுளும், தொல்காப்பியச் செய்யுளியலில் இளம்பூரணர் எடுத்துக்காட்டும் 'உலக மூன்றும்' என்னும் செய்யுளும் "உயிர்கொன்று உண்டு உயிர் உய்யன் மின்" என்ற பகுதியும் இந்நூல் சைனக்காப்பியம் என்பதைத் தெரிவிக்கின்றன. ஆங்காங்குக் கிடைத்த பாடல்கள் எழுபத்திரண்டே. அவை யனைத்தும் நீதிப் பாடல்களாக இருப்பதால் திருக்குறட் கருத்தைப் பெரிதும் தாங்கியுள்ளன. ஆதலால் நாற்பத்தாறுக்கும் மேற்பட்ட அறத்துப்பாற் குறட்கருத்துக்களும் இருபத்தைந்திற்கு மேற்படாத பொருட்பால் காமத்துப்பாற் குறட்கருத்துக்களும், ஆக எழுபத்தொரு குறட்கருத்துக்கள் விரவியுள்ளன. மேலும் சிலபாடல்கள் பல குறட்கருத்துக்களையுள்ளடக்கி ஒளிருவனவாக உள்ளன. அவற்றை நுனித்து நோக்குவதால் இருபெரு நூல்களுக்கு முள்ள பொருளேற்றம் நம்மறிவுக்குத் துணையாதலை உணருவோம்.

இக்காப்பியம் கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுளாயினும் வரலாறு அறியக்கூடாமையால், வளையாபதிச் செய்யுள் என்று செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ள முறையைப் பற்றித் திருக்குறள் இணைப்பைக் காண்போம்.

'உலக மூன்றும்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல். இது தொல்காப்பியச் செய்யுளியலுரையில் இளம்பூரணர் எடுத்துக்

காட்டியது, "ஆண் திலகமாய திறல் அறிவன்அடி தொழுவல்; வினை நீங்குக" என்ற பகுதி அப்பாடலில் வருகிறது.

ஆடவன், உலகை யாளுவான்; மனைவியை யாளுவான்; மக்களையாள்வான்; அனைத்தையும் ஆளுவான்; ஆனால் ஒருமையுள் ஆமைபோல ஐந்து புலன்களையும் அடக்கியாளுதல் அவனால் இயலாத காரியம். அவற்றை யடக்கி யாளுபவன் ஆண் திலகமாவான் அதனுடன் திறலுடையன் ஆவன்; ஐம்புலன்களை அடக்கியாள 'உரன் என்னுந் தோட்டி' ஒன்றே ஏற்றது. அவ்வுரனை உடைமையான் அவன் அறிவன். அறிவன் அடியைத் தொழுதால் வினை நீங்கும்; பிறவியனும் என்ற வளையாபதிக் கருத்து, "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப் புடைத்து" (கஉசு) என்ற குறள்தந்த செல்வமாகும். இதிலேயே வினை நீங்கும் என்றது 'இருவினையும் சேரா' என்பது கொடுத்த சிந்தனை. இங்ஙனம் கடவுள் வாழ்த்தே திருக்குறளின் விரிவுரையாக வளர்கிறது.

கற்புடை மங்கை

காதலனும் காதலியும் கருத்தொருமித்து இல்லறம் நடத்தும் இருவருள்.

> "நாடும் ஊரும் நனிபுகழந் தேத்தலும்
> பீடு செம்மழை பெய்கெனப் பெய்தலும்
> கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
> பாடு சால்மிகு பத்தினிக் காவதே" (வளை. 7)

எனப் பத்தினிக்குச் சிறப்புக் கூறுகின்றது வளையாபதி. இதில் 'நாடும் ஊரும் நனி புகழ்ந்து ஏத்துதல்' என்பது கற்புடையாள் வாழ்கின்ற ஊரும், அவ்வூருள்ள நாடும் மிக மிகப் புகழ்ந்து துதிக்கும் நிலையில் வாழ்தல் பத்தினிக்கு ஏற்ற பண்பாம் என்பது. இது 'தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' (ருசு) 'புகழ் புரிந்த இல்' (ருகூ) என்ற இருகுறட் பகுதிகளும் தந்த கருத்து. இவற்றின் விரிவே முற் கூறிய பாடல் என உணரலாம்.

பின்னும் அச்செய்யுளிலேயே, "பீடுறும் மழை பெய்கெனப் பெய்தலும்" பத்தினிக்கு ஆவது என்றுள்ளது.

இது,

> "தெய்வந் தெழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
> பெய்யனப் பெய்யும் மழை" (௫௫)

என்பதன் விரிவாகும். மழையிற், பீடுஉறும் மழை – வேண்டிய இடத்திலே வேண்டிய காலத்தே வேண்டிய அளவு பெய்தலே அம்மழைக்குள்ள பீடு. இந்த அடை மொழியால் மழை பீடு தராவிடத்து–தீமை விளைக்கும்போது நில் என்று நிறுத்தும் ஆற்றலும் உடையார் பத்தினிப் பெண்டிர் என்பதும் கொள்ள வைத்தார்.

மாட்சியில்லா மகளிர் மனம்

வரலாற்றுப் போக்கிலே யாரோ ஒரு கடைகழி மகளைப் பற்றிக் காப்பியம் பேசுகிறது போலும்:

> "பள்ள முதுநீர் பழகினும் மீனினம்
> வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉம்
> கள்ளவிழ் கோதையர் காமனே டாயினும்
> உள்ளம் பிறிதாய் உருகலும் கொள்நீ" (வளை. 8)

என்கின்றது. கடல் போன்ற ஆழமான நீர்நிலை. அதிலே வாழ்கின்ற மீன்கள் அதிலே வாழ்ந்தாலும் மீனினங்கள் புது வெள்ளம் பாய்ந்தால் அதன்வழியே எதிர்த்தோடும். அதுபோல மகளிர் மன்மதனை ஒத்த மணாளனை மணந்து வாழ்ந்தாலும் மனம் வேறுபட்டுப் பிறனொருவனைக் கண்டு காதலால் உருகுவர்; இதனை நன்றாக நீ அறிந்து மனங்கொள்வாயாக என அறிவுரை கூறுகிறது. இந்தச் சிந்தனை நமக்கு "மகளிர் மனம்போல வேறுபடும்" (அ௨௨) என்ற பகுதியை நினைவுக்குக் கொண்டு வரும். இதற்கு விளக்கந்தர வந்த பரிமேலழகர் "பெண்மனம் பேதின்று ஒருப்படுப்பேன் என்னும் எண் இல் ஒருவன்" (வளை. 49) என்பதனானும் அறிக என்றார். பெண்கள் மனம் நிலையற்றது; பேதைமையுடையது; நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே; ஆதலால் அதனை ஒருவன், இன்று ஒருமைப் படுத்துகிறேன் என்றால் அவன் ஆய்வுள்ளவனா? எண்ணிப்பார் என்கின்றது வளையாபதி.

காரிகையரைக் காக்க இயலுமா ?

> **"உண்டியுள் காப்புண்டு; உறுபொருட் காப்புண்டு;**
> **கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு**
> **பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்**
> **கண்டு மொழிந்தனர் கற்றறிந்தோரே"** (வளை. 9)

என்ற இச்செய்யுளும் பெண்டிரைக் காக்க இயலாது என்பதை அறிவிக்கும் அறிவுரையாகும். இது,

> **"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்; மகளிர்**
> **நிறைகாக்கும் காப்பே தலை"** (டுள)

என்ற குறளைப் பயனை ஏதுவாகக் கூறி விளக்குகிறது. உணவுப் பண்டங்களை உள்ளே வைத்து மூடியிட்டுக் காக்கலாம். பணத்தைப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கலாம். கல்வியைத் திரும்பத் திரும்பக் கற்றும் கற்பித்தும்பாதுகாக்கலாம். பெண்களை வீட்டில் வைத்தும் காவலில் வைத்தும் காப்பாற்ற இயலாது; என்று அறிவாளிகளாகிய பட்டறிவோர் பகர்ந்தனர் என்றது. இது 'எவன் செய்யும்' என்பதன் விளக்கமாக அமைதலைக் காண்க.

இருமனப் பெண்டிராய்ப் பிற நெஞ்சிற் பேணிப் புணரும் வரைவிலார், கையிலே காசு கொடுப்பவன் மற்ெருருவனைக் காணும் வரைதான் முன்னர்க் கொடுத்தவனோடு உறைவர் உறவாடுவர். அதற்கு உவமை கொடுத்து விளக்குகிறார். தாமரையிலைத் தண்ணீர். அது காற்றடிக்கிற வரையில் தாமரை மேலே தாங்கியிருக்கும். அதற்குமேல் தாமரையிலை தண்ணீரை வைத்திராது என. இதனை யமைத்து விளங்கும் வளையாபதிச் செய்யுள்

> **"தளிப்பெயல் தண்துளி தாமரை யின்மேல்**
> **வளிப்பெறு மாத்திரை நின்றற்று ஒருவன்**
> **அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லால்**
> **துளக்கிலர் நில்லார் துணைவனைக் கையார்"** (வளை. 11)

என்பது. இதன்

> **"அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்,**
> **இன்சொல் இழுக்குத் தரும்"** (கூகக)

என்ற குறளின் விளக்கமாகும்.

வள்ளுவர் சொன்னர்; பொருட்பெண்டிர் ஓராடவனை விழைவது அன்பிற்காகவன்று; பொருளுக்காக. ஆதலால் அவர்கள் இனிமையாகப் பேசினலும் அதனல் விளைவது இழுக்கே என்று. பொருள்தந்தாலும் எவ்வளவுகாலம் விழைவார்கள் என்று வள்ளுவர் கூறவில்லை. வளையாபதி 'கை நிரம்பக் காசு கொடுக்கும் அடுத்த ஆளைக் காணுகின்றவரையில்தான்' என்று கால அளவு கூறியது. இத்தகைய அன்பைப் "பொய்ம்மை முயக்கம்" என்பர் வள்ளுவர். உள்ளப்புணர்ச்சியன்று; உடற்புணர்ச்சி. அதுவும் உண்மையாக அன்று; பொய்மையாக என்பது அவர் வழங்கும் சிறந்த கருத்துக்கள்.

மக்களில்லாத மனைவாழ்க்கை

வரலாற்றேட்டத்திலே யாரோ ஒரு தலைவனுக்கு மகப்பேறில்லாக்குறையை வற்புறுத்தவந்ததுபோலும் இச் செய்யுள். ஆதலால், "சேய் இலாச் செல்வம் நன்னீர்ச் சிறையிலா நகரம்போலும்; மற்றும் பொறுமையில்லாத அறிவையும், போகப் புணர்ச்சியில்லாத இளமையையும், இறங்குதுறையில்லாத தாமரைக் குளத்தையும், ஆடையில்லாத அணியழகையும், மணமற்ற மாலையையும், கல்வி நலம் இல்லாத புலமையையும் போன்றது" என்கின்றது. இவற்றுள் சேயிலாச் செல்வம் என்றது 'தம்பொருள் என்ப தம்மக்கள்' என்ற குறட்கருத்தைத் தழுவிச் சேய் ஒரு செல்வம். அச்செல்வம் இல்லாத பிற செல்வம் தண்ணீர் வசதி சூழ இல்லாத நகரம் போல வரண்டு காணப்பெறும். பசுமையும் தளிர்ப்பும் களிப்பும் காணப்பெருது என்று விரித்துரைத்தது.

கல்லாதான் நுண்ணறிவு

உவமையாகக் காட்டிய பலவற்றுள் 'கல்வி நலமிலாப் புலமை' என்னும் பகுதி, 'கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும் கொள்ளார் அறிவுடை யார்' என்றதன் ஒலியைத் தாங்கி ஒளிர்வ தாகும். கல்லாதான் மிகு நுணுக்கமாகத் தெரிவிக்கலாம்; ஆனலும், குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்ததுபோல ஓரொரு கால் ஒத்துப்போமே ஒழிய என்றும் எங்கும் ஒட்பந் தருவதாகாது என்பதாம்.

போகத்தை விரும்புபவன் போகவுறுப்புக்கள் குறைவின்றி இருக்கும் மகளிரையே விரும்புவான். அதுபோலக் கருத்துக்களை விரும்புகின்றவன் கற்றவன் சொல்லையேவிரும்புவான்; கல்லாதவன் சொல்லைக் காமுறமாட்டான் என்ற கருத்தமைய வள்ளுவர் கூறும்

"கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று" (சுoஉ)

என்னும் குறளின் ஒளியையும் 'கல்வி நலமில்லாப் புலமை' (வளை. 12) என்ற வளையாபதிச் செய்யுட்பகுதியிற் காணலாம்.

நாகாக்க

மனிதனுக்குள்ள ஐந்து பொறிகளுள் நாக்குச் சிறந்தது; அதனைக் காக்கவேண்டுவதின்றியமையாதது என்பதை அறிவிக்க வந்தவிடத்து,

"ஆக்கப் படுக்கும்; அருந்தளைவாய்ப் பெய்விக்கும்;
போக்கப் படுக்கும்; புலைநரகத்து உய்விக்கும்;
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தனுள்
நாக்கல்ல தில்லை நனி பேணுமாறே" (*வளை*. 13)

என்றது வளையாபதி. இது,

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (அஉஎ)

என்பதன் விளைவு என்பதில் ஐயம் உண்டோ? வளையாபதி நாவால் விளையும் நன்மைகளில் இரண்டையும், தீமைகளில் இரண்டையும் கூறி, எப்படியாயினும் நா காக்கப்படுவதிற் சிறந்தது என்கிறது.

மற்றும் முன்னிரண்டடிகளையும்,

"ஆக்கமும் கேடும் அதனால் விளைதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு" (சுசஉ)

என்ற குறளையும் இணைத்தும் எண்ணலாம் போற்றுேன்றுகிறது. சொல் என்னுங் காரியப் பெயர் அதன் கருவியாகிய நாவை ஆகுபெயரான் உணர்த்துமாதலான், சொல்லைக் காக்க நாவைக் காக்க என்றுராதலுமாம். சொற்சோர்வு காக்க எனக் கூறுவானேன்? நாவைக்காக்க எனலாகாதோ எனின், வள்ளுவர்

அடக்கமுடைமையிற் கூறினாராதலானும், ஈண்டு அதிகாரம் சொல்வன்மை ஆதலானும் சொல்மேல் வைத்துச் சொல்லின்கண் சோர்வு காக்க என்றார் எனலும் பிழையாகாது. முற்குறளிலும், 'நாநலம் என்னும் நலனுடைமை' என்று வள்ளுவரே கூறியிருத்தலும் துணைசெய்யும். இங்ஙனம் இப்பாட்டு, இரண்டு மூன்று குறட்பாக்களின் நயமும் உரைச்சிறப்பும் உணரத் துணையாக அமைந்தது எனலாம்.

பிறன்மனை நோக்காமை

உலகவரை நோக்கி, மனைவிரதங் காத்துச் சிறப்பெய்துங்கள்; உங்களை ஊரும் நாடும் உவக்கும்; உறுதி; மறுமையில் உங்களைத் தேவர்கள் எதிர்கொண்டழைத்துப் போய்ச் சிறப்புச் செய்வர் என்கின்ற பாடல்,

> "தார நல்வதந் தாங்கித் தலைநின்மின்
> ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை
> வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
> சீரின் ஏத்திச் சிறப்பெதிர் கொள்பவே" (வளை. 14)

என்பது. தார நல்வதந் – மனையறங் காக்கும் விரதம். தாரம் – மனைவி; ஏக பத்தினி விரதம். அதனைத் தாங்கிச் சிறந்து விளங்குங்கள் என்கின்றது வளையாபதி. ஒருவன் ஒருத்தியோடு மட்டும் வாழ்தலாவது பிறன்மனை நோக்காத பேராண்மையனாக விளங்குதல். ஆகவே "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு, அறன்ஒன்றோ! ஆன்ற ஒழுக்கு" (கசஅ) என்ற குறளே இவ்வுருவில் எழுந்திருக்கிறது எனலாம். இத்தகைய வாழ்வு இல்லறத்திலிருந்து வாழ்வாங்கு வாழ்தல். அங்ஙனம் வாழ்ந்தவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும் ஆதலின் 'விண்ணவர் சீரின் ஏத்திச் சிறப்பெதிர் கொள்பவே' என்கின்றது. இங்ஙனம் இவ்விருகுறளின் ஒளிப்பதிவே இப்பாடல் என்பதாம்.

மக்களே! இந்தவுலகத்திலே பெண்ணால் துன்புற்றவர்கள் எண்ணிலாதவர்கள். பெண்களாலேயே பின்னிப்பின்னி வினைகள் மேலும் மேலும் வருவனவாம். ஆதலால், என்ன நன்மை விளைவதாயினும் பிறன் மனைவியை விரும்பாதீர்கள் என்ற பொருளைத்தருகின்ற சூளாமணிச் செய்யுள்,

"பெண்ணி ளுகிய பேரளுர் பூமியுள்
எண்ண மிக்கவர் எண்ணினும் எண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினும் ஏதில்பெண் நீக்குமின்" (வளை, 15)

இதனால் பிறர்மனை விழைவின் துன்பம் வரும்; வினைகள் பெருகும் என்று உணர்த்தப் பெறுகின்றது. இது,

"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்" (கசசு)

என வள்ளுவர் வகைப்படுத்தியோதிய தீமைகளை வளையாபதி தொகுத்துக் கூறியது. ஆனாலும் பெண்ணால் வருந்துன்பம் பெருந் துன்பம் என்றும் பிரித்தறியாதபடியும், பிரித்தறிந்து பரிகாரம் காண இயலாதவாறும் பின்னிவரும் என்று விளக்கமுங் கூறுகிறது,

"பொய்யன் மின் புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீர்
உய்யன் மின்உயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன்மின்" (வளை. 16)

என்று உலகவர்க்கு உபதேசமாக அமைந்த பாடல் ஒன்று. இதில் ஒவ்வொரு எதிர்மறை ஏவலும் திருக்குறளில் ஒவ்வோர் அதிகாரத்தைச் சுட்டி நிற்கிறது. 'உயிர்கொன்று உண்டு வாழும் நாள் செய்யன்மின்' என்பது 'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான்' (உருக) என்ற பகுதியின் கருத்தை உள்ளடக்கி ஒளிர்கின்றது.

"கள்ளன்மின் களவாயின யாவையும்
கொள்ளன் மின்கொலை கூடிவருமறம்
எள்ளன் மின்னிலரென்றெண்ணி யாரையும்
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின்"
(வளை. 17)

இப்பாடலும் ஓர் உபதேசமொழியே. இதில், 'கள்ளன்மின் களவாயின யாவையும்' (வளை. 17) என்பது எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும் கள்ளாமைகாக்க தன் நெஞ்சு' (உ அக) என்ற குறட் கருத்தை முழுதும் அடக்கிக் கூற மாட்டாமையின் 'கள்ளாமை காக்க' என்பதை மட்டும் உணர்த்துவதாக அமைந்த பகுதியாகும். ஆயினும் குறட்

கருத்தோடு வளையாபதிப்பாட்டை இணைத்துப் படிக்கும்போது குறட்கருத்தும் இணைந்தே எண்ணத்தில் இனிமையையும் நிறைவையும் அளிக்கிறது.

'கொலை கூடிவரும் அறம் கொள்ளன்மின்' (வளை. 17) அறங்களில் மனத்துக்கண் மாசிலாமையான் ஆற்றப்படுவதாகிய தூய அறமும், விலங்குப்பலி, களப்பலி முதலான உயிர்ப்பலியால் இயற்றப்படும் அறமும் என இருவகையுண்டு. அவற்றுள் விலங்குப்பலி தனக்கென்று கொல்லாமல் கடவுள் பூசைக்கென்று, மறியறுத்து குருதிப் பலிதூஉய் வாரணக்கொடியொடு வயிற்பட நிறுவுதல் மரபாதலானும், களப்பலி நாடுகாவலுக்காக இடப் படுதலானும் இவையும் அறமாகக் கருதப் பெறுவனயேயாம். இவை அறமாயினும் கொலையொடு படுதலின் இவைகளைக் கொள்ளன்மின் என விலக்குகின்றார். இந்தக் கருத்து வளையாபதி யாசிரியருக்கு எங்ஙனம் விளைந்திருக்க வேண்டும், சைனராக இருப்பதால்மட்டும் விளைந்திருக்க முடியாது என்று எண்ணுகின்ற நம் மனக்கண்முன்னே,

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்" (௩௨௧)

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" (உ௫௯)

என்றவிரு குறள்களும் தோன்றுகின்றன. ஆகவே ஆயிரம் வேட்டலாகிய அறம் கொலைகூடி வரும் அறம். அறம் என்பது கொல்லாமையே! ஆகையால் வேட்டலைக் கொள்ளாதீர்கள் என்ற கருத்திலேயே வளையாபதி விளக்குகிறது எனலாம்.

'எள்ளன்மின் இலர் என்று' என்பது இப்பாடற்பகுதியுள் ஒன்று. செல்வமும் வறுமையும சிந்தையின் நிறைவும் குறைவுமே; ஆயினும், செல்வம் சூழ்நிலையான் வருகிறது; வடிகிறது வந்தால் செல்வன்; வடிந்தால் வறியன். ஆம்பொருள்கள் யாவும் அவை யார்க்கும் அழிப் புண்ணுவாம். போம்பொருள்களைத் தடுப்பினும் நில்லாவாம். ஆகையால் யாரையும் வறியர் என்று இகழாதீர்கள் என்கின்றது வளையாபதி.

இது, 'இலன் என்னும் எவ்வம் உரையாமை' க்கு (உஉங) ஓருரையாகிறது. கொடுப்பவன் வாங்க வந்திருப்பவனைப் பற்றித் தம் பக்கலில் இருப்பாரிடம் 'இவன் ஓரேழை' என்றால் சமுதாயத்தில் (சமத்துவத்தை) ஒத்தநிலையை விரும்புகின்ற வந்தவன் உள்ளம் எவ்வளவு துன்பப்படும். அங்ஙனம் துன்புறச் செய்தலாகாது என்ற கருத்தைத் தாங்கி விளங்குகிறது.

நட்பு என்பது கண்டதும் காதல் என்றாற்போல உரு, அழகு, அணி, ஆடை முதலிய புறத்தோற்றத்தான் விளைவதன்று, உணர்ச்சியொத்தலால் விளைவது; விளைந்தபின் வளர்வதையன்றித் தேயாதது. உணர்ச்சி யொத்துளதா. என்று நட்பு கொள்வார் இருவராலும் எத்தனையோ சோதனைகளால் ஆராயப்படுவது. ஆராயாமல் யாரையும் நட்டல் கூடாது என்பதனை, 'யாரையும் நள்ளன் மின்' (வளை. 17) என்ற வளையாபதி குறிக்கிறது. இதுவும் 'நாடாது நட்டலின் கேடில்லை' (எகூக) என்ற வள்ளுவர் வாய்மொழி தந்த எச்சரிக்கையே.

வரம்பிகந்த காமத்தால் விளைவது பிறர்மனை நயத்தல். நயத்தல் மனத்தின் வினை. மனம் உட்கரணம். உட்கரணத்தின் வழி இயங்குவனவே புறக்கருவிகளாகிய கைகால் முதலியவைகள். இவற்றின் தொழில் நண்ணல், கடைநிற்றல் முதலியன. மன நெகிழ்ச்சி, செயலால் பிறர்க்கும் புலப்படுவதால் அதனைத் தடுத்தால் மனமும் தடுக்கப்படலாம் என்ற நினைப்பாற்போலும் வளையாபதி 'பிறர் பெண்ணொடும் நண்ணன்மின்' (வளை. 17) என்கின்றது. வள்ளுவமோ எதிலும் 'இளைதாக முண்மரங் கொல்க' என்ற தத்துவத்தைப் பற்றியது ஆதலால், விருப்ப நிலையிலேயே களைய எண்ணிப் 'பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை' (கசக) 'பிறனியலாள் பெண்மை நயவாதவன்' (கசஎ) 'பெண்மை நயவாமை நன்று' (கருo) என்று, விரும்புதலே கூடாது என்று பலமுறை கூறுகின்றது. இதன் பயனே இந்த வளையாபதிச் செய்யுட்பகுதி.

ஒருபாட்டில் பல குறள்

வளையாபதி இயற்றிய ஆசிரியர்க்குக் குறட்கருத்து அனைத்தையுமே தம் அறவுரையுள் அடக்கிவிட ஆசைபோலும். அதனால், ஒரு பாடலிலே பல குறட்பாக்களை நினைவு கூர வைக்கிறார்.

"ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெல்லாம்
தூற்றுமின் அறம் தோம்நனி துன்னன்மின்
மாற்றுமின் கழி மாயமும் மானமும்
போற்றுமின் பொருளா இவை கொண்டுநீர்" (வளை 19)

இதில், 'ஆருயிர் மாட்டெல்லாம் அருள் ஆற்றுமின்' என்பது 'நல்லாற்றான் நாடி அருளாள்க' (உ சஉ) 'அருள்சேர்ந்த நெஞ்சினார்' (உ சரு) 'மன்னுயிரோம்பி யருளான்வான்' (உ சச) என்பனவற்றை உளங்கொண்டெழுந்தவுரை.

'அறம் தூற்றுமின்' என்பது ஒருவனிடமுள்ள அறப் பண்புகளையே பலரறியப் பரப்புமின்; மறப்பண்புகளைத் தூற்றா தீர்கள் என்பதாம். இது 'அறங்கூறான் அல்ல செய்யினும்' (கஅக) 'அறங்கூறும் ஆக்கந்தரும்' (கஅரு) என்ற குறள்களின் சுருக்கக் கருத்தே.

'தோம் நனி துன்னன்மின்' என்பது, மனிதன் குற்றமே யில்லாதவனாக வாழ முடியாது. 'நெல்லிற்கு உமியுண்டு; நீர்க்கும் நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்கும் உண்டு' (நாலடி. 221) ஆனால் மிக்க குற்றம் இல்லாதவனாக வாழவேண்டும் என்பார் நனி துன்னன்மின் என்றார். இது 'எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப்பால்' (உ0௧) என்பதன் பிழிவாகும். வள்ளுவர் சிறிதும் தீவினையை யடையாதே என்றார். அக்கருத்தை ஏற்று ஊன்றி யாராய்ந்த இவர் தீவினை சிறிதுமின்றி மனிதன் எப்படியிருக்க வியலும்; ஆதலான் 'பெரும்பாலும் இல்லாதிருக்க' எனச் சிறிது புறநடை வகுத்தார்.

'மாற்றுமின் கழிமானம்' மானம் இன்றியமையாது வேண்டப் படுவதொன்றுதான். மயிர் நீப்பின் (௯௬௯) என்ற வள்ளுவமும் மான நீப்பின் வாழாமை முன்னினிதே என்பதையே வற்புறுக் கிறது. ஆயினும் எல்லை கடந்த மானம் கூடாது அது பல வகையான் ஆக்கத்தைக் கெடுக்கும்; ஆதலால் அதனைச் சிறிது மாற்றுங்கள் என்கின்றது வளையாபதி. வள்ளுவம், 'மாண்பு இறந்த மானமும் இறைக்கு ஏதந்தருவது' (சருஉ) என்கின்றது. இதன் கருத்து மானம் உன் மாட்சிமைக்கு உதவியானால் வைத்துக் கொள்; இல்லையானால் எல்லை கடந்திருக்குமானால் அது கூடாதது தான் என்று மானத்தின் வரம்பு கூறியதாம். அதனையே 'கழி' யென்ற அடையான் விளக்கினார் வளையாபதியார்.

அருளா – பொருளா ?

"பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் சொல்லாது
அருளைப் பொருளா அறஞ் செய்தல் வேண்டும்"
(வளை. 20)

"பொருளல்லது இல்லைபொருள்" (௭௫௧) என்ற வள்ளுவத்தை யெண்ணி பொருளையே பொருளாக மதித்து, வருந்தியாயினும், அதனைப் பாதுகாவாமல், உண்மைப் பொருள் உயிர்கள் மாட்டு நமக்குளதாகும் இரக்கமே என எண்ணி அறஞ்செய்க என்கிறது இப்பகுதி. ஏன்? இங்ஙனம் வற்புறுத்த வேண்டுமெனின், அதற்குரிய உண்மைக் காரணத்தை வள்ளுவம், பொருள் அற்பர்களிடத்தும் உள்ளது; ஆகையால் 'நல்லாற்றான் நாடி அருளாள்க' 'அருளே பொருள்' என்கின்றது. இதனை உட்கொண்டே வளையாபதி அருளைப் பொருளா அறஞ் செய்க என்றது எனலாம். அடுத்த பகுதி,

"அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்
இருளில் இயல்பு எய்தாதது என்னோ நமரங்காள்"
(வளை. 20)

என்பது. அங்ஙனம் பொருளைப் பொருளாகக் கருதாமல். அருளையே பொருளாகக் கருதி அறஞ் செய்தால் விண்ணில் இருளேயில்லாத ஒளியுலகையடையலாம் என்ற கருத்தமைதியைத் தந்தது.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்" (உ௪௩)

என்ற குறளேயாகும். 'வான்கண் இருள் இல் இயல்பு எய்தாதது' என்றது 'இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகல் இல்லை' என்றதன் மாற்று விளக்கமேயாம்.

உலகிலே தன் ஊன் பெருக்குதற்காகப் பிறிதோருயிரைக் கொன்று, அதன் ஊனை உண்பார் பலர். ஊனுண்டால் புலால் உண்பதாலாய பாவம் மட்டுமன்றிக் கொலைப்பாவமும் கூடவே விளைகிறது. ஆதலால், நான் கொல்வதில்லையே! கொன்றதனைத் தானே யுண்கிறேன் எனல் வேண்டா என்ற கருத்தை வற்புறுத்த. புலால் உண்பானுக்கும் கொலை செய்பவனைப்போலப் பாவம்

மிகுதியாக இல்லை என்பார் சிலர். அது தவறு; புலால் உண்பவனும் புலால் மிகுதியாகக் கிடைக்கவேண்டும் என விரும்புகின்றான். அதற்காகக் கொல்பவனும் ஊன் மிகுதியாகக் கிடைக்க வேண்டும்; ஊதியம் மிகுதியாகக் கிடைக்கவேண்டும் என்று மிகுதியாகக் கொல்கிறான். ஆதலால் பாவம் இருவருக்கும் உண்டு என்பதனை

" தகாதுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவம்
அவாவிலையி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்
புகாவலைவி லங்காய்ப் பொருது பிறவூன் கொன்று
அவா விலையில் விற்பானும் ஆண்டு அதுவேவேண்டுமால் "
(வளை 21)

என்றது வளையாபதி. இது,

" தினற்பொருட்டால் கொல்லாது உலகனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்" (உருசு)

வாங்குகிறவன் மேன்மேலும் வாங்குவதாலேயே விலைக்காகக் கொல்பவனும் கொல்கிறான். ஆகையால் இருவருக்கும் பாவம் உண்டு என்கின்ற வள்ளுவர் வாக்கை உட்கொண்டு கூறியதாம் அதிலும் ஒரு நயந் தோன்றக் கூறுகிறது வளையாபதி. உண்பவனுக்கு ஊனில் அவா; கொல்பவனுக்குப் பொருளில் அவா; இருவருடைய அவாக்காரணமாகத்தான் கொலை நிகழ்கிறது. ஆதலால் இருவருக்கும் ஏற்றத்தாழ்வில்லாமல் கொலைப்பாவம் உண்டு என்கின்றது .

மேலும் வளையாபதி பேசுகிறது; உலகமக்களினத்தைப் பார்க்கிறேன்; யாராவது கொல்லா விரதம்பூண்டு ஒருகொலையும் செய்யாதவர்கள் உளரோ என்று. ஒருவரையுங் காணேன். தூயஉணவு தான் நான் உண்பது; என்பான். அவனும் எத்தனையோ காய் கனி கிழங்கு வித்துவகைகளைக் கொல்கிறான். ஆகவே கொலைக்குற்றம் இல்லாத மனிதன் ஒருவன் கூட உலகத்திலில்லை. ஆகையால் நான் ஊனுண்பேனென்று சிறிதும் அறம்பாராது ஊன் உண்பவர்கள் தஞ்சுற்றத்தையே தான் உண்டவர்களாவர். இச் செய்யுளில், 'அறவினை ஓவாது' என்ற சொல்லாட்சியைத் தந்தது 'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதினோய், தந்நோய் போல் போற்றாக் கடை (௩௨௫) என்ற குறளே. சிறிது ஆய்வெண்ணம் இருக்குமாயின் அவன் ஊன் உண்ணான் என்பதனையுடக்கியே 'ஓராது' என்கின்றது வளையாபதி.

உலகவர்களே! நல்லகதிகளைக் காண்பீர்கள்; களங்கமில்லாத மதியைப் போல விளங்குவீர்கள்; எல்லாரானும் தொழப் படுவீர்கள்; ஆதலால்,

"உயிர்கள் ஓம்புமின்; ஊன் விழைந்து உண்ணன்மின்
செயிர்கள் நீங்குமின் செற்றம் இகந்து ஓரீஇ"

(வளை. 23)

என்றறிவுறுத்துகிறது. இப்பகுதியிலும் முடிபுக்கொரு குறள் அமைந்துள்ளது. 'உயிர்கள் ஓம்புமின்' என்றது வளையாபதி. அது இவ்வண்ணம் ஓம்புக என உபாயங் கூறவில்லை. வள்ளுவம் 'பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புக' (௩௨௨) என உபாயமும் உரைத்தது. உயிர்கட்கு உள்ளதைப் பகுத்துக் கொடுத்தோரே! தம்மைப்போல எம்மையும் எண்ணினூரே இவர் தம் ஒத்தவுணர்வு எப்படிப்பட்டது என எல்லாஉயிர்களும் உள்ளன்பைக் காட்டும். ஆதலால் உனக்கென்று ஒதுக்கிய உணவைப் பகுத்து – கொடுத்து உண்ணுக என வள்ளுவம் நயமும் சிறப்பும் தோன்ற நவின்றது.

'ஊன் விழைந்து உண்ணன்மின்' உம்மைக் கைதொழுது ஏத்தும் என்பது 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லாவுயிருந்தொழும்' (௨௬௦) என்ற வள்ளுவத்தின் படிச்சந்தம். 'செற்றம் இகந்து ஓரீஇச் செயிர்கள் நீங்குமின்' எல்லாக் குற்றங் களுக்கும் வித்து செற்றம். அது அகலுமாயின் குற்றங்களொன்றும் வராது என்பதாம். இது,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்" (௩௦௩)

என்ற திருக்குறளின் வேற்றுருவே எனற்கையமின்று. இதில் 'குற்றமே பொருளாகக் காக்க' (௪௩௪) என்பது உள் ஒளியாக மிளிர்கிறது.

எல்லாந் தவத்தான் வரும்

தவம் எல்லாவகையானும் மக்கட்கு ஏற்றந்தருவது. இதனால் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம். உயிருக்கு உணர்வொளி பெருகும். ஆதலால்,

"பொருளொடு போகம் புணர்தல் உறினும்
அருளுதல் சான்ற அருந்தவம் செய்ம்மின்" (வளை. 24)

என்கிறது வளையாபதி. எத்துணைப் பொருளும் அதனற் போகமும் தாமே வந்தியைவதாயினும் அவற்றைப் பெரிதெனக் கொண்டு மயங்காது, பிறவுயிர்க்கு இரங்குதலாகிய அருளே நிறைந்த அரிய தவத்தைச் செய்யுங்கள் என வேண்டிக் கொள்கிறது. இவ்வேண்டுகோளும் 'உயிர்க்கு உறுகண் செய்யாமை' (உகூக) யாகிய தவத்தை அடிப்படையாகக் கொண் டெழுந்ததேயாம்.

தவமும் தவம் உடையார்க்கே

தவம் தவமுடையார்க்கே ஆவது; பண்டைத் தவம் இல்லாதார் இப்போது தவஞ்செய்வோம் என்று முயலுதல் வீண் முயற்சியாம் என்பதைக் கருதிய திருக்குறள்,

“ தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது ” (உகூஉ)

இதுவே 'தவத்தின் மேல் உறை தவத்து இறை தனக்காவது அரிதே' (வளை. 25) என வளையா பதியுட் பேசப் பெறுகின்றது. உறை – உறைதல்; தவ அரசாக விளங்குபவர்க்கல்லாது தவத்தை மேற்கொளலும் முற்ற முடித்தலும் அரிய செயலாகும் என்பதாம்.

மயக்கு – பொருளல்லவற்றைப் பொருளாக உணரும் பேதைமையுணர்வு. அதனை நீக்குதலே நாம் எய்தும் உறுதிப் பொருள் என்பதைத் தொகுத்தே 'மயக்கு நீங்குதல்' என்பதால் குறிப்பிடுகின்றது வளையாபதி. இங்ஙனமே 'மனம் மொழியொடும் மெய்யில் செறிதல்' என்பது, 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை' (கூசங) என்பதையும் 'ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்க லாற்றின், எழுமையும் ஏமாப் புடைத்து' (கஉசு) என்பதையும் குறிப்பிப்பதாம்.

இளமையில் துறந்தது ஏன்?

மகளிரை முனிவர்கள் இளமையிலே துறந்தமைக்குக் காரணம் கூறுகின்ற வளையாபதி அரசனோடு நண்பினராணல் பிழைப்பாவது கிட்டும். பாம்போடு நட்பானல் அதனைவைத்து ஆட்டியாவது பிழைக்கலாம். மகளிரொடு பழகினல் பயனென்றுமில்லை என்று துறந்தனர் முன்னோர்.

“ அரசொடு நட்டவ ராள்ப விருத்தி
அரவொடு நட்டவ ராட்டியு முண்பர்
புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்
விரகில ரென்று விடுத்தனர் முன்னே ” (வளை. 30)

இது,

"அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்" (௯௦௯)

என்ற குறட்கருத்தைக் கொண்டொளிர்வதாகும்.

எல்லாக் காலத்திற்கும் இனத்திற்கும் தேயத்திற்கும் பொதுவான அறமுரைக்கும் வள்ளுவர் 'களவிலே பதிந்த உள்ளம், அதில் தோய்ந்து செயற்பட்ட காலத்து, அழியாத் துன்பத்தை யாக்கும்' (உ௮௪) என்றார். இங்ஙனம் வள்ளுவர் பொது வகையான் சொன்ன கருத்தை இம்மையில் அரச தண்டனைக்காக்கி வளையாபதி,

"பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்து
ஓடலின்றி உலையக் குறைக்குமே" (வளை, 31)

என்கின்றது. கையையும் காலையும் கட்டிப்போட்டு ஓடாமல் வெட்டும் பழைய தண்டத்தைக் குறித்தது. அல்லது வள்ளுவர் கூறிய,

"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு" (உ௯௦)

என்ற குறளில் முதற்பகுதியாகக் கூறப்பெறும், 'கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும்' என்றதன் விளக்கமாகவும் கொள்ளலாம்.

பொய்யாமையே நோன்பு

பொய் பேசாமல், அதனை ஒரு விரதமாகப் பூண்டு அறம்பல செய்தால் துன்பம் நீங்கி என்றும் இன்பவுலகிலிருக்கலாம் என்ற வளையாபதிச் செய்யுள் (32) பொய்யாமையான் பெறும் நன்மைகளை நவில்வது. இது,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (௩௦௦)

என்ற குறட்கருத்தைத் தழுவி எழுந்த விளக்கமாம்.

'வைகல் அறநெறி ஆற்றுமின்' என்பது
"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்" (௩௮)

என்றதன் சுருக்கமாகும்.

கொல்லாமையே சிறந்த அறம்

'மக்களே! நீங்கள் அழியாப் புகழுடன் வாழவேண்டுமானல்– மனித கதிமுதலான நான்கு கதிகளிலும் பிறந்திறந்து தடுமாறும், நிலைமாற வேண்டுமானல் – பிறவுயிர்கள் அஞ்சும்படிக் கொலை செய்தலை ஒழியுங்கள்' (வளை. 34) என்ற வளையாபதி, 'அறவினை யாதெனில் கொல்லாமை' (௩௨௧) என்ற தன் விளக்கமாகும்.

நிலையாததைக் கொண்டு நிலைத்ததைச் செய்க

'வள்ளுவர் செல்வம் நிலையாதது. அஃதுள்ளபோதே நிலைத்த அறத்தைச் செய்து பயன்கொள்ளுக' என்னும் கருத்தமைய,

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்ருல்
அற்குப ஆங்கே செயல்" (௩௩௩)

என்ருர். செல்வ நிலையாமை எவ்வெவ் வழியான் வரும் என்பதனை விளக்கி அதனல் பெறும் துன்பத்தையும் வகுப்பது,

"வெள்ளம் மறவி விறல்வேந்தர் தீதாயம்
கள்வர் என்ற இவ்வாறில் கைகரப்பத் தீர்ந்தகலும்"
(வளை. 35)

என்ற வளையாபதிப் பகுதி. பின்னும், மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப் புன்மை யுறுக்கும் புரையில் பொருள்' (வளை. 37) என்றும் கூறும்.

பொருள்தேடிக் குவிக்கும் வரை இன்ன அறம் செய்வோம் எனத் திட்டமிட்டுத் தேடி, அதன் பயனைக் கொள்வதற்கு முன்னே இழந்தவர் நிலையைக் காட்டுகிற வளையாபதி,

"........... பிறரவாம் வம்பப்பொருளை
யிழந்து சிறிதானும் எய்தாது ஓழிந்தார்
அழிந்து பெருந்துயர் நோய்க் கல்லாப்பவரே."
(வளை. 36)

என்பது. இது அல்லாக்கும்தன்மை 'நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மையால்' வந்தது எனக்கருதி அச்செல்வம் அழிந்தபின் அவனடையும் துன்பை விளக்குவது இப்பகுதி. ஆகவே குறட்பாவுக்கும் இதற்கும் உள்ள இயைபு எளிதில் உணரக்கிடக்கிறது.

செல்வம் இருந்தாலும் துன்பம்; இல்லையானாலும் துன்பம் என்ற கருத்தையறிவிப்பது 'இன்மை இளிவாம் உடைமை உயிர்க்கு அச்சம்' என்பது. (வளை. 37) இதில் 'இன்மை இளிவாம்' என்பது 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' (எருஉ) என்பதனையும் 'இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த, சொற்பிறக்கும் சோர்வு தரும்'. (கoசச) என்ற குறளையும் தொகுத்து அடக்கி வந்த சிறுசொற்றொடர்.

இச்செய்யுளில் வரும் 'துறவே விழுமிது' என்பது 'ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து, வேண்டும் பனுவற் றுணிபு' (உக) என்பதைக் கருதச்செய்கிறது. பின்வரும் 'அரும்பொருளை வேண்டாதொழிந்தார் விறலோ விழுமிது' (வளை. 38) என்பதும் அத்தகையதே.

செல்வத்தின் இன்றியமையாமையைக் காட்டும் 'இல்லெனின் வாழ்க்கையும் இல்லை' (வளை. 39) என்பது 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு' (உசஎ) என்பதனைக் கருதச் செய்யும்.

இளமை நிலையாமை

மனிதன் தனக்கு வாய்த்த உடலும் இளமையும் செல்வமும் என்றும் மாருதன; மடியாதன; நாம் கற்சிலைபோல நாலுயுகம் வாழ்வோம் என்ற நம்பிக்கையாலே நல்லறம் செய்யாமலும், தருக்கியும் செருக்கியும் நாளைக் கழித்துக்கொண்டே இருக்கிருன். அவனுக்கு இவற்றின் நிலையாமையை உணர்த்திஞல் அல்லது நாம் சொல்லும் நல்லுரைகள் அவன் செவியில் ஏரு; சிந்தையிற்; பதியா; என்பதை எண்ணிய வள்ளுவர்பெருமான் நிலையாமையை என்னும் அதிகாரத்திலே உடல் நிலையாமை, இளமை நிலையாமை, பொருள் நிலையாமை இவைகளை உணர்த்துகிருர். அதிலே ஒன்று,

> "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும்" (நடரு)

என்பது. இறக்குந்தறுவாய்; பொறிபுலன்கள் ஒடுங்கிவருகின்றன. விக்குள் நாவையடக்கித்தான் அடிக்கடி மேல்வருகிறது. அதற்கு முன்பே அறங்களைச் செய்க என இளமை நிலையாது. யாக்கை

நிலையாது என்பனவற்றை உணர்த்துகிறார். இதில் இளமை நிலையாமையை வளையாபதி சுவைபடச் சொல்கிறது. பாருங்கள் !

"வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழைய
கோற்கண் நெறிகாட்டக் கொல்களிற் றுழையதா
நாற்பதி கந்தாம் நரைத்தூதும் வந்ததினி
நீத்தல் துணிவாம் நிலையாது இளமையே" (*வளை.* 40)

இப்பாடல் வள்ளுவர் கூறிய நாவடங்குதல், விக்குள் மேலிடுதல் இரண்டற்கும் முன்னிகழ்வதாய நரைவரைதல், உடல் கூனுதல், மகளிரை நாம் விரும்பவும் அவர்கள் நம்மை வெறுத்தல் முதலிய நிகழ்ச்சிகளைக்கூறி இளமை நிலையாமையை உணர்த்துகிறது. ஆனாலும் வளையாபதி ஆசிரியருக்கு இந் நினைவோட்டத்தைத் தந்தது முற்கூறிய திருக்குறளேயாம்.

வளையாபதியாசிரியர்க்குத் திருக்குறளில் ஆழ்ந்த பற்றும் தோய்ந்த புலமையும் உண்டென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு பின்வரும் இச்செய்யுள். முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றியதற்கும் மேற்கோள்.

"மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும்மிகை யாவையுள்வழிப்
பற்றா வினையாய்ப் பலபல யோனிகள்
அற்றா யுழலும் அறுத்தற் கரிதே" (*வளை.* 42)

என்பது. இதில் முன்னிரண்டடியும் திருக்குறள் (௩௪௫) பின்னிரண்டடியும் அதன்பொருளை நன்கு விளக்கும் சாதனம். ஆற்று நீர்ப்பெருக்கம்போல இடையறாதுவரும் பிறவியை அறுத்து வீடுபேறாகிய பேரின்பத்தை எய்தவேண்டுவார்க்கு, அதற்குச் சாதனமாய் இறைவனால் உதவப்பெற்ற உடம்பும் மிகையாதலால் வேறு தொடர்புகள் எதற்காக ? வேற்றுத் தொடர்புகள் இருந்தால் அவற்றின்மேல் பற்றுண்டாகி பற்றால் வினைகளும் விளைந்து, வினை காரணமாகப் பலபல பிறவிகளிற் பிறந்து, உயிர்கள் வருந்தும். பின் அப் பற்றுக்களையறுக்கவும் முடியாது ; துன்புற நேரும் ; என்கிறது வளையாபதி. வள்ளுவர் பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பு மிகையாதலைமட்டும் உணர்த்தினார். வளையாபதியார் அவர் உடம்பு மிகை என்றதேன் ? உடம்பால் விளையும் பின் விளைவுகள் யாவை? அதனால் வருந் தீமை யாது என்பதனைக் கூறி அக் குறட்குச் சிறந்த விளக்கந் தந்தனர்.

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (௩௫௦)

என வள்ளுவர் பற்றற்ருன் பற்றினைப் பற்றுக; பற்றுவிடற்கு அப் பற்றினைப் பற்றுக என்கின்ருர். ஒரு பற்று ஒழிய ஒரு பற்று பற்றுக என்கின்ருர். ஒழியவேண்டிய பற்று உலகப் பற்று. அவை மாடு, மனை, வீடு-வாசல், அண்ணன். தம்பி, தாய்தந்தை, அக்காள், தங்கை என்ற பற்றுக்கள். இப் பற்ருல் விளைவது வினை. வினையால் விளைவது புண்ணிய பாவப் பயனுகிய இன்பத் துன்பங்கள். இவற்றிற்காக விளைவன பிறப்புக்கள். இப்படித் தேராழிபோல மேலும் கீழுமாக-யாற்றுநீர்ப் பெருக்குப்போல இடையருது பிறவி வருதற்கு ஏதுவாகலின் உலகப்பற்று ஒழிக்கத் தக்கது. பற்றுங் கருவியோ மனம். மனமோ குரங்குபோல ஒன்றைப்பற்றியொன்றை விடுமேயல்லாது பற்றியதையும் விட்டுத் தனியே நில்லாது. ஆதலால் உலகப் பற்றினை ஒழிக்கக் கடவுட் பற்றினை பற்றுக என்கின்ருர்.

உலகத்திலுள்ள எந்தப் பொருள்களும் நாம் அதைப்பற்ற நம்மையதுவும் பற்றிக் கொள்கிறது. நாம் உவர்ப்பாலோ – மாட்டாமையாலோ உதறித் தள்ளினுலும் நம்மையது விடுவதில்லை. 'உடும்பு வேண்டாம் கையை விட்டாற் போதும்' என்ற நிலையே நமக்கு விளைகிறது; காண்கிருேம். கடவுட்பற்ருே அங்ஙனமில்லை. நாம் அவரைப் பற்றுகிருேம். நம்மையும் அவர் பற்றுகிருர் ஆனல் நமக்கு உலகப்பற்றற்று உண்மை ஞானம் உண்டானபிறகு அவர் நம்மைப்பற்றுவதில்லை. நாம் என்றும் அவரையே பற்றிச் 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே' (திருவாசகம் 534) என்று கேட்டுகிருேம். ஆதலாலேயே கடவுளைப் 'பற்றற்ருன்' என்ற பெயரால் அழைத்து அவன் பற்றினைப் பற்றுக என்கிருர்.

உலகப் பற்ருனல் என்ன? இறைப் பற்ருனலென்ன? எல்லாம் பற்றுத்தானே! எனலாம். வெள்ளிய ஆடை ஒன்று; அழுக்கேறி யிருக்கிறது. அதனைப் போக்கச் சுண்ணும்பும் உவர் மண்ணும் ஊட்டுகிருேம். சுண்ணும்பு வெள்ளை; ஆடையின் வெண்மையை மிகுதிப்படுத்தற்காகவா சுண்ணும்பையிடுகிருேம். அன்று; அழுக்குப் போக்கத்தான். அது, பிறகு ஆடையை விட்டு நீங்கி விடுகிறது அதுபோல உலகப்பற்றைப் போக்கக் கடவுட் பற்றைப் பற்றுகிருேம். உலகப்பற்று ஒழிந்து உண்மை

ஞானம் பிறந்தபின் கடவுட் பற்றும் நீங்கித் தானேயாய் நிற்கும் தனிப் பெருநிலை விளைகிறது.

இங்ஙனமன்றி அழுக்கைப்போக்க அழுக்கையேயூட்டினல் அழுக்கு மிகுமேயன்றி அழுக்கு அகலுமா? அகலாதே அதுபோல ஆடையில் குருதிக்கறை படிந்ததானுல் குருதியிலே மீட்டும் தோய்த்துத் துவைத்தால் கறை நீங்காதே! அதுபோலப் பற்றினலாகிய பாவத்தைப் பற்றினலேயே போக்கவியலுமா என்பதனைக் கருதி,

"உற்ற உதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுதல் என்ஒக்கும்
பற்றின லாகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக் குறுமாறே" (வளை. 43)

என்று கூறுகிறது வளையாபதி. இது 'பற்றுக பற்றற்றான் பற்றினை' (௩௫௦) என்ற குறட்கு அமைதியையும்,

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு" (௩௪௭)

என்ற குறட்கு விளக்கத்தையும் தருவதாக இருப்பதைப் பார்க்கிறோம்.

வேண்டியன பெறலாம்

மக்களின் தேவை என்ன? வாய்க்குச் சுவையான-வயிற்றுக்கு நிறைவான – உடலுக்கு வலுவான உணவு வேண்டும். உடை வேண்டும்; புகழ் வேண்டும்; பொருள் வேண்டும்; இவ்வளவுதானே இங்ஙனம் வேண்டிய அனைத்தையும் அடையலாம் ஆதலால் தவத்தை இங்குச் செய்க. தவத்திற்கு அரியது யாவதே என்பதனை வள்ளுவர்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" (உசுரு)

என்றார். இங்ஙனம் வேண்டிய அனைத்தும் தவத்தால் எய்தலாவ தாயிருக்க, தவமிலாதான் ஒருவன் பொருளையும் போகத்தையும் விரும்பினுல் என்ன கிடைக்கும். வீண் அலைச்சலும் நோவுந்தாம். தவங்கூடத் தவமுடையார்க்கேயாகும் என்பதனை முன்பும் "தவத்தின் மேல் உறை, தவத்திறை தனக்கலது அரிதே" எனக் கண்டேமே! அங்ஙனமாகத் தவமின்றி நாம் பொன்னைப் போகத்தை

எய்த முடியுமா என்றார். இதனையே அமைத்து வளையாபதி பேசுகிறது,

"உய்த்தொன்றி ஏர்தந்து உழவுஉழுது ஆற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குறல் என்ஒக்கும்
மெய்த்தவம் இல்லான் பொருளொடு போகங்கட்கு
எய்த்துழந் தேதான் இடர்ப்படு மாறே" (வளை. 46)

என, அருமையான உவமை! ஏர் இருக்கிறது; காளையிருக்கிறது; உழவு ஒழுங்காக ஏழுசால் அடித்தாயிற்று; தானாக வயல் விளைந்து விடுமா? விதை வேண்டாமா? அது போலத்தான் தவம் இல்லாதவன் பொருள் போகங்கட்கு விரும்புதல் என்கிறது. இங்ஙனம் வள்ளுவமும் வளையாபதியும் இணைந்தியங்குதல் காண்க.

பணம் பத்தும் செய்யும்

பணம் பத்தும் செய்யும் என்பார்கள். அதிலொன்று; இழிந்த குலத்திலே பிறந்திருப்பான். பணங்குவிந்திருக்கும், அவன் உலகத்தாரால் உயர்ந்த குலத்தவனாக மதிக்கப் படுவான்: இதனை வளையாபதி பேசிற்று;

"குலந்தருங் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைகள் அழிபசி தீர்க்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருள்தரப் புன்கண்மை யுண்டோ" (வளை. 47)

என்று, 'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்' (எருக) என்று இரண்டும் சற்றேறக்குறைய ஒத்த கருத்தினவே.

அடுத்து வளையாபதி, 'கல்வி கொணர்ந்து முடிக்கும்' என்றது. கல்வி அறிவுருவானது. அது மணியின் கண் ஒளி போல உயிரின்கண் இயல்பாகவே அமைந்தது. அத்தகைய கல்வியைக் கொண்டுவந்து முடிக்கும் பணம் என்றால், பாருங்கள்! பணத்தால் படிப்பையும் விலைக்கு வாங்கலாம் என்பதுதானே கருத்து. இதனை வள்ளுவர் வாய்மொழி வறியர் நிலையில் வைத்துப் பொருளில்லாமையால், 'நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும்' என்கிறது. அதனையே பொருளுடையார் மேல் வைத்துப் பொருளாளர் கல்வியையும் கொள்முதல் செய்து விடுவார்கள் என்கின்றது வளையாபதி.

இல்லாரது இழிவு

வள்ளுவர் 'இல்லாரை எல்லோரும் எள்ளுவர்' (எடுஉ) என்றளித்த விதையைக்

"கெட்டோம் இதுஎம்நிலை என்று சார்தற்கண்
நட்டவர் அல்லார் நனிமிகுபவர் சுற்றம்
பெட்டது சொல்லிப் பெரிதிகழ்ந்து ஆற்றவும்
எட்ட வந்து ஓரிடத்து ஏசிநிற்பவே" (வளை. 48)

என விளைவித்துக் கொடுக்கிறது வளையாபதி. எங்ஙனமெனின், சினேகிதர்கள் மட்டும் அல்லர்; மிக நெருங்கிய சுற்றத்தார்கள்; அவனை யணுகி 'எம்நிலை சிறிது சீர்கெட்டது' என்று சொல்ல வாய்திறக்கு முன்பே அவர்கள் தம் மனம்போன போக்கிலே நினைத்ததை எல்லாம் பேசி, மிக இழிவாய்ப் பேசிச் சேய்மையில் ஓடிப்போய் நிற்பார்கள் என்றால், எள்ளும்வகை எப்படி என்றல்லவா விளக்கப்படுகிறது. இங்ஙனம் குறளுக்கு உரை கண்ட ஆசிரியர்களும் இதுவரை எம்மறிவிற்கு எட்டிய இலக்கிய ஆசிரியர்களும் விளக்காத பகுதியிது. மேலும்,

"பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போவர் மக்களும் ஒட்டார்" (வளை. 65)

என்பதும் இதனையே வலியுறுக்கும்.

இங்ஙனம் மேலும் இரு செய்யுட்கள் வறுமையின் இழிவை நமக்குப் புலப்படுப்பவை. வள்ளுவர், இனம்போன்று இனமல்லார் கேண்மை எங்ஙனம் நிலைபெறாது; மாறும்; தேயும் என்பதற்கு உவமை காட்ட முற்பட்டவர் 'மங்கையர் மனம்போல மாறுபடும்' (அஉஉ) என்றார். அவர்கள் காமன் அன்ன கணவனைப் பெற்றிருந்தாலும், குபேரனையே கொண்டவனாகப் பெற்றிருந் தாலும், விறல்மிக்க விசயனையும் வீமனையுமே கொழுநனாகக் கொண்டாலும் மங்கையர் மனம் மாறத்தான் செய்யும். அத்தகைய மனத்தை நான் ஒரே நிலையில் நிற்கச் செய்வேன் என ஒருவன் முயன்றால் அம்முயற்சி நீரிலே சிந்தி நாலா பக்கமும் பரவிக் கெட்ட எண்ணெயை நான் ஒன்று சேர்க்கிறேன் பார்! எனப் புறப்பட்டதனை ஒக்கும் என்ற கருத்தமைய,

"தெண்ணீர் பரந்து திசைதொறும் போய்க்கெட்ட
எண்ணெய் கொண்டு ஈட்டற்கு இவறுதல் என்ஒக்கும்
பெண்மனம் பேதித்து ஒருப்படுப்பேன் என்னும்
எண்ணில் ஒருவன் இயல்பெண்ணுமாறே" (வளை 49)

என்றது வளையாபதி. ஆகவே 'மங்கையர் மனம்போல மாறுபடும்' (அஉஉ) என்ற வள்ளுவத்தை ஒருவமை முகத்தான் மாறு படுதலையும் – அதனை ஒருநிலைப்படுத்தவியலாது என்பதனையும் விளக்கியது வளையாபதி.

வரைவின் மகளிர்

வள்ளுவர் வரைவின் மகளிர் முயக்கத்தின் இயல்பை உணர்த்தும்போது 'பொய்ம்மை முயக்கம்' (கூகரு) என்றும், 'அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார் இன்சொல் இழுக்குத் தரும்' (கூகக) என்றும் கூறிய அறவுரை வளையாபதியில்,

"நீள்முகை கையாற் கிழித்தது மோக்குறும்
மாண்வினைப் பாவை மறைநின்று கேட்குறின்
பேணலும் அன்பும் பிறந்துழிப் பேதுசெய்து
ஆணைப் பெண் ணைய அணைக்குமாறே" (வளை. 50)

என உருக்கொண்டுள்ளது.

மணமுள்ள மல்லிகைக்கொடி; அதிலே ஒரு காயரும்பு. அலரும் பருவங் கூடாத அரும்பு. அதனைப் பறித்துக் கசக்கி முகர்வது போலிருக்கும் பரத்தையின் புணர்ச்சியின் இரகசியத்தை யறிய விரும்பினால் அவர்கள் ஆடவர் விரும்பாதபோதும் அவர்களை வலிய விரும்புவர். அங்ஙனம் அவர்கள் விரும்புதல் ஆடவரை நையப் புணர்தற்கு அறிகுறியாம் என்பது அதன் கருத்து. உண்மையன்பு இல்லாதபோதும் உடையார் போல நடித்து, ஆடவன்பால் அன்பு சுரக்கச் செய்து பொய்யாக முயங்குவர் என்பதை யுணர்த்துவதால் இப்பகுதி பொய்மை முயக்கத்தைக் கருதியது எனல் தெளிவு.

இங்ஙனம், வளையாபதிக் காப்பியம் வரலாற்றுப் பகுதியால் என்ன சுவையை யுடையதாக எங்ஙனம் இருக்குமோ! அறியேம். ஆயினும், அது சொல்லும் சில நீதிப்பகுதிகள் திருக்குறளை உயிராகக்கொண்டு உரிய விளக்கந்தந்து உதவுவதைக் காண்கிறோம். இனிக் குண்டலகேசியிற் குறளைக் காண்போம்.

குண்டலகேசியுள் வள்ளுவம்

குண்டலகேசியுள் வள்ளுவம்

அறிமுகம்

குண்டலகேசி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. பௌத்த மதக் காப்பியம். சமணசமயக் கொள்கைகளை மறுப்பதற்கென்றே எழுந்தது என்பது நீலகேசி உரையால் தெளிவாகிறது. ஓரளவு வரலாறுகளும் கூட நீலகேசியால் உணர்த்தப் பெறுகிறது. சீவக சிந்தாமணிக்கும் வளையாபதிக்கும் காலத்தால் முற்பட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்த நூலாகலாம் எனக்கருதுகின்றனர் சிலர்.

குண்டலகேசியின் இளமைப்பெயர் பத்திரை என்பது. பத்திரை இராசகிருகநாட்டு அமைச்சன் மகள். ஒரு கள்ளனை மணந்தாள். ஊடற்காலத்துண்டான பிணக்கால் கணவன் இவளைக் கொல்லக் கருதினான். மலையுச்சிக்கு அழைத்துச் சென்று பத்திரையைக் கொல்லப்போவதாக உரைத்தான். இஃதுணர்ந்த பத்திரை அவனை வஞ்சனையால் கொன்றாள். சைனத் துறவியானாள் அப்போது ஆரியாங்கனைகளால் இவள் மயிர் பறிக்கப்பட்டது. முளைத்தவை சுருண்டிருந்ததால் குண்டலகேசி எனப்பட்டாள். சைனமத நூல்களைக் கற்றுத் தேர்ந்தும் சாரிபுத்தனால் வெல்லப் பட்டாள். சாரிபுத்தர் புத்தப்பெருமானிடம் அழைத்துச் சென்றார், புத்தத் துறவியாக்கினார். பலசமணர்களை வென்று பௌத்த தேரியாகவே வாழ்ந்து நிர்வாணம் எய்தினாள் என்பது வரலாறு.

இதனைச் செய்தவர் நாதகுத்தனார் என்னும் பௌத்தர். இந் நூல் முழுதும் கிடைக்கப் பெற்றிலது. ஆனால் உரைகளில் வந்தவை பத்தொன்பது செய்யுட்கள். நீலகேசிக்கு உரைசெய்த சமயதிவாகரவாமன முனிவர் உரையிற் குறித்துப்போந்த முதற் குறிப்பு மாத்திரையாய் அறியப்பெறுவன 92. கிடைத்த பாக்களில் குறளைத் தேடிக்காண்போம்.

முதற்பாட்டு கடவுள் வாழ்த்து. புத்தப்பெருமானை வாழ்த்தி யது. அதில் புத்தருடைய பல குணங்கள் பேசப் பெறுகின்றன.

அவற்றுள் ஒன்று 'தனக்கென்று ஒன்றுனும் உள்ளான்' என்பது. இது, 'நோன்பிற்கு இன்மை இயல்பாகும்' (௩௪௪). என்ற வள்ளுவத்தின் எதிரொலியாக அமைந்திருப்பதைக் காணலாம். உள்ளான் எண்ணுதவன்.

வள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் அறிவிக்க வந்தவர் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறன்' (௩௪) என்றுர். மனத் தூய்மையே மாண்புமிக்க அறம் என்பது அவர் முடிவு. இதனைக் குண்டலகேசி,

> " தீயவினை நோக்கும் இயல்சிந்தனையு மில்லாத்
> தூயவினை நோக்கி யுளதுப்புரவும் எல்லாம் " (குண். 3)

என வகுத்தது. உலகிலே தூய்மை என்பது தீயவினைகளைப் பார்க்கும் நெறிகளிற் செல்லும் சிந்தனையே யில்லாத தூயவனிட மட்டும் உள்ள சிறந்த குணம். அத்தகைய தூயவனிடமே துப்புரவும் உள்ளது என்கின்றுர். ஆகவே மனத்தூய்மையே அறம் என்பதை வலியுறுத்திருாயிற்று.

தவம் என்பதியாது என்ற சிந்தனை வள்ளுவர்க்கு எழுந்தது. அவர் வந்த துயரைப் பொறுத்தலும் உயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய இரண்டேயாம் என்றுர். 'உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு'. (உ௬௧) என்பது அவர் உரை. இதில் உற்றநோய் நோன்றல் என வள்ளுவர் கூறியதை விரித்துக் கூறுகின்ற குண்டலகேசி.

> " போர்த்தல் உடைநீக்குதல் பொடித்துகண் மெய்பூசல்
> கூர்த்த பனியாற்றுதல் குளித்து அழலுள்நிற்றல்
> சாத்தரிடு பிச்சையர் சடைத்தலை யராதல்
> வார்த்தை இவைசெய்தவம் மடிந்தொழுக வென்றுர் "
>
> (குண். 4)

என்கின்றது. குளிராலும் பனியாலும் உடலுக்கு உறும் நோயைப் போர்த்தல் உடையணிதல் முதலியவற்றுலும் உடல் நடுக்கத்தைத் துகளான வெண்ணீறணிவதாலும் வெப்பத்தைக் குளித்தலாலும் போக்கிக் கொள்வது மரபு. குளிர்காலத்தும் மழைக்காலத்தும் பனிக்காலத்தும் ஆடையணியாமல் நீருட் குளித்தலும், வேனிற் காலத்து வெயிலில் நிற்றலும், அழல் நடுவில் நிற்றலும் உற்றநோய் நோன்றலாவன என்பதை விளக்கியவாறும்.

காமத்தின் தீமை

காமம் மிகக்கொடியது. தீப்போல உள்ளிருந்தே காந்துவது. அதனை நுகர்ந்து நுகர்ந்து உவர்ப்புண்டாகித் துடைப்போம் எனக் கருதுவது நெருப்பை நெய்யால் அவிக்க எண்ணுவது போலாம் என்ற கருத்தமைந்த,

"வகையெழில் தோள்கள்என்றும் மணிநிறக்குஞ்சி என்றும்
புகழ்எழ விகற்பிக்கின்ற பொருள்இல் காமத்தைமற்றோர்
தொகைஎழுங் காதல்தன்னால் துய்த்துயாம் துடைத்தும் என்பார்
அகையழல் அழுவந்தன்னை நெய்யினால் அவிக்கலாமே"
(குண். 5)

என்ற குண்டலகேசிச் செய்யுள்

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்." (கக௪அ)

என்ற வள்ளுவத்தின் வளர்ச்சியாகும். கௌவை – அலர். அது பலராலும் பேசப்பெறும் பழி ஆரவாரம். அதனைக் கொண்டு காமத்தை வெல்வேம் என்று நினைப்பது நெய்யைச் சொரிந்து தீயை அணைக்கக் கருதுவது போலும் என்ற வள்ளுவமே குண்டல கேசியின் இச்செய்யுளுக்குக் கருத்தோவியம் வழங்கும் கவிதை மணியாயிற்று எனலாம்.

நிலையாதன என்றும் நிலையா

தோன்றிய யாவும் அழிவன. அழியும் பொருள்களுக்காக நாம் வருந்தவேண்டா. அங்ஙனம் வருந்துபவர்கள் 'நாங்கள் அப் பொருள்களின்மேல் வைத்த காதலால் அழுகின்றோம்' என்பா ராயின் அழுதழுது கண்ணை வீணாக வருத்துபவரேயாவர் என்னும் கருத்தமைந்த

"போதர உயிர்த்த ஆவி புகவுயிர்க் கின்றதேனும்
ஊதியம் என்று கொள்வர் உணர்வினான் மிக்கநீரரர்
ஆதலால் அழிதன் மாலைப் பொருள்களுக்கு அழிதல் வேண்டா
காதலால் அழுதும் என்பார் கண்நனி களைய லுற்றார்" (குண். 7)

என்ற குண்டலகேசி,

"நில்லாத வற்றை நிலையினஎன் றுணரும்
புல்லறி வாண்மை கடை" (௩௩௧)

என்ற குறளை நினைவூட்டுகிறது. இக்குறள், பல பொருள்கள் நம் கண் முன்னே தோன்றி நின்று அழிவதைக் கண்டுவைத்தும் அவைபோல இவைகளும் ஒருகாலத்து அழிவனவே என்பதை எவனும் அறிந்துகொள்ளாமலிருக்க வியலாது. அறிந்தும் நிலையின என்று கருதுவானாயின் அவ்வறிவு புல்லறிவாயினும் அதற்கும் ஒரு காரணம் வேண்டும். அதனை எந்த உரையாசிரியரும் விளக்கிலர். ஆனால் பரிமேலழகர் மட்டும் 'புல்லறிவாளர் பெரும் பான்மையும் பற்றுச் செய்வது சிற்றின்பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை அனுபவிக்கும் யாக்கையின் கண்ணும் ஆகலின்' எனக் குறித்துப் போந்தார். அக்குறையை இக்குண்டலகேசி 'காதலான்' எனக் காரணங்கூறி விளக்குகிறது.

யாக்கை நிலையற்றது

ஒவ்வொரு நாள்களும் நம் உயிரை ஈரும் வாளின் வாய்ப்பல். அதனை யுணர்ந்தால் உய்யலாம்; உணராதார் அறுபட்டு இறக்கலாம் என்பதை அழகுற விளக்குவது,

"நாள்என ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள்அஃது உணர்வார்ப் பெறின்" (௩௩௪)

என்னுங் குறள். இதனை நன்றாக மனத்தில் வாங்கி வைத்துக் குண்டலகேசி கூறுகிறது, 'நாம் இன்று திங்கள், நாளை செவ்வாய், இன்று பொங்கல், நாளை ஆண்டுப் பிறப்பு என்று நாளிலே அடி வைத்து இல்வாழ்க்கைப் பாதையில் செல்கின்றோம். எதற்காகச் செல்கின்றோம் என்று சிறிதும் சிந்திப்பதேயில்லை. நம் உயிரை உண்ணக் காத்திருக்கும் கூற்றுவனுடைய வாள் போலும் கூரிய வாயிலே தலையைக் கொடுக்கப்போகிறோம். இந்த நிலையில் நாம் வாழ்கின்றோமா ? என்று ஏளனம் செய்வதுபோல விளக்குகிறது. பாடலைப் பாருங்கள் !

"நாள்அடி யிடுதல் தோன்றும் நம்உயிர் பருகும் கூற்றின்
வாளின் வாய்த் தலைவைப் பாக்குச் செல்கின்றோம்
வாழ்கின்றோமோ ? (குண. 10)

என்பது அப்பாடற்பகுதி. இப்பாடலிலும் குறளிலும் நாள், வாள் என்ற சொல்லொற்றுமை காணப்படுவதாயினும், குறளின் பொருளமைதியைச் சிறிது மாற்றுவதாகிறது இப்பாடல். நாள் என ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும் வாளாக இருக்கிறது. அது

உயிர்கொல்லும் கூற்றுவன் கையது என்று நாம் உணரு கின்ருேமா? இல்லையே. ஆதலால் உணர்வார்ப்பெறின் காலம் கழிகின்றமை கருதிக் களியேம் என்று சிலசொற் பெய்து உரை கொள்ளவும் துணைபுரிவதுபோலும்.

செல்வம் நிலையாமை

அழிவன அழியும்; ஆவன ஆகும்; வருவன வந்தே தீரும்; போவனபோம்; இவற்றையாரும் மாற்றியமைத்தல் இயலாது. ஆதலால், உண்மையுணர்ந்தோர் உவத்தலும் வெறுத்தலும், அழுதலும் களித்தலும் செய்யார். இவையனைத்தும் ஊழால் வந்தன, நன்றும் தீதும் பிறர்தரவாரா என்று எண்ணி அமைவர். என்னுங் கருத்தினைக் காட்டுவது.

"மறிப மறியும்; மலிர்ப மலிரும்;
பெறுப பெறும்; பெற்றிழப்ப இழக்கும்;
அறிவது அறிவார் அழுங்கார் உவவார்
உறுவது உறும் என்று உரைப்பது நன்று" (குண். 18)

இதன் முதலடி அழிவன அழியும் ஆவன ஆகும் என்பது இது.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம" (௩௭௬)

என்ற குறளின் பிழிவாம்.

'அறிவது அறிவார் அழுங்கார் உவவார்' என்ற மூன்ரும் அடி, உண்மையை நன்ருக உணர்ந்தவர்கள் வருந்தவுமாட்டார், மகிழவுமாட்டார் என்கிறது. இது,

"நன்ருங்கால் நல்லவாக்காண்பவர் அன்ருங்கால்
அல்லற் படுவ தெவன்" (௩௭௯)

என்பதால் விளைந்த வளர்ச்சியாம்.

உண்மை ஞானம் உடையோர் எது நிகழினும் அது ஊழின் செயல் என்று எண்ணி அமைதியுடன் இருப்பர். 'பேர்யாற்று நீர்வழிப்படூஉம்புணை போல் ஆருயிர் முறைவழிப்படூஉம்' என்பது அவர்கள் முடிபு.

இராமாயணத்து, இராமன்,

"மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருத் துறந்தேகென்ற போதினும்
சித்திரத்தி னலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தின"ளுக இருந்தான் (கம்ப. சுந்தர. 349)

என்ற கம்பர் கூற்றும் இந்நிலையை நன்கு விளக்கும். இதனைக் குண்டலகேசி,

"வேரிக் கமழ்தா ரரசன்விடு கென்ற போழ்தும்
தாரித்த லாகா வகையாற் கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடுதல்என் றிவற்றுற் பொலிவின்றி நின்றான்
பாரித்த தெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்"
(குளா. 19)

இதில் அரசன் ஒருவன் குடிமகன் ஒருவனுக்கு குற்றத்தண்டம் விதிக்க எண்ணி, அவன்மீது குற்றமின்மையைக் கண்டு விடுக என்றான். பின்னர் அமைச்சர்களோடு கலந்து. 'கொல்லுக' என்று ஆணையிட்டான். அரசன் விடுக என்றபோதும் கொல்லுக என்ற போதும் எல்லாம் வினையின் பயன் என்று மகிழ்வும்–துன்பமுமின்றி அம்மகன் இருந்தான் என்ற உண்மை உரைக்கப் பெறுகிறது. இதுவும்,

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம"

என்ற குறட்பாவின் கருத்தாகிய துணிவே அக்குடிமகன் நெஞ்சத்து நிலைத்திருப்பதைக் காட்டுகிறது.

இங்ஙனம் குண்டலகேசியிற் கிடைத்த பாடல் பத்தொன்பதே யாயினும் அவற்றுள் இத்தனை குறள் மணிகள் புதைந்துகிடக்கக் காண்கிறோம். நூல் முழுதும் கிடைத்து வரலாற்றோடு ஒட்டிக் காண நேர்ந்தால் மேன்மேலும் எத்துணைப் புதிய திருப்பங்களை–புத்துரைகளைப் பெற்றிருப்போம் என்று எதிர்நோக்கச் செய்கிறது இந்நூல்.

★

சூளாமணியுள் வள்ளுவம்

சூளாமணியுள் - வள்ளுவம்

அறிமுகம்

ஒப்புமைகாண முற்படும் இவ்விரு நூல்களில் சூளாமணியே அறிமுகப்படுத்துதற்கு உரியது. வள்ளுவம் உலகிற்கு அறிமுகம் தேவையில்லாததொன்று. ஆனாலும் பன்முறையாக முன்னர் அறிமுகப்படுத்தப்பெற்றுள்ளது.

சூளாமணி ஐஞ்சிறு காப்பியங்களுட்டலையாயது. வரலாற்றுச் சிறப்பும், அணிகளின் அமைதியும், கற்பனை வளமும், நீதிச் செல்வமும் நிறைந்ததொரு காப்பியம். காப்பியப் பண்பு முழுதும் அமையாததென்பாரும் உளர்.

இந்நூலிற் செறிந்துள்ள காமம், வீரம், பெருமிதம் முதலான சுவைகளே இந்நூலைப் படித்து முடிக்கவேண்டும் என்ற பேரார் வத்தைப் பெருக்குவன. பெருங்காப்பியத்துட் சீவகசிந்தாமணி போலச் சைனசமய நுணுக்கங்கள் தழுவியது.

தமிழன்னைக்கு முடிமணிபோல விளங்குவதால் சூளாமணி என அழைக்கப்பெறுவது. உலகின் முடிக்கோர் சூளாமணியான பயாபதி மன்னன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதால் இப் பெயர்பெற்றது எனவும் கூறலாம்.

கம்பர் முதலான கவிஞர் பெருமக்களாலும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர்போன்ற உரையாசிரியர்களாலும் கையாளப் பெறுகின்ற சொல்லழகும் தொடரழகும் பொருந்தியது.

இதன் ஆசிரியர் தோலாமொழித் தேவர். தோலாமொழி என்பது இவரது இயற் பெயரன்று. "தோலாதாய்" (செய் 1473) "தோலா நாவிற் சுச்சுதன்" (308) என இவர் எடுத்தாளுவதாலும், இணையற்ற புலமைச் சிறப்பாலும், தஞ்சமய நுணுக்கங்களைக் காப்பிய உறுப்பினர் வாயிலாகக் காட்டும்

தனித்தகுதியானும் வந்த காரணப்பெயராதல் கூடும் என்பது ஆய்வாளர் துணிவு.

இவர் கார்வெட்டி அரசன் விசயன் காலத்தவர். இந்நூற் பாயிரத்தில் இவரே 'சேந்தன் என்றும் தூமான் தமிழின் கிழவன் .... அவையுள் தெருண்டார் கொளப்பட்டதன்றே' என்பதால் சேந்தன் அவைக்களத்து அரங்கேறிய செய்தி புலப்படும். சேந்தன் அவனி சூளாமணி மாறவர்மனாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து. காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர் K. A. நீலகண்ட சாஸ்திரிகள்.

இதன் முதல் நூல் மகாபுராணம் என்பது. அதன் சுருக்கம் ஸ்ரீ புராணம் – அதில் 11வது சிரேயாம்ஸ ஸ்வாமி புராணத்தில் இவ்வரலாறு காணப்பெறுகின்றது.

இந்நூல் பாகவத புராணத்தை மனக்கொண்டு எழுந்தது போலுள்ளது. அதன் வரலாற்றுறுப்பினராகிய கண்ணனும் பலராமனும் இங்கு விசய திவிட்டராகக் காட்சி வழங்குகின்றனர். பவுண்டர வாசுதேவன் இங்குப் பிரதி வாசுதேவனாகிறான். ஏனைய சீயவதைபோன்ற வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தும் பாகவதம் பத்தாவது கந்தத்தின் அமைப்பிலேயேயுள்ளன.

வரலாற்றுச் சுருக்கம்

சுரமை நாட்டிலே போதனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பயாதிபதி மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு மிகாபதி, சசி என இரு மனைவியர் இருந்தனர். மன்னன் இருபெருந்தேவியரோடு கூடிய திருமால் போல உலகை அமைதியுடன் ஆண்டு வந்தான்.

மன்னன் மனைவியர் இருவரில் மிகாபதிக்கு விசயனும், சசிக்குத் திவிட்டனும் மக்களாகத் தோன்றினர். அழகாலும் – அறிவாலும் ஆற்றலாலும் மிக்கு வளர்ந்தனர். இவர்களுள் திவிட்டன் புகழால் மிக்கவன். விஞ்சையருலகத்தையும் வென்றாளும் திறமிக்கவன் என நிமித்திகன் வாயிலாக அறிந்த மன்னன் அவன் கூறிய சொற்களின் உண்மையை யறிய விரும்பி, அமைச்சர்களுடன் கலந்து எண்ணினன். அமைச்சர் கூறிய வண்ணம் துருமகாந்தன் என்பவனைப் புட்பமாகரண்டம் என்றும் பொழிலுக்குக் காவலாக வைத்து நிமித்திகன் சொன்ன விஞ்சை வேந்தன் வரவை எதிர்நோக்கியிருந்தான்.

இங்கு இவ்வாருக, வெள்ளிமலையிலே விஞ்சையர்சேடி என்னும் வித்தியாதர உலகத்திலே இரதநூபுரச் சக்கரவாளம் என்னும் தலைநகரில் சுவலனசடி என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு வாயுவேகை என்பாள் மனைவி, அவள் வயிற்றில் அருக்க கீர்த்தி என்ளெரு மகனும், சுயம்பவை என்ளெரு மகளும் பிறந்தனர். பெண்பிறந்த பிறகு சுவலன சடிக்கு அரசர் அனைவரும் அடிபணிந்து வாழ்ந்தனர் அவளும் மணப்பருவம் அடைந்தாள்.

ஒரு நாள் மன்னன் தன் மனைவி மக்களோடு பொழில் வளங்காண 'மனோவனம்' என்ற சோலைக்குச் சென்ருன் பொழில் வளங் கண்ட பிறகு அங்கிருந்த சினன்கோயிலுக்கு வழிபாடாற்றச் சென்ருன். வணங்கி வெளியில் வரும்போது, சமணமுனிவர் இருவர் அந்தர வழியாக வந்து அங்கிருந்த அசோக மரத்தடியிலுள்ள கற்பலகைமீது அமர்ந்தனர். அவர்கள்பால் அரசன் அறவுரை கேட்டான். உடனிருந்து கேட்ட சுயம்பிரபை, சக்கரவாள நோன்பியற்றத் தொடங்கினுள். ஒருநாள் நோன்பு முடித்துத் தெய்வத்திற்குப் பெருவிழா எடுத்து, அருகதேவன் அருட்பிரசாதங்களைக் கொண்டு அரசன்பால் வந்தாள். அரசன் மகளுடைய பேரழகைக் கண்டு வியந்து மணுளனைத் தேடுவதற்காக மந்திரிசபையைக் கூட்டினுன்.

மந்திரிகள் ஒவ்வொருவரும் தாந்தாம் கண்ட அளவில் பல மன்னர்களை நினைவூட்டினர். அமைச்சருள் சுமந்திரி என்பான். சதவிந்து என்ற நிமித்திகனை அழைத்துக் கேட்போம் என்ருன். அங்ஙனமே சத விந்துவின் இல்லத்திற்கு அரசன் சென்று, அவன் வாயிலாகத் திவிட்டனுடைய வரலாறுகளை அறிந்து அவனுக்கே மகளைக் கொடுப்பதாக எண்ணி மனைவியோடும், மந்திரிகளோடுங் கலந்து மருசி என்பவனைப் பயாபதியிடம் தூதனுப்பினுன்.

மருசியின் வாயிலாக விஞ்சையர் வேந்தன் விருப்பத்தையும் குலமரபையும் கேட்ட பயாபதி மன்னன் திருமணத்திற்கு இசைவு தந்தனன்.

சுவலனசடி மருசியின் வாயுரை கேட்டு மகிழ்ந்திருக்கும்போது, சுமந்திரி 'திவிட்டன் ஒரு திங்களில் ஒரு சீயத்தைக் கொல்வான் என்று நிமித்திகன் கூறியதையும் ஒற்றனுப்பி உற்று நோக்கு வோம்' என்றனன். மன்னன் அங்ஙனமே ஒற்றனுப்பி உவகை யோடிருந்தான்.

இங்கு இவ்வாறாக, வடசேடியை ஆண்ட அசுவகண்டன் என்னும் அரசன், நிமித்திகன் கூறியதை அறிந்து கொள்ள, அரிமஞ்சு என்னும் அமைச்சனுடைய ஆலோசனையின் வண்ணம், பயாபதி மன்னன் தனக்குத் திறைகட்டி வரவேண்டும் என நாலு வீரர்களைத் தூதனுப்பினான்.

தூதர்கள் பயாபதியைக் கண்டு நிகழ்ச்சியைக் கூற, அவனும் இசைந்து தூதர்க்குச் சிறப்புச் செய்து, சேடிக்கு அனுப்பினான். இச்செய்தியை ஒரு குள்ளன் வாயிலாக அறிந்த விசய திவிட்டர் தூதுவரையழைத்து நன்கு வெருட்டி அனுப்பினார்கள். தூதர் சென்று அசுவகண்டனுடைய மந்திரியாகிய அரிமஞ்சுவிடம் அறிவித்தனர்.

அரிமஞ்சு, அரிகேது என்னும் வித்தியாதரனை அழைத்து, நீ மாயச்சிங்க வடிவு கொண்டு திவிட்டனைக் கொன்று வருக என ஏவினான். இதனை அசுவகண்டனுடைய தூதுவர் வாயிலாக அறிந்த திவிட்டன், அச்சிங்கத்தைத் துரத்திச் சென்றான். அது மலைமுழை ஒன்றிற் புகுந்து மறைந்தது. அங்கிருந்த மற்றொரு சிங்கம் இவனை எதிர்த்து வந்தது. திவிட்டன் அதனோடு பொருது அதன் வாயைப் பிளந்து கொன்றான். இச்செய்தியை அறிந்த ஊரவர் வரவேற்றனர். விசயன் தந்தையிடம் நிகழ்ச்சிகளை அறிவித்தான். அரசன் கேட்டு மகிழ்ந்தான்.

இச் செய்தியை ஒற்றர் வாயிலாக உணர்ந்த சுவலனசடி தன் மகள் சயம்பிரபையோடும் தன்மனைவி வாயுவேகையோடும் மந்திரிகள் புடைசூழப் பயாபதி மன்னன் ஊருக்குச் சென்றான். பயாபதி மன்னன் அவர்களை வரவேற்றான். சுயம்பிரபை. தன் தோழி அமிர்தபிரபை காட்டத் திவிட்டனைக்கண்டு காதலித்தாள். மறுநாள் திருமணம் நடந்தது.

வித்தியாதரர் உலகிலிருந்து வந்த ஒற்றன் வாயிலாக அசுவகண்டன் தன்மீது படையெடுக்கப்போவதையறிந்துகொண்ட சுவலனசடி, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாதவன்போல, வந்த தூதனைப் பார்த்து, ' திவிட்டன் சீயத்தைக் கொன்ற செய்தியைக் கேட்ட அசுவகண்டன் நிலை யாங்ஙனம் இருந்தது ' என வினவினன். தூதன், சினத்தால் அசுவகண்டன் ஆர்ப்பரித்த நிகழ்ச்சிகளை அறிவித்துக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு தூதன் ஓடிவந்து. சடி மன்னன் தன் மகளைப் பூமிக்கு அழைத்துப்

போனதையும், திவிட்டனுக்கு மணமுடித்துக்கொடுத்ததையும் கூறினன்.

அசுவகண்டன் ஆறுச் சினங்கொண்டு, தூதன் ஒருவனைத் திவிட்டனிடம் அனுப்பினன். வந்த வித்தியாதரத்தூதன் 'சடியரசன் மகளைக் கொண்டுவந்து ஒப்புவிக்கிறீர்களா அல்லது உயிரைத் தருகிறீர்களா ? என்று கேட்டுவரச் சொல்லினர்' என்றான்.

அதனைக் கேட்ட திவிட்டனுக்குச் சினம் பொங்கிவந்தது. அருகில் இருந்த அரசர்கள் 'போருக்கு வரச்சொன்னதாகச் சொல்லியனுப்பினர். அங்ஙனமே அவன் படையெடுத்துவந்தான். இருசாராருக்கும் கடும்போர் நடந்தது. இறுதியாக அச்சுவகண்டன் திவிட்டன்மீது சக்கரப்படையை ஏவினன். சக்கரப் படை திவிட்டனை வலம் வந்து, மீண்டு சென்று அசுவகண்டனைக் கொன்றது. வெற்றியை வியந்து தேவர் பூமாரி பெய்தனர்.

தந்தை பயாபதி மன்னன், தனயன் வெற்றியைப் பாராட்டி அவனுக்கு முடிசூட எண்ணி, அமைச்சர்களுடன் கலந்து உரிய நாளில் முடிசூட்டினன். திவிட்டனிடம் எல்லா நலன்களும், நிதியங்களும் வந்தீண்டின. மறுநாள் சுயம்பிரபையைப் பட்டத்தரசி ஆக்கினன். திவிட்டன் எதிரிலியாய் உலகையாண்டுவந்தான்.

சுயம்பிரபை விஞ்சையருலகிலிருந்து கொண்டுவந்து நட்ட பாரிசாத மரம் அரும்பியது. அதனொடு காமவல்லியைக் கொண்டு வந்து கடிமணம்புரிதல்வேண்டும் என விரும்பினள். இச் செய்தியைத் தோழிமூலமாகத் திவிட்டனுக்கு அறிவித்தனள். திவிட்டனும் ஒப்புதல்தந்து உய்யானத்திற்கு வந்தனன். மண விழா விதூடகன் துணையுடன் நகைச்சுவை ததும்ப நன்றாக நடைபெற்றது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் மலர்ப்பொழிலில் இருக்கும்போது விஞ்சையர் தூதன் ஒருவன் விண்வழியே வந்து வனத்தில் இறங்கித் திவிட்டனைக் கண்டான்.

'சடி மன்னன் தன்மகன் அருக்ககீர்த்திக்குச் சுரேந்திரகாந்தம் என்னும் உத்தரசேடிநகரத்து மன்னன் மேகவாகனனின் மகள் சோதிமாலையை மணம்புரிவித்தான். இச் செய்தியை அரசிக்கும் அரசர்க்கும் அறிவித்துவரச் சொன்னதாகக் கூறினன். எல்லோரும் நற்செய்திகேட்டு மகிழ்ந்தனர்.

சிலநாட் கழித்து சயம்பிரபை கருவுற்றனள். உரிய காலத்துச் சுவாதி நாளில் ஓராண்மகவைப் பெற்றனள். அரசன் அவற்கு விசயன் எனப் பெயரிட்டனன். குழந்தை அரசமரபிற்கு ஏற்ற முறையில் வளர்ந்துவந்தது. இச் செய்தியைத் தூதன் மூலமாகத் தக்கணசேடிக்கு அறிவித்தனர்; பயாபதியின் அமைச்சர்கள்.

அங்ஙனமே, அத் தூதன் வந்து சொல்லிக்கொண்டிருக்கும் போது 'அருக்ககீர்த்தியின் மனைவி சோதிமாலையும் ஓராண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதன் பெயர் அமிர்தேசன் என்பது' என்று அங்கிருந்துவந்த தூதர் அறிவித்தனர். சில ஆண்டுகள் கழிந்தபின் சுயம்பிரபை, சோதிமாலை யென்றொரு பெண்மகவைப் பெற்றாள். சோதிமாலை உரிய பருவம் அடைந்தாள். திவிட்டன் சுயம்வரம் அமைத்தான். பலநாட்டு அரசர்களும் வந்தனர். அருக்ககீர்த்தியும் தன்மகன் அமிர்தேசன் முதலிய வரோடு வந்தான். சோதிமாலை தன் மாமன் மகன் அமிர்தேச னுக்கே மாலை சூட்டினாள்.

அருக்க கீர்த்தியும் தன் மகள் சுதாரைக்குச் சுயம்வரம் என்று எங்கும் முரசறைவித்தான். உரிய நாளில் அவளும் தன் அத்தை மகன் விசயனுக்கு மாலைசூடி மகிழ்ந்தனள். சிலநாட்கழித்து மணமக்கள் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

இங்ஙனம் இருவர் மரபும் ஈடின்றி இன்பத்துட்டிளைத்து இலங்கிவருநாளில், பயாபதிமன்னன் துறவுபூண்டு மறுமை யின்பத்தை வழங்கும் அறநெறியிலும் பயில ஆசை கொண்டான். அமைச்சரொடு சூழ்ந்து அருகதேவற்கு விழாவெடுத்தான்.

அங்கு முனிவரைக் கண்டு, அறவுரைகளைக் கேட்டு, துறவு பூண்டான். தவநெறி நின்று கேவலப் பேரொளியால் உம்பர் உலகெலாம் விளங்கி உலகிற்கே ஒரு சூளாமணியானான்.

திவிட்டன் தன் உடன்பிறந்தோனாகிய விசயனொடுகூடி நாடாண்டு அருகதேவர் அடிக்கமலங்களை வணங்கிப் பல்லாண்டு வாழ்ந்தனன்" என்பது வரலாறு.

இங்ஙனம் அரசர் மரபும், குடிமக்கள் ஒழுகலாறும் அமைச்சர் மாண்பும் கலந்துருவாகிய **இக்காப்பியத்தில் திருக்குறள் மணிகள்**

ஆங்காங்கு இடம் பெற்று ஒளி செய்கின்றன. அவற்றை எடுத்து மதிப்பிடுவோம்.

காப்புச் செய்யுளில்

இந்நூற் காப்புச் செய்யுள், வள்ளுவர் கூறும் கடவுள் வாழ்த்துப் போல நூலுக்குக் காப்பாக அமையாமல், இறைவனை வணங்கியவர் வினைநீங்கி நிலைபெற்றோராவர் எனப் பொது வகையால் இறைவன் இயல்பையும், அவனடியைப் பணிந்தார் எய்தும் பயனையும் அறிவிக்கும் அளவினதாக அமைகிறது. இதில்

"சுடர் மொளிமூர்த்தி யாகி,
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்"
(காப்பு 1)

என்ற பகுதி பணிந்தார் எய்தும் பயனுணர்த்துவது.

வினை, வருகின்ற பிறவிக்கு வித்தாயும், எடுத்த இப்பிறவியில் உயிர்கள் எய்தும் இன்னல்களுக்கு ஏதுவாயும் இருப்பது. அது நீங்கவே மறுமையில் வரக்கடவ பிறவித் துன்பமும், இம்மையில் எய்தப்பெறும் இடும்பைகளும் இல்லையாகும் என்ற கருத்துடையதாய்.

"அடி சேர்ந்தார்க்கு, யாண்டும் இடும்பையில" (௪)
"தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றலரிது" (௭)
"தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிறஆழி நீந்தலரிது" (௮)
"(அடிசேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவார்" (௧௦)
"அடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" (௩)

என்ற குறட்கருத்துக்களைக் கொண்டு விளங்குகிறது. இங்ஙனம் சூளாமணி எடுத்த எடுப்பிலேயே இங்ஙனம் திருக்குறட் கருத்தை உள்ளிடுமணியாகக் கொண்டு விளங்குவதாயின், ஏனைய இடங்களில் எத்தனை குறளைக் கொண்டிலங்குமோ என்று வியந்து பாராட்டும் நிலையில் உள்ளது எனலாம்.

அவையடக்கம்

கற்றோர் நிரம்பிய அவை பிறர் நூற் குற்றங்கண்டு திருத்துவதையே நோக்கமாகக் கொண்டதும், குறை கூறுவதையே நோக்கமாகக் கொண்டதும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னவர், நோக்கஞ் சிறத்தலின் குற்றங்களை மறைவாகக்கூறித் திருத்தமுற்படுவர். பின்னவர் குறைகளைப் பலரறியக் கூறிப்

பரப்ப முயலுவர். பின்னவர் அற்பர்; பெருந்தன்மையான குணம் படையாதவர்கள்; ஆதலால், பெரியோர்கள் குற்றங்களை மறைத்துக் குணங்களையே பேசியுயர்த்துவர் என்பார்.

"..............................நாங்கள் போல்வார்,
அற்றங்கள் காப்பா ரறிவிற் பெரியார்களன்றே" (சூளா. 3)

என்கின்றார் தோலாமொழித் தேவர். இக்கருத்து எந்த வித்திலிருந்து உருவானது என்பதை ஆய்வோம்.

வள்ளுவர் பெருமைக்கு இலக்கணத்தை முடிந்த முடிபாகக் கூறுகிறார்,

"அற்ற மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்" (கூ௮௦)

என. பெரியோர் பிறர் செய்த குற்றங்களை மறைத்துக் குணங்களையே பரப்புவர், சிறியோர் அதற்கு மாருகக் குணங்களை மறைத்துக் குற்றங்களைத் தூற்றுவர் என்பது இதன் கருத்து' இதிலிருந்து விளைந்த விளைவன்றே சூளாமணி யவை யடக்கச் செய்யுள்.

காப்பியத் தலைவன் பயாபதி; அவன் சுரமை நாட்டுப் போதனபுரத்து மன்னன். அவன் ஆட்சி நேர்மையானது. நீதியில் வழுவாதது என்றதனை அறிவிக்க வந்த ஆசிரியர், அவன் குண நலங்கள் பலவற்றைப் பாராட்டுகின்றவர்.

"அண்ணியர் அகன்றவர் திறத்தும் ஆணையான்" (சூளா. 52)

என்கின்றார். மன்னன் நெருங்கிய சுற்றம் நட்பு இவர்களிடத்தும் விலகிய சுற்றத்தார் அதாவது இரண்டாங்கால் மூன்றாங்காற் சுற்றத்தார், தம்மை விட்டகன்ற பகைவர் இவர்களிடத்தும் ஏற்றத் தாழ்வின்றி ஒப்பச் செல்லும் ஆணையையுடையவன். வேண்டியவர்க்கு வெண்ணெயாகவும், வேண்டாதார்க்குச் சுண்ணும்பாகவும் இருக்கமாட்டான் என்கின்றார், இது

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்,
தேர்ந்துசெய் வஃதே முறை" (ருசக)

என்ற குறளின் 'யார் மாட்டும் தேர்ந்து' என்ற தொடரின் விளக்கமாக உள்ளது எனலாம், 'யார் மாட்டும்' என்பதற்குப் பரிமேலழகர் 'தன் உயிரினும் சிறந்தார் கண்ணும்' என்று சிறப்புரை வழங்கினர். தோலா மொழியார், நட்புப் பகை யென்னும் வேறுபாடுகருதாது யாவர் மாட்டும் ஒப்ப ஆணை செலுத்துபவனே அரசன் என உரைகாண வைக்கின்றார்.

பொருள் செயல்வகை

காப்பியத் தலைவனுக்கு, குடிமக்கள் தாங்களாகவே கடமையுணர்ச்சியும் மனநிறைவுங் கொண்டு வருவாயுள் ஆறில் ஒரு பங்கை மகிழ்ச்சியுடன் அளித்தால் அல்லது, அவர்களைத் துன்புறுத்தி வாங்கும் வழக்கமில்லை என்கின்றவர்

> **"ஆறிலொன் றறமென அருளி னல்லதொன்**
> **றூறுசெய் துலகினி னுவப்ப தில்லையே"** (சூளா. 54)

என்கின்றார். இது, வள்ளுவத்தில்

> **"திறனறிந்து, தீதின்றி வந்தபொருள்"** (எருச)

என்ற பகுதியின் விளக்கமாகிறது.

மன்னன், முதலில் ஒவ்வொரு குடிமகனும், அரசியல் நன்கு நடைபெறத் தான் தன் வருவாயில் ஆறில் ஒரு பங்கை அளிக்கத் தான் வேண்டும் என்ற கடமையுணர்ச்சியை உணரச் செய்ய வேண்டும். பின்னர் குடிகளாகவே வலிய வந்து தம் கடமையைச் செலுத்துவார்கள். அப்படிச் செலுத்தும் போதும் கடுஞ்சொல், கொடுந்தண்டம், காலவேறுபாடு முதலிய தீதின்றிப் பெற வேண்டும். அதுவே அரசற்கு அறனும் இன்பமும் பயப்பதாம் என்கின்றது வள்ளுவம். இதனையே அரசன் வினையாக வைத்துச் சூளாமணி பயாபதி, ஊறு செய்து உலகினில் உவப்பதில்லை என்றது.

மன்னன் மாட்சி

> **"மாறிநின் றவரையும் வணக்கின் அல்லது**
> **சீறிநின் றவருயிர் செகுப்பதில்லையே"** (சூளா. 54)

என்கின்றது சூளாமணி. மன்னன் பகைவரைக்கூடக் கொடுத்துந் தடுத்தும் தன்னை வணங்கச் செய்வானேயன்றி, அவர்களைச் சினந்து கொல்லான் என்றுணர்த்துகிறது. இது

> **"மறத்தல் வெகுளியை யார்மட்டுந் தீய**
> **பிறத்தல் அதனால் வரும்** (௩௦௩)

என்ற குறளில் யார்மட்டும் என்றதன் உரையாக அமைந்துள்ளமையறியலாம். பகைவனாக இருந்து ஒருவன் இன்னாசெயினும் வெகுளாமையே நன்று என்ற கருத்தையுங் காட்டுகிறது.

அவன் பிடித்துள்ள வெண்குடையின் நிழல், அவனுட்சிக்குட்பட்ட உலகனைத்தையுங் குளிரச் செய்கிறது என்கின்றார். இதுவும் 'கவிகைக்கீழ்த் தங்கும் உலகு' (ருஅகூ) என்றதன் நிழற் பதிவாகலாம்.

இவ்வண்ணம் பல குண நலங்களோடு பயாபதி மன்னன் பெரியாரைத் துணைக்கொண்டு உலகைத் தமக்கேயுரிமையாக்கி யாண்டு வந்தான் என்னும்போது,

"மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசால்
நூலினூற் பெரியவர் நுழைந்த சுற்றமா" (சூளா. 57)

நின்று ஆண்டான் என்கின்றார் தோலாமொழியார். மேலானோர்-இயல்பாகவே குடிப்பிறப்பு, குணநலங்கள் அனைத்தானும் மேலானோர். மேலும் தனித்தகுதி வாய்ந்த நூல்களையோதியும் பெரியராயினோர். அவர்கள் அமைச்சர் முதலிய ஐஞ்சுற்றத்தார். அவர்கள் எஞ்ஞான்றும் சுற்றமாச் சூழ்ந்து கோடலாலே உலகு பொதுமைநீங்கி இவனுக்கேயுரிமையாகிறது. இப்பாடல்,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்." (சசக)

என்ற வள்ளுவத்தின் மணம் வீசப்பெறுவது. எங்ஙனம் எனின், அறத்தின் நுணுக்கம் நூலறிவாலே மட்டுமன்றி, உய்த்துணர்வானும் அறியப் பெறவேண்டுவது. ஆகவே பண்டையோர் கூறிய நூலறிவை நன்கு பெற்று, அவைகளைத்தாம் வாழும் இடம், காலம், சமுதாய அமைப்பு இவைகளுக்கு ஏற்பவும் இயைத்து நோக்கித் தேர்ந்த அறிவினரை மன்னன் எப்போதும் சுற்றமாக கொள்ளுதல் வேண்டும் என்று கூறுதலின் எனலாம்.

அமைச்சரியல்பு

பயாதி மன்னனுக்கு அமைந்த அமைச்சர்கள் தாம் சொல்ல இருக்கும் கருத்து அரசன் கருத்திற்கு முற்றும் மாறானதாயினும், அஞ்சாமல் எடுத்துரைப்பார்கள் என்ற கருத்தமைய இருப்பது

"கொதிநுனைப் பகழியான் குறிப்பின் அல்லதுஒன்(று)
இதுநமக் கிசைக்கும்?என் எண்ணும் எண்ணிலா
நொதுமலர் வெருவுரு நுவற்சி யானபின்
அதுஅவன் பகுதிதன் அமைதி வண்ணமே." (சூளா. 58)

என்ற சூளாமணிச் செய்யுள்.

(இது நமக்கு இசைக்கும்? – இது நமக்குப் பொருந்துமோ? பகுதி – அமைச்சு முதலிய சுற்றம்.) இச்செய்யுள், அமைச்சருக்குள்ள பல இலக்கணங்களை உள்ளடக்கியிருப்பதைக் காணலாம்.

இதில், மன்னன் குறிப்பின் அல்லது; நமக்கு இசைக்கும் தொடர்பேது? என்பது

"அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்" (சுாநஅ)

என்ற வள்ளுவத்தைத் தழுவிய உரை. மன்னன் ஆராய்ந்தறிந்து சொல்லுகின்ற அமைச்சர் சொல்லை அவமதித்து நடந்தாலும் மந்திரிகள் கடமை உறுதிகளை விடாது சொல்லுதலேயாம். இதுவே மன்னவன் மனக்குறிப்பு வேறாயினும், நாம் இதனைச் சொல்லுவது பொருந்துமோ பொருந்தாதோ என்றாராய்ந்து கொண்டேயிராமல் உறுதியைச் சொல்வதே கடமையென்ற சூளாமணிச் சொல்லாக மலர்ந்திருக்கிறது.

"நொதுமலர் வெருவுரு நுவற்சி யான பின்"

என்பது பகையுமின்றி நட்புமின்றியிருக்கும் அயலாரும் அஞ்சத்தகாத – நடுவான – இடித்துரையமைந்த பிறகு என, இப்பகுதி அமைச்சர் அறிவிப்பன, காது பொறுக்காத கடுஞ்சொல்லாயினும் நாட்டு நலங்கருதி மன்னன் பொறுக்க வேண்டும் என்ற கருத்தமைந்த

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்"
(௩௬௬)

என்ற வள்ளுவத்தை நினைப்பிக்கிறது.

மனைவியர் மாண்பு

இவ்வண்ணம் அமைச்சர்களை அறிமுகப்படுத்திய ஆசிரியர், மேலே, மன்னன் மனைவியரை அறிமுகப் படுத்துகிறார்; அவனுக்கு மிகாபதி, சசி என இரு மனைவி மாருளர் என. அவர் குணங்களாக, மன்னனுக்கு அவர்கள் அன்றுடம் புதியவர்களாகவே காட்சி யளிப்பார்கள், திருமகளை ஒத்த செவ்வியர். இருவராயினும் இறைவன் உள்ளத்திலே ஒரு நீரர் என்கின்றார். அதில் ஒரு பகுதி,

"இவன் பேணி நாளும் மருவினும் புதிய போலும்" (சூளா. 65) என்பது இப்பகுதி,

"அறிதோ றறியாமை கண்டற்றுற் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு" (ககக0)

என்ற திருக்குறள் தந்த வளமாகும். வள்ளுவர் செறிதோறும் என 'தோறு இடைச்சொல் கொடுத்து இடை விடாமைப் பொருளைக் காட்டியதைத் தோலா மொழியார் 'நாளும் பேணி மருவினும் எனச் சொற்பொருளை விளக்கிக் கூறினர்.

இங்ஙனமே இதர நூபுரச் சருக்கத்தில், தென் சேடி மன்னனும் அவன் மனைவி வாயுவேகையும் கலந்திருந்த சிறப்பினைக் காட்டுகின்ற தோலாமொழியார்

"ஆவி யாயணங் காய்அமிழ் தாயவன்
மேவி நீர்மைய ளாய்விருந் தாயினுள்" (சூளா. 148)

என்கின்றார். விருந்தாயினள் என்பது 'அறிதோ றறியாமை கண்டற்று' (ககக0) என்றதன் அனுபவப் பொருளாம். விருந்து – புதுமை.

மன்னன் பயாபதி, மனைவியினிடம் வைத்த காதலால் நாடு காக்கும் தொழிலையும் அமைச்சர்களிடமே ஒப்படைத்தான் என்கின்ற சூளாமணி ஆசிரியர், ஆட்சியைச் 'சொற்பகர்ந் துலகங் காக்கும் தொழில்' (சூளா. 67) என்கின்றார் இதன் கருத்து சொற்களை இனியவாகச் சொல்லி, அதனாலேயே தன் குடிமக்களைத் தன்வயப்படுத்திக் காக்கும் ஆட்சி என்பதாம். இது

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு" (கூஎஅ)

என்ற குறளின் கருத்துத் திரட்சி எனலாம்.

மன்னன் அமைச்சர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தானாயினும், அவன் ஒளி, நாட்டை நன்கு காத்தது. அதனால் உலக முழுதும் அவனுடைய குடை நிழலின் உறங்குவதாயிற்று என்பதை

"முற்றுநீர் வளாக மெல்லாம் முழுதுட னிழற்று மூரி
ஒற்றைவெண் குடையி னீழல் உலகுகண் படுப்ப ஓம்பி"
(சூளா. 69)

என்ற செய்யுட்பகுதி தெரிவிக்கிறது. இதில் குடையின் நீழல் உலகு உறங்க என்றது 'வேந்தன் கவிகைக் கீழ்த் தங்கும் உலகு'

(௩அ௬) எனற குறளில் தங்குதலைக் கவலையின்றி உறங்குதலாகப் பொருள் கண்டது சூளாமணி, இதனையே, இந்நூல், பின்னரும்

"சூழநீ ருலகெலாந் தொழுது தன்னடி
நீழலே நிரந்துகண் படுக்குந் தன்மையின்" (சூளா. 112)

எனப் பயாபதியின் ஆட்சிச் சிறப்பைப் பாராட்டுகிறது, இங்கு அவனுடைய அடிநீழலில் அவனி யுறங்குவதாக அறிவிக்கிறது.

மைந்தரின் வளர்ச்சி

பயாபதி மன்னனுக்கு விசயன் திவிட்டன் என இரு பிள்ளைகள் பிறந்தனர்; வளர்ந்தனர்; கல்வி கேள்வி, போர் இவற்றிற் பெரியராயினர். அறிவும் ஆண்மையும் அவர்கள் பாற்குடி கொண்டன. ஆதலால் அவர்களை எதிர்ப்படும் மகளிர் அனைவரும் மயங்கினர் என்று வரலாற்றை நடத்தி வருகின்ற ஆசிரியர், திவிட்டனைப் பற்றிப் பெண்கள் கூறுவதாக,

"கண்ணிலாங் கவினொளிக் காளை மார்திறத்
துண்ணிலா வெழுதரு காம வூழெரி
வெண்ணிலாச் சுடர்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணலாற் பிறதுயர் பெரிய தில்லையே" (சூளா. 83)

எனக் கூறுகின்றார். பெண்களுக்கு அழகிற் சிறந்த ஆண்களைக் காணும்போது மனத்திற் காமத்தீ கனன்று எழுகிறது, அதனை வெண்ணிலாச் சுடர் விரிந்து வெளிப்படுத்துகின்றது. ஆனாலும் அவர்களால் நாணத்தைவிட்டு வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள இயலவில்லை. உள்ளேயே வைத்துக் குமுறுகின்றனர். துயரம் மிகுகிறது. அப்படியும் வெளிக்காட்டாத பெண்களைவிட உயர்ந்த – பெரிய பொருள் உலகத்திலேயே இல்லை என்று அவல மிகுதியை அறிவித்துக்கொள்கின்றனர். இதில்

"நாண் விடாப் பெண்ணலாற் பிறிது உயர் –
பெரியது இல்லையே" (சூளா. 83)

என்ற பகுதி,

"கடலன்ன காமமுழந்தும் மடலேருப்
பெண்ணிற் பெருந்தக்க தில்" (௧௧௩எ)

என்ற குறளை நினைப்பிக்கிறது. நாண் விட்டாற்றான் நடுத் தெருவில் மடலேறி வரமுடியும். போதனபுரத்து மங்கையர்

நாணத்தை விடமாட்டாமையால் மனங் கனன்றனர், விருப்பை வெளிக்காட்டிலர் என்றனர்.

நட்பாராய்தல்

மன்னர்கள் நொடிபயிற்றவும், சொக்கட்டான் முதலியன ஆட்வும் குலத்தாலும் – நலத்தாலும் – தரத்தாலும் ஒத்த அரச குமாரர்களைத் துணையாக எப்போதும் உடன்கொண்டிருத்தல் மரபு. அங்ஙனம் அமர்த்தப்பெற்ற குமரர்கள் 'உழையர்' எனப்படுவர். அங்ஙனமே பயாபதியும பல அரச குமாரர்களை உழையராக வைத்திருந்தான். அவர்கள் குண நலங்கள் இத்தகையன என்றதை அறிவிப்பது

"வழிமுறை பயின்று வந்த மரபினுர்; மன்னர் கோமான்
விழுமலர் அடிக்கண் மிக்க அன்பினுர்; வென்றி நீரார்;
எழுவளர்த் தனைய தோளார்; இளையவர்; இன்ன நீரார்;
உழையவ ராக வைத்தான் ஒடைமால் களிற்றி ஞனே"
(சூளா. 98)

என்ற செய்யுள். இது,

"குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு
இன்னும் அறிந்தியாக்க நட்பு" (எகூந)

என்ற குறளை அளவுகோலாகக் கொண்டு பயாபதி உழையரை அளந்து நியமித்தான் என்பதைக் காட்டுகிறது. 'மரபினுர்' என்பது குடியையும, 'அன்பினுர்' என்பது அவர்களுடைய குணங்களையும், உணர்த்துகின்றன.

காட்சிக்கெளிமை

பயாபதி மன்னன் வாயிற் காவலரை நோக்கி,

"என்னவ ரேனும் ஆக நாழிகை ஏழு காறும்
கன்னவில் தோளி ஞய்நீ வரவிடு காவல்" (சூளா. 102)

என்று கூறினுன். இத்தகைய விரிந்த மனப் பண்பு மன்னனுக்கு உண்டென்பதை ஆசிரியர் உணர்த்துமாறு செய்தது,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (நஅசு)

என்ற திருக்குறளே,

ஒட்பவுரை

இங்ஙனம், எளிமையும் ஒளியும் பொருந்த மன்னன் அரசாண்டு வருங்காலையில், ஒருநாள் நிமித்திகன் ஒருவன் அரசவைக்கு வந்தான். அவன் அரசனுக்கு நிகழ இருக்கும் நன்னிகழ்ச்சிகளைக் கூறி, இன்னும் ஏழுநாள் கழிந்தபின் ஒரு தூதன் விண்வழி வந்து புட்பமாகாண்டம் என்னும் பொழிலகத் திறங்குவான், என்கின்றவன், வர இருக்கும் தூதனியல்பாக 'ஒட்பமா உரைக்க வல்லான் ஒருவன்' என்றுரைக்கின்றான்.

ஒட்பம் – ஒளியுடைமை. ஒளி ஈண்டு மேனியின் ஒளியன்று; 'உலகந்தழீயது ஒட்பம்' என வள்ளுவர் கூறியதுபோல உலகத்தாரை நட்பாக்குவதே ஒட்பமாம். வந்த தூதன் அயல் நாட்டவன், யாரையும் அறியாதவன். அங்ஙனமிருந்தும் நம்மையும் நட்பாக்கும் வகையிற் பேசுவான் என நிமித்திகன் அவனை அறிமுகப்படுத்துகின்றான். இதனையே வள்ளுவம்,

> " அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
> இன்றி யமையாத மூன்று" (சுஅஉ)

என்கின்றது. இதில் ஆராய்ந்த சொல் வன்மையே ஒட்பம். இத்தனைக் குறட் சிந்தனைகளையும் சிந்தையில் அழுத்திச் சூளா மணித் தேவர் 'ஒட்பமா உரைக்க வல்லான்' என்கின்றார்.

இரு குறளுக்கு இணைந்த கருத்து

தென் சேடியில் விஞ்சையர் வேந்தனாகிய சுவலன சடியைக் காண்போம். நமக்கு அவனுடைய குணநலன்களைக் காட்டுகின்ற தோலாமொழித் தேவர்,

> " வெச்செ னுஞ்சொல் ஒன்றுமே விடுத்த
> மெய்ம்மை மேவினான்" (சூளா. 139)

என்கிறார். வெச்செனுஞ்சொல் – கடுஞ்சொல். அதனை விடுத்தான் எனவே இனிமையாகப் பேசினான். உண்மையைப் பொருந்தினான் என்பதால்,

> " இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
> தான்கண் டனைத்திவ் வுலகு" (கூஅஎ)

என்ற குறள் நினைவூட்டப்பெறுகிறது. அம்மட்டோ! ஆசிரியர் தோலாமொழியார் 'கொடுஞ்சொல்லை விடுத்து' என்று நினை

லூட்டுகின்ற ஒன்ருலேயே, அதன் பயனுகிய, உலகத்தைத் தன் கையில் வைத்திருந்தான் என்பதையும் வலியுறுத்தினர்.

அதுமட்டுமன்று; 'மெய்ம்மை மேவினன்' என்பதற்கு, 'உண்மையான – என்றும் பொன்ருது நிற்பதான புகழையடைந் தான்' எனவும் பொருள்கொள்ளக் கிடத்தலின்

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (௩அசு)

என்றதன் கருத்தும் இணைந்திருப்பதாகக் கொள்ளலாம்.

மேலும் சுவலனசடியினது ஆளுந் திறமையை வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறுகிருர்.

"குற்ற மாய(து)ஒன்று உண்டு குணங்களால்
அற்ற கீழுயிர் மேலரு ளாமையே" (சூளா. 140)

என. இதன் கருத்து, அவனுட்சியிலே குற்றம் ஒருவகையானு மில்லை. ஆனல் ஒரேஒரு குற்றம் உண்டு. அதுதான் கீழோர்க்கு அருள்செய்யாமல், அவர்கள கீழ்மையைத் தண்டித்து திருத்துவது என்கிருர். கீழுயிர் – அறிவிற்கீழான புல் முதலாக விலங்கு ஈருன உயிர்கள் அல்ல. எல்லாவற்றையும் நல்ல – அல்ல என அறிந்து ஆற்றும் திறமிருந்தும், அங்ஙனம் செய்யாது. அல்லனவே செய்தொழுகும் கீழ்மையையுடைய மக்கள் மக்களைக் கீழோர் என்ளுது கீழுயிர் என்றது அறிவாற்றலிருந்தும் பயன்படுத்தி உயரவிரும்பாமையால். ஆகவே இப்பாடற் கருத்து,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (ருசக)

என்றதனையும்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" (ருரு௦)

என்றதனையும் உள்ளடக்கி ஒளிர்கின்றது. இப்பாக்கள், மன்னன், மக்களிடம் குற்றங் காணின், இவரின்ஞர் இனியர் என வேற்றுமை பாராது, ஒப்பநின்று அத்தகவொறுத்தல் அவன் கடமையாம். ஒரு குற்றமன்று என்பதனையும், கொடியோரை ஒறுத்தல், வளரும் பயிருக்குக் களை எடுத்தது

போலாம் என்பதனையும் உணர்த்துவன. இவைகளைத் தோலா மொழியார் மனத்தில் எண்ணிக் 'குணங்களால் அற்ற கீழுயிர் மேல் அருளாமை ஒன்றே குற்றம்' எனச் செறித்துரைத்தனர்.

இளவேனிலின் எழுச்சி

அமைதியான ஆட்சி சேடியில் ஓடிக்கொண்டிருக்கிறது. அமைதியான ஆட்சி மக்களுள்ளத்தை விழாவிலும், களிப்பிலுமாக அழைத்துச் செல்வது இயற்கை. மக்கள் வழியே மன்னனும் ஒத்தியங்குவது மரபு. அந்நிலையில் வசந்தகாலம் வந்தது. செடிகளும், கொடிகளும், மரங்களும் பூத்துக் குலுங்குகின்றன. இந்நிகழ்ச்சியை வசந்தமாதிலகை என்னும் பணிப்பெண் மன்னற்கு உணர்த்துகின்ருள்.

'மன்னர் மன்ன! வணக்கம். நம்பூங்காவிலே எங்கும் செடி கொடிகள் பூத்துத் தேனைச் சொரிகின்றன. கோங்கமரம் இசை யால் திசை போகாத இவறியார் செல்வமே போல மணமின்றித் தம் பக்கலிலே பொற்பூக்கள் சிதற இருக்கின்றது. இங்ஙனம் வேனிற் பொழுது வந்தது' என்ருள். அப்பாடல்

"தேங்குலாம் அலங்கண் மாலைச் செறிகழன் மன்ன! போற்றி
பூங்குலாய் விரிந்த சோலைப் பொழிமதுத் திவலை தூவக்
கோங்கெலாம் கமழ மாட்டா குணமிலார் செல்வ மேபோற்
பாங்கெலாம் செம்பொன் பூப்ப விரிந்தது பருவம் என்ருள்."
(சூளா. 161)

என்பது.

வள்ளுவர் யாருக்கும் பயன்படாத செல்வத்தைப் பற்றித் தெரிவிக்கும் பகுதி நன்றியில் செல்வம், செல்வத்துப் பயனே ஈதல், ஈதலால் எய்தக் கிடைப்பது புகழ். அதனை எய்தாத மக்கள் சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமே ஆவர் என்ற கருத்தமைய

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை." (௧00௩)

என்ருர். அத்துடன் இப்படி ஒருவரும் விரும்பாமல் வாழு கின்ருனே! இவன் 'தானிறந்த பிறகு எச்சம் என்று எதனை எண்ணுகின்ருனே! தெரிய வில்லையே!" என்ற கருத்தமைய

"எச்சமென்(று) என்எண்ணுங் கொல்லோ! ஒருவரால்
நச்சப் படாஅ தவன்." (௧00௪)

எனவுங் கூறுகிறார். இங்ஙனம் இடித்துரையாகவும் ஏச்சுரை யாகவுங் கூறிய கருத்துக்களைச் சிந்தனையிற் றேக்கிக் 'கமழ மாட்டா குணமிலார் செல்வமே போற் கோங்கம் மலர்ந்தன' என்றார் தோலாமொழியார்.

'கமழமாட்டார் செல்வம்' என்ற சொல்லாட்சி எவ்வளவு சிறந்தது; சிந்தனைக்கு உரியது. கமழுதல் – பூவின் மணத்திற் குரிய தொழில். அதனை யாண்டமையால் செல்வம் பூப்போன்றது. அதனைப் பயன்படுத்தும் வகையறிந்து பயன்படுத்தாவிடின் மணக்காமை மட்டுமன்று; கசங்கியழியவும் செய்யும்; தீநாற்றம் வீசும்; என்ற சிந்தனைகளைத் தூண்டி, முற்கூறிய இருகுறளின் நிழற்படமாக விளங்குகிறது.

பொழிலிலே பூங்குயில்கள் மாந்தளிரைக் கோதித் துவர்ப்பு மிகுந்தமையின், அது தீர, முருக்கம் பூக்களைத் தின்று கூவுகின்றன. மாமரத்தைப் போலச் செல்வமுடையவராயினும், அவர்கள் நோக்கம், சொல், கொடை இவற்றால் சுவை மாறுபடுவாராயின் அவர்களை யார் அடுப்பார்கள். ஒருவரும் இலர் என்கின்ற,

" சிறுகுயில் செல்வரேனும் தாம்சுவை திரிந்தபின்றைச்
சார்பவர் இல்லையன்றே " (சூளா. 166)

என்னும் பாடற்பகுதியில் 'முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' [கூ0) என்ற குறட் பகுதியின் ஒளி, ஓரளவு தீண்டி நிழலோடுகிறது எனலாம்.

மன்னன் பொழில் வளங்கண்டு, வேனில் விழாக் கொண்டாடி அருகனாலயத்தை வணங்கிக் கோவிலின் முற்றத்தை யடை கின்றான். அப்போது சாரணர்கள் தோன்றினர். அருகதேவனை வாழ்த்தினர். அவ்வாழ்த்தில்,

" விரைமணந்த தாமரைமேல் விண்வணங்கச் சென்றாய் "
(சூளா. 187)

" முருகணங்கு தாமரையின் மொய்மலர்மேற் சென்றாய் "
(சூளா. 188)

" மணமயங்கு தாமரைமேல் வான்வணங்கச் சென்றாய் "
(சூளா. 189)

என்கின்றார். இவை 'மலர்மிசை ஏகினான்' (ங) என்ற வள்ளுவத்தை நினைவூட்டிச் சமயப் பொதுமையின் நிற்கும் வள்ளுவர் சமணக் கடவுளைக் கூறினார் எனச் சான்று பகரச் செய்கிறது.

ஒரு சொல்லிலே ஒரு குறள்

'பெயராக்கதி' (சூளா. 188) 'குணக்குன்றுயினூர்' (சூளா. 191) 'வினைப்பகை துணிக்கும்' (சூளா. 197) முதலிய சொற்கள் விஞ்சைவாய்ப்புடையன. ஒரு சொல்லிலே ஒரு குறளைக் காட்டுகின்றன.

பெயராக்கதி – அடைந்தார் மீளாத சிவகதி, இதனைத் திருவள்ளுவர், மற்றீண்டு வாரா நெறி என்பர். ஆகவே வள்ளுவர் வாய்மொழியே பெயராக்கதி என்ற பெயருடன் சூளாமணியிற் பெயர்ந்துள்ளமை தெளிவு.

அங்ஙனமே, குணக்குன்று – குணமென்னுங்குன்று (உகூ) என்றதன் தொகைநிலை. வினைப்பகை என்பதும் 'வினைப்பகை வீயாது பின் சென்றடும்' (உ௦எ) என்றதன் சுருக்கம்.

'மெய்ப்பொருள் தெரிதல் ஞானம்' (சூளா. 201) என்பது நன் ஞானத்தின் இலக்கணத்தைச் சாரணர் சடிமன்னனுக்குச் சாற்றுவதாக வரும்பகுதி. இதில் 'மெய்ப்பொருள்' என்ற சொல்லைக் கேட்டவுடன் நமக்கு 'எப்பொருள் யார் யார் வாய்' (சஉங) என்ற குறட்பகுதியாகிய 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற அடி தான் நினைவுக்கு வரும். ஆனால் 'ஐயுணர்வு' என்ற குறட்கண்ணதாகிய 'மெய்யுணர்விலாதவர்க்கு' (௩௫௪) என்பதே பெரிதும் இணைவதாம். யாங்ஙனம் எனின், பொறிகளான் அறியப்படுவனவாகிய ஐம்புலன்களையும் ஒரு சேர உணர்வதாகிய மனம், ஒடுங்கி ஒரு நிலைக்கண் நிற்றலே ஐயுணர்வு எய்துதல். அது கைகூடி வந்தாலும், மெய்யுணர்வில்லையாயின் அதனாற் பயனில்லை. பொருள்களின் நிலை – நிலையின்மைகளை உணர்ந்து, என்றுமுள பொருளின் மேற் பற்றுக்கொண்டு அப்பற்று என்றும் பெயர்தலின்றி, நிற்பதே நன்ஞானமாம். இதனைச் சீவக சிந்தாமணியும், 'உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்' (சீவக. 1436) என்கின்றது. ஆகவே ஐயுணர்வைக் கடந்து நிற்கும் மெய்யுணர்வே ஈண்டு மெய்ப்பொருள் தெரிதல் எனப் பெறுவது.

அங்ஙனமே தீவினைகளை இருள் என்று உருவகித்தல் வள்ளுவர் மரபு. அதனை 'இருள்நீங்கி இன்பம் பயக்கும்' (௩௫உ) முதலிய ஆட்சிகளால் அறியலாம். இருள் – பொருள்களை

யுள்ளவாறு உணர இயலாத வண்ணம் தடுக்குந்தடை, அது அறியாமை. அறியாமையால் விளைவன தீமைகள். அறியாமையைப் போக்குவது அறிவு. அதனுல் அது ஒளியல்லது தீ என்று உருவகிக்கப் பெறுகின்றது. அதனுல் தோலா மொழியார்,

"..............தீவினை யிருள்கள் போகும்,
விரிந்தநல் லறிவின் சோதி" (சூளா. 203)

என அருக தேவனை அறிவிக்கின்ருர். இப்பகுதி 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்' (௩௫௨) என்ற வள்ளுவத்தின் சொல்லாட்சி யாகும்.

பாவையின் நோன்பு

சடி மன்னன் மகளாகிய சயம்பவை, சக்கரவாளம் என்பதொரு நோன்பை நோற்றும், பழுக்கக்காய்ச்சிய பொன்னுற் செய்த கொடிபோல விளங்கினுள் என்ற வரலாற்றை அறிவிக்கும்

"அழற்கொடி எறித்தொறுஞ் சுடரு மாடக
நிழற்கொடி யதுவென நிறைந்த காரிகைக்
குழற்கொடி யனையவள் கொண்ட நோன்பினுல்
எழிற்கொடி சுடர்வதோ ரியற்கை எய்தினுள்" (சூளா. 209)

என்ற பாடல்

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (௨௬௭)

என்னும் குறளை அடியொற்றியதாகும். பொன் எவ்வளவுக் கெவ்வளவு தீயிற் காய்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு மாசு நீங்கி ஒளிபெறும். அதுபோல நோன்புகளால் நோவடைய நோவடைய உயிர் தனிநிலை பெற்றுத் தழைக்கும் என்ற கருத்தொளி அமைக்கப் பெற்றுள்ளது. சுடச் சுடரும் என்ற வள்ளுவம் 'எறித்தொறும் சுடரும்' எனவும், 'துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு' என்னும் வள்ளுவம் 'நோன்பினுல் .... சுடர்வதோரியற்கை எய்தினுள்' எனவும் அமைக்கப் பெற்றுள்ளன.

மாசிலாமனத்தார் மாண்பு

மனத்துக்கண் மாசிலனுதலே அறம். அவ்வற முடையார் எதனையும் எளிதின் எய்துவர், அவர்கட்கு அரிய தொன்றும் இல்லை என்பதைத் தோலாமொழித் தேவர்,

"மாசிலா, அகத்துமாண் புடையவர்க் கரிய தில்லையே"
(சூளா. 210)

என்கின்றார். இதில்,

"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்." (உஎஅ)

என்ற திருக்குறளின் முற்பகுதி மாற்றம் பெற்று உருக் கொண்டுள்ளது.

சயம்பவை சக்கரவாள நோன்பிறுதியிற் சைனக்கடவுளுக்குப் பெருவிழா எடுத்தாள் என்கின்றவர், 'தெய்வத்தைக், கரங்கொடு பெருஞ்சிறப்பயர்தன் மேயினாள்' (சூளா. 212) என்கின்றார். இதிலுள்ள சிறப்பு என்னுஞ்சொல் நமக்கு மிகப் பழைய சொல். 'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்' (கஅ) என்ற குறட்கண் உள்ள முதற் சொல்லாகும்.

சிறப்பு என்பது இறைவற்கு இயற்றப் பெறும் பெருவிழா முதலியன. வள்ளுவர் வான் சிறப்பில் உலகத்தில் வேண்டிய காலத்து மழை பெய்யாவிடின் தெய்வங்களுக்கு விழவும் பூசையும் நடவாது என்பார் 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்றார். அச்சிறப்பு என்னும் சொல்லாட்சியே தேவர் வாயிலும் திகழ்தலைக் காணலாம்.

அரசர்க்குரிய அறிவு வகை

அரசனுக்குத் தானே எதனையும் ஊன்றியாராய்ந்து அறியும் அறிவும், அமைச்சர் ஒற்றர் முதலாயினோருடன் கலந்து ஆராயும் அறிவும் என இருவகை யறிவும் இன்றியமையாதன. சடிமன்னன் மகள் சயம்பவையின் மணத்தைக் குறித்துத் தானாய்ந்ததோடன்றி, அமைச்சர் கருத்தையும் அறிந்தனன் என்று வரலாற்றை நடத்துகின்ற ஆசிரியர் தோலா மொழியார்,

"தன்னுணர் பொறிபிறர் தங்கண் கூட்டென
இன்னணம் இருவகைத் திறைவர் வாழ்க்கைதான்
தன்னுணர் பொறிப்புலந் தன்னி னும்பிறிது
இன்னணம் இயற்றுகென் றமைச்சர் ஏவுவார்"
(சூளா. 233)

என்கின்றார். வள்ளுவம், மன்னன் முறைவேண்டினார்க்கு எளியனாதலோடு அவர் கூறும் குறைகளைக் கேட்டு அவைகளைப்

பலநூலறிவும் பெற்ற அமைச்சர் பலரோடும் கலந்து ஆய்தல் வேண்டும் என்பதை

> "எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னன்
> தண்பதத்தான் தானே கெடும்" (ருசஅ)

என்றுணர்த்தியது. அதனை வரலாற்ரோடு பொருத்தி; அரசியற் செய்திகளைமட்டு மல்லாமல், தன் குடும்ப நலன்களையும் மன்னன் அமைச்சரோடு ஆய்ந்தான். மன்னன் குலநலமும்; குடிநலமும்; நாட்டுநலமும் தம்முள் பின்னிப்பிணைந்துகிடப்பனவாதலான் குடும்ப நலங்காரணமாக நாட்டுநலம் பழுதாகக்கூடாதே என்ற நோக்கால் அதனையும் அமைச்சரோடு ஆராய்ந்தான் என்ற சிறப்புத் தெரிகிறோம்.

சூழ்ந்து துணிக வினை

அரசன் அமைச்சரோடு சூழ்ந்தே வினைசெய்தல்வேண்டும் என்பதனைப் பல்லாறருனும் தன் மனத்துள் எண்ணுகிருன் அத்தகைய எண்ணங்களில் ஒன்று,

> "நூலவர் நுழைவொடு நுழைந்து செல்லுமேல்
> வேலவர் ஒழுக்கமும் வேலைகாணுமே" (குளா. 235)

என்ற இப் பகுதி. மன்னன் தன்னறிவே பெரிதென்று தருக்காது, பல நூல்களைக் கற்றறிந்தடங்கிய பெரியோராகிய அமைச்சர் களுடைய நுட்பமான அறிவோடு ஆய்ந்து செயல்களைச் செய்யு மாயின், வேலை ஏந்திய பகை மன்னர்களின் செயற்றிறம் அனைத்தும் எல்லையைக்காணும். அதாவது பயனற்றுப்போம் என்ற செய்தி இதனுள் உணர்த்தப்பெறுகின்றது.

வள்ளுவம், ஒரு மன்னன், அறனறிந்து மூத்த அறிவுடை யாரோடு கேண்மை கொண்டு, அவர்களோடு அனைத்தையுங் கலந்து தெளிந்து வினையாற்றுவனுயின், அவன் பகைவர் செய்யக்கிடந்தொரு செயலும் இல்லை என்கிறது. ஆகவே வள்ளுவம் பொதுவகையிற் கூறிய

> "தக்கா ரினத்தனய்த் தாளெழுக வல்லானைச்
> செற்ருர் செயக்கிடந்த தில்" (சசகூ)

என்ற குறள் வரலாற்ரோடு பொருத்தப்பெற்று 'வேலவர் ஒழுக்கமும் வேலைகாணும்' என்று உருக்கொண்டுள்ளது.

மேலும், அந்தணர் ஒழுக்கம் வேத மந்திரங்கள் இன்றி இல்லையாம். அதுபோல அரசர் வாழ்வு மந்திரிகளின் ஆலோசனை யின்றி இல்லையாம் என்று சேடி மன்னன் சிந்திக்கின்றான்.

" அந்தணர் ஒழுக்கமும் அரசர் வாழ்க்கையும்
மந்திர மில்லையேல் மலரு மாண்பில " (சூளா. 237)

என்கிறது சூளாமணி.

" சூழ்வார்கண்ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் " (சசரு)

என்பது வள்ளுவம். மன்னர்க்கு மந்திரிகளே கண்கள். கண்ணின்றி எவரும் எதையும் அறிந்து நடத்தலியலாது. ஆதலால் அமைச்சர்களைக் கலந்தே எக் காரியத்தையும் செய்க என்றது. இக் கருத்தை உளத்தடைத்த தோலாமொழியார் 'மந்திர மில்லையேல் மலர்ச்சி யில்லை' என்கின்றார்.

இக் கருத்தையே பின்னரும், மந்திரசாலைச் சருக்கத்திலே மந்திரிகளின் பெருமையாக அரசன் கூறும்போது, மந்திரிகள் எத்துணைச் சிறந்தவர்களாக இருப்பினும், மன்னர்களால் வணக்க இயலாதவர்கள் ஆயினும், அவர்கள் நூல்களின் துணையின்றி நுட்பத்தையறிய இயலாது, சூழ்ந்து செய்யும் சூழ்ச்சியும் இல்லை (சூளா. 242) என்று அமைச்சருக்கும் நூலறிவின் துணையை வற்புறுத்துவார் தோலாமொழித்தேவர்.

மகளிரும் மன்னராகி ஆளலாம்; சூழ்ச்சியில் வல்ல அமைச்சர்கள் துணையிருந்தால். ஊழ் துணையிருப்பினும் ஊழாற்கிட்டும் வெற்றிகள்அனைத்தும், சூழும்அமைச்சர்களின் ஆற்றலாலேயே வெளிப்படுவனவாம் (சூளா. 249) என்பர். இதுவும் 'சூழ்வார் கண்ணாக' (சசரு) என்ற குறளின் ஒளிப்பதிவேயாம்.

அதன்பின்வரும் 'சூழ் கழல் அரசர் வாழ்க்கை தந்திரம் அறிந்து சூழ்வான் சூழ்ச்சிசார்ந் தமையல் வேண்டும்' (சூளா. 252) என்பதும் இக் கருத்தை யடியொற்றியதே.

மந்திரச்சாலையில் மன்னன் மந்திரிகளைப் பாராட்டுகின்றான் என்ற வரலாற்றைக் கூறுகின்ற ஆசிரியர் உள்ளத்திலே,

" அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் " (சசக)

என்ற திருக்குறள் கலந்திருக்கிறது. அதனைச் சடிமன்னன் வாயுரையாக, அக்கருத்தை வரலாற்ருேட்டத்திலே கரையச் செய்து

" என்னைநீ ரிறைவ ஞக்கி இராப்பகல் இயற்ற வன்றே
இன்னநீ ரின்ப வெள்ளம் இயைந்துயான் உயர்ந்தது "
(சூளா. 254)

என்று சொல்லச் செய்கிருர். யான் இத்தகைய இன்ப வெள்ளத்திலே ஆழ்ந்து ஆட்சிச்சிறப்பான் உயர்ந்திருப்ப தெல்லாம் அறனறிந்து மூத்த அறிவுடைய உங்கள் கேண்மையி ஞலன்றே! என வியக்கின்ருன். திருக்குறளை அப்படியே எடுத்தாளுவதைவிட வரலாற்றிலே கரைத்து உண்ணின்று ஒளிரச் செய்கின்ற முறை மிகச் சிறப்பானது.

அமைச்சர் கூற்று

மன்னன் மக்களிற் கீழோர் செய்யும் பிழைகளைப் பொறுத் தருளவேண்டும். ஒறுத்தலே கடமையாகக் கொள்ளுதல் கூடாது. பொறுப்பாளுயின் உலகமனைத்தும் அவனடிக்கீழ் அடங்கி நடக்கும் என்று மந்திரிகள் கூறுவதாக வரும்.

" புண்ணியக் கிழவர் கீழோர் பிழைத்தன பொறுப்பவாயின்
மண்ணியல் வளாகமெல்லாம் வழிநின்று வணங்குமன்றே "
(சூளா. 262)

என்ற பகுதி,

" ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து " (கடுரு)

என்ற திருக்குறளின் விளைவாகும். வள்ளுவர் பொறுக்காமல் ஒறுத்தாரை ஒரு பொருளாகக் கூட சான்ருேர் வையார். பொறுத்தாரைப் பொன் போல் முடிந்து வைப்பர் என்று கூறிய அக்கருத்து, உலகமே வழிநின்று வணங்கும் என்று அரச வாழ்விற்கேற்றவகையில் உருக் கொண்டிருக்கிறது.

மழைத்துளியும் – மன்னன் அளியும்

வேனில் வெப்பத்தால் வறண்ட உலகிற்கு மழைத்துளி பெருமகிழ்ச்சியைக் கொடுக்கும், வளர்ச்சியைக் கொடுக்கும். அதுபோலவே மன்னன் செங்கோலனுகிக் கருணைததும்பும்

உள்ளத்தனும் ஆயின், உலகம் பெருமகிழ் வெய்தும் என்பது எதிர் மறை வாய் பாடாக

> " துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்று வேந்தன்
> அளியின்மை வாழும் உயிர்க்கு " (ருருள)

என்ற குறளால் வள்ளுவம் வகுத்தது. இதனைச் சூளாமணி

> " மண்குளிர் கொள்ளக் காக்கும் மரபொழிந் தரசர் தங்கள்
> விண்குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்புமாயின்
> கண்குளிர் கொள்ளப் பூக்கும் கடிகயத்தடமுங் காவும்
> தண்குளிர் கொள்ளு மேனும் தாமிக வெதும்பு மன்றே"
> (சூளா. 264)

என்றது. அரசனுடைய அளியின்மையால் நீர்த்தடமும் குளிர் காவுங் கூட வெதும்பும் எனக் கற்பனை நயந் தோன்றக் கூறும் அழகினை ஓர்க.

மற்றும் மன்னன் சிற்றினஞ் சேர்ந்து கொடுங்கோலனாயின் உலகம் அல்லற்படும் என்பதை வள்ளுவம்

> " தீயினத்தின் அல்லற் படுப்பதூஉம் இல் " (சகூ௦)

என்றது. மேலும்

> " கோல் கோடிச் சூழாது செய்யும் அரசு
> கூழுங் குடியும் ஒருங்கிழங்கும் " (ருருச)

என்றது. இவ்விரு கருத்துக்களையும் இணைத்து, இழைத்துச் சூளாமணி

> " தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரியு மாயின்
> போயினம் படர்ந்து வாழும் புகலிடம் இன்மை யாலே
> வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் புல்வாய்
> மாயினம் படர்வ தெல்லாம் வையகம் படரும் அன்றே. "
> (சூளா. 265)

என்று புலிக்குப் பயந்த மான் கூட்டம் படுகின்ற துன்பத்தை இவ்வுலகம் அடையும் என உவமை வாயிலாக விளக்கிற்று.

கோனும் குடிகளும்

மன்னர்க்கும், மக்களுக்கும் உள்ள உறவு அருளும், அன்பும் கலந்ததாதல் வேண்டும். மன்னன் தனக்கு எத்துணையுரிமையும்

ஆற்றலும் இருப்பினும் அதனை மக்களிடத்து வெளிக்காட்டாது மக்கள் வழியிலே நின்று மக்களைத் தன்வயப் படுத்தி நடத்துதல் வேண்டும். அப்போதுதான் மக்கள் அனைவரும் இவன் ஆணைவழி நடப்பர் என்றது

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு." (ருசச)

என்ற இக்குறளின் கருத்து. இதனை வாங்கி வைத்துச் சூளாமணி,

"மறந்தலை மயங்கி வையத் தொருவரை ஒருவர் வாட்ட
இறந்துஅலை யுருமை நோக்கி யின்னுயிர் போலக் காக்கும்
அறந்தலை நின்ற வேந்தர் அடிநிழ லன்றி யார்க்கும்
சிறந்ததொன் றில்லை கண்டாய் திருமணி திகழும் பூணோய்."
(சூளா. 266)

என்றது. இது மக்கள் மறத்தின் வயப்பட்டு, மெலியாரை வலியார் வாட்டாமல், மன்னன் தன்னுயிரைப் போல மக்களை வருந்தாது காப்பாற்ற வேண்டும். அங்ஙனம் காப்பானாயின் அவனடி நிழலன்றி அவர்கட்குச் சிறந்த புகலில்லை என்ற கருத்தமைதி யுடையதாக, 'செங்கோல் ஆட்சி பிழையாத மன்னன் அடியை உலகம் தழுவும்' என்ற வள்ளுவத்தைக் கருதச் செய்கின்றது.

இறையே இறைவன்

அரசநீதி என்பது தெய்வ நீதியைக் காட்டினும் சிறந்தது. தவறிழைத்தாரை உடனே திருத்துவது அரசநீதி. நல்வினை தீவினைப் பயனாகி, இன்பத் துன்பங்களாக உருவெடுத்து, மறு பிறப்பில் திருத்துவது தெய்வநீதி. அரசன் மக்களுடைய நல் லொழுக்கம் அல்லொழுக்கங்களை அவ்வப்போது அறிந்து முறை வழுவாது காப்பானாயின், குடிகள் அம்மன்னனை மனிதருள் ஒருவனாகக் கருதமாட்டார்கள். கடவுளாகவே கருதுவர் என்பதை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்." (௩அஅ)

எனக் கூறுகிறது வள்ளுவம்.

ஒருமனிதன் துன்பப்படுகிருன். மற்ருெருவன் ஏதோ புண்ணியப்பயனுற் கிடைத்த செல்வத்தால் செருக்குற்று அவனை அவமதிக்கிருன். அவனைக் காணுகின்ற மன்னவன் இல்லாதான் நலிவையும், உடையானது செருக்கையும் அடக்கித் தீமை செய்தவன் மறுமையிலே எய்தக் கடவதாகிய தண்டனையையும் இந்தப் பிறப்பிலேயே அளிக்கின்ருன். இல்லாதானை உடையவ னுக்குகிருன். ஆதலால் அரசனே தெய்வம் என்ற கருத்தமைய

"ஒருமையாற் றுன்ப மெய்தும் ஒருவனை உம்மை யாலே
திருமையான் முயங்குஞ் செல்வச் செருக்கொடு திளைப்ப நோக்கி
இருமையும் ஒருமை யாலே யியற்றலின் இறைவன் போலப்
பெருமையை யுடைய தெய்வம் பிறிதினி இல்லை யன்றே."
(சூளா, 267)

என்கின்ற சூளாமணி, 'இறையென்றுவைக்கப்படும்' என ஏதுக்காட்டாது வள்ளுவர் வாளா கூறியதனைத் தோலாமொழியார் தருக்கியவனை யடக்கியும், வறியனைச் செல்வனுக்கியும் மறுமை யிலே அவர்கள் எய்தக் கூடிய இன்பத்துன்பங்களை இம்மையிலே எய்துவித்தலின் மன்னன் இறைவனுகிருன் என்பது சிறந்த விளக்கமாகும்.

சூளாமணியிற் பின்வரும்,

"குடிமிசை வெய்ய கோலும் கூற்றமும் பிணியும் நீர்சூழ்
படிமிசை யில்லையாயின் வானுள்யார் பயிறும் என்பார்"
(சூளா. 269)

என்ற செய்யுள் முறை செய்து காத்தலின்சிறப்பைக் கவிதை நயந்தோன்ற வேறொரு வகையாற் சொல்லி வற்புறுத்தியவாறும்.

அமைச்சர்கள், சேடியரசன் சடியை அழைக்கும்போதே 'இரந்தவர்க் கீட்டப் பட்ட இருநிதிக் கிழவ' (சூளா. 273) என விளிக்கின்றனர். இப்பகுதி 'ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்' (உஅஅ) என்ற குறளையும் 'தக்கார்க்கு ஒன்று ஈதலியல் பிலாதான் செல்வம் ஏதம்' என்ற குறளையும் உட்கொண்டு கூறியதாம். அவன், செல்வம் ஈட்டும் போதே ஈதற் கென்றே ஈட்டினன் என்கின்ருர்.

அங்ஙனமே மீண்டும் "வெஞ்சொலொன் றுரைக்க மாட்டா விடுசுடர் விளங்கு பூணோய்" (சூளா. 275) என மன்னனை

விளிக்கின்றனர். இதிலும் "கடுஞ் சொல்லன் அல்லனேல்" (டுஅகூ) என்ற குறள் புகுந்து கொண்டிருக்கிறது.

கற்றவர் முன்னே கல்லாதார்

அரசன் பாராட்டுக்களைக் கேட்ட அமைச்சனாகிய சுச்சுதன்

"............................மூர்த்திநின் முன்னர் யாங்கள்
இற்றென வுரைக்கும் நீதி யோதுநூல் எல்லைகாணக்
கற்றவர் முன்னை ஏனோர் கதைஒத்துக் காட்டுமன்றே"
(சூளா. 276)

என்கிறான். இதில் அமைந்துள்ள, அரசராகிய தாங்கள் எங்களைக் கேட்பதும், நாங்கள் அதற்கு மறுமொழி கூறுவதும், நீதி நூல்களை முற்றக் கற்றவர்கள் முன்னே ஏனைய கல்லாதார் பதில் கூறிய கதையை ஒத்திருக்கும் என்ற கருத்து

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்" (சகο)

என்ற குறளின் கருத்தேயாகும். குறள் கல்லாரை விலங்கென்றது. சூளாமணி அதை வெளிப்படையாகக் கூறுது அக்குறளை அப்படியே விளங்கச் செறித்து 'ஏனோர் கதை ஒத்துக் காட்டும்' எனக் இக் குறளையே நினைவூட்டுகிறது. கதையென்றது இக்குறள் கூறும் நிகழ்ச்சியை எனவும் கருதலாம்.

தான் கண்டனைத்து இவ்வுலகு

சுச்சுதன் சடிமன்னனுக்கு அசுவக்கிரீவன் பெருமையைக் கூறும்போது, மலை நாட்டகங்களை வென்று பணியச் செய்தபின் மண்ணுலகமும் அவன் குறிப்பின்வழி ஒழுகுவதாயிற்று என்கின்றான்' எனக் கூறவந்த தோலாமொழியார்

"..மன்னும்
கொதிதவழ் வேலினான்றன் குறிப்பொடு கூடிற் றன்றே"
(சூளா. 297)

என்கிறார். இதில் 'குறிப்பொடு கூடிற்று' என்ற குறிப்பு.

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு" (டுஅஎ)

என்ற குறளில், தன் சொலால் தான் கண்டனைத்து என்ற பகுதி தந்த ஒன்றுதல் தெளிவு. தான் கண்ட தனைத்தாதல் – மன்னவன் குறிப்பின் வழிநிற்றல்.

அரசருள் ஏறு

அச்சுவக்கிரீவன் படைபலமும், வளமான வயல் வளமும் மிக்கவன் என்பதைச் சுச்சுதன் சுட்டிக் காட்டுகின்றான்.

"படையின தமைதி கூழின் பகுதியென் றிவற்றின் பன்மாண்(பு)
உடையவர் அவனேடொப்பார் ஒருவர்மற் றில்லை வேந்தே"
(சூளா. 300)

என்று.
இப்பகுதியின் சொல்லாட்சியே நமக்குப்

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையான் அரசருள் ஏறு" (நஅக)

என்ற குறளை நினைவூட்டுகிறது. சடியரசனுககு அச்சுவகிரீவனைப் பற்றி அறிமுகம் செய்வித்துச் சுச்சுதன் தன்னிருக்கையில் இருந் தான். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த பவச்சுதன் என்னும் அமைச்சன் எழுந்திருந்து, அரசே! சுச்சுதன் சொல்லனைத்தும் மெய்யன்று; மிகை என்று விண்ணப்பிக்கின்றவன், சுச்சுதனைப் பாராட்டுகின்றான்,

"நூலோராய்ந்து நுண்பொறி கண்ணும் நொடி வல்லான்
மேலோ ராயும் மேதைமை யாலும் மிக நல்லான்" (சூளா. 308)

என. இதில் நொடிவல்லான் என்பது 'திறனறிந்து சொல்லுக சொல்லை' (கூசசு) என்பதனையும், 'பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல்லின்மையறிந்து' (645) என்பதனையும் அகப் படுத்தி நிற்பது.

விதி வலிது

பல அமைச்சர்கள் 'இவன் நல்லன்' இவன் நல்லன் எனத் தாமறி யளவையிற் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த சுமந்திரி என்பான், அவர்கள் கூறியதை மறுத்து, இவனுற் கூறப்பெற்ற மன்ன குமரர் எவரும் இவளை மணக்குந் தகுதியுடையர் அல்லர். சுரேந்திரகாந்தத்து அரசகுமாரன் இவளை மணக்குந் தகுதி

யுடையவன். ஆனால், அசோதர முனிவர் அவனுடைய பழம் பிறப்பு வரலாறாக அவன் மணந்து கொள்ளான். துறந்து வீடெய்தும் என்றார். ஆதலால் சுயம்வரம் அமைக்கலாம் என்றாலோ அதுவும் ஏற்புடையதன்று, என்று கூறுகின்றவன் விதியின் வலிமையை மன்னனுக்கு உணர்த்துகின்றான்.

"ஒன்றுநாங் கருதிச் சூழின் ஊழது விளைவு தானே
கன்றிநாங் கருதிற் றன்றி மற்றொர் வாறாக நண்ணும்"

(சூளா. 358)

ஆகவே நாமாக எதனையும் முடிவுசெய்யவேண்டாம். சதவிந்து என்னும் நிமித்திகனை அழைத்து வினவுவோம் என்றான். இதில்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" (௩௮௦)

என்ற வள்ளுவமே முழு உருவத்துடன் ஒளிந்திருப்பதைப் பார்க்கிறோம். நாம் எத்துணையோ முயன்று, முற்ற ஆராய்ந்து செய்வோம்; ஊழ் அதற்கு எதிராக இருக்கும்; அதனால் பயன் வேறாகிவிடும். நாமோ இந்தப் பயன் ஊழான் விளைந்தது என்று கருதமாட்டோம். நம் தவறு அல்லது நம் முயற்சி என்போம் என்று சுமந்திரி கூறுகிற கருத்து இக் குறளின் பயனால் ஆனதே.

அமைச்சர்கள் அனைவரும் சுமந்திரி கூறியதே ஏற்றது என ஒப்பினர். அதனால் நிமித்திகன் வந்தான். மன்னன் அவனைப் பார்த்து, சயம்பவையின் வரலாற்றை அறிய விரும்பினேன் என்றான், நிமித்திகன் உலக உற்பத்தி, அருக பரமேஷ்டியின் தோற்றம் பரத மன்னன் வரலாறு முதலியவற்றை விரித் துணர்த்தினான். அருகன் தோற்றம் உரைக்கும்போது, நிமித்திகன் கூற்றாக ஆசிரியர் 'புலங்கிளர் பொறிநுகர் விலாத புண்ணியன்' (சூளா. 396) என்கின்றார். இதில் 'பொறி நுகர் விலாத புண்ணியன்' என்பது 'பொறி வாயில் ஐந்த வித்தான்' என்பதனை நினைப்பிக்கும்.

அப் பாடலிலேயே, அருகனார் முதற் படைப்பில் உலகத்தைப் படைக்கும்போது பசிதீர்க்கும் வாயில்களையும், குலங்களையும் குணங்களையும் படைத்தார் என்கின்றார். இதில் பசியை 'அழிபசி' என்கிறார். இச் சொற்றொடரும் 'அற்றார் அழிபசி'

(உ௨௬) என்னும் வள்ளுவர் வாய்ச்சொல்லின் வழக்கேயாம் 'அலந்தவ ரழிபசி யகற்று வாயிலும்' (சூளா. 396) என்பது.

தூதரியல்பு

வள்ளுவர், தூதுரைப்பான் அன்பு அறிவு ஆராய்ந்த சொல் வன்மை என்ற மூன்று குணங்களை யுடையனாதல் வேண்டும்; கற்றுக் கண்ணஞ்சான் செலச்சொல்லும் திறத்தினனாதல் வேண்டும் என்பர். இவற்றை

"அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப் பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று" (௬௮௨)

"கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தான்
தக்க தறிவதாம் தூது" (௬௮௬)

என்ற குறள்களான் அறியலாம். இவற்றை அமைத்துத் தோலா மொழித்தேவர் சடி மன்னன் பயாபதிபால் மகட் கொடை பேச யாரைத் தூது அனுப்பலாம் என்று ஆய்ந்து மருசியே தக்கவன் எனத் துணியும்போது,

"கற்றவர் கற்றனகருதுங் கட்டு ரைக்(கு)
உற்றன உற்றன உரைக்கும் ஆற்றலான்
மற்றவன் மருசியே அவனை நாம்விடச்
சுற்றமும் கருமமும் சொல்ல வல்லனே" (சூளா. 427)

என்று கூறுகின்றனர். இதில் முன்னிரண்டடியிலும் மருசிக்குள்ள ஆராய்ந்த சொல்வன்மையும், கற்றுக் கண்ணஞ்சாது எடுத் துரைக்கும் ஆற்றலும் உணரப்படுவதால் குறளோட்டம் அமைந் திருப்பதை யறியலாம்.

பின்னரும், மருசியை,

"முன்னிய உலகநூலும் குலங்களும் முறையும் உள்ளிட்டு
இன்னவா றறியுநீரார் இல்லை" (சூளா. 564)

என்கின்ற பயாபதியின் சொல்லும் இதனை நன்கு விளக்கும்.

அசுவக்கீரீவன் அல்லது அசுவகண்டன் என்பவன் வட சேடியை ஆளும் வித்தியாதரமன்னவன்; மிகக்கொடியன்; தருக்கு மிக்கவன்; காமக் களியாட்டத்திலும், கள்ளுக் களியாட்டத்திலும்

மயங்கிக் குடிகட்குத் தீமை பல புரிபவன். அவனைத் திருத்த எண்ணிய சதவிந்து என்னும் நிமித்திகன் அவனுக்கு அறவுரை பல பகருகின்ருன். அவற்றுள் ஒன்று

"பெற்ற தன்முத லாப்பின் பெருததும்
சுற்றி வந்தடை யும்படி சூழ்ந்துசென்(று)
உற்ற வான்பொருள் காத்துய ரீகையும்
கற்ற வன்பிறர் காவலனுகுவான்" (சூளா. 626)

என்பது. அரசியலுக்குத் தேவையான பொருளைச் சேர்க்க வேண்டும். பெற்ற பொருளைத் தன் கைம்முதலாகக் கொண்டு பெருத பொருள்களும் தாமே சுற்றி வந்தடையும்படி யாய்தல் வேண்டும். கிடைத்த பொருளை நன்கு காப்பாற்ற வேண்டும். காத்த பொருளை நாட்டிற்குத் தேவையான நல்ல வழிகளில் ஈதல் வேண்டும். இவ்வளவு முறைகளையும் நன்கு கற்றவனே காவலனுவான் என்பது இதன் கருத்தாம். இப்பாடல்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (௩அரு)

என்னுந் திருக்குறட்கருத்தை முழுதும் தழுவியுள்ளது.

இயற்றல் – பொருள் செய்தல். அஃதாவது எங்தெந்த வகையான் அரசுக்குப் பொருள் வரும் என ஆய்ந்து அந்த அந்த வகையில் கைம்முதலை முதலீடு செய்து வருவாயைப் பெருக்குதல். இதனைச் சூளாமணி 'பெற்ற தன் முதலாச் சூழ்ந்து' என்றதாற் குறிப்பித்தது.

ஈட்டல் அங்ஙனம் வருவாயைப் பெருக்கியவுடன், பெருத பொருள்களாகிய மக்களிடம் உள்ளனவும், மாற்ருரிடம் உள்ளனவும், நண்பரிடம் உள்ளனவும், ஆதரவற்ருர், மக்களிலாது இறந்தார் முதலியோரிடம் உள்ளனவும் வரியாக – திறையாக – உதவி நிதியாகத்தானே வந்து சேரும்படிச் செய்தல். இதனைச் 'சுற்றிவந்தடையும் படிச் சூழ்ந்து' என்றதாற் குறித்தது சூளாமணி.

காத்தல் – அங்ஙனம் ஈட்டிய பொருளைப் பகைவரும் – கள்வரும் – கரந்துநின்று கவரும் அரசியல் வினைஞரும் பிறருங் கவராதும் – சிதைந்து சிதருதும் காத்தல், இதனை 'உற்றவான் பொருள் காத்து', என்கிறது சூளாமணி.

வகுத்தல் – கண்ணுங் கருத்துமாகக் காத்த பொருளை, அறப் பொருட்டாக அந்தணர் வறியோர் முதலாயினோர்க்கும், பொருட் பொருட்டாகப் படைகட்கும், நாடு அரண் இவற்றிற்கும் பகையொடு கூடலின் பிரிக்கப் படுவார்க்கும், தன்னிற்பிரிதலின் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தல், இன்பப் பொருட்டாகச் சாலைகளையும் சோலைகளையும் குன்றுகளையும் அமைத்தற்காகவும் கொடுக்கலாம். இதனை 'உயர் ஈகையும்' என்ற தாற் குறிக்கின்றது சூளாமணி. உயர் ஈகை – உயர்வதற்குக் காரணமான ஈகை. இங்ஙனம் முழுதும் ஒத்திருத்தலைக் காண்க.

செருக்கு, செல்வத்தைக் கொல்லும்

மேலும் நிமித்திகன் அசுவகண்டனுக்கு கூறுகின்றான். அரசே! தங்கள் அறிவே ஞாயிறு. தங்களுடைய இணை யீடில்லாத செல்வமே செழுந்தாமரை; அத்தாமரை மலரின் மேல் செருக்கு என்கின்ற பனி வீழக் கூடாது. விழ்ந்தால் தாமரைக்காடே யழியும்.

"அருக்கன் தன்னறிவாக அலர்ந்தநீர்த்
திருக்க வின்றசெல் வச்செழுந் தாமரை
செருக்கெ னப்படுந் திண்பனி வீழுமேல்
முருக்கு மற்றத னைமுகைத் தாரினாய்" (சூளா. 627)

என்பது அப்பாடல். இதனுள்

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து" (சஙௗ)

என்ற குறளைக் காண்கின்றோம்.

செருக்கு – மதம் என்பர் பரிமேலழகர், அதாவது செல்வக் களிப்பு; பிறர்மனை நயத்தல் என்பர் மணக்குடவர். செருக்கால் நயத்தல் நிகழ்தலின் காரண காரிய ஒற்றுமை நயம் பற்றிக் கூறினார் போலும். கர்வம் என்பர் பருதியார் இது எப்பொருளை தாயினும், பனி உலகை மூடாமல் மூடிப் பொருள்களைக் கெடுப்பது போலச் செருக்கும் சிந்தையைக் கெடுத்துத் தீய வழி செலுத்தலாற் செல்வந்தொலையும். ஆகவே செல்வத் தாமரை, செருக்குப்பனியால் அழியும். ஆதலால் செருக்கடையாதே என அறிவுறுத்தினான் நிமித்திகன்.

இகழ்ச்சியிற் கெட்டவர்களை எண்ணுக

மீண்டும், அசுவகண்டனுக்கு அறிவிக்கின்ற நிமித்திகனாகிய சதவிந்து;

" இகழ்ச்சியில் கெடு வார்களை எண்ணுக
மகிழ்ச்சி யின்மன மைந்துறும் போழ்தெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே " (சூளா. 628)

என,

மன்னர் மன்ன! இந்தப் பூமியில் பெருவிளக்கம் வாய்ந்த பேரரசே! மன்னன் தன் மகிழ்ச்சியால் செருக்குறும்போது, மகிழ்ச்சியால் விளைந்த சோர்வால் முன் கெட்டாரை எண்ணிப் பார்க்கவேண்டும். அங்ஙனம் எண்ணினால் மகிழ்ச்சி காரணமாகச் செருக்கி மயங்கநேராது. பகைவரிடம் தப்பலாம் என்ற இச்செய்தி முழுதும்.

" இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து " (ருநகூ)

என்ற குறளோடு ஒத்து விளங்குகிறது. சூளாமணி யாசிரியர்க்குத் திருக்குறளிடம் இணையீடற்ற மதிப்பு உண்மையால், அதைப் **' புகழ்ச்சிநூல் '** *என்றே சொல்கிறார். புகன்றனர் என்பதற்கு எழுவாயாக வள்ளுவர் எனக் கூறிற்றிலர். " இகழ்ச்சியிற் கெடுவார்களை " என்ற பகுதியைக் கேட்ட அளவில், வள்ளுவர் என்பது உலகனைத்திற்கும் தாமே விளங்குமாதலின்.*

காளிங்கர் ' இகழ்ச்சியிற் கெடுவாரை எண்ணுக ' என்று இக் குறட்குப் பாடங்கொண்டு, உரை எழுதினர். அதற்கு அடி இச் சூளாமணிப்பகுதியே காரணம் ஆகும் என்ற நுணுக்கம் இதனால் தெளியப்பெறும். இங்ஙனம் பாடங்கொள்ளின் தளை சிதையும். அன்றியும் மகிழ்ச்சியின் மைந்துறும் பின்னவன், கெட்ட முன்னவனையுள்ள நேருமேயன்றிக் கெடுவானாகிய பின்னவனை எண்ண இயலாதென்பதையுந் ஓர்க.

உயிர் போனாலும் உறுதியே சொல்லுக

முடிந்த முடிபாக, நிமித்திகன் கூறுகின்றான்; ' நீ என்னைக் கொன்றாலும் யான் உறுதியைத்தான் உரைப்பேன். ஆதலால்

நான் கூறுவனவற்றை யறிந்து நடப்பாயாக என அச்சுவகண்டனை வேண்டிக்கொள்கின்றவன்

**"செறுதி யேனும்செம் பொன்முடி மன்னவோர்
உறுதி யானுரைப் பான்உறு கின்றதே"** (சூளா. 629)

என்கின்றான். இதில்

**"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்(கு)
உறுதி பயப்பதாம் தூது"** (சூ கூ0)

என்ற திருக்குறளே நிமித்திகன் வாயுரையாகத் தவழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

இயல்பாகவே மன்னர்கள் மரபுவழியுரிமை என்ற செருக்கால் பெரியோர் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். காமக் களியாட்டத்தில் மூழ்கிக் கடமைகளை மறந்த மன்னனோ அறவுரைகளை அறவே கேளான். கேளாமை மட்டுமன்றிச் சொல்பவனைக் கொல்லவும் செய்வான். அவன் கொல்ல என் உயிரே போமாயினும் அஞ்சி ஒதுங்கமாட்டேன். உறுதியைச் சொல்லத் தான் செய்வேன் என்ற நிமித்திகன் உரையில் வள்ளுவருரை வாழ்கிறது.

சிறுபகை

இவ்வாறு, 'திவிட்டன் உனக்குப் பகைவனாவான் என்ற உண்மையைச் சதவிந்து உணர்த்தவும், அசுவகண்டன் தன்னாற்றலில் உறுதிமிக்கவனாய், நிமித்திகன் கூறியவற்றைக் கேளாது அவமதித்தான். அதனைக் கேட்ட அமைச்சர்கள்,

**"எரியுந் தீத்திர ளெட்டுணை யாயினும்
கரியச் சுட்டிடுங் காந்திக் கனலுமேல்
தெரியிற் றெல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றிடின் வென்றடு கிற்குமே"** (சூளா. 643)

என்றனர். மன்ன! தீ எள்ளத்தனையாக இருக்கலாம். அது கனன்று கொண்டிருக்குமேயானால் மலையத்தனை விறகையும் கரியாக்கிவிடும். அதுபோலப் பகை சிறியதாயினும், சிறிதுவிரியின் வென்றுவிடும். திவிட்டனைச் சிறுபகைதானே என்றுஎள்ளற்க. உன்னையே வெல்லக்கூடும் என்று அறிவு புகட்டுகிறார்கள். இதில்,

"வினைபகை யென்றிரண்டி னெச்சம் நினையுங்கால்
தீ எச்சம் போலத் தெறும்" (கூஎச)

என்ற வள்ளுவம் ஒளிசெய்கிறது. ஆனால் வள்ளுவம், அழிக்கத் தொடங்கிய பகையில் எஞ்சியிருப்பது சிறிதுதானே. அது என்ன செய்துவிடப்போகிறது என்று பாராக்கண்ணுக இருத்த லாகாது, என்று எச்சரிப்பதாயினும், 'பகை சிறிதாயினும்' என்ற அளவில் அதனை எடுத்தமைத்துக்கொண்டது சூளாமணி.

மேலும் அமைச்சர்கள் சொல்கின்றனர்,

"முட்கொள் நச்சு மரமுளை யாகவே
உட்க நீக்கின் உகிரினும் நீக்கலாம்
வட்க நீண்டதற் பின்மழுத் தள்ளினும்
கட்கொ டாமன்ன யார்களை கிற்பவே" (சூளா. 644)

முள்ளோடு கூடிய நச்சுமரம் ஒன்று இப்போதுதான் முளைத்துவருகிறது; அதனைக் களையவேண்டின், நகத்தால் கிள்ளி எறிந்துவிடலாம். அதுவே நீண்டு ஓங்கிப் பரந்து வளர்ந்துவிடுமானால் கோடரியாற்கூட வெட்ட முடியாததாகும். ஆதலால் திவிட்டனுகிய பகையைத் தோன்றும்போதே தொலைத்துவிடவேண்டும் என்கின்றார்கள். இது

"இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து" (அஎகூ)

என்ற திருக்குறள் வழங்கிய கருத்தாகும். முண்மரம் என்ற அளவில் வள்ளுவர் கூறியதை நச்சு முண்மரம் என்று நச்சுத் தன்மையையும் உடன் கூட்டிப் பகைவன் கொடுமையைச் சிறப்பித்தனர் தோலாமொழித் தேவர். அதனேடு, 'மழுத் தள்ளினும் கண் கொடா' என வெட்டுதற் கருமையையும் விளக்கினர்.

மற்றும் பகை சிறிது என்று இகழ்தலாகாது என்பதனை

"சிறிய என்றிக ழார்பகை சென்றுசென்று
அறிய லாவவன் ருல்" (சூளா, 645)

என வலியுறுத்துகின்றனர்.

இது

"எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை யுள்ளதாம் கேடு" (அஅகூ)

என்ற வள்ளுவம் வழங்கிய கருத்தாகும். வள்ளுவர் சிறுமைக்கு ஓரளவு கொடுத்து எட்பிளவை ஒத்த சிறியது என்றதைத் தோலாமொழியார் 'சிறிய' எனவாளா கூறினர்.

ஏனைய அமைச்சர்கள் கூறிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அரிமஞ்சு என்னும் அமைச்சன், செம்மையாகப் பகையென்று துணியப்படுமாயின் நாம் விரைந்து எதனையும் செய்துவிடுதலாகாது. ஆராய்ந்து தெளிந்து செய்வோம், அயலாரையும் நண்பினரையும் பகையாகக் கருதுதலும், பகைவரை நண்பராகக் கருதலும் பெருந்தவருகும். ஆதலால் பகைவன்தான என்று ஆராய்ந்து முடிவுக்குவருவோம் என்ருன். இதனை,

"பகைய லாதவ ரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண் பென்னலும்
முகையின் வேய்ந்ததோர் மொய்மலர்க் கண்ணியாய்
மிகையின் மற்றவை பின்னை வெதுப்புமே" (சூளா. 647)

என்ற பாடல் அறிவிக்கும் இதன் கருத்து.

"அற்ருரைத் தேறுதல் ஓம்புக" (டும்சு)

என்றதாற்பெற்றது என்றும் ஓரளவு கருதலாம்.

மனத்துட்சினக்க

அரிமஞ்சுவின் உரையைக் கேட்ட அசுவகண்டன் அவ்வாறே ஆய்ந்து செய்வேம் என்று தூதனொருவனைப் பயாபதி மன்னனிடம் அனுப்பினன். தூதுவன் பயாபதியிடம் தான் கொணர்ந்த ஓலையைக் கொடுத்து, தம்மரசன் திறைகட்டச் சொன்ன செய்தியையும் அறிவித்தான். பயாபதி மன்னன் அனைத்தையுங் கேட்டுச் சீற்றமும் பதட்டமுமின்றி, நயந்தெரி மனத்தனன். என்றதை அறிவிக்கும் ஆசிரியர் சிந்தையில், வரலாற்றை இங்ஙனம் நடத்திச் செல்ல

"பொள்ளென ஆங்கே புறம் வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்" (சஅ௭)

என்ற திருக்குறள் உதவியிருக்க வேண்டும். அதனாலேயே சூளாமணியாசிரியர்

"வேந்தன்மற் றதனைக் கேட்டே வேற்றுவ னெறிந்த கல்லைக்
காந்திய கந்த தாகக் கவுட்கொண்ட களிறு போலச்
சேந்தவ ருரைத்த மாற்றம் சிந்தையு ளடக்கிவைத்து
நாந்தகக் கிழவர் கோமான் நயந்தெரி மனத்தனானான்"
(சூளா. 666)

என்றார்.

பயாபதியின் சிந்தனை

தான் தேடிய பொருளைத் தானுகரலாம் என்றிருந்த காலத்து, விதி குறுக்கிட்டு அப்பொருளைப் பறித்துப் பிறர்க்கு நீட்டுமாயின் அதனை விலக்க மாட்டாமல் புல்லறிவாளர்கள் வருந்துவார்கள். மேலோர் விதியினை வெல்வர் என்று கருதுகிறான். இக்கருத்து,

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்றுபவர்" (௬௨௦)

என்ற திருக்குறளை எண்ண எழுந்ததாம். இதனையுட்கொண்டே தோலா மொழியார்

"விதியினை விலக்கமாட்டார் மெலிபவே எளிய நீரார்"
(சூளா. 668)

என்றனர்.

இங்ஙனம் பலவற்றை எண்ணிப் பயாபதி மன்னன் அசுவகண்டனுக்குத் திறைகட்ட ஒப்பினன். அசுவகண்டன் கேட்டவாறே நாடக மகளிர் யானை குதிரை பொன் பொருள் முதலியவற்றைத் திரட்டித்தந்து, இன்னுரை கூறி அனுப்பினன். இதனை அறிந்த திவிட்டன் தூதனைத் தடுத்து நிறுத்தினன். அதனாற் சினந்த அசுவகண்டன் அமைச்சர் கூறிய வண்ணம் மாயச்சீயத்தை அனுப்பினன். அதனைத் திவிட்டன் அஞ்சியோடச் செய்து, அதனுடனிருந்த உண்மைச் சீயத்தைக் கிழித்துக் கொன்றனன். வெற்றிகண்டு, வேந்தனைக் காணவருகின்ற திவிட்டனுக்கு விசயன் இயற்கைக் காட்சிகளைத் காட்டி வருகின்றான். பாராட்டவும் செய்கின்றான். அவற்றுள் ஒன்று

ஒருவனுக்கு உடல் இரண்டு; ஒன்று உருவுடல்; மற்றொன்று புகழுடல். உருவுடல் இம்மண்ணிலேயே ஒழிந்துபோம். புகழுடல் என்றும் பொன்றாது. சிறந்து பின்னிற்கும் என்கின்றான்.

"ஒருவன திரண்டி யாக்கை யூன்பயி னரம்பு போர்த்த
உருவமும் புகழும் என்றாங் கவற்றினுள் ஊழின் வந்து
மருவிய யாக்கை யீங்கே மறைந்துபோம் மற்றை யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் நிற்குமன்றே"
(சூளா. 776)

என்பது அச் செய்யுள். இது,

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்" (உ௩௩)

என்ற குறளின் விரிவேயாகும்.

புகழை ஓருடம்பாக உருவகித்த ஒன்று சூளாமணிச் செய்யுளின் தனிச்சிறப்பு. இதனால், உருவுடம்பு உயிர்நிற்றற்கு இடனாதல் போலப் புகழ், தன்னைத் தேடிக் குவித்தவனைப் பற்றிய உணர்வு நிலைக்க இடமாகிறது என்ற நயந்தோன்றச் செய்கிறார் ஆசிரியர்.

விசயன் இவ்வாறு இயற்கைக் காட்சிகளைக் காட்டி வருகின்றவன், பாலைவனத்திலே நீர்வேட்கை மிகுந்த மான்குழாம் கானல்நீரைக் கண்டு ஓடியிளைத்தமையைக் காட்டி அதன்வாயிலாக

"இசையில் கீழ்மகன் கண்ணிரந் தெய்திய
வசையில் மேன்மகன் போல வருந்துமே" (சூளா. 784)

என்று ஓர் அரிய நீதியையும் உணர்த்தினன்.

புகழேயில்லாதவன்: அதிலும் 'கீழ்மகன்; அவனிடத்து குற்றங்கள் ஒன்றுமில்லாத மேன்மகன் ஒருவன் சென்று இரந்தான். அவன் என்ன செய்திருப்பான். இலன் என்னும் எவ்வஉரையை உரைத்திருப்பான். மேன்மகன் முகமும் அகமும் சோர்ந்து வந்திருப்பான். அதுபோல மான்கள் வந்தன என்றனன். இது,

"இலன்என்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலன்உடையான் கண்ணே யுள" (உஉ௩)

என்பதனையும் 'ஈத்து வக்கும் இன்பம்' (உஉஅ) என்பதனையும் உட்கொண்டு எழுந்த உரையாகும்.

கீழ்மகன்' தான் இது போது வறியன்' என்ற உரையை ஒருபோதும் சொல்லியிருக்கமாட்டான். தன்கைப்பொருள் சிறிதாக இருப்பினும் அதனைப் பெரிதாகக் கூறி ஆடம்பரப் படுத்துகிறவன். ஆதலால் வந்த மேன்மகனைப் பற்றி, இவன் வறியன் என்மாட்டு இரக்க வந்திருக்கிருன் என்று வாய் வீச்சுப்பேசியிருப்பான். அது வந்த மேன்மகனுக்குத் துன்பம் தருவதாக இருந்திருக்கும். அத்துடன் இப்போது ஒன்றும் கொடுக்க மாட்டேன் என்று வெருட்டியும் இருப்பான். அதனல் இரக்க வந்த மேன்மகன் சோர்ந்து போயிருப்பான். இக்காட்சியை ஒட்டிய 'இலனென்னும்' குறட்குள்ள பலவுரைகளில் இதனையே உட்கொண்டு உரைத்தனர் சூளாமணி ஆசிரியர் எனத்தோன்றுகிறது.

வரலாறு விரைந்தோடுகிறது; திவிட்டன் சிங்கத்தைக் கொன்ற செய்தி சடிமன்னன் காதிற்கு எட்டியது. அவன் மணத்திற்கு வேண்டிய முயற்சிகள் பலவற்றையும் செய்தான். அமைச்சரும் சுற்றத்தாருமாகிய இவர்கள் ஆலோசனையின் வண்ணம் தாமே சென்று பயாபதியைக்காணலாம் என்று துணிந்து தன் வரவை மருசியின் வாயிலாகச் சொல்லியனுப்பினுன். பயாபதியும் அவனை வரவேற்பதற்குரிய அரண்மனை முதலியவற்றை அமைத்து அதில் தங்கவும் அவர்கட்கு ஆவன செய்யவும் ஏவினுன். தானும் மந்திரச்சுற்றம் சூழ சடிமன்னனைக் காணப் புறப்பட்டான். சடிவேந்தன் பயாபதிவருவதையறிந்து எதிர்கொண்டு அழைத்துவந்தான். சயம்பவையை அழைத்துப் பயாபதியை வணங்கச் செய்தான். பயாபதி தம் மருகியாவாளைப் பாராட்டினுன். சயம்பவை தன்னிருப்பிடம் செல்லும் இடைவழியில், தோழியாகிய . அமிர்தபிரபை திவிட்டகுமாரனைக் காட்டக் கண்டாள் அதுமுதல் அவளுக்குக்காதலரும்பியது. அதனல் அவள் தனிமையால்

"காதலார் திறத்துக் காத லாக்கிய காத லாரை
ஏதிலார் போல நோக்கின் இருமடங் காக எய்தும்
போதுலாஞ் சிலையி ஞன்றன் பொருகணைக் கிலக்கஞ் செய்யும்
ஆதலாற் காம நோய்க்கோர் அருமருந் தில்லை யன்றே"

(சூளா. 991)

என்று வருந்துகிறாள். காதலையூட்டிய காதலரை அயலாரைப் போலப் பொதுநோக்கு நோக்கின் காதனோய் இருமடங்காகப் பற்றுகிறது என்ற முதல் இரண்டடிகளும்

> "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
> காதலார் கண்ணே யுள" (௧௦௯௯)

என்ற குறட் கருத்தைத் தாங்கியுள்ளன. காதலர்கள் நாணத்தால், தங்காதலைப் பிறரறியாவண்ணம் மறைக்கப் பார்ப்பர். அது பார்க்கப்பட்ட காதலர்க்கும், பார்க்கும் காதலிக்கும் இருமடங்கு காதலைக் விளைவிக்கும் எனப் பொதுநோக்கால் விளையும் பயனையும் விளக்குகிறது சூளாமணி.

ஈற்றடி 'காமநோய்க் கோரரு மருந்தில்லை' என்பது காதல் நோய்க்குக் காதலனுடைய அல்லது காதலியினுடைய கனிந்த நோக்கே மருந்தாவன்றிப் பிற மருந்தில்லை யென்பதை விளக்குவது. வள்ளுவர், தலைவன் கூறுவதாக

> "பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
> தன்னோய்க்குத் தானே மருந்து" (௧௧௦௨)

என்கின்றார். இதில் தன்னோய்க்குத்தானே மருந்து எனத்தலைவன் தலைவி மருந்தாவதைக் கூறுகின்றான். இங்கு சயம்பவை கூறுவதால் காதல் நோய்க்குக் காதலனாகிய திவிட்டனே மருந்து என்கின்றாள். இச்சிறு மாற்றத்தைத் தவிரச் சொல்லாட்சியும் பொருண்முடிபும் ஒத்திருப்பதைப் பார்க்கிறோம்.

மாதவசேனை என்னும் பணிப் பெண் சயம்பவையின் கருத்தைக் குறிப்பின் உணர்ந்து வந்து திவிட்டன் தாயிடம் சொன்னாள். சயம்பவையின் உருவத்தையுந் தீட்டித்தந்தாள். அதனைக் கண்டு தாய் மகிழ்ந்து, தன் மகனுக்கும் காட்டு வண்ணம் பணித்தாள். திவிட்டனிடம் ஓவியத்தை காட்ட,

> "வானவர் மகள்கொல் விஞ்சை மாதுகொல் மண்ணு ளாள்கொல்
> தேனிவர் குழலி மற்றித் திருநுதல் மடந்தை யென்ன
> மானிவர் நோக்கி வானோர் மகள்அல்லள் மற்று நின்ற
> ஊனிவர் அலங்கல் வேலோய் உய்த்துணர்ந் தருளு கென்றாள்"
> (சூளா. 1017)

திவிட்டன், படத்தைக் கண்டதும் இவள் தேவப்பெண்ணோ, விஞ்சைமகளோ மானுடமகளோ என ஐயுற்றான். இக்கருத்து,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (௧௦௮௧)

என்ற குறளைப் பின்னணியாகக் கொண்டு விளைந்தது எனலாம்.

மாலைப் போது

திவிட்டன், மாலைப்போது வரக் காமநோயாற் கவலுகின்றான் என்பதைக் குறிக்கும் ஆசிரியர்,

"மாலை, கைபெருகு காமநோ யுடையவர்க்கோர்
கனல்போல வருமே" (சூளா. 1033)

என்றதாகக் குறிக்கின்றார். இது 'அழல் போலும் மாலை' (௧௨௨௮) என்ற வள்ளுவர் தந்த உவமையின் பயனாகும்.

உள்ளத்தால் ஒருவர்

திருமணம் நடந்தது. திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் மணமக்களைப் பாராட்டிச் சென்றனர். திருமணநாள் அன்றைய இரவு காதலர் இருவரும் பள்ளியறையை யடைந்தனர். இருவரும் ஆர்வவெள்ளத்திடை யழுந்தினர். இருவரும் உருவத்தால் வேறாக இருப்பினும் உள்ளத்தால் ஒருவராயினர்.

"பருவத்தால் அரும்பிப் போதாய்ப் பையவே யலர்ந்து முற்றி
மருவித்தேங் கனிகொண் டுள்ளான் மனங்கொள அளிந்த காமத்
திருவொத்த களியின் றீஞ்சா(று) ஆரவுண்(டு) ஆர மாட்டார்
உருவத்தால் இருவராகி உள்ளத்தால் ஒருவர் ஆனார்"
(சூளா. 1112)

என்கிறது சூளாமணி.

"காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்" (௧௨௨௭)

என்பது வள்ளுவம்.

வள்ளுவம் கூறுகிறது 'காம நோய் ஒரு மலர்; அது காலையிலே அரும்பிற்று; பகற்பொழுதெல்லாம் வளர்ந்து அலரும் பருவம் அடைந்தது. மாலைக்காலம் வந்தது: மலர்ந்து மணம் வீசிற்று' என்று. தலைநாட் புணர்ச்சியும் வழிநாட் புணர்ச்சிகளும் செய்து களவில் வாழ்ந்தகாதலி பகல்முழுதும்

அவன் நினைவாகவே இருந்து, மாலைக்காலம் வர, நினைவில் விளைந்த காமம் மலர்ந்து ஆற்றமாட்டாமையைச் செய்தது என்பது வள்ளுவம் கூறும் கருத்து.

சூளாமணி சொல்லியது தலைவனாகிய திவிட்டன், பதினாறு ஆண்டு நிரம்பி மணவுலகம் அறிந்த மனிதனானான். பின்னர் ஆண்டுகள் மிக மிகப் பாலுணர்ச்சியும் தேவையும் மிக்க போதானான். போதானவிரைவு மலர்தலிலே இல்லை. காரணம் தன்தகுதி, குடிப்பெருமை, ஆன்றமைந்தடங்கிய கொள்கை, அறிவு அதனாலுண்டாய நாணம் அனைத்தும் அவனைக் கணந் தோறும் தடுத்தன. விதியும் துணைசெய்திலது. அதனால் மலரா திருந்தான். இப்போதோ அமிர்தமாபிரபை என்னும் சேடியின் வாயிலாக ஓவியக்காட்சியைக் கண்டான். போது சிறிது சிறிதாக முறுக்கவிழத் தொடங்கியது. மலர்ந்தது. பின்னர் விரைவாகப் பிஞ்சாகிக் காயாகிக் கனிந்தும்விட்டது.

அங்ஙனமே சயம்பவையும் அரும்பாய்ப் போதாய்ப் பிஞ்சாய்க் காயாய்க் கனியானாள். இவள் அவனை நுகர்ந்தாள். அவன் இவளை நுகர்ந்தான். இருவரும் உருவால் வேறாயினும் உள்ளத்தால் ஒருவராயினர் என்றது.

இங்ஙனம் கற்புநெறி மணம் நிகழ்ந்தபின்பு ஒருவர் ஒருவருக் குரியராயினமையானும், கலவியென்பது இருவரின் முடியும் ஒரு வினையாதலானும். இருவரும் காமமாகிய காயில் கனியாயினர் இருவரும் நுகர்வோரும்ஆயினர். என்கின்றது சூளாமணி, இதன் வளர்ச்சி வேறாயினும் வித்து வள்ளுவம் கூறும் 'காலை யரும்பி' என்ற குறளே எனல் தெளிவாக உணரப்பெறும்.

உயிரினும் உயர்ந்தது மானம்

பூமியில், மகளும் மருமகனும் கலந்து வாழ்வதைக்கண்டு களிப்புக்கடலில் மூழ்கியிருக்கிறான் சுவலனசடி யென்னும் தென்சேடி மன்னன். வடசேடி மன்னனாகிய அசுவகண்டன் திவிட்டன் சீயத்தைக் கொன்றதையும், சடிமன்னன் திவிட்டனுக்குத் தன்மகள் சயம்பவையைத் திருமணஞ்செய்து கொடுத்ததையும் ஒற்றர் வாயிலாக அறிந்து சினங் கொள்கிறான்,

அதனைக் கண்ட ஏனைய அரசர்கள் அனைவரும் ஒருங்குதிரண்டு தெரிவித்துக் கொண்ட வண்ணம் சடிமன்னன் மீது போர் தொடுக்கப் போவதாகத் தூது அனுப்புகிறான். அமுதத்தில் ஒரு துளி நஞ்சையிட்டது போல மகளின் மண நிகழ்ச்சியால் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கும் சடிமன்னனிடம் தூதுவர்கள் அசுவகண்டனும் மன்னர்களும் படை எடுத்து வரப்போவதை யுணர்த்தினர். அது கேட்ட சடிமன்னன் தானும் போருக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்தபோது அவன் மகனாகிய அருக்ககீர்த்தி,

"உயிரினும் மதிக்கற் பால(து) உள்ளப்பே றுறையி னுள்ளது
அயில்தரும் பனிக்குந் திண்மை மானநாண் அதனை ஏற்றி
வயிரவில் மனத்த தாகக் கையது வையங் காக்கும்
செயிரில்வில் லதனை நோக்கிக் கூறுகிறான்." (சூளா. 1196)

இதில் அருக்ககீர்த்தி மானம் என்கின்ற நாணைப் பூட்டிய பகைமை என்னும் வில்லை மனத்திலே வைத்து, புறம்பே தன்கைவில்லை நோக்கிக் கூறுகின்றான்; என்கின்ற ஆசிரியர் மானம் உயிரினுஞ் சிறந்தது; உள்ளமாகிற உறையுள் உள்ளது; என்று இரு சிறப்பிலக்கணத்தைத் தெரிவிக்கின்றார். இது

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்." (௯௬௯)

என்ற வள்ளுவந்தந்த நினைவாகும். 'மானங் கெட நேர்ந்தால் உயிர்நீப்பர்' என்பதால் மானம் உயிரினும் மதிக்கற் பால தாயிற்று என்பதனை எண்ணி யாத்த ஒன்றாகும்.

இமைப்பவன் மேல் அம்பு எய்யாமை

சடி, அசுவகண்டன் ஆகிய இருவர் படையும் எதிர்த்துக் கடும்போர் புரிகின்றன. அவைகள் செய்யும் போர்த்திறத்தை வியந்து விரித்துரைக்கின்ற ஆசிரியர்,

"ஏற்றவர் இமைப்பினும் இகழ்ந் தெறிதல் செய்யார்
தோற்றவர் புறக்கொடையும் நாணிமிக நோக்கார்"
(சூளா. 1280)

என்கின்றார்.

இது, எதிரேற்ற படைவீரர் கண்ணிமைப்பராயின், அவர்களை ஒரு பொருட்டாக மதித்து அம்பு எய்யமாட்டார்கள் என்ற கருத்தமைந்து.

" விழித்தகண் வேல்கொண் டெறிய அழித் திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" (சூளா. 775)

என்ற குறளால் உணர்த்தப் பெறும் புறக்கொடையாய் அழிகுநர் புறக்கொடை அயில்வாளோச்சாமை வீரர்க்கு மரபாதலை உணர்த்தி இணைகிறது.

தவச்சிறப்பு

திவிட்டன் போர்வென்று, வெற்றிவீரனாக ஆட்சி புரியுங் காலத்தில், சயம்பவை தான் வைத்து வளர்த்த பாரிசாதம் பருவமடைந்து பூத்தமை கருதி அதற்குச் சுயம்வர விழா நடத்த எண்ணி, அரசனையும் அழைத்தாள். விழா விதூடகன் துணையோடு மிக்கமகிழ்ச்சியாக முடிந்தது. முடிவில் மகளிர் மன்னன் மனைவியோடு பல ஆடல் பாடல்களைப் புரிந்து, பொழிலின்பம் நுகர்ந்தனர். அப்போது திவிட்டன் ஒரு தெய்வத்தை வேழமாக்கி அங்கே வரச் செய்தான். வேழத்தைக்கண்ட சயம்பவையும் ஏனைய மகளிரும் அஞ்சினர். திவிட்டன் சயம்பவையைத் தேற்றும் போது, ஆசிரியர் அவனை

" வேண்டிய விளைத்துக் கொள்ளும் விழுத்தவம் விளைத்து வந்தான் "
(சூளா. 1667)

என்று பாராட்டுகின்றார். இது,

" வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்.
ஈண்டு முயலப் படும். " (சூளா. 265)

என்ற வள்ளுவந் தந்த விளக்கமாகும்.

பின்னரும், துறவுபூண்பதாக உணர்த்திய பயாபதி மன்னன் தன்மகனையும் பேரனையும் நோக்கித் தவத்தின் பயனை உணர்த்தும் போது,

" ....இன்பமே பருக நின்ற
வீங்கிய தவத்திற் கின்னும் வித்திடற் பாலது"
(சூளா. 1843)

என்றான். இதனால் தவத்தை ஈண்டும் இன்னமும் இயற்ற வேண்டும் என்று வற்புறுத்திய வாறு காண்க.

நல்வினை நலம் பயக்கும்

வள்ளுவர்

"தீயவை தீய பயத்தலான் தீவினை,
தீயினும் அஞ்சப்படும்" (சூளா. 292)

என்று தீவினையால் விளையும் கேடு கூறுவதன் வாயிலாக, நல்வினை நன்மை பயத்தலைக் குறிப்பித்தனர். அதனை அப்படியே உட் கொண்டு சூளாமணி.

"நலனுடைத்தளிய நங்கண் நல்வினைத் தெய்வ மன்றே"
(சூளா. 1844)

என்கின்றது. நங்கண் நல்வினைத் தெய்வம் நலனுடைத் தென்றதால் நல்வினை நலம் பயந்தவாறு கூறப்பட்டது.

மேலும், பொதுவகையால் நல்வினை செய்வதைவிட்டுத் தீவினைசெய்து தீநரகெய்தும் மக்கள் நிலைக்கு மனமிரங்கிக் கூறும் மன்னன் உரையான,

.... "நல்வினை என்னும் இன்ன,
முன்னுப காரி தன்னை முதல் கெட முயலுங் கீழ்மை
நன்னர்இல் மாந்தர் அன்றே நரகங்கட் கரச ராவார்"
(சூளா. 1845)

என்பதும் அக்குறட்கருத்தையே தம் மகத்துக் கொண்டதாம்.

வாழ்வு நிலையற்றது

வள்ளுவர், வாழத்தெரியாத மனிதன் கோடிக்கணக்காக மனக்கோட்டைக் கட்டுகிறான். நில்லாதனவற்றை நிலையானவை என்று எண்ணுகிறான் என்றனர். அவற்றை யகத்துட்கொண்ட ஆசிரியர் தோலா மொழியார், மரத்திலே, வயந்தகாலம் வந்ததும், செந்தீப் போலத் தளிர்கள் தோன்றுகின்றன. அடுத்து நான்கு நாட்களில் செம்பசுமை, பசுமை, கரும்பசுமை கொள்கின்றன. சில நாட்களில் பழுக்கின்றன. பின்பு கீழே காம்பு ஊழ்த்து விழுகின்றன. மண்ணில் மக்கி மண்ணோடு மண்ணாகக் கலக்கின்றன. இதனை அன்றாடம் மக்கள் பார்க்கின்றனர். 'இப்படித் தானே நாமும்' என்ற எண்ணம் தோன்றாமல், வாழ்வோம் என்று திட்டம் தீட்டுகின்றனர். இவர்களுடைய வெளிற்றறிவை **எப்படி** *விலக்குவது என்கின்றார் (1847) இவை பலகுறள் இணைந்து விளக்கம் பெற்ற கருத்தாகும்! பாடலைப் பார்ப்போம்,*

"எரிபுரை எழிலதாய இளந்தளி ரிரண்டு நாளில்
மரகத வுருவம் எய்தி மற்றது பசலை கொண்டு
சருகிலை யாகி வீழ்ந்து சரிந்துமண் ணுதல் கண்டும்
வெருவிலர் வாழ்தும் என்பார் வெளிற்றினை விலக்கலாமோ"
(சூளா. 1847)

என்பது சூளாமணிச்செய்யுள், இதில் 'நில்லாதவற்றை' என்ற குறளின் கருத்து உவமை வாயிலாகப் படிப்படியாக வளர்ந்துள்ளதைப் பார்க்கிறோம்.

மற்றும், பயாபதிமன்னன்,

"இறந்தனர் என்பதல்லால் யாவரும் இன்று காறும்
மறந்துயிர் வாழாநின்றார் இல்லையால்" (சூளா. 1848)

என்று கூறுவது,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை" (௩௩௬)

என்னும் குறளைக்கருதி எழுந்த பகுதியாகும்.

"ஆள்வினை மாட்சி யென்னும் இரண்டினும் அரசு காத்து"
(சூளா. 1855)

என்பது ஆள்வினையுடைமை, இறைமாட்சி என்ற அதிகாரப் பெயர் இரண்டையும் உளங்கொண்டு உரைத்ததாகும்.

'கூற்றம் எவ்வெவற்றைக் கொண்டு செல்லும்' யமராசனை வெல்வது எப்படி? என்று கேட்ட மன்னன் மனக்கருத்து, துறவின் மேலும் தவத்தின்மேலும் உள்ளதென்பதைக் குறிப்பானுணர்ந்த அமைச்சர்கள்

"கூழைமை பயின்ற கூற்ற அரசனைக் குதிக்கும் சூழ்ச்சி
பாழியந் தடக்கை வேந்தே பயின்றிலம் யாங்கள்"
(சூளா. 1858)

என்றனர். இதில்

"கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" (உ௬௯)

என்ற குறள் சொல்லமைதியானும் பொருளாலும் ஒளி செய்கின்றது. அமைச்சர்கள் தவமாகிய சூழ்ச்சியை யறிந்திலேம்

என்கின்றூர்கள். அவர்களை நோக்கிப் பயாபதி மன்னன், கூறுவதாக,

> " இன்னுயி ரழியும் போழ்தும் இறைவனுக் குறுதியல்லான்
> முன்னிய முகமன் மாட்டா முற்றிய அறிவினுர் "
>
> (சூளா. 1861)

எனவரும் பகுதி 'ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு' (சுடுச) என்பதனையும் 'உறுதி உழையிருந்தார் கூறல் கடன்' (சுடுஎ) என்பதனையும் உளங்கொண்டு எழுதப் பெற்றதாகும்.

அரசன் கூற்றினை வெல்லும் உபாயங்கூறுக எனக் கேட்ட போது, அமைச்சர்கள், பார்வைக்கு இனியவாகி, நுகர்ந்தால் இடுக்கண் செய்யும் கனிபோன்ற சொற்களைக் களைந்து, ஆய்ந்து தெளிந்த முனிவர் சொற்களைக் கேட்கும் வண்ணம் விண்ணப் பித்தனர்என்கின்றவர், மந்திரிகளைக் 'கண்அன்னுர்' என்கின்றூர். இவ்வெண்ணம் 'சூழ்வார் கண்ணுக ஒழுகலான்' (சசரு) என்ற குறளில், வள்ளுவர் அமைச்சர்களைச் கண்போன்றவர்கள் என்று கூறியதால் வந்ததாகும்.

இனியன் போன்று தோன்றி இறுதி செய்யுங் கனிபுரை கிளவிநீக்கி (சூளா. 1862) என்றது "பழுதெண்ணும் மந்திரியை" (சுடுகூ) அகங்கொண்டு கூறியது. வள்ளுவர் அறமே யுரைக்க வந்தவராதலின், அஞ்சாது அமைச்சர் மேல் வைத்துக் கூறியதைச் சூளாமணியாசிரியர் அமைச்சர் கூறுவதாகக் கூறினர். இருவர் கருத்தும் முடிவொத்துக்கூறும் இயல்பான் சிறிது வேறுபட் டுள்ளமை காண்க. இப்பாடல், 'தெரிதலும் தேர்ந்து செயலும்' (சுடுச) என்ற குறளின் தெரிதலின் கருத்தாக அமைந்தது எனலுமாம்.

ஞானவொழுக்கம்

தானடங்குதலும், அடங்கிய உயிர்கள் எய்தும் துன்பத்தை யறிந்து நீக்குதலும் ஞான வொழுக்கமாம் என்பதை

> " தானும் அடங்கி அடங்கினர்க் கேந்திய
> ஊனம் உயிர்களுக்கு எல்லாம் உணர்வது
> ஞான வொழுக்கம் பெருகு நலத்தகை
> ஈனமில் இன்ப நிலங்கட் குவித்ததே." (சூளா. 1997)

என்று சொல்கிறது சூளாமணி. இத்துணை மிகுதியான ஞான வொழுக்க இலக்கணமும், அதன் பயனும்,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்,
என்றும் இடும்பை தரும்" (கஙஅ)

என்ற குறளின் பதிவாகும்.

உண்டிகொடுத்தோர் உறுபயன்

நெடுநாட் பசியுடைய ஒருவர் வந்து நம்கடைவாயிலில் நிற்கின்றார். நாம் பார்க்கிறோம். அவர் துன்பத்தைப் போக்க நம் ஆற்றலுக்கு ஏற்ப உணவு கொடுப்போமாயின், நாம் மறுமையில் யானையும் தேரும் குதிரையும் காலாளும் மன்னரும் புடைசூழக் கொற்ற வேந்தராகலாம் என்பதை அறிவிப்பது.

"கடைநின் றவருறு கண்கண் டிரங்கி
உடையதம் ஆற்றலின் உண்டி கொடுத்தோர்
படைகெழு தானையர் பல்களி யானைக்
குடைகெழு வேந்தர்க ளாகுவர் கோவே" (சூளா. 1998)

என்ற இப்பாடல்.

வள்ளுவர்,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (உஉசு)

என்றார். சுற்றமும் பற்றுக்கோடும் பொருளும் அற்ற வறியரின் பசியைப் போக்குதலே, ஒருவன் தன் பொருளை அழியாமற்சேமித்து வைக்கும் இடமாம் என்பது. பொருளைச் சேமநிலத்துக் சேமித்து வைத்தால் அது அழியாமை மட்டும்மன்றி வட்டியுஞ் சேர்ந்து வருதல்போல, இரவலர்க்கு ஈந்த உணவால் மறுமையில் மன்னன் ஆகும் புண்ணியமும் பொருந்தும் என விதந்து கூறுகிறது சூளாமணி.

அறவழி யீட்டாத பொருளால் ஆம்பயன்

பல உயிர்களுக்குத் துன்பஞ் செய்து ஈட்டப் பட்டதால், துன்பமே செய்யும் தீயவழி யீட்டிய பொருளை நல்வினையும் நன்ஞானமும் உடையார்க்கு ஈந்தால் நற்பயன் மிக உண்டாம் என்பது பழிப்பிற்குரியது என்பதை,

"ஊறுபல செய்துயிர் கட்கிடர் செய்யும்
வீறில் பொருளை வினையவர்க் கீந்தவன்
ஏறும் பயனிஃ தென்றினி யான்சொலின்
நாறிணர்த் தாரோய் நகுவதுடைத்தே" (சூளா. 1999)

என்ற பாடல் உணர்த்துகிறது. இதனால் அறனறிந்து திறனறிந்து தீதின்றி வந்த பொருளே மேலோர்க்கு அளிக்கத்தக்கது என்பது வலியுறுத்தப் பெறுகின்றது.

இது

"அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (எருச)

என்ற வள்ளுவத்தின் மறுதலையாகத் தீதுடன் வந்தபொருள் அறனும் இன்பமும் ஈயாது என்பது காட்டப்பெறுகின்றது.

தவமும் தவமுடையார்க்கே ஆகும்

பல பிறவிகளில் தவஞ்செய்து பழகியவர்களே அப்பயிற்சி வாசனையாற் பின்பும் தவஞ்செய்வர். அவமே செய்து வருபவர் கட்குத் தவம் அரிதாம் என்பது.

"தவஞ் செய்து வந்தார் தவநிலை நிற்பார்
அவஞ் செய்து வந்தார்க்கு அரிது பெரிதும்
பவஞ் செய்து மாக்கள் பரியு மதுதான்
எவன் செய்து மென்னை யீர்மலர்த் தாரோய்"
(சூளா. 2005)

என்னும் இப்பாடலால் உணர்த்தப் பெறுகிறது. இப்பாடலின் முன் இரண்டடிகளிலும்

"தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது" (உசாஉ)

என்ற குறள் ஒளி செய்கிறது. இதில் 'தவம் உடையார்க்கு ஆகும்' என்பதற்குப் பரிமேலழகர் முதலிய உரை யாசிரியர்கள், பயனேயன்றித் தவமும் உண்டாவது முன் தவம் உடையார்க்கே என விரித்தனர். இக்கருத்தை வலியுறுப்பது பல பிறவியிலும் தவமியற்றிப் பழகியவரே தவத்தின் கண் நிலைபெறுவார் என்ற சூளாமணிப்பகுதி. வள்ளுவர் கூறிய 'ஆகும்' என்பதற்குத் தவத்தின் கண் நிலைநிற்பர் எனப் பொருள்கண்ட அவ்வளவே சூளாமணி செய்த உதவி.

வீட்டியல்பு

பயாபதி மன்னன் அருகதேவனாலயத்தை வணங்கி, வலம் வந்து ஒரு மண்டபத்தை யடைந்தான். அங்கே ஒளிமயமான

ஒரு முனிவரைக் கண்டான். அவர் வாயிலாக அறவுரைகளைக் கேட்டான். அவர் கூறிய வீட்டியல்பு

> **"இருவகை வினைகளும் இல்லது ; இவ்வழி**
> **வருவகை யிலாதது"** (சூளா. 6070)

என்பது. இதில் 'இவ்வழி வருகை இலாதது' என்பது

> **"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
> **மற்றீண்டு வாரா நெறி"** (௩௫௬)

என்றதனை அடியொட்டிது. வீடு அல்லது முத்தி எனப்படுவது மீண்டும் பிறவிக்கண் வாராநெறி. ஆகவே வள்ளுவர் கூறிய 'மற்றீண்டு வாராநெறி' என்பதனைச் சூளாமணி 'இவ்வழி வருவகை யிலாதது' என்கின்றது.

அங்ஙனமே, செல்வநிலையாமையைப் பற்றி அமைச்சர்க்கு கூறும் பயாபதி மன்னன்

> **"பொருளிளார்க்கு இவ்வழிப் பொறியின் போகமும்**
> **அருளிலார்க் கறத்தினும் பயனும் நூல்வழி**
> **உருள்விலா மனத்தவர்க் குணர்வும் போன் மனம்**
> **தெருளிலார்க்கு இசைவிலள் திருவின் செல்வியே"**
> (சூளா. 2082)

என்கின்றான். இப்பாட்டின் முன்னிரண்டடியும்

> **"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு**
> **இவ்வுலக மில்லாகியாங்கு"** (உ௪௭)

இவ்விரு நூற்கருத்துக்களும் ஒத்தனவாயினும் வள்ளுவம் பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்றதை விரித்துப் பொறியின் போகம் இன்றென்றது சூளாமணி. அங்ஙனமே வள்ளுவம் அவ்வுலகம் இல்லை என்பதனை விளக்கிச் சூளாமணி அறத்தினும் பயன் இல்லை என்கின்றது.

இவ்வண்ணம் சூளாமணி சற்றேக்குறைய எண்பத்தைந்து திருக்குறளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எடுத் தாண்டுள்ளது. நீதி வரலாற்றோடு ஒட்டிக் காப்பியமாக உருக் கொள்ளும்போது நீதிக்கே ஒரு புத்தொளி உண்டாவதை யுணர்ந்து இன்புறுவோம்.

நீலகேசியுள் வள்ளுவம்

நீலகேசியுள் வள்ளுவம்

அறிமுகம்

நீலகேசி ஒரு வாத நூல். பௌத்த சமயக் கொள்கைகளை மறுத்துச் சைனக் கொள்கையைப் பரப்புவதற்காக எழுந்த நூல்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி புத்தசமய நுணுக்கங்களை யறிவிப்பதாக எழுந்தது. அதனை மறுக்க எழுந்தது இந்நூல்.

சமய நூல்களில், தங்கொள்கையைப் பரப்பும் போது, இன்றியமையாத சூழ்நிலையிற் பிற சமயக்கொள்கைகளின் பொருந்தாமையைக் குறிப்பதும், பிற சமய நூல்களைக் குற்றம் காண்பதே குறிக்கோளாகக் கொண்டதும் என இருவகை உள்ளன. அவற்றுள் இது பிற சமயக் கொள்கைகளில் குற்றங்காண்டலே குறிக்கோளாக எழுந்தது என்பதிற் கையமில்லை. அதன் பயன் தங்கொள்கை நிறுவுவதாக முடியலாம். மறுப்பே பெரும்பான்மையாகக் காணப்படுதலின் இங்ஙனம் எண்ணத் தோன்றுகிறது. சமய நூல்களும், தத்துவக் கூறுகளும் சுவைகளைத் தந்து, மேலும், மேலும் படிக்க வேண்டும் என்ற விருப்பை ஒரு ஞான்றும் விளைவியா. இது அனைத்துச் சமய நூல்களினிடையே கண்ட முடிபாகும். ஆயினும் இந்நூலாசிரியர் கூறுவது தத்துவ வாதமாயினும், வரலாறு ஒன்று கற்பித்துக் கொண்டு எண் சுவை பொதுள இனிமையும் எளிமையுந் தோன்றக் காப்பியத்தை நடத்தியிருக்கின்றார். அதனாலே சிறிது படிக்கலாமா? என்ற சிந்தனையை யுண்டாக்கிப் படிப்பவனைத் தன்வயமாக்குவது.

இது நீலம் *நீலகேசி என்றெல்லாம் வழங்கப்பெறுவது இதில் புத்த வாதம் மறுக்கப்படும்போதே ஆசீவகம் முதலிய பிற மதங்களும் மறுக்கப்பெறுகின்றன.*

நீலகேசி என்பவள் ஓர் தவப்பெண். பேய்ப் பெண் உயிர்களைக் கொன்று தின்னும் இயல்பினள். அவள் அறங்கூறும் முனிச்சந்திர பட்டாரகரைக்கண்டு அவர் வாயிலாகச் சைனமத நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கிறாள்.

புத்தம் முதலிய பிற சமயக் குருமார்களை வாதில் வென்று தஞ்சைனக் கொள்கையைப் பரப்புகின்றாள். இதுவே இந்நூலின் அமைப்பும் போக்கும்.

நூலாசிரியர் யார் என்று தெரியவில்லை. உரையாசிரியர் சமயதிவாகரமுனிவர் என்ற பெரியவர் ஒருவர். இவர் சமயநூல் களிலும் இருமொழி இலக்கண இலக்கியங்களிலும் அறிவு சான்றவர் என்பது அவருரையான் நன்கு விளங்கும்.

கதைச் சுருக்கம்

பாஞ்சால நாட்டிலே புண்டர வருத்தனம் என்னும் ஊரிலே சமுத்திரசாரன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவனுடைய ஆட்சி மிகச் சிறந்தது. மக்கள் அனைவரும் தம்மரசனைத் தம்முயிர் போல் எண்ணி வந்தனர்.

அந்நகரிலே பாலாலையம் என்றொரு சுடுகாடு. அதில் ஒரு பிடாரி கோயில். அக் கோயிலிலே ஒருநாள் அவ்வூர் மக்கள் விழாக் கொண்டாடினர். பல ஆடுமாடுகளைப் பலியிடக் கொணர்ந்து நிறுத்தினர். அதனைக் கண்ட முனிச்சந்திரபட்டாரகன் என்னும் முனிவர் உயிர்கள்மாட்டுக் கருணை சுரந்து மக்களிடம் அறிவுரை கூறிப் பலியை நிறுத்தினர். அதனைக் கேட்ட பேய்கள் ஒருங்கு கூடித் துறவியைத் தொலைக்க எண்ணின. தவமுனிவருடைய ஆற்றல் அவைகளை அணுகவும் விட்டிலது. அதனாற் களைத்த பேய்கள் பழையனூர் நீலிப் பேயிடம் சென்று விண்ணப் பித்தன. நீலிப்பேய் இப்போதே சென்று கொல்வோம் எனப் புறப்பட்டது. பாலாலையத்தை அடைந்து முனிவனைக் கண்டது. முனிவனுடைய தவநெருப்பு நீலிப்பேயைச் சுட்டது. நீலிப்பேய் சினங்கொண்டு முனிவனைக் கொடுஞ்சொற்கூறி வெருட்டியது. முனிவன் நீலிப் பேயின் இயல்புகளை ஓதிஞானத்தான் உணர்ந்து அஞ்சாதிருந்தான். பேய் முனிவனுடைய ஆற்றலுக்கு வியந்து அழகிய பெண்ணுருத் தாங்கி மயக்க எண்ணியது. உடனே புண்டரவர்த்தன மன்னனுடைய மகளாகிய காமலேகையின்

உருக்கொண்டது. ஏனைய பேய்களைத் தோழிகளாகவும் பணிப் பெண்களாகவும் உருக்கொண்டு உடன்வரப் பணித்தது. முனிவன் மயங்காது அப்பேய் மகளுக்கு நல்லறம் உரைத்துச் சமண சமயத்தைத் தழுவச் செய்தனன். நன்ஞானம், நற்காட்சி' நல்லொழுக்கமுமாகிய திரியோக மருந்துகளை உரைத்தனன்.

நீலகேசி நன்றியுணர்வுடையவளாகிச் செய்யக்கடவது யாது எனப் பணிந்து வினவ, முனிவன் அருகதேவனுரைத்த அறநெறிகளை அவனியெல்லாம் பரப்புக எனப் பணித்தான்.

நீலகேசி, முற்பட வாதிட்டு வெல்லவேண்டியது புத்த சமயமே எனக்கண்டு குண்டலகேசியுடன் வாதிட்டு வென்றாள். பின்னர் அவள் ஆசானாகிய அருக்கச்சந்திரனையும், மொக்கலன், புத்தன், பூரணன், பராசரன், உலக சித்து பூதிகன், பிசாசிகன், ஆசீவகன், சாங்கியன், வைசேடிகன், வேதவாதி, பூதவாதி, முதலியோரையும் வென்றனள் என்பது இந் நூல் நுதலும் வரலாறாகும்.

இந் நூலிலும் திருக்குறள் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. இதன் உரையாசிரியராகிய சமய திவாகர முனிவர் தம் உரையிலே திருக்குறளை மேற்கோளாக எடுத்தாண்டு "இது எம்மோத் தாகலின்" என உரிமையும் கொண்டாடுவர். ஆதலால் சமய அறம் உரைக்கும் இந் நூலிலே பொதுவறம் புகலும் வள்ளுவம் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளது. அவற்றைக் குறித்து அவற்றின் பொருள் நயத்தையும் ஆய்வோம்.

கடவுள் வாழ்த்து

நீலகேசி ஆசிரியர் கடவுளை வாழ்த்தும் முறையிலேயே வள்ளுவத்தைப் பின்பற்றுகிறார். வள்ளுவம் கடவுள் இயல்பையும், அதனை வாழ்த்தவேண்டிய முறைமையினையும், வாழ்த்தினால் வரும் பயனையும் கூறும். கடவுட் பெயரையோ உருவையோ உரைக்காது. அங்ஙனமே நீலகேசியும்.

"நல்லார் வணங்கப் படுவான் பிறப்பாதி நான்கும்
இல்லான் உயிர்கட் கிடர்தீர்த் துயரின்ப மாக்கும்
சொல்லான் தருமச் சுடரா னெனும் தொன்மையினான்
எல்லாம் உணர்ந்தான் அவனே இறையாக ஏத்தி"
(நீல – கடவுள். 1)

என்கின்றது. இதில் உயிர்கட்கு இடர் தீர்த்து உயர் இன்பமாக்குஞ் சொல்லான்" என்பது, பஞ்ச பரிவர்த்தனங் களாகிய, பொருளைப்பற்றிய துன்பம், இடம், காலம், பிறப்பு, பாவனை இவைகளைப்பற்றிய துன்பம் இவற்றைப் போக்கி உயிர்கட்குச் சிவகதி அருளும் ஆகமங்களை அருளிச் செய்தவன் அருகன் என்பதை உணர்த்துகிறது.

இது "வேண்டுதல் வேண்டாமை யிலான்" (ச) என்னுங் குறளில் வரும் "அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல் என்பதை நினைவூட்டும். நோயால் வருந்துகின்ற ஒருவனுக்கு நோய் நீக்கமும் ஒருவகை இன்பம்தான்; உடல் வளமும், உயிர் எழுச்சியும். உள்ளத்து உவகையும், ஒருவகை இன்பந்தான்; அதுபோல இடர்தீர்த்தலும், இன்பம் ஆக்கலுமாகிய இருவகை இன்பத்தையும் ஆக்குவன் என்று கூறிய நயம் சிந்தனைக்கு விருந்தாவது.

'தருமச்சுடரான்' என்பது அறவொளியையுடையவன் என்பதாம். இது "அறவாழி யந்தணன்" (அ) என்பதனை நினைப்பிப்பது. தருமச்சுடர் – அற ஆழி; சுடரான் – அற வாழி யந்தணன். அறத்தை ஆழியாக, அதாவது சக்கரமாக உடையவன் என்பதாம். அருகதேவன் கையது படையாழி அன்று. அறமே ஆழியாக இருந்து ஒளிவிட்டுத் திருத்துவது என்றவாறும்.

அவையடக்கத்தில்

"தண்டாமரைமேல் நடந்தான்" (நீல. 3) என்கிறார். இது "மலர்மிசை ஏகினான்" (௩) என்பதனை ஒட்டி எழுந்தது. பரிமேலழகர் தாமரை மலர்மேல்நடந்தான் என்று கூறி வேறு ஒரு கடவுட்கேற்றுவாரும் உளர் என்றதும் இதற்கு அரணுதல் காண்க.

பொறையாற் பூமி

பாலாலையக் கோட்டத்துப் பிடாரி கோயிலில் உள்ள முனிசந்திர பட்டாரகனுடைய குண நலங்களாக

"பொறையு மாற்றலும் பூமியு மேருவு மனையான்
சிறைசெய் சிந்தையன் அந்தமில் பொருள்களைத் தெரிந்தான்"

(நீல. 33)

என்கின்ருர் ஆசிரியர். இதனுள் "பொறையான் பூமியனையான்" என்பது

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" '(கருக)

என்ற குறளைத் தெரிந்து யாக்கப்பெற்றது. 'சிறைசெய் சிந்தையன்' என்பது சிந்தைப் பொறிவழியிற் சென்று புலன்களைப் பற்ருவண்ணம் ஒருவழிப்படுத்தியவன். என்னும் பொருளதாய்,

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு" (ஙசங)

என்ற குறளை உட்கொண்டிருப்பது. ஐந்தன் புலத்தை யட்டால் மனம் பற்றியதைப்பற்றி ஓரிடத்தே நிற்கும் ஆதலால் இக்குறளைக் கருக்கொண்டு உருவாகிவந்த சொற்ருெடர் இதுவெனல் துணிவு.

கொல்லாமை

முனிச்சந்திரபட்டராகன் பேய்ப்பெண்ணுக்குக் கூறும் அறவுரைகளில் ஒன்று.

"கொன்ற வன்னே கொடியனென உலகங் கூறுமதனுலும்
ஒன்ற நூலார் உரைகளோ டொப்ப முடியு மதனுலும்
இன்றி னின்றும் இதுவொழிதி ராயின் நுங்கட் இருமைக்கும்
நன்றிது என்ருன் வெந்நரகம் புகுதல் விலக்கும் நாவினுன்"
(ஙகூ)

இதனுற் தீவினைகளிற் சிறந்தது கொலை. கொலைகாரனே கொடியன். கொலை யொழிந்தால் சுவர்க்கம் எய்தலாம் என்று முனிவர் கூறுகிருர். இது குறள் நூலில்

"கோறல் பிறவினை எல்லாந் தரும்" (ஙஉக)

"உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
சொல்லாத் தீவாழ்க்கை யவர்" (ஙஙo)

என்ற பாக்களின் கருத்தைத் தாங்கியதாம்.

மக்கள், பொருண்மேற் செல்லும் பற்றுள்ளத்தை மாற்றினல் விண்ணுலகம் அவரடிகீழ் இருக்கும் என்பதனை விளக்கும்,

........................"செழும் பொருண்மேற் சென்ற
சிந்தை வேட்கையினை யாறுகிற்பின்அமருலகம்
நுங்கட் கடியதாம் என்ருன்" (நீல. 40)

என்ற பகுதியில்

"ஆரா, வியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா, வியற்கை தரும்" (௩எ0)

என்ற குறள் விளங்குகிறது. ஆராவியற்கை – அவா – எவ்வளவு வந்தாலும் நிறைவு தராதஆசை, அது தொலையுமானுல் அககணமே விடுபேறு எளிதாம் என்பது, இதனையே காவியச் சுவை அமைய பொருண்மேற் சென்ற ஆசையை யறுத்தால் விரும்பத்தக்க இன்ப உலகம் அவன்காலடியிலுள்ளதாம் எனக் கூறுகிறது நீலகேசி.

மன்னன் மகள் வடிவில் வந்து வணங்கிய நீலிப்பேயைப் பார்த்து முனிவன் கூறுகிருன். உடலுக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்த முனிவன்; அவற்றை யகற்றும் வன்மை வாய்ந்த முனிவன்; என்னுங் கருத்தமைந்தது

"உடம்பொ டுயிரிடை மிடைந்த ஒற்றுமை வேற்றுமை விகற்பின்
தொடர்ந்தபல் வினைகளைத் துணிக்கும் சுதநெறி முறைமையும்
அறிவான்" (நீல.64)

என்னும் பாடற்பகுதி. இது 'குடம்பை என்ற குறட்கண்ணதாகிய' 'உடம்பொடுயிரிடை நட்பு' (௩௩அ) என்பதன் ஆட்சியாகும்; இதனுல் உடம்பொடுயிரிடை காணப்படும் தொடர்பிற்கு, அவ்வுயிர்களின் நல்வினை தீவினைகளே காரணம் என்பது பெறப்படும்.

நீலி காவலன் மகளாகிய காமலேகை என்னும் வடிவில் வந்து முனிவனைக் காதற் குறிப்புக்காட்டி மயக்குகின்ருள். அவளுடைய கண்களின் செயலைக் காட்டுகின்றவர் 'சிதரரி மழைக்கண்ணும் சிறைக்கும்' (நீல. 72) என்கின்ருர். இது 'ஒருகண், சிறக்கணித்தாள் போல நகும்' (௧0௯௫) என்ற குறட்பகுதியை மனக்கொண்டு கூறியதாம்.

அடக்கமிலாதார் அடையும் நோய்

மக்கட் பிறப்பில் எய்தும் துன்பங்களையும், அவற்றின் வாயில்களையும் அறிவிக்கின்ற முனிவர், அடக்கமில்லாதவர் எய்தும் துன்பங்களை வகுக்கின்ருர்;

"தீவினைசெய் வாயிலொடு சென்ற மனக்குற்றம்
மாவினையிஞ்ம் வெகுளி மானமொடு மாயம்
ஓவினையிற் பற்றவல அச்சமொடு மற்றும்
ஆவனவெ லாமடக்க மிலாதவர் நோவே." (நீல. 107)

என. வள்ளுவம்,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்." (கஉக)

என்றது. ஆரிருள்— நரகம். நரகம் துன்பமயமானது. இங்ஙனம் அடங்காமை நரகத்துன்பத்தை யளிக்கும் என்ற பொருளை உளங் கொண்டே நீலகேசி ஆசிரியர் அடக்கமில்லாதவர் எய்தும் நோவு என்றார்.

காலனை வெல்லுங் கடவுள்

ஆசிரியர் முனிச்சந்திரபட்டாரகர் ஆணையின் வண்ணம் நீலகேசி, குண்டலகேசியை எதிர்ப்படுகிறாள். அவளோடு வாதிடுகிறாள் என்ற வரலாற்றை உணர்த்தும் இரண்டாம் சருக்கத்தில், முனிச்சந்திரனைப் பிரிந்த நீலகேசி அருகனாலயத்தை யடைகின்றாள். துதிக்கின்றாள். அத்துதி வகையில், ஒன்று.

'கன்று காலனைக் கடந்தாய்' என்பது, இது 'கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின், ஆற்றல் தலைப்பட் டவற்கு.' (உசூச) என்ற குறள் கருத்தை உணர்த்துவது.

பெரியர்

அங்ஙனமே "அரியவாயின செய்திட்டு, பிண்டி மரநிழ லிருந்து இரு வினையும், பிரியும் பெற்றியை உரைத்தாய் பெரியவர்ப் பெரியவர்ப் பெரியாய்" (நீல. 156) என்பதனை "செயற்கரிய செய்வார் பெரியர்" (உசூ) என்பதனை நினைவிற்கொண்டு ஓதியதாம். புத்தசமயக் கொள்கைகளையும், ஒழுகலாறுகளையும் மறுக்கின்றநீலகேசி "ஊன் தின்றல் இழுக்கென்னுன்" (நீல. 163) என்று புத்தன் கொள்கையைக் கூறுகின்றாள். இது வள்ளுவம் முதலிய நீதி நூல்களில்

"ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்" (உருக)

"ஊன்தின்பவர்க்கு அருள் ஆட்சியில்லை" (உருஉ)

"கோறல் பொரு ளல்லது" (உருச)

எனப் பலவற்றுனும் இழித்துரைக்கப்பெற்றிருத்தலால் புலா லுண்டலே இழுக்கென்ருன் என்றது. இத்தனைக் குறளையும் எண்ணித் தொகுத்த உரையாதலைக் காணலாம்.

நீலகேசி குண்டலகேசியை நோக்கி 'உங்கள் புத்தன் நன்குணராமலும் நல்லவற்றைக் கூருமலும் ஊன் தின்றல் முதலிய தீயொழுக்கம் உடையனுயினன் என இகழ்ந்து உரைக்கின்ருன்.

தான்கெடினும் தக்கார் கேடெண்ணற்க என்பதனை
ஊன்கொடுமை யுரைத்தானஃ துணர்த்திலனே யாகாதோ
(நீல. 181)

என்கின்ருர். சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னு செய்யாமையும், (௩௧௧) பிற உயிர்கள் தமக்கு தீமைசெய்யினும் (௩௧௨) அதற்கு ஈடாக மறுத்து அவற்றிற்கு இன்னு செய்தல் கூடாது என்பதும், மாசற்ருர் கொள்கையாக இருக்கப் புத்தன் தன்னூன் பெருக்கத்திற்காகப் பிறிதின் ஊன்தின்ன உணர்த் தினனே அது அறியாமைப்பாற்பட்ட செயலன்ருே என்கின்ருள். இது இத்தனை குறட் கருத்துக்களையும் உள்ளத்தடக்கிக் கூறியது எனலாம்.

தீவினையால் விளைவன துன்பங்கள்

ஆருகதர் நோன்பு பல மேற்கொண்டு வருந்துவதைப் பழிப்பதன்பொருட்டுத் 'துன்பங்கள் முன்முன் பிறவிகளிற் செய்த தீவினையின் பயனுகத் தோன்றியவை. சைனர்கள் தீவினை செய்தவர்கள். அதனுல் இப் பிறவியில் உண்ணுமலும், உடாமலும் தம்முடம்பு செற்றும் துன்புறுகின்றனர்' என்று விளக்கும் புத்தருரையாக

"துன்பந்தான் தீவினையின் வழித்தோன்றும் துன்பேயாம்
என்பதனை நுமரேடி எப்போதும் உரைப்பவால்"
[நீல. 184]

என நீலி இழித்துரைக்கின்ருள். 'இது தீவினை தீயபயக்கும்' (உ0உ) என்பதனை எண்ணி உரைத்ததாகலாம். ஆனுல் வள்ளுவர் கூறியது தீவினைகள் மறுபிறவியிலும் துன்பத்தையே தரும் ஆதலால், அதனைச் செய்யலாகாது எனத் தடுத்ததாம். புத்தர்

வாய்மொழி என நீலகேசி கூறுவது நோன்பு, தவம், முதலியனவும் உயிருக்கு ஊறு பயத்தலின் தீவினைகள். அவை முன் செய்த தீவினையால் வருவன. அதனை இங்கும் செய்வது ஏற்குமா? என்று நகையாடும் கூற்றும். ஆதலால் முழுவதும் ஒத்த ஒருநோக்குடைய கருத்தெனல் கூடாது.

'அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' (உ௫௩) *வள்ளுவம். ஆகவே காவியாடையால் உடலைப் போர்த்தும் பிணத்தைத் தின்கிறான் புத்தன். அவனைப்போல நீயும் இறைவன் இல்லை என்கின்றாயே என்கின்றாள் நீலகேசி. ஆதலால் 'தின்கின்றான் பிணம்' (நீல. 190) ஊன் தின்பவர்க்கு அருளாட்சி இல்லை என்பதும் ஒத்த கருத்துடையன.*

அன்புடையார் இயல்பு

இங்கனம் பலவாறாகப் புத்தரை இழிந்துரைத்த நீலகேசியைத் தோழி குண்டலகேசி புத்தனுடைய வள்ளன்மைகளைத் தொகுத்துக் கூறுகிறாள்.

**"கண்கொடுத்தான்; தடிகொடுத்தான்; கயப்புலிக்குத்
தற்கொடுத்தான்
பெண்கொடுத்தான் உடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான்
மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு
விண்கொடுத்தான் அவன்கொடுத்த விரித்துரைப்பன்
கேளென்றாள்"** (நீல. 205)

என்பது பாடல். இதில் கண் கொடுத்தான், தடிகொடுத்தான், உடம்பினையும் பிளந்து கொடுத்தான் என்பது

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" (௭௨)

என்பதனை விளக்குவதாம்.

ஒழுக்கநிலைக்கு ஒல்லுமோ?

நீலகேசி, குண்டலகேசியின் ஆசானாகிய அருக்கசந்திரனோடு வாதிடும் போது, வாமநூற்குக் குற்றங் காட்டுகின்றவள்,

புத்தத் துறவிகளுக்குக் காமங்காழ் கொள்ளுமாயின், சேரிப் பரத்தையரோடு கூடியாவது, காமப்பிணியைக் கழித்துக் கொள்ளலாம் எனப் புத்தர் புகலுவார். அது ஒழுக்கநிலைக்கு

ஒல்லுமோ என இழிந்துரைப்பாள். இந்த வாம நூலின் மறைப் பொருளை மறுப்பதுபோல் வள்ளுவர்

"அருட்பொருள் ஆயும் அறிவினவர் பொருட்பொருளான்
புன்னலம் தோயார்" (கூகச)

என்பர். மற்றும்,

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப்ப படின்" (உஎஉ)

என்றது, வாமநூல் சொன்ன புத்தருடைய தோற்றத்தையும், அவர் கூறிய ஆகமத்தில் மனமறியக் குற்றம் செய்யலாம் என விதிப் பதையும் உளங்கொண்டு உரைத்ததும் ஆம்.

வாமநூலின் மறைபொருளை மறுத்தது

"மனத்து மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்" [உஎஅ]

என்றது, உடலைக் காவியால் மூடிக் காமங்கைம்மிக்க இடத்துக் காவியை அவிழ்த்து வைத்துவிட்டு, வெள்ளாடை புனைந்து தம் தோற்றத்தை மறைத்துக் கொண்டு ஒழுக்கந்தவறுவார் நிலையை இடிந்துரைத்ததாம். இவைகளை எண்ணிச் செய்யும் நீலகேசிச் செய்யுள்

"காம மூரிற் கணிகையரோ டன்ன
தூய்மை யுண்மையிற் றேற்றங் கரந்தவட்
சேம மாவகை செல்கமற் றென்பதும்
வாம நூலின் மறைபொ ருளல்லவோ" (*நீல.* 244)

என்பது

பொருந்தா நெறி

மேலும்

"உரைப்ப பேரருள் உண்பன மீனொடூன்
திரைப்ப மெல்லணை செய்வ விழுத்தவம்
கரைப்ப தீவினை கண்டது சூனியம்
புரைப்பின் மார்க்கம் பொருத்தம் உடைத்தரோ [*நீல.* 251]

என்பதில் முதலடி

" தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் " [உருக]

என்பதை எண்ணி நீலகேசி கூறியதாம்.

இரண்டாம் அடி, தவம் மறைந்து அல்லவை செய்தலையும், மூன்றும் அடி கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார், அம்மெய்ப் பொருளின் அருளாலே மற்றீண்டுவாரா நெறியில் நிலைப்பட வேண்டியிருக்க, அதனை விடுத்துச் சூனியத்தைக் காண்பதை மறுக்கின்றாள் நீலகேசி

சொல்வேறு செயல்வேறு

" வினைவேறு சொல்வேறுபட்டார் தொடர்பு கனவினும்
இன்னாது " (அககூ)

என்றார் வள்ளுவர் அங்ஙனமாகவும் நும் புத்தர் :

" நிலையா வெனச்சொல்லி நேர்ப பொருடூய
மலையோ ரனைய மாட மெடுப்ப " (நீல. 253)

என்றனள். இதுவும் முற்குறளை எண்ணிக் கூறியதாகலாம் அங்ஙனமே,

" மயித்திரம் பாவித்து மற்றவற் றானே
யசிப்பன வேபோல் அமர்ந்திருந் துண்ணும்
பயித்தியங் கொண்டவர் " (நீல. 254)

என்பது, சொல்வதொன்று செயலொன்றுமான நிலையினைக் குறிப்பது.

அருக்கச் சந்திரனை வென்று, அவனை யாருகத சமயத்தைத் தழுவச் செய்து, அவன் குருவாகிய மொக்கலனோடு வாதிடப் பதுமாபுரம் சென்றடைந்தாள். அவனிடம் புத்த ஆகமக்கருத்தாக

" உள்நன்மைத் தவமென்றங் குறுப்பெல்லாங் மறைக்கின்றாய்
திண்என்ற மனமிலைந் சிறைபலவுந் செய்தலால் "
[நீல. 275]

என்கின்றாள். இதில் உள்நன்மை தவம் என்றது

" மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் " [௩௪]

என்ற குறள் ஒளி செய்கிறது.

புறந்தூய்மை – அகந்தூய்மை

புத்த சமயத்தினர் ஏந்தும் மண்டை முதலியவற்றையும் ஒழுகலாறுகளையும் மறுத்துரைத்த நீலகேசியின் வாதத்திற்கு மறுத்துரை வழங்கமாட்டாத 'மொக்கலன்' வேறொன்று கூறு கின்றான்.

"நிறந்தூய்தா நீரினால்; வாய்தூய்தாம் பாகால்
....
புறந்தூய்மை செய்தக் கால் புரிவுள்ளந் தூய்தாமே" [*நீல.* 298]

என இதில் முதலடியில் 'புறத்தூய்மைநீரான் அமையும்' (உகூக) *என்ற குறள் கருத்தூட்டிக் கவின் செய்கிறது.*

தொடர்ப்பாடு

மொக்கலனுக்கு உபதேசிக்கின்றாள்

"தவம் செய்தல் உறுதியேல்
பண்டியாற் போக்குநின்பஃறொடர்ப்பா டெனச்சொன்னாள்"
[*நீல.* 282]

இதில் தொடர்பாடு என்ற ஆட்சி

"மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்பறுக்க,
லுற்றார்க்கு உடம்பும் மிகை" (கூசரு)

என்ற குறளை நினைவூட்டுகின்றது. பண்டியால், உடம்பால், இதனையும் 'உடம்புமிகை' என்றதை அனுகுகிறது.

பொய்யாமை எது ?

உயிருக்கு அஞ்சி ஒருவன் ஓடிவருகிறான். புத்த சமயத் தானிடம் அடைக்கலாம் புகுகின்றான். அவன், அஞ்சி வருகின்றவனைக்காப்பேன் என மனத்தான் கருதுகிறான். ஆனால்வாயாற் சொன்னால் பொய்யாகுமே என்றெண்ணிக் கையால் உணர்த்துகிறான்; இது வஞ்சனை அன்றோ? துணிவுடனும் எதிரி ஐயுறுமலும் வாயாற் சொல்லுதலே மரபும் முறையும் ஆம் என நீலகேசி மறுத்துரைக்கும் போது.

"உய்யக் கொள்வன் எனச் சொல்லி யுள்ளத்தால்
கையிற் காட்டல் கரவுள தாமெனில்
பொய் சிதைத்த தென்சொல்லிப் பெயர்ந்துரை
பொய் யுரைத்திலன் என்றல் பொருந்துமோ" (*நீல.* 326)

என்று கூறுகின்றாள். இதற்கு உரை எழுத வந்த திவாகர முனிவர்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (உகூஉ)

என்பது எம்மோத்தாகலின் பொய்யுரைத்தலும் அறமாம் என்பர். இதனால் பௌத்தர் பொய்மையும் வாய்மை இடத்தவாம் என்றாலும் பொய் பொய்தானே என அஞ்சி, வாயால் சொல்லாமல், கையால் குறிப்பர். கையால் குறித்தால் மட்டும் பொய்யாகாதோ என நகையாடிப் பிற உயிர்க்கு நலம் பயப்பிக்குமாயின் பொய்மையும் வாய்மையாதலை வற்புறுத்தி விளக்கியவாறு.

கொல்லாமல் ஊனுண்டல் குற்றமாகாதா ?

நீலகேசி, மேலும் மொக்கலனை நோக்கி, உங்கள் சமய முதல்வராகிய புத்தர் தம் நூலில் ஊனுண்டல் கூடாது என விலக்கியிருக்கவும், நீ அதனை நல்வினை எனக் காட்டுகின்றாய். நாங்கள் உயிர் பிரிந்த வெற்றுடம்பைத்தானே தின்கிறோம். நாங்களா கொன்றோம். ஆதலால் எமக்குக் கொலைப்பாவம் இல்லை என்கின்றாய். நன்றாக ஊன்றிப்பார் ! ஒருவன் பிறன் மனைவியைக் காதலித்து, அவனைக்கொன்று அவளையடைகின்றான்; ஒருவன் இயல்பாகவே கணவனிறந்த பின் கைப்பெண்ணைக் காதலிக்கின்றான் ; இருவருக்கும் வருந்தீவினை ஒன்றுதானே ; அதுபோல இயல்பாக இறந்த ஊனைத்தின்றாலும், கொன்றோ கொல்லச்செய்தோ கொல்பவனைப் புகழ்ந்தோ காசுகொடுத்தோ உண்ணினும் தீவினைதான் என்பதனை உணர்ந்து கொள்

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனில் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்" (உருசு)

என்ற குறட்பாவும் இக்கருத்தை வலியுறுத்துவதாய் அதற்கு வித்தாதலைக் காட்டி நிற்கின்றது. இதனை உட்கொண்டு விளக்கும் நீலகேசிச் செய்யுள்,

"கொல்வினை யஞ்சிப் புலால் குற்றமென்பதை
நல்வினை யேயென நாட்டலுமாம் என்னை" (நீல, 327)

எனவும்

"வெற்றுடம் புண்பதும் வேலின் விளைந்தவை
தெற்றென உண்பதும் தீமை தரும்என்னை
ஒற்றைநின் ருள்துணை யூறு படுத்தவட்
குற்றமன் றேசென்று கூடுவதேடா" (நீல. 332)

எனவும் வருவனவாம்.

பால் ஊனாகாதா?

அவள் மேலும் கூறுகின்றாள்; ஊன்என்பது என்ன? தூய்மையற்ற ஆண் விலங்கு பெண் விலங்குகளின் சுக்கிலசோணி தந்தாமே. ஆதலால் அவற்றையுண்ணுதல் கூடாதென்றேம். நீயோ பால் மட்டும் என்ன? அதுவும் அப்படித்தானே! என்கின்றாய். சொல்லுவேன் கேள். நீ பண்டைய வழக்குக்கும் மரபிற்கும் பிறழ்ந்து பேசுகின்றாய். பாலை ஊன் என்பது உலக வழக்கத்திற்கு நேர்மாறு. உலகத்தார் உண்டென்பதை இல்லென்பையாயின் நீ ஒரு பேய்தான். மக்கள் அன்று என்கின்றவன்

"தூய்மையிலா முடை சுக்கில சோணித
மாமது போன்மெனின் ஆன்முலைப்பாலன்ன
தூய்மையதன்று சொல்லுவன் சோர்வில
வாம னுரைவையந் தன்னேடு மாறே" (நீல. 341)

என்றான். இத்தடையும் விடையும்,

"உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது துணர்வார்ப் பெறின்" (உருஎ)

என்ற வள்ளுவத்தை அடித்தளமாகவைத்து எழுந்ததாகும்.

நஞ்சும் - கள்ளும்

மற்றும், மேன்மக்கள், கள் நஞ்சு போல்வதென்று அதனை யறவே விலக்கினர்; ஊனையங்ஙனம் விலக்கவில்லையே! ஆதலால் ஊன் உண்டல் குற்றம் ஆகாதென வாதிடும் மொக்கலனைப் பார்த்து, நீலகேசி

"மேன்மக்கள் நஞ்சொடு கள்வரைந் தாரது
போன்மக்கள் ஆரும் புலால்வரை யாரெனின்
தான்மெய்க் கணின்ற தவசிமற் றெங்குளன்
ஊன்மெய்க்கொண் டுண்பவனுன்னலது" [நீல. 342]

கூறுகிறான். இதில் முதலடியாகிய 'நஞ்சொடு கள்வரைந்தார்' என்பது 'நஞ்சுண்பார் கள்உண்பவர்' (கூஉகூ) என்ற வள்ளுவம் வழங்கிய கொடையாகும்.

அலகையாவார்

இங்ஙனம் மொக்கலன் நீலகேசியோடு வாதிடும்போது, நீலகேசி, ஆசிரியர் தம் உரையாக இவன் இங்ஙனம் உலகம் ஒத்துக்கொள்ளுகின்ற முடிவாகிய ஊனுண்ணாமை, பிறர் மனை நயவாமை இவற்றை மறுத்து, இவற்றால் தீவினை இல்லை என்கின்றானே! என்று இரங்கிக் கூறும் செய்யுள். "பேயொப்ப நின்று பிணங்கி" (நீல. 349) என்பது. இதில் 'பேயொப்ப' என்பது

> "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும்" [அ௫௦]

என்ற குறட் கருத்து ஆசிரியர் நெஞ்சில் விளங்குவதால் தோன்றிய உரையாகும்.

மீன்கள் சொல்லுகின்றன

மொக்கலனை வாதில் வென்று அவனுக்குச் சமண நெறியை அறிவித்த பின்னர், நீலகேசி, மொக்கல! உனக்குப் பௌத்த நெறியை அறிவித்த ஆசான் யார்? என வினவினர். அவன் புத்தப்பெருமானே என்றனன். அவனையும் வெல்லக் கருதி அவன் வாழும் கபிலவாஸ்து நகரை அடைந்தாள். அவனைக் கண்டாள். அவனோடு வாதிடுகின்றாள். அவள், ஊனுண்டலைக் குறித்து

> "விலைபடைத்தா ருன்வேண்ட அவ்விலைதான் வேண்டி
> விலைபடைத்தார்க் கெம்முயிரை வைக்கின்றாம் இன்ன
> கொலைபடைத்தானே கொடியன் என்பவே போலத்
> தலையெடுத்து வாய்திறப்ப தாமிவையோ காணீர்"
> (நீல. 471)

என்கின்றாள். மீன்கள் தலையை நீர்மட்டத்திற்கு உயர்த்தி வாயைத் திறக்கின்றன. அதனைக் கண்ட நீலகேசியின் கற்பனை உள்ளம் மலர்கிறது. அதனால் புத்தனே நீ விலைக்கு வாங்கி உண்ணலாம் என்றனை; ஆதலால் மக்கள் விலைக்கு வாங்கத் தலைப்பட்டனர் அதனால் விற்பவன் கொல்லத் தலைப்பட்டான்.

விலைக்காகக் கொன்ற வணிகனது கொலைப்பாவம் ஊனை வாங்கித் தின்னலாம் என்கிற புத்தனுக்கும் பற்றியது. புத்தன் கொடியன் என்கின்றனை என்று கூறுகிறாள். இது,

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்" (உருசு)

என்ற குறள் கருத்தின் விரிவாகும்.

மருத்துவன் குரு

புத்தப்பெருமானுக்குத் தன் வரலாறுணர்த்திய நீலகேசி, ஆசீவகனையடைந்து ஒரு குருநாதன் உயிர்களுக்கு உபதேசம் செய்வதன் அருமைகளையும் பயனையும் உணர்த்துகின்றாள். அப்போது.

"நோயைத் துணிந்தேயுறு நோய்முத னுடிய நோக்கு
ஆயமருந்தே யறிந்தூட்டும் அஃதுண்டு காட்டில்
பாயமறுக்கும் படியா மதுபல் லுயிர்க்கும்
கூய்அத்தி னென்னை குரவ ருபதேசம்" (நீல, 723)

என்றாள். இதன் முன்னிரண்டடிகளிலும் கலந்து காணப்பெறுவது மருத்துவன் நோயறிந்து மருந்துகொடுக்கும் முறையாகிய

"நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பக் கொளல்" (கூஎகூ)

என்பனவே சொல்வடிவினும் பொருள்வடிவினும் இடம் பெற்றுள்ளன. நோய் அறிந்து மருந்துகொடுக்கும் மருத்துவன் போல் மாணவனுடைய குணமறிந்து உபதேசம் உதவக் கூடியவனாக இருக்கவேண்டும் ஆசிரியன் என்கின்றது.

ஆசீவகனையும் தன்வழிப்படுத்திச் சாங்கியனை எதிர்ப் பட்டாள் நீலகேசி: பின்னர்ச் சாங்கியன், வைசேடிகன், வேதவாதி, பூதவாதி முதலியோரையும் வென்று அவர்களைத் தம் வழிப்படுத்தினள்: பூதவாதியை நோக்கி, உயிர் நித்தியப் பொருள் அவை துன்பெய்துங் காரணம் யாது என்பதை விளக்கி வருபவள் பூதவாதியே ஒரு பிறவியில் ஒருவன் புதைத்து வைத்த பொருளை மறு பிறவியில் அவனே தன் சுற்றத்தார்க்கு

உணர்த்துகின்முன் என்று உலகம் நம்புகின்றது. நீயோ உயிரே இல்லை என்கின்ருய். இதனுல், உலகம் 'நீ பேயாகிருய்' என்று இழித்துரைக்கிறது என்கின்ருள். இதுவும்

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்" [அ௫0]

என்றதன் வளர்ச்சியேயாம். அந்த நீலகேசியும் இதனேடு இணைத்துப் பார்க்கின்ருள்.

"வைத்த வத்து மறுபிறப்பிற் நமக்கு
உய்த்துக் காட்டுதலே யுலகொட்டுமால்
எத்திறனும் இல்லுயிர் என்றிநீ
செத்துவம் எய்தின் சில்லைமை செய்பவால்" [நீல. 886]

என்பது அது. செத்துவம் – பேயுலகு, சில்லைமை – இழிவு வத்து – பொருள் வஸ்து என்பதன் திரிபு.

இது உலகத்தார் ஒரு பிறப்பில் புதைத்த செல்வத்தை மறு பிறப்பில் அவனே வந்து காட்டுகிருன்; அதனுல், உயிர் என்றும் உள்ள பொருள் என்பதை மறுத்து, எத்திறத்தும், உயிரென்ப தொரு பொருளில்லை; என்கின்ருய். ஆதலால் நீ ஒரு பேய் என்று உலகவர் நகையாடுவர்; எனப் பொருள்தந்து குறளுக்கு முற்றும் இணைதல் காண்க.

இங்ஙனம் நீலகேசி ஒரு சமயவாத நூலாயினும் அதனுட் குறட்பாக்கள் பல கலந்து, நூலுக்கு ஒளியூட்டுகின்றன. இதன் உரையாசிரியராகிய சமயதிவாகரரும் சில குறட்பாக்களை எடுத்துக்காட்டி இஃது எம் மோத்தாகலின் என்று கூறுவதால் இத் திருக்குறளைச் சைன நூல் எனத் துணிகிருர் என்பதும் அறியலாம்.

★

உதயணகுமார காவியத்தில் வள்ளுவம்

உதயணகுமார காவியத்தில் வள்ளுவம்

காப்பிய அறிமுகம்

உதயண குமார காவியம் கற்பனை வன்னம் பூசப்பெறாத ஒரு கவிதைக் கோட்டை. அணி செய்யப் பெறாத அரண்மனை. உள்ளுறையும் தொனியுமாகிய பொருளாழமில்லாத வெள்ளை மாளிகை. வரலாறு ஒன்றையே பற்றுகக் கொண்டு வளர்ந்த காப்பியம்.

இது முந்நூற்றறுபத்தேழு செய்யுளைக் கொண்டது. வரலாற்றைச் செம்பாகமாகக் கூறும் நூல் என்ற மதிப்பே இதற்குச் சிறு காப்பிய வரிசையில் இடந் தேடித்தந்தது எனலாம். அதனால் இந்நூலில் வேறு இலக்கியங்களின் கருத்துக் கலப்பிற்கு இடமில்லை. ஆனாலும் சிலசொற்களும் சொற்றொடர்களும் திருக்குறட் பாக்களை யுட்கொண்டு திகழ்கின்றன. திருக்குறட்பாக்களுக்கு இதனால் புதுமை மெருகு விளைய வில்லை எனலாம்.

சிதைந்து போன உதயணன் கதை என்னும் பெருங்கதையின் முற்பகுதியிலுள்ள வரலாறுகளை யறிவதற்குத் துணையாக இருக்கிறது. ஆகவே வரலாற்றை மிகச் சுருக்கமாக எண்ணிப் பார்ப்போம்.

வரலாற்றுச் சுருக்கம்

உஞ்சைக் காண்டம்

இப் பரத கண்டத்திலே தருமகண்டம் என்னும் பகுதியில் விளங்குவது வத்தவநாடு. அதன் தலைநகர் கௌசாம்பி என்பது. அதனைச் சதானிகன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் மனைவி மிருகாபதி. அவளை அண்டபேரண்டப் பறவை தூக்கிச் சென்று, அவள் தந்தையாகிய விபுலமுனிவன் தவஞ்செய்யும்

மலைச்சாரலிற் கொண்டு சேர்த்தது. அரசி அங்கே கருவுயிர்த்தாள். மகனை ஈன்றபொழுதிற் பெரிது உவந்திருந்த தாயைக் கண்டு கேடச முனிவன் வாழ்த்தி அக்குழந்தைக்கு உதயணன் என்ற பெய ரிட்டான். உதயணன் துறவோர் பள்ளியிலேயே வளர்ந்து வந்தான். பிரமசுந்தர முனிவருடைய மகனாகிய யூகி அவனுக்கு உயிர்த் தோழனானான். பிரமசுந்தர முனிவரிடம் இசை பயின்றான் அவர் தந்த கோடவதி என்னும் தெய்வயாழையும் பெற்றான். அதனிசையால் தேவலோகத்து யானையை வசப்படுத்தி அதனை ஊர்ந்து தவப்பள்ளி யடைந்தான்.

ஒரு நாள் உதயணன் கனவில் அவ்வியானை தோன்றி பாகன் என்மீது கயிற்றிட்டுக் கட்டினாலும், பிடரியில் ஏறினாலும், யான் உணவின்றி யிருக்க நீயுண்டாலும் உன்னைவிட்டுப் பிரிவேன் என்றது. உதயணன் மிகுந்த எச்சரிக்கையுடன் யானையிடம் பழகி வந்தான்.

சில ஆண்டுகள் கழிந்தன. தாய் மாமனாகிய விக்ரமன் உதவியால் உதயணன் அரசுரிமை எய்தினான்.

சதானிகன், ஒரு முனிவன் உதவியால் மிருகாபதியை மீண்டும் அடைந்து, மக்களைப் பெற்று, இன்புற்றிருந்தான். துறவியானான். உதயணன் வத்தவ நாட்டிற்கு மன்னனாயினான். ஒருநாள் யானையை மறந்து அதற்கு முன்னே உண்டான். அதனால் யானை இவனைப் பிரிந்தது. படைக்காவலர்களை ஏவி யானையைத் தேடச் செய்தான்.

இஃது இங்ஙனமாக, உஞ்சையிலிருந்து அவந்தி நாட்டை யாளும் பிரச்சோதன மன்னன் உதயணன் கப்பங் கட்டாமையால் மாய யானையை யனுப்பிச் சாலங்காயன் என்னும் மந்திரியைக் கொண்டு உதயணனைச் சிறை செய்வித்தான்.

உதயணன், தான் சிறைப்பட்ட செய்தியை வயந்தகன் வாயிலாக யூகிக்கு அறிவித்தான். யூகி எங்ஙனமாயினும் எம் மன்னனை மீட்பேன் எனச் சூள் உரைத்தான்.

இதற்கிடையில், ஒரு நாள் பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை கனாக்கண்டு அதனைத் தந்தைக்கு அறிவித்தாள் மன்னன் நூலறி புலவர்பாற் கேட்டுத் தெளிந்திருந்தான்.

யூகி பலவகையான சூழ்ச்சிகள் செய்து உதயணனை வாசவதத்தையோடு சயந்தி நகரம் புகச் செய்தான். உதயணன் கடமைகளை மறந்து தத்தையோடு காமக் களிப்பில் காலங் கழித்தனன்.

இலாவாண காண்டம்

யூகி, உதயணன் நிலையை உணர்ந்து, சாங்கியத்தாய் வாயிலாகச் சூழ்ச்சி பல செய்து, தத்தையை அவனை விட்டுப் பிரித்தான். உதயணன் தத்தையின் பிரிவாற்ருது வருந்த, யூகி இறந்தவர்களை எழுப்பும் முனிவன் ஒருவன் மகத நாட்டில் உள்ளான். அவனைச் சென்று உசாவின், தத்தையை மீண்டும் பெறலாம் என்று கூறி, உதயணனை மகதநாட்டுக்குச் செல்லும்படிச் செய்தான்.

மகதகாண்டம்

மகத நாடெய்திய உதயண மன்னன் இராசகிரிய நகரின் புறஞ்சேரியிற்றங்கியிருந்தனன். அங்கேயுள்ள காமக்கோட்டத்தில் மகத மன்னன் தங்கையாகிய பதுமாபதியைக் கண்டு களவிற் கலந்தான். பின்பு, அவளுடன் கன்னிமாடம் புக்குக் காலங் கழித்தான். மகத மன்னனேடு நட்புக்கொண்டான். அப்போது சங்க மன்னர்கள் மகதநாட்டின்மேல் படையெடுத்துவந்தனர். உதயணன் மந்திரியாகிய உருமண்ணுவா கரவுரைகூறி அவர்களைக் கடிதோட்டினன். இச்செய்தியை அறிந்த மன்னன் தருசகன், உதயணனேடு மிகநெருங்கிய நட்புக் கொண்டான். அதனல் உதயணன் படையுடன் சென்று சங்க மன்னர்களை வென்ருன். மனங் களிகூர்ந்த தருசகன் பதுமாபதியை உதயணனுக்கு மணம் செய்து கொடுத்தான். பின்னர்த் தருசகன் உதவியுடன் உதயணன் தன் பகைவரை வென்று, கோசம்பியை மீட்டு, அரண் மனையிற் சென்று அரசு வீற்றிருந்தான்.

வத்தவ காண்டம்

போரில் உதவிய அனைவருக்கும் உதயணன் பரிசுகள் பல வழங்கினன். தன் யானையாகிய பத்திராபதிக்கு மாடமும் உருவமும் படைத்தான். கோடவதி யாழை அருஞ்சனன் என்னும் அந்தணன் வாயிலாக மீளவும் பெற்ருன். பதுமாபதி யாழ் கற்றுக்கொள்ள விரும்பினள். இவளும் தத்தைபோல, யாழ்

பயில விரும்புகின்றுளே என்ற எண்ணந்தோன்ற, அதனுலே தத்தையின் பிரிவால் மிக வருந்தினஞக, யூகி தத்தையைக் கோசம்பிக்கு கொணர்ந்தான். அதனைக் கண்ட உதயணன் யூகியால் நிகழ்ந்தவற்றை யறிந்து, தேவிமாரோடும் அளவளாவி மகிழ்ந்திருந்தான்.

உருமண்ணுவாவிற்கும் இடபகணிக்கும் யூகிக்கும் ஊர்களை வழங்கினுன். இங்ஙனம் நிகழுநாளில், ஒருநாள் பிரசோதனன் அழைப்பிற்கிணங்கி யூகியை உஞ்சைக்கு அனுப்பினுன். பிரச்சோதனன் யூகியைப் பாராட்டி, தன் அமைச்சன் சாலங்காயனுடைய தங்கையான யாப்பி என்பவளை மணம் செய்வித்தான். யூகியை ஊருக்கு அனுப்புவித்தான்.

யூகி வத்தவ நாடு புகுந்து மன்னனைக் கண்டு வணங்கினன். அப்போது மன்னனுடைய தேவிமார் மன்னனைப் பந்தாட்டம் காண அழைத்தனர். அங்ஙனமே சென்று கண்டபோது மன்னன் மானனீகையின் பந்தடியில் மகிழ்ந்து அவளைக் காதலித்தான். களவிற்புணர்ந்து களித்திருந்தான். இதனையறிந்த தத்தை மிகவும் ஊடினுள். உதயணன் அவள் ஊடலை நீக்கிக் கூடினுன்.

துறவுக் காண்டம்

உதயணன் நாற்பெருந்தேவியரோடுங் களித்து வாழு நாட்களில் ஒருநாள், அவனுடைய களிற்றியானை மதம் பட்டது. நகரையலைக்கத் தொடங்கியது. நகரமாந்தர் கவலையுற்று, அரசற்கு உணர்த்தினர். அரசனுங் கவன்றனன். யானை சோலைகளையும் சாலைகளையும் அழித்துச் சாரணர் அறங்கூறும் இடத்தையடைந்தது. அங்கே அவர்கள் கூறும் அறவுரைகளைக் கேட்டு, மெய்யுணர்வு எய்தி அமைதியாக நின்றது.

உதயணன் அவ்வியானையைக் கண்டு, யூகியின் விருப்பின் வண்ணம் அதன்மீது ஏறினுன். யானை உதயணனை முனிவற்பாற் கொண்டு சென்றது. உதயணனும் அவர்கள்பால் அறங்கேட்டு உண்மை யுணர்ந்து உளந்தெளிந்து, யானையின் வரலாற்றையும் அவர்கள்பாற் கேட்டறிந்தான். தன் முற்பிறப்பு வரலாற்றையும் அறிந்தான். நரவாகனனை வரச்செய்து, அவன் அனுமதியையும் பெற்றுக் கோமுகனுக்கே முடிசூட்டி, தம் தேவியரை நோக்கித் தான் தவமேற்கொள்ள இருத்தலை யுணர்த்தினன்.

இதனைக்கேட்ட தேவிமார் நால்வரும், அமைச்சர்களும் யாமும் உம்முடன் தவஞ்செய்துய்வோம் என்றாராக. உதயணன் சாரணர்பாற்சென்று தவந்தர வேண்டினன். அவர்கள் அருளின் வண்ணம் தவமேற்கொண்டு கேவலஞானம் எய்தினன். அமைச்சர்களும் அரசியரும் நோற்றுத் தேவராயினர். தேவருலகத்து இன்புற்றிருந்தனர் என்று வரலாறு முடிகின்றது.

இனி இவ்வரலாற்றில் ஆங்காங்கு மிளிர்கின்ற குறட் கருத்துக்களை நோக்குவோம்.

காப்பியப் பயனில் கலந்துள்ள குறள்

உதயண குமார காவியத்தை இயற்றிய ஆசிரியர் இக் காப்பியத்தைப் படிப்பதால் விளையும் பயனை அறிவிக்கின்றார்.

" ஊறுந்தீவினைவாய் தன்னை யுற்றுடன் செறியப் பண்ணும் "
(உத 4)

என்று. இந்நூலைப் படிப்பதால் விளையும் புண்ணியம், பழைய தீவினைகள் வருகின்ற வழியை யுற்று அடைக்கும் என்பது இதன் கருத்தாகும். இது 'வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங் கல்' (௩அ) என்ற திருக்குறளின் நிழற்பதிவாக, "இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு இருள்சேர் இருவினையும் சேரா" (௫) என்பதனை விளக்கி நிற்கிறது.

உயிர்கள் இன்பமே நுகர வேண்டுமாயின், அவ்வின்ப நுகர்ச்சிக்கு மாறான தீவினைகள் வந்து உயிர்களைச் சேரா வண்ணம் தடுத்தல் முதற்கண் நிகழ்தல் வேண்டும். இதனால் துன்ப நீக்கமாகியஊற்று உணர்த்தப்படுகின்றது. அடுத்து உயிர்கள் இன்பப் பேற்றைத்தாமே எய்த மாட்டா. அவைகள் இன்பப்பேற்றை எய்துவதற்கான நல்வினைகளை யுயிர்களுடன் கூட்டவும் வேண்டும் அப்போதுதான் உயிர்கள் இன்பத்தை எய்த இயலும். ஆகவே உயிர்கள் நற்காட்சியை எய்துதற்குரிய ஏழுவகை உண்மைகளுள் "ஊற்றும் செறிப்பும்" ஆகிய இரண்டையும் இணைத்துத் தம் மரபிற்கு ஏற்பக் கூறுகின்றார். இது "இருவினையும் சேரா" (௫) என்பதன் விளக்கமாகப் போந்தது எனற்கு ஐயமில்லை.

மன்னனும் – மழையும்

வந்தவவநாடு அதன் தலைநகரம் கௌசாம்பி. அதிலிருந்து சதாணிகன் என்னும் அரசன் ஆட்சி செய்கின்றான். அவனியல்பை அறிமுகப்படுத்துகின்ற ஆசிரியர்

"உன்னத முகில் எழுந்து, வானுமிழ்வாரியன்ன வண்கையன்"
(உத. 10)

என அவன் கொடைச் சிறப்பைக் கூறுகின்றார். இது

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு" (உகக)

என்ற குறளின் வளர்ந்த கருத்தாகும். கைம்மாறு வேண்டாது மழையைப்பெய்து உலகை உய்விக்கும் நிகழ்ச்சி யொன்றையே கருதி வள்ளுர் மாரியை ஒப்பிட்டார். அந்த மாரியைக் காப்பிய ஆசிரியர், உன்னதமுகில் வான் எழுந்து உமிழ்வாரி என அடைதந்து சிறப்பிக்கின்றார். இதனாற் கொடையாளனுடைய ஊற்று – வினைகள் உயிருடன் சேர வரும் வாயில். செறிப்புவினை வரும் வாயிலைத் தடுப்பது. இயல்பான உயர்வும், அவன் தன்னிலையில் உயர்ந்து, விருப்பு வெறுப்பின்றி எல்லார்க்கும் ஈயும் பெருந்தன்மையும் தோன்றச் செய்கின்றார். இத்துணை கருத்துயர்வு இருந்தும் 'உமிழ்வாரி' என்றதில் உமிழ் என்ற சொல்லாட்சியால் ஓரிழிவு தோன்றச் செய்ததோடன்றித் தனக்கு வேண்டாததைக் கொடுத்தது போலப்பெய்தது என்ற பொருளுந் தோன்றச் செய்துவிட்டனர். வள்ளுவரோ 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி' எனக் கைம்மாறு வேண்டாமையும், இங்ஙனம் பெய்து உயிர்களைக் காத்தலே தன் கடமையென என்னும் உயர்ந்த பண்பும் உடையது மாரியெனக் கூறி நம் அறிவை உயர்த்துகிறார்.

ஊனுண்ணும் புள்ளும் உயிரைக் கொன்றுண்பதில்லை :

நிலா முற்றத்தில் செம்பட்டாடையைப் போர்த்துக் கொண்டு உறங்கிய மிருகாபதியை அண்டபேரண்டப் புள் ஊன்றசையென்று தூக்கிச்சென்றது. சேடக மன்னன் தவஞ் செய்கின்ற—விபுலமலைச் சாரலிலே வைத்தது. அவள் விழித் தெழுந்தாள். பறவை அவளைத் தின்னாது அங்கேயே விட்டுச் சென்றது என்று வரலாற்றை நடத்திச் செல்கின்றவர் ;

"பற்றுயிர் உண்ணுப் புள்ளும் பறந்துவான் போயிற்றன்றே" (உத. - *14.*) என்று அண்டபேரண்டப் பறவையின் இயல்பை யுணர்த்துகின்ருர். இதில் வந்துள்ள "உயிர் உண்ணு" என்ற தொடர் "ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை நன்று" (உருரு.) என்ற திருகுறட் பகுதியை நினைப்பிக்கின்றது. பகுத்தறிவற்ற—புண்ணியம் பாவம் என்று பகுத்தறியும் ஆற்றலிலாத பறவையே உயிரைக் கொன்று தின்னுத இயல்பை யுடையது, என்பதன் வாயிலாக வேள்வி செய்வாரும், விலைப்பொருட்டால் ஊன்றர வாங்கி யுண்பாரும் ஆகிய மக்களின் இழிவைக் குறிப்பா லுணர்த்துகிருர்.

ஈன்றபொழுதிற் பெரிது உவந்தாள் :

மிருகாபதி வனத்திலே கருவுயிர்த்தாள். தன் பக்கத்திலே மாணிக்க மணியைப் போலே மகன் கிடப்பதைக் கண்டு துயர் நீங்கி மகிழ்ந்திருந்தாள்,

> "பொருகயற் கண்ணிஞள்தான் போந்ததை யறிந்தழுங்கித்
> திருமணி கிடந்த தென்னச் செழுமகன் கிடப்பக்கண்டு
> பெருகிய காதலாலே பெருந்துயர் தீர்ந்திருப்ப"
> (உத. 16)

என்கிருர். எடுப்பாரும், பிடிப்பாரும் நிறைந்த அரண்மனையை விட்டுக் காட்டிலே கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற துன்பத்தையும் பக்கத்திலே கிடக்கின்ற தவமகனைக் கண்டு, மறந்தாள், மகிழ்ந்தாள் என்பது "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" (சுகூ) என்ற குறட்பகுதியை நினைப்பிக்கின்றது.

மான் கூட்டத்திற் புலி: ஒத்த உவமை

உதயணன் பிரச்சோதன மன்னனுக்கு கப்பங்கட்டாமையால் போர் மூளுகிறது. பிரச்சோதனன் சாலங்காயன் என்னும் அமைச்சன் தலைமையில் நால்வகைப் படைகளையும் அனுப்பி உதயணனைச் சிறைபிடித்து வரச் சொல்லுகிருன், நால்வகைப் படையும் உதயணகுமாரனைச் சூழ்ந்தன. அப்போது வத்தவ மன்னன் உதயணன்,

> புல்வாய் கூட்டத்துப் புக்க புலியெனக்
> கொல்வா ளோச்சியே கூற்றம் விருந்துண
> வீரரழிந்திட வாட்கிரை யிட்டனன்" (உத. 53)

என்ற வரலாற்ருேட்டத்திலே, மான் கூட்டத்து நடுவிலே புலி புக்காற்போல உதயணன் வீரர் கூட்டத்திலே புக்கு அவர்களைக் கலங்கினுன் என்கின்ருர் ஆசிரியர். இது "எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்" (எசுஉ) என்ற குறளை நினைவூட்டுகிறது எனலாம்.

காமக் கடல் கடக்குங் கருவி

வாசவதத்தையைக் கவர்ந்துசென்ற உதயணன் தன் ஊராகிய கௌசாம்பியிற்புக்கு அங்கே அவளை மணந்து மகிழ்தலையே விரும்பினுன் என்ற வரலற்றமைப்பிலே

"கைம்மிகுங் காமக் கரை காண்கிலன் அழுந்தலின்
ஐயம்மிகுங் கணைமதன் அம்புமீக் குளிப்பவும்
பைம் மிகு பொனல்குலாள் படாமுலை புணையென
மைம் மிகுங் களிற்றரசன் மாரன் கடல் நீந்துவான்"
(உத. 123)

என்று கூறுகின்ருர் ஆசிரியர். மாரன் கடல் — காமக்கடல். காமக் கடலுக்குக் கரைகாணுத மன்னன் வாசவதத்தையின் முலையே புணையாகக் கொண்டு நீந்துவானுயினன் என்கின்ருர் வள்ளுவர்.

"காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்" (ககசுச)

என்ற குறளால் காமம் ஒரு பெரிய கடல். அதனை நீந்திக் கடக்க ஒரு சேமப்புணை இல்லை என்ருர். இக்காப்பிய ஆசிரியர் வாசவதத்தையின் முலைகளையே புணையாகக் கொண்டு உதயணன் நீந்தினுன் எனத் தெப்பத்தைத் தேடிதந்தார். இதனுல் காப்பிய ஆசிரியர் வள்ளுவரை விஞ்சி விட்டாரோ! என்று எண்ண வேண்டா; வள்ளுவர் தலைவனைப் பிரிந்திருக்கின்ற தலைவி கூறுவ தாகக் கூறுகின்ருர். ஆசிரியர் காப்பியத் தலைவன் உதயணன் செயலாகச் சித்தரிக்கின்ருர். வள்ளுவர் கூறியது பிரிவுநிலையின் நிகழ்ச்சி. இவர் கூறுவது கூடினுர் செய்தி. ஆதலால், இவர் புணையைக் கூறவேண்டிய சூழ்நிலை இன்றியமையாததாயிற்று:

ஆவதறிவார் அமைச்சர்

மகத நாட்டிலே இராசகிரிய நகரத்துப் புறச் சோலையிலே காகதுண்ட முனிவரோடு கலந்துரையாடி நிற்கு நாட்களில் ஒரு

நாள் உதயணன் மகத மன்னன் தருசகனுடைய தங்கையாகிய பதுமாபதியைக் கண்டு காதலித்துக் களவிற்கூடி அவளுடன் கன்னிமாடத்திற் புகுந்து அங்கேயே தங்கியிருந்தான். அப்போது உதயணனுடைய அமைச்சனுகிய உருமண்ணுவா வயந்தகனை நோக்கி,

'ஆகிய தறிந்து செய்யும் அருளுடை மனத்தனை யூகி (உத. 161). உஞ்சை நகரிற் செய்ததுபோல நாமும் இந்நகரத்திற் சென்று பதுமாபதியோடு நம் மன்னனை நம் நகர்க்கு அழைத்துச் செல்வோம் என்கின்ருன். இதில் யூகி உற்றது கொண்டு மேல் வந்துறு பொருள் உணரும் ஆற்றலான் எனப் பாராட்டப் பெறுகின்ருன்.

வள்ளுவர் அரசியலுக்கு இன்றியமையாத அறிவின் ஆற்றலை அறிவிக்க வந்தவர், 'அறிவுடையார் ஆவது அறிவார்' (சஉஎ) என்கிருர். இதன் கருத்து இனி நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை அறிந்து அதற்கு ஏற்பத் தன் செயல்களைச் செய்பவர்களே அறிவுடையார் ஆவர் என்பதாம். மேல் நடக்க இருப்பதை எங்ஙனம் அறிவது என்ற ஐயம் உண்டாகலாம். அதற்கு விடையாக, நிகழ்ச்சியிற் கிடைத்த சிலவற்றைக்கொண்டு அதாவது உற்றது கொண்டு, இனி உறுவதையறியும் ஆற்றலார் என்கின்றவர் ஆகியது அறிந்து, ஆவதைச் செய்யும் அருளுடைய மனத்தன் யூகி என்றனர். ஆகவே இப்பகுதி 'ஆவதறிவார் அறிவுடையார்' (சஉஎ) என்பதன் கருத்து விளக்கமேயாம்.

அமைச்சனது ஆற்றல்

உதயணன் தருசகன் உதவிய படையோடு தன் நகரையணுக, அங்கே உதயணனுடைய தம்பியராகிய பிங்கல, கடகர்களும் நால்வகைப் படையும் புடைசூழ வந்து கௌசாம்பியில் போர்க் களத்திலே தம் தமையனுடன் சேர்ந்துகொண்டனர். அப்போது உதயணன் மகத நாட்டுப் படைத்தலைவனும் அமைச்சனுமான வருடகாரன் என்பவனை நோக்கிக் கூறுகின்ருன். அமைச்சர்கள் பகைவர்க்குத் துணையாவாரைப் பிரித்தலும், தம்மிடம் உள்ளவர்கள் மனம் வேறுபட்டுப் பிரிந்து பகைவன்பாற் சாராமல் பேணிக்கொள்ளுதலும், ஏதோ காரணத்தால் முன் பிரிந்து சென்றவர்களை மீட்டும் தன்பாற் சேர்த்துக் கொள்ளுதலும் ஆகிய அரசியற்றந்திரத்தில் வல்லவனுதல் வேண்டும். ஆகையால்

நீ நம் பகைவனுகிய ஆருணி என்னும் பாஞ்சால ராயனிடம் சென்று, அவனுக்குத் துணையாக வரும் மன்னர்களை அவன்பால் நின்றும் பிரித்து விடுக என்கின்றான்.

"வருடகாரனை யழைத்து வத்தவ னியம்புமிப்
பருமிதநற் சேனையுள்ள பாஞ்சால ராயனிடம்
திருமுடி யரசரைத் திறத்திஞல கற்றெனப்
பொருளினவன் போந்த பின்பு போர்வினை தொடங்கினர்"
(உ.த. 179)

என்பது அந்நிகழ்ச்சியை விளக்கும் செய்யுள். இதில் வரும் 'திறத்திஞல் அகற்று' என்ற பகுதி 'பிரித்தலும் .... வல்லது அமைச்சு' (சுருரு) என்ற குறட் கருத்தினைத் தழுவியதாகும்.

அரசின் ஆற்றல்

இவ்வண்ணம் ஆருணி முதலான பகைமன்னரை வென்று உதயண மன்னன் திருவோலக்க மண்டபத்திலிருந்து அரசாளுந் திறத்தை யறிவிப்பவர்,

"மாற்றலர் தூதர் வந்து வருதிறை யளந்து நிற்ப
ஆற்றலர் வரவ வர்க்கே யானபொன் றுகிலளித்தே
ஏற்றநற் சனங்கட்கெல்லாம் இனிப்பொரு ளுவந்து வீசிக்
கோற்றெழில் நடத்தி மன்னன் குறைவின்றிச்
செல்லுகின்றான். (உ.த. 187)

என்கிறார். இதில் 'தூதர் வந்து வருதிறையளப்ப' என்ற பகுதி 'இயற்றலும்' 'ஈட்டலும் காத்தலும்' என்ற குறட்பகுதியையும், 'ஆற்றலர்வர அவர்க்கே பொன்துகில் அளித்து' என்பதும் நற்சனங்கட்கு எல்லாம் பொருளுவந்துவீசி என்பதும் வகுத்தலும் என்ற பகுதியையும் குறித்து நின்று, இப்பாடல் முழுதும்,

" இயற்றலும் ஈட்டலும் காத்தலும்காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (நடு)

என்ற குறளை அகத்துட்கொண்டு திகழ்கிறது.

எண்ணியவெல்லாம் எளிதினெய்தும் :

உதயணன் தன் மகன் கடகனுக்குத் தன்னுட்டையளித்து, மூத்தமகனுகிய நரவாகனன் விருப்பின் வண்ணம் அவனை

விச்சாதர உலகிற்கு அனுப்பிவிட்டுத் துறவு பூண்டு தவஞ் செய்ய லானான் என்ற வரலாற்றைச் சொல்லுகின்ற ஆசிரியர்,

" எண்ணிய கரும மெல்லாம் இயைபுட னாகப் பின்னும்
புண்ணிய நோன்பு நோற்கப் பொருந்திய மனத்த னானான்"
(உத. 304)

என்கின்றார். இதில் நினைத்த காரியங்களனைத்தையும் நினைத்த வண்ணம் நிறைவேறச் செய்வது தவம்; அது புண்ணியமானது; அதனை நோற்கச் சென்றான் என்ற செய்தி உணர்த்தப் பெறுகிறது. இதில்,

" வேண்டிய வேண்டியாங் செய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" (உசூரு)

என்ற குறட்கருத்து முற்றும் பொதிந்துள்ளது எனலாம்.

இக்குறட்குப் பரிமேலழகர், மணக்குடவர், பருதியார் ஆகிய உரையாசிரியர்கள், முயன்றால் மறுமைக்கண்தாம் வேண்டிய பயன்களை வேண்டியவாறே பெறலாம். ஆதலால், செய்யப் படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும் என்றும், இவ்விடத்தே முயலவேண்டும் என்றும், மேன்மேலே தவம் பண்ணுவான் என்றும் உரைத்தனர். ஆகவே பருதியார் மேன்மேலே எனப்பொருள் செய்திருத்தலால் மீணடும் முயலப் படும் எனப்பாடங் கொண்டனராதல் வேண்டும இக்காப்பிய ஆசிரியர். **பின்னும்** நோன்பு நோற்கப் பொருந்திய மனத்தனானான் என்பதால் மீண்டும் எனவே பாடங் கொண்டிருப்பார் என்றே தோன்றுகிறது.

அன்றியும் உதயணன் முற்பிறவியிற் செய்த தவத்தால் எல்லா இன்பங்களையும் ஒரு சேரப்பெற்றிருந்தான் என்பார் 'மன்னன் புண்ணிய முன்னாட் செய்த போதத்தே யுதவிசெய்ய, எண்ணிய கருமமெல்லாம் இயைபுடனாக' (உத. 304). என்றார். ஆகவே முன்செய்த தவம் இப்போது இன்பமனைத்தையும் எய்தச் செய்தது. ஆதலால் பின்னும் அதாவது மீண்டும் நோன்பு நோற்கப் பொருந்திய மனத்தனானான் என்கின்றார்.

மேலும் நரவாகனன் மண்ணுலகில் மன்னன் மகனாத்தோன்றி இப்பிறப்பிலேயே வித்தியாதரர் உலகமாகிய விண்ணுலகின் வேந்தனானான். அதுவும் தவத்தாலேயே என்பார் அடுத்து,

" போந்து புண்ணியன் பொருவில் போகத்துச்
சேர்ந்திருந்ததும் செய்தவத்தெனு " (௩௦௮)

என்று எண்ணினன் உதயணன் என்கின்றார். இதனால் தவமிருந்தால் எடுத்த இப்பிறவியிலேயே விண்ணுலக ஆட்சியையும் எய்தலாம் என்பதுணர்த்தப் பெறுகிறது. இது வேண்டிய வேண்டியாங் கெய்தலாம் என்ற குறட்கருத்தை விளக்குவதாம். (உசுரு.)

இழுக்கம் இழிந்த பிறப்பாதல்

உதயணன் இவ்வாறு தவமேற்கொள்ளத் துணிந்தபோது, அவனுடைய மனைவிமார் நால்வரும் முன்னையினும் பன்மடங்கு ஒப்பனை செய்து, அவன் முன்நின்று அவனை மயக்குவராயினர். மன்னன் மீண்டும் மனமாறிக் காமக்களியில் அழுந்தித் தவத்தை மறந்தானாக, அவன் யானையொன்று மதங்கொண்டு ஊரை யழித்தது. அப்போது அங்கு வந்திருந்த சாரணர்கள் வாயிலாக அதன் பழம்பிறப்பை யுணர்ந்தான். அதில் கடகம் என்னும் ஊரிலே விடபகன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் அமரி என்னும் தாசி வலையிற் சிக்கித் தன் குல ஒழுக்கங்களை விட்டான். அதனால் இப்பிறவியில் காட்டுயானை யாயினன் என்று கதை செல்கிறது. இது,

" ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்." (கநந)

என்ற குறட்டு ஏற்ற இலக்கியமாகும்.

இக்குறட்கு உரை எழுதிய ஆசிரியர்களுள் பரிமேலழகர் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை அவ்வருணத்திற்கு குலமுடைமையாம். ஒழுக்கத்திற்றவறுதல் அவ்வருணத்திற்றழ்ந்த வருணமாய்விடுவர் என்பர்.

மணக்குடவர் ஒழுக்க முடையவன் இழிகுலத்திற் பிறந்தவனாயினும் உயர்குலத்தானாம். அஃதில்லாதான் உயர் குலத்தானாயினும் இழிகுலத்தானாய் விடும் என்பர்.

பருதியார் ஒழுக்கந்தவறியவன் பிறப்பு கடைப்பிறப்பாம் என்பர். காளிங்கர் இழிந்த பிறப்பாய்விடும் என்பர். இங்ஙனம் உரையாசிரியர் அனைவரும் எடுத்த பிறப்பில் இழி பிறப்பாகக் கருதப்படுதலையே வற்புறுத்தினர்.

இந் நூலாசிரியரோ; ஒழுக்கந்தவறிய விடபகன் என்னும் அந்தணன் எடுத்த பிறவியில் பலராற் பழிக்கப்பெற்று இழி குலத்தானுகக் கருதப் பட்டதோடன்றி, மறுபிறப்பில் தாழ்ந்த பிறப்பாகிய யானைப் பிறவியை எடுத்து மதங்கொண்டு திரிந்தான் என்பர். இதனுல் 'இழிந்த பிறப்பாய் விடும்' (கநட) என்பதற்கு மனிதப் பிறவி யினிழிந்த விலங்காதலை விளங்கச்செய்து நயமான வேறுரையையும் தந்தனராதல் காண்க.

இக் கருத்தைத்தரும் உதயண குமார காப்பியப் பாடல் வருமாறு:

"காமங் கள்ளுண்டு கைவிட லின்றியே
தாமநற் குழலாள் துணை யாகவும்
யாமமும் பகலும் அறியாத வன்
ஆமரணத் தின்பின் ஆனைய தாயினுன்" (உத. 339)

என்பது.

தொடர்ப் பாடகல் வதேதுறவு

யானையின் வரலாறும், தனக்கும் அதற்கும் உள்ள தொடர்பின் காரணமும் முனிவர் சொல்லக் கேட்டுத்தெளிந்த உதயணன், முனிவரைப் பார்த்து எமக்குத்தவஞ் செய்யு முறைகளைத் தந்தருள்க என வேண்டினன். அங்ஙனமே முனிவர் அருள உதயணன் தவக்கோலங் கொண்டனன். அமைச்சர்கள் நால்வரும், மனைவியர் நால்வரும் அவ்வாறே தவக்கோலங் கொண்டனர்.

"புறத்தினும் அகத்தினும் போகத்தொடர்ப்பாடு விட்(டு)
அறத்திடை யருளினுல் ஆருயிரை யோம்பியும்
திறத்துடன் சமிதியும் சிந்தையி னடக்கமும்
திறத்திறத் துணர்ந்துபின் தியானமுற்றி னுர்களே"
(உத. 362)

என்கின்றது காப்பியம். அகத்தாசையையும், புறத்தாசையை யுந்துறந்தனர்; பிறவுயிர்களை அருளோடு ஓம்பினர், துற வாசாரங்களை மேற்கொண்டனர்; மன அடக்கம் பெற்றனர். பின்னர்த்தியானத்திலும் முதிர்ந்தனர் என்கின்றுர் ஆசிரியர்.

இதில் "புறத்தினும் அகத்தினும் போகத்தொடர்ப்பாடு விட்டு" என்பதில்

"மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்ருர்க்கு உடம்பும் மிகை" (௩௪௫)

என்ற குறட்சிந்தனை ஒளி செய்கின்றது.

புறம் – புறப்பொருளின் கண் உளதாம் போகத்தால் விளையும் பிணைப்பு. அவை மாலை, மாதர், மனை, மாடு முதலிய பொருள்களான் விளையும் ஐவகைப் பொறிகளானும் நுகரப்பெறும் பலவகையான நுகர்ச்சிகளாலாம் பிணைப்பு. இவற்றினிடம் சிற்றின்பங் காரணமாகச் சிறிது தொடர்பு கொள்வேமாயின் நாம் விட்டாலும் உடும்பு நம்மை விடாதவாறு போல, ஒரு காலத்து நற்காட்சி நமக்கு விளைந்து நாம் அவற்றைத் துறக்க எண்ணினுலும் அவை நம்மை விடாமே பற்றி நிற்கும் ஆதலால் புறத்திற்போகத் தொடர்ப்பாடு விட்டு என விளக்கந் தந்தார்.

அங்ஙனமே என் உடல், என் பொறி, என் மனம் என அகத்தொடர்ப்பாடும் புறத்தொடர்ப்பாட்டிற்கு ஏதுவாமாகலான் அதனையும் விட்டு என்ருர். இங்ஙனம் வள்ளுவர், பிறப்பறுத்துப் பெருநெறி எய்த விரும்பினபேர்க்கு, அதற்குச் சாதனமான உடலும் மிகையாம் போது வேருன போகத்தொடர்புகள் எதற்காக? அவற்றையும் அறவே துறக்க வேண்டும் என்று சில சொற்பெய்து அக்குறளுக்கு விளக்கவுரை தருகின்ருர் ஆசிரியர். தொடர்ப்பாடு என்ற சொல்லாட்சியும் இப்பாடலின் கண் அமைந்திருத்தல் காண்க.

அறத்திடை யருளினுல் ஆருயிர் ஓம்புதல்

"மன்னுயிர் ஓம்பி யருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை" (உ௪௪)

என்றும்,

"அல்லல் அருளாள்வார்க்கு இல்லை" (உ௪௫)

என்றும்,

"அருள் சேர்ந்த நெஞ்சினுர்க்கு இருள் சேர்ந்த
இன்னுவுலகம் புகல்இல்லை" (உ௪௩)

என்றும் வள்ளுவர் கூறியதை உளங்கொண்டு தன்னலங் கருதி உதயணன் முதலியோர் உயிர்களிடம் இரக்கங் காட்டினரல்லர். இது அறம்; அறத்தை யறத்திற்காகவே ஆற்றல் வேண்டும் என்று கருதிச் செய்தனர் என்பார் இங்ஙனம் பல குறட்பாக்களை மனங்கொண்டு சுருங்க ஓதினர் என்பதாம்.

மனவடக்கம்

அங்ஙனமே, சிந்தை யடங்கவேண்டும். சிந்தையை யடக்குதல் அரிய செயல், ஆயினும் அதனைச் சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்க்கவேண்டும் என்பார்' சிந்தையின் அடக்கமும்' என்றார். சிந்தை யடங்கவேண்டுமாயின் அதற்கு ஏற்ற ஈர்யாசமிதி. பாடஷைசமிதி, ஏடஷைசமதி; ஆதான நிக்கேபசமிதி உற்சர்க்கசமிதி முதலான ஐந்துவகைத் துறவொழுக்கங்களை மேற்கொண்டு பழகிவரின் சிந்தைதானே யடங்கும். ஆதலானே திறத்துடன் சமிதியும் சிந்தையின் அடக்கமும்' என இரண்டையும் இணைத்து எண்ணவைக்கின்றார். இக்கருத்தை அவர்க்கு உதவியது 'அடக்கத்தைப் பொருளாக காக்க' என்ற திருக்குறட் பகுதியேயாதல் தெளிவு.

இங்ஙனம் பல குறட் கருத்துக்களை மனத்திலே வாங்கி வைத்துக் குழைத்துக் வரலாற்றொடு கலந்து வழங்குகின்றார் காப்பிய ஆசிரியர்.

இக் காப்பியத்துட் சில குறட் கருத்துக்களே வந்துள்ளன ஆயினும், அவற்றால், இந் நூலாசிரியர் கொண்ட குறட் பாட பேதங்களும், உரைச் சிறப்பும் உணர்வுக்கு விருந்தாவன.

நாககுமார காவியம்

இது ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. வெளிவராதது. சமணக் காப்பியம் என அதன் பெயரமைப்பான் அறியப்பெறு மாயினும் இதுவரை வெளிவராத நூலாயிருப்பதால் அதன் பொது அமைப்பு வரலாறு இவைகள் கூடச் சிறிதும் அறியக்கூடவில்லை.

★

யசோதர காவியத்தில் வள்ளுவம்

யசோதர காவியத்தில் வள்ளுவம்

யசோதர காவியத்தைப் பற்றி

யசோதர காவியம் சிறுகாப்பியம் ஐந்தனுள் ஒன்று. ஆயினும் சூளாமணியும் நீலகேசியும்போல அத்துணைச் சிறப்புடையதன்று. செம்பாகமான கவிதையோட்டமும் வரலாற்று நடையும் உடையது.

இது சமண சமயப் புராணங்களில் ஒன்றான உத்தர புராணத்தின் வழிவந்த யசோதர சரிதத்தைப் பின்பற்றியெழுந்த நூல். வடமொழியில் பத்தாம் நூற்றாண்டளவில் எழுந்தவை யசோதர சரிதம், யசோதர காவியம், யசஸ்திலக சம்பு முதலி யனவாம். இவையனைத்தும் உத்தரபுராணத்தின் வழிவந்தனவே.

தமிழில் உள்ள யசோதர காவியத்திற்கும், உத்தர புராண முதலிய வடமொழி நூல்களுக்கும் கதைப்போக்கில் பெரிதும் மாறுபாடும் வளர்ச்சியும் தேய்வும் காணப்படுகின்றன. ஆனால் ஆராய்ச்சி அறிஞர்கள் சிலர்,

> "புட்பதந்தன் சொன்ன பொருள்சேர் கதைதன்னைத்
> திட்பமாய்ச் செந்தமிழிற் செப்பினான்—நட்புடையார்
> நண்ணு ரிவரென்ன நாடக் கொடைக்கையார்
> வெண்ணாவ லூருடையார் வேள்"

என்ற வெண்பாவைத் துணைக்கொண்டு, இந்நூல் புட்பதந்திரி வடமொழியிலியற்றிய யசோதர சரிதத்தைப் பின்பற்றி எழுந்தது என்பர். புட்பதந்தர் சொன்ன பொருள்சேர் கதை என்பது இந் நூலையே விளக்குவது என்ற துணிவிற்குத் துணையில்லை. அவர் செய்த வேறு நூல்களையும் குறிக்கலாம். அன்றியும் செந்தமிழிற் செப்பினான் என்பது தமிழ்யசோதர காவியத்தைச் செய்தான் எனற்குச் சான்றாகாது. ஆனால் இவ்வெண்பா திருமயிலை

வித்வான் சண்முகம்பிள்ளையவர்கள் வீட்டு, யசோதர காவிய ஏட்டில் எழுதப்பெற்றுள்ளமையால், இந்நூல் செய்தார் வெண்ணாவலூருடையார் என்பது மட்டும் துணியலாம்.

வெண்ணாவலூர் என்பது திருவானைக்காவையும் குறிக்கும். ஆகவே இந்நூல் செய்தார் திருவானைக்காவினர் என்றும் கருதலாம். ஆனால் இதுவேறு துணைச்சான்றொன்றுமின்மை யானும், பொருள்சேர் கதை என்பது யசோதரன் கதையையே உணர்த்துதற்கோர் இயைபின்மையானும் இக்கருத்து உறுதியான தன்று.

ஆகவே பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, இடைக் காலத்தோ எழுந்த இந்நூல் அரசமரபினர் வரலாறு கூறுமுகத்தான் ஓரளவு காப்பியம் எனக்கருதப்பெறுவதாயிற்று.

இது சமண நூலாதலின் ஆங்காங்குத் திருக்குறட் சொல்லையும் பொருளையும் தாங்கி மிளிர்கின்றது. அங்ஙனம் மிளிரும் குறட்கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அதற்குத் துணையாக அதன் வரலாற்றமைப்பையும் ஓரளவு சிந்திப்போம். அதில் முதற்சருக்கத்தில், ஓதய நாட்டு மாரிதத்தன் வரலாறு பேசப்படுகின்றது.

வரலாறு

ஓதய நாட்டு இராசபுரத்திலிருந்து மாரிதத்தன் அரசாண்டு வந்தான். வயந்த காலத்தில் ஒருநாள் வேனிற் சிறப்புக்காண உரிமைமகளிருடன் சோலைக்கு உலாப்போந்தான். அங்கு வேனில்விழா எடுத்தான். நகரமாந்தர் பலர் மன்னனை நோக்கி 'இரட்டைப் பலியூட்டின் எம்மன்னை மாரிதேவி மகிழுவாள். அதனால் அவட்குப் பலியிடுக' என வேண்டினர். மாரிதத்த மன்னன், நம் குடிமக்கள் இரண்டுயிரைப் பலியிட்டால், நாமும் அதனையே செய்யின் நமக்கென்ன தனிச்சிறப்பு என்று எண்ணினன். சண்டகருமன் என்னுந் தளபதியை நோக்கி, 'நீ விரைந்து செல். எங்கிருந்தாவது இரட்டையர் ஒருவரைத் தேடிக்கொண்டு வா' எனக் கட்டளையிட்டான். சண்டகருமனும் அவ்வாறே சென்று ஓரிரட்டையரைக் கொணர்ந்து நிறுத்தினன். அவர்கள் பெயர் அபயருசி அபயமதி என்பது.

அரசன் அவர்கள் இருவரையும் நோக்கித் தம் கருத்தை உணர்த்தி 'அரசன் நீடு வாழ்க' என வாழ்த்துமாறு பணித்தான். அவர்கள், முகமலர்ச்சியோடு, 'அரசன் அருளறம் பூண்டு திருவறந் தழுவி உலகம் காத்து நீடு வாழ்வானாக' என வாழ்த்தினர்.

அரசன் அவர்கள் நிலையைக்கண்டு வியந்து, நீங்கள் அஞ்சாதிருப்பதற்குக் காரணம் யாது என வினவினான். அதற்கு அவர்கள் உயிர்க்கொலை செய்யும் அரசனை வாழ்த்தின் யாது விளையுமோ என்று அஞ்சி இங்ஙனம் வாழ்த்தினோம் என்று தம் வரலாற்றைக் கூறத் தொடங்கினர்.

அவந்தி நாட்டிலே உச்சயினி நகரத்திலே அசோகன் என்னும் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் மனைவி சந்திரமதி என்பவள். மகன் யசோதரன். அவர்களோடு மன்னன் மாநிலத்தை யாண்டுவருநாளில் ஒருநாள் தன் காதோரத்தில் நரையுண்டாகி யிருப்பதைக் கண்டான். வருந்தினான். தன் மகனை அரசனாக்கித் தவம்புரியக் காடுசெல்ல எண்ணிக் குணதர முனிவன்பால் அறங் கேட்கத் தொடங்கினான்.

யசோதரன், தந்தை யசோகனுடைய ஆணையின்வண்ணம் நாட்டையாண்டுவந்தான். அவன் அரசகாரியங்களைத் துறந்து மனைவி அமிர்தமதி என்பாளோடு கூடியே பொழுது கழித்தான். யசோமதி என்னும் மகனைப் பெற்றெடுத்தான். சில யாண்டுகள் கடந்தன. அமிர்தமதி இசைக்கலையால் மனநெகிழ்ந்து மாளவ பஞ்சமம் என்னும் இசையால் மதிமயங்கி அட்டபங்கன் என்னும் பாகனொடு கூடாவொழுக்கங் கூடி நின்றாள். மன்னன் மனைவியின் வேறுபாட்டைக் குறிப்பாலுணர்ந்து, ஒருநாள் உறங்குவான் போலக் கிடந்து அவளுடைய களவொழுக்கத்தைக்கண்டு வெறுப்புற்றுக் குறிப்புரையால் இகழ்ந்தனன். அரசபோகத்தையும் அரிவையர் போகத்தையும் வெறுத்தான்.

ஒருநாள் தன் மனக் கலக்கத்தைக் கனவு கண்டதாகத் தாயிடம் உணர்த்தினான். அன்னையாகிய சந்திரமதி சண்ட மாரியம்மைக்கு உயிர்ப்பலி கொடுத்தால் கனவின் தீங்கு அகலுமென வற்புறுத்தினாள். மன்னன் அது செய்ய உடம்படா தானாகி, மாவாற் கோழி செய்து பலியிட்டான். அந்த மாக்

கோழி உயிருடையதுபோலக் கூவி விழுந்திறந்தது. அதனால் மன்னன் கோழியைக் கொலை செய்துவிட்டோமே என்று கவலையுற்றான். இந்நிலையில் அரசி அமிர்தமதி தன் மாமிக்கும் கணவனுக்கும் நஞ்சு ஊட்டினாள். இருவரும் இறந்தனர்.

சந்திரமதி விந்தமலைச் சாரலில் மயிலாயும், யசோதரன் நகர்ப்புறத்து நாயாகவும் பிறந்தனர். அரண்மனையை யடைந்து வளர்ந்து வந்தனர். ஒருநாள் மயில் அட்டபங்கனைக் கண்டதும் அவன் கண்ணைக் குத்திற்று. அமிர்தமதி அதனைக் கல்லாலெறிந்து கொன்றனள். மயில் கீழே வீழ்ந்தது. அதனை நாய் கவ்வி யிழுத்துச் சென்றது. அதனைக் கண்ட யசோமதி நாயை யடித்துக் கொன்றான். அதனால் நாய் ஒருகருநாகமாகவும் மயில் முள்ளம்பன்றியாகவும் மறுபிறப்பெடுத்தன. முள்ளம்பன்றி கருநாகத்தைக் கொன்றது. முள்ளம்பன்றியைப் புலி கொன்றது. அவையிரண்டும் மறு பிறவியில் மீனாயும் முதலையாயும் பிறந்தன. அவையிரண்டும் அரசனால் கொல்லப்பெற்றன. முதலை பெண்ணாடாகவும் மீன் ஆணாடாகவும் பிறந்து கூடின. பெண்ணாட்டின் கருவில் ஆணாடு குட்டியாகத் தங்கிப் பிறந்தவுடன், பெண்ணாடு கொல்லப்பெற்றது. இங்ஙனம் பல பிறவி எடுத்து முடிவில் நகரச் சேரியில் இரு கோழிகளாகப் பிறந்தனர் அவற்றைக் கண்ட அரசன் அவைகளை யரண்மனையில் வளர்க்க என உத்திரவிடச் சண்டகன்மன் எடுத்துவந்து அரண்மனையில் வைத்து வளர்த்து வந்தான்.

வசந்தகாலம் வந்தது. மன்னன் யசோமதி புட்பாவலி என்னும் மனைவியுடன் வசந்தமண்டபத்திலிருந்து ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் களித்தான். அரசனுடன் வந்திருந்த சண்டகருமன் நந்தவனத்தில் தவஞ்செய்துகொண் டிருந்த அகம்பன முனிவரிடம் சென்று அறங்கேட்டுத் திருந்திய மனத்தனாய், அடிகளே! கொலை ஒழிதல் நீங்கலான ஏனைய அறங்களைக் கேட்டு நடப்பேன் என்றான். முனிவர் கொலையால் வரும் தீங்குகளை விரித்துரைத்தார். யசோதரனும் சந்திரமதியும் அடைந்த துன்பங்களை எடுத்துக் காட்டினார். அதனைக் கேட்டுக் கொண்டு கூட்டில் இருந்த கோழிகள் தம் பழம் பிறப்புணர்ந்த மகிழ்ச்சியால் கூவின. இந்த ஆரவாரத்தைக் கேட்டுச் சினந்த மன்னன் அம்பெய்து கோழிகளைக் கொன்றான். அவை புட்பாவலியின் வயிற்றில் இரட்டைப் பிள்ளைகளாய்த் தங்கி

அபயருசி அபயமதி என்ற இரட்டையாய்ப் பிறந்தன. பின்பு புட்பாவலிக்கு ஓராண் மகவு பிறந்தது. அவற்கு யசோதரன் எனப் பெயரிட்டு வளர்த்துவந்தான்.

மன்னன் யசோமதி ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். காட்டிலே சுதத்த முனிவனைக் கண்டான். அவனைக் கொல்லக் கருதி வாளையுருவினன். மன்னனுடைய உயிர்த் தோழனாகிய கலியாணமித்திரன் என்பான் தடுத்து முனிவனுடைய பெருமைகளைக் கூறினன்.

மன்னன் தன் சிரத்தைத் துணித்து முனிவன் காலடியில் வைத்து மன்னிப்புக் கோரக் கருதி வாளையுருவக் கல்யாணமித்ரன் தடுத்து தன்னுயிரைக் கொல்லுதலும் பெரும் பாவமாம் எனத் தேற்றினன். மன்னன் முனிவருடைய மலரடிகளில் வீழ்ந்து வணங்க, முனிவன் அறவுரைகளையும் அசோக மன்னன் எய்திய பிறப்பு வரலாறுகளையும், தாயாகிய அமிர்தமதி நரகிற்கிடந்து வருந்துவதையும், யசோதரனும், சந்திரமதியும் மாவாற் கோழி செய்து கொன்றமையால் விளைந்த தீவினைகளையும் விளக்கினர். யசோதரனும் சந்திரமதியுமே இந்த இரட்டைமக்கள் என்பதை யுணர்ந்த மன்னன் அவர்களையும் முனிவர்பால் அழைத்து விடுத்தான். முனிவரால் அவர்களுடைய பழம்பிறப்பு உணர்த்தப் பெற்றது. அதனால் அவர்கள் இருவரும் மிக வருந்தினர். யசோமதி தனக்கு உய்தியருள வேண்டினன். முனிவர் அவர்க்கு அறங்கூற யசோமதி உண்மையுணர்ந்து உவர்ப்பு ஞானம் பெற்றுத் துறவறத்தை மேற்கொண்டனன். அபயருசி அரசை யசோதரனுக்கு அளித்து, தங்கை அபயமதியுடன் துறவு பூண்டான். உபாசகர் குழுவில் உறைந்தான். முனிவனுடன் இராசபுரத்தை யடுத்துள்ள பொழிலில் தங்கிச் சரிதை கேட்டு உவந்தான். மாரிதத்தனும் துறவு பூண்டான். அபயருசியும் அபயமதியும் தவத்திற் சிறந்து சாகாரகற்பத்தில் தேவராயினர் என வரலாறு செல்கிறது.

இதில் உயிர்க்கொலை, புலைப் புசிப்பு கூடாதென்பதும், காமம், கள் முதலியன அறவே நீக்கத்தக்கன என்பதுமாகிய அறங்கள் வற்புறுத்தப்படுவதால் இடையிடையே வள்ளுவம் ஒளி செய்கிறது.

கடவுள் வாழ்த்து

ஆசிரியர் நூலின் முகப்பிலே காப்பிடுகிறார். மக்கள் வினை யகன்று வீடுபேறடைய உபாயங் கூறுகின்றார்.

உலக மூன்றும் ஒருங்குணர் கேவலத்(து)
அலகிலாத அனந்த குணக்கடல்
விலகி வெவ்வினை வீடு விளைப்பதற்(கு)
இலகு மாமலர்ச் சேவடி ஏத்துவாம். (யசோ–கடவுள்)

என. இதில் அருக பரமேட்டியின் அளவிலாற்றலும், அவருடைய திருவடிப் பெருமையும் உணர்த்தப்பெறுகின்றன. அருகதேவர் இருந்தநிலையிலிருந்தே மூன்றுலகங்களையும், அவற்றினடைபெறும் நிகழ்ச்சிகளையும் ஒருசேர உணரத்தக்க ஆற்றலுடையவர் என்பது விளக்கப்பெறுகின்றது.

வள்ளுவர் 'எண் குணத்தான்' (௯) எனச் சுருக்கிக் கூறியதிலுள்ள முற்றுமுணர்தல், வரம்பிலாற்றலுடைமை, பேரருளுடைமை என்ற குணங்கள் முறையே 'உலகமூன்றும் ஒருங்குணர் கேவலத்து அலகிலாத குணக்கடல்' என்பதால் உணர்த்தப்பெறுகின்றது. 'ஒருங்குணர் கடல்' என்பது ஆழ்ந்து இன்புறுதற்குரியது. உயிர்கள் ஒன்றையுணரும்போது ஒன்றை யுணரும் ஆற்றலில்லாதன. தனித்தனியே ஒன்றைவிட்டு ஒன்றை யுணருந் தன்மையன. இறைவனே எல்லா நிகழ்ச்சிகளையும் இருந்தபடியிருந்தே உணரும் பேராற்றலான் என்பதை விளக்கி நிற்கின்றது. அடுத்துள்ள

"வெவ்வினை விலகி வீடு விளைப்பதற்குச் சேவடி ஏத்துவாம்" (யசோ)

என்னும் இது

'இருள்சேர் இருவினையும் சேரா' (௫) என்பதனையும் 'யாண்டும் இடும்பையில' (௪) என்பதனையும் உளங்கொண் டெழுந்த விளக்கமாம். வள்ளுவர் இறைவன் புகழை ஏத்துவார்க்கு வினையகலும்; திருவடியைச் சார்ந்தார்க்குத் துன்பகன்று வீடு பேறுண்டாம்; என்றார். இந் நூலாசிரியர் இரண்டையும் ஒன்றாக்கி உரைத்தார்.

'வெவ்வினை' என்பது விரும்பத்தக்கதாகிய நல்வினையையும் கொடியதாய் வெறுக்கத்தக்கதாகிய தீவினையையும் உணர்த்தும்

பொதுச்சொல். நல்வினை தீவினை இரண்டுமே மேல்வினைகளுக்கு வித்தாய்ப் பிறவிக்குக் காரணமாம். ஆகவே வினை என்றும் கொடுவினையேயாம்.

அருகதேவன் திருவடி என்றும் இன்பமயமானது. அவற்றைச் சார இடைவிடாது எண்ண எண்ண மக்கள் மனத்திலே இன்பம் சுரக்கும். அவ்வின்பத்தை நுகரவிடாமல், துன்ப இன்ப வடிவாக வந்து வினைகள் தடைசெய்யும். ஆகவே முதலில் வினையகல, அடுத்து இன்பமயமான திருவடியைச் சாருவர் என்ற விளக்கத்தை வள்ளுவர் கூறிய, 'இருள்சேர்வினை' என்ற அடையின் வாயிலாகப் பெற்றிருக்கிறார். இந்நூலாசிரியர் என்பது அவருடைய கவிதைப்போக்கால் அறியப்பெறும் உண்மையாகும்.

இந்நூலாசிரியர், பின்னரும் நகரமாந்தர் வாயுரையாகச் சண்டமாரிக்குச்சிறப்பு வழிபாடாற்றி வணங்கேமாயின் "[1]ஒன்றலா நன்றலாதன றங்களை வந்துறும்" (யசோ 1) எனத் திருவடியை நினைந்து சாராதாரை வினையடையும் என எதிர்மறை முகத்தானும் கூறியிருத்தல் ஈண்டு இணைத்து எண்ணுதற்குரியது.

நாட்டியல்பு – நகருக்கு

பாட்டுடைத் தலைவனது தலைநகரம் இராசபுரம். அது

"திசையுலாம் இசையும், திருவும் நிலாய்
வசையிலா நகர்" (யசோ. 6)

எனக் காட்டப்படுகின்றது. இதில் திருவும் நிலாய் என்பது

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" (எஙஅ)

என்ற குறளிற் காணப்பெறும் செல்வம் அணியாதலை உளங்கொண்டு உரைத்ததாம். அணி அணிவார்க்கு விளக்கத்தையும் அழகையும் செய்வது. அதுபோலச் செல்வம் நாட்டிற்கு விளக்கத்தைச் செய்வது என்ற குறிப்புத் தோன்ற நிலவி "யல்லது நிலாய் என்ற முத்திரையை யமைத்துள்ளார்.

குணக்குன்று

நகர மாந்தர் வேண்டிக் கொண்டபடி மாரிதத்த மன்னன் சண்டமாரிக்குப் பலியிட இரட்டைப்பிள்ளைகளைக் கொண்டுவரப்

பணித்தபோது அந்நகர்க்குச் சுதத்த முனிவன் ஐந்நூறு முனிவர் புடைசூழ வந்தான். அவனை அறிமுகப் படுத்துகின்ற ஆசிரியர்

"மாயமில் குணக்குன்றன்ன மாதவர்க்கிறைவன்" (யசோ. 23)

என்கின்றார். குன்று, நின்று காணினும், நெடுந்தூரம் சென்று காணினும் தோன்றுதலும் அளக்கலாகா அளவும், அறுதியிட்டுரைக்க முடியாத பொருளும், உடையதாறுற்போல முனிவன், அறிவாழமும், அனுபவப்பரப்பும், தந்நிலையிற்றாழாத – திரியாத உள்ள உறுதியும் உடையவன் என்பதை விளங்க வைத்தார். இக்கருத்து 'குணமென்னுங் குன்றேறி நின்றார்' (உகூ) என வள்ளுவர் நீத்தாரைக் கூறியதிலிருந்து தோன்றியதாம்.

மேலும், குன்றாயின், ஆழநீர்ச்சுனையும், இருளடர்ந்த முழைஞ்சுகளும் பொருந்தி மாயம் புரிவது. இவன் அத்தகையன் அல்லன் என்ற சிறப்புத் தோன்ற 'மாயமில் குணக்குன்றன்ன மாதவர்க்கிறைவன்' என்றார். மாயம் – வஞ்சம், இது வள்ளுவர் வாய்மொழிக்கு மெருகேற்றியது போலப் புதுமையான விளக்கந் தருவது.

அஞ்சுதல் துன்பத்திற்கு அடி

சுதத்த முனிவன், உபாசகர் குழுவில் இருக்கும் அபயருசி அபயமதி என்னும் இரட்டையர்களைச் சண்டகருமன் மன்னன் ஆணையின் வண்ணம் கைப்பற்றிக் கொண்டு வந்தபோது, அபயமதி என்பாள் அஞ்ச அபயருசி, அஞ்சற்க; அச்சத்தால் விளைவன துன்பமே; எனத் தேறுதல் கூறுகின்றவன்

"அஞ்சின மெனினும் மெய்யே அடையவந் தடையுமானல்
அஞ்சுத லதனின் என்னை பயன்" (யசோ. 33)

என்கின்றான். ஊழால் வருந்தீமைகள் நாம் அஞ்சுவதற்காக நம்மைவிட்டு விலகப்போவதில்லை. ஆதலால் அஞ்சிப் பயனின்று என்பது இதன் கருத்து. இது 'மற்றொன்று சூழினும் தான்முந்துறும்' (௩அ௦) என்றதன் உட்கிடையாய் அமைந்துள்ளது எனலாம்.

மேலும் சொல்லுகிறான், 'அஞ்சுதல் துன்பந்தானே' யசோ. 3) என்று, இதுவும்

"பேதைமை யென்பதொன்றி யாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல்" (அ௩௧)

என்ற குறளின் சுருக்கம் எனலாம். அஞ்ச வேண்டாத செயல்களுக்கு அஞ்சுதல் பேதைமை. அதனால் விளைவது துன்பம் என்கின்றான்.

இறப்பெல்லாம் பிறப்பதற்கே

மற்றும், இறப்பெல்லாம் பிறப்பதற்கே. இவன் நம்மைச் சண்டமாரிக்குப் பலியிடினும், நாம் மீட்டும் பிறப்போம். உலக மக்கள் இறந்தார் பிறப்பர், பிறந்தார் இறப்பர் என்பதை உணர்ந்திருந்தும், அறத்தைச் செய்யாமல் இறந்தவர்கள் எண்ணிலர். அவர்கள் மீண்டும் பிறத்தற்கே இறந்தவராவர் என்று தேற்றுகின்றவன்.

'இறந்தனர் இறந்தகாலத் தெண்ணிறந்தனர்கள் எல்லாம்' (யசோ. 36) என்கின்றான். இப்பகுதி சொல்லளவில் 'இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' (உஉ.) என்பதை ஒத்துள்ளது. ஆனால் இரண்டன் பொருணோக்கமும் வேறு.

பெண்ணுள்ளம்

அஞ்சுகின்ற அபயமதியைப் பல்லாற்றானும் தேற்றுகின்ற அபயருசி மக்களுடம்பு மட்டுமன்று; மன்னன் உடம்பும் அழியத்தான் செய்யும். இந்திரன் உடம்பும் அப்படியே. அழியாது வாழ்வார் ஒருவமிலர் என்றுகூற, அபயமதி பெண்களின் இயல்பைக் கூறுகின்றாள்;

"பெண்ணுயிர் அளியதாமே! பெருந்திறலறிவும் பேராத்
திண்மையும் உடைய வல்ல" (யசோ. 47)

என்று,

இதில் பேராத்திண்மை – உறுதியான உள்ளக்கிடக்கை. பெண்ணுள்ளம் பிறழ்ந்து கொண்டே இருப்பது என்ற கருத்து, வள்ளுவம் கூறும் 'மக்ளிர் மனம்போல வேறுபடும்' (அஉஉ). என்ற குறளின் ஒளிப்பதிவாம். மனவுறுதி மகளிர்க்கு இல்லை என்பதாம்.

இடுக்கண் வருங்கால் நகுக:

அபயமதி அபயருசி என்னும் இரட்டையரை மன்னன் ஆணையின் வண்ணம் பலிபீடத்தின் அருகில் நிறுத்திவைத்துச் சண்டதருமன் இரட்டையர்களே நீங்கள் சண்டமாரிக்குப் பலியாகப் போகின்றீர்கள். அதற்குமுன் மாரிதத்தனுகிய மன்னனை வாழ்த்துங்கள் என்ருன். அவர்கள் இருவரும், சிறிதும் அச்சமும் பதட்டமும் இன்றி,

" வையத்துயிர்களை வருத்தஞ் செய்யாது
அறவியல் மனத்தையாகி ஆருயிர்க்கருள்பரப்பி நீடுவாழ்க "
(யசோ. 60)

என வாழ்த்தினர்.

யாருக்கு அறவியல் மனமில்லையோ அவர்களிடம் அருளே யிராது என்பார் ஆரருள் மனத்தையாகி என்ருர். அருட்செல்வம் பூரியார்கண் இராது. (உசக) ஆதலால். இங்ஙனம் ஆழமும், அறிவுரையும் நிரம்பிய வாழ்த்தினை வழங்கி மலர்ந்தமுகத்துடன் இருக்கும் அவ்விருவரையும் மன்னன்கண்டு வியந்து,

" இடுக்கண்வந் துறவும் எண்ணு தெரிசுடர் விளக்கி னென்கொல்
நடுக்கமொன் றின்றி நம்பால் நகுபொருள் கூறுக "
(யசோ. 62)

எனக் கேட்கிருன்.

துன்பம் வந்துற்றபோதும் துளக்கம் சிறிதுமின்றிக் காற்றில்லா இடத்திலே விளக்கைப்போல அவர்களிருவரும் விளங்கினர் என்கின்ருன். இந்தக் கற்பனை,

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை,
அடுத்தூர்வது அஃதொப்பதில் " (சுஉக)

என்ற குறட்கருத்து உவமையும் ஒளியும் பெற்று விளங்குகிறது.

'எரிசுடர் விளக்கின்' என்ற உவமை ஆழ்ந்து சிந்தித்தற் குரியது. விளக்கு எண்ணெய் வற்றித் திரிகரிந்து அணையும்போது ஒளிமிக்கு அணையும். அங்ஙனமன்றி, எல்லாம் அமைந்து எரிகின்ற விளக்கு பேரொளி மிக்கு எரிவதுபோல அவர்களிருவரும் மலர்ச்சியுடன் இருந்தனர். அதனுலே வர இருக்கும் சாக்காட்டி னின்று தப்பினர் எனக் கதைப்போக்கையும் தழுவிச் சிந்திக்க வைக்கின்ருர் ஆசிரியர்.

அறவுரை கேட்க வினையகலும் :

அபயமதியையும் அபயருசியையும் நோக்கி அறவுரை அருளுக என அரசன் வேண்டுகின்றான். அவர்கள், எவ்வளவிற் கெவ்வளவு அறவுரைகளை நீ கேட்கின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு உன் வினையகலும். நன்ஞானம் ஊறும். வீடுபேறு எய்தலாம் என்பார்.

"எவ்வளவு இதனைக் கேட்பா ரிருவினை கழுவுநீரார்
அவ்வளவு அவருக்கு ஊற்றுச் செறித்துடன் உதிர்ப்பை
யாக்கும்" (யசோ. 70)

என்கின்றனர். இக்கவிதையின் நடை,

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" (கசசு)

என்ற வள்ளுவத்தின் வழிச் சென்றதாகும்.

வள்ளுவர் நல்லவை கேட்ட அளவிற்குப் பெருமைவரும் என்று மட்டும் கூறினர். இந்நூலாசிரியர் நல்லவை கேட்டல் வினைக்கழிவிற்கு ஏதுவாகும். வினைகழிய உண்மை ஞானமாகிற நன்ஞானம் ஊறும். அதனால் வீடுபேறுண்டாம் எனக் காரணகாரிய முறையில் அமைதி கூறினார். இது சிறந்த விளக்கமாகும்.

பாட்டும் பண்ணும் :

தமது முற்பிறப்பு வரலாற்றினை இரட்டையர் உணர்த்தும் போது, உச்சயினியில் அசோகன் என்னும் மன்னனுக்குப்பின் யசோதரன் ஆண்டுவந்தான். அவன் அமிர்தமதி என்பாளை மணந்து, தங்கடமைகளைவிட்டுக் காமத்தின் மூழ்கினன். ஆடல் மகளிர் பாடல்மகளிர் இவர்களுடைய களியாட்டத்திற் கலந்து பொழுது கழித்தான் என்பதை உணர்த்துகின்ற இரட்டையர்கள்,

"பாடலொடியைந்த பண்ணின் சுவைபருகி" (யசோ 88)

என்கின்றனர். இத்தொடர்,

"பண்என்னும் பாடற்கியை பின்றேல்" (ருஎகூ)

என்பதை நினைவூட்டுகிறது.

வளியிடைப்போழா முயக்கு

வள்ளுவர் 'வளியிடைப்போழப் படாஅ முயக்கு' (ககOஅ). என்பர். அது தலைவனும் தலைவியும் இறுகத்தழுவிக் கிடக்கும் போது இவர்கட்கிடையில் காற்றும் ஊடறுத்துப்போக இயலாது என்பதாம். அதனை மனத்திலே கொண்டு, இந்நூல் ஆசிரியர் புல்லி,

"நீங்கலர் ஒருவருள்புக் கிருவரு மொருவராகித்
தேங்கமிழ் அமளி தேம்பச் செறிந்தனர் திளைத்துவிள்ளார்"
(யசோ. 91)

என்றனர். இது வள்ளுவர் வாக்கிற்கு ஒரு விளக்கவுரை போல்வதாம்.

பாலொடுதேன்

யசோதரன் அமிர்தமதியைத் துய்த்தவகையை,

"மடங்கனிந் தினியநல்லாள் வனமுலைப்போக மெல்லாம்
அடங்கல னயர்ந்துதேன் வாயமிர்தமும் பருகி"ஞன்
(யசோ. 92)

என்கின்றார் ஆசிரியர். இதில்,

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (ககஉக)

என்ற குறளமுதங் கலந்துள்ளதைக் காணலாம். வள்ளுவர் வாயமுதின் தன்மை பாலுந்தேனுங் கலந்ததுபோல இனிப்பாயும் மணமாயும், உடலுரமும் உள்ளவுரமும் தருவதாயும் இருந்தது—என்றுமட்டும் கருதவைத்தார். இவ்வாசிரியர் புணர்வார் முதற்கண் முலைப்போகத்தழுந்தி, அல்குற் றடத்து அழுந்துவதற்குமுன் வாயமுது பருகினூற்றூன் பின்வரும் புணர்ச்சி நிறைவுற்றதாகும் என்ற காமநூற்கருத்தையும் காட்டுகிறூர்.

நிலைபெயராத நேர்மை

மன்னன், தன் மனைவி அட்டபங்கன் என்னும் யானைப் பாகனை விரும்பி, அவனல் அவள் அவமானப்படுதலை நேரிற் கண்டு அவர்கள் இருவரையும் தன் கைவாளால் வெட்ட எண்ணுகிறூன். அப்போது அவனறிவு இவளோ பெண்;

இவனோ பெண்ணைவிடப் பெரும்பேதை; நானோ வீரன்; என் கைவாளோ பகை மன்னர் முடியைச் சிதைப்பது; இதனைக் கொண்டு யான் இவர்களைக் கொல்லுதல் கூடாது என்கின்றான்.

"மாதரார் எனையரேனும் வதையினுக் குரியரல்லர்
பேதைதா னிவனும் பெண்ணின் அனையனே பிறிதும் ஒன்றுண்டு
எதிலார் மன்னர் சென்னி யிடுதலுக் குரிய வாளின்
தீதுசெய் சிறுபுன்சாதி சிதைத்தலும் திறமன்று என்றான்"
(*யசோ.* 124)

என்பது அச் செய்யுள். இந்த வரலாற்று கட்டுக்கோப்பிற்கு ஆசிரியர் மனத்திலிருந்து அடிகோலியது,

"ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழியெனப் படுவார்" (கூஅகூ)

என்ற பொது மறையேயாம். 'ஊழி பெயரினும்' என்றது ஏதிலான் பாற் கண்ட இல்லாள், தகுதியற்ற ஏவலனாகிய ஒருவனால் பரிபவப்படுதலைக் கண்ணால் கண்டபோது மன்னன் மனத்தில் ஒரு பெரிய – தடுக்கமுடியாத புயலே உருவாகியிருக்கும். அதனையும் அவன் தன் சான்றாண்மையாற்றடுத்துப் பெருமையை நிலைநாட்டினான் என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது.

காமத்தினிழிவு

மன்னன் யசோதரன் அந்நிலையில் மகளிர் போகத்தையே வெறுக்கிறான். காமத்தால் விளையுங் கேடுகளைக் கருதிப் பார்க்கிறான்.

"எண்ணமதலாமை பண்ணும்; இற்பிறப்பு இடிய நூறும்;
மண்ணியல் புகழை மாய்த்து வருபழி வளர்க்கும்; மானத்
திண்மையை உடைக்கும்; ஆண்மை திருவொடு சிதைக்கும், [சிந்தை
கண்ணொடு கலக்கும் மற்றிக் கடைப்படு காமம் என்றான்"
(*யசோ.* 126)

இதில், 'புகழை மாய்த்து வருபழி வளர்க்கும்' என்பது

"எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (கசடு)

"பகைபாவம் அச்சம் பழியென இந்நான்கு
இகவாவாம் இல்லிறப்பான் கண்" (கசசு)

என்பதனையும் தழுவி எழுந்த வரலாற்று ஓட்டமாம்.

வள்ளுவர், அறநூல் ஆக்கவந்தவராதலின் மிகச் சுருக்கமாகக் கூறிய காமக்கேடுகளைக் காப்பிய ஆசிரியராகிய இவர், மக்கள் மன இயல்பை ஒட்டிக் காரண காரிய முறைப்படி விளக்கிச் சொல்கின்றார்.

காமம் முதற்கண் இது நல்லது; இது கெட்டது என்று ஆயும் மன உணர்வைக் கெடுத்து நல்ல எண்ணமே தோன்றாத வண்ணம் செய்யும். நல்ல எண்ணங்கள் இல்லையாகவே அவற்றின் வழிச்செய்யப்படும் தீய செயல்களாள் உயர் குடிப்பிறப்பு அழியும். புகழ்மாயும்; பழி வளரும்; இத்தனையையும் பாதுகாத்து உயர் வளித்துவரும் உறுதியென்ற கோட்டையை உடைத்தெறியும். அடுத்து, ஆண்மையைத் தொலைக்கும்; செல்வத்தைச் சிறிது சிறிதாகத் தேய்த்தொழிக்கும். எப்போதும் என்செய்வோம் என்று மனங்கலங்கச் செய்யும்; கண்கலங்கச் செய்யும் என்கின்றார். இத்தனை விரிவுகளும் வள்ளுவர் கூறிய குறள் இரண்டனின்றும் விரிந்த கருத்தாக இருத்தலைக் காணலாம். ஆகவே இப்பாடல் அவ்விரு குறட்பாக்களுக்கும் விளக்கவுரைபோல அமைந்திருப்பதை அறியலாம்.

"ஆண்மை (திருவொடு) சிதைக்கும்;" என்பது, பிறன் மனைவியை நோக்காமை பேராண்மை (கசஅ) என்ற வள்ளுவர் வாக்கின் மறுதலையுணர்வாக. நோக்குவதால் ஆண்மை குன்றும்; வீரனும் உடலும் உள்ளமும் குழைந்து கரைந்து பிணியனாய்க் கோழையாவான் என்பதை விளக்கி நிற்பதாம்.

'திருவொடு சிதைக்கும்' என்றது ஓராடவன் உடல் வலிதொலைந்தாலும் பொருள்வலி எமக்கிருக்கிறது என்று எண்ணி இறுமாந்து காமங்காழ் கொளச் செய்வானாயினன், 'உன் ஆண்மைமட்டும் தொலையாது. ஆண்மை தொலையும்போதே உன் செல்வமும் தொலையும் என்பார் ஆண்மை திருவொடு சிதைக்கும் என ஒடுபுணர்த்து உடனிகழ் வினையாக முடித்தார்.

தன் மனைவியின் கூடா ஒழுக்கத்தைக் கண்ட யசோதர மன்னன், அரச வாழ்வையும், மாதரன்பையும் வெறுக்கும்

உள்ளத்தனுயினுன். மறுநாள் அரசவையைக் கூட்டினுன்; தன் மன எண்ணத்தை யாரும் குறிப்பாகவும் அறிய இயலாவாறு அரியணையில் அமர்ந்திருந்தான். அவைக்கு வரவேண்டிய அரசியற் சுற்றத்தார் அனைவரும் முறைப்படி வந்தனர். அமிர்த மதியும் வந்தாள்; அரசன் பக்கல் அரியணையில் இருந்தாள். என்ற வரலாற்றை நடத்திச் செல்கிற ஆசிரியர், மன்னன் 'மறைபுலப்படாமை' (யசோ.) யிருந்தான் என்கின்ருர். இது புறப் பகையை வெல்லும் அரசன் செவ்வியறிந்து செயலாற்றல் வேண்டும். (சஅச) காலங் கருதிக் காத்திருக்க வேண்டும்; (சஅரு) என்பதை விளக்கும் குறட் கருத்தை கொண்டு எழுந்ததாய். அப்பகை வெல்லுவதற்கும் காலங் கருதி யிருந்தால் இகல் வெல்லல்யார்க்கு எளிதாம் என்பதனையும் விளக்கி நிற்றலை உணரலாம்.

உயிர்க்கொலையை மறுத்தல்

யசோதரன் அவையைவிட்டு நீங்கித் தன் தாய் சந்திரமதி யிடம் செல்கின்ருன். அவள், மகனுடைய முகம் சோர்ந் திருத்தலைக் கண்டு வினவுகின்ருள். மன்னன் தீய கனவு கண்டதாகவும், அதனுல் மனங் கவல்வதாகவும் கூறுகின்ருன். தாய் சண்டமாரியை வழிபட்டால் கவலையகலும்; தீக்கனுவின் தீமையும் தொலையும்; ஆதலால், சண்டமாரிக்கு உயிர்ப்பலி யூட்டி வழிபடுக என்ருள். மன்னன் உயிர்ப்பலியிட ஒப்பாது இச்செயல் அரசர்க்கு உரியதன்று என மறுத்துரைக்கின்றவன்

> "என்னுயிர் நீத்தவேனும் யானுயிர்க் குறுதிசூழா(து)
> என்னுயிர்க் கரணம் நாடி யானுயிர்க் கிறுதி செய்யின்
> என்னை ? யிவ்வுலகு காவல்" (யசோ. 139)

என்கின்ருன். 'தன்னைக் கொல்லவரின் பசுவையும் கொல்லலாம்' என்பது பழமொழி. தன்னுயிரையே அழிக்கவரினும் பிறவுயிர்களைக் கொல்லலாகாது என்பது அறநெறி. அரசனே உயிர்களைக் காக்கப் பிறந்தவன்; அவன் எக்காரணத்தைக் கொண்டும் பிற உயிர்களைக் கொல்லுதல் ஆகாது என்ற அறமுரைக்கின்ற அரசன் என்னுயிரையே பிரிக்கவரினும், யான் அவ்வுயிர்கட்கு நன்மை பயக்கும் உறுதிகளை யாய்ந்து செய்யாது, என்னுயிர்க்குப் பாதுகாப்பை விரும்பி, அவ்வுயிர்களைக் கொல்லேன் என்கின்ருன்.

இப்பகுதி

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை" (௩௨௭)

என்ற குறளைப் பின்னணியில் வைத்து எழுந்ததாகும்.

இக் குறட்குப் பரிமேலழகர், காளிங்கர், மணக்குடவர் முதலியோர் தன்னைக் கொல்ல வருவதாயினும் பிறவுயிர்களைக் கொல்லுதல் ஆகாதென்றே உரை காண்கின்றனர்.

பருதியார்மட்டும், உயிர்ப்பலி முதலான சாந்திகள் செய்யாவிடின் கழிவதாயினும் தன்னுயிர் வாழப் பிறவுயிரைக் கொல்லலாகாது என உரை காண்பர், இவ்வுரை இக்காப்பியச் செய்யுளையுட்கொண்டு எழுந்ததாகும்.

நீப்பினும் என்பது நீக்கினும் என்னும் பொருள் பயக்கும் பிறவினை வினையெச்சம். அது நீங்கினும் என்ற தன்வினை வினையெச்சமாகப் பொருள்கொள்ளக்கிடத்தல் யாங்ஙனம்? என்ற ஐயம் பிறக்கின்றது. அது கருதிப் பரிமேலழகர் முதலியோர் 'உயிரைப் பிரித்தாயினும்' என உரைகண்டனர்.

இவ்வுரையே மற்றுமோர் உட்கிடையை உடைத்தாயுள்ளது. தன்னைக் கொன்றாலும் தான் பிறவுயிர்களைக் கொல்லலாகாது எனின் அது

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும்"

என்பதனையும் கருதச்செய்வதாய், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு (௯௮௭) என்ற குறட்பாவை நினைப்பிக்கின்றது. சிறந்தன கொள்க,

நலத்தில் நாரின்மை

மற்றும், தாயே! உயிரைக் கொன்று தானுயிர் வாழ்தல் உன்குலத்து மன்னர்கள் செய்த தொழிலன்றாகவும், நினக்கு யாங்ஙனம் இவ் எண்ணம் உண்டாயிற்று என வினவுகின்றவன்.

"அன்னை! நின்குலத்துள்ளோர்கள், கொன்றுஉயிர் கன்றும்
உள்ளக் கொடுமைசெய் தொழிலரல்லர்" (யசோ. 141)

என்று இடித்துரை வழங்குகின்றான். இது நின்குலமுதல்வர் களுக்கு இல்லாத குணம் நினக்கு எப்படி உண்டாயிற்று

'குலத்தளவே யாகும்குணம்' வித்தில் இல்லாதது மரத்தில் விளையுமோ என்பன பழமொழிகளாயிற்றே.

" நலத்தின் கண்நாரின்மை தோன்றின்,
குலத்தின்கண் ஐயப்படும் " (கூ௫அ)

என்பது வள்ளுவமாதலின் இங்ஙனம் வினவினன் என்று காப்பியம் சொல்கிறது. அது தன் தாயின் பண்பிற்கு ஏலாமையைக் கருதி, உயர்ந்த குலத்தில், உயிர்க்கொலை புரியாத மரபில் தோன்றிய தாய்க்கும் இத்தகைய எண்ணம் தோன்றுமாயின் இது வினையின் விளைவே என எண்ணுகின்றவன்,

" வினைகளின் விளைவை யாவர் விலக்குநர் என்றுநின்றான் "
(யசோ. 143)

இப்பகுதி

" வினைப்பகை வீயாது பின்சென்று அடும் " (உ0எ)

என்ற திருக்குறள் தந்த சிந்தனையாகும். இதனையே மீண்டும் 'வெல்வதற்கரியதால் வினையின் பயன்' எனல் காண்க. (யசோ. 170).

மாவாற் கோழியுருவைச் செய்து பலியிட்ட பாவத்தால், மன்னனும், அவன் தாயும் பலபிறவி எடுத்தனர் என்று வரலாற்றைக் கொண்டு செல்கின்ற ஆசிரியர், ஆடாக இருந்த சந்திரமதி கலிங்க நாட்டில் எருமையாகப் பிறந்தாள் என்கின் றவர், கலிங்கச் சிறப்பாக

" நந்து பல்பொருள் நாடு கலிங்கத்து " (யசோ. 205)

என்கின்றார். நந்துதல் – வளர்தல். பல பொருளும் வளர்கின்ற நாடு கலிங்கம் என்பதாம். இது,

" பெரும்பொருளாற் பெட்டக்க தாகியருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு " (எ௩உ)

என்ற குறட்பாவின் சுருக்கமாகும்.

அங்ஙனமே, உச்சயினி நகரைக் குறிக்கும்.

" அணிகொளுஞ்சயினி " (யசோ. 206)

என்னும் தொடரில்,

" அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து " (எ௫அ)

என்னும் குறட்பாவின் சொல்லாட்சி அமைந்திருப்பதைக் காணலாம்.

வினை, யாரை விட்டது?

அமிர்தமதி அரசன் மகளாகப் பிறந்து, அரசனுக்கே வாழ்க்கைப்பட்டு அரசபோகத்தில் இருந்தாலும், அவளை விதி விடவில்லை. கீழ் மகனாகிய அட்டபங்கனிடம் அடியும் உதையும் பெறவைத்தது என்னும் ஆசிரியர்

" உம்மை வல்வினையாலுணர் வொன்றிலாள்
இம்மைச் செய்த வினைப்பயனே இவை
எம்மையும் இனி நின்றிடும் ; இவ்வினை
பொய்மை யன்று ; இவள்பொன்றினும் பொன்றல "

(யசோ. 217)

என்கின்றார். இத்தகைய தீவினை செயற்கு, அவள் முன்னை வினையால் உணர்வழிந்தது காரணம். இப்பிறப்பில் இந்தத் தீவினையைச் செய்வதால் எல்லாப் பிறப்பின் கண்ணும் பழியும் இவளைவிட்டு நீங்கா நிலை நிற்கும் என்கின்றார். இது,

" நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும் " (௩எ௩)

தன்முயற்சியால் ஊழ்வலியை மாற்றும் வகையில் நூலறிவைப் பெற்றாலும், ஊழ்வழி நிற்கும் உண்மையறிவே மிகும் என்ற வள்ளுவத்தை விளக்க வந்த வரலாறாகும்.

களை களைதல்

யசோதரன், அமிர்தமதியால் நஞ்சருத்திக் கொல்லப்பட, அவன் மகன் யசோமதி முடிசூடினன். அரசாண்டு வந்தான். அக்காலையில் சண்டகருமன் ஒருநாள் வேடர்களாகிய கொலைஞர் களையும், அவர்களையொத்த தீய சாதியினரையும் கொன்றனன் என்பார்.

" வளமலர் வனத்துள் தீயமனிதரோ டனையசாதி களைபவன் "

(யசோ. 229)

என்கின்றார். இதிற் 'களைபவன்' என்ற ஆட்சியைக் கேட்டபோதே நமக்கு,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்ட தனொடு நேர்" (ருரு0)

என்ற திருக்குறள் நினைவுக்கு வரும். இதனால் வேடர் முதலிய கொடியோர் நாட்டிலுள்ள நன்மக்களிடையே களை போல்வார் என்பதும் அவர்களைக் களைதல் களை பிடுங்குதல் போன்றது என்பதும், அது தீவினையாகாது நல்வினையேயாம் என்பதும் ஆய செய்திகளை யுணர்த்துவதாம்.

வேட்டையாடச் சென்ற சண்டகருமன், வழியிலே அசும்பன முனிவரைக் காண்கின்றான். அவர் நன்ஞானம் முதலிய ஐந்தன் இயல்புகளையும் பயனையும் தொகுத்தும் விரித்தும் சொல்கின்றார். அவற்றுள் நல்லொழுக்கம் எனப்படுவது பொய், கொலை, களவு, கள், காமம் ஆகிய ஐந்து பாவங்களையும் அகற்றுதலே. பொய் முதலிய ஐந்தையும் அகற்றி நல்லொழுக் கத்தின் நின்றால் எய்தும் பயன் இவை இவையென வகுப்பவன்,

"கொலையின் தின்மை கூறிற்குவலயத் திறைமை செய்யும்"
(யசோ. 242)

என்கின்றான். இதன் கருத்து கொல்லாமையின் பயன் மண்ணுலகில் மன்னனாக வாழவைக்கும் என்பதாம். இது

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்" (உசுO)

என்ற குறளின் சுருக்கக் குறிப்பாகும். உயிர்கள் கைகூப்பி அன்புடன் வணங்குவது தங்களைப் பாதுகாக்கும் அரசனை. அரசன் குடிகளை வருத்தாமலும் கொடுத்தும் எடுத்தும் பாதுகாத்து வரின் அவனை உயிர்கள் வணங்கும். அங்ஙனமே பிறவுயிர்களைக் கொன்று உடலுயிர் வேறு செய்யாமலும், உயிர் பிரிந்த உடலை உண்ணாமலும் ஒருவன் ஒழுகுவானாயின் அவனை இறை என்றே எண்ணி உயிர்கள் தொழும் என்பதாம்.

பரிமேலழகர் முதலான உரையாசிரியர்கள் கொலையும் புலை யுணவும் புரியாதவன் தேவரின் மிக்கானதலின் அவனைக் கைகூப்பித் தொழும் என உரைகண்டனர். இந்நூலாசிரியர் 'குவலயத்து இறைமை செய்யும்' என்றனர். அதாவது அவனிக்கு அரசாக்குதல். அரசின் கடமை உயிர்களைப் பாதுகாத்தல். ஆகவே தெய்வமாக்கி வணங்கும் என உரை

காணுமல், அன்பால் அனைவரையும் அனைத்து நிற்றலின் தலைமையை நல்கும் என்றது எத்துணைச் சிறந்த கருத்தாகும்.

அடுத்த பகுதி

" மலைதலில் வாய்மை யார்க்கும் வாய்மொழி
மதிப்பை ஆக்கும் " (யசோ, 243)

என்பது. வாய்மை சமுதாயத்தில் மதிப்பை விளைவிக்கும் என்பது இதன் கருத்து. ஆனல் வாய்மை யாருக்கும் தீமையுண்டாக்காத தாக இருத்தல் வேண்டும் என்பார் மலைதலில் வாய்மை என்றுர். இங்ஙனம் ஏற்ற அடைகொடுத்து வாய்மையைத் தெரிவிக்கத் துணை செய்தது.

" வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் " (உகக)

என்ற திருவள்ளுவமேயாம். திருவள்ளுவம் சொல்கிறது; வாய்மை என்பது ஓரளவு சிறிய தீமையையும் விளைவியாத ஒன்றே என்று. ஆனல் வள்ளுவம் யாதொன்றும் என அஃறிணை வாய்பட்டால் வகுத்தது யாதொன்றும் வன்பதை யாதொரு பொருளுக்கும் தீமை தோன்ருவண்ணம் சொல்லுக எனப் பொருள் காணவும் தூண்டுகிறது.

யசோதர காப்பியமோ யார்க்கும் என உயர்திணைமேல் வைத்துப் பயனையும் உடன் கூறியது.

கள்ளாமை

அடுத்துக் கள்ளாமையின் சிறப்பைத் தெரிவிக்கின்ற யசோதரகாப்பியம் கள்ளாமை விலைமதிப்பற்ற அருளுடைமை யான் விளையும் மாட்சியை விளைவிக்கும் என்கிறது (யசோ. 243) இது,

" களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும் " (உஅச)

என்ற திருக்குறளின் எதிர் ஒலியாகும். வள்ளுவம் களவின்கண் வைத்த ஆசை பயனளிக்கும் காலத்தில் எல்லையற்ற துன்பத்தைத் தரும் என்கின்றது. அதன் மறுதலையாகக் கள்ளாமை விலைமதிக்க இயலாத பேருராட்சியின் மாட்சியை விளைவிக்கும் என்றது யசோதரகாப்பியம்.

பேராண்மை

பிறன்மனை நோக்காத பேராண்மை பெருமை மனவுறுதி உடல்வலிமை அனைத்தையும் அளிக்கும் என்கின்றது காப்பியம்.

"உலைதலில் பெருமை திட்பம் உறுவலி
யொழிந்தது ஈயும்" (யசோ. 243)

என்பது அப்பகுதி பிறன்மனை நயத்தல் பெரும் பாதகம் ஆதலின் அதனைச் சுட்டிக்கூறுது ஒழிந்தது என்றதாற் குறிப்பித்த சிறப்பு மிக நயமானது. இப்பகுதிக்கு அடியான திருக்குறள்

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ! ஆன்ற ஒழுக்கு" (கஙஅ)

என்பதாம். இதில் பேராண்மை என்பதால் உறுவலி திட்பம் என்பவற்றையும் அறனொன்றோ என்பதனல் பெருமையினையும் மனத்திற் கொண்டு அமைத்தமை கண்டு இன்புறுதற்குரியது.

நல்லவிரதம்

ஏனைய உயிர்களைக் காட்டிலும் மக்களுக்குள்ள ஏற்றம் மனனுணர்வைப் பெற்றிருப்பதொன்றே. அதனைக் கொண்டு மக்கள் தன்னைப்போலவே பிறவுயிர்களுக்கும் நோயுண்டு; பசியுண்டு; தாகமுண்டு; இன்பமும் துன்பமும் உண்டு என்று அறிகின்றனர். செம்மையையும், தயவையும் துணையாகக் கொண்டு, பிறவுயிர்கள் வருந்துவதைக் கண்டால் அருளைப் பொழிகின்ற கண்ணேடு, தன்னுயிர்க்கு வந்த வருத்தம்போல எண்ணி, உள்ளம் உருகுவர். அதுவே அவர்கள் செய்யக்கூடிய ஒப்பற்ற தவம். விரதம் எல்லாம் என்னுங் கருத்தைக் காப்பியம்,

"ஆருயிர் வருத்தங்கண்டால் அருள்பெரி தொழுகு கண்ணல்
ஒருயிர்போல நெஞ்சத்துருகி நைந்துய்ய நிற்றல்
வாரியின் வதங்கட்கெல்லாம் அரசநல்வதமாம் அதற்கே
சார்துணையாகக் கொள்க தகவுமத் தயவும் என்ருன்"
(யசோ. 247)

என்ற கவிதையால் கூறுகின்றது. இது சண்டகருமன், கொலையைத் தவிர மற்ற பாவகன்மங்களை ஒழித்து நல்லொழுக்கத்துடன் வாழ்வேன் என்றபோது கூறியதாம்.

மிக்க விரிவும் விளக்கமும் உடைய இவ்வுரை

> **"அறிவினு னுகுவ துண்டோ பிறிதினோய்**
> **தந்நோய்போற் போற்ருக் கடை"** (௩௧௫)

என்ற குறள் வித்திற் ருேன்றிய கோளி யாலமாகும்.

முற்ற வாழ்ந்தார் யாவர்

மகுட மன்னன் ஒருவன் : வழி வழியாக வந்த வையத்தாட்சி யுடையவன். பலரைக் கொன்று வென்று வாகை சூடியவன் அவனுங் கூட ஆயிரமாண்டா இருந்தான்; இறந்து தானே போனுன். அவன் பலகாலம் கொன்ற பாவந்தீரப் படுநரகில் வீழ்ந்து வருந்தினன் என்றுதானே கேள்விப் படுகிருேம் என்று யாக்கை நிலையாமையை உணர்த்தும் போது

> **"நிலையிலா உடம்பு என்வாழ்க்கை"** (யசோ. 249)

என்கின்ருர் முனிவர். இது

> **"நெருநெல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
> **பெருமை யுடைத்துஇவ் வுலகு"** (௩௩௬)

என வள்ளுவர் கவிதையைச் சுவைபடக் கூறியதன் மாற்ருெலியே யாகும்.

நேற்றிருந்தவனை இன்று நாம் காணகில்லேம் என்ற பெருமைதான். இவ்வுலகத்திற்கு என்ற குறட்பாவின் கருத்தை இன்னும் சுருக்கி 'நிலையிலா உடம்பு' என்றனர் காப்பியக் கவிஞர். மேலும் அப்பாடலில் வரும் 'சில பகலன்றி நின்ருர் சிலர் இவணில்லை கண்டாய்' என்பது இக்கருத்தை நன்கு விளக்கு வதாம்.

> **"பிறவி முந்நீர்"** (யசோ. 249)

என்றது

> **"பிறவிப் பெருங்கடல்"** (௧௦)

என்பதன் நிழலே.

வினை விடாது : *யசோதரன் தாய்சொல்லைத் தட்டாமல் மாவாற்கோழி செய்து கொன்று விட்டான். அதனுல் தாயும், மகனும் எத்தனை பிறவிகள் எடுத்தனர்; வருந்தினர்; வினை, எத்தனைப் பிறவி எடுத்து எந்த நாட்டினில் சென்று ஒளித்தாலும்*

வீயாது பின் சென்றடும்'' என்பதையல்லவா உட்கொண்டு விளங்குகிறது. அக்குறளைக் கேளுங்கள்,

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது பின்சென் றடும்" (உ0அ)

என்பதும்,

"வினைப்பகை, வீயாது பின்சென் றடும்" (உ0எ)

என்பதும் ஆம்.

வேண்டியதை வேண்டியவாறடையலாம்

யசோதரன் மகனான யசோமதிமன்னன் வேட்டை மேற் சென்றபோது சுதந்த முனிவரைக் காட்டில் எதிர்ப்படுகிறான். முனிவர் அசைவற்றுத் தவம் புரிந்துகொண்டிருந்தார். அரசனுக்கு ஆசியுரை சொல்லாமல் இருக்கும் அவரைக் கண்டதும் ஓர்வகை யருவெறுப்பு உண்டாயது. அதனால் அவனுக்குச் சினமுண்டது. அரசன் முனிவரைக் கொல்வதற்காக ஐந்நூறு நாய்களை அவர் மேல் ஏவினான். நாய்களும் முனிவரைக் கண்டு முகர்ந்து திரும்பின. இதனைக்கண்ட அரசன் சின முண்டு, அவரை வெட்டத் தன் உடைவாளை யுருவினான். இதனைக் கண்ட கலியாணமித்திரன் என்னும் வணிகத்தோழன் அரசனைத் தடுத்து நிறுத்தி, முனிவரைப்பற்றிய சிறப்புக்களை யறிவித்தான். அதில் ஒன்று இப்பாடல்

"ஆகுமெனின் ஆகுமிவர் அழிகவெனின் அழியும்
மேகம் இவண் வருக எனின் வருமதுவும் விதியின்"
(யசோ. 269)

என்பது.

இதன் கருத்து தவச்செல்வர்களாகிய முனிவர்கள் நினைத்தால் எண்ணிய எண்ணியபடியே எய்தும். அவர்களால் ஆகாத செயலே இல்லை என்பது. இது

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்'' (உசுரு)

என்ற வள்ளுவத்தின் உள்ளக் குறிப்பாகும்.

மனத்தின் ஆற்றலும், ஆசையும் வரையறைக்குட்பட்டதன்று. இன்னகாலத்து இன்னதைத்தான் வேண்டும் எனத் துணிய

யாரானும் முடியாது. ஆதலால் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம் எனப் பொதுவகையாற் பொருள்மேல் வைத்துக் கூறினர் வள்ளுவர். அங்ஙனமே யசோதர காப்பியமுடையாரும், ஆக்கம் அழிவு என்ற இரண்டு செயல்களைத்தான் மனம் விரும்பும். தேவையான பொருள்கள் ஆதலை வேண்டும்; தேவை யற்றனவும், இடையூறனவும், அழிதலை வேண்டும். இந்த இரண்டும் தவத்தான் விளையும் என்றார். இதனால், குறட்கருத் தோட்டம் வரலாற்றிற் கொண்டு செலுத்தப்பெறுதலைக் காணலாம்.

இன்பத்துன்பங்களின் ஒப்பு

வள்ளுவர் கூறுகிறார்: 'எல்லாம் ஊழ்வயத்தான் உறுவது: நன்றும் தீதும் பிறர்தரவாரா என்ற உறுதி ஒருவற்கிருக்குமாயின், நன்று ஆங்கால் நல்லனவாகக் காணுமவன் தீதாகுங்கால் தீயனவாகக் கருதான். அனைத்தும் வினைவழி என விடுப்பன்' என்று.

"நன்றுங்கால் நல்லவாக் காண்பவன் அன்றுங்கால்
அல்லற் படுவ தெவன்" (௩எசு)

என்பது அக்குறள். இக்கருத்தே காப்பியத்து எடுத்துக் காட்டுடன் இலக்கிய நயம் பொலிய,

"இந்திரர்கள் வந்தடி பணிந்தருள் கெனினும்
சிந்தையிலர் வெந்துயர்கள் எண்ணிலகள் செயினும்
தந்தம்வினை என்றும் நமர்பிறர்எனவும் நினையார்
அந்தரம் இகந்து அருள்தவத்தரசர் தாரோய்" (யசோ. 271)

எனக் கலியாணமித்திரன் என்னும் வணிகன் அரசற்கு அறிவுறுக்கும் உரையாக மலர்கிறது.

இவ்வண்ணம் முனிவர் பெருமையைக் கூறிய வணிகன் கலியாண மித்திரன் அரசனை நோக்கி 'முனிவரைப் பணிக' எனப் பணிக்கின்றவன்.

"இவ்வுலகில் எவ்வுயிரும் எம்முயிரின்நேர் என்று
அவ்விய மகன்று அருள்சுரந்து உயிர்வளர்க்கும்
செவ்விமையின் நின்றவர்" (யசோ. 272)

என முனிவரை அறிமுகப்படுத்துகின்றான். இதில் மன்னு யிரைத் தன்னுயிர்போற் பேணும் அருட்டிறம் பேசப்படுகிறது.

இது,

" பிறிதின் நோய் தந்நோய்போற் போற்றல்வேண்டும் "
(௩௧௫)

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் (௩௧௮)

என்ற குறட் கருத்துக்களைக் குறிப்பாக விளக்கி நிற்கின்றது.

இருவகைப் பற்று

மக்கள், உடம்பை யான் என்றும், புறப்பொருள்களாகிய மாடு வீடு முதலியவற்றை எனது என்றும் கொண்டு, இறுகப்பற்றி நின்று, அவற்றைத் துய்த்தலால் மேன்மேலும் வினைகளை ஈட்டிக் கொள்பவர்கள். முனிவரோ அகப்பற்று புறப்பற்றுக்களையும் இன்பத் துன்பங்களையும் அறுத்து வினைகளை வீட்டி ஒளிமேனி படைத்த உத்தமர்கள் என்று மேலும் கூறுகின்றவன்,

" யானும்அலது ; எனதும்அலது ;
மானமுடை மாதவன் " (யசோ. 273)

என்கின்றான். இது,

" யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் " (௩௪௬)

என்ற குறட்பாவின் வளர்ச்சியாகும். வானோர் உலகம் – விண். வானோர்க்கு உயர்ந்த உலகம் – விண்ணோரும் எய்த இயலாததான இன்ப உலகமாகிய வீடு. வானோர் உலகில் வாழும் உயிர்களாகிய தேவர்கள் ஒளியொடு கூடிய உருவையுடையவர்கள். வானோர்க்கு உயர்ந்த உலகில் வாழ்பவர்கள் ஒளியேயான உருவுடையவர்கள். அவர்கட்கு நுகர்ச்சிக்கு ஏதுவாகிய உறுப்பு வேறுபாடுகளோடு கூடிய உரு இல்லை. இன்ப அன்பு வடிவினர். இக்கருத்தையே யசோதர காப்பியம் 'ஞானஒளி நகை செய்குணம் நாளும் அணிகின்றவர் " என்கின்றது.

அறிவு ஊறும்நீர் போல்வதா ?

மன்னனாகிய யசோமதி சுதத்தனால் மனம், தெளிவிக்கப் பெற்று, தான் செய்த தீமைகளுக்காக வருந்துகிறான். அப்போது முனிவர் அவனை நோக்கி அறிவில்லாக் காலத்தே யறியாத

செயல்களைச் செய்தோமாயினும், அறிவு ஊறிய காலத்தே தீயசெயல்களைச் செய்யாமல்விலகி நிற்கவேண்டும் என்று தேறுதல் கூறுகின்றவர்,

"அறிவிலராகிய காலத் தறிவில செய்த எல்லாம்
நெறியினில் அறிவ தூற நின்றனர் விலகி நிற்பர்"
(யசோ. 308)

என்கின்றார். இதில் வரும் 'அறிவு ஊற' என்ற சொற்றொடர் 'கற்றனைத் தூறும் அறிவு' என்றதன் கடைப்பிடியாகும். மனம் ஒரு மலர். அம்மலர் ஒழுக்க நெறியால் மலரும்போது அறிவு என்னும் தேன் ஊற நிற்கும் என்ற அமைதியை நினைவூட்டிக் கதையைச் சிறப்பிக்கின்றது.

இருள்சேர் இருவினைகள்

மன்னனுக்கு அறவுரை வழங்குகின்ற சுதத்தமுனிவன்,

"இருள்புரி வினைகள் சேரா இறைவனது அறத்தைஎய்தின்
மருள்செய வருவதுண்டோ" (யசோ. 309)

என்கின்றான்.

இருள்புரி வினைகள் — இருளாகிய அறியாமையாற் செய்யப் படுகின்ற வினைகள். நல்வினை தீவினையிரண்டுமே அறியாமை யான் விளைவன; ஆதலால், அவையிரண்டும் இறைவன் அருளிச் செய்த அறநெறியைப் பின்பற்ற வாரா; ஞான ஒளியுண்டாகும். மருள் இன்று; என்கின்றான்.

இக்கருத்தையும், சொற்றொடரையும் கேட்டவுடனேயே நம்மனத்து ஊறுவது,

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (ரு)

என்னும் குறள் தேனும். வள்ளுவர் 'பொருள்சேர் புகழ்' என்றதைக் காப்பியநூலார் இறைவனதறம் என்றார் அவ்வளவே. இறைவன் அருளிய அறத்துள் இறைவனது புகழை எண்ணு தலும் ஓரறமாக எண்ணப்படுதலைக் காணலாம்.

மாவினாற் செய்த கோழியைத் தெய்வப்பலியாக இடுதலும் பெரிய கொலைப் பாவமாகிப் பல பிறவிகளைத் தந்து வருத்தியதால், மாரிதத்த மன்னன் துறவு பூண்டு நற்கதி பெற்றனன் என்று வரலாறு முடிகிறது.

பிற்சேர்க்கை

குறள் எண்.	கா.	சிலம்பு வரி
3	10	204
35	10	15
	10	16
37	பதி.	
41	14	11
55	பதி.	87–89
	9	60–64
	23	வெண்பா
56	பதி.	56
57	18	100
66	2	57–60
77	பதி.	55
	20	50
86	22	133, 134
126	10	17
127	26	159
133	10	241
134	13	38, 39
157	10	236–238
169	8	59
	15	91–93
172	23	128
196	19	13, 14
208	பதி.	57
211	1	24
	21	36–38
231	1	32, 33
260	11	158, 159
276	5	128
296	11	158, 159
297	10	15
300	11	158, 159
315	19	15

குறள் எண்.	கா.	சிலம்பு வரி
319	20	3, 4
355	10	17
363	10	168
372	பதி.	44, 45
376	10	172, 173
380	பதி.	57
	10	2–8
390	9	30
402	26	3–5
423	10	17
541	பதி.	28, 29
543	28	207 உரை
551	26	18
555	19	15
619	10	2–8
777	1	36
911	9	67–71
912	9	69–71
917	9	69–71
918	9	69–71
920	பதி.	14–20
	9	69–71
1033	5	43, 44
1034	10	149, 150
1035	10	149, 150
1043	9	69–71
1044	9	69–71
1047	9	69–71
1082	14	160
1101	2	73, 74
1105	15	198
1311	16	63

குறள் எண்.	சீவகசிந்தாமணி எண்.	குறள் எண்.	சீவகசிந்தாமணி எண்.
4	3	223	36
	3017		2995
5	3020	226	2823
7	511		2927
8	380	231	2977
9	1436	233	2107
	1467	247	1549
	1468	261	1546
	1469	262	380
	3019	265	2459
	3029		2555
	3020		2986
10	380	269	376
	3019	280	1427
17	1387		2821
29	2107	290	2870
32	2935	296	2869
36	2619	297	2911
	2620	307	250
	2621	316	3107
38	381	318	3107
55	1598	322	2925
59	1916	326	2787
70	2459	334	2611
	2567		2617
81	2319	335	377
110	245	336	377
126	1894	338	1097
	2824	339	1097
127	1069		1393
145	2769	343	373
148	2821		1546
173	2985	344	96
184	1069	345	1426
207	511	348	1546
208	287	352	375
	3095	355	1431
211	500		1436
	1546 உரை		2845
	1412	359	375
216	93		1221
221	36	361	409

குறள் எண்.	சிந்தாமணி எண்.
361	3106
363	2983
370	3105
376	2315
	2316
379	1167
380	215
	2314
	2557
384	2261
390	2906
418	2718
	2916
422	2186
428	1431
	1435
	2845
432	198
440	2910
445	1921
	2916
450	240
468	770
481	1927
484	1927
487	1920
490	1920
495	446
498	814
524	1921
528	1921
544	2911
545	2534
549	2911
554	2534
559	255
560	255
568	215
581	233
588	1921
589	1829
593	486
594	2556

குறள் எண்.	சிந்தாமணி எண்.
607	496
618	495
621	509
624	2784
633	1920
634	206
635	2906
638	214
639	1552
678	1920
683	2916
684	2916
706	192
	1166
731	77
732	64
751	1922
752	1922
	2535
754	497
	1920
	2872
758	776
759	759
	1922
765	1114
771	1114
775	2258
	2317
780	2240
782	1416
788	10
822	215
828	1891
838	53
849	378
850	1907
889	1894
898	2789
899	1423
905	2319
909	215
911	372

குறள் எண்.	சிந்தாமணி எண்.	குறள் எண்.	சிந்தாமணி எண்.
913	372	1104	1962
914	372		1966
919	98		1965
971	248	1105	1042
974	41	1120	1531
978	53		2454
979	53	1121	1042
1030	498		1044
1046	1922	1123	1508
1047	2535	1126	1508
1081	1308	1127	72
	1967		1508
1082	1473	1134	2796
1083	2458	1137	196
1085	1969		998
1090	1485		2796
1091	167	1159	998
	1068		1962
	1962		1966
	1965		1965
	1967	1164	2505
1092	1485	1191	192
1094	1572		2089
1095	1306		1260
	1572		2089
1097	1485		1510
1098	1572	1196	11
1099	1068	1207	1962
1100	1470	1281	1001
	1471	1319	2508
	1485	1320	2506
1102	1962	1326	3123
1104	998		

குறள் எண்.	கா.	மணிமேகலை வரி	குறள் எண்.	கா.	மணிமேகலை எண்.
10	11	23	44	17	1
18	10	72	55	15	77–80
33	16	113		22	57–61
36	22	135-138		18	101, 102
	25	49, 50	73	25	170

குறள் எண்.	கா.	மணிமேகலை எண்.	குறள் எண்.	கா.	மணிமேகலை எண்.
85	13	114, 115	360	30	252, 253
87	17	415	407	6	47
91	5	63	410	13	61, 62
134	13	25, 26	418	9	60
142	11	114	422	18	134, 135
211	28	160, 161	467	19	4, 5
213	14	40-44	543	22	208, 209
219	14	70–72	549	23	11, 12
228	14	44, 45	559	1	33, 34
246	10	7, 8		7	8
266	7	14	576	6	47
284	30	63, 64	698	19	128
300	1	10	918	6	135
316	3	74, 75	957	6	1–4
		உரை	1007	14	77
317	3	74, 75	1014	11	78
		(பரி–உரை–மேற்)	1042	11	80
339	16	86, 87	1043	11	76–81
341	2	66	1058	14	40–43
349	2	67	1311	7	50

குறள் எண்.	வளையாபதி எண்.	குறள் எண்.	வளையாபதி எண்.
5	கடவுள் வாழ்த்து	149	15
21	21	182	16
22	37	183	16
35	16	184	16
36	16	223	17
37	16	241	20
38	16	242	19
	32		20
50	14	245	19
56	7	247	39
57	9	251	16
59	7	256	21
60	12	259	17
126	25	261	24
127	13	262	25
141	17	265	46
146	15	281	17
	17	284	31
148	14	295	32

குறள் எண்.	வளையாபதி எண்.	குறள் எண்.	வளையாபதி எண்.
303	23	453	16
318	22	454	16
321	17	460	16
	34	641	13
323	34	642	13
324	34	644	13
328	17	751	47
329	22	752	37
333	35		48
	37		65
335	40	791	17
337	36	809	19
345	42	822	8
347	43	823	49
348	37	909	30
351	25	911	11
402	12	913	11
404	12	917	11
432	19	1044	37
434	23	1046	65
452	16		

குறள் எண்.	குண்டலகேசி எண்.	குறள் எண்.	குண்டலகேசி எண்.
19	18	377	18
331	7	379	18
334	10	459	3

குறள் எண்.	சூளாமணி எண்.	குறள் எண்.	சூளாமணி எண்.
3	காப்பு	90	166
	187	138	1997
	188	155	262
4	காப்பு	202	184
5	காப்பு	207	197
6	396	223	784
7	காப்பு	226	273
10	காப்பு		1998
18	212		1999
29	191	233	776

குறள் எண்.	சூளாமணி எண்.	குறள் எண்.	சூளாமணி எண்.
247	2082	541	52
262	2005	544	266
265	1667	548	283
	1843	550	140
267	209	553	266
278	210	554	265
303	54	557	264
324	2003	620	668
331	1847	634	58
336	1848		1854
350	2074		1861
352	203	638	58
354	201		1861
356	188	644	308
	2070	645	308
380	358	674	643
381	300	681	108
385	626	682	427
386	102		564
	275	686	427
387	67		564
	139		629
	297	754	54
388	267	775	1280
	269	793	98
389	69	879	644
	112	889	645
410	276	894	252
431	627	969	1196
441	57	980	3
	254	1003	161
445	237	1004	161
	242	1081	1017
	249	1099	991
	252	1102	991
	1862	1110	65
446	235		148
447	58	1137	83
487	666	1227	1112
506	647	1228	1033
539	628		

குறள் எண்.	நீலகேசி எண்.	குறள் எண்.	நீலகேசி எண்.
3	3	121	107
4	கடவுள் வாழ்த்து	151	33
8	கடவுள் வாழ்த்து	202	184
26	156	251	163
34	275		251
72	205	252	163
256	327	345	282
	332	370	40
269	154	819	253
272	244		254
278	244	850	349
298	278	880	886
311	181	914	244
312	181	926	342
321	39	948	723
328	64	1095	72
343	33		

குறள் எண்.	யசோதரகாவியம் எண்.	குறள் எண.	யசோதரகாவியம் எண்.
4	கடவுள் வாழ்த்து	327	139
5	கடவுள் வாழ்தது	336	249
9	கடவுள் வாழ்த்து	346	278
10	249	373	217
22	36	379	271
29	23	380	33
145	126	395	308
146	70	550	229
	126	573	88
148	126	621	62
	243	732	205
241	60	738	6
260	242		206
265	269	822	47
284	243	831	33
291	243	987	139
315	247	989	124
	272	1108	91

குறள் எண்.	உதயணகுமார காவியம் எண்.	குறள் எண்.	உதயணகுமார காவியம் எண்.
5	4	265	308
38	4	345	362
69	16	385	187
133	339	427	161
211	10	633	179
259	14	763	53
265	304	1164	123

காப்பியங்களில் திருக்குறள்

ஒன்பதுமுறை வந்த குறள் எண் : 265வது *குறள்.*

எட்டுமுறை வந்த குறள் எண் : ஒன்பதாம் குறள்.

ஏழுமுறை வந்த குறள் எண்கள் : 55, 211, 380, 445 *எண்ணுள்ளவை*

ஐந்துமுறை வந்த குறள் எண்கள் : 4, 5, 10, 36, 226, 1091, 1191.

நான்குமுறை வந்த குறள் எண்கள் : 126, 146, 148, 223, 345, 418, 423, 634, 752, 754, 1104, 1137, 1159.

மூன்றுமுறை வந்த குறள் எண்கள்

29, 35, 38, 127, 208, 251, 252, 256, 262, 284, 315, 321, 334, 336, 339, 343, 355, 356, 376, 379, 387, 559, 638, 775, 822, 911, 1081, 1095, 1100.

இரண்டுமுறை வந்த குறள் எண்கள்

7, 8, 18, 22, 37, 56, 57, 59, 69, 70, 77, 133, 134, 145, 169, 184, 202, 231, 233, 241, 242, 259, 260, 261, 269, 278, 280, 296, 297, 300, 303, 316, 318, 328, 331, 333, 335, 348, 352, 359, 361, 363, 370, 385, 386, 388, 389, 410, 441, 432, 487, 541, 549, 550, 554, 621, 633, 644, 682, 686, 706, 732, 738, 751, 759, 819, 850, 889, 999, 913, 914, 917, 918, 920, 1043, 1044, 1046, 1047, 1082, 1099, 1102, 1105, 1110, 1120, 1121, 1127, 1164, 1311.

ஒருமுறை வந்த குறள் எண்கள்

6, 17, 19, 21, 26, 31, 32, 33, 34, 41, 44, 50, 60, 66, 69, 72, 73, 81, 85, 86, 87, 90, 91, 110, 121, 126, 138, 141, 142, 149, 151, 155, 157, 172, 173, 182, 183, 196, 213, 216, 219, 221, 221, 228, 245, 246, 252, 266, 267, 272, 274, 281, 290, 291, 295, 296, 298, 307, 311, 312, 317, 319, 322, 324, 326, 327, 329, 337, 338, 341, 344, 346, 347, 349, 350, 351, 354, 360, 372, 373, 377, 384, 385, 389, 391, 392, 402, 404, 407, 422, 427, 431, 434, 440, 446, 447, 450, 452, 453, 454, 459, 460, 467, 481, 484, 490, 495, 498, 500, 524, 528, 539, 543, 545, 548, 551, 555, 557, 560, 568, 573, 576, 581, 589, 593, 594, 607, 618, 619, 620, 624, 635, 639, 641, 642, 645, 674, 678, 681, 683, 684, 690, 698, 731, 758, 763, 765, 771, 777, 780, 782, 788, 791, 793, 809, 823, 828, 831, 838, 849, 879, 880, 894, 898, 899, 905, 912, 919, 926, 948, 957, 969. 971, 974, 978, 980, 987, 989. 1003, 1007, 1014, 1030, 1033, 1034, 1035, 1042, 1042, 1050, 1083, 1085, 1090, 1092, 1094, 1097, 1098, 1101, 1108, 1123, 1026, 1034, 1046, 1207, 1227, 1228, 1281, 1319, 1320, 1326.